திவான் பஹதூர்

ஸ்ரீநிவாஸராகவையங்கார்

எழுதியவர்கள்:

கே. சுந்தர ராகவன்

கே. ரங்க ராகவன்

ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்

முகவுரையுடனும்

டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்

முன்னுரையுடனும் கூடியது

ரூ. 5/-

ஸ்ரீ சுந்தர ராகவன்
எழுதியிருக்கும்
இதர புத்தகங்கள்

டாக்டர் சாமிநாதையர்
மஹான் மணி ஐயர்
ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார்
பி. அநந்தாச்சார்லு

சமர்ப்பணம்

இப்புத்தகத்தை உருவாக்கிக் காண ஆசை கொண்ட ஆன்மாக்களுக்கு.

படங்கள்

	பக்கம்
ஸ்ரீநிவாஸராகவையங்கார்	முன்பக்கம்
எஸ். கஸ்தூரி ரங்கையங்கார்	48
மயிலை ரானடே ஹாலில் உருவப் படத்திறப்பு விழா (2 படங்கள்)	112
குடந்தையில் போர்ட்டர் டவுன்ஹால் திறப்பு: மாணவர்களுடன் ஆசிரியர்	144
பரோடாவில்	336
இந்திய போலீஸ் கமிஷன்	416

PREFACE

(Shri V. T. Krishnamachariar,

Deputy Chairman, Planning Commission)

A biography of the late Shri S. Srinivasaraghava Iyengar has been long over-due and I am confident that this book will be widely welcomed. The author, who is a grandson of the late Mr. Iyengar, has continued the work commenced by his brother. It has been to them a labour of love and an act of piety.

The book does not confine itself to events in the life of Mr. Iyengar. It covers wider ground. It describes the movements of life and thought in South India in the last three decades of the 19th century and the part played in them by Mr. Iyengar and other leaders who were his contemporaries, like G. Subramania Aiyar, P. Ranganatha Mudaliyar, T. Gopalrao etc. This adds to the interest of the book to the present generation.

Mr. Iyengar had a brilliant academic record and continued all his life to be a keen student of History and Economics. His judgments on current affairs were always well-informed and objective. He was known and respected for his intellectual integrity and was not afraid to express opinions which were likely to be unpopular.

Mr. Iyengar rose to the highest positions open at that time to Indians who did not belong to the I. C. S. In those days, the Board of Revenue in Madras was a more powerful body than it has been in recent decades. It was, in law and in fact, the highest authority on all revenue matters. The foundations were then being laid for the revenue administration of the Presidency and, in this formative period when far-reaching decisions

had to be taken, Indians like P. Chentsalrao, P. Rajaratna Mudaliar and S. Srinivasaraghava Iyengar played a constructive part in the shaping of policies. Many years afterwards when I was working in the Board of Revenue, I read with profit memoranda written by these gentlemen on principles relating to revenue settlements and re-settlements, questions of land tenure and other subjects of importance in revenue administration. This point is worth stressing as it is not realised how largely policy and administration were shaped by distinguished Indians in those days. Another instance of this may be mentioned. Madras enacted in 1908 a law regulating tenants' rights in zamindaris which was for many years the most advanced in India. This law was based on judgments of the late Justice Subramania Aiyar, which contained a brilliant exposition of the origin and nature of these rights in village communities.

As Inspector General of Registration, Mr. Iyengar initiated a series of studies of economic conditions, based on documents registered in the offices in the Presidency, which were greatly appreciated not only by officials but also by non-official gentlemen interested in public affairs.

His monumental book "Forty Years' Progress in the Madras Presidency" aroused much controversy. It was based on many years' study and appraisal of the numerous factors which have a bearing on and affect the lives of people: and it was to be expected that there would be differences of views as regards the conclusions reached by him. He welcomed honest differences but was sorry that, in some instances, opposition tended to take the form of personal attacks based on a misunderstanding of what he actually wrote.

After filling these positions in Madras, Mr. Iyengar accepted the invitation of Maharaja Sayajirao of Baroda to become Diwan of the State. In this he

followed the example of other illustrious Indians of those days who found in Indian States opportunities for high office which were denied to them in the Central and Provincial Governments. He continued as Diwan for five years. During these years, he had to face the strain of a wide-spread famine which taxed his energies to the utmost. There were also controversies between Lord Curzon and the Maharaja in which the Diwan had to advise the latter. In spite of these heavy preoccupations, he left behind him an impressive record of achievement. Among other things, he concluded an agreement with the Government of India for the withdrawal of the local (Baroda) currency on terms which were advantageous to the people of the State. Also, as was to be expected, he introduced reforms in the State administration—especially the revenue administration—and in the policy of land settlements. His work in Baroda was still remembered when I joined as Diwan there nearly 25 years after he left the State. Maharaja Sayajirao always held him in high esteem and never lost an opportunity of expressing his appreciation of Mr. Iyengar's devotion to the best interests of the State.

I am sure that this book will be widely read. Many of us who joined service in Madras in later years, felt that we owed a deep debt of gratitude to the distinguished public servants of an earlier generation like Mr. Iyengar who, by their unquestioned ability and force of character, established the right of Indians to hold the highest offices in the country. Their example was an unfailing source of inspiration to us.

New Delhi.
November 8, 1956.

V. T. KRISHNAMACHARI

முகவுரை.

(ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்,
திட்டக்கமிஷன் உபதலைவர்.)

ஸ்ரீமான் எஸ். சீனிவாசராகவ அய்யங்கார் அவர்களின் வாழ்க்கை வரலாறு வெகு நாட்களுக்கு முன்னரே பிரசுரிக்கப் பட்டிருக்கவேண்டும். எனினும், இவ்வரலாறு இப்பொழுது ஒரு புத்தக வடிவத்தில் வருவதால் அதை பெருமளவில் பலரும் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாய் நம்புகிறேன். காலஞ்சென்ற ஸ்ரீ சீனிவாசராகவ அய்யங்கார் அவர்களின் சரிதத்தை எழுதி புத்தக வடிவத்தில் உருவாக்கிய பெருமை அன்னாரது இரு பேரர்களை சார்ந்ததாகும். இவர்களில் மூத்தவர் துவக்கிய பணியை, இளையவர் தொடர்ந்து மேற்கொண்டு வெற்றிகரமாக செய்து முடித்திருக்கிறார். இவர்களிருவருமே, அன்புப்பணியாகவும், கடமையாகவுமே கருதி இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ அய்யங்கார் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் மட்டுமின்றி, இன்னும் பல அரிய கருத்துக்களும் சம்பவங்களும் இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் கடைசி முற்பது வருஷங்களில் தென்பாரதத்தில் நிலவிய வாழ்க்கை, சிந்தனைப் போக்கு, அவற்றில் ஸ்ரீ அய்யங்காரும், அவர் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீ ஜி. சுப்ரமணிய அய்யர், ஸ்ரீ பி. ரங்கநாத முதலியார், ஸ்ரீ டி. கோபால ராவ், போன்ற இதர தலைவர்களும் மேற்கொண்ட பங்கு, பணி பற்றியும் இப்புத்தகத்தில் விவரங்கள் அடங்கி இருப்பது, வாசகர்களுக்கு சுவாரஸ்யமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

'விளையும் பயிர் முளையிலே' என்பது போல், பள்ளியில் படிக்கும் நாள் முதலாகவே ஸ்ரீ அய்யங்கார் பல பரீட்

சைகளிலும் சிறப்புடன் வெற்றிபெற்றார். வாழ்நாள் பூரா வுமே அவர், சரித்திரம், பொருளாதாரம் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வங்கொண்டிருந்தார். நடைமுறை விவகாரங் களை உண்மை உணர்வுடன், பற்றற்ற முறையில் சீர்தூக்கி ஆலோசித்த பின்னரே அபிப்பிராயம் கூறுவது அவர் வழக்கம். அவரது புத்தி கூர்மையையும், நெறி முறையை யும் கண்டு பலரும் அவரை போற்றிப்பாராட்டினார்கள். பிறருக்கு ஒவ்வாதோ என்று ஐயமுற்ற வேளைகளிலும் அவர் தமது அபிப்பிராயங்களை கூறத் தயங்கியதில்லை.

அன்னாளில் ஐ. ஸி. எஸ் வர்க்கத்தைச் சாராத இந்தி யர்களுக்குக் கிடைக்கக்கூடிய உயர்ந்த பதவிகள் அனைத் தும் ஸ்ரீ அய்யங்காருக்குக் கிட்டின. அக்காலத்தில், சென்னை ரெவின்யூ போர்டு என்பது சமீப காலத்தில் இருப்பதை விட அதிக அதிகாரமும் ஆற்றலும் படைத்த ஸ்தாபன மாக இருந்தது. ஏன்? சட்ட ரீதியிலும், நடைமுறையிலும் அந்த ஸ்தாபனம் எல்லா ரெவினியூ விவகாரங்களிலுமே உயர்ந்த அதிகாரம் படைத்ததாகவே இருந்தது. சென்னை ராஜதானியில் அப்பொழுதுதான் ரெவினியூ நிர்வாக முறைக்கான அடிப்படை வகுக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட் டது. அப்பொழுது எத்தனை எத்தனை பெரிய விஷயங்க ளைத் தீர்த்து, முறை வகுக்க வேண்டியிருந்தது? எத்தனை தீர்க்க திருஷ்டியுடன் ஸ்தாபனத்தின் கொள்கைகளை வகுத்து அமைக்கவேண்டியிருந்தது.

அக்கொள்கைகளை நிர்ணயித்து வகுத்து உருவாக்கும் பணியில் ஸ்ரீ பி. சென்ட்ஸல் ராவ், ஸ்ரீ பி. ராஜரத்ன முதலி யார், ஸ்ரீ எஸ். சினிவாசராகவ அய்யங்கார் முதலிய இந்தி யர்கள் உருவான முறையில் தம் பங்கு பணியை ஆற்றினார் கள். அதற்கு பல வருஷங்களுக்கு பின், நான் ரெவினியூ போர்டில் வேலை பார்த்தபோது ரெவினியூ நிர்வாகம் சம்பந் தமான நிலத்தீர்வை, நில உரிமை, நிலக்குத்தகை போன்ற பல முக்கிய விஷயங்களிலும் அனுசரிக்க வேண்டிய கொள் கைகள் பற்றி இப்பெரியோர்கள் எழுதிவைத்துள்ள பல குறிப்புகளையும் நான் படித்து எவ்வளவோ பயன் அடைந் திருக்கிறேன். இதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். ஏனெனில் அந்நாளில் நிர்வாகம், கொள்கை முதலியவற்றை

யெல்லாம் எவ்வாறு இந்திய பிரமுகர்கள் பெருமளவில் உருவாக்கினுர்கள் என்பதை இந்நாளில் உணருவதாகக் காணேம்.

இன்னெரு உதாரணமும் இங்கு கூறலாம். 1908-ம் ஆண்டில் ஜமீந்தாரிகளில் விவசாயிகளின் உரிமைகளை நிர்ணயிக்கும் சட்டம் ஒன்று சென்னையில் இயற்றப்பட்டது. அதுவே பல ஆண்டுகளுக்கு இந்தியாவில் மிகவும் முற்போக்கான சட்டமாக இருந்து வந்தது. இந்த சட்டம் காலஞ்சென்ற நீதிபதி சுப்ரமணிய அய்யர் அவர்களின் தீர்ப்புகளையே அடிப்படையாகக் கொண்டது. கிராம சமுதாயங்களில் இவ்வுரிமைகள் எவ்வாறு தோன்றின, அவற்றின் இயல்பு என்ன, என்பதற்கு தெளிவான விளக்கம் கூறுவது போல அமைந்திருந்தன, நீதிபதி அவர்களின் தீர்ப்புகள்.

ரெஜிஸ்டிரேஷன் இலாக்கா இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி வகித்த போது ஸ்ரீ அய்யங்கார் ராஜதானியில் பதிவான பத்திரங்கள், தஸ்தாவேஜுகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு பொருளாதார நிலைமை பற்றின ஆராய்ச்சியை துவக்கி வைத்தார். இதை அந்நாளில் அதிகார வர்க்கத்தினரும் சரி, பொதுஜன விவகாரங்களில் சிரத்தை கொண்ட இதர பிரமுகர்களும் சரி, வெகுவாகப் புகழ்ந்தார்கள்.

ஸ்ரீ அய்யங்கார் "சென்னை ராஜதானியின் நாற்பது வருஷ அபிவிருத்தி" என்று ஒரு புத்தகம் எழுதினுர். இதன் விளைவாகப் பல சர்ச்சைகள் தோன்றின. பல்லாண்டுகளுக்கு முன்பிருந்து மக்களின் வாழ்க்கை நிலை பற்றிய பல விவரங்களைக் கண்டறிந்து, சீர்தூக்கி ஆராய்ந்து அவர் அப்புத்தகத்தை எழுதினுர். அவர் கண்ட முடிவுகள் பற்றியும், கூறிய தீர்மானங்கள் பற்றியும் அபிப்பிராய பேதம் இருந்தது இயல்பே. உண்மையிலேயே அபிப்பிராய பேதம் ஏற்படுவதை அவர் வரவேற்ருர். ஆனல் சில சந்தர்ப்பங்களில் அவரது கருத்தை தவருக புரிந்து கொண்டு, எதிர்த்தரப்பினர் அவரை சொந்த முறையில் தாக்க முற்பட்ட போது, அவர் அதை விரும்பவில்லை; அதற்காக வருந்தினுர்.

சென்னையில் இவ்வாறு பல பதவிகள் வகித்த பின்னர், பரோடா சமஸ்தான திவான் பதவியை ஏற்கும்படி கோரி, அந்த சமஸ்தானாதிபதி மகாராஜா சாயாஜி ராவ் விடுத்த அழைப்பை ஸ்ரீ அய்யங்கார் ஏற்றுக்கொண்டார். மத்திய அரசாங்கத்திலும் சரி, மாகாண அரசாங்கங்களிலும் சரி, உயர் பதவி வகிக்க வாய்ப்பின்றி இந்திய சமஸ்தானங்களில், அவற்றிற்கான வாய்ப்பு கிட்டிய இதர பல இந்திய பிரமுகர்களின் வழியை பின்பற்றியே ஸ்ரீ அய்யங்கார் பரோடா சமஸ்தான திவான் பதவியை ஏற்றார்.

ஐந்து வருஷங்கள் அப்பதவியை வகித்தார். அந்த ஐந்து வருஷங்களில்தான் எத்தனை பெரும் பொறுப்புகளை அவர் ஏற்க வேண்டியிருந்தது? முதலில் பெரும் பஞ்சம். பின்னர் கர்ஸான் பிரபுவுக்கும் மகாராஜாவுக்கும் இடையே பூசல்கள். அவ்வேளையில் மகாராஜாவுக்கு ஆலோசனை கூறும் பொறுப்பை வகித்தவர் ஸ்ரீ அய்யங்கார். மதியையும் ஆற்றலையும் சோதிக்க வல்ல இத்தகைய பெரும் பொறுப்புகளை வகித்தவர் போற்றத்தக்க வகையில் அரும் பெரும் சாதனைகளைப் புரிந்திருக்கிறார்.

முக்கியமாக பரோடா நாணயச் செலாவணியை வாபஸ் பெறுவது சம்பந்தமாக அவர் இந்திய அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை குறிப்பிட வேண்டும். இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துகள் சமஸ்தான மக்களுக்கு பெரிதும் அனுகூலமான முறையில் அமைந்தன. சமஸ்தான நிர்வாகத்திலும், முக்கியமாக ரெவின்யூ நிர்வாகத்திலும், நில உடைமை நிர்ணய கொள்கை சம்பந்தமாகவும் அவர் பல சீர்திருத்தங்களை அமல் செய்தார். அவர் அச்சமஸ்தானத்தில் இருந்து விலகிய இருபத்தைந்து வருஷங்களுக்குப் பின்னர் நான் அச்சமஸ்தான திவான் பதவியை ஏற்ற போதும் அங்கு ஸ்ரீ அய்யங்காரின் அரும் பெரும் பணி பற்றிய நினைவு அகலாது இருந்தது. மகாராஜா சாயாஜி ராவும் அவரை மிகவும் கௌரவித்துப் போற்றி வந்தார். சமஸ்தானத்தின் நலனில் ஸ்ரீ அய்யங்கார் கொண்டிருந்த சிரத்தையையும், புரிந்த பணியையும், சமயம் வாய்த்த போதெல்லாம், மகாராஜா வாயாரப் புகழ்ந்து வந்தார்.

வாசகர்கள் பலர் இந்த புத்தகத்தை விரும்பி படிப்பார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். அவருக்குப் பின் பல ஆண்டுகளுக்கு அப்பால் சென்னையில் உத்தியோகம் பார்த்த எங்களில் பலர் ஸ்ரீ அய்யங்காரையும், அவரைப்போன்ற அரசாங்க உத்தியோகம் பார்த்த இதர பல இந்திய பிரமுகர்களையும், நினைவு கூர்ந்து அவர்களுக்கு எல்லாம் தாம் என்றென்றும் கடமைப் பட்டிருப்பதாகக் கருதி வந்தோம். நாட்டின் அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்களை வகிக்க, பாரத மக்களுக்கு ஆற்றல் உண்டு, உரிமை உண்டு என்று தமது ஒப்பற்ற ஆற்றலினாலும், நீதி வழுவா நெறிமுறையினாலும், ஒழுக்கத்தாலும் ஊர்ஜிதம் செய்த சிறப்பு ஸ்ரீ அய்யங்கார் போன்ற அந்த இந்திய பிரமுகர்களையே சாரும். அவர்களது உதாரணமே எங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் ஒரு ஜீவ ஊற்றாக இருந்தது.

வி. டி. கிருஷ்ணமாச்சாரி.

FOREWORD

(Dr. C. P. Ramaswami Aiyar.)

It is a noteworthy but regrettable fact that there are few outstanding biographies in any of the Indian languages and fewer Memoirs and diaries. During the last five or six centuries, the lives of great administrators, Generals and men of letters have been vividly brought home to the readers of European literatures in a series of laudatory, critical or denunciatory books, Plato, Plutarch and Suetonius being the pristine masters of the art. On the other hand, we really know nothing of the lives, the struggles and the outer and inner achievements of the great men of India beginning with Vedic seers and monarchs or with Valmiki, the Adi Kavi (ஆதிகவி) and coming down to our own times. I do not forget the Puranas or poems like Raghuvamsa or the dramas, but they are, with a few exceptions, idealised versions of the exploits of heroes of action and of thought. It is only quite recently that Pandit Jawaharlal Nehru let us into the secret of his inner conflicts and outer achievements. Painstaking biographies of a few personages like Dr. Besant and Mahatma Gandhi have appeared. But, on the whole, we have not had the advantage of vivid presentations of epochs and personages that have made history either in the domain of public affairs or of intellectual attainment. To produce a fine biography, the author has to preserve a balance between humourlessness appreciation and captious criticisms, to avoid, in other words, the short-comings of Boswell the idolator or Lytton Strachey the iconoclast.

Sri Ranga Raghavan has attempted, in his biography of his grand-father, Sri Srinivasa Raghava

Aiyangar, to strike a balance. He has, with a commendable sense of detachment, placed before us the criticisms levelled against his hero (often malicious or unreasonable) as well as the commendations legitimately bestowed on him; and this volume is extremely useful to the student of contemporary history because it has collected much material in the shape of correspondence and extracts from contemporary journals illustrative of the life and times of Srinivasa Raghava Aiyangar. They throw a welcome light on an interesting and transitional period of modern Indian history. Mr. Ranga Raghavan points out that 53 years have elapsed after his hero's death before filial feelings inspired and produced this work. Mr. K. Sundara Raghavan who began this work minutely traces, with pardonable pride, the genealogy of his ancestors and furnishes a history of their village of origin, Innambur of Inapura, and places before us the intellectual and administrative exploits of his forebears from the time of the Vijayanagar dynasty up to the period of Maharaja Sarboji Rao of Tanjore and we see that the members of his family, during two or three centuries, have been occupying influential official positions. This is an exceptional family whose members and cognatic relations are even now distinguished in several branches of administration, public life and journalism.

Inheriting such traditions and belonging to a historic family, Srinivasa Raghava Aiyangar who was born in 1849, exemplified a type of scholar administrator which his generation produced in abundance in South India. T. Venkasami Rao, Sir T. Madhava Rao, Sir K. Seshadri Iyer, Sir A Seshayya Sastri, Sir T. Muthuswami Aiyar, Sir V. Bashyam Aiyangar, P. Ranganatha Mudaliar, T. Gopala Rao, T. Sundara Rao, Sir Sankaran Nair and my own father and many others were the products of that era. They were, in their several ways, steeped in their ancestral traditions but yet took full advantage of the opportunities

afforded to them by the impact of new ideas, new philosophies and new literatures originating in the West.

As pointed out in this volume, Srinivasa Raghava Aiyangar had the rare advantage of being trained under inspiring preceptors like Messrs. Porter and Gopala Rao of the Kumbakonam College who aroused the emulation and demonstrated the potentialities of generations of scholars who sat at their feet. Srinivasa Raghava Aiyangar and after him, R.V. Srinivasa Aiyar and K. Hanumantha Rao made a great reputation for mathematical proficiency which stood them in good stead in after life. Those were days in which men like Porter, Thompson and Powell took a delight in recognising and fostering merit and character.

We are told that in 1867 as soon as he graduated, Srinivasa Raghava Aiyangar was invited by Mr. Marsh the famous Principal of the S. P. G. College, Tanjore, to occupy a teacher's position on a salary of Rs. 120/- a month. Mr. Sundara Raghavan adds that it was easy for brilliant students to get an appointment in those days. Those were days, however, when an appointment under Government was considered to be the *Summum Bonum* of life and thus, in 1867, when the Collector of Tanjore, Mr. Morris, visited the S.P.G. College and was struck by the intelligence and alertness of Srinivasa Raghava Aiyangar, he offered him a clerical post on Rs. 35/- a month and it was accepted after some consideration. Mr. Sundara Raghavan elaborately justifies this change over but as his subsequent life proved, those were days when there were no feelings of jealousy between European officers and Indians and when recognition and promotion came swiftly.

The biography contains many details about Srinivasa Raghava Aiyangar's life in the Collectorates and the pin-pricks which he encountered as well

as the generous appreciation of his talents. His abilities were manifested in the Reports on Famine Conditions during and after the 1877 Famine. Men like Seshayya Sastri and Sir Henry Stokes became aware of his talents especially during the progress of the Famine Commission's labours under the chairmanship of Sir Richard Strachey. Among the members of the Commission were men like C. Rangacharlu, the famous Dewan of Mysore. Srinivasa Raghava Aiyangar's mathematical talents and proficiency in the handling of complicated reports and statistics enabled him to display his grasp of the principles of political economy. By 1879, he had obtained a position in the Revenue Board and made himself felt in that situation. It was during this period that the great controversy between Sir William Hunter and Sir Charles Elliot regarding what was well-known as the "Famine Cycle" controversy took place. Although occupying a subaltern position, Srinivasa Raghava Aiyangar's minutes and notes elicited the admiration of Sir Henry Stokes who was his admirer and helped him at all stages to advance his interests.

The book, not content with describing his official work, also describes his interest in and work on behalf of several institutions with which Srinivasa Raghava Aiyangar was associated in Mylapore, such as the Mylapore Hindu Permanent Fund, and learned societies like the Indian Association which were then coming into existence; and we have also glimpses of the recreational side of the activities of Srinivasa Raghava Aiyangar and the group of Mylapore notabilities who started badminton and tennis and later on joined the Cosmopolitan Club sponsored by leading European and Indian citizens.

Madras at that time witnessed the beginnings of the Social Reform Movement. Along with his associates, Srinivasa Raghava Aiyangar took part in the animated debates that ensued regarding such topics as the problem of child-widows, widow marriage, foreign

travel and other subjects—which have now become '*choses jugees*' but at that period were of burning and topical interest. In these discussions, he maintained the golden mean and followed a policy of *festina lente*. On these and most other occasions, Srinivasa Raghava Aiyangar was influenced by the prevalent liberal traditions of England. The middle path, the method of reasonable and persuasive argument and refraining from extreme measures or violent speech were the characteristics that he admired and displayed. But notwithstanding his general moderation, he made no secret of his opposition to certain official policies like those involving Cotton Excise Duties and the implementation of the doctrines of the Manchester School of Economists. About this time, moreover, the Indian National Congress was inaugurated and Srinivasa Raghava Aiyangar, in public and in private, supported many of its resolutions including specially the one on Simultaneous Examinations for the Civil Service. In short, he proved himself not only an efficient Secretariat Officer and trained economist and statistician but also one who took a vivid and patriotic interest in the problems confronting his country.

Official preferment, dignities and titles came to him in rapid succession and he was soon elevated to the position of Inspector-General of Registration which was then the highest place available to Indians in the official hierarchy apart from judicial preferment.

Much space is rightly given in this book to an analysis of Srinivasa Raghava Aiyangar's '*magnum opus*' viz., his Report on "Forty years' Progress under the British Administration" produced in the midst of his official preoccupations. It was published under Government auspices and his thesis was that notwithstanding administrative short-comings, the financial drain imposed on India and the insufficient encouragement given to Indian industries, the standard of life

had notably risen and that the verdict of posterity would be in favour of the British administration especially in respect of matters like land revenue administration, settlement operations, the establishment of roads and railways, irrigation facilities, police administration and so forth. The book was received with deep appreciation and applause in official circles. It evinced a mastery of analytical treatment and a familiarity with details of administration which were truly remarkable. On the other hand, not only the newly started Congress group but most newspapers and public men denounced it as a laboured apology for the British administration. Many persons who did not read the book took isolated passages as furnishing evidence of an anti-patriotic bias. They indulged in the unfounded criticism that Srinivasa Raghava Aiyangar was not for increase in salaries and status of Indian officers but was only intent on supporting the Government view-point.

Mr. Ranga Raghavan has devoted several pages to the collection of criticisms against and testimonies in favour of this publication. I can do no better than to recall my own words when I unveiled Srinivasa Raghava Aiyangar's portrait in the Kumbakonam College in April 1951 which the biographer has been good enough to re-produce at length. I then said, "this book is not merely a eulogy of the British Government but is a minute and scholarly analysis of the benefits as well as defects of that administration. The irrefutable arguments contained in this book led to the realisation of the difficulties of the rural artisan and the agriculturist. The Co-operative Movement inaugurated by Sir Frederic Nicolson stems from this book". Srinivasa Raghava Aiyangar has also fearlessly exposed the evils of the economic burdens imposed by England on the Indian Exchequer. He insisted, long before the politicians, on industrial development, on the need for lowering the land revenue and stabilising the position of the ryot. He really pioneered the ideas

which are now widely prevalent regarding the position of the agriculturist *vis-a-vis* the middleman and Zamindar and the Government and few before him had spoken with such emphasis on the economic backwardness of the country under British rule. The biographer has pointed out that sensitive as he was, Srinivasa Raghava Aiyangar suffered much pain of mind by reason of the mis-directed criticism and the social obloquy to which he was subjected. The book, however, had established his reputation as an economist of distinction and as a thinker, and it is no wonder that Maharaja Sayaji Rao of Baroda thought of him when a vacancy arose in the Dewanship of that State.

The Maharaja of Baroda was justly celebrated as one who recognised and rewarded talent and he himself was responsible for many political and social reforms in the State which was then regarded and described, along with Mysore, as a model State. It is a pity that, in the description of his Dewanship of Baroda, Mr. Ranga Raghavan has not had the benefit of a scrutiny of the official records but had to be satisfied with numerous extracts from newspapers and letters. It is pointed out that Srinivasa Raghava Aiyangar had to contend not only against the prejudice entertained in Baroda against foreigners but had also to encounter the difficult and perplexing problems presented by the outbreak of plague as also by the characteristic disposition of the energetic and talented Ruler of Baroda to interfere in the details of administration and to give to the Dewan rather the position of a Secretary than that of an administrator working under a Constitutional Ruler. It must be remembered that at that time, the British Government looked askance at the innovations and reforms introduced by the Gaikwar and used any stick to beat the animal they disliked. The biographer gives details of the animated correspondence that took place with reference to the Gaikwar's repeated visits to Europe. Srinivasa Raghava Aiyangar wanted

to return to Madras as soon as his term of three years was over in Baroda; but as the Gaikwar again made up his mind to proceed to England, he consented to prolong his term of office.

Amongst Srinivasa Raghava Aiyangar's achievements in Baroda may be mentioned the levelling up of the salaries of public servants, the inauguration of a large number of Primary and Secondary schools established to give instruction in the mother tongue, legislation to prevent child marriages and financial encouragement to handicrafts and small industries and the overhauling of the Baroda coinage. He also initiated a system of State Transport. But, taken altogether, although he proved himself to be a firm and knowledgable administrator, he was not happy in Baroda and he gladly returned to Madras as soon as he could with propriety.

On his coming back to Madras, he was engaged in dealing with the question of agricultural indebtedness which was afterwards handled by Sir Frederic Nicolson to whom and to Srinivasa Raghava Aiyangar we owe the initiation and growth of the Co-operative Movement. His evidence before the Irrigation Commission was most valuable and suggestive and in his Convocation Address delivered to the University of Madras in 1902, he has given us a survey of the Indian situation emphasising the need for a re-orientation of ideas regarding education, economic development and social reorganisation.

The biography contains an account of his very valuable services as a member of the Police Commission generally known as the Fraser Commission. On this occasion also, Srinivasa Raghava Aiyangar was criticised by various journals and political parties for not having appended a minute of dissent insisting on the immediate grant of equal terms and status for Europeans and non-Europeans in recruitment for the higher ranks of the Police.

His premature death in 1903 was a real loss to India. Amongst the elder statesmen of his days, he was the most qualified, by his concentrated studies and his aptitude, to take a formative part in discussions and decisions relating to the economic development of India. It may be noted that just before his death, he received an offer of Dewanship of Travancore and was, in fact, considering the question of acceptance of the offer when he passed away.

The author deserves our gratitude for furnishing a vivid and interesting picture of a great administrator and scholar and of the shifting scenes of a transitional epoch.

'DELISLE'
Ootacamund

C. P. RAMASWAMI AIYAR
20-11-1956.

முன்னுரை

(டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்.)

இந்திய பாஷைகளில் வாழ்க்கைச் சரிதைகளும் வாழ்க்கைக் குறிப்புக்களும் அதிகம் வெளிவராதது கவனத்துக்குரிய வருந்தத்தக்க உண்மையாகும். கடந்த ஐந்து அல்லது ஆறு நூற்ருண்டுகளில், ஐரோப்பிய இலக்கிய ரசிகர்களுக்காக தலைசிறந்த ராஜதந்திரிகள், போர் வீரர்கள், இலக்கிய மேதைகளின் வாழ்க்கை சரிதைகள், பாராட்டுரைகளாகவும் சிறப்பையும் குறைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் புத்தகங்களாகவும் முழுக்க முழுக்க கண்டன நூல்களாகவும் வெளிவந்திருக்கின்றன. ப்ளேடோ, ப்ளூடார்க், ஸூடோனீயஸ் ஆகியோரையே இத்துறையில் ஆதிகர்த்தாக்கள் எனலாம். ஆனல் நாமோ, வேதகால சிரேஷ்டர்கள், மாமன்னர்கள், ஆதி கவியாகிய வால்மீகியின் காலந்தொட்டு நம் காலத்திய மகான்கள்வரை எவரைப்பற்றியும் ஏதுமறியாதவர்களாயிருக்கிறோம். இவர்களது வாழ்க்கைப் போராட்டம், சாதனைகள், ஆத்மிக வெற்றிகள் எதையும் அறியாதவர்களாயிருக்கிறோம். புராணங்களும் ரகுவம்சம் போன்ற காவியங்களும் ஏனைய நாடகங்களும் நம்மில் புழங்குவதை நான் அறவே மறந்து விடவில்லை; ஒரு சிலவற்றைத்தவிர இவை மூல புருஷர்களை லட்சியவான்களாக்கி ஸ்தோத்திரம் பண்ணுவதாகவே உள்ளன. சமீபத்தில்தான் தமது அகப்போராட்டங்களையும் புறச் சாதனைகளையும் பண்டித ஜவாஹர்லால் நேரு விமர்சித்து வெளியிட்டிருக்கிறார். டாக்டர் அன்னி பெஸண்ட் அம்மையார், மகாத்மா காந்திஜி போன்ற சில தலைவர்களைப்பற்றி, மகத்தான முயற்சியின் பலனாக, வாழ்க்கை வரலாறுகள் வெளியாயிருக்கின்றன. ஆனல் பொதுவாக நோக்குங்கால் சரித்திர போக்கை நிர்ணயித்த பொது விவகாரப் பரிபாலனம் அல்லது இலக்கிய சாதனைகளில் பங்குகொண்ட மகான்களைப் பற்றியோ சகாப்தங்களைப்பற்றியோ. விவரிக்கும் புத்தகங்கள் அதிகம் பிரசுரமாகவில்லை என்றே கூறவேண்டும். சிறந்த வாழ்க்கைச் சரிதையை உருப்படுத்த வேண்டுமானல் ஹாஸ்ய உணர்ச்சி, பாராட்டு, வெறும் கண்டனம் இவற்றில் எது

வும் மிதமிஞ்சாமலிருக்கவேண்டும். சுருங்கக் கூறினல் பாஸ்வெல் போன்று துதிபாடுவதாகவோ அல்லது லிட்டன் ஸ்டிராச்சி போல குற்றம் மாத்திரம் காணுவதாகவோ இருக்கலாகாது.

தமது பாட்டனுர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவையங்காரின் வாழ்க்கைச் சரிதையில் ஸ்ரீ ரங்கராகவன் எல்லா அம்சங்களேயும் சீர்தூக்கிப் பார்த்து எழுத பிரயாசைப்பட்டிருக்கிருர். பற்றற்ற நோக்குடன், தமது மூதாதையர் கண்டிக்கப்பட்டதையும் (பெரும்பாலும் துவேஷ உணர்ச்சியாலும் நியாயமின்றியும் பிரயோகிக்கப்பட்டவை) முற்றிலும் நியாயமாக அவர் போற்றப்பட்டதையும் அவர் எடுத்துக் கூறியிருப்பது பாராட்டுக்குரியது. ஸ்ரீநிவாஸ ராகவையங்காரின் வாழ்க்கை, அவரது வாழ்நாளே விளக்கும் முகமாக பற்பல கடிதங்களிலிருந்தும் பத்திரிகைகளிலிருந்தும் நிறைய பகுதிகள் பிரித்தெடுத்துக் கொடுக்கப்பட்டிருப்பதால் அக் காலத்திய சரித்திரத்தில் சிரத்தையுள்ளோருக்கு இந்தப் புத்தகம் மிக மிக பயன்படக்கூடியது. நவீன இந்திய சரித்திரத்தின் பரிணும மொன்றைப்பற்றிய ருசிகர விஷயங்களே இந்தப் புத்தகம் வெளியாக்குகிறது. பாட்டனுரின் சரிதத்தை வெளியிடும் பேரவா மேலிட்டு அந்த எண்ணம் ஈடேறுவதற்குள் அவர் இறந்து 53 ஆண்டுகளாகி விட்டதாக ஸ்ரீ ரங்கராகவன் குறிப்பிடுகிருர். இந்தப் புத்தகத்தைப் பிரசுரிக்கும் முயற்சியைத் துவக்கிய ஸ்ரீ கே. சுந்தரராகவன் நியாயமான பெருமிதத்துடன் மிக நுட்பமாக முன்னேரைப்பற்றிய தகவல்களே சேகரித்து வெளியிட்டிருப்பதோடு சொந்த ஊர் இன்னம்பூரின் (இனபுரி) வரலாற்றையும் விவரித்திருக்கிருர். மேலும் விஜயநகர வம்ச காலந்தொட்டு தஞ்சை மகாராஜா ஸரபோஜி ராவ் காலம் வரை தமது முன்னேரின் அறிவாற்றல், நிர்வாகத்திறன் பற்றிய விஷயங்களே எடுத்துக்கூறியிருக்கிருர் அவர். இரண்டு அல்லது மூன்று நூற்றுண்டு காலத்தில் இந்தக் குடும்ப முன்னேர்கள் செல்வாக்குமிக்க பதவிகளே வகித்து வந்திருப்பது தெரியவருகிறது. இந்தக் குடும்பம் அலாதி மகிமையுடையது. அதைச் சார்ந்தவர்களும் நெருங்கியவர்களும் இன்றும் பொதுவாழ்வு, நிர்வாகம், பத்திரிகைத் துறைகளில் சிலாக்கியமான ஸ்திதியிலிருக்கின்றனர்.

இத்தகைய பரம்பரைப் பண்பும் சரித்திர பிரசித்தியும் பெற்ற குடும்பத்தில் 1849–ல் பிறந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் அந்த தலைமுறையில் பெருவாரியாகத் தோன்றிய மேதாவிலாசரும் பரிபாலனத் திறமையும் மிக்கவர்களில் ஒருவராக விளங்கினார். ஸ்ரீ டி. வெங்கா சாமி ராவ், ஸர் டி. மாதவ ராவ், ஸர் கே. சேஷாத்ரி ஐயர், ஸர் ஏ. சேஷய்ய சாஸ்திரி, ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர், ஸர் வி. பாஷ்யமையங்கார், பி. ரங்கநாத முதலியார், டி. கோபால ராவ், டி. சுந்தர ராவ், ஸர் சங்கரன் நாயர், என் தந்தையார் இன்னும் பலரை இந்த வகையில் குறிப் பிடலாம். பரம்பரை சம்பிரதாயங்களில் ஊறியவர்களாயி னும் அவர்கள் மேற்கத்தி கருத்துக்கள், தத்வம், இலக்கிய பரிச்சயமேற்பட்டதை நன்கு பயன்படுத்திக்கொண்டவர் கள்.

இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல ஸ்ரீமான்கள் போர்ட்டர், கோபாலராவ் ஆகியோரிடம் கும் பகோணம் கல்லூரியில் கல்வி பயிலும் அரும்பேறு பெற்றி ருந்தார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். வித்தியார்த்திகளின் திறன் பரிணமிக்கச் செய்தவர்கள் இந்த ஆசிரியர்கள். ஸ்ரீநி வாஸராகவையங்காரும் அவருக்குப்பின் ஆர். வி. ஸ்ரீநிவா ஸையர், கே. ஹனுமந்தராவும் கணித சாஸ்திரத்தில் மேதைகளாக விளங்கினர். இந்தத் திறன் பிற்கால வாழ் வில் அவர்களுக்கு பேருதவியாயிருந்திருக்கிறது. திறமையும் நடத்தையும் அமைந்திருந்தவர்களை போர்ட்டர், தாம்ஸன், பவல் ஆகியோர் பாராட்டிக் கைதூக்கி விட்டிருக்கும் காலம் அது.

1867–ல் பட்டதாரியானதும் தஞ்சை எஸ். பி. ஜி. கல்லூரியில், தலைமையாசிரியர் மிஸ்டர் மார்ஷின் அழைப் புக்கிணங்கி, மாதம் ரூ. 120 சம்பளத்துக்கு ஆசிரியர் பதவி யை ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புத்தி கூர்மை வாய்ந்தவர்களுக்கு எளிதில் பதவி கிடைத்த நாட்கள் அக்காலம் என்று சுந் தரராகவன் கூறியிருக்கிறார். ஆனால், சர்க்கார் உத்தியோ கமே வாழ்க்கையின் லட்சியமெல்லாம் என்று கருதப்பட்ட காலமும் அதுதான். ஆகவே எஸ். பி. ஜி. கல்லூ ரிக்கு ஒரு நாள் விஜயம் செய்த தஞ்சை கலெக்டர் மிஸ்டர்

மாரிஸ் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் மதிநுட்பத்தால் கவரப்பட்டு ரூ. 35 சம்பளத்துக்கு குமாஸ்தா பதவியளிக்க முன்வந்தபோது ஸ்ரீநிவாஸராகவையங்கார் அதை ஏற்றுக் கொண்டார். இந்தப் பதவி மாற்றத்தைத் தாங்கி ஸ்ரீ சுந்தர ராகவன் சமாதானம் கூறியிருக்கிறார். அந்த காலத்தில் ஐரோப்பிய அதிகாரிகளுக்கும் இந்தியருக்குமிடையே துவேஷ உணர்ச்சி தலைகாட்டியதில்லை என்பதும் வேலைத் திறனுக்குப் பாராட்டும் உத்தியோக உயர்வும் லகுவில் கிடைத்தன என்பதற்கு அவருடைய வாழ்க்கையே எடுத்துக்காட்டாயமைந்ததும் குறிப்பிடத்தக்கது.

கலெக்டர் காரியாலயத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் உழைத்தது பற்றியும் பல சில்விஷமங்களுக்கும் துன்பங்களுக்கும் அவர் ஆளானது பற்றியும் அவரது சேவை சிலாகிக்கப்பட்டிருப்பது பற்றியும் புத்தகத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது. 1877-ம் வருஷ பஞ்சத்தைப் பற்றி அவர் தயாரித்த ரிபோர்ட்களில் அவரது சாமர்த்தியம் வெளிப் பட்டது. சர் ரிச்சர்ட் ஸ்டிராச்சி தலைமையில் பணியாற்றிய பஞ்சக் கமிஷனின் அலுவல்களின் போது, சேஷைய சாஸ் திரியாரையும் ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸையும் அவரது திறமை கவர்ந்தது. இந்தக் கமிஷனில் பிரபல மைசூர் திவான் ஸி, ரங்காச்சார்லு போன்றவர்கள் அங்கம் வகித்தனர். கணிதத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கிருந்த அபார ஞானமும் சிக்கலான ரிபோர்ட்களை எளிதில் ஆராய்ந்து கிரஹிப்பதிலும் புள்ளி விவரங்களைக் கையாள்வதிலும் அவரிடம் மிளிர்ந்திருந்த ஆற்றலும் தேசப் பொருளாதார கொள்கைகளில் பரிசயமும் பாண்டித்யமும் அடையச் செய்தன. 1879-ல் ரெவின்யூ போர்டில் இன்றியமையாத அந்தஸ்தை யடைந்தார் அவர். இந்தக் காலத்தில், ஸர்.வில்லியம் ஹண்டருக்கும் ஸர் சார்ல்ஸ் எல்லியட்டுக்குமிடையே 'கால நியதிப்படி பஞ்சம் மூளும் தத்வம்' பற்றி சர்ச்சை மூண்டது. ஸ்ரீநிவாஸராகவையங்கார் சாமானிய உத்தியோகஸ்தராயிருந்த போதிலும் அவர் தயாரித்த குறிப்புக்கள் ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸின் உயர் மதிப்பைக் கவர்ந்தன. ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் உயர் மதிப்பு கொண்டிருந்த ஸ்டோக்ஸ் அவருடைய ஸ்திதி உயருவதில் அக்கறை பூண்டு உதவினார்.

அரசாங்க உத்தியோகஸ்தராக ஸ்ரீநிவாஸராகவையங்கார் சேவை புரிந்ததுமட்டுமின்றி அந்தக் காலத்தில் தோன்றிய மயிலாப்பூர் ஹிந்து சாசுவத நிதி, இந்தியர் அஸோஸியேஷன் முதலியவற்றில் அவர் பங்கு கொண்டு பணியாற்றியதைப் பற்றியும் புத்தகத்தில் காணலாம். ஸ்ரீநிவாஸராகவையங்காரும் மயிலாப்பூரில் இருந்த இதர பிரமுகர்களும் பாட்மிண்டன், டென்னிஸ் ஆட்டங்களில் உற்சாகம் காட்டியதும் அப்புறம் ஐரோப்பியரும், இந்திய பிரமுகர்களும் ஆரம்பித்த காஸ்மபாலிடன் கிளப்பில் அவர்கள் சேர்ந்ததும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்நாளில் சென்னையில் சமூக சீர்திருத்த இயக்கம் ஆரம்பமாகியது. சிறுமையில் வைதவ்வியம், விதவாபுனர் விவாகம், அயல் நாட்டுப்பயணம் போன்ற விஷயங்களைப் பற்றிய ருசிகர சர்ச்சைகளில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பிறருடன் சேர்ந்து தீவிர பங்கெடுத்திருக்கிறார். இந்நாட்களில் தீர்ந்துபோன விஷயங்களாயினும் அந்நாளில் பெருத்த பரபரப்பும் உற்சாகமும் ஊட்டிய இந்த சர்ச்சைகளில் அவர் படிப்படியான முற்போக்கை ஆதரித்தார். இங்கிலாந்தில் ஊன்றியிருந்த மிதப்போக்கு ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் ஊறியிருந்தது. எதிர்தரப்பை நியாயமான வாதத்தால் தம் கட்சிக்கு மாற்றும் போக்கும் தீவிர நடவடிக்கைகளையோ உணர்ச்சிவசமான ஆவேசப் பேச்சையோ ஆதரியாத போக்கும் அவரிடம் காணப்பட்டது. பொதுவாக தாம் மிதவாதியாயினும் பருத்தி எதிர்வரி விதிப்பு சம்பந்தமான அதிகார வர்க்கத்தினரின் கொள்கைகளையும் மாஞ்செஸ்டர் பொருளாதார தத்வத்தை திணிக்கும் முயற்சிகளையும் எதிர்க்க அவர் தயங்கவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டதும் ஏறக்குறைய இந்தக் காலத்தில் தான். சிவில் சர்விஸுக்கு ஏககாலத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பரீட்சை நடத்தப்படவேண்டியதை வற்புறுத்திய காங்கிரஸ் தீர்மானத்தையும் இதர பல தீர்மானங்களையும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் ஆதரித்திருக்கிறார். சுருங்கக் கூறினால், திறமை வாய்ந்த சர்க்கார் உத்தியோகஸ்தராகவும் அனுபவ ஞானம் படைத்த பொருளாதார நிபுணராகவும் புள்ளிவிவர வல்லுநராகவும் சோபித்ததோடு நாட்டை

எதிர்ப்பட்ட பிரச்னைகளில் தேசாபிமான உள்ளத்தோடு அவர் சிரத்தை கொண்டிருந்தவர்.

உத்தியோக உயர்வும் கௌரவிப்பும் பட்டங்களும் துரிதமாக ஒன்றையொன்று தொடர்ந்து அவரை நாடிவந்தன. நீதித்துறை நீங்கலாக இந்தியருக்கு அந்த நாட்களில் கிடைக்கக் கூடியதாயிருந்த உயர்ஸ்தானமாகிய பத்திரப் பதிவு இலாகா தலைமைப்பதவி அவருக்கு சீக்கிரத்திலேயே கிடைத்தது.

உத்தியோக அலுவல்கள் கடுமையாயிருந்தும், 'பிரிட்டிஷ் ஆட்சியில் 40 ஆண்டு முற்போக்கு' என்ற மகுடத்துடன் அவர் எழுதிய அரும்பெரும் புத்தகத்தின் விமர்சனத்துக்கு இந்நூலில் நிறைய பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது பொருத்தமானதேயாகும். நிர்வாகக் குறைபாடுகள், இந்திய செல்வம் சுரண்டப்பட்டது, சுதேசித் தொழில்களுக்கு ஆக்கமளிக்கப்படாமை ஆகிய குறைகளிலிருந்த போதிலும் வாழ்க்கைத்தரம் உயர்ந்தே இருக்கிறது என்பதும் நிலவரி நிர்வாகம், தீர்வை நிர்ணய நடவடிக்கைகள், ரஸ்தா, ரயில்பாதை அமைப்பு, பாசன வசதிகள் போலீஸ் படை முதலிய துறைகளில் பிரிட்டிஷ் ஆட்சியினால் நன்மையே உண்டாகியிருக்கிறது என்பதுமே சர்க்கார் ஆதரவில் வெளியான இப்புத்தகத்தில் அவர் வாதித்திருப்பது அதிகார வர்க்கத்தவர்கள் புத்தகத்தை அமோகமாக வரவேற்றனர். விஷயங்களை அலசி ஆராய்வதிலும் நிர்வாக முறைகளில் பரிசயத்தை நிரூபித்ததிலும் இந்தப் புத்தகம் சிறப்பு மிக்கது. புதிதாக துவக்கப்பட்ட காங்கிரஸ் ஸ்தாபன வாதிகளும் பத்திரிகைகளும் பொது ஜனத்தலைவர்களும் பிரிட்டிஷ் ஆட்சிக்குச் சப்பைக்கட்டுவதாக இந்தப் புத்தகத்தை இகழ்ந்தனர். புத்தகத்தைப் பூராவும் படிக்காத பலர் எங்கெங்கிருந்தோ சில பகுதிகளைப் பிரித்தெடுத்து அவை நாட்டுக்கு விரோதமானதாயிருப்பதாக சாதித்தனர். இந்தியர் நிலை உயருவதை விரும்பாமல் சர்க்காருக்காக சால்ஜாப்பு கூறுவதில் தான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சிரத்தைக் காட்டியிருப்பதாக ஆதாரமற்ற கண்டனங்களை வீசினர் அவர்கள்.

இந்த புத்தகம் தாக்கபபட்ட விவரங்களையும் பாராட்டப் பெற்றிருப்பதையும் ஸ்ரீ ரங்கராகவன் சேகரித்து

வெளியிட்டிருக்கிறார். 1951–ல்வருஷம் ஏப்ரல் மாதம் கும்பகோணம் கல்லூரியில் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் உருவப் படத்தை திறந்து வைத்தபோது நான் கூறியவற்றை திரும்ப வெளியிடுவது இச்சந்தர்ப்பத்தில் சாலப் பொருந்தும். இந்த ஜீவசரிதை ஆசிரியரும் என் பிரசங்கத்தின் கணிசமான பகுதியை புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறார். அச்சமயம் நான் கூறியதாவது: 'பிரிட்டிஷ் சர்க்காரின் புகழ்பாடுவதோடு நின்றுவிடவில்லை இந்த நூல். பிரிட்டிஷ் ஆட்சியின் குணங்களும் குறைபாடுகளும் நுட்பமாக ஆராயப்பட்டிருப்பதை இதில் காணலாம். இந்தப் புத்தகத்தில் வெளியாகியிருக்கும் மறுக்க முடியாத வாதங்கள், கிராமத் தொழிலாளி, விவசாயியின் கஷ்டங்கள் உணரப்பட வகை செய்தது. ஸர் ப்ரெட்ரிக் நிக்கல்ஸன் அங்குரார்ப்பணம் செய்த கூட்டுறவு இயக்கத்துக்கு மூலாதாரம் இந்தப்புத்தகமே. இந்திய சர்க்கார் நிதி நிலைமை இங்கிலாந்தின் பொருளாதார சுமைகளால் பாதிக்கப்படுவதை தயாதாட்சண்யமின்றி அம்பலப்படுத்தியிருக்கிறார். அரசியல் வாதிகளுக்கு முன்னமேயே, தொழிலபிவிருத்தி, நிலவரி குறைப்பு, ரயத்து நிலைமை ஸ்திரப்படுத்தப்படவேண்டிய இவற்றின் அவசியத்தை அவர் அறிவுறுத்தியிருக்கிறார். விவசாயி, இடைத்தரகர், ஜமீந்தார், சர்க்கார், இவர்களின் நிலைபற்றி தற்சமயம் பெருவாரியாக நிலவும் தத்வங்களுக்கு முன்னோடியாக விளங்கினார் அவர். பிரிட்டிஷ் ஆட்சியில் தேசத்தின் பொருளாதார க்ஷீணத்தைப்பற்றி அவருக்கு முன்னர் அவ்வளவு அழுத்தந்திருத்தமாக கூறியவர் இல்லை என்றே சொல்லலாம். அர்த்தமற்ற கண்டனத்தாலும் சமூகத்தின் இகழ்ச்சியாலும் ஸ்ரீநிவாசராகவையங்காரின் மனம் எவ்வளவு புண்பட்டது என்பதை நூலாசிரியர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆயினும், உண்மையில் அவர் ஒரு சிறந்த பொருளாதார மேதை என்பதையும் தீர்க்கதரிசி என்பதையும் இந்தப் புத்தகம் நிரூபித்துவிட்டது. ஆகவே தம் சமஸ்தானத்தின் திவான் பதவி காலியான போது ஸ்ரீநிவாசராகவையங்காரின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ள பரோடா மஹாராஜா சாயாஜி ராவ் தீர்மானித்ததில் ஆச்சரியமில்லை.

அறிவாற்றலை மதித்துப் பேணியவர் என்ற பாராட்டு பரோடா மகாராஜாவுக்கு நியாயமாகவே உரித்தான

தாகும். அந்நாளில் பரோடா, மைசூருடன், முன்னேற்றம் கண்ட சமஸ்தானமாகப் பாராட்டப்பட்டது. தம் சமஸ்தானத்தில் பல அரசியல், சமூக சீர்திருத்தங்களைச் செய்திருந்தார் பரோடா மகாராஜா. ஸ்ரீநிவாசராகவையங்கார் திவான் பதவி வகித்த வரலாற்றை விவரிக்கையில் சர்க்கார் தஸ்தாவேஜிகளைப் பரிசிலிக்க முடியாமல், பத்திரிகைகள், கடிதங்களிலிருந்து பகுதிகளை வெளியிடுவதுடன் ஸ்ரீ ரங்கராகவன் திருப்திபட வேண்டியதாகியது துரதிர்ஷ்டகரமானது. வெளியார் நியமனத்தை உள்ளூர் வாசிகள் எதிர்த்ததுமட்டுமின்றி, பிளேக் கொள்ளைநோய் சம்பவித்த நிலைமையும் திவானை வெறும் காரியதரிசியாக ஆக்கும் வகையில் நிர்வாகத்தில் குறுக்கிடும் சுபாவத்தை ஆற்றல் படைத்த அரசர் காட்டியதும் ஸ்ரீநிவாசராகவையங்காருக்கு சோதனையாயின. கெய்க்வார் அமுல் நடத்திய புது சம்பிரதாயங்களும் சீர்திருத்தங்களும் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பிடிக்காமலிருந்ததும் எவ்வளவு தொந்திரவு கொடுக்கலாமோ அவ்வளவையும் அவர்கள் அவருக்கெதிராக கையாண்டதும் குறிப்பிடத் தக்கது. கெய்க்வார் அடிக்கடி ஐரோப்பாவுக்குப் பயணமாவது குறித்து எழுந்த சள்ளையை புத்தகாசிரியர் விவரமாகச் சொல்லியிருக்கிறார். பரோடாவில் மூன்று வருட காலம் ஆனதும் சென்னைக்குத் திரும்ப விருப்பமாயிருந்தார் ஸ்ரீநிவாசராகவையங்கார்; ஆனால் திரும்பவும் இங்கிலாந்துக்குப்போக கெய்க்வார் தீர்மானித்ததையடுத்து பதவியில் நீடிக்க அவர் ஒப்பினார்,

சர்க்கார் ஊழியர்களின் சம்பள உயர்வு, தாய்ப் பாஷையில் பாடம்போதிக்க அநேகம் ஆரம்ப, செகண்டரி பள்ளிகள் ஸ்தாபிதம், பால்ய விவாகத் தடுப்பு சட்டம், கைத்தொழில்களுக்கு நிதிசகாயம், பரோடா செலாவணி சீர்திருத்தம்—இவற்றை ஸ்ரீநிவாசராகவையங்காரின் சாதனைகளாக குறிப்பிடலாம். சர்க்கார் ஆதீனத்தில் போக்குவரத்து வசதிக்கும் அவர் காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் மொத்தத்தில், தமது நிர்வாகத் திறனை அவர் நிரூபித்தபோதிலும், பரோடாவில் நீடிக்க மனமில்லாமல் சென்னை திரும்ப சந்தர்ப்பம் வாய்த்ததும் பரம சந்தோஷத்துடன் அவ்விதமே செய்தார்.

சென்னை திரும்பியதும் அவர் விவசாயிகள் கடன் பளு பிரச்னையில் சிரத்தை கொண்டார். கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு இவருக்கும் ஸர் ப்ரெட்ரிக் நிக்கல்ஸனுக்கும் நாம் கடமைப்பட்டவர்களாவோம். நீர்ப்பாசனக் கமிஷன் முன் அவர் அளித்த சாட்சியம் மிகவும் உபயோககரமானது. 1902ம் வருடம் சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய பிரசங்கத்தில் இந்திய நிலையை எடுத்துரைத்து கல்வி, பொருளாதார முன்னேற்றம், சமூக புனரமைப்பு குறித்து கருத்து மாறுபாடுகளை அறிவுறுத்தியிருக்கிறார்.

பிரேஸர் கமிஷன் என்று வழங்கிய போலீஸ் கமிஷனின் மெம்பராக அவர் அருஞ் சேவையாற்றிய விவரமும் புத்தகத்தில் அடங்கியிருக்கிறது. இந்தச் சமயத்திலும், போலீஸ் உயர் பதவிகளுக்கான ஆள் திரட்டலில் ஐரோப்பியரல்லாதாருக்கு ஐரோப்பியருடன் சரிசமத்வமளிக்க வேண்டுமென வற்புறுத்தி தனிக்குறிப்பு எழுதாதற்காக, ஸ்ரீநிவாசராகவையங்கார் கண்டனத்துக்காளானார்.

1903ல் அவர் அகால மரணமடைந்தது இந்தியாவுக்கு உண்மையிலேயே நஷ்டமாகும். அவர் காலத்திய ராஜீய மூதறிஞர்களில் தமது ஆழ்ந்த படிப்பினாலும் பொதுப் பிரச்னைகளிலிருந்த பற்றுதலினாலும், இந்தியப் பொருளாதார அபிவிருத்தி பற்றி சர்ச்சை செய்து முடிவுகள் பண்ணும் பணியில் உருவான பங்கெடுக்கக் கூடிய முதல்வராயிருந்தார் அவர். அவர் காலமாவதற்கு கொஞ்சகாலம் முன்னர் திருவாங்கூர் திவான் பதவியேற்க அவருக்கு அழைப்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இந்தப் பதவியை யேற்பது குறித்து யோசித்துக் கொண்டிருக்கையில் அவர் காலமாகிவிட்டார்.

சிறந்த நிர்வாகஸ்தரும் அறிவாளியுமான ஒருவரது வாழ்க்கையையும் தேசசரித்திரத்தின் இடைக்கால பகுதியையும் ருசிமிக்கதாக வருணித்திருக்கும் நூலாசிரியருக்கு நமது வந்தனம் உரித்தாகும்.

சி. பி, ராமஸ்வாமி ஐயர்

மதிப்புரை.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசராகவையங்கார் காலமாகி இப்போது 53 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இத்தனை நாள் வெளிவராத இந்த வாழ்க்கைச் சரிதை இப்பொழுதுதான், காலங் கடந்து, வெளியாகிறது. ஸ்ரீநிவாசராகவையங்காரை அறிந்தவர்கள் அநேகர்; அவர் போஷணையில் வளர்ந்தவர்களும் பலர்; அவரால் வாழ்க்கையில் முன்னுக்கு வந்தவர்கள் எண்ணிக்கையும் அற்ப சொற்பமானதல்ல. இவர்கள் பூர்த்தி செய்யாமல் விட்ட குறையை நிவர்த்திக்க சுமார் பத்தாண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட முயற்சியும் அரைகுறையாய் முடிந்துவிட்டது.

பாட்டனுரைப்பற்றிய பற்பல விஷயங்களை எங்கெங் கிருந்தோ—ஓடி அலைந்து சரீர பாடுபட்டு—சேகரித்து இந்தப் பணியில் முனைந்திருந்த ஸ்ரீ சுந்தரராகவன் திடீரென 1946ம் வருடம் ஜனவரி மாதம் 25ம்தேதி வெள்ளிக் கிழமையன்று இரவு அகால மரணமடைந்து விட்டார். இந்தப் புத்தகத்தை எழுதி முடிப்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்த அவரது ஆசை நிராசையாகி விட்டது. உண்மையில் சகோதரரது பிரிவினலுண்டான துயரத்தைப் பன்மடங்காக்கும் வகையில் அவரது ஏட்டுப் பிரதிகள், "சென்னை ராஜதானியின் 40 வருட முற்போக்கு" என்ற மகுடத்துடன் ஸ்ரீநிவாசராகவையங்கார் எழுதியிருந்த புத்தகத்தைப் பாதி விமர்சனம் செய்திருந்ததுடன் நின்றுவிட்டன. இதைக் கண்டதும், 'இந்த அத்தியாயத்தை அவரே முடித்திருக்கக் கூடாதா? இந்த அரும்பெரும் புத்தகத்தைப் படித்து புரிந்துகொள்வது சாத்தியமான காரியமா? என்றே தோன்றியது. ஆனல் வம்சாவளி விசுவாசம் விசையூட்டியது. காரியத்தை முடிக்கும் சங்கல்பமும் துணை நின்றது. ஆகவே ஏதோ என்னாலியன்றவரை எழுதி முடிக்க முடிந்தது.

பாட்டனுரைப்பற்றிய புத்தகத்தில் பங்கு கொள்ள நேர்ந்ததைப் பாக்கியமெனக் கருதுகிறேன். காலஞ்சென்றவர்களான என் தந்தை ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரும் ஸ்ரீ சுந்தரராகவனும் விட்டுச் சென்றிருந்த குறிப்பு

கள் என் பணியைப் பேரளவுக்கு சுலுவாக்கின. நான் எழுதிய பகுதியில் குற்றங் குறைகள் பல இருக்கலாம். பிழைகள் இருந்தால் வாசகர்கள் க்ஷமிக்கக் கோருகிறேன், அவற்றை எடுத்துச் சொல்பவர்களுக்கு கடமைப்பட்டவனு வேன். இந்தப் புத்தகம் ஒரு விதத்தில் ஸ்ரீ சுந்தரராகவன் ஞாபகார்த்தமானதென்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பரோடா சமஸ்தான மாஜி திவானும் இந்திய திட்டக் கமிஷன் உபதலைவருமான ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும் திருவாங்கூர் சமஸ்தான மாஜி திவானும் வாழ்க்கையின் பல துறைகளிலும் பிரகாசிப்பவருமான டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயரும் நான் கேட்டுக் கொண்டவுடனேயே ஒரு க்ஷணம் கூட தாமதியாமல் மன மொப்பி முறையே முகவுரையும் முன்னுரையும் எழுதித் தந்து என்னை ஆசீர்வதித்து புத்தகத்துக்கு சிறப்பூட்டியதற்காக நான் என்றென்றும் அவர்களுக்கு கடமைப்பட்டவனுவேன்.

இந்தப் புத்தகத்தில் புகுத்தப்பட்டிருக்கும் படங்களுக்கு 'பிளாக்' தயாரித்து அவற்றை ஆர்ட் காகிதத்தில் அழகுற அச்சிட்டுத் தந்தவர்கள் "ஹிந்து" பத்திரிகைச் சொந்தக்காரர்களாவர். முகவுரையும் முன்னுரையும் எழுதிய பெரியோர்களைப் போல என் வேண்டுகோளுக்கு தயக்கமின்றி மனமிசைந்து இந்த உதவி புரிந்த "ஹிந்து" நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ கஸ்தூரி ஸ்ரீநிவாசனுக்கு என் நன்றி உரித்தாகும்.

கடைசியாக, இந்தப் புத்தகத்தை நான் எழுதி முடிக்க எனக்கு உற்சாகமூட்டிய என் தாயார், சகோதரர்களுக்கும் நண்பர் 'சாண்டில்ய' னுக்கும் அச்சுப் பிழைகளைத் திருத்துவதில் உதவியாயிருந்த காரியாலய சகா 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியர் ஸ்ரீ எஸ். சாரங்கபாணிக்கும் என் நன்றி.

'பரோடா ஹவுஸ்',
மயிலாப்பூர். மதராஸ்-4

கே. ரங்க ராகவன்

1

சுமார் அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு திவான்பஹதூர் டி. வெங்காசாமி ராவ் தஞ்சை ஜில்லா வைப்பற்றி மிக்க விரிவான புத்தகமொன்றை சென்னை ராஜாங்கத்தின் உத்திரவு பிரகாரம் எழுதினர். அந்த ஜில்லாவின் அங்கமான பிராம்மண வகுப்பைப்பற்றி அவர் அதில் பிரபலமாக எழுதியுள்ளார். "தஞ்சையிலுள்ள பல பிராம்மண குடும்பங்களில், திராவிடர் அல்லது தமிழர் எந்த தொகுதியைச் சேர்ந்தவர்களும், முக்கியமாக, ஐயங்கார் வகுப்பாரும் தங்கள் சுறுசுறுப்புக்கும் சிக்கன வாழ்க்கைக்கும் பிரசித்தி பெற்றவர்கள். இவை தவிர அவர்களது மதி நுட்பமும் மதிப்புக்குரியது. இப்போது அவர்கள் தான் முன்னுக்கு வந்துகொண்டிருப்பவர்கள். க்ஷேமமாக இருப்பவர்க்ள். எந்தத் துறையில் புகுந்தாலும், அது கல்வியானலும் சரி, கைத்தொழிலானலும் சரி, அவர்கள் தங்களது திறமை விசேஷத்தினல் சோபிக்கின்றனர். சர்க்கார் கீழ் பலதரப்பட்ட உத்தியோகங்களையும் அவர்கள் மேற்கொண்டிருக்கின்றனர். நியாயவாதத்தில் அவர்களுக்கு நிகர் யாரையும் கூறமுடியாது. கும்பகோணம் கலாசாலையிலும் மற்றும் ஜில்லா முழுதிலும் வியாபித்துள்ள இதர வித்யா ஸ்தலங்களிலும் படித்து தாங்கள் கற்ற கல்வியை அவர்களைப்போல் பயன்படுத்திக்கொண்டவர்களை நாம் வேறு எங்கும் காணவே முடியாது. சர்வகலாசாலைப் பட்டத்தைப் பெற்றவர்களில் இவர்களே பெரும் பகுதி. தமிழ்நாட்டுப் பிராம்மணர்களின் பூஸ்திதிக்குக் குறைவில்லை, பலர் பெரிய நிலச்சுவான்களாக இருக்கின்றனர். சர்க்கார் கீழ் பதவி வகிக்காதவர்களுக்கு விவசாயமே முதல் தொழிலாக இருந்துவருகிறது. மேலும் பலர் வர்த்தகத்தையும் நடத்துகின்றனர் * இவ்வார்த்தைகளை எழுதிய திவான்பஹதூர் வெங்காசாமி ராவ் மேற்கேயுள்ள மஹாராஷ்டிரப் பிரதேசத்திலிருந்து தட்சிண தேசத்தைச் சார்ந்த தஞ்சையில் குடிபுகுந்த பிராம்மணக் குடும்

* தஞ்சை ஜில்லா மான்யூவல் பக்கம் 170

பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். தலைமுறைகளாகவே தென்னாட்டில் தங்கியவரல்லர். ஆகவே அவர் தெரிவித்த கருத்துக்கள் அர்த்த கர்ப்பமானவை என்பது தெளிவு.

இத்தகைய பிராம்மணக் குடும்பங்களில் இன்னம்பூரைச் சேர்ந்தது ஒன்று. 'இன்னம்பூர்க்கூட்டம்' என்றால் இன்றும் விசேஷ கௌரவமுண்டு. சமூகத்தில் இருந்த செல்வாக்குக்கும் குறைவில்லை. திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் சுயமாகச் சம்பாதித்த கீர்த்தி குலப்பெருமையை ஸ்திரப்படுத்தி வைத்தது. இன்னம்பூர் மிகச் சிறிய கிராமம்; கும்பகோணத்திற்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் இருப்பது; அங்கிருந்து சுவாமி மலைக்குப் போகும் பாதையில் உள்ளது; காவிரியாற்றங் கரையில் அமைந்தது; இயற்கையின் இனிமையைக் காண் பவர்களுக்கு இன்பம் பயக்கக்கூடிய இடம்; வைதிக முறைகளில் பற்றுள்ளவர்கள் வாழ்வதற்கு வசதி அளிக் கும் ஊர். ஸ்தல புராணத்தைப் படித்தால் க்ஷேத்திரத் தின் மாஹாத்மியம் புலப்படும். இந்த இடத்திற்கு வந்து தான் சூரியன் சிவபெருமானை சிரத்தாபக்தியுடன் வழிப் பட்டாராம், இஷ்டசித்தியும் வாய்த்ததாம். ஆரம்பத்தில் இதற்கு இனபுரி என்று பெயராம். இனபுரி என்றால் சூரியபுரம். இங்கு கோவில் கொண்டெழுந்தருளியிருக் கும் சிவபெருமானுக்கு அக்ஷரபுரீஸ்வரர் என்பது பெயர். தமிழில் 'எழுத்தறிவார்' என்பர். இந்த மூர்த்தி மிக வரப் பிரஸாதி என்ற பிரசித்தி இன்றும் உண்டு. ஒரு சமயம் இந்திரன் ஒரு முனிசிரேஷ்டரின் சாபத்திற்காளாக நேர்ந் தது. இதன் காரணமாக அவன் பலவித கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. சிரமத்தைச் சிறிதும் சகிக்க முடியாமல் அவன் திரும்பவும் அவரிடமே போய் தன்னைத் துன்பத்திலிருந்தும் விடுவிக்கும்படிப் பிரார்த்தித் தான். அவர் உடனே மற்றொரு மாமுனியிடம் போய் முறையிடும்படி இந்திரனை ஆக்ஞாபித்தார். அவன் அவ் வாறே செய்த பின், இனபுரிக்குச்சென்று அங்குள்ள சூரிய புஷ்கரணியில் ஸ்நானம் செய்து ஆறுமாத காலம் தவம்புரிந்தால் விமோசனமுண்டு என்று தெரிவித்தார். இந்திரனும் இக்கட்டளையை நிறைவேற்றி இடர்தீர்ந்தவ னான் என்பது புராணக்கதை. கும்பகோணத்தைச் சுற்

றியுள்ள பதினெட்டு திவ்வியஸ்தலங்களுள் இன்னம்பூர் ஒன்று. இதுவும் பாடல்பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனார் பக்திப் பரவசமாய் இப்பெருமானைப் புகழ்ந்திருக்கிறார்.

அக்ஷரபுரீஸ்வரர் ஆலயம் அநேக வருஷங்களுக்கு முன்பே கட்டப்பட்டது. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் இந்தப் பிரதேசத்தை யாண்ட சோழ மன்னர்கள் இந்த தேவாலயத்திற்குச் செய்த திருப்பணிகளைப் பற்றி சாஸனங்கள் கூறுகின்றன. கோவிலின் கோபுரமும் 'கஜப்ருஷ்ட விமான'மும் குறிப்புக்குரியவை. சிற்பியின் சாமர்த்தியத்தை அங்கு காணலாம்.

ஒரு சமயம் சிவநேசர் ஒருவரிடம் இந்தக்கோவில் நிர்வாகப் பொறுப்பு விடப்பட்டிருந்தது. மனப்பூர்வமான பக்தியுடன் அவர் தமது கடமையை நிறைவேற்றி வந்தது எல்லோருக்கும் திருப்தியையே அளித்தது. இவ்வளவு சிரமப்பட்டு சேவை செய்தும் ஒரு விஷயத்தில் அவர் தவறிவிட்டார். கணக்குகளைச் சரிவரக் குறித்து வைக்கவில்லை. அந்தக் காலத்தில் அரசர் அடிக்கடி கணக்குகளைப் பரிசீலிப்பது வழக்கம். குறிப்பிட்ட தேதிக்குள் அவற்றை எடுத்துக்கொண்டு வந்து மன்னர் முன் சமர்ப்பிக்கவேண்டும் என்று தாக்கீது பிறக்கும். இன்னம்பூர் கோவில் தர்மகர்த்தாவுக்கும் இந்த உத்தரவு வந்தது. அதைக் கண்டு அவர் திடுக்கிட்டார். என்ன செய்வது என்ற திகைப்பு மேலிட்டது. கைவசத்தில் குறிப்புகள் இருந்தால் அல்லவா கண்ணியத்தைக்காக்க முடியும்? கௌரவத்திற்குக் களங்கம் உண்டாகிவிடுமே என்று கலக்கமடைந்தார். மனமுடைந்தும் மஹேச்வரனையே மேலும் பிரார்த்தித்தார். கடவுளின் கருணையே தம்மைக் காக்கவேண்டும் என்று கதறினார். பக்தரின் பிரலாபம் பகவானையும் எட்டியது. உடனே கனவில் வந்து தோன்றினார். சாதாரணப் பனை ஓலைகளைக் கட்டி வைத்து ராஜ சந்நிதானத்திற்கு அனுப்பி விடும்படி ஆக்ஞை பிறந்தது. மிகுந்தது என் பொறுப்பு என்றாராம் காருண்யமூர்த்தி. குறித்த நாளும் வந்தது. கணக்குகளைப் பரிசோதிக்கும் காரியமும் ஆரம்பித்தது. இன்னம்பூர்க் கட்டுகளைக் கண்டு அதிகாரிகள் பிரமித்துப் போயினர். எழுதாத ஓலை

களை ஏன் அனுப்பினர் என்று சீறினர். இதைச் சோழ வேந்தரிடம் அறிவித்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு ஒரு கிழப் பிராம்மணர் வந்து சேர்ந்தார். 'கணக்குகளை எழுதி வைத்தவன் நான்தான். அந்த ஏழைக் கணக்கன் அல்ல. ஆகவே நான் உங்களுக்கு அவற்றை உடனே எளிதில் விளக்க முடியும்' என்றார் அந்த வயோதிகர். அந்த ஓலைகளை வெகு சுலபமாகப் படித்தார். மிக்க விவரமாகவே இருந்தது. அரசனுடைய ஆச்சரியத்துக்கு அளவில்லை. படித்துக்காட்டிய பெரியவர் காரியம் பூர்த்தியானதும் மாயமாய் மறைந்தது ஆச்சரியத்தை மேலும் அதிகப்படுத்தியது. அந்த ரூபத்தில் வந்தவர் பகவானே என்பதும் எல்லோருக்கும் தெளிவாகியது. தர்மகர்த்தாவின் தெய்வ பக்தியின் மேன்மையை உணர்ந்து அவரை ராஜமரியாதைகளுடன் திருப்பியனுப்பினர் அரசர். அவர் மன்னிப்பையும் கோரினர். இன்னம்பூர் கோவில் கணக்குகளைப் பற்றித் தமக்குக் கவலை இல்லை எனவும் பறை சாற்றினர். * சொந்த ஊருக்கு வந்து சேர்ந்ததும் அவர் 'என் அன்பர் ஈசனே' என்று கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் அக்ஷரபுரீஸ்வரரை ஆலிங்கனம் செய்துகொண்டார். இக்காரணம் பற்றி இந்த ஸ்தலத்திற்கு 'என்னன்பரூர்' என்ற பெயர் ஏற்பட்டது.

இங்குள்ள விஷ்ணு கோவிலும் சிறப்பு வாய்ந்தது. அதில் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸப் பெருமாள் வரப்பிரஸாதி என்பது பிரஸித்தம். அக்ஷரபுரீஸ்வரர் ஆலயமும் ஸ்ரீநிவாஸன் சந்நிதியும் ஒன்றுக்கொன்று வெகு சமீபத்தில் இருக்கின்றன. கால் மைல் தூரத்தில் இரண்டும் அமைந்திருக்கின்றன. இவ்வூரில் அத்வைதிகளே ஆரம்பகாலத்தில் அதிகமாக இருந்தனர். ஆயினும் சைவ, வைஷ்ணவர்களிடையே சமரச மனப்பான்மை வலுத்திருந்தது. சமய வாதங்களில் ஈடுபட்டபோதிலும் சச்சரவுகளை அவர்கள் பெரிதாக்கியதில்லை. ஆத்மிய விசாரத்தில் இறங்கிய சமயத்திலும் அந்நியோந்நியத்திற்குப் பங்கம் ஏற்பட்டது கிடையாது.

திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸ ராகவையங்காரின்

---

* 'ஹிந்து' 23-8-1942

முன்னோர்களைப் பற்றிய அதிக விவரம் கிடைக்கவில்லை. கல்வியைக் குலதனமாகக்கொண்டு கவலையின்றியே காலத்தைக் கழித்தனராம். நாட்டையாண்ட நாயகபூபதி ஒருவரை நாடி நலமுற வாழ்ந்தனராம். ஆசார சீலர்களா கவும் கைங்கரிய சிரேஷ்டர்களாகவும் வித்வத் சம்பன்னர் களாகவும் இருந்து மஹாராஜாக்கள் மனமுவந்து வழங் கிய மான்யத்தை மனமார அனுபவித்துவந்தனராம்.

விஜயநகர அரசர் கீழ் வீரவல்லி கிருஷ்ணமாச்சாரியார் என்பவர் உதவி மந்திரியாக வேலைபார்த்தவர். அவர் நான்கு சாஸ்திரங்களிலும் சிறந்தவர்; கிரமப்படி வேதாத் தியயனம் செய்தவர். அவருடைய அபார பாண்டித்தியத் தைக் கண்ட அப்பைய தீக்ஷிதர் என்ற மகான் விஜயநகர சமஸ்தானத்தில் அவருக்குப் பதவி கிடைக்கும்படி செய் தார். அப்போது அதே ஆஸ்தானத்தில் இருந்த திருமலை தாதாச்சாரியரும் வீரவல்லி கிருஷ்ணமாச்சாரியாரிடம் அன் புடன் இருந்தார். அமைச்சர்களாக இருந்த இவ்விரு வரும் அவரிடம் காட்டிய பரிவு காரணமாக அரசர் அவரை ஆடிப் புலியூரின் அதிபதியாக்கினர். வரிகளை வசூலித்து ஆதாயத்தைச் செலுத்துவது அவருடைய முக்கிய அலுவல். தரிசு நிலத்தின் சாகுபடிக்கு ஏற்பாடு செய்வதும் அவருடைய பொறுப்பு இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் அவருக்கு சகோதரர் குமாரர்கள் உதவி புரிந்தனர். தம் ஆதிக்கத்திற்குட்பட்ட சில கிரா மங்களுக்கு பெரிய சகோதரர் குமாரர் திருவேங்கடாச்சாரி யாரையும் இன்னம்பூர் முதலான வேறு சில கிராமங் களுக்கு இளைய சகோதரர் புத்திரரான ராகவையங்காரை யும் அவர் முறையே மேற்பார்வை அதிகாரிகளாக நியமித் தார். ராகவையங்காரின் வம்சத்தில் வந்தவர்தான் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார்.

அப்போது ஆந்திர தேசத்தில் வைஷ்ணவர்களே மதா சாரியர் ஸ்தானத்தில் இருந்தனர். அவர்களைத் தெலுங்கு பாஷை பேசுவோர் 'ஐயவாரலங்காரு' என்று அழைத் தனர். ஆகவே நாயக மன்னர்களும் அவர்களை இதே மாதிரி குறிப்பிட்டனர். இந்த கௌரவப் பெயர் நாள டைவில் 'ஐயங்கார்' என்று குறுகிப்போயிற்று. ஐந்து அங்கமுள்ளவர்கள் என்று ஐயங்கார்களைப் பற்றிப் பேசு

வது பிசகு. பஞ்சாங்கம் பார்த்துச் சொல்லும் புரோஹிதர்கள் என்று பாவிப்பதும் பிசகு.

இன்னம்பூரில் ஸ்ரீநிவாஸரின் விக்கிரஹத்தைப் பிரதிஷ்டை செய்த பெருமை இந்த வீரவல்லி குடும்பத்தாருக்கே உரித்தாகும். திருப்பதி க்ஷேத்திரத்தை மஹம்மதியர்கள் கைப்பற்ற வந்தபோது அங்கு தேவஸ்தானத்தில் ஸ்தானிகராயிருந்த தோழப்பர் என்ற தாதாச்சாரியார் அவர்களிடமிருந்து விக்கிரஹங்களைப் பாதுகாக்க விரும்பி சுற்றுப்புறமுள்ள காடுகளில் அவற்றை ஒளித்துவைத்தார். கோவிலையும் தக்கபடி பந்தோபஸ்து செய்துவைத்தார். மலைக்கோவிலில் பஞ்சமூர்த்திகள் இருந்தனர். சிறிய மூர்த்தியை உபயநாச்சிமார்களோடு அவர் நாவல்பாக்கம் கிராமத்திற்கனுப்பி அங்கு பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு பண்ணினர். இதையறிந்த கிருஷ்ணமாச்சாரியார் உடனே தஞ்சை நாயகரிடம் போய் இன்னம்பூரில் விஷ்ணு ஆலயம் இராமையால் அந்த மூர்த்தியைத் தம்மிடம் தரும்படிக் கேட்டுக்கொண்டார். அரசரும் அதற்கு சம்மதித்தபடியால் கிருஷ்ணமாச்சாரியார் மிகுந்த சந்தோஷத்துடன் இன்னம்பூரில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். வெகு சீக்கிரத்தில் வெங்கடேசரின் விக்கிரஹம் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. சம்ப்ரோக்ஷணம், கும்பாபிஷேகம் முதலியன சிறப்பாக நடைபெற்றன. இதன் பிறகு கிருஷ்ணமாச்சாரியார் தம் சகோதரர் குமாரர் ராகவையங்காருக்கு தினசரி பூஜைகளையும் பிரதி வருஷம் பிரம்மோத்ஸவத்தையும் தவறுமல் நடத்துவதற்கு ஏற்பாடு பண்ணும்படி கட்டளையிட்டார். ஆகவே இன்னம்பூர் ஸ்ரீநிவாசருக்கு வேங்கடாசலபதியின் பிரபாவம் இருப்பது புலப்படும். ராகவையங்கார் நீர்ப்பாசனத்திற்காக காவேரி நதியிலிருந்து ஒரு வாய்க்காலை வெட்டி வைத்தார், இதற்கு ராகவன் வாய்க்கால் என்ற பெயர் வழங்கியது. அப்போது இன்னம்பூர் வட்டத்தில் மாதயூரம், நாகக்குடி ஆகிய கிராமங்கள் அடங்கியிருந்தன. இதற்கப்புறம் ராகவையங்காரின் குடும்பம் அபிவிருத்தியடைந்தது.

நாயகமன்னர்களுக்கப்புறம் தஞ்சையில் மஹாராஷ்டிரர்கள் அரசுரிமை வகித்தனர். பதினெட்டாம் நூற்

ருண்டின் அந்திய வருஷங்களில் தஞ்சைப் பிரதேசம் பிரிட்டிஷார் வசம் வந்து சேர்ந்தது. நாட்டில் நடந்த சண்டை, சச்சரவுகள் காரணமாகக் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு இங்கு அதிகாரம் வாய்த்தது. ஆங்கிலேயர் உதவியுடன் சரபோஜி மகாராஜா 1798-ம் ஆண்டில் பட்டத்தை ஸ்வீகரித்தார். ஆனால் பிரிட்டிஷாருடன் செய்து கொண்ட உடன்படிக்கை காரணமாக அவருடைய உரிமைகளும் அதிகாரமும் அதிகம் கட்டுப்பட்டிருந்தன. தமக்கு வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கைக் கொடுத்துவிட்டு நிர்வாகத்தை நடத்தும்படி அவர் கம்பெனியாரைக் கேட்டுக்கொண்டார். பிரதி வருஷமும் மூன்றரை லக்ஷம் ரூபாயும் மாகூலில் ஐந்தில் ஒரு பாகமும் சரபோஜிக்குக் கொடுக்கவேண்டுமென்பதே ஏற்பாடு. இதனால் தஞ்சை நிர்வாகத்தில் திருப்திகரமான அபிவிருத்தி தென்பட்டது.

சரபோஜி ராஜா நற்கலைகளில் நிரம்பிய ருசி உள்ளவர்; கல்விமான்களைக் காப்பதே கடமை எனக் கருதியவர்; அறிவாளிகளைக் கண்டால் அளவற்ற ஆனந்தத்தை அடைபவர். உடன் இருந்த ஷ்வார்ஸ் என்ற கிறிஸ்துவப் பாதிரியின் போதனை காரணமாக அவருக்கு மேனாட்டுப் படிப்பில் மிகுந்த மோகம் பிறந்தது. ஆங்கிலத்தில் எழுதவும் பேசவும் அவர் பயிற்சி பெற்றார். பல பாஷா புத்தகங்களைக் கொண்ட பெரிய புத்தகாலயமொன்றை அவர் சேகரித்தார். அதில் ஏராளமான ஓலைச்சுவடிகளும் இருந்தன. பல்வேறு விஷயங்களைப்பற்றிய நூல்களும் அங்கு காணலாம். நூதனமான காரியத்தைச் செய்வதில் சரபோஜிக்கு விசேஷ விருப்பம் உண்டு. தாமே சொந்தத்தில் ஒரு அச்சுக்கூடத்தையும் அவர் நடத்தினார். பண்டைக்கால நாணயங்களையும் புராதன நாகரிகச் சின்னங்களையும் கொண்ட கண்காட்சி சாலையை அவர் அமைத்தார். சிற்பத்திலும் சித்திரத்திலும் அவருக்கிருந்த சிரத்தை சாமான்யமல்ல. அண்டியிருந்தவர்கள் அவரிடம் கொண்ட அன்பும் அபரிமிதமானதாம்.

இந்த சரபோஜி ராஜாவிடம் இன்னம்பூர் வம்சத்தார் சேவை செய்தனர். அவரிடம் கஸ்தூரி ரங்கையங்கார் என்பவர் 'ஏஜிப்' உத்தியோகத்தை வகித்தார். ராணுவச்

சிப்பந்திகளுக்கு சம்பளத்தை அவரே பட்டுவாடா செய்து வந்தார். இவரது தம்பியான ஸ்ரீநிவாஸையங்கார் சரபோஜியின் மந்திரிகளுள் ஒருவராக இருந்தார். ராகவையங்கார் காலத்திற் கப்புறம் அவர் சந்ததியார் செய்துகொண்டு வந்த பாகப் பிரிவினை காரணமாக கஸ்தூரி ரங்கையங்காருக்கும் அவரது சகோதரர்களுக்கும் இன்னம்பூர் கிராமம் சொந்தமாகிவிட்டது.

கஸ்தூரி ரங்கையங்காருக்கு ஐந்து குமாரர்கள் பிறந்தனர். அவர்களில் மூன்ருவது சேஷையங்கார். சேஷையங்கார் தஞ்சைக் கலெக்டர் ஆபீஸில் 'ஜவாப்நவிஸ்' பதவியை யேற்ருர். கலெக்டர் பார்வைக்கு அனுப்பப்படும் மராத்தி தஸ்தாவேஜிகளை முன்னதாகவே படித்துப் பார்த்து தமது அபிப்பிராயத்தை சேஷையங்கார் தெரிவிக்க வேண்டும். ஆங்கிலத்தில் சேஷையங்காருக்குப் போதிய அளவுக்குப் பயிற்சி உண்டாதலால் அவர் அவ்வப்போது எழுதிவைக்கும் குறிப்புக்கள் கலெக்டருக்கு மிகவும் உதவும். ஜில்லாவில் சேஷையங்காரின் செல்வாக்கு அதிகம். கலெக்டர் மூலம் தங்களுக்கு எந்தக் காரியம் நடக்க வேண்டுமாஞலும் தஞ்சை ராஜ குடும்பத்தாரும் சேஷையங்காரிடமே வருவது வழக்கம். ஜில்லாவில் இருந்த இதர பெரிய அதிகாரிகளும் அவரிடம் அதிக மதிப்பு வைத்திருந்தனர். இங்கு வேலை பார்த்த கனம் வி. ராமையங்கார், ஸர் முத்துஸ்வாமி ஐயர், ஸர் வி. பாஷ்யமையங்கார் முதலிய பிரபலஸ்தர் பலரும் அவரை நன்ருக அறிந்தவர்கள். நிலப்பிரச்னைகளைக் குறித்தும் நிர்வாக விஷயங்களைப் பற்றியும் அவருக்கு நீண்ட காலமாக இருந்துவந்த அனுபவத்தையும் அந்த அனுபவத்தின் மூலம் வாய்த்த விசேஷ ஞானத்தையும் அவர்களும் அவ்வப்போது வந்த அதிகாரிகளும் பெரிதும் மதித்தனர். சேஷையங்காரின் தோற்றம் கம்பீரமானது. பார்ப்பதற்கு அவர் அங்கமாயிருப்பார். இரட்டை நாடி புருஷர் எனக் கூறக்கூடாவிட்டாலும் திடகாத்திரம் வாய்ந்தவர் என்பதை மறுக்கமுடியாது. கூட்டத்தில் கலந்துகொண்டால் குறிப்பிடாமல் இருப்பது சாத்தியமில்லை.

சேஷையங்கார் ஒரு பெரிய குடும்பி; மூன்று புத்திரர்களும் நான்கு குமாரிகளும் பிறந்தனர். அவர்களுள் முதல்வரே திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார், சௌந்திரராஜ ஐயங்காரும் கஸ்தூரி ரங்கையங்காரும் இவருக்கடுத்தவர்கள். 1849-ம் வருஷம் ஜுலை மாதம் 18-ம் தேதி இந்த ஜ்யேஷ்ட குமாரர் கும்பகோணத்திற்கு அருகாமையிலுள்ள கங்காதரபுரம் என்ற கிராமத்தில் தமது தாய்வழி பாட்டனுர் வீட்டில் ஜனித்தார். மிதுன ராசியில் புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பிறந்த இந்த சீமந்தப் புத்திரனின் ஜாதகத்தை கணித்த ஜோதிஷ சாஸ்திர நிபுணர்கள் யாவரும் இந்தக் குழந்தைக்கு "க்ரஹமாலிகா யோகம்" இருப்பதாகக் கூறி மிக்க மகிழ்ச்சியடைந்தனர். பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்று பெருமையுடன் பிரகாசிக்கப்போவதாயும் அவர்கள் தெரிவித்தனர். சேஷையங்கார் தமது பிள்ளைக்கு ஆங்கிலக் கல்வியை அளிக்க தீர்மானித்தார். அவ்வாறு செய்வது பலன்தரும் என்ற திடமான நம்பிக்கை அவருக்கிருந்தது.

இந்தக் காலத்தில் கும்பகோணம் மாகாணப் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் தம் மேலதிகாரிக்கு எழுதியுள்ள ரிப்போர்ட் மூலம் நாம் அந்த நாளைய மனோபாவத்தை அறியலாம்:—ஆங்கிலத்தில் காட்டும் சிரத்தையை மாணவர்கள் தமிழ்ப் படிப்பில் இப்போது காட்டுவதில்லை. தமிழ் ஞானத்தைவிட நல்ல ஆங்கிலப்படிப்புதான் தங்களது பிற்கால வாழ்க்கைக்கு உதவும் என்ற கருத்து அவர்கள் எல்லோருக்கும் பொதுவாக இருப்பதாகத் தெரியவருகிறது.*

இந்தப் பொதுவான கருத்துக் கொண்டவர்களுள் சேஷையங்காரும் ஒருவர். அவரோ தஞ்சையில் வேலை பார்த்து வந்தார். ஆனால் புத்திரனின் படிப்பை யுத்தே

* 1854-55 ம் ஆண்டு ரிப்போர்ட்டு

சித்து அவர் கும்பகோணத்தில் ஒரு தனிக் குடித்தனத்தை நடத்த வேண்டியதாயிற்று. இரண்டு இடங்களில் குடும்பத்தைப் பிரித்துவைத்து நிர்வகிப்பது அவருக்குப் பல விஷயங்களில் சௌகரியக் குறைவாக இருந்தபோதிலும் அவர் தம்முடைய சிரமங்களைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. கங்காதர புரத்திலிருந்து மாதாமஹர் ராகவையங்கார் தமது தௌஹித்திரனின் படிப்பையொட்டி கும்பகோணத்திற்கு வந்து தங்கினார். அந்தப் பாட்டனாரின் மேற்பார்வையில் பேரன் வளர்ந்து வந்தான்.

இப்போது கும்பகோணத்தில் இருக்கும் கவர்ன்மெண்ட் காலேஜ் அவர் நாளில் உயர்தரப்படிப்புக்கான பள்ளிக்கூடமாகவே இருந்தது. 1854-ம் வருஷத்தில் மாகாணப் பள்ளிக்கூடம் என்ற பெயருடன் இது ஸ்தாபிக்கப்பட்டது. ஜில்லா கலெக்டர் மிஸ்டர் போர்ப்ஸ் இந்த வித்யாசாலையை ஆரம்பித்துவைத்தார். கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையிலிருந்து சிறப்புடன் தேறிய மிஸ்டர் பார்ட்டி என்பவர் தலைமை உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். அவருக்கடுத்த ஸ்தானத்தில் டி. கோபாலராவ் பதவி வகித்தார். பிறகுதான் அது கலாசாலை என்ற அந்தஸ்தை அடைந்தது. இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் படித்தார். ஆரம்பத்திலிருந்தே இவருக்குக் கணித சாஸ்திரத்தில் விசேஷ கவனம் இருந்து வந்தது. ஒவ்வொரு வகுப்பிலும் இவரே மாணாக்கர்களில் முதல்வராக நின்றார். போர்ப்ஸுக்குப் பின்பு மார்ஸ்டன் பள்ளிக்கூடத்தின் பிரதான ஆசிரியராக வேலை பார்த்தார். அவர் தோற்றத்தைப் பார்த்தாலே சிறு பிள்ளைகள் அஞ்சுவராம். அவர் குற்றம் குறையின்றி தம் காரியத்தைக் கவனித்து வந்தவர். வேலையைக் குறித்தமட்டில் அவர் சமர்த்தர். ஆனால் பாடசாலையில் உள்ள இளைஞர்களுக்கும் அவருக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. கலாசாலையின் இடது சிறகில் அவர் குடியிருந்து வந்தார். அவர் காலத்தில் எந்தவிதமான ஆட்டமும் கிடையாது.

போர்ட்டர் துரை இக்கலாசாலையின் தலைமைப் பதவியை 1863-ல் ஸ்வீகரித்தார். அவர் கேம்ப்ரிட்ஜில் கணித சாஸ்திரத்தில் உயர்பட்டம் பெற்றவர். அவர் கும்பகோணத்திற்கு வந்த சமயத்தில் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார்

ஆரும் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். புத்தி கூர்மை வாய்ந்தவருக்குப் பகுத்தறிவுள்ள போதனாசிரியர் வாய்த்தால் அதைவிட வேறு என்ன பேறுவேண்டும்? பிரசித்தி பெற்ற பிரின்ஸிபாலான போர்ட்டருடன் ஏற்பட்ட பழக்கமும் தொடர்பும் பிந்தியவரின் பிற்கால பெருமைக்கு அஸ்திவாரமாய் அமைந்தன. போர்ட்டரைப் பற்றி சாமான்யமாகப் பேச முடியாது. அவர் அசாதாரண திறமை வாய்ந்தவர். தம் கீழ் படித்த மாணவர்களை நன்கு உருப்படுத்தியவர். அவரவர் குண விசேஷங்கள் சோபிக்கவும் இயற்கையில் தோன்றிய இனிய இயல்புகள் பரிமளிக்கவும் வழிகாட்டியவர் அப்பெரியார். காவிரி ஜலத்தைப் பருகியவர்களுக்குக் கணித சாஸ்திரத்தில் இருக்கும் பாண்டித்யத்தை அளவிடமுடியுமா? போர்ட்டர் துரைக்கு அப்பகுதியில் இருந்த விசேஷ அபிமானம் மாணவர்களிடையேயும் அது விஷயத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கியதில் என்ன ஆச்சரியம்?

போர்ட்டர் பாடஞ்சொன்ன முறையும் அவர் மாணவர்களுடன் பழகிய விதமும் குறிப்புக்குரியன. வித்தியார்த்திகளுடன் அவர் சரிசமமாகப் பழகுவார். தம்மை அவர்கள் அடிக்கடி காண்பதற்கு இடம் கொடுப்பார். ஏழைச்சிறுவர்களிடம் அவர் கொண்ட அன்பு அதிகம். அதிலும் அவர்கள் நல்ல படிப்பாளிகளாக இருந்துவிட்டால் அவர் காட்டும் ஆதரவை அளவிட முடியாது. அவர் வெளியே கிளம்பிவிட்டால் அவரைச் சூழ்ந்து கொண்டு அநேக இளைஞர்கள் செல்வர்; சதா சர்வகாலமும் அவரைச் சுற்றிக்கொண்டே இருப்பர். உள்ளத்தில் உறைந்திட்ட கவலைகளை அவரிடம் உண்மையில் எடுத்துரைப்பர். எதிர்பார்த்த அளவுக்கு அவரிடமிருந்து உதவி கிடைக்கும். மாதா மாதம் தாம் வாங்கிய சம்பளத்தில் பெரும் பகுதியைத் தாராள புத்தியுடன் விநியோகிக்கவும் அவர் தயங்கமாட்டார். ஆனால் தகுதியற்றவர்களிடம் அவர் தாக்ஷண்யம் காட்டியதில்லை. தம்மிடம் கல்வி கற்கும் மாணவர்களைச் சொந்த பிள்ளைகளைப்போல் பாவிப்பவரிடம் பிரேமையும் பற்றுதலும் பிறக்காமல் எப்படி இருக்கும்?

பல வருஷங்களுக்கப்புறம் வி. பி. மாதவராவ் கும்ப

கோணம் கலாசாலை விழா வொன்றில் தலைமை வகித்துப் பேசுகையில் தாம் படித்த நாட்களை ஞாபகப்படுத்தி தமக்கு ஆசிரியராய் விளங்கிய சிரேஷ்டர்களைப் பற்றி விவரமாகப் பேசினர். தலைமை உபாத்தியாயராக இருந்த போர்ட்டர் துரையைப் பற்றியும் அவருக்கடுத்தபடி மாகாணப் பள்ளிக்கூடத்தில் முக்கியஸ்தராய் விளங்கிய ராய்பஹதூர் டி. கோபாலராவைக் குறித்தும் அவர் தம் நினைவுக்கு வந்த சில விஷயங்களை எடுத்துச்சொன்னர். அவருடைய வார்த்தைகளை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்:—

"1863-ல் மிஸ்டர் டபிள்யூ. ஏ. போர்ட்டர் ஹெட்-மாஸ்டராக நியமிக்கப்பட்டார். அப்போது நான் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அக்காலத்தில் ஆறும் வகுப்பு மெட்ரிகுலேஷன் வகுப்பு என வழங்கி வந்தது. மிஸ்டர் போர்ட்டர் பள்ளிக்கூடத்திற்கு வந்து சேர்ந்தவுடன் தலைகாட்டிய புத்துணர்ச்சி எனக்கு இப்போது ஞாபகத்தில் இருக்கிறது. நொடிப் பொழுதில் அவர் பள்ளிக்கூடத்தைத் தம் வசப்படுத்திக் கொண்டார். வெகு சீக்கிரத்தில் பள்ளிக்கூட நிலைமை மாறிப்போயிற்று. புதிய ஸ்திதி உருவாகிவிட்டது. அவர் பள்ளிக்கூடத்தின் அதிபராக வந்த சமயத்தில் மெட்ரிகுலேஷன் வகுப்பில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், ஸ்ரீ. டி. சுந்தரம் ஐயர், என் சகோதரரான ஸ்ரீமல்ஹரிராவ், ஸ்ரீ. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீ. வி. ராஜகோபாலாச்சாரியார் முதலியோர் படித்துக்கொண்டிருந்தனர். அந்த வகுப்பில் ஸ்ரீ. ஏ. ராமச்சந்திர ஐயரும் அப்போது இருந்தாரா என்பது எனக்கு ஞாபகத்தில் இல்லை" *

இவர்களில் ஆர். ஸ்ரீநிவாஸையங்கார்** பட்டதாரியான பின்பு கும்பகோணம் கலாசாலையிலேயே சிறிது காலம் உதவி போதகாசிரியராக இருந்து போர்ட்டர் துரையுடன் அதிக காலம் நெருங்கிப் பழகினர். பிறகு பதவியை விட்டு விட்டு அவர் நாகபட்டினத்தில் வக்கீலா

* 1917-ம் ஞு ஏப்ரல் 8-ம் தேதி
** 1905-ல் காலமானர்.

கத் தமது அந்திய காலம் வரையில் இருந்தார். அவர் ஸ்ரீநிவாஸ ராகவையங்காரின் பெரிய தகப்பனருடைய புத்திரர், வி. ராஜகோபாலாச்சாரியார் பிற்காலத்தில் டிபுடி கலெக்டராக வேலைப்பார்த்து தஞ்சை நகர சபைத் தலைவராகவும் பல வருஷங்கள் சேவை புரிந்தார். "திவான் பஹதூர்" பட்டத்தைப் பெற்று அவர் அதிக செல்வாக்குடன் இருந்தவர். திருவாங்கூர், மைசூர் முதலிய சமஸ்தானங்களில் பிரதம நீதிபதியாகப் பதவி வகித்து பெருமையைச் சம்பாதித்த திவான்பஹதூர் ஏ. ராமச்சந்திர ஐயரும் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவர். சென்னையில் "மதராஸி" என்ற ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தியவர் அவர் தாம். அவர் அதிக காலம் ஜீவித்திருந்தார். அந்திம காலத்தில் ஆத்மிய விசாரத்தில் பொழுதைப் போக்கியவர். ஆதி சங்கரரின் ஜன்ம பூமியான காலடி க்ஷேத்திரத்தில் காலத்தைக் கழித்தவர். வி. பி. மாதவராவ், ஸ்ரீநிவாஸ ராகவையங்காரைவிட இரண்டு வயது சிறியவர்; இருவரும் பால்யம் முதற்கொண்டே பிரபல நண்பர்கள்.

"மிஸ்டர் போர்ட்டர் போதனை முறையை அடியோடு மாற்றிவிட்டார். கற்பிக்கும் விஷயத்தில் புத்துணர்ச்சி பிறந்தது. ஒவ்வொரு மாணவனுடைய தரத்திற்கேற்ப பாடம் சொல்லிக்கொடுக்கப்பட்டது. உண்மையிலேயே இதற்கப்புறம் வித்தியாப்யாஸம் வாய்த்தது. ஒவ்வொரு சிறுவனும் அவனவன் திறமையை வெளிப்படுத்தவும் சுயமாகச் சிந்தித்து தனக்களிக்கப்பட்ட கல்வியைக் கிரஹித்துக் கொள்ளவும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கீழ் வகுப்புகளுக்கும் போய் மிஸ்டர் போர்ட்டர் பாடம் போதிப்பார். பிள்ளைகளுக்கு ருசி ஏற்படும் விதத்தில் அந்த வகுப்பு ஆசிரியர்களும் போதிக்க அவர் வழி காட்டுவார். எந்த விஷயத்தையும் அவர் அற்பமாகக் கருத மாட்டார். அவர் காட்டிய பொறுமைக்கும் ப்ரீதிக்கும் வரையறை கிடையாது. அவர் வீட்டிற்குப் பையன்கள் எப்போது வேண்டுமானாலும் போகலாம். அங்கு அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. பிரின்ஸிபாலின் சௌகரியக் குறைவைப் பற்றிச் சிறிதும் சிந்தனையின்றி சிறுவர்கள் அவர் வீட்டில் சுற்றி அலைவர். இளைஞர்களுக்கு முன் புத்தி கிடையாது என்பது புழமொழி. ஆனால்

மிஸ்டர் போர்ட்டரின் இனிமையும் இசைவும் அசைக்க முடியாதவை. அவர் பாடபோதனைக்காக தம்மைத் தயார்ப் படுத்திக் கொண்டிருக்கலாம்; தத்துவப் பிரச்னைகளைக் குறித்து அவசரம் அவசரமாக இங்கிலாந்தில் உள்ள நண்பர் ஒருவருக்கு அவர் கடிதம் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கலாம்; அல்லது அங்கிருக்கும் சிநேகிதர் ஒருவர் தமக்கு விடுத்த கணித சாஸ்திரக் கேள்விகளுக்கு விடையைத் தயாரிப்பதில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கலாம்; அப்போது கீழ் வகுப்பு மாணவன் ஒருவன் சரிவரச் சொக்காயப் போட்டுக் கொள்ளாமலேயே மிகவும் சாமான்யமான விஷயத்தைத் தமக்கு விளக்கும்படி அவரிடம் ஓடி வருவான். மிஸ்டர் போர்ட்டர் முகத்தில் அந்த வேளையில் அறுவெறுப்புக் குறி கொஞ்சமும் தென்படாது. தன் காரியத்தைக் கட்டிப்போட்டு விட்டு ஓடி வந்த சிறுவனை அவர் தட்டிக்கொடுப்பார். பிறகு புன்முறுவலுடன் அவனுடைய சந்தேகத்திற்கு சமாதானம் கூறி அவனை சந்தோஷத்துடன் அவர் அனுப்புவார். புத்த பகவான்போல் அவர் பரம சாந்தராய் பிரகாசித்தார். அவர் அன்பே உருவெடுத்ததுபோல் இருந்து தன்னைப்பற்றி சிந்தித்ததில்லை. தாம் ஆளும் இனத்தைச் சேர்ந்தவர் என்ற உணர்ச்சி அவருக்குக் கொஞ்சம் கூட இருந்ததே இல்லை. ஒய்ச்சல் ஒழிவின்றி அவர் மாணவர்களுக்குப் புத்தகங்களை வாங்கித் தருவார். பண உதவியும் அளிப்பார். புத்திமதி கூறவும் பின்வாங்க மாட்டார்.''

வாழ்க்கையில் மிஸ்டர் போர்ட்டர் கொண்டிருந்த லக்ஷியம் மேன்மையானது. அவருக்கிருந்த நோக்கம் மிக்கப் பரந்தது. விரிந்த மனப்பான்மையுடன் அவர் வாழ்ந்தவர். ஒரு பகுதியில் ஒரு மாணவர் நல்ல மார்க்குகளை வாங்காவிட்டால் உடனே மிக்க சிரத்தையுடன் அந்தப் பகுதியில் அந்த மாணவர் விசேஷ ஞானம் அடையும்படிச் செய்ய வல்லவர் அவர். தாம் அளிக்கும் உதவியை அவர் பிறர் அறியவிடமாட்டார். பள்ளிக்கூட சம்பளத்தைக் கட்டவோ அல்லது புத்தகங்களை வாங்கவோ அல்லது குடும்பச் செலவுக்காகவோ அவர் சிலருக்குத் திரவிய சஹாயம் செய்ததுண்டு; ஆனால் மற்றவர் லஜ்ஜைப்பட இடம் தரமாட்டார். அந்தஸ்து குறைவு

என்று கருதுவதற்கும் சந்தர்ப்பம் அளிக்கமாட்டார். அவர்களுக்குத் தெரியாமலே அநேக சமயங்களில் அவர் இம்மாதிரி தாராள புத்தியைக் காட்டுவார்.

கலாசாலை மாணவர்கள் கட்டுப்பாடு விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் மேலதிகாரியின் உத்திரவுகளுக்கு மதிப்பு வைக்கவும் அவர் முன் நின்று செய்த முயற்சிகளே வழிகாட்டின. குறிப்பிட்ட காலத்தில் காரியங்களைச் செய்து முடிப்பதற்கும் அவரே உதாரண புருஷராக விளங்கினர். சிறு பிராயம் முதற்கொண்டே அவர்கள் மனித உணர்ச்சியுடனும் சுயமரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டுமென்பது அவருடைய சித்தாந்தம். அவர் அநியாயத்தைச் சகிக்கமாட்டார்; அக்கிரமத்தை ஆதரித்தவரல்லர்; தம்மிடம் வரும் வித்தியார்த்திகள் ஒளிவு மறைவின்றி பேசுவதை அவர் வற்புறுத்தினர். அநாவசியமாய் பயப்படக்கூடாது என்பதே அவர் எண்ணம்; இதனால் அவர்கள் பயம் அகன்றதே யன்றி பக்திக்குப் பழுதேற்படவில்லை.

இந்தியர் எந்த விஷயத்திலும் மேனாட்டாருக்குத் தாழ்ந்தவரல்லர் என்பதே மிஸ்டர் போர்ட்டரின் முடிவு. அவர்களுடைய பண்டைய நாகரிகம் பெருமைப் படக்கூடியது என்பதே அவர் கருத்து. அவர்கள் பிரகாசிப்பதற்குப் பரிவுதான் தேவை என்பது அவருடைய எண்ணம். போர்ட்டர் பெரிய பொறுப்பை வகித்தார். போற்றத் தக்க விதத்தில் அதைப் பூர்த்தி செய்தார். போர்ட்டருடைய காலத்தில்தான் கும்பகோணம் காலேஜ் "தென்னிந்திய கேம்ப்ரிட்ஜ்" என்ற சிறப்பை ஸ்வீகரித்தது. 1872-ம் வருஷம் சென்னை மாகாண கல்வி இலாகா அதிபர் லெப்டினன்ட் கர்னல் ஆர். எம். மக்டானல்ட் கும்பகோணம் கலாசாலையைப்பற்றி தமது அறிக்கையில் குறிப்பிடும்போது அந்தக் கலாசாலையில் படித்த மாணவர்கள் மிகச் சிறப்புடன் தேறியிருப்பதாயும் அது முதல்தர காலேஜாக உயர்த்தப்பட்ட நான்கு ஆண்டுகளில் இரண்டு தடவைகள்தான் பிரஸிடென்ஸி காலேஜ் அதைவிட மேலான ஸ்தானத்தை வகித்திருப்பதாகவும் இது விஷயத்தில் போர்ட்டரே பாராட்டுக் குரியவர் எனவும் அவருடைய தலைமையில் அந்தக் கலாசாலை தென்னிந்திய

கேம்ப்ரிட்ஜ் என்ற பெருமையை எட்டி வருவதாயும் வெளியிட்டார்.

போர்ட்டரின் சிறப்பைப்பற்றி அவர் கீழ் படித்து பிற்காலத்தில் சென்னை சர்க்கார் வித்யா இலாகாவில் அவர் போலவே வேலைபார்த்த புரொபஸர் பி. ஹனுமந்தராவ் எழுதிய வாக்கியங்களையும் இங்கு பொருத்துவது உசித மாகும்.

> "போர்ட்டர் பரந்த நோக்கம் பூண்டவர். ஒரு புத்தகத்தின் சூக்ஷமத்தை அரைமணி நேரத்திற்குள்ளேயே அவர் கண்டெடுப்பார். அவருக்கிருந்த ஹாஸ்ய உணர்ச்சி அதிகம். எந்த விஷயத்தின் சாரத்தையும் சீக்கிரத்தில் அவர் எடுத்துக் காட்டவல்லவர். நாங்கள் சுயமாகப் படித்துப் பயனடைவதற்கு அவர் வழி காட்டினர். பூகோள சாஸ்திரத்தையும் ருசிக்கும் விதத்தில் அவர் போதிப்பார். உலக படத்தையும் 'ஸ்டேட்ஸ்மன்' வருஷா வருஷம் தற்கால உலகநிலை பற்றி வெளியிடும் புத்தகத்தையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் நிலவி வரும் ராஜீய நிலைமையை அவர் எங்களுக்கு விளக்குவார். எங்கெந்தப் பிரதேசத்தில் அரிசியும் கோதுமையும் உற்பத்தியாகின்றன என்பதையும் எங்கெங்கு காபி, தேயிலை முதலியவற்றைப் பயிராக்க முடியும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டுவார். கிரிக்கெட் ஆட்ட மைதானத்தில் அவர் மாணவர்களுடன் சகஜமாக நடந்து கொள்வார். பிரதி தினமும் காலையிலும் மாலையிலும் உலாவப் போகையில் அவர் தம்முடன் சிலரை அழைத்துக் கொண்டு போவது வழக்கம். தம் வண்டியிலும் ஒன்று அல்லது இரண்டுபேரை அவர் ஏற்றிக் கொண்டு போவதுண்டு. தம் கீழுள்ள பிள்ளைகளிடம் அவருக்கு இருந்த நம்பிக்கை அதிகம். வகுப்புக்குச் செல்லுமுன் அன்று போதிக்கவேண்டிய பாடத்தை தயார் செய்து கொள்வார். ஒரு காகிதத் துண்டில் சில விஷயங்களைத் தமக்கு ஞாபகத்திற்காகக் குறித்துக்

கொள்வார். எது நேர்ந்தாலும் ஒருமணி காலத்திற் கதிகமாக பாடம் போதிக்கமாட்டார்.''*

போர்ட்டரிடம் போவதற்கு மந்த புத்தியுள்ள மாணவர்கள் அஞ்சுவார்களாம். அஜாக்கிரதையாயிருப்பவர்களுக்கு அவரிடம் அச்சம் அதிகம். தாம் போதித்த பாடத்தை மாணவர்கள் கிரஹித்து வந்திருக்கின்றனரா என்பதை அறிய அவர் அடிக்கடி கேள்விகளைக் கேட்பார். தாம் மேற்கொண்ட சிரமம் வியர்த்தமா அல்லவா என்பதை அவர் வெகு சுலபமாகக் கண்டுபிடிப்பார். இது காரணமாய் அநேகர் விபரீத ஸ்திதியில் சிக்கி பிறர் பரிகசிக்கும் விதத்தில் விழிப்பதுண்டாம்.

ராய் பஹதூர் கோபால ராவும் குறிப்புக் குரியவர்; பெரும் புகழ் சம்பாதித்த வித்தியாதிகாரி; போர்ட்டர் கும்பகோணத்திற்கு வந்தபோது அவர் தலைமை ஆசிரியருக்கு அடுத்த ஸ்தானத்தை வகித்திருந்தார். தனிமையில் படித்து பாண்டித்யத்தை எய்தியவர். சர்வகலாசாலை ஸ்தாபிதமாகு முன்பேயே அவர் பள்ளிக்கூடத்தில் பதவியேற்றூர். அதற்கப்புறம் மெட்றிகுலேஷன், 'பி. ஏ.' முதலிய பரீட்சைகளில் தேறியவர். ஆங்கிலம், தமிழ், சரித்திரம், கணிதம், இந்தப் பகுதிகளில் எல்லாம் அவர் மகா நிபுணர். முன் தயாரிப்பின்றி பாடத்தைச் சொல்லித்தரும் சக்தி அவருக்கு உண்டு. நெறி முறைகளில் அவருக்கு நிரம்ப சிரத்தை இருந்தது. தம்மைப்போல் இதரர்களும் நடந்து கொள்ளவேண்டும் என்பதிலேயே அவருக்கு நோக்கம் இருந்தது. வீட்டாருக்கும் விதி விலக்கு கிடையாது. அவர் கோபத்துடன் பார்த்தாலே விஷமக்காரர்களும் அடங்கி விடுவர்.

அநேக மாணவர்களைப் பிற்காலத்தில் பொறுப்பு ஏற்கும் வ்கையில் உருவாக்கிவைத்த சிறப்பு போர்ட்டருக்கும் கோபாலராவுக்கும் உரித்தாகும். கும்பகோணம் கலாசாலையின் சரித்திரத்தில் இவ்விருவர்களுக்கும் இணையாக யாரையும் கூறமுடியாது.

---

*கும்பகோணம் காலேஜ் லிடரரி சொஸைடி ஜர்னல் 1916 ஜூலை இதழ்.

அந்தக் காலத்தில் கும்பகோணம் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடத்தில் சம்ஸ்கிருத போதனைக்கு ஏற்பாடாக வில்லை, தமிழ் போதிப்பதற்கு மட்டும் வித்துவான் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். பிறகு மஹாமஹோபாத்தியாயர் என்ற புகழ் பெற்ற பெருகவாழ்ந்தான் ரங்காச்சாரியார் பல வருஷங்களுக்குப்பின் 1874-ல் சம்ஸ்கிருத பண்டிதராக இங்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீநிவாஸராகவையங்கார் இங்கு படித்த நாட்களில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் குமாரரும் திருசிரபுரம் மஹாவித்துவான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையின் சிஷ்யருமான ஸ்ரீ சாமிநாத தேசிகர் என்பவர் முதல் தமிழ்ப் பண்டிதராக இருந்தார். அவர் சிறிது காலத்திற்கெல்லாம் திருவனந்தபுரம் கலாசாலைத் தமிழ் ஆசிரியர் பதவியை ஒப்புக்கொண்டு அங்கு போய் விட்டார். அவருக்குப் பதிலாக ஒருவரும் கிடைக்காமல் கொஞ்சகாலம் கழிந்தது. அப்போது தண்டலம் கோபால ராவே தமிழ்ப் பாடத்தையும் போதித்து வந்தார். திருசிரபுரம் மஹாவித்துவான் பிள்ளையின் மற்றொரு மாணாக்கரான தியாகராயச் செட்டியார் கோபாலராவின் அழைப்புக்கிணங்கி குடந்தைக் கலாசாலைக்கு வந்து சேர்ந்தார். அவர் மிக்க சிறப்பு வாய்ந்தவர். ரசிக்கும் விதத்தில் சொல்லித் தருவார். கரடு முரடான இலக்கண விதிகளையும் நயமான முறையில் விளக்கி வைப்பவர். கம்ப ராமாயணத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு இருந்த மோகத்திற்கு தியாகராயச் செட்டியாரே காரணபூதர். அவர் செய்யுட்களின் கருத்துகளைத் தெளிவுபட எடுத்துக் காட்டியது ஸ்ரீநிவாஸ ராகவையங்காரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. அந்த மகாகாவியத்தில் நீடித்த பிடிப்பு ஏற்படவும் அதுவே ஹேதுவாக இருந்தது. இந்த தமிழ்ப் பண்டிதரிடம் இவருக்கிருந்த மதிப்பு சாதாரணமானதல்ல,

மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் மாணவர்கள் தியாகராய செட்டியாரிடம் கொண்ட பற்றுதலை அப்பெரியாரைப்பற்றித் தாம் எழுதிய வரலாற்றில் விவரித்துள்ளார்:—

> "செட்டியாரிடம் காலேஜில் படித்த மாணாக்கர்களில் சிலர் பிற்காலத்தில் மிகச் சிறந்த பதவியில் இருந்து விளங்கினார்கள். அப்படி விளங்கும் காலத்தி

லும் அவர்கள் செட்டியாரிடம் படித்த விஷயத்தைப் பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். 'கோபால ராவ் எங்களுக்கு இங்கிலீஷ் பாடம் கற்பித்தார்' என்பதை எவ்வளவு கௌரவமாகச் சொல்லிப் பாராட்டுவார்களோ அதே கௌரவத்தோடு 'செட்டியாரிடம் நாங்கள் தமிழ் படித்தவர்கள்' என்று சொல்லுவார்கள். இன்னம்பர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், ஆர். வி. ஸ்ரீநிவாஸய்யர், ஹனுமந்தராவ், ஜட்ஜ் சதாசிவ ஐயர் முதலிய பெரியார்கள் இவர் பாடம் சொல்லும் சிறப்பைக் கூறி மகிழ்வதை நான் கேட்டிருக்கிறேன். 'இன்ன பாடலுக்கு செட்டியாரவர்கள் இப்படி அர்த்தம் சொல்லுவார்கள்' இன்னபதத்துக்கு இப்படி அர்த்தம் சொல்லுவார்கள் என்று குறிப்பிட்டு அப்படிச் சொன்ன நயத்தை அவர்கள் பாராட்டுவார்கள். *

ஸ்ரீநிவாஸராகவையங்கார் தம் ஆசிரியர்களின் அன்புக்குப் பூரண பாத்திரமாயிருந்தார். கணித சாஸ்திரத்தில் வல்லவருக்கு அதில் விசேஷத்திறமை வாய்ந்தவரைக் கண்டால் ஏற்படும் உள்ளப் பூரிப்புக்கு எல்லையுண்டோ? மனசுக்குகந்த மாணவனைக் கண்டால் மட்டிலாத மகிழ்ச்சியல்லவா முளைக்கும்? சில வருஷங்களுக்கப்புறம் 1881-ம் ஞு டிசம்பரில் கும்பகோணத்தை விட்டுப் புறப்படுமுன் தமக்களிக்கப்பட்ட பிரிவு உபசாரத்தின்போது போர்ட்டர் ஸ்ரீநிவாஸ ராகவையங்காரைப் பஹிரங்கமாய் பாராட்டிப் பேசினர்.

"கும்பகோணத்தில் பதவியேற்க சம்மதித்தது தெரியாத்தனம் என்று நான் ஆரம்பத்தில் எண்ணினேன். ஆனல் இங்கு வந்ததும் என் சிஷ்யர் ஒருவர் கணித சாஸ்திரத்தில் அதிசய ஆற்றலைக் காட்டியது என் மனசை வெகு சீக்கிரத்தில் திருப்திவிட்டது. ஒப்புக்கொண்ட வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிக்கலாம் என்ற திடநம்பிக்கை

* மஹாமஹோபாத்தியாய் சாமிநாதையரின் "வித்துவான் தியாகராய செட்டியார்" பக்கம் 133

என்னுள் ஊர்ஜிதமாகியது. நான் ஸ்ரீநிவாஸ ராகவனைப் பற்றியே இம்மாதிரி குறிப்பிடுகிறேன்."

இந்தப் பிரசங்க சமயத்தில் தம் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஸ்ரீநிவாஸ ராகவையங்காரைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே போர்ட்டர் மனமாரப் பேசினார்.

போர்ட்டரின் வருகைக்கப்புறம் படித்த மாணவர்களின் ஜாபிதாவைப் புரட்டிப் பார்த்தாலே பிற்காலத்தில் கீர்த்தியுடன் விளங்கிய பல பெரியார்களின் பெயர்களைக் காணலாம். "இந்தக் காலத்திலிருந்து கலாசாலை தஸ்தாவேஜிகளைக் கவனித்தால் பின்நாளில் பிரசித்தி வாய்ந்த பலரது பெயர்களைச் சுட்டிக்காட்ட முடியும். 1864-ம் ஹு மே மாதம் முதல் தேதியிட்ட குறிப்பொன்றின்மூலம் கும்பகோணம் ப்ரொவின்ஷியல் ஸ்கூலில் எஸ். ஸ்ரீநிவாஸ ராகவன் பிரதிமாதமும் பத்துரூபாய் ஸ்காலர்ஷிப் சர்க்காரிடமிருந்து பெற்றுவந்திருப்பது தெரியவருகிறது. அநேக வருஷங்களுக்கப்புறம் பரோடா திவான் முதலிய பதவிகளை வகித்து இந்தியாவிலேயே பிரபலஸ்தராக இருக்கப்போவது அவருக்கு அப்போது கொஞ்சமும் தெரியாது என நான் நிச்சயமாகக் கூறுவேன், அதே வருஷத்திலோ அதற்கடுத்த வருஷத்திலோ அந்த மாணவர் பீசாம்ப் பரிசையும் ஸ்வீகரித்தார். இந்தப் பாடசாலையில் அப்பரிசு ஏற்படுத்தப்பட்ட முதலாண்டிலேயே அவர் அதைப் பெற்றுக்கொண்டார், என்று கலாசாலையின் அறுபதாம் ஆண்டு விழாவில் தலைமை வகித்த ஸர் மெவரல் ஸ்டேதம் தெரிவித்தார் *

முதலில் ஸ்ரீநிவாஸ ராகவையங்காரும் பிறகு ஆர். வி. ஸ்ரீநிவாஸையரும் அந்தக் காலத்தில் கணித சாஸ்திர நிபுணர்களாக இருந்தனர் என்பது பிரசித்தம். இவர்கள் போல் பின்பு பிரக்யாதியைப் பெற்றவர் பி. ஹனுமந்தராவ். கலாசாலையிலும் வெளி இடங்களிலும் இவர்களுடைய கீர்த்தி பரவியிருந்தது. போர்ட்டருக்கு ஸ்ரீநிவாஸ ராகவையங்காரிடம் ஆரம்பம் முதற்கொண்டே அலாதி விசுவாசம் பிடித்திருந்தது. அடிக்கடி இவரை அவர் தம் வீட்டிற்கு அழைத்துச் செல்வார். அவ்வப்போது தமக்கு

* கும்பகோணம் கலாசாலை சஞ்சிகை 1931 பிப்ரவரி

இங்கிலாந்திலிருந்து கிடைத்த புத்தகங்களை இவருக்குக் கொடுத்துப் படிக்கச் சொல்வார். கடினமான பிரச்னைகளைப் பற்றியும் இவருடன் விவாதிப்பார். இவருக்கு என்றுமே விளையாட்டுக்களில் மோகம் இருந்ததில்லை. ஆகவே மிகுந்த நேரத்தில் இவர் புத்தகமும் கையுமாகவே காட்சியளிப்பார். சில சமயங்களில் போர்ட்டர் இவரைக் கூப்பிட்டனுப்புவார். சௌகரியப்பட்டால் தாமே இவரிடம் வந்து சேருவார். அநேக நாட்கள் இருவரும் மாலை நேரத்தில் உலாவப்போவது வழக்கம். இருவருடைய தொடர்பையும் கேவலம் குரு—சிஷ்ய உறவாக மட்டுமே கருதக் கூடாது. மனித வாசனையே இல்லாத ஒரு பிரதேசத்தில் தனிமையாய் திரிந்துக்கொண்டிருந்த இருவர் ஒன்று சேர்ந்தால் எவ்வளவு சந்தோஷம் அவர்களுக்கு ஏற்படும்? அத்தகைய நிலைமையிலேயே இவ்விருவரும் இருந்தனர். பிறந்த இடத்தை விட்டுப் புது ஸ்தலத்திற்கு வந்தவர் போர்ட்டர். தாம் மேற்கொண்ட துறையில் தாம் வெற்றிபெற முடியுமா என்ற சம்சயம் அவருக்கு அதிகம். பள்ளிக்கூடத்தில் அதிக புத்தி தீக்ஷண்யம் வாய்ந்தவர் என்ற பிரசித்தி ஸ்ரீநிவாஸ ராகவனுக்கு இருந்தது. சுபாவச் சிறப்பு மேலும் பிரகாசிப்பதற்கு அதற்கு உதவக் கூடிய குருவல்லவா தேவை!

சென்னை வித்யா இலாகா அதிபர் 1864-ம் வருஷத்திய யாதாஸ்தில் எழுதியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். போர்ட்டர் கலாசாலைக்கு வந்து சேர்ந்த சமயத்திலும் அதற்குப் பின்பும் இருந்த நிலைமையை அறிய இது உதவும்.

> "1864-ம் ஹூ பிப்ரவரி மாதம் கும்பகோணம் கலாசாலையைப் பார்வையிட்டபோது அங்கு மொத்தம் 275 மாணவர்கள் இருந்தனர். ஆறு வகுப்புக்கள் அமைந்திருந்தன. பரீட்சை முடிவுகள் மிகவும் சிலாகிக்கத் தக்கபடி இருந்தன. மாணவர்களுக்குக் கிடைத்திருக்கும் சராசரி மார்க்குகள் திருப்திகரமாக இருக்கிறது. என் பார்வையின் கீழ் இருக்கும் பள்ளிக் கூடங்களில் காணப்படும் ஒரு வழக்கமே அவர்கள் மேலும் அதிக மார்க்குகளை வாங்குவதற்குப் பாதகமாக இருந்திருக்கிறது. அதாவது கேள்வி

களுக்குத் தரவேண்டிய பதிலை முதலில் குறிப்பிட்டு வைத்துக் கொண்டு பிறகு அவற்றை அவசரம் அவசரமாகத் தெளிவாய் அவர்கள் எழுதிவருவதால் அநாவசியமாய் காலம் விரயமாகிறது. தவிரவும் சில விஷயங்கள் அவகாசமின்மைக் காரணமாக சேர்க்கப் படாமல் விட்டுப்போகின்றன' என்று மிஸ்டர் கால்ட்வெல் அறிவிக்கிருர். தமிழ் தவிர இதர பாடங்கள் விஷயத்தில் இந்தப் பழக்கம் அனுஷ்டிக் கப்படுகிறது.

மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு இங்கிருந்து ஆஜரான மாணவர்களில் 23 பேர் முதல் வகுப்பிலும் 14 பேர் இரண்டாம் வகுப்பிலும் தேறினர். ஆகவே இந்தப்பரீட்சை சம்பந்தப்பட்டவரை கும்பகோணம் பள்ளிக்கூடமே முதன்மை ஸ்தானத்தை வகிக் கிறது.

இந்த வருஷம் ஏழாவது வகுப்பொன்று துரிதமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறிய 18 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். 'எப். ஏ.' பரீட்சையில் கலந்து கொள்வதற்காக போதனை இவர்களுக்கு அளிக்கப்படும். இது விஷயமாக மாகாணப் பள்ளிக் கூடத்தை தலைநகரில் உள்ள கலாசாலைக்கு சமமான அந்தஸ்துக்கு உயர்த்தி அபிவிருத்திக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. *

இந்த யாதாஸ்தைக் குறித்து சென்னை சர்க்காரின் பிரதம காரியதரிசி ஸர் அலெக்ஸாண்டர் அர்பத்நெட் பின் கண்டபடி எழுதினர்:

"கும்பகோணம் மாகாண பள்ளிக்கூடத்திலிருந்து மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு ஆஜராகிய மாணவர்களில் அநேகர் அப்பரீக்ஷையில் தேறியிருப் பது சிலாகிப்புக் குரிய விஷயமாகும்......

மாகாணப் பள்ளிக்கூடங்களில் கும்பகோணத்தில் இருக்கும் ஸ்தாபனமே மாணவர்களின் தொகை

---

* சர்க்கார் உத்திரவு 1-12-1864

யிலும் அவர்களது திறமையிலும் முன் நிற்கிறது. மெட்றிகுலேஷன் பரீட்சையில் மாணவர்கள் காட்டிய விசேஷ திறமையைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

1864-ம் வருஷத்தில் கும்பகோணம் கலாசாலையில் 'எப். ஏ.' வகுப்பும் போர்ட்டரின் வெகு முயற்சி காரணமாக ஆரம்பிக்கப்பட்டது. 'ப்ரொவின்ஷியல் ஸ்கூல்' இரண்டாம் கிரேட் காலேஜ் அந்தஸ்தை எட்டியது. ஆகவே ஸ்ரீநிவாஸராகவையங்கார் இங்கேயே தங்கி 'எப். ஏ.' படிப்பை முடித்துக் கொண்டார். மெட்றிகுலேஷன் பரீட்சையில் சிறப்புடன் தேறியதைப் பாராட்டி தலைவர் இவருக்கு சர்க்காரிடமிருந்து ஸ்காலர்ஷிப் வாங்கிக் கொடுத்தார். 'பி. ஏ.' பரீட்சையில் தேறும் வரை இவர் இதைத் தொடர்ச்சியாக ஸ்வீகரித்து வந்தார். 1865-ல் இவருக்கு பீசாம்ப் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. 'எப். ஏ.' பரீட்சைக்கு 172 பேர்கள் ஆஜராயினர். இவர்களில் தேறியவர்கள் 49 பேர்கள். 12 பேர் மட்டும் முதல் வகுப்பில் தேறினர். இந்தக் கோஷ்டியில் இவர் மூன்றுவதாகப் பிரகாசித்தார். பரீட்சகர்கள் பின் கண்டபடி அறிவித்தனர். 'ஆங்கிலப் பாடத்தில் அநேகர் தேறவில்லை. மாணவர்கள் தங்கள் படிப்பை அலக்ஷியம் செய்தனர் என்று இதற்குக் காரணம் காட்டக் கூடாது, ஆனால் பிற பகுதிகளைவிட இந்தப் பகுதியில் வைக்கப்பட்ட பாடங்களின் தரம் மிகவும் உயர்த்தப்பட்டதே எனவும் நாங்கள் கருதுகிறோம் *

'சென்ற வருஷத்திலும் கும்பகோணம் மாகாணப் பள்ளிக் கூடத்தின் தலைமை பாராட்டத் தக்கதாக இருந்தது. இது போன்ற இதர பள்ளிக் கூடங்களைவிட இதுவே சிரேஷ்டமானதாக விளங்குகிறது. ஏழாம் வகுப்பிலுள்ள 16 மாணவர்களில் 7 பேர் சென்ற பிப்ரவரி மாதம் நடந்த பரீட்சையில் தேறினர். இரண்டு பேர் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டு இப் பரீட்சையில் சிறப்புடன் தேறியவர்களுள் இரண்டாவது, மூன்றுவது ஸ்தானங்களை ஸ்வீ

* சென்னை சர்வகலாசாலை ஸிண்டிகேட் சபையின் 9-வது யாதாஸ்து (1864-65)

கரித்தனர். மாகாணப் பள்ளிக் கூடத்தார் அளித்து வரும் பீசாம்ப் தங்கப் பதக்கம் இந்த வருஷம் எஸ். ஸ்ரீநிவா ஸராகவனுக்குக் கொடுக்கப்பட்டது'—இவ் விதம் மாகா ணக் கல்வி நிலை பற்றிய 1865-ம் வருஷத்திய யாதாஸ்தில் சென்னை வித்தியா இலாகா அதிபர் மிஸ்டர் பவல் எழுதினர்.

அந் நாளில் இதற்கு மேல் உயர்தரப் படிப்பை அபே க்ஷிப்பவர் கும்பகோணத்தை விட்டு சென்னைக்கு வரு வதைத் தவிர வேறு வழி இல்லை. போர்ட்டர் இவருடைய திறமையிலும் சக்தியிலும் பூரண நம்பிக்கைக் கொண்டு இவர் பிற் காலத்தில் உன்னத ஸ்தானங்களை எட்டுவது நிச்சயம் என்று அடிக்கடி வெளியிடத் தயங்கியதே இல்லை. ஆகவே அந்தப் பெரியாரின் தூண்டுதல் காரணமாக இவர் சென்னைக்கு வந்து பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து படிக் கத் தீர்மானித்தார். தந்தையாருக்கும் இதே ஆவல் இருந் தது! அந் நாளில் இது மிக்க சிரமசாத்தியமானது. சௌக ரியக் குறைவு இதனுல் அதிகம் உண்டு. சேஷையங்கார் சிறுவனின் பிற்கால வாழ்க்கையைப் பிரதானமாகக் கருதி னர். தமக்கேற்படக் கூடிய சிரமங்களைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை. கும்பகோணத்தில் தம் மகனின் கல்வி அபிவிருத்தியை யுத்தேசித்து ஒரு தனிக் குடும்பத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்த அவர் சென்னையிலும் இதே மாதிரி செய்யத் தீர்மானித்தார். குடந்தையிலிருந்து சென்னைக்குப் போகப் போக்குவரத்து வசதிகள் அப் போது மிகக் குறைவாக இருந்தன. ரயில் பாதை ஓர், இரு இடங்களில் மட்டுமே போடப்பட்டிருந்தது. சிறிது தூரத்திற்கு மட்டுமே அதில் போக இயலும். சென்னைக்கு நேராக ரயில் வண்டிப் போக்குவரத்து கிடையாது. ஆகையால் ஸ்ரீநிவாஸராகவனை இவருடைய தாய் வழிப் பாட்டனுருடனும் பாட்டியாருடனும் அனுப்பினர். கட்டைமாட்டு வண்டியில் இவர்கள் கும்பகோணத்தி லிருந்து கிளம்பினர். வழியில் அநேக இடங்களில் இராப் பொழுதைக் கழித்துவிட்டு இவர்கள் சென்னை வந்து சேர்ந்தனர். வந்து சேர பதினைந்து தினங்களுக்கு மேலா கியது. வழியில் எவ்வளவோ இடையூறுகள்! சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் அக் காலத்தில் எழும்பூரில் இருந்

தது. கலாசாலைக்கு அருகேயே ஒரு வீட்டை ஏற்பாடு செய்து கொண்டு இவர்கள் அங்கு குடியிருந்தனர். 1865-ம் வருஷத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து கொண்டார். எட்வர்ட் தாம்ப்ஸன் என்பவர் அப்போது அங்கு தலைமை அதிகாரி. தாம்ப்ஸனும் போர்ட்டரைப் போன்றவர். தம் கீழ்ப்படிக்கும் மாணவர்கள் சுயமதிப்புடனும் சொந்த கௌரவத்துடனும் சோபிக்க வேண்டும் என்பதில் சிரத்தைப் பூண்டவர். அன்பாக இருப்பவர். கண்களில் கருணைகளங்கமின்றி காணப்படும். ஆனால் அவர் நீண்ட தாடியை வளர்த்திருந்தது அண்டிப்போக அச்சம் கொள்ளும்படிச் செய்தது. கிட்டிப்போய்விட்டால் கூச்சம் கரைந்துவிடும். போர்ட்டரின் வெகுமதிப்புடன் வந்த இந்த மாணவனிடம் அவரும் பரிவு கொண்டார். இவருடைய க்ஷேமலாபங்களில் அவருக்கு ஒரு தனிப்பட்ட சிரத்தை!

கும்பகோணத்தில் முதன்மையாகத் தேறியதற்காக இவருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்காலர்ஷிப் சம்பந்தமாக பிரஸிடென்ஸி காலேஜ் பிரின்ஸிபால் தாம்ஸன் சென்னை வித்தியா இலாகா அதிகாரிக்கு பின் கண்ட கடிதத்தை எழுதினார்:—

> "கும்பகோணம் ப்ரொவின்ஷியல் பள்ளிக்கூடத்திலிருந்து 1865-ம் ஹு ஜனவரி மாதம் முதல் இங்கு மாற்றப்பட்டுள்ள அடியிற் குறிப்பிட்ட நான்கு மாணவர்களின் மெட்ரிகுலேஷன் ஸ்காலர்ஷிப் தொகையை இங்கு அனுப்பும்படி பணப்பட்டுவாடா அதிகாரிக்கு அறிவிக்குமாறுத் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்—டி. சுந்தரம், எஸ். ஸ்ரீநிவாஸராகவன், ஏ. ராமச்சந்திரன், சாமிநாத சுப்பாராவ்.

1867-ம் ஹு மார்ச் மாதம் பிரஸிடென்ஸி காலேஜ் பிரின்ஸிப்பால் சென்னை சர்க்கார் கல்வி இலாகா அதிபருக்கு முந்திய ஆண்டில் கலாசாலை நிர்வாகம் நடந்த விதத்தைப் பற்றியும் சேர்ந்திருந்த மாணவர்களின் தராதரங்களைப் பற்றியும் விவரமாக எழுதியனுப்பினார்.

> "ஸீனியர் வகுப்பு மாணவர்களுக்கு 'பேகன் வியாஸங்கள்' சம்பந்தமாக வினாபத்திரத்தை மிஸ்டர்

ப்ராண்ட்டும் பட்லர், எதுப்ரி ஆகியோர் எழுதிய நூல்களைப் பற்றியதை மிஸ்டர் க்ரெய்டும் தயாரித்து அவர்களே விடைகளையும் பரீக்ஷித்தனர். முந்திய பரீட்சையில் மாணவர்கள் மொத்த மார்க்குகளில் பாதிக்கு அதிகமாகவும் பிந்தியதில் அதற்கு சற்று குறைவாகவும் வாங்கினர். பாடப் புத்தகத்தையும் அதைத் தழுவிய விஷயங்களையும் குறித்து மாணவர்களுக்கு நல்ல ஞானம் இருப்பதாகவும் ஆனல் மாணவர்கள் தங்களுக்கு எங்கெங்கு சந்தேகம் தலை காட்டியதோ அங்கெல்லாம் நீண்ட வாக்கியங்களைச் சேர்த்து அதை மறைத்து வைக்க முயன்றிருப்பதாயும் மிஸ்டர் ப்ராண்ட் அறிவிக்கிருர்.

கணித சாஸ்திரத்தில் ஸ்ரீமான் பி. ரங்கநாதமும் நானும் மாணவர்களைப் பரீக்ஷித்தோம். அவர்களது விடைகள் அதிக திருப்திகரமாக இருந்தன. அவர்களில் ஐவர் கணித சாஸ்திரத்தில் விசேஷ திறமையை நிரூபித்தனர். கடினமான கேள்விகளுக்கும் அவர்கள் கொடுத்த பதில் பாராட்டத் தக்கது. அவர்களது பெயர் அடியில் வரிசைக் கிரமமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது—பி. கிருஷ்ணஸ்வாமிசெட்டியார், கே. ராமஸ்வாமி சாஸ்திரியார், ஆர். சேஷையா, ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், சுந்தர ராமையர். இந்த வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து சராசரி 47 சதவிகிதத்திற்கு மார்க்குகள் வாங்கினர்.

1866ம்ஞு டிசம்பர் மாதம் கலாசாலையில் நடந்தது வருஷாந்தரப் பரீட்சை; இதில் தேறியதற்காக ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு 'புரொபிஷியண்ட்' என்ற நற்சாட்சி பத்திரமும் வழங்கப்பட்டது. சர்வகலாசாலை ஸ்தாபிதமாகி அது பட்டங்களை அளிக்கத் தொடங்கு முன்பு சென்னையில் இருந்த ஹைஸ்கூலிலிருந்து 'புரொபிஷியண்ட்' என்ற கௌரவத்தைப் பெறுவது பெரு மதிப்புக்குரியதாக இருந்தது. பச்சைக் கல் பதித்த தங்க மோதிரம் இந்த கௌரவத்திற்கு அருகரான ஒவ்வொருவருக்கும் சன்மானமாகக் கிடைத்து வந்தது. 1880-ம் வருஷத்திற்கப்புறம் பிரஸிடென்ஸி காலேஜில் நீடித்த நாளாக நிலவி வந்த இந்த வழக்கம் நின்றது.

மிஸ்டர் எட்வர்ட் தாம்ஸன் ரஜாவில் சென்றபடி யால் கும்பகோணத்திலிருந்து போர்ட்டர் சென்னை காலேஜ் பிரின்ஸிபாலாக வரவழைக்கப்பட்டார். 1866-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14-ம் தேதி அவர் இங்கு வந்து ஒரு வருஷ காலம் வேலை பார்த்தார். இங்கும் அவரது சிஷ்யராக இருக்கும் பாக்கியம் ஸ்ரீநிவாஸ ராகவையங் காருக்கு வாய்த்தது! 1867-ம் வருஷ ஆரம்பத்தில் நடந்த 'பி. ஏ.' பரீட்சையில் இவர் ஆஜராகி இரண்டாம் வகுப் பில் தேறினார். இவ் வருஷம் சர்வகலாசாலைப் பட்டத்தை ஸ்வீகரித்த மாணவர்கள் பதின்மூவர்; இவர்களுள் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் நான்காவது ஸ்தானத்தை ஸ்வீகரித்தார்.

இந்திய சர்வகலாசாலைகளில் 'பி. ஏ.' பட்டத்தைப் பெறுவது ஆங்கில சர்வகலாசாலைகளில் 'ஹானர்ஸ்' பட் டத்தைப் பெறுவதற்குச் சமமாகும் என வித்தியா இலாகா அதிகாரி ஸர் அலக்ஸாண்டர் அர்பத்நெட் ஒரு சமயம் பஹிரங்கமாகத் தெரிவித்தார்.

இதே வருஷம் மார்ச் மாதம் கவர்ன்மெண்ட் ஹவுஸ் விருந்து மண்டபத்தில் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. மாகாண கவர்னரும் சர்வகலா சாலை சான்ஸலருமான நேபியர் பிரபு தலைமை வகித்தார்.

தாம்ஸனின் சிறப்பு எத்தகையது? கலாசாலைத் தலை மைப் பதவியிலிருந்து 1884.ம் வருஷம் மார்ச் மாதம் 5-ம் தேதி விலகிக்கொண்ட பின்பு அவருக்கடுத்தபடி அந்த ஸ்தானத்தை யேற்ற டாக்டர் டங்கன் அடியிற் கண்ட படி குறிப்பிட்டார்.

> "மிஸ்டர் பவல் கீழ் படித்த இருபது பேர்களைத் தவிர இந்தக் கலாசாலை மூலம் சர்வகலாசாலைப் பட் டத்தைப் பெற்றவர்கள் அனைவரும் மிஸ்டர் தாம்ஸ னின் மாணவர்களாக இருந்தவர்கள். ஆகவே இப் போது மாகாணம் முழுதும் சிதறிக்கிடக்கும் 1200 பட்டதாரிகளில் பெரும்பாலர் தாம்ஸனின் சிஷ்யர் கள் என்பதைக் குறிப்பிடவேண்டும். மிஸ்டர் தாம் ஸனின் உண்மையான உழைப்பையும் தம் மாண வர்களிடம் அவர்கள் படித்த நாட்களில் மட்டு

மின்றி பிற்காலத்திலும் அவர் கொண்டிருந்த பற்று தலையும் நேரில் அறிந்தவர்களுக்கு அவர் பெயர் எந் நாளும் மறக்கக் கூடாததாகும். மிஸ்டர் தாம்ஸன் பிரஸிடென்ஸி காலேஜிடம் அதிக சிரத்தைப் பூண்டு தமது வாழ்நாளில் அதிக காலத்தை அதன் மேம் பாட்டுக்காகக் கழித்தவர். கலாசாலையில் அவரது பெயரை நிலைநாட்டி வைக்க முயற்சி செய்யப்படு வதாக நான் அறிகிறேன். மனசாட்சிக்கு விரோத மின்றி கடமையைச் செய்யவேண்டும் என்ற நிர்ப் பந்தத்துடன் நேர்மையுடனும் நிதான புத்தியுடனும் இதர ஆசிரியர்களிடம் அவர் நடந்துகொண்டவர். ஒவ்வொரு ஆசிரியரும் அவருடைய பெயரை அன் போடு பாதுகாப்பதுடன் தமக்குப் பலவிதத்திலும் அவர் துணை புரிந்து உற்ற உதவியாக இருந்தார் என் பதை வாழ்நாள் முழுதும் எண்ணிக்கொண்டு மதிப்பர்." *

ஏப்ரல் மாதம் 11-ம் தேதி யன்று பிரஸிடென்ஸி காலேஜ் கட்டடத்தில் தாம்ஸனின் சேவையை எந்த விதத்தில் கௌரவிப்பது என்பதை முடிவு செய்ய அவர் கீழ் படித்த மாணவர்களின் கூட்டம் நடந்தது. வி. பாஷ்யமையங்கார் தலைமை வகித்தார். எட்வர்ட் தாம் ஸன் பிரஸிடென்ஸி காலேஜுக்கும் சர்வகலாசாலைக்கும் செய்த சேவையைச் சிலாகிக்க அவர் சிஷ்யர்களும் சிநேகி தர்களும் தக்கபடி ஏற்பாடு செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை கனம் டி. ராமராவ் பிரேரேபித்தார். இதை ஆதரித்து ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் பேசினர். அப் போது இவர் கலாசாலைக் கட்டடத்தில் அவருடைய பெரிய உருவப் படத்தைப் பிரதிஷ்டைச் செய்வதுடன் கூடிய அளவுக்குப் பெரிய நிதியைச் சேகரித்து ஏழை மாணவர்களின் வித்தியாப்யாசத்திற்கு வசதி செய்துதர வேண்டும் என்றார். மாஜி பிரின்ஸிபாலைப் போன்ற சிறந்த வித்தியாதிகாரிகளை மனப்பூர்வமாகப் பாராட்டவேண் டுமாயின் அவர்களுடைய உள்ளம் எங்கெந்த காரியங் களில் கருத்துக்கொள்ளுமோ அவற்றைப் பின்பற்றி நடப்

* டாக்டர் சத்யநாதம் பக்கம் 207

பதே தர்மம் என்று இவர் கூறினர். பிறகு எல். ஸி. வில்லியம்ஸ் பிள்ளையைக் காரியதரிசியாகக் கொண்ட கமிட்டியொன்று நிதி திரட்டுவதற்காகவும் மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் அமைக்கப்பட்டது. அந்தக் கூட்டத்திலேயே ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் சிறிது நன்கொடை அளித்தார்.

இதற்கப்புறம் சிறிது காலத்திற்கெல்லாம் மிஸ்டர் எட்வர்ட் தாம்ஸன் காலகதி அடைந்துவிட்டார். ஆகையால் இதே வருஷம் செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று பிரஸிடென்ஸி காலேஜ் கட்டடத்தில் மற்ருெரு கூட்டம் ஜஸ்டிஸ் முத்துஸ்வாமி ஐயர் தலைமையில் நடைபெற்றது. இந்த இரண்டு கூட்டங்களின் விளைவாகப் பெரிய நிதி திரட்டப்பட்டது. அந்தக் கலாசாலையில் தகுதியுள்ள மாணவர் ஒருவருக்கு பிரதிமாதம் ரூ. 9 உபகாரச் சம்பளமும் முதன்மையாகத் தேறும் மாணவர் ஒருவருக்குப் பரிசும் வழங்குவதற்குப் போதிய மூலதனம் அக்கலாசாலைத் தலைவரிடம் அடுத்த வருஷம் (1885-ல்) ஒப்படைக்கப்பட்டது.

சம்பிரதாயப்படி புதிய பட்டதாரிகளுக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் உபதேசம் செய்யும் பொறுப்பு ஜஸ்டிஸ் ஹாலொவேயிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் சர்வ கலாசாலை உப அத்தியக்ஷகராக இருந்தவர். ஒப்புயர்வற்ற நீதிமான். இந்தியர்களின் உள்ளன்பைக் கவர்ந்தவர். இந்நாட்டினருக்கு வசதிகளைச் செய்துகொடுத்து அவர்கள் மேன்மை யடைவதைக் கண்டு இன்புறவேண்டும் என்று மனமார விரும்பியவர். சாதாரணமாக இத்தகைய முக்கிய காலங்களில் பிரசங்கங்களை எழுதிப் படிப்பது வழக்கமாயினும் ஜஸ்டிஸ் ஹாலொவே மட்டும் அந்த நியதிக்குக் கட்டுப்படவில்லை. மண்டபத்திற்கு வந்த பிறகு முன்னேற்பாடின்றி அவர் பேசினர். வித்தியாப்யாசத்தின் லக்ஷணத்தையும் வித்தியார்த்திகளுக்குரிய லக்ஷியத்தையும்பற்றி விரிவாகப் பேசினர். இந்தப் பிரசங்கத்தின் பூரா விவரமும் கிடைக்கவில்லையாயினும் கிடைத்த சொற்பக் குறிப்புக்களிலிருந்து அவர் இந்தியரை உண்மையாகவே நேசித்தவர் என்பது தெரிகிறது.

ஸ்ரீநிவாஸ ராகவையங்காரையும் அவர் அப்போது முக்கிய மாக வாழ்த்திப் பேசினர்.

நீதிபதி ஹாலோவே ஏற்கெனவே குறிப்பிட்டபடி பரோபகார புத்தியுள்ளவர். தமக்குத் தோன்றியபோ தெல்லாம் பிரஸிடென்ஸி காலேஜுக்குள் புகுந்துவிடு வார். திடீரென்று எல்லா வகுப்புக்களையும் சுற்றிப் பார்த்து பிள்ளைகளைப்பற்றி யெல்லாம் தாம்ஸனிடம் விசா ரிப்பார். படிப்பில் சிரத்தையுள்ளவர்களைத் தமது தோட் டத்திற்கு அனுப்பும்படி வற்புறுத்துவார். அவர் அந் நாளில் எழும்பூரில் மியூஸியத்துக் கடுத்தாற்போலிருந்த பெரிய மாளிகையில் வசித்து வந்தார். கலாசாலைக்கும் இந்தக் கட்டடத்திற்குமிடையே அதிக தூரம் இல்லை. போர்ட்டரும் ஹாலோவேக்கு மிக்க வேண்டியவராகை யால் அவர் சென்னைக்கு வந்ததும் தம்முடைய பிரிய சிஷ்யனை அந்த நீதிபதிக்கு அறிமுகமாக்கி வைத்தார். தாம் குடியிருந்த வீட்டிற்கும் கலாசாலைக்கும் நடுவே இந்த நீதிபதி வாழ்ந்து வந்ததால் ஸ்ரீநிவாஸ ராகவையங் கார் மாலை வேளையில் அவர் மாளிகைக்குச் சென்று அவ ருடன் சல்லாபம் செய்வது வழக்கம். இருவரும் வெகு நேரம் ஆங்கில இலக்கிய நூல்களை ருசியுடன் பருகுவர். கவிதைகளையும் கட்டுரைகளையும் கருத்தூன்றிப் படிப் பர். உயர்வு தாழ்வின்றி சகஜமாக இருப்பர். பால்யப் பருவத்திலிருந்தே தக்கோர் நட்பு ஸ்ரீநிவாஸ ராகவையங் காருக்குக் கிடைத்தது அதிருஷ்டவசம் என்றே கூற வேண்டும். பிள்ளைப் பிராயத்தில் பெரியார் தொடர்பினுல் வாய்த்த பழக்க வழக்கங்கள் பிற்காலப் பெருமைக்கு அஸ்திவாரமாய் விளங்கின.

போர்ட்டர், தாம்ஸன், ஹாலோவே ஆகிய மூவரும் முறையே இவர் வாழ்க்கையை இனிது உருவாக்கினர். சங்கோசமின்றி பெரிய அதிகாரிகளுடன் போய்ப் பேச வும் வெள்ளையருடன் சரிசமமாகப் பழகவும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும் அதை நிர்ப்பயமாக அறிவிக்கவும் அந்நாளில் இவர் துணிந்ததற்கு அவ்வுத்தமர்களோடு வாய்த்த தொடர்பே காரணம்.

அநேக வருஷங்களுக்குப் பின்பு (1903) சென்னை

கவர்னர் ஆம்ப்தில் பிரபு பிரஸிடென்ஸி காலேஜுக்கு விஜயம் செய்தார். மாணவர் அவருக்கு அளித்த வரவேற்பு பத்திரத்தில் அங்கு படித்தவர்களில் அநேகர் பல துறைகளிலும் புகுந்து பிரசித்தி பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டனர். ஆம்ப்தில் பிரபு அதற்கு பதில் அளிக்கும் போது மாணவர்கள் ராஜா ஸர் டி. மாதவ ராவ், ஸர் ஏ. சேஷைய சாஸ்திரியார், ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர், ஸர் வி. பாஷ்யமையங்கார், திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் முதலிய பிரமுகர்களின் உதாரணத்தைப் பின்பற்றி அவர்கள் போலவே முன்னணிக்கு வர முயல வேண்டும் எனத் தெரிவித்தார் *

* மதராஸ் மெயில் 10-2-1903

3

நன்ருய்ப் படித்துத் தேறியவர்களுக்கு அந்நாளில் உத்தியோகம் வெகு எளிதில் கிடைத்தது. பட்டதாரிகள் வெகு சொற்பம் அல்லவா? வலிய வந்து வேலையைக் கொடுத்தனர். தஞ்சையிலிருந்த எஸ். பி. ஜி. காலேஜில் துணை ஆசிரியர் ஸ்தானத்தை ஒப்புக்கொள்ளும்படி ஸ்ரீநிவாஸ ராகவையங்காருக்கு அதன் தலைவர் டாக்டர் மார்ஷிடமிருந்து அழைப்புக் கடிதம் வந்தது. கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதற்கான சங்கத்தார் நடத்தி வந்த வித்தியாசாலை அது. பாதிரிமார் மேற்கொண்ட பெரு முயற்சிக்கு அது ஒரு சின்னம்போல் இருந்தது. ஸரபோஜி மஹாராஜா நாளிலிருந்து நிலவி வந்த ஸ்தாபனம் அது. சர்க்காரும் செலவில் ஒரு பகுதியை உதவி வந்தனர். பள்ளிக்கூடத்தில் உயர்தர வகுப்புக்களுக்குப் போதிக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மாதம் ரூ. 120 சம்பளம் அளிக்கவும் அதிகாரி சம்மதித்திருந்தார். இந்தக் கடிதத்தைக் கண்டதும் முடிவுக்கு வர இவர் தயங்கவில்லை. உத்தியோகத்தை ஏற்பதென்று வெகு சீக்கிரத்திலேயே தீர்மானித்துவிட்டார். வீட்டில் இருந்த பெரியார்களும் இதற்கு ஆக்ஷேபம் காட்டவில்லை. பிள்ளை சம்பாதிக்கப்போகும் பெருமை அவர்களுக்கு! போர்ட்டரிடம் படித்து அவருடைய வழியில் உத்சாகம் கொண்ட இவருக்கு அவர்போலவே வாழ்க்கையை நடத்தும் சந்தர்ப்பம் வாய்த்ததே என்ற சந்தோஷம் அளவு கடந்திருந்தது.

1867-ம் வருஷத்தில் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் உதவி ஆசிரியர் பதவியை ஸ்வீகரித்துக் கொண்டார். மூன்று வருஷ காலம் முழு மனசுடன் உழைத்தார். பள்ளிக்கூடம் அந்நாளில் மானம்பூச் சாவடியில் இருந்தது. சேஷையங்கார் தஞ்சைக் கலெக்டர் ஆபீஸில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தார். தந்தை இருந்த இடத்திற்கே

தனயனும் வந்து சேர்ந்தார். இவர்கள் வல்லத்தில் தங்கியிருந்தனர்.

ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் பாடம் சொன்ன முறையைப் பற்றி அதிகம் அறிய இயலவில்லை. ஆயினும் இவரிடம் படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சையில் 1869-ல் தேறிய ஜி. சுப்ரமணிய ஐயர் பிற்காலத்தில் இவருடைய போதனு சக்தியைப் பாராட்டி எழுதினர். ஆங்கில, கணித பாடங்களை இவர் கற்பித்த வழியைத் தாம் எப்போதும் மறக்க முடியாதென்று 'ஹிந்து', 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளை ஸ்தாபித்து நடத்திய அப்பெரியார் வெளியிட்டார். மனதில் பதியும் வரை இவர் எந்த விஷயத்தையும் விடமாட்டார் என்றும் தம்மைப் போன்றவர்களுக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும் சங்கோசம் எதுவுமின்றி தம்மிடம் வரும்படிச் சொல்வார் என்றும் சுப்ரமணிய ஐயர் தெரிவித்தார்.

இங்கு இவர் கீழ் படித்தவர்களுள் பிற்காலத்தில் கணித சாஸ்திரத்தில் மகா மேதாவி என்று பிரசித்திபெற்ற புரொபஸர் பி. ஹனுமந்த ராவும் ஒருவர். வகுப்பில் ஹனுமந்த ராவ் முதல்வராகவும் சுப்ரமணிய ஐயர் இரண்டாவதாகவுமிருந்து வந்தனர்.

> "தஞ்சாவூர் எஸ். பி. ஜி. ஹைஸ்கூலிலிருந்து 1869-ம் ஆு டிசம்பர் மாதத்தில் நான் மெட்ரி குலேஷன் பரீட்சைக்கு ஆஜரானேன். அந்த ஆண்டு முடிவதற்கு முன்பேயே பிரின்ஸிபால் டாக்டர் மார்ஷ் நீண்ட ரஜா எடுத்துக்கொண்டு தாயகம் திரும்பப் போகிறுர் என்பதும் ஸீனியர் அஸிஸ்டெண்டாக விருந்த ஸ்ரீநிவாஸராகவையங்காரும் தம்முடைய எதிர்கால நாளை யுத்தேசித்துக் கலெக்டராபீஸில் சேரப்போகிறுர் என்பதும் எங்கள் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. ஆகவே தான் நான் கும்பகோணம் ப்ரொவின்ஷியல் காலேஜுக்குப் போய்ப் படிக்க வேண்டியதாயிற்று.*

---

* பி. ஹனுமந்தராவ்: கும்பகோணம் காலேஜ் ஜர்னல்; ஜுலை 1916

ஹனுமந்தராவ் அநேக வருஷங்களுக்கப்புறம் எழுதிய இந்த வாக்கியங்களைப் படிக்கையில் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் போதனு திறமை வெகுவாக மதிக்கப்பட்டதையும் அவர் பதவியை விட்டுப் போகப் போகிறுர் என்பதற்காக அந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுச் சிலர் பிரிய நேர்ந்ததையும் நாம் சுலபமாக ஊஹிக்கலாம்.

தம் வாழ் நாளில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்தக் காலத்தையே எல்லாவற்றிற்கும் மேலானதாகப் பாவித்தார். பாடசாலைக்குத் தலைமை வகித்த டாக்டர் மார்ஷுடன் இவருக்கிருந்த நட்பு கடைசிவரை நிலை பெற்றிருந்தது. தம்முடைய தலைவரிடத்தில் இவருக்கு இருந்த ப்ரீதியும் சாமான்யமல்ல. இருபத்தைந்தாண்டுகளுக்குப் பின்னர் அதே நகரத்தில் கட்டப்பட்ட "மார்ஷ் மெமோரியல் ஹாலை'யும் அதில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த வித்தியாதிகாரியின் உருவப்படத்தையும் இவர் திறந்து வைத்தார்.

> "தென் இந்தியா முழுதிலும் பிரபல வித்தியாதிகாரிகள் எனப் பிரசித்தி பெற்ற கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலான காலஞ்சென்ற மிஸ்டர் போர்ட்டரும் சென்னைக் கிறிஸ்துவ கலாசாலைத் தலைமை ஆசிரியரான ரெவரெண்ட் டாக்டர் வில்லியம் மில்லரும் இந்நாட்டிற்கு வந்த வருஷத்தில் தான் மிஸ்டர் மார்ஷும் இங்கு வந்து சேர்ந்தார். தம்மிடம் இருந்த வசதிகளைக் கொண்டு மிஸ்டர் மார்ஷ் செய்த சேவையை நாம் சரிவர மதிப்பிட வேண்டுமேயானுல் அவர் நான் முன்பு குறிப்பிட்ட இருவருக்கும் சமமான ஸ்தானத்திற்குரியவர் என்பது தெளிவாகத் தெரியும்.
>
> முப்பது வருஷங்களுக்கு முன்பு நானும் ஏதோ என்னுலியன்ற அளவுக்குப் பாடபோதனையில் மிஸ்டர் மார்ஷுக்குத் துணையாக இருந்திருப்பது பற்றி பெருமைப்படுகிறேன். அவர் அப்போது அனுபவித்த கஷ்டங்களை நான் நன்கறிவேன். அவருடைய தளராதிடமும் நெறியான நடத்தையும் அகன்ற அன்பும் பரந்த பரிவும் தயக்கமில்லாத தாராளமும் கடமையில்

கொண்ட கருத்தும் சுயநலத்தைப் பற்றி சிந்தியாமையும், உத்சாகமும் அவருடன் சேர்ந்து உழைத்த வர்களுக்கு உத்தமமான உதாரணமாக விளங்கி பிறரும் அவரைப் பின் பற்றும்படித் தூண்டின. கூட இருந்தவர்களின் மனசைக் கொள்ளை கொண்ட அவர் ஒரு சிறிய பள்ளிக்கூடத்தை 'பி. ஏ.' வரைப் போதிக்கும் கலாசாலையின் அந்தஸ்துக்கு உயர்த்தினுர். மாகாணத்தின் முக்கிய நகர்களிலெல்லாம் முதல்தர காலேஜ்கள் இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் முப்பது வருஷங்களுக்கு முன்னர் நன்கு உருப்பெருமல் உயர்தரக் கல்வி இருந்தபோது அதற்கு ஆக்கம் அளித்து அபிவிருத்தி பண்ணுவதற்கு எத்தகைய குணச் சேர்க்கை தேவையாக இருந்தது என்பதை இந்தத் தலை முறையினர் சரிவர உணர இயலாது.

மிஸ்டர் மார்ஷ் மாணவர்களிடம் கொண்டிருந்த நேர்த் தொடர்பு முக்கியமாய்க் குறிப்பிற்குரியது. ஆயிரக்கணக்கில் மாணவர்கள் இருந்த போதிலும் அவருக்கு ஒவ்வொருவர் பெயரும் தெரியும். அவர்களது குடும்ப நிலைமை பற்றியும் பூரணமாக அறிந்து கொண்டிருந்தார். அவசிய மேற்பட்டுத் தம்மை அண்டியவர்களுக்கு அன்புடன் புத்திமதி கூறி ஆறுதல் அளிப்பார். அவருக்குக்கிடைத்த வருமானம் மிகச் சொற்பம். அதை அவர் தமக்கே பூரணமாகச் செலவழித்துக் கொண்டிருந்தாலும் யாரும் குறை கூற முடியாது. ஆனல் அவர் சிக்கன வாழ்க்கையை நடத்தினுர். சிரம தசையிலிருந்த சிஷ்யர்களுக்காக அதில் பெரும்பகுதியை அவர் விநியோகித்தார்.

மூன்று வருஷ காலம் நானும் அவரும் ஒன்று சேர்ந்து உழைத்தோம். இதை நான் என் வாழ்க்கையில் மிகச் சிறந்த பகுதியாகவே கருதுகிறேன். அப்போது அவர் ப்ரீதியுடன் எனக்களித்த புத்திமதிகளே நான் என் கடமையை ஒருவாறு நிறைவேற்ற உதவின என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பஹிரங்கமாக வெளியிடவேண்டும்.*

* 'மதராஸ் மெயில்' 7.4.1896

தஞ்சையிலிருந்து ஸ்ரீநிவாஸராகவையங்கார் வாரம் தவருமல் கும்பகோணத்திற்குப் போய் போர்ட்டரைப் பார்த்துவிட்டு வருவார். ஒருவாரம் தவறிவிட்டால் போர்ட்டர் தவித்துப் போவார்; பெரும்தனத்தை இழந்தவர் போல் கஷ்டப்படுவார்; அவசரம் அவசரமாகக் கடிதத்தை எழுதி கவலையைக் காட்டுவார்; காரணத்தையும் கேட்பார். புரொபஸர் சுந்தர ராமையர் எழுதிய சில வாக்கியங்களை இங்கு பொருத்தமாக எடுத்துக்காட்ட வேண்டும்.

"தஞ்சாவூர் எஸ். பி. ஜி. ஸ்கூல் உதவி போதகர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் கும்பகோணம் காலேஜில் உதவி போதகராக இருந்துவரும் தம்முடைய நெருங்கிய பந்துவான ஆர். ஸ்ரீநிவாஸையங்காருடன் போர்ட்டரைப் பார்க்க ஒரு சமயம் வந்தது எனக்கு நன்முக ஞாபகத்தில் இருக்கிறது. தபாலில் போடுவற்காகத்தாம் எழுதி வைத்திருந்த கடிதத்தை போர்ட்டர் அப்போது அவரிடம் எடுத்துக் கொடுத்தார். அந்தக் கடிதத்தில் 'எஸ்' என்பதற்குப் பதிலாக 'ஆர்' என்று முன் எழுத்தை அவர் தவறுதலாகக் குறிப்பிட்டிருந்தார். அது சுட்டிக்காட்டப்பட்டதும் போர்ட்டர் தம் வருத்தத்தை அறிவித்துவிட்டு தம் கீழ் வேலை பார்ப்பவரும் தம்முடன் தினமும் பழகுபவருமான ஸ்ரீநிவாஸராகவையங்காரின் பந்துவுக்கும் ஏறக்குறைய அதே பெயர் இருந்ததே தம்மையு மறியாமல் பிழை புரிந்ததற்குக் காரணம் என்பதை விளக்கினுர்.*

இவர் தஞ்சையில் உபாத்தியாயராக இருக்கும் நாளில் ஆறும் வகுப்பில் இருக்கும் மாணவர்களுக்கு வருஷாந்திரப் பரீட்சை நடக்கும் போது கணித சாஸ்திரத்தில் வினு பத்திரத்தைத் தயாரித்தனுப்பும்படி போர்ட்டர் கேட்டுக் கொள்வார். பிறகு விடைகளையும் மதிப்பிடும் வேலை இவருக்கே வாய்க்கும். இவர் கேட்கும் கேள்விகள் மிகக் கடினமாய் இருக்குமாம். அந்தப் பகுதியில் விசேஷ

---

* கும்பகோணம் காலேஜ் ஜர்னல் 1924 நவம்பர் இதழ்.

ஞானம் கொண்டவர்கள் தான் அவற்றுக்குத் தக்க விடைகளை அளிக்க முடியும்.

"ஒரு வருஷாந்திரப் பரீட்சையில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் அல்ஜீப்ரா பாடத்தில் கேட்ட கேள்விகள் மிக்க கடினமாயிருந்தன. அவற்றைப் படிக்கும் போதே பிரமிக்கவேண்டி வரும். இந்த பரீட்சையில் ஹனுமந்தராவ் 80 சதம் மார்க்குகளை வாங்கியதுடன் தமக்கடுத்தவர் வாங்கியதைவிட இரட்டிப்பு அதிகம் வாங்கியிருந்தார்" என்று ஆசிரியர் சுந்தரராமையர் பின்னொரு சமயம் குறிப்பிட்டார்.*

இதே சம்பவத்தைப்பற்றி ஹனுமந்தராவ் மிக்க மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார். "என் பழைய ஆசிரியரான ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் அல்ஜீப்ரா பாடத்தில் கேட்ட கேள்விகள் மிகக் கடுமையானவை. 100-க்கு 64 மார்க்குகளை அவர் எனக்கு வழங்கினார். எனக்கு அடுத்த மாணவருக்கு அவர் கொடுத்தது 32 தான்.**

வருஷாந்தரப் பரீட்சைகளில் தமக்கு இவர் அளித்த உதவிபற்றி போர்ட்டர் மாகாண வித்தியா இலாகா அதிகாரிக்கு எழுதத் தயங்கியதே இல்லை. அவ்விதம் தெரிவிப்பதில் அவருக்கிருந்த சந்தோஷம் அதிகம்:

"ஏழாம் வகுப்பு மாணவர்கள் ட்ரிக்னமெட்ரி பகுதியில் வாட்டர்ஸ் துரையினலும் அல்ஜீப்ரா பாடத்தில் எஸ். ஸ்ரீநிவாஸராகவன் பி. ஏ. யினலும் பரீட்சிக்கப்பட்டனர். முந்திய பகுதியில் மாணவர்கள் அதிக மார்க்குகளை வாங்கினர். இதற்குக் காரணம் அல்ஜீப்ரா பாடத்தில் கேட்கப்பட்ட கேள்விகள் மிகவும் கடினமானவை என்பதே யாகும். பிந்திய பரீட்சையில் மாணவர்கள் வாங்கியிருக்கும் சராசரி மார்க்குகள் மிகக் குறைவாக இருக்கி

*'ஹிந்து' 7. 12. 1922.

**கும்பகோணம் காலேஜ் ஜர்னல்: ஜுலை 1916.

றது. இந்த பரீட்சையில் எனக்கு உதவிபுரிந்த என் நண்பர்களுக்கு என்னுடைய நன்றி உரித்தாகும்.*

மறு வருஷமும் போர்ட்டர் தமது கடிதத்தில் பின் கண்டபடி குறிப்பிட்டார்.

"எட்டாம் வகுப்பு மாணவர்களை ஆங்கில பாடத்தில் தாம்ப்ஸனும் நீதி நூலில் ப்ளானகனும் சரித்திரப் பகுதியில் மார்ஷ் துரையும் தமிழில் சேஷையாவும் கணித சாஸ்திரத்தில் கோபாலராவ், ஸ்ரீநிவாஸ ராகவன், நான் ஆகிய மூவரும் பரீட்சித்தோம். பிந்திய பரீக்ஷையில் மாணவர்கள் வாங்கிய மார்க்குகள் மிகவும் சொற்பம். ஒருவர்கூட திறமை வாய்ந்திருப்பவராகத் தோன்றவில்லை. எல்லோரும் மிகவும் சாமான்னியமாக இருக்கின்றனர்.**

இதற்கடுத்த ஆண்டிலும் இவர் அளித்த உதவியைப் பற்றி போர்ட்டர் குறிப்பிட்டார்.

"எப். ஏ." முதல் வகுப்பு மாணவர்களை லெப்பர், ஸ்ரீநிவாஸராகவன், ஸ்ரீநிவாஸையர், சேஷையா, நான் ஆகியோர் பரீட்சித்தோம். ஒரு சிலர் திருப்திகரமாக விடையளித்தனர். ஆனால் சராசரி மார்க்குகளை வைத்துக்கொண்டு முடிவுகளைக் கவனிக்கும்போது அது நான் எதிர்பார்த்ததற்கு அதிக மட்டமானதாக இருக்கிறது. கணித சாஸ்திரம் சம்பந்தப்பட்டமட்டில் இது குறிப்பிடவேண்டியதாக இருந்தது. கணித சாஸ்திரத்தைத் தாங்களாகவே ஆசைப்பட்டு அப்பியஸிப்பவர்களின் தொகை மிகவும் சொற்பம் என்பது என் கருத்து. இல்லாவிட்டால் இவ்வளவு குறைவாக மார்க்குகளை அவர்கள் வாங்கமாட்டார்கள்.***

*மிஸ்டர் பவலுக்கு மிஸ்டர் போர்ட்டர் எழுதிய கடிதம் (நெ. 201.) 5. 4. 1869.

**பவலுக்கு போர்ட்டர் எழுதிய கடிதம் (நெ. 18) 5. 4. 1870

***பவலுக்கு போர்ட்டர் எழுதிய கடிதம் (நெ. 19) 5. 4. 1871

ஸ்ரீநிவாஸராகவையங்கார் தாம் மேலாக மதித்துவந்த இந்தப் பதவியை ராஜிநாமா செய்ததேன்? சம்பளத்திற்கும் குறைவில்லை; சுகத்திற்கும் கேடில்லை. அப்படியிருக்கையில் இந்தப் பதவியை வேண்டாம் என்று விட்டதேன்? 1869-ம் வருஷக் கடைசியில் ஜில்லாக் கலெக்டரான மிஸ்டர் ஜார்ஜ் பி. மாரிஸ் எஸ். பி. ஜி. ஸ்கூலுக்கு விஜயம் செய்தார். மார்ஷ் அவரை ஒவ்வொரு வகுப்புக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார். ஸ்ரீநிவாஸராகவையங்கார் மெட்ரிகுலேஷன் வகுப்புக்கு ஆங்கில பாடத்தைப் போதித்துக் கொண்டிருந்தார் அப்போது. சுற்றிப் பார்த்து வந்த மாரிஸ் அந்த வகுப்பில் சிறிது நேரம் அப்படியே நின்றுவிட்டார்; ஆசிரியரின் ஆங்கில ஞானத்தைக்கண்டு அவர் அதிசயித்துப் போனார். இதற்குள் மார்ஷ் முந்திக்கொண்டார். கலக்டர் தம்மைக் கேட்பதற்கு முன்பேயே அவர் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் திறமையைப் புகழ்ந்துரைத்தார். நேரில் கண்டதும் நெருங்கிப் பழகியவர் கூறியதும் மாரிஸின் மனசில் பதிந்து விட்டன. ஸ்ரீநிவாஸராகவையங்காரைத் தமது காரியாலயத்திற்கு ஆகர்ஷித்துக் கொள்ள அவர் விரும்பினார். பள்ளிக்கூடத்தை விட்டுப் புறப்படும் சமயத்தில் இவரை அழைத்து கலக்டராபீஸில் குமாஸ்தா வேலை கொடுக்கப்பட்டால் அதை ஒப்புக்கொள்ள சம்மதமா என்று வினவினார். ரூ. 120 சம்பளத்தில் இருப்பவர் ரூ. 35 வாங்க மனமொப்புவாரா என்பதே அவருக்குச் சந்தேகம். ஆகவே கலெக்டராபீஸில் புகுந்து கொள்பவர் காலக் கிரமத்தில் பெரிய பதவிகளுக்கு உயர வழியுண்டு என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். இது ஸ்ரீநிவாஸராகவையங்காரின் மனசை மாற்றியது.

பின்னர் இதே வருஷத்தில் கபிஸ்தலம் எஸ்டேட் சொந்தக்காரரான சந்திரப்பிரகாசமூப்பனார் காலகதியடைந்தார். அவருடைய வார்சான சீதாலக்ஷ்மி அம்மாள் தக்க பிராயத்தை எட்டவில்லையாதலால் அந்தச் சொத்து "கோர்ட் ஆப் வார்ட்ஸ்" வசம் வந்து சேர்ந்தது. நிர்வாகத்திற்கான அதிகாரியை நியமிக்கும் பொறுப்பு தஞ்சைக் கலக்டரிடம் இருந்தது. மாரிஸ் துரை இதற்கு சேஷையங்காரே தகுதியானவர் என்று கண்டு அவரைக் கபிஸ்தலம் எஸ்டேட் மானேஜராக அனுப்பினார். இத

ஞல் கலக்டராபீஸில் குமாஸ்தா் ஸ்தானம் காலியாகியது. உடனே காலதாமதமின்றி அந்த இடத்திற்கு ஸ்ரீநிவாஸ ராகவையங்காரை வரவழைக்க மாரிஸ் பெரிதும் ஆவலாயிருந்தார். சேஷையங்காரும் நிர்வாக இலாகாவில் தமது மகன் வேலை பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். கண்ணியமான நடத்தையினுல் கைகூடாதது எதுவுமில்லை என்பதே அவர் கருத்து.

கலக்டராபீஸில் உத்தியோகத்தை இவர் ஏற்றதற்கு மற்றுமொரு காரணமும் உண்டு. பின்னர் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன்பு சாட்சியஞ் சொன்னபோது இவர் அதை விளக்கிஞர். கமிஷன் அங்கத்தினரான ஸர் சார்லஸ் டர்னர் "பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலையை நீங்கள் ஏன் துறந்தீர்கள்?" என்று வினவிஞர்.

> "ஸர்க்கார் சகாயத்துடன் நடந்துவந்த காலேஜில் நான் வேலை பார்த்தேன். அங்கு மேலே உயர முடியும் என்பதற்கான அறிகுறிகள் எனக்குத் தென்படவில்லை. நிலைமை அபிவிருத்தியடையும் என்ற நம்பிக்கைக்கும் இடம் இல்லை. இவை தவிர எஸ். பி. ஜி. சங்கத்தார் பள்ளிக்கூடச் செலவைக் குறைத்துக் கொண்டு சிக்கனத்தை அனுஷ்டிக்க விரும்பினர் என்பது எனக்கு அப்போது தெரியவந்தது" என்ருர் இவர்.*

மும்மடங்கு அதிகமாக ஊதியம் கொண்ட உத்தியோகத்தைத் துறந்துவிட்டு மிகக் குறைவான சம்பளத்தில் இவர் வேலை பார்க்கத் தீர்மானித்ததற்கு ஒவ்வொருவர் வாழ்க்கையையும் ஒரு தெய்வீக சக்தியே உருப்படுத்துகிறது என்ற சித்தாந்தம் அத்தாக்ஷியல்லவா? ஆரம்ப நாட்களில் உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டு பிறகு வேறு துறையில் பிரவேசித்து அந்திம நாட்களில் பிரசித்தியுடன் அநேகர் பிரகாசித்திருக்கின்றனர் அல்லவா? மூன்று பெரிய சமஸ்தானங்களில் முதல் மந்திரி வேலை பார்த்த ராஜா ஸர் டி. மாதவராவ் முதன் முதலில் மதராஸ்

*பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடவடிக்கை விவரம் (1887) வால்யூம் 5: பக்கம் 69

ஹைஸ்கூலில் அல்லவா வேலை பார்த்தார்? இதே மாதிரி கௌரவத்தையடைந்த வி. பி. மாதவராவும் ஆதியில் மைசூர் ராஜ வம்சத்தவர் பள்ளியில் போதகராய் இருக்க வில்லையோ? இரண்டு பிரபல பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்திய ஜி. சுப்ரமணிய ஐயரும் தமது வாழ்க்கையின் முந்திய பகுதிகளை வித்தியாதானத்தில் கழிக்க வில்லையோ? காங்கிரஸ் மஹாசபைத் தலைவராகச் சிறப்புற்ற சேலம் விஜயராகவாச்சாரியார் ஆரம்பத்தில் கள்ளிக்கோட்டை கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடத்தில் சேவை புரிய வில்லையோ?

பள்ளிக்கூட உபாத்தியாயர் பதவியை விட்டுவிட்டு சர்க்கார் வரிவசூல் இலாகாவிலோ அல்லது வேறு ஒரு இலாகாவிலோ இந்தியர் பிரவேசிப்பது அந்நாளில் வழக்க மாயிருந்ததை இந்த உதாரணங்களிலிருந்து ஊகித்தறிய லாம். சிவில் சர்வீஸ் வர்க்கத்தைச் சேர்ந்த ஆங்கிலேய அதிகாரிகள் இந்த மனோநிலைமையைக் குறித்து மக்க ஏளனமாகப் பேசுவது அந்நாளில் சகஜம். மேனாட்டாரின் கல்விச் செல்வத்தைப் பங்கிட்டுக் கொண்டவர்கள் தங் கள் நாட்டவருடன் அதைப் பகிர்ந்துகொள்ள மறுப்பது கேவலம் அல்லவா? தங்களுக்குக் கிடைத்த அறிவுச் சுடரைக் கொண்டு அஞ்ஞானம் என்ற இருளை அகற்ற முன்வராமல் இருப்பது அவமானம் அல்லவா? உயர் தரக் கல்வியின் உயர்வை மதியாதவர்களுக்கு அதை அளிப்பதேன்? காட்டிக் கொடுத்ததைச் செய்யக்கூடாத வர்களுக்கு மேலும் கற்பிப்பதேன்?—இவ்விதம் வெள் ளையர் வெகு சுலபமாக நம்மவரை இழிவுப்படுத்திப் பேசி வந்தனர். உண்மையை அறிந்திருந்தால் அவர்கள் வாய் வீச்சுக்கு இடம் இருந்திராது.

அதிகாரிகளுக்கு அந்நாளில் இருந்த மனோபாவத்தை சென்னை வித்யா இலாகா அதிபர் ஸர் அலெக்ஸாண்டர் அர்பத்நெட் 1868-ல் சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் செய்த பிரசங்கத்தில் காணலாம்.

"சென்னை சர்வ கலாசாலை மற்றுமொரு விஷயத் தில் பட்டதாரிகளின் சேவையை அபேக்ஷிக்கிறது. இப்போது அதன் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்துள்ள

உங்களில் சிலர் அந்த அபிலாஷை வீணுகும்படி செய்யமாட்டீர்கள் என நான் நம்புகிறேன். நான் பள்ளிக்கூட உபாத்தியாயர் தொழிலைப்பற்றியே குறிப்பிடுகிறேன். இப்பெரிய நாட்டின் க்ஷேமத்தில் அக்கறையுள்ளவர்கள் விரும்பும் விதத்தில் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியாக வேண்டுமாயின் அதற்கு சுதேசிகளின் ஒத்துழைப்பே தேவை. உயர்தர வகுப்புக்களுக்கும் கூட சுதேசிகளே போதகர்களாக நியமிக்கப்பட வேண்டியது அதிக அவசியமாகும்.

இதர துறைகளைப்போல இது வசீகரமானதல்ல என்பதை நான் அறிவேன். வேறு தொழில்கள் மூலம் ஏற்படும் மதிப்பு இங்கு வாய்ப்பதில்லை என்ற கருத்து இருந்து வருவதும் எனக்குத் தெரியும். ஊதியமோ மிகக் குறைவு; கடமையைக் குற்றம் குறையின்றி பூர்த்தி செய்வதாயின் மூளைக்கும் தேகத்திற்கும் அதிக சிரமம் ஏற்பட்டே தீரும். ஆனால் உயர்தர அம்சங்களும் இதில் இராமல் இல்லை. மனசாட்சிக்குப் பயந்து நடக்கும் அறிவாளி ஒருவர் பிறருக்கு மேலான நன்மையைச் செய்யக்கூடிய துறை இது ஒன்றுதான்."

ஏதோ ஒரு சில ஆங்கிலேயர் மட்டும் மனப் பூர்வமாக இந்தியரின் முன்னேற்றத்தை நாடினரே தவிர மற்றவர் யாவருக்கும் சுதேசிகளுக்கு சமமான ஸ்தானத்தைத் தரக் கூடாது என்ற குறுகிய புத்தியே மேலிட்டிருந்தது. தொழிலை ஏற்கும் போது நல்ல சம்பளத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததே தவிர அதன் பிறகு போகப்போக ஊதியம் உயருவதற்கு அவர்கள் வழிகாட்டவில்லை. எவ்வளவு தான் திறமை வாய்த்திருந்த போதிலும் இந்நாட்டினருக்கு முதன்மை ஸ்தானத்தை விட்டுக் கொடுக்க அவர்கள் தயங்கினர். ராய் பஹதூர் டி. கோபாலராவ், சாது சேஷையா, பி. ரங்கநாதமுதலியார் போன்ற அறிவாளிகள் கல்வி இலாகாவில் புகுந்து அதில் அநேக வருஷங்களைக் கழித்த போதிலும் அவர்கள் அனைவரும் சாமான்யப் பதவியிலேயே கடைசிவரை காத்திருக்க வேண்டியதாயிற்று. தலைமைப் பதவியை இத்தகைய தகுதி வாய்ந்தவர்களுக்கும் அளிக்க சர்க்கார் பின் வாங்கின

றென்றால் அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பற்றி நம்பிக்கை எப்படி பிறக்கும்? அருகதையுள்ளவர்களை ஆதரிக்காவிட்டால் அதில் ஈடுபட ஆவல் எப்படி உண்டாகும்? வாய்ப்பேச்சில் வீரம் இருந்ததே தவிர வழி காட்ட வகை இல்லை! அனுபவமில்லாத ஆங்கிலே யரும் விஷயம் தெரியாத வெளிநாட்டவரும் இந்தியாவுக்கு வந்தது தான் தாமதம், வித்யா இலாகாவில் பெரிய பதவிகள் அவர்களுக்கே வாய்த்தன. இம்மாதிரி ஆசைக்கு இடமில்லாமல் மனம் நொந்து வெறுப்புடன் காலத்தைக் கழிப்பதைவிட குமாஸ்தாவாகப் புகுந்து காலக் கிரமத்தில் தேசத்தின் நிர்வாகத்தில் கொஞ்சமாவது பங்கெடுத்துக் கொள்ள விரும்புவது குற்றமாகுமா? சமூகத்தை விட சொந்த கௌரவத்தைப் பெரிதாக நினைப்பதில் என்ன பிசகு? சிரமப்பட்டுப் படிப்பதும் சிறப்பாகத் தேறுவதும் சுய நலத்தை உத்தேசித்துத் தானே? பிறரை அண்டிப் பிழைக்க வேண்டியவர் பரோபகாரத்தில் பற்றுதல் எப்படிக் கொள்ள முடியும்? தனக்கு மிஞ்சியதை யல்லவா தானமும் தர்மமும் செய்ய வேண்டும்?

போர்ட்டர் அக்காலத்திய நிலைமையை நேரில் பார்த்து நன்கறிந்திருந்தார். ஆகையால் 1873-ல் சர்வகலாசாலை விழாவில் பட்டதாரிகளுக்குப் பிரசங்கம் புரியும் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்திக் கொண்டு குற்றம் குறை கூறுவோர்க் கெல்லாம் பதில் அளித்தார். உயர்தரக் கல்வி கை கண்ட பலனை அளிக்கவில்லை என்ற விதண்டா வாதத்தை அவர் தகர்த் தெறிந்தார்.

> "இந்த மாகாணத்தில் சென்ற இருபது வருஷங்களாக உயர்தரக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. நாம் நிறுவிய பள்ளிக் கூடங்களில் ஆரம்ப காலத்தில் படித்தவர்கள் இப்போது வயதேறியவர்களாகி பெரிய பதவிகளை வகித்து வருகின்றனர். இவர்களுள் பலர் பிரசித்தி பெற்றவர்கள். அவர்களது பெயர்களைக் கேட்டாலே பலர் பெருமைப்படுகின்றனர். இந்தக் கோஷ்டியாருக்குப் பிறகு படித்தவர்களும் ஏராளமாக சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கின்றனர். வெளியாருக்குத் தெரியாமல் வேலை செய்யும் இந்த யுவர்களைப் பற்றி நான் விஷயமறிந்தவன் போல்

அதிகமாகப் பேச முடியாது. அதைப் பற்றி அவர்களுக்கு மேலேயுள்ள அதிகாரிகள் தான் கூற வேண்டும். ஒரு விஷயம் மட்டும் எனக்குத் தெளிவாகிவிட்டது. அவர்களைப் பற்றி நிர்வாகிகளுக்கிருந்த மனோபாவத்தில் விசேஷ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. மிக்க எளிய பதவியை மேற்கொள்ள வேண்டுமே என்ற மனக் கசப்பு இருந்தும் அதை மதியாமல் கோர்ட்டுகளிலும் கச்சேரிகளிலும் வேலை பார்க்க அவர்கள் முன் வந்திருப்பதால் வேலை சரிவர நடப்பதுடன் ஒழுக்கமும் நெறியும் இப்போது அங்கு தென்படுகின்றன. இந்த அபிவிருத்தி நாம் எதிர்பார்த்ததே. பயிற்சி பெற்றவர்கள் எந்தக் காரியத்தையும் ஒழுங்காகவும் திருப்தியாகவும் செய்து முடிப்பர். இப்போது சர்க்காரின் நிர்வாக இலாகாக்கள் அதிகரித்திருக்கின்றன. ஆகவே நல்ல வித்தியாப்யாசம் பெற்றவர்கள் நமக்கு அதிகம் தேவை.

ஹிந்து மாணவர்களிடம் குற்றம் காட்டுபவர் மேலான தரத்தைக் கொண்டு மதிப்பிடுகின்றனர். இங்கிலாந்து, ஸ்காட்லந்து, ஜெர்மனி, ஆகிய விடங்களிலுள்ள பட்டதாரிகளுடன் அவர்களை ஒப்பிடுவதில்லை. ஆனால் கலைஞானத்தில் மட்டுமே கருத்து கொண்டு தமது படிப்பின் மூலம் பணமும் பெருமையும் சம்பாதிப்பது சரியல்ல என்று எண்ணும் லக்ஷிய புருஷருடன் தான் ஒப்பிடுகின்றனர். இம்மாதிரி நபர்களைக் கண்டு ரசிக்கலாம். ஆனால் நாம் இது வரை அறிந்த நாட்டில் இத்தகையவர்கள் இல்லை என்பது நிச்சயம். பேகன் என்பவர் எழுதிய நியூ அட்லாண்டிஸ் என்ற புத்தகத்தைப் படித்தால் தெரியும். அதில் ஆசிரியர் கனவு காண்கிறார். அவருடைய உள்ளத்தில் கற்பனை செய்யப்பட்ட நாட்டு மக்கள் சாமான்களை விற்று செல்வத்தைக் குவிக்க வர்த்தகம் செய்யவில்லை. ஆனால் அறிவுச் சுடரைச் சம்பாதிப்பதே அவர்கள் நோக்கம். உயர்ந்த லக்ஷியத்தை இவர் கடைபிடிக்காமையால் அவர்களுக்கு அது சாத்தியமில்லை என்று சிலர் வாதிக்கின்றனர். ஒரு வித்தியார்த்தி பிரதிப் பிரயோசனத்தை எதிர்பாராமல்

படிப்பதில்லை என்று சர்வ சாதாரணமாக அவதூறு கிளம்பி வருகிறது. இதை நன்கு ஆராய்வோம். இவ்வளவு பிள்ளைகள் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து வாசிப்பதற்குத் தாங்கள் மேலான நிலைமைக்கு வர வேண்டும் என்பதே காரணம். இவர்களில் பலர் படிப்பு பூர்த்தியானவுடன் வயிற்றை வளர்க்க வழி தேட வேண்டும். இவ்விரண்டையும் ஒப்புக் கொண்டு விட்டு அவர்களுக்கு படிப்பில் மோகம் இல்லை என்று கூறலாகாது.

இந்தத் தவறான எண்ணம் நாட்டில் வலுத்திருப்பதேன் ? கரரணத்தைக் காட்டுவது கஷ்டமல்ல. பதவிக்காக நடக்கும் போட்டியைப் பலரும் பார்க்க முடிகிறது. ஆனால் தனிமையில் படித்து அவர்கள் பொழுது போக்குவதை சிலரே அறிவர். படித்துத் தேறிய யுவர்கள் பல உத்தியோகங்களுக்கும் மனுப் போடுவதும் கோர்ட்டுகளிலும் கச்சேரிகளிலும் போய் காத்திருப்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் ஓய்வு நேரத்தில் அவர்கள் தங்கள் கல்வி யறிவைப் பெருக்கிக் கொள்வது அனைவருக்கும் தெரியாது. நம் மாணவர்களைப் பற்றி சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்களே அவர்களைபற்றிப் பேசுகின்றனர். எப்படி ஆப்ரிக்கா கண்டத்தின் படத்தை முன்பு தயாரித்தவர்கள் உள் பகுதிகளில் தங்களுக்குத் தெரியாத இடங்களிலெல்லாம் காட்டுப் பிரதேசத்தைக் குறிப்பிட்டுக் காட்டினரோ அதே மாதிரி பூரணமாய் விஷயம் அறியாதவர் கற்பனைக்கு இடம் கொடுப்பது சகஜம் தானே.*

கால நிலையை அறிந்தவர்கள் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் முடிவை ஆக்ஷேபிக்க மாட்டார்கள்.

---

* போர்ட்டரின் சர்வகலாசாலைப் பிரசங்கம், மார்ச் 1873

சேஷையங்கார் கபிஸ்தலம் எஸ்டேட்டின் மானேஜரானார். ஸ்ரீநிவாஸராகவையங்கார் கலக்டர் கச்சேரியில் குமாஸ்தாவாக வந்து சேர்ந்தார். 1870-ம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல்தேதி சர்க்கார் கீழ் "மூன்றுவது வகுப்பு வெர்னகுலர் கிளார்க்" வேலையை யேற்றுக் கொண்டார். மாரிஸ் துரை இந்த நியமனத்துக்கப்புறம் நீண்ட ரஜாவில் தாயகம் திரும்பினர். ஆதலால் அவர் ஸ்தானத்துக்கு வில்லியம் கேடெல் 1871 மேயில் அனுப்பப்பட்டார். முந்தியவர் போலவே இவருக்கும் ஆரம்பத்திலிருந்தே ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் அலாதி பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. ஆறுமாத காலத்துக்குள் இவரது அந்தஸ்து உயர்ந்தது. மூன்றுவது இங்கிலீஷ் குமாஸ்தா பதவி இவருக்கு வழங்கப்பட்டது. 35 ரூபாயிலிருந்து 60 ரூபாயாகச் சம்பளம் அதிகரித்தது. கலக்டர்கள் ஜில்லா மாஜிஸ்திரேட்டுமாக இருந்து குற்றவாளிகளைத் தண்டிக்கும் பொறுப்பையும் வகித்து வந்தனராதலால் அது சம்பந்தமான மனுக்களையும் இதர தஸ்தாவேஜிகளையும் கவனித்து கலக்டரின் உத்தரவைப் பெறும் கடமை இந்த இங்கிலீஷ் குமாஸ்தாவைச் சேர்ந்தது. மேலும் ஆறுமாத காலம் உத்தியோகம் பார்த்ததும் இவருக்கு இன்னும் மேலான பதவி கிடைத்தது. 1871-ம் ஹு மார்ச் மாதம் முதல்தேதி இவர் தலைமை வெர்னகுலர் குமாஸ்தா பதவியில் அமர்ந்தார். இதற்கடுத்த வருஷம் நவம்பர் மாதம் பிரதம இங்கிலீஷ் குமாஸ்தா ஸ்தானத்தையும் இவர் ஸ்வீகரித்தார். அறுபது ரூபா சம்பளத்திலிருந்து இவர் ஊதியம் 150 ரூபாயாக இதன் காரணமாக உயர்ந்தது. ஜில்லாவில் தலைமை வகித்த ஒவ்வொரு அதிகாரியும் இவரிடம் கொண்ட நன்மதிப்பே இவர் இரண்டு வருஷகாலத்திற்குள் தாம் உபாத்தியாயராக இருந்த நாளில் வாங்கிவந்த சம்பளத்தைவிட அதிகமாகவே பெறுவதற்கு உதவியது.

அந்நாளில் கலக்டராபீஸில் சிரஸ்தேதாரராக இருந்தவர் தண்டலம் வெங்காசாமி ராவ். பிரசித்திபெற்ற வித்தி

யாதிகாரியான ராய் பஹதூர் டி. கோபாலராவின் பெரிய சகோதரர். கலக்டருக்கடுத்தபடி இருந்து காலக் கிரமத்தில் கீர்த்தியைச் சம்பாதித்தார். ஜில்லாவைப்பற்றி எந்த பிரச்னை தலைகாட்டினாலும் இவரையே அனைவரும் நாடுவர். அறிவும் அனுபவமும் மிகுந்து தம்முடன் வேலை பார்த்தவர்களுக்கெல்லாம் சிறந்த உதாரணமாக விளங்கியதுடன் அவர்களது நல்வாழ்வுக்கும் ஆதாரமாக இருந்து வந்த பெரியார். வரி வசூல் விவகாரங்களில் அவருக்கு விஸ்தாரமான ஞானம் வளர்ந்திருந்தது. தம் இளைய சகோதரர் கீழ் படித்து அவருடைய பூரண அன்பை ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் கவர்ந்திருந்தது வெங்காசாமி ராவும் இவரிடம் அத்தகைய அன்பைக் காட்டத் தூண்டியது. இது தவிர இவரது பிதாவை வெங்காசாமிராவ் நன்கறிவார். இருவரும் சேர்ந்து வேலை செய்தவர்கள். குடும்ப சிநேகம் குரு-சிஷ்ய உறவாகப் பரிணமித்தது. எந்த சந்தேகம் வந்தாலும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வெங்காசாமி ராவிடம் போய் விடுவார். சங்கோசமின்றி விஷயங்களைக் கேட்டுத் தெளிவடைவார். வெங்காசாமி ராவுடன் ஏற்பட்ட தொடர்பின் மூலம் இவர் வெகு சீக்கிரத்தில் ஜில்லாவின் நிலப் பிரச்னைகளையெல்லாம் பூரணமாக கிரஹித்து சிக்கல்களை அகற்றும் வழியை அறிந்துகொண்டார். தஞ்சை ஜில்லாவில் அடிக்கடி தகராறுகள் தலைகாட்டுவதுண்டு. திடஞானமும் தாக்ஷிண்யமற்ற புத்தியும் தேவை. இவ்விரண்டு அம்சங்களும் சேர்ந்திருந்தால்தான் கடமையைக் கண்ணியத்துடன் பூர்த்திசெய்ய முடியும். இங்கிலீஷ் தலைமைக் குமாஸ்தாவானதால் ஜில்லாவின் ரெவினியூ விவகாரங்கள் பூராவும் இவரிடமும் தலைமை சிரஸ்தேதாரரான வெங்காசாமி ராவிடமுமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. மிஸ்டர் (பிறகு ஸர்) அருண்டேலும் மிஸ்டர் (பிறகு ஸர்) ப்ரெட்ரிக் நிக்கல்ஸனும் அங்கு அஸிஸ்டண்ட் கலெக்டர்களாக இருந்தனர்.

கீழ்த்தர குமாஸ்தாக்களுக்கு கலக்டரின் சிரஸ்தேதாரே மேலதிகாரி. கடிதங்களைத் தயாரிப்பது, சற்று சிரமமான பிரச்னைகளைப் பற்றிய குறிப்புக்களை எழுதியனுப்புவது, தம் பார்வைக்கு வரும் தாய்மொழி தஸ்தாவேஜிகள் சம்பந்தமாக உத்திரவுகளைப் பிறப்பிப்பது, கலால் இலாகா

நிர்வாகத்தை கவனிப்பது, ரெவினியூ போர்டுக்கு அனுப்ப வேண்டிய அறிக்கைகளை சித்தப் படுத்துவது—இவை இவரது முக்கிய அலுவல்கள். ஊன்றிப் பார்த்தால் அவரே கலக்டரின் அந்தரங்கத்திற்குப் பாத்திரரான உத்தியோகஸ் தர் என்பது தெரியவரும். பொக்கிஷ டிபுடி கலக்டருக் குப் பெயரளவில்தான் அந்த அந்தஸ்து இருந்தது. பிரதி வருஷமும் தீர்வை சமயத்தில் அவர் எல்லா கணக்குகளை யும் பரிசீலித்து தீர்வைக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்: அந்தச் சமயத்தில் வரும் கடிதங்களையும் மனுக்களையும் தாமே படித்துப் பார்த்துவிட்டு மேற் கொண்டு உத்திரவிற்காக கலக்டரிடம் அவற்றைச் சமர்ப் பிக்க வேண்டியவர் அவர். அவ்வப்போது தாசில்தார்களும் டிவிஷனல் அதிகாரிகளும் நிலவரி வசூல் சம்பந்தமாக அனுப்பும் விவரங்களைக் கவனிக்கவேண்டியவரும் அவர் தான். நிலவரி வசூல் முறையை மேற்பார்வையிடுவதும் சாகுபடி அனுமதிகோரி வரும் மனுக்களைப் பைசல் செய் வதும் அடிக்கடி சுற்றிவந்து பயிரிடுவதைக் கவனிப்பதும் கிராம உத்தியோகஸ்தர்களும் ரெவினியூ இன்ஸ்பெக்டர் களும் அனுப்பும் குறிப்புக்களைப் பற்றித் தீர்ப்பளிப்பதும் சில குற்றங்களை விசாரிப்பதும் மேலதிகாரிகளிடமிருந்து வரும் உத்திரவுகள்படி காரியத்தைச் செய்வதும் தாசில் தாரின் பொறுப்பு. நேர்மையாக நடந்துகொள்ள விரும்பு பவருக்குத் தாங்க முடியாத சுமை ஏற்படும். அதிக திறமை வாய்ந்தவருக்குத்தான் அன்றாட அலுவல்களை முடிக்க இயலும். ஜில்லா நிர்வாகம் இவ்விதம் நடந்து வந்தது.

இந்தச் சமயத்தில் கே. கல்யாணசுந்தரமய்யர் இதே காரியாலயத்தில் குமாஸ்தாவாக வந்து சேர்ந்தார். கும்ப கோணம் கலாசாலையில் படித்துச் சிறப்புடன் தேறியவர் அவர். போர்ட்டரின் பஹுமானத்தையும் பல பதக்கங் களையும் அவர் கவர்ந்திருந்தார். பட்டதாரியானவுட னேயே அவர் இந்தப் பதவியை யேற்றார். சிறிதுகாலத்திற் கெல்லாம் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கும் கல்யாணசுந் தரமையருக்கு மிடையே தகராறு தலைகாட்டியது. வெகு அற்ப விஷயம்! சுலபமாகத் தீர்ந்திருக்க வேண்டியது. மேலதிகாரியின் பார்வைக்குப் போகாமலே முடிந்திருக்கக்

கூடியது. நிலத்தீர்வை சம்பந்தமாக கலக்டருக்கு ஒரு மனு வந்தது. அந்த மனுதார் விஷயத்தில் கல்யாணசுந்தரமையருக்குச் சிரத்தை இருந்ததால் அவர் அதைத் தாமே பைசல் செய்ய விரும்பினர். உத்தியோக விதிப்படி இந்த மனுவைக் குறித்து முடிவு செய்யவேண்டியவர் ஆங்கில குமாஸ்தாவான ஸ்ரீநிவாஸராகவையங்கார் தாம். ஆனல் கல்யாணசுந்தரமையர் இதற்குக் கீழ்ப்படிய விரும்பவில்லை. இவருக்குத் தெரியாமலேயே தீர்ப்பளித்துவிட வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார். ஆயினும் இதைப் பற்றிய விஷயம் இவர் காதுக்கு எட்டிவிட்டது. உடனே ஸ்ரீநிவாஸராகவையங்கார் குறிப்பிட்ட மனுவைத் தம்மிடம் அனுப்பும்படி அவருக்கு எழுதினர். தகுந்த பதில் கிடைக்கவில்லை. இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் அது தம்மிடம் வந்து சேரவேண்டுமென்று இவர் திரும்பவும் அவருக்கு அறிவித்தார். அதற்கும் அவர் அசைந்து கொடுக்கவில்லை. கடைசியில் இவருக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. இதைப்பற்றி வெங்காசாமி ராவிடமும் கலக்டரிடமும் இவர் தெரிவித்தார். கலக்டருக்கு சங்கடம் ஏற்பட்டது. கல்யாணசுந்தரத்திடம் அவர் நல்ல மதிப்பு வைத்திருந்தார். ஸ்ரீநிவாஸராகவையங்சார் கிளப்பிய பிரச்னையும் சாமான்யமல்ல. சிறிது காலம் ஒன்றும் புரியாமல் திகைத்தார். ஆயினும் சிக்கலைத் தீர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் நாளுக்குநாள் வலுத்தது. கல்யாணசுந்தரமையரைக் கூப்பிட்டனுப்பி அவர் செய்த காரியம் தவறு என்பதையும் மற்றொருவர் அலுவலில் குறுக்கிடக் கூடாது என்பதையும் அவரிடம் சுட்டிக் காட்டினர். மீண்டுமொரு முறை இத்தகைய தகராறு முளைக்க இடம் தரலாகாதெனவும் அவரிடம் அறிவித்தார். கல்யாணசுந்தரமையர் இதை சகிக்கவில்லை. தமக்கு அநாவசியமாக அநியாயம் செய்யப்பட்டதாகக் கருதி வேலையை உடனே ராஜிநாமாச் செய்தார். இதன் பின்னர் அவர் சட்டப் பரீட்சையில் தேறி தஞ்சை வக்கீல்களுள் முதல்வராகவும் சென்னை சட்டசபை அங்கத்தினராகவும் பிரகாசித்தார். இன்றும் தம் பெயருடன் விளங்கிவரும் பள்ளிக்கூடத்தையும் ஸ்தாபித்தார்.

கேடெல் சரியாக இரண்டு வருஷகாலம் தஞ்சையில்

இருந்துவிட்டு போர்ட் மெம்பராக உயர்ந்தார். உடனே ஆனரபிள் டேவிட் அர்பத்நெட் 1873-ல் ஜில்லா கலக்டராக வந்தார். அர்பத்நெட்டும் இவரிடம் பூரண நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் மறுவருஷம் அக்டோபர் மாதம் சென்னை ரெவினியூ போர்ட் அங்கத்தினர் பதவிக்கு உயர்த்தப்பட்டு தலைநகருக்குச் சென்றார். ஆறு மாதத்திற்குள் மூன்றும் மெம்பராக வந்தவர் முதல் மெம்பருமானார். அவருடைய ஸ்தானத்திற்கு தென் கன்னடத்தில் கலக்டர் வேலை பார்த்துக்கொண்டிருந்த எச். எஸ். தாமஸ் வந்தார். தாமஸ் வந்தது முதற்கொண்டே தஞ்சை கலக்டர் கச்சேரியில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அங்கு ஆதார ஸ்தம்பங்கள் போலிருந்த பலர் அங்கிருந்து வெளிக்கிளம்ப வேண்டியதாயிற்று. பழுத்த பிராம்மணத்துவேஷி புதிய கலக்டர். அவர்களுடைய மதி நுட்பைக் கண்டு சகியாதவர். அருகதையுள்ளவர்களிடம் அசூயைக் கொண்டவர். வீண் பொறாமையே அவரை வாட்டியது. வந்ததும் வராததுமாக அங்கிருந்து பிராம்மணர்களை விரட்ட விரும்பினார். வெங்காசாமி ராவ் போன்ற உத்தியோகஸ்தர்கள் தமக்குச் சாதகமாக இருக்க மாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தவர். மனசாட்சியையே அவர்கள் பெரிதாக மதிப்பவர்கள் என்பதைத் தெரிந்துக்கொண்ட அவர் முதலில் வெங்காசாமி ராவை வேறு இடத்திற்கு மாற்றத் துணிந்தார். கலக்டராபீஸில் மிகவும் முக்கியமான ஹுஸுர் சிரஸ்தேதார் ஸ்தானத்திலிருந்து அவரை அப்புறப்படுத்தி டிரஷரி டிபுடி கலக்டராக அனுப்ப அவர் தீர்மானித்தார். புதிய பதவிக்கு வெங்காசாமி ராவ் போய் விட்டதும் அவர் அடிக்கடி பல தாலூகாக்களைச் சுற்றிப் பார்த்துவர வேண்டியது அவசியமாகுமாதலால் அவர் தமக்கு குறுக்கே நிற்க முடியாத நிலை ஏற்படும் என தாமஸ் நம்பினார். சிரஸ்தேதார் ஸ்தானத்திற்கு அதுவரைத் தம் கீழ் வேலைபார்த்துவந்த டி. கோபாலகிருஷ்ணப்பிள்ளையைக் கொண்டு வந்தார். புதிய சிரஸ்தேதாரரும் தம் யஜமான் மாதிரியே நடந்து கொள்பவர். துவேஷத்திலும் துணிச்சலிலும் இருவரும் தக்க ஜதையாக இருந்தனர். திருச்சிராப்பள்ளியில் பல வருஷங்கள் டிபுடி கலக்டராக இருந்து அங்கு அழியாப்புகழைச் சம்பாதித்த ராய் பஹதூர் டி. பட்டாபிராமபிள்ளையின் சகோதரர் கோபால

கிருஷ்ண பிள்ளை. இந்த சகோதரர்களிடம் காணப்பட்ட வேற்றுமை அதிகம். பட்டாபிராம பிள்ளை நெறிமுறை தவருதவர். அர்த்தமின்றி பழிப்பதையும் அநாவசியமாகப் பகைமை செய்வதையும் கண்டால் அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. நியாயத்தையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டு நடந்து கொண்டவர் அவர். கோபாலகிருஷ்ண பிள்ளை இதற்கு முற்றிலும் விரோதமாயிருந்தார். ஆரம்பகாலத்திலிருந்தே அவருக்கும் தாமஸுக்கும் அலாதி நட்பு உண்டு. இருவரும் தனித்து ஒரு ஜில்லாவிலும் இருந்ததில்லை,

கிரமப்படி வெங்காசாமிராவின் ஸ்தானம் ஸ்ரீநிவாஸ ராகவையங்காருக்கே கொடுக்கப்படவேண்டும். ஆனால் அதற்கு வேறு ஒரு ஜில்லாவிலிருந்த கோபாலகிருஷ்ண பிள்ளை கொண்டுவரப்பட்டது இவர் மனசைப் புண்படுத்தி விட்டது. இதுவரை இருந்துவந்த செல்வாக்கு இனிமேல் நீடிக்காது என்பது இவருக்குத் தெரிந்து விட்டது. தாமஸ் கீழ் வேலை பார்ப்பது சாத்தியமல்ல என்பதைத் தொடக்கத்திலேயே இவர் கண்டு கொண்டார். ஆயினும் தமக்கிழைக்கப்பட்ட அநீதியைப்பற்றி அதிகாரியிடம் முறையிட்டார். பலன் ஏதும் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக உபத்திரவம் ஆரம்பித்தது. சிறிது காலம் பொறுத்துப் பார்த்தார்; தணியும் எனத் தோன்றவில்லை. ஆகையால் இவர் சென்னை ரெவினியூபோர்டு மெம்பரான கனம் டேவிட் அர்பத்நெட்டுக்குத் தமது நிலைமையை விவரித்து நீண்ட கடிதத்தை எழுதினார். ஒவ்வொரு நிமிஷமும் தாம் முள்மேல் நிற்பதுபோல இருப்பதாகத் தெரிவித்தார். அர்பத் நெட்டிடமிருந்து காலதாமதமின்றி பதில் வந்து சேர்ந்தது. அதே சம்பளத்திற்கு வருவதாயின் உடனே போர்டாபீஸில் எடுத்துக்கொள்ள முடியும் என அவர் அறிவித்தார். இவர் அதற்கு சம்மதித்தார். ஸ்ரீநிவாஸ ராகவையங்காரை போர்டாபீஸிற்கு உடனே அனுப்பும்படி தஞ்சை ஜில்லா கலக்டருக்கு அர்பத்நெட் உத்திரவை அனுப்பினார். தாமஸ் இதைக்கண்டதும் சீறி எழுந்தார். ஆக்ஞைக்குக் கீழ்ப்படிவதா? சால்ஜாப்பு கூறிவிட்டுப் பிறகு பார்த்துக் கொள்ளலாமே—என்றது அவர் மனம். ஸ்ரீநிவாஸராகவையங்காரை அனுப்புவது சாத்தியம் இல்லை

என அவர் தெரிவித்தார். இந்தப் பதில் அர்பத்நெட்டின் கோபத்தைக் கிளப்பிவிட்டது. திரும்பவும் கண்டிப்பாக எழுதினர். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஸ்ரீநிவாஸ ராகவையங்காரை தஞ்சையில் இருத்தி வைக்கக் கூடாது என்று அவர் தெரிவித்தார். இதற்கப்புறம் தாமஸ் துரைக்கு வேறு வழியில்லை. உடனே இவரைச் சென்னைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்.

ரெவினியூ போர்டாபீஸில் 1875-ம் வருஷம் ஜூன் மாதம் 18-ம் தேதி இவர் அக்கவுண்டண்ட் ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார். இவர் வந்து சேர்ந்ததும் அப்போது போர்டில் முதல் மெம்பர் ஸ்தானத்தை வகித்து வந்த ஆனரபிள் அர்பத்நெட் இவருக்குப் பிரத்தியேகமாக ரூ. 25 அலவன்ஸ் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். அப்போது போர்டாபீஸில் தலைமை சிரஸ்தேதாராக இருந்தவர் பி. செஞ்சல்ராவ். செஞ்சல் ராவ் தம் வேலையில் மஹா நிபுணர். காரியாலயத்தில் அவரிடம் ஆங்கிலேயர் உட்பட யாவரும் வைத்திருந்த மதிப்பை அளவிட முடியாது. எந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் அதைத் தீர விசாரித்தே முடிவுக்கு வருவார். அவசரப்பட்டு எதையும் செய்துவிட மாட்டார். சாதகபாதகங்களை யெல்லாம் சாங்கோபாங்கமாக அலசிப் பார்ப்பார். இரண்டு கட்சிகளிலுமுள்ள நியாயாந் நியாயங்களை சீர்தூக்கி சிந்திப்பார். சமூகச் சீர்திருத்தத்திலும் சிரத்தைப் பூண்டவர். முன்னேற்றத்திற்கான மார்க்கங்களை வகுப்பதில் முன் நின்றவர். சர்க்கார் சேவையில் கண்ணும் கருத்துமாயிருந்தவர். கௌரவமாகக் காலத்தைக் கழித்தவர். ஸ்ரீநிவாஸராகவையங்காரின் அதிருஷ்டம் சென்னையில் செஞ்சல்ராவுக்குக் கீழ் வேலை செய்யும்படி இவரைக் கொண்டுவந்து விட்டது. இவரும் அவரையே தமது குருவாக வரித்தார். இந்தக் காலம் முதற்கொண்டே இந்தத் தொடர்புக் காரணமாக இவரது வாழ்க்கை புத்துயிர்ப் பெற்றது. செஞ்சல் ராவுடன் சேர்ந்து நின்று சேவை புரியவும் விருப்பம் உதயமாகியது. ஒரு வருஷம் பூரணமாக முற்றுப் பெற்றதும் இவர் போர்டாபீஸில் தலைமைக் குமாஸ்தாவாகவும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார்.

பள்ளிக்கூடத்தை விட்டு விலகிக்கொண்டு விட்ட

போதிலும் தாம் படித்த வித்தியாஸ்தாபனத்துடன் இவருக் கேற்பட்ட தொடர்பு நீடித்திருந்தது. தஞ்சையிலிருந்து உத்தியோக விஷயமாய்த் தலைநகருக்கு வந்து சேரும் வரையில் போர்ட்டர் இவரது சகாயத்தைப் பிரதி வருஷமும் அபேக்ஷித்து அதைப் பயன்படுத்திக்கொண்டார்.

"வருஷாந்தரப் பரீட்சையில் கலாசாலையுடன் சம்பந்தமில்லாத பலர் எனக்கு உதவிபுரிந்தனர். அவர்களுக்கு நான் இப்போது என் நன்றியை அறிவிப்பது உசிதமாகும். பி. ஏ. வகுப்பு மாணவர்களை மிஸ்டர் தாம்ப்ஸன், மிஸ்டர் இவான்ஸ், ஸ்ரீ கோபால ராவ், ஸ்ரீ டி. சேஷையங்கார், எம். ஜகராவ், எஸ். ஸ்ரீநிவாஸராகவன், ஏ. எல். வேங்கட ராமையா ஆகியோர் பரீட்சித்தனர்" என்று 1872ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ம் தேதியன்று வித்யா இலாகா தலைவர் மிஸ்டர் பவலுக்கு அவர் எழுதினார்.

அடுத்த வருஷம் கோபால ராவ் எழுதிய கடிதத்திலிருந்தும் ஒரு பகுதியை இங்கு குறிப்பிடவேண்டும்.

"சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்கு ஆஜரான மாணவர்களுக்கு மட்டும் வருஷாந்தரப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. மேல் வகுப்பு மாணவர்களை கலாசாலையுடன் சம்பந்தம் கொள்ளாதவர்களே பரீட்சித்தனர். மிஸ்டர் போர்ட்டர், மிஸ்டர் இவான்ஸ், மிஸ்டர் டங்கன், மிஸ்டர் பாரோ, மிஸ்டர் மார்ஷ், ஸ்ரீமான்கள் பி. ரங்கநாதமுதலியார், டி. சேஷையங்கார், ஸி. நாகோஜி ராவ், ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார், வி. ஸ்ரீநிவாஸையர், என். சர்வோத்தமராவ், எஸ். ராமையர், எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார், கே. ராமானுஜாச்சாரியார், சடகோபாச்சாரியார் ஆகியோர் காலேஜில் உள்ள மூன்றும் வகுப்பு, முதல் வகுப்பு மாணவர்களைப் பரீட்சித்ததற்கு நான் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு என் நன்றியை அறிவிக்கிறேன். முதல் வகுப்பு மாணவர்கள் கணித சாஸ்திரம் தவிர மற்ற பாடங்களில் திருப்திகரமான மார்க்குகளை வாங்கினர்.

அந்தப் பகுதியில் மட்டும் சராசரி மார்க்குகள் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆனால் இந்த வருஷத்திய வினா பத்திரம் எதிர்பாராதபடி மாணவர்களைத் திகைக்க வைத்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.'' *

1875-ம் வருஷம் போர்ட்டர் கலாசாலை நிலவரத்தைப்பற்றி வித்யா இலாகாத் தலைவருக்கு எழுதிய கடிதத்திலும் தம்முடன் சில நண்பர்கள் ஒத்துழைத்ததை எடுத்துக் காட்டினார்.

மேல் வகுப்பு மாணவர்கள் கணித பாடத்தில் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், ராமானுஜாச்சாரியார், பி. ஹனுமந்த ராவ் ஆகியோரால் பரீட்சிக்கப்பட்டதாகவும் அதில் தேறிய மாணவர்களின் தொகை சாமான்யமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

1873-ம் வருஷ மத்தியில் பிரஸிடென்ஸி காலேஜில் பிரின்ஸிபாலாக வேலைபார்த்து வந்த மிஸ்டர் போர்ட்டர் தஞ்சையில் கலெக்டராக இருந்த தமது அத்தியந்த நண்பரான கனம் டேவிட் அர்பத்நெட்டைப் பார்ப்பதற்காகத் தஞ்சைக்கு வந்து சிறிது நாட்கள் தங்கியிருந்தார். இந்த வருகை கும்பகோணம் மாணவர்களிடையே பெரிய உத்சாகத்தையும் சந்தோஷத்தையும் கிளப்பிவிட்டது. தங்கள் பழைய பிரின்ஸிபாலைப் பார்ப்பதற்காக மாணவர்களும் ஆசிரியர்களும் வல்லத்திற்கு யாத்திரைக் கிளம்பினர். அந்த நாட்களில் கலெக்டர் காரியாலயமும் விடுதியும் தஞ்சைக்குச் சிறிது தூரத்திலுள்ள வல்லத்தில் இருந்தன.

“ஆசிரியர்களும் சுமார் 100 மாணவர்களும் தாங்கள் மிகவும் போற்றித்தொழுத பிரின்ஸிபாலைப் பார்ப்பதற்காக வல்லத்திற்குக் கால்நடையாய்க் கிளம்பி விட்டனர். ஹுஸுர் சிரஸ்தேதாரரான ஸ்ரீமான் வெங்காசாமி ராவ் இவர்கள் அனைவரையும் தம்முடைய விருந்தாளிகளாகத் தங்கியிருக்கும்படிக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் பிள்ளைகளில்

* கடிதம் 29-5-1873

பலர் தஞ்சையில் பகல் போஜனத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து வல்லத்திற்கு நடந்து வந்து சேர்ந்தனர். இங்கு என் பழைய ஆசிரியரான ஸ்ரீநிவாஸ ராகவையங்காரிடம் முதலில் நான் என் மரியாதையைச் செலுத்திவிட்டு திரும்பவும் அவருடைய பரிசயத்தைப் பெற்றேன். அப்போது அவர் பெந்தாம், மில் முதலியோர் சட்ட நிர்மாணம், பொருளாதாரத் தத்துவம் ஆகியவைகளைக் குறித்து எழுதிய அருமையான நூல்களை அதிக ஆவலுடனும் சிரத்தையுடனும் படித்துக் கொண்டிருந்தார்''*

ஆசிரியர் ஹனுமந்த ராவ் வார்த்தைகளை அளவிட்டு உபயோகிப்பவர். அவர் ஆங்கிலத்தில் எழுதியதை அப்படியே மொழி பெயர்த்தால் அந்தப் புத்தகங்களை ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் "விழுங்கிக் கொண்டிருந்தார்" என்றுதான் எழுதவேண்டும். இதிலிருந்து அந்தப் புத்தகங்களைப் படித்து முடிக்கவேண்டும் என்ற ஆவலும் காலதாமதமின்றி அவ்விதம் பண்ணவேண்டும் என்ற ஆர்வமும் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு ஒருங்கே சேர்ந்திருந்தது புலப்படும். இவருக்குப் புத்தகப் படிப்பில் இருந்த ருசி பசிக்கும் சமமானதோ என்று நினைக்கும்படி ஹனுமந்தராவின் வாக்கியம் அமைந்திருப்பது குறிப்புக்குரியது.

இவரது வாழ்க்கையில் ஒரு முக்கிய சம்பவம் இப்போது நிகழ்ந்தது. லோகல் பண்டு நிர்வாக இலாகாவுக்கு இவர் உயர்த்தப்பட்ட சமயத்தில் இவரது தகப்பனார் சேஷையங்கார் காலமானார். கபிஸ்தலத்திற்குப் போய் மூன்று வருஷங்கள் முழுசாகப் பூர்த்தியாவதற்குள் அவருடைய சேவை வேறு ஒரு இடத்தில் வேண்டப்பட்டது. சீர்காழியில் பிரபல மிராசுதாரான சின்னையா முதலியார் காலமாகிவிட்டபடியால் அந்தச் சொத்துக்கு மானேஜராக சேஷையங்காரையே 'கோர்ட் ஆப் வார்ட்ஸ்' நியமித்தனர். 1876-ம் வருஷம் பிப்ரவரி மாதாரம்பத்தில் அவர் மரணம் எதிர்பாராதபடி நேர்ந்தது. இன்னும் சில

* கும்பகோணம் காலேஜ் ஜர்னல் (ஜூலை 1916) பி. ஹனுமந்த ராவ்

நாட்களில் அவருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி நடத்து வதற்கு ஏற்பாடாயிருந்தது. அப்போது தந்தையாருடன் இருந்தவர் கடைசிப் பிள்ளை ஸ்ரீ கஸ்தூரி ரங்கையங்கார் தான். மெட்றிகுலேஷன் வகுப்பில் படித்துக்கொண் டிருந்த அவர் விடுமுறைக் காலத்தைத் தம் பிதாவுடன் கழிப்பதற்காகக் கும்பகோணத்திலிருந்து சீர்காழிக்குச் சென்றிருந்தார். தகப்பனார் தேகவியோகமான தினத் தன்று இரண்டாம் குமாரரான ஸௌந்திரராஜ ஐயங்காரின் பி. ஏ. பரீட்சை சென்னையில் தொடங்கியது. சீர்காழியி லிருந்து இந்தச் செய்தியை அறிவித்து தந்தி வந்தது. உடனே அவர் மற்ற நாட்களில் பரீட்சைக்கு ஆஜரா காமல் அங்கு கிளம்புவது அவசியமாகிவிட்டது. பிதா வின் அந்திமக் கிரியைகளைச் சாஸ்திரோக்தமான முறை யில் செய்து முடிக்க ஸ்ரீநிவாஸராகவையங்கார் சீர்காழிக் குச் செல்லத் தீர்மானித்தார். தந்தி கிடைத்தவுடனேயே புறப்பட்டுப்போகவும் முயற்சித்தார். புதிய உத்தி யோகம் வந்து ஒருவார காலம்கூட ஆகவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் இவருக்கேற்பட்ட பிரிவு இவரை மிகவும் வாட்டியது. சரம கைங்கரியங்களை நடத்துவதற்காக 15 நாட்கள் ரஜாவேண்டும் என்று எழுதினார். லீவ் கொடுக்கப்படமாட்டாது என்று மேலதிகாரி உடனே அறிவித்துவிட்டார். இதைக் கண்டதும் இவரது மனம் பெரிதும் குழம்பியது. ஊருக்குப்போய் காரியத்தை முடிப் பதா ? உத்தியோகத்தை உதறித் தள்ளிவிடுவதா ? பிதாவுக் குப் புத்திரன் செய்யவேண்டிய கடமையைச் செலுத்தத் தவறிவிட்டால் அப்புறம் வாழ்ந்து என்ன பயன் ? அவ ருக்குத் தாம் ஆற்றவேண்டிய அரும்பணிகளுள் அந்திம ஸம்ஸ்காரமும் ஒன்றல்லவா ? பார்ப்பவர்கள் பரிகசிக்க மாட்டார்களா ?—இந்தக் கேள்விகளெல்லாம் இவர் மன சில் கிளம்பின. ஹிந்துக்களுடைய பழக்க வழக்கங்களை அறியாதவர் கீழ் ஊழியம் புரிவது வாழ்விலோர் ஊழ்வினை யின் விளைவுதான் என்றும் உள்ளம் வேதாந்தம் பேச வாரம்பித்து விட்டது. கடைசி வரை முயற்சியை நழுவ விட இவர் விரும்பவில்லை. தாங்க முடியாத துக்கம் ஒரு புறம்! மற்றொரு புறம் ரஜா மறுக்கப்பட்டதால் ஏற் பட்ட மனவேதனை! மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டே இவர் சிரஸ்தேதார் செஞ்சல் ராவை அண்டினார். அன்

புள்ளவரிடம் போனுல் சிறிது ஆறுதல் கிடைக்கு மன்றோ? அவரிடம் நடந்த விஷயங்களை எடுத்துரைத் தார். பிறகு தம் தகப்பனுரின் நண்பரான டி. முத்துஸ் வாமி ஐயரிடமும் சென்று நிலைமையை விவரித்தார். அப் போது முத்துஸ்வாமி ஐயர் மாகாண மாஜிஸ்திரேட்டாக இருந்தார். இருவருக்கும் உடனே இவர் விஷயத்தில் சிரத்தைப் பிறந்தது. சர்க்காரில் இருவரும் செல்வாக்கு மிகுந்தவர்கள். ஆகவே அதிகாரியைப் பார்த்து இதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்வதாக இருவரும் வாக்களித்தனர். அவருடைய மனம் மாறும் முறையில் முறையிட்டனர். ஹிந்துக்களின் ஆசார தர்மங்களை அதிகாரிகள் தக்க சமயத்தில் மதித்து நடக்கவேண்டும் என்பதையும் தெளி வாகக் காட்டினர். தந்தைக்குத் தனயன் கடமையைச் செய்யத் தவறினுல் அதைக் காட்டிலும் தாழ்வு கிடை யாது என்பதையும் சம்பிரதாயத்திலிருந்து சிதறிப் போவ தால் விளையும் சங்கடத்தையும் அவரிடம் எடுத்துரைத் தனர். எதிர்பார்த்த பலன் வாய்த்தது. ஸ்ரீநிவாஸராக வையங்காருக்கு ரஜா அளிக்கப்பட்டது. முதலில் சீர் காழிக்கும் பிறகு கும்பகோணத்திற்கும் சென்று காரி யத்தை முடித்துக்கொண்டு இவர் திரும்பினுர்.

தலைமைக் குமாஸ்தாவாக இருக்கையில் இவருடைய சம்பளம் 250 ரூபாயாக உயர்ந்தது. 1878-ம் வருஷ மார்ச் மாதம் இவர் இந்த ஸ்தானத்தில் காயமாக்கப்பட் டார். இதற்கிடையில் தென்னுட்டில் மறக்க முடியாத நிகழ்ச்சி. தாது வருஷத்திய பெரிய பஞ்சம் பீடித்தது.

பம்பாய், மைசூர் முதலிய பிரதேசங்களுக்கு பஞ்சக் கொடுமை பரவியது. இங்கெல்லாம் மக்கள் பட்ட கஷ்டங்களுக்கும் அவர்கள் அனுபவித்த துயரத்திற்கும் எல்லையே இல்லை என்று சொல்வர். பருவ மழை தவறிவிட்டது; பயிர்ப் பூண்டுகள் யாவும் நாசமாய் விட்டன; சாப்பாட்டுக்கு அரிசி கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. நாடு முழுவதும் சோகக் காட்சியே தென்பட்டது. எங்கு பார்த்தாலும் மெலிந்த உடல்கள்; குழிவிழுந்த மார்புகள்; சதையுடன் ஒட்டிக் கொண்டிருந்த எலும்புத் துண்டுகள். விவசாயம் க்ஷீணித்துப் போய்விட்டது. வருமானத்திற்கும் வழி இல்லை. ஏழைத் தொழிலாளர்கள் சிரமப்பட்டனர்.

இந்தப் பஞ்சத்தைப்பற்றி ஸ்ரீநிவாஸராகவையங்கார் பின்கண்டபடி எழுதி வைத்திருக்கிறார்:—

"1860-ம் வருஷத்திற்குப் பிந்திய பத்து வருஷ காலத்தில் செலாவணிப் பெருக்கத்தினால் உயர்ந்திருந்த விலைவாசி திடீரென்று எதிர்பாராதபடி மிகக் குறைந்து விட்டதாலும் புதிய வரிகள் போடப்பட்டதாலும் சட்டசபைகளில் அடுத்தடுத்து பல சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டதாலும் ஏற்பட்ட நிலைமையை மக்கள் சமாளித்துக் கொள்ளுமுன்பு 1876—78-ம் வருஷத்தியப் பஞ்சம் நாட்டைப் பிடித்தது. இதற்கு முந்திய நூற்றாண்டில் இதைவிடக் கொடுமை வாய்ந்ததும் இதற்குமேல் அதிக காலம் நீடித்திருந்ததும் பல இடங்களிலும் வியாபித்திருந்ததுமான பஞ்சம் இருந்ததாகக் குறிப்பிட முடியாது. மூன்று வருஷங்கள் தொடர்ச்சியாகப் பருவ மழை தவறி விட்டதே, 200,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் இருந்த 300 லக்ஷம் மக்கள் மஹத்தான கஷ்டத்திற்குட்பட வேண்டியதற்குக் காரணமாகியது. விவசாயத்தையே அடிப்படை

யாகக் கொண்ட எந்த நாடும் இவ்வளவு பெரிய விபரீதத்தைத் தாங்கி நிற்பது கஷ்டம். சென்னை மாகாணத்தில் மட்டும் 74000 சதுர மைல் பிரதேசம் பாதிக்கப் பட்டது. 160 லக்ஷம்பேர் பரிதவித்தனர். சர்க்கார் பெருவாரியான அளவில் உதவ முன்வந்தது. பிரதி தினமும் 75000 நபர்கள் வீதம் 22 மாதங்களுக்குக் கஷ்ட நிவாரணம் அளிக்கப்பட்டது; வரிவஜா உட்பட பஞ்சத்தின் செலவு 80 லக்ஷம் பவுன்களாயின; ஆயினும் மொத்த ஜனத்தொகையில் 40 லக்ஷம் பேர் மரித்தனர். பீடிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள விவசாயிகளும் மாகாணத்தின் இதர பாகங்களில் நிலச் சொத்து இல்லாத மக்களும் முன்னேற்றமடைவது இதனால் பாதிக்கப்பட்டது.*

1876-ம் வருஷத்தில் காலா காலத்தில் பெய்ய வேண்டிய மழை விவசாயிகளை ஏமாற்றிவிட்டது. பயிர் சாவியாகப் போயிற்று. ஆகவே உணவுப் பொருள் கிடைப்பது துர்லபமாகியது. இந்த நிலையில் திடீரென சாமான் விலை அதிகரித்தது. பெரிய பஞ்சம் சம்பவிக்கப் போவதற்கு இதையே அறிகுறியாகக் கருதுவர். ஆனால் சில வருஷங்களாக விலை வாசிகள் அபரிமிதமாக ஏறியிருந்தபடியால் இந்த வருஷமும் அத்தகைய நிலைமை ஏற்படுவது சகஜம் என்று எல்லோரும் கருதினர். சில மாதங்களுக்குப் பிறகு நவம்பரில் பருவ மழை அடியோடு தவறிப்போன பின்புதான் விவசாயிகள் விழித்துக் கொண்டனர். அதற்கப்புறம் தான் நாட்டிற்கு ஏற்படவிருக்கும் பெரிய ஆபத்தை அவர்கள் உணர்ந்தனர். கஷ்டத்திலிருந்து மீளுவது மிக்க சிரமம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தது. நாட்டிலுள்ள உணவுப் பொருளின் அளவை நிர்ணயிப்பதும் அசாத்தியமாக இருந்தது. ஆதலால் அக்கம் பக்கத்திலுள்ள பிரதேசத்திலிருந்து எவ்வளவு வரவழைக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய இயலவில்லை.

பக்கிங்ஹாம் கோமகன் கவர்னராக இருந்தார். அவருடைய நிர்வாக சபையில் அனுபவம் மிகுந்த ஸர் வில்லியம்

*'நாற்பது வருஷத்திய முற்போக்கு' (1893), பக்கம் 42, 43

ராபின்ஸனும் ஆர். எஸ். எல்லிஸனும் அங்கத்தினர்களாக இருந்தனர். ஜார்ஜ் தார்ன்ஹில், கனம் டேவிட் அர்பத்நெட் ஆகியோர் ரெவினியூ போர்டில் ஸ்தானம் வகித்தனர்.

நீலகிரியில் கோடையைக் கழித்த எல்லிஸ் 1876-ம் வருஷம் அக்டோபர் மாதக் கடைசியில் சென்னைக்குத் திரும்பினார். வரும் வழியில் கூனூரில் மழை பெய்தது. "அப்பாடா, பருவ மழை நல்ல வேளையாய்த் தவறவில்லை" என்றார் எல்லிஸ். உடனே பக்கத்திலிருந்தவர் 'பருவ மழை இல்லை இது. தாங்கள் நினைப்பது தவறு' என்று பதில் அளித்தார். "பருவமழை இல்லை என்று சொல்கிறீர்கள் ?" இது தான் பருவ மழை. இது பருவ மழையாக இராவிட்டால் நாட்டில் பஞ்சத்தைத் தவிர வேறு வழியில்லை" என்றார் எல்லிஸ். மறுநாள் மலையிலிருந்து கீழே பீடபூமிக்கு வந்ததும் அந்த மழை மற்றவிடங்களில் பெய்யவில்லை என்பது தெரிந்தது. மழையின்மையால் நாட்டுப் புறமெல்லாம் வாடி வதங்கியிருப்பது தென்பட்டது. சென்னை மாகாணத்தை ஒரு பெரிய பஞ்சம் பற்றிக் கொண்டது. ஆனால் இதை சர்க்கார் அப்போதோ அல்லது அதற்குப் பின்பு சிறிது காலம் வரையிலோ உணரவில்லை.*

ஆனால் இவ்வருஷாரம்பத்திலேயே இந்திய சர்க்காருக்கு மட்டும் கவலை ஏற்பட்டது. ஜனவரி மாதம் 20-ம் தேதி யன்று பயிர்நிலை பற்றி சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்கு அனுப்பிய தந்திக்கு அங்கிருந்து பதில் வந்தது. அதில் நிலைமை திடீரென மாறுபட்டிருப்பது புலப்படுவதாயும் வரிவஜா, பாதிக்கப்பட்ட பிரதேசம் மற்றும் இதர முக்கிய விஷயங்களைக் குறித்து விவரமாகக் கடிதம் எழுதும்படியும் கோரப்பட்டது. சென்னை சர்க்கார் இதற்கப்புறம் பல தகவல்களை அறிவித்தனர். திரும்பவும் பிப்ரவரி மாதம் 5-ம் தேதியன்று பல ஜில்லாக்களில் காணப்படும் ஸ்திதியைக் குறித்தும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறித்தும் சுருக்கமாக அறிக்கை அனுப்பும்

*டிக்பி—தென்னிந்தியாவில் பஞ்ச வேலை (1876-78) முதல் வால்யூம்: பக்கம் 12.

படி இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டனர். ஆகையால் பல ஜில்லாக்களிலிருந்து உண்மையான தகவல்களைச் சேகரித்து அவற்றைத் தொகுக்கும் சிரமமான பொறுப்பு ரெவினியூ போர்டாபீஸிற்கு ஏற்பட்டது. காலதாமதமின்றி அவற்றை ராஜப்பிரதிநிதிக்கு அனுப்ப வேண்டியிருந்தது. ரெவினியூ போர்டில் அங்கத்தினராக இருந்த கனம் அர்பத்நெட் இந்தப் பொறுப்பைத் தாமே மேற்கொண்டார். இது விஷயத்தில் தமக்கு உதவி புரியும்படி ஸ்ரீநிவாஸராகவையங்காரைக் கேட்டுக் கொண்டார். இருவரும் இந்த முக்கிய வேலையில் முனைந்தனர். ஐந்துமாத காலம் அலுவல் நீடித்திருந்தது. அர்பத்நெட் சில ஜில்லாக்களிலிருந்து வந்த ரிப்போர்ட்டுகளை சங்கிரஹம் செய்வார். மற்றும் இதர பிரதேசத்திலிருந்து வருபவற்றைச் சுருக்கும் உத்தியோகம் இவருக்கு விடப்பட்டது. ஜூலை மாதாரம்பத்தில் இந்தியா சர்க்கார் கோரியபடி அறிக்கை அனுப்பப்பட்டது. இந்த அறிக்கையில் மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றி தெரிவிக்கப்பட்டது குறிப்புக்குரியதாகும். "கால நிலைபற்றி ஜோசியம் கூறமுடியாது. இந்த வருஷமும் முன் போல் இருந்தால் அதனால் பஞ்சமேற்படக் கூடுமாகையால் அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ஏழைகளுக்கு வேலை கொடுக்க வேண்டிய அவசியம் நேர்ந்தால் அதற்கான நிவாரணத் திட்டங்களை மேற்கொள்ளவும் ஏற்பாடாகியிருக்கிறது.

இதற்கப்புறம் நவம்பர் மாதம் 5-ம் தேதி கனம் அர்பத்நெட் சில ஜில்லாக்களுக்குப் போய் நேரில் நிலைமையைப் பார்க்கக் கிளம்பினார். இதைப் பற்றியும் இந்தியா சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டபோது செலவு மிதம் மிஞ்சிப் போகும் என்பதும் தெரிவிக்கப்பட்டது. டேவிட் அர்பத்நெட் இந்தச் சமயத்திலும் ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் தமக்கிருந்த ப்ரீதியையும் அவரது திறமையில் தாம் கொண்டிருந்த நம்பிக்கையையும் வெளிப் படுத்தினார். தம்முடன் இவரையும் அவர் அழைத்துச் சென்றார். மேலதிகாரியுடன் இவரும் கர்நூல், கடப்பை, பெல்லாரி ஜில்லாக்களுக்குப் போய்விட்டு வந்தார். போர்டில் முதல் மெம்பரான ஜார்ஜ் தார்ன்ஹில் வேறு சில ஜில்லாக்களைப்

பார்வையிட்டார். போகும் வழியெல்லாம் இவர்கள் கண்ட காட்சி பரிதாபகரமாக இருந்தது. பயிரிடுவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் யாவும் பலிக்கவில்லை என்பதை இவர்கள் பார்த்தனர். எல்லாம் உலர்ந்து கிடந்தன.

பெரிய பஞ்சத்துடன் போராட வேண்டியதை பக்கிங்ஹாம் பிரபு உணர்ந்தார். இதற்காகப் பிரத்தியேக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவர் பொறுப்பாகி விட்டது. டிசம்பர் மாதம் ஒரு தனி இலாகா நிறுவப்பட்டது. தென் ஆற்காடு கலக்டர் கார்ஸ்டின் என்பவர் அதற்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். சுலபமாகச் சென்னைக்கு வரக்கூடிய கலக்டர்களை அழைத்து சர்க்கார் மகாநாடு நடந்தது. நிவாரணத்திற்காக மேற்கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும் அவர்கள் கூடிப் பேசினர். பொதுவான திட்டம் உருவாக்கப்பட்டது. சர்க்கார் முழுமனசுடன் முன் வந்தனர். தேகதிடமுள்ளவர்களுக்கு வேலை கொடுத்து ஊதியம் அளிக்கத் தீர்மானிக்கப் பட்டது. வயது முதிர்ந்தவர்களுக்கும் அசக்தர்களுக்கும் நோயாளிகளுக்கும் சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் உணவளிக்கவும் ஆங்காங்கு முகாம்கள் அமைக்கப்பட்டன. வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்குப் பண உதவி கொடுக்கப் பட்டது. பக்கிங்ஹாம் பிரபுவுக்கு எதிர்ப்பு அதிகம் தலை காட்டியது. இந்திய சர்க்கார் அவருடைய அதிகாரத்தில் குறுக்கிட முயன்றனர். 1877-ம் வருஷாரம்பத்தில் அவர் டில்லி தர்பாருக்குச் சென்றபோது ஸர் ரிச்சர்ட் டெம்பிளை சென்னையிலும் மைசூரிலும் பஞ்சகால ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு அனுப்ப ராஜப் பிரதிநிதி நிர்வாக சபையார் முடிவு செய்தனர். பக்கிங்ஹாம் பிரபு முதலில் இதற்குச் சம்மதித்தார். பிறகு அவர் தம் அதிகாரத்தைப் பறிக்கவே இவ்விதம் உத்தேசிக்கப்பட்டது என்பதை அறிந்து இதை ஆட்சேபித்தார். இந்திய சர்க்கார் மட்டும் தங்கள் பிடிவாதத்தைக் கைவிடவில்லை. ஸர் ரிச்சர்ட் டெம்பிள் அவசரம் அவசரமாகச் சென்னைக்கு வந்தார். பக்கிங்ஹாம் பிரபு திரும்பி வருவதற்கு முன்பே அவர் பல முக்கிய ஜில்லாக்களுக்குச் சென்றுவிட்டு வந்தார். இந்திய சர்க்கார் விருப்பப்படி சென்னை சர்க்காரின்

செலவைக் கட்டுப்படுத்தி பணத்தை மீதப் படுத்தும் அலுவலில் ஸர் ரிச்சர்ட் தீவிரமாய் ஈடுபட்டார்.

கடப்பையிலிருந்து ஸர் ரிச்சர்ட் டெம்பிள் ஜனவரி மாதம் 19-ம் தேதி சென்னை சர்க்காருக்கு அடியிற் கண்டபடி எழுதினர்:—

"இப்போது பெரிய ஆள் ஒருவனுக்கு தினக் கூலி 2 அணு கொடுக்கப் படுகிறது. ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் கிடைப்பது இதைவிடக் குறைவு. வேலை செய்யும் நபர் ஒருவர் தமக்குத் தேவையான ஒன்றரைப் பவுண்ட் தான்யத்தை இந்தக் காசைக் கொண்டு வாங்க முடியும் என்பதே இதற்குக் காரணம். தினமும் ஒரு பவுண்ட் தானியம் உயிர் வாழ்வதற்குப் போதாதா. இதைக் காட்டிலும் வேறு என்ன வழியை சர்க்கார் செய்ய முடியும் என்ற பிரச்னைகள் கிளம்பக் கூடும். இது அவரவர் அபப்பிராயத்தையே தழுவியிருக்கிறது. உயிருடன் இருப்பதற்கு ஒரு பவுண்ட் தானியம் போதுமென்பது என் கருத்து. இதைப் பரீட்சைப் பார்க்கவேண்டும்."

இதற்கப்புறம் 22-ம் தேதி திரும்பவும் அவர் சென்னை மாகாணத்தில் 12 லக்ஷம் பேர் சர்க்காரால் போஷிக்கப்படுவதாயும் இதற்காக மாதச் செலவு 30 லக்ஷம் ரூபா என்றும் கூலி விகிதம் இரண்டணுவிலிருந்து ஒன்றரை அணுவாகக் குறைக்கப்பட்டால் மாதம் ஏழரை லக்ஷம் ரூபா மீதப் படுத்த முடியுமென்றும் தெரிவித்தார்.

ஸர் ரிச்சர்ட் வந்த பின்பு சென்னை சர்க்கார் ஜில்லா அதிகாரிகளுக்காக விடுத்த உத்திரவில் பஞ்சக் கொடுமை தலை காட்ட ஆரம்பித்தது முதற் கொண்டே சர்க்கார் தங்கள் அதிகாரிகள் மூலமாகவும் ரெவினியூ போர்ட் வழியாகவும் மக்களுக்கு உதவி அளிக்க முன் வந்திருப்பதாகவும் இனியும் உத்தியோகஸ்தர்கள் அநாவசியமாய்ச் செலவு அதிகரிப்பதைத் தடுக்கவேண்டுமெனவும் வற்புறுத்தப் பட்டது.* சர்க்கார் உதவியிராவிட்டால் உயிர் இழக்கக் கூடும் என்ற நிலையில் இருப்பவர்களுக்கே அது அளிக்கப்

* 31-1-1877ம் தேதியிட்ட உத்திரவு

பட வேண்டும் எனவும் இப்போது செலவாகும் தொகை அற்ப சொற்பமல்ல என்றும் சிக்கனத்தை அனுஷ்டிப்பது அதி அவசியம் எனவும் பிரதம காரியதரிசி வில்லியம் ஹடில்ஸ்டன் அதில் தெரிவித்திருந்தார்.

ஆனால் சென்னை சர்க்காரின் சுகாதார அதிகாரியான ஸர்ஜன் மேஜர் கார்னிஷ் இந்தத் திட்டத்தைக் கண்டித்தார். ஊதியத்தைக் குறைத்தால் உயிர் வாழும் சக்தி இராது என்று அவர் முறையிட்டார். ஒரு பவுண்ட் தானியமும் அரையணவும் வழங்குவது நியாயமாகாது என்று அவர் குறிப்பிட்டார்.*

> "வேலை செய்வதற்குப் போதிய சக்தியுள்ளவர்களுக்கு அடுத்த இரண்டு மாத காலம் சோதனையாக இருக்கும். தங்கள் போஷணைக்கு வழிகாட்டக் கூடிய வேலைகளைச் செய்யக்கூடியவர்களுக்கு ஆதரவு அளிப்பது முக்கியமென்று நான் கருதுகிறேன். ஆகவே மக்கள் திரும்பவும் விவசாயத் தொழிலை நடத்துவதற்கான நிலைமை தலைகாட்டும் வரையில் நாம் தாராள புத்தியுடன் நடந்துகொண்டு அது விஷயத்தில் தவறிப்போவதால் பாதகமில்லை'' என்று அவர் மே மாதம் 8-ம் தேதி மீண்டும் எழுதினர்.

இதற்கப்புறம் மே மாதம் 22-ம் தேதி ஸர் ரிச்சர்ட் டெம்பிளின் சிபாரிசுகளை அலக்ஷியம் செய்ய சென்னை சர்க்கார் தீர்மானித்தனர். ஞாயிற்றுக்கிழமை யன்றும் ஊதியம் கொடுக்க முடிவு செய்தனர். ஆனல் அன்று வேலை வாங்கக்கூடாது என்றும் அறிவித்தனர். ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் தினமும் காலணு வீதம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. மூன்று நாட்களுக்கொரு முறைதான் பணத்தைப் பட்டுவாடா செய்வது என்ற வழக்கத்தையும் கைவிடவேண்டும் என்று நிர்ப்பந்தித்தனர். இந்திய சர்க்கார் இந்த முடிவை மனமார வரவேற்கவில்லை. குறைந்த ஊதியத்தை வாங்கிக் கொண்டு வேலை செய்தவர்கள் எண்ணிக்கை, ஜனவரி மாத முடிவிலிருந்து மே மாத இறுதிவரை பிரதிவாரமும் எல்லா தாலூகாக்களிலும் வழங்கப்பட்ட ஊதியத்தைப்

---

* சென்னை சர்க்காருக்கு எழுதிய கடிதம் 13-2-1877

பற்றிய புள்ளி விவரம் ஆகியவற்றை அறிவித்தால் இனி யும் எவ்வளவு செலவழிக்கவேண்டும் என்பதை நிர்ணயிக் கவும் மற்றும் இதர பிரச்னைகளைத் தீர்க்கவும் உதவும் என்று ஜூன் மாதக் கோடியில் அவர்கள் எழுதினர். பதில் அனுப்புவதாகக் கூறிவிட்டு மாகாண சர்க்கார் சும்மா இருந்துவிட்டனர்.

ஆரம்பத்திலிருந்தே ஸர் ரிச்சர்டுக்கும் சென்னை அதி காரிகளுக்கும் தகராறு தான் இருந்தது. ஸர் ரிச்சர்ட் டெம்பிளின் யோசனைகளைப் பின்பற்ற மாகாணத் தலைவர் விரும்பவில்லை. அவ்விதம் செய்தால் நிலைமை மகாமோச மாகிவிடும் என்றே அவர் தீர்மானித்தார். ஜனங்களின் சிரமத்தை யகற்ற எவ்வளவு செலவழித்தாலும் குறை காணக் கூடாது என்பதே அவர் சித்தாந்தம். இந்திய சர்க்காருக்கு ஸர் ரிச்சர்ட் அனுப்பிய அறிக்கைகளும் சென்னை சர்க்கார் அனுப்பிய தகவல்களும் அதிகம் முரண் பட்டிருந்தன. ஆகவே ராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபை யினர் சென்னை சர்க்காரின் நடவடிக்கைகளை வெகுவாகக் கண்டித்தெல்லாம் எழுதினர். ஸர் ரிச்சர்டின் கூற்றுகளை ஆதாரமாகக் கொண்டு மாகாண அதிகாரிகளிடம் அவர் கள் அவநம்பிக்கை காட்டினர். "நிலைமை மிகைப்படுத் தப்பட்டிருக்கிறது", "அநாவசியமான கஷ்ட நிவாரண ஏற்பாடுகள்" என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டனர். இந்திய சர்க்காருக்கெதிராக எங்கு பார்த்தாலும் ஆத்திரம் அதிகரித்தது. ஒரு நாள், மதராஸ் மெயில் இதைப்பற்றி எழுதுகையில் இந்திய சர்க்காரின் நடவடிக்கையை ஆட் சேபித்து ஆர்ப்பாட்டம் செய்யக்கூடாதா என்றும் வின வியது. ராஜப்பிரதிநிதியான லிட்டன் பிரபு சென்னையில் வந்து ஒரு மாதகாலம் தங்கியிருந்தால் அவருக்கு தெளிவு ஏற்படும் என்றும் விஷயமறியாமல் உத்திரவிடுவதை எதிர்க்க வழிதேடவேண்டும் என்றும் மதராஸ் டைம்ஸ் எழுதியது. ஒரு புறம் மக்கள் தவித்துக்கொண்டிருக்கை யில் அவர்கள் கஷ்ட நிவாரணத்திற்காக இந்திய சர்க்கா ருடன் மாகாண சர்க்கார் உண்மையிலேயே யுத்தம் நடத்த வேண்டி யிருந்தது. 1877-ம் வருஷம் செப்டம்பர் மாதம் சர்க்கார் 21 லக்ஷம் பேர்களைப் போஷித்தனர். ரயில் களிலும் கப்பல்களிலும் சர்க்காரின் முயற்சி காரணமாக

உணவுப் பொருள் வந்திருந்திராவிட்டால் 50 லக்ஷம் பேர் உயிரிழக்கவேண்டி யிருந்திருக்கும். பொருள் கிடைத்தால்தானே பணம் வைத்துக் கொள்வதற்குப் பிரயோசனம் உண்டு? 1876-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் மறு வருஷம் ஏப்ரல் மாதம்வரை தேக திடமுள்ளவர்களுக்கு பொது மராமத்து இலாகா வேலை கொடுத்தது. ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மழை பலமாகப் பெய்தது. அநேகர் பயிரிட்டுப் பார்த்தனர். இவ்வருஷமும் பருவமழை தவறிவிட்டதால் பயிர்கள் யாவும் செத்துப் போய்விட்டன. மறுபடியும் சர்க்காரின் உதவியையே நாடவேண்டியதாயிற்று. கையிருப்பு பூராவும் செலவாகி விட்டது. இது தவிர வாங்கிய கடனிலிருந்து பிரதி மாதமும் 50 லக்ஷம் ரூபாய் கரைந்துகொண்டிருந்தது. நாட்டில் கொடுமை கடுமையாகியது. கூரையைப் பிய்த்துத் தின்றனர் பலர். பட்டினிக் கிடந்து செத்தனர் அநேகர். ஆடுமாடுகள் ஏராளமாய்ப் பலியாயின. தங்கள் வீடு வாசல்களைத் துறந்துவிட்டு வேலை செய்து வயிற்றை வளர்க்கக் கிளம்பியவர் மற்றும் பலர். புளியங்கொட்டைகளையும் மூங்கில் முனைகளையும் தின்றும் உயிர் வாழ்ந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் ராஜப்பிரதிநிதி மாகாணத்திற்கு விஜயம் செய்தார். அவர் வந்ததும் ஆகஸ்டு மாதத்தில் மழை பெய்தது. மழை பெய்தால் மட்டும் என்ன? உடனே கஷ்டம் எப்படி மறையும்? கூரையற்ற குடிசைகளுக்கும் தூணில்லாத வீடுகளுக்கும் திரும்பினால் மட்டும் சாப்பாடு கிடைத்து விடுமா? உடுக்க உடுப்பு வேண்டாமா? சீர்படுத்திக் கொள்வதற்கு வசதிகளைச் செய்து தருவது அவசியம் அல்லவா?—இவ்விதம் அதிகாரிகள் யோசனை செய்தனர். இதற்குத் தேவையான பணத்திற்கு எங்கு போவது?

லிட்டன் சர்க்கார் கண்மூடித்தனமாய் சிக்கனத்தில் கவனம் செலுத்தி வந்ததால் வெளியாரிடமிருந்து திரவிய சகாயத்தை எதிர்பார்க்கவேண்டியதாயிற்று. 1877-ம் வருஷம் ஜூன் மாதம் மணியகார் சத்திரத்தின் நிர்வாகிகள் இது விஷயமாக கலந்தாலோசித்தனர். துரைத்தனத்தாரின் சகாயத்தை அபேக்ஷியாமல் தாங்களே தங்கள் கஷ்ட நிவாரணத்திற்கு வழி தேடிக்கொள்ள வேண்டும்

என்று மக்கள் உணர்ந்தனர். சென்னை நகரசபைக் கூட்டமும் இந்தக் காரணத்தை உத்தேசித்து நடந்தது. அதில் கலந்துகொண்ட கனம் வி. ராமையங்கார் பின் கண்டபடி தெரிவித்தார்.

> "ஒவ்வொரு பிரஜையும் ஏழை உறவினர்களுக்கு ஸ்தலத்திலாவது உதவி செய்வது கடமையாகும். சர்க்கார் சாத்தியமான அளவுக்குச் செலவு செய்திருக்கின்றனர். நிலவரி வசூலும் நின்றுவிட்டது. ஆதலால் புதிய வரிகளை விதிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தன் செலவைக் குறைத்துக்கொண்டு தன்னைச் சேர்ந்த ஏழைக்கு ஆதரவளிப்பது புனிதமான பொறுப்பாகும்."

வெகு நேரம் விவாதம் நடந்தது. இரவு எட்டு மணிக்கப்புறம் கலைந்தது. இதற்கப்புறம் பெரிய பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பல கமிட்டிகள் அமைக்கப்பட்டன. கஷ்ட நிவாரண ஏற்பாடுகளை நேரில் பார்வையிட சில பிரமுகர்கள் சம்மதித்தனர். உண்மை நிலையை பிரிட்டிஷாருக்கு எடுத்துக் காட்டவும் முடிவு செய்யப்பட்டது. ஸர் வில்லியம் ராபின்ஸனைத் தலைவராகவும் மதராஸ் டைம்ஸ் ஆசிரியரான வில்லியம் டிக்பியைக் காரியதரிசியாகவும் கொண்ட கமிட்டி இது விஷயமாக ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஸ்தாபிதமாகியது. லண்டனில் லார்ட் மேயர் ஒரு நிதி திரட்ட வாரம்பித்தார். இங்கிலாந்திலுள்ள பல பிரமுகர்கள் நன்கொடை அளித்தனர். 87 லக்ஷம் ரூபா வசூலாகியது.

இந்த நிதியைத் தகுதியான விதத்தில் விநியோகிப்பதற்காக மாகாணம் முழுதிலும் சுமார் 120 கமிட்டிகள் முளைத்தன. பொதுஜனப் பிரதிநிதிகள் அடங்கிய இக்கமிட்டிகளுடன் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் அவசியமேற்பட்டால் ஒத்துழைக்க வேண்டும் எனவும் உத்திரவிடப்பட்டது. கமிட்டிகள் யாவும் மும்முரமாக வேலை செய்தன. தொழில் புரிவதைத் தாழ்வாகக் கருதியவர்களும் முகாம்களுக்குப் போய் சாப்பிடுவதைத் தோஷமாக எண்ணியவர்களும் இந்த உதவியை மிகப் பெரிதாகப் பாவித்ததாக ஏ. சேஷையா சாஸ்திரியரர் தெரிவித்தார்.

தாகத்திஞல் தவித்துக் கொண்டிருப்பவருக்கு இனிய பானம் கிடைத்தால் எப்படி இருக்குமோ அவ்விதம் இது இருந்ததாகவும் தக்க காலத்தில் கிடைத்த இந்த சகாயத்தி ஞல் அவர்களுக்குப் பல செளகரியங்கள் ஏற்பட்டதாயும் அப்பெரியார் கூறிஞர்.* திருவாங்கூர் திவான் பதவியிலி ருந்து விலகி வந்ததும் சேஷையா சாஸ்திரியார் திருச்சியில் நிறுவப்பட்ட கஷ்ட நிவாரணக் கமிட்டியின் உபதலைவ ராகப் பொறுப்பை யேற்ருர். பல தாலூகாக்களுக்குப் போய்ப் பார்த்தவர் அவர். பரிதவிப்பைக் கண்டு அவ்வப் போது சர்க்காருக்கு அவர் அறிவித்து வந்தார்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி பஞ்சம் உச்ச நிலையை எட்டியபோது ராஜப்பிரதிநிதி மாகாணத்திற்கு விஜயம் செய்து கவர்னருடன் சம்பாஷித்தார். பஞ்ச நிர்வாகம் ஒருவரிடமே விடப்பட்டு அநாவசியமாக இதர அதிகாரி களை அவர் ஆலோசித்து காலத்தைக் கடத்துவது தடுக்கப் பட வேண்டும் என்றும் லிட்டன் பிரபு யோசனை கூறி ஞர். பல ஜில்லாக்களுக்குப் போய்ச் சுற்றிப் பார்த்து அவ் வப்போது அவசியமான உத்திரவுகளைப் பிறப்பிக்கும் அதி காரம் உள்ள பஞ்சக் கமிஷனர்கள் சிலர் நியமிக்கப்பட லாம் எனவும் ராஜப்பிரதிநிதி சிபாரிசு செய்தார். பிந்தியதை பக்கிங்ஹாம் பிரபுவின் சர்க்கார் ஆமோதிக்கவில்லை. ரெவி னியூ போர்ட் மெம்பர்களின் அதிகாரத்தை மட்டுப்படுத்த மாகாண நிர்வாகிகள் மறுத்தனர். அவர்களே பல இடங் களுக்கும் போய்விட்டு சர்க்காருக்குத் தங்கள் அபிப்பிரா யத்தை அறிவிக்க வேண்டும் என்றனர் சென்னை அதிகாரி கள். இதற்கப்புறம் பருவ மழை பெய்ய வாரம்பித்து விட்டதால் தவிப்பு தணியவாரம்பித்தது. 1878-ன் ஆரம்ப காலத்திலேயே பஞ்ச நிலைமை மறைந்தது.

பஞ்ச கமிஷனர்களை நியமிக்க சென்னை சர்க்கார் மறுத்ததற்கு ரெவினியூ போர்ட் கடமையில் சிறிதும் பின் வாங்கவில்லை என்பதே காரணமாகும். போர்ட் மெம்பர் கள் அடிக்கடி பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்து வந்த துடன் அவர்கள் தயாரித்த அறிக்கைகளும் வெளியிட்ட

*பி. வி. காமேஸ்வர ஐய்ர் எழுதிய "ஸர் சேஷைய சாஸ்திரியார்," பக்கம் 242, 243

அபிப்பிராயங்களும் மதிப்பு மிகுந்திருந்தன. போர்டா பீஸுக்கு இந்தப் பஞ்ச நாளில் பிரதிதினமும் செய்திகள் ஏராளமாக வந்து குவிந்தன. ஜில்லா அதிகாரிகள் அன்ருடம் அனுப்பிய தந்திகளும் கடிதங்களும் கணக்கில் அடங்கா. நிர்வாக அலுவல்களையும் பஞ்சத்திற்கான ஏற்பாடுகளையும் ஒரே சமயத்தில் அவர்கள் மேற்பார்வையிட இயலவில்லை. பஞ்சம் ஆரம்பித்த சில மாதங்களுக் கெல்லாம் எச். இ. (பிறகு ஸர் ஹென்ரி) ஸ்டோக்ஸ் போர்டா பீஸில் காரியதரிசியானுர். ஜில்லாக்களிலிருந்து தங்கு தடையின்றி வரும் அறிக்கைகளையும் தந்திகளையும் செய்திகளையும் படித்து வாராவாரம் அவற்றின் ஸாரத்தை சர்க்காருக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு வாய்த்தது. அதை ஆதாரமாகக் கொண்டுதான் சர்க்கார் உத்திரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். மாகாணத்தின் நாலு பக்கங்களிலிருந்தும் வரும் தகவல்களைப் படித்துப் பார்ப்பது ஒருவரால் சாத்தியம் அல்ல. ஆரம்பத்தில் சில நாட்கள் ஸ்டோக்ஸ் மிகச் சிரமப்பட்டார். இதைப்பற்றி டேவிட் அர்பத்நெட் கேட்டதும் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கும் இந்த வேலையில் பங்கு தரும்படிச் சொன்னுர். ஸ்டோக்ஸை அழைத்து அவரிடம் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் திறமையை சிலாகித்துப் பேசினுர். அர்பத்நெட் தெரிவித்தபடி ஸ்டோக்ஸ் ஸ்ரீநிவாஸராகவையங்காரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார். ஆந்திர தேசத்திலிருந்து வருபவற்றைத் தாமும் தமிழ் நாட்டிலிருந்து வருபவற்றை ஸ்ரீநிவாஸராகவையங்காரும் பரிசோதித்து அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டும் என ஏற்பாடாகியது. இருவரும் அநேக நாட்களில் ஆபீஸில் அதிக நேரம் தங்குவர். அன்றைய அலுவலை முடிப்பதற்குள் அந்திப் பொழுதும் அகன்றுவிடும். மிக்க ஊக்கத்துடன் உழைத்தனர். புள்ளி விவரங்களைத் தொகுத்து ரஸமற்றச் செய்திகளைப் படிப்பதை எவ்வளவு பேர்தான் விரும்புவர்? எதை எடுத்தாலும் ஒரே அவதிப் பாட்டுத்தான்! ஆயினும் கடமையில் கருத்தூன்றியிருந்ததால் கவனமும் நிலை பெற்றிருந்தது. சேவையில் இருந்த சிரத்தையால் சாரமற்ற விஷயங்களும் சலிக்கவில்லை. இருவரும் தயாரித்தனுப்பிய வாராந்த அறிக்கைகள் விஷயமறிந்தவர்களுக்கு உகப்பாகவே இருந்தன. பஞ்சத்தின் போக்கைப் பற்றி

யும் அதைப் பரிகரிப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு களையும் அவற்றிலிருந்து வெகு சுலபமாகக் கண்டு கொள்ள முடியும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளு வது சாத்தியமாகியது. இதன் பிரதிகள் மாகாணத்தின் எல்லா அதிகாரிகளுக்கும் மற்றும் கமிட்டித் தலைவர்களுக் கும் அனுப்பப்பட்டு வந்தன.

திருச்சி நிவாரணக் கமிட்டியில் ஸ்தானம் வகித்த சேஷைய சாஸ்திரியார் ஒருநாள் திடீரென்று ஸ்டோக் ஸைப் பார்க்க வந்தார். போர்டாபீஸ் அறிக்கைகளைப் படித்துத் தமக்கேற்பட்ட திருப்திக்கும் அவற்றைத் தயா ரிப்பவரிடம் தமக்குள்ள மதிப்புக்கும் அளவே இல்லை என சேஷைய சாஸ்திரியார் தெரிவித்தார். உடனே ஸ்டோக்ஸ் அந்தப் பாராட்டுதல் தமக்கு மட்டுமே உரி தல்ல எனவும் அதில் மற்றொருவருக்குப் பங்கு உண்டு என்றும் கூறி சாஸ்திரியாரை நேராக ஸ்ரீநிவாஸராக வையங்கார் இருந்த இடத்திற்கு அழைத்துவந்து இருவ ரையும் ஒருவருக்கொருவர் அறிமுகமாக்கிவைத்தார். ஸ்ரீநிவாஸராகவையங்காரைப் பார்த்ததும் சேஷைய சாஸ் திரியாருக்கு ஆனந்தம் அதிகரித்தது. உடனே மாஜி திரு வாங்கூர் திவான் போர்டாபீஸ் தலைமை அக்கவுண்டண் டைப் பார்த்து "பிற்காலத்தில் உங்களுக்கு நிச்சயமாய் திவான் பதவி கிடைக்கும். அதற்கேற்ற யோக்கியதைகள் உங்களிடம் இருக்கின்றன. என் வார்த்தை பொய்யா காது" என்று மனமாரக் கூறிவிட்டுச் சென்றார். சேஷைய சாஸ்திரியாருடன் இப்போது ஏற்பட்ட பரிச் சயம் நாளடைவில் அன்புருவெடுத்து அந்திம காலம் வரை நீடித்திருந்தது.

பஞ்சகால நடவடிக்கைகளைக் குறித்துப் பின்பு சென்னை சர்க்கார் விமர்சனம் செய்தனர். அப்போது ஸ்ரீநிவாஸராகவையங்காரின் சேவையைச் சிலாகித்து சர்க்கார் நன்றி பாராட்டுவதாகவும் அறிவிக்கப்பட்டது.* இதற்குக் காரணபூதர் ஸ்டோக்ஸ் தாம்! ஸ்ரீநிவாஸராக வையங்காருடன் தொடர்பு ஏற்பட்டது முதற்

*மதராஸ் மெயில் 4. 6. 1888

கொண்டே அவர் இவரிடம் அதிக நட்புக் கொண்டார். தம்முடைய வேலையில் இவர் காட்டிய திறமையும் மேலும் படித்துத் தமது ஞானத்தை அபிவிருத்தி செய்வதில் இவருக்கிருந்த ஆர்வத்தையும் அவர் வெகுவாக மதித்தார். இந்தியர்கள் பெரும் பதவிகளை வகித்து நிர்வாகத்தில் பெரிய பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை மனப்பூர்வமாக விரும்பிய ஒருவருக்கு அருகதையுள்ளவரிடம் அபிமானம் அதிகரிக்காமல் எப்படி இருக்கும்? இந்தக் காலம் முதற்கொண்டு தாம் பதவியை விட்டு விலகிப் போகும் வரையிலும் இவர் விஷயத்தில் ஸ்டோக்ஸின் சிரத்தை சிறிதும் தளரவில்லை. அவரும் அடிக்கடி இவருடைய குடும்ப சௌகரியங்களைக் கேட்டறிந்துக் கொள்வார். ரெவினியூ போர்டாபீஸில் இரண்டாவது உதவி காரியதரிசியாகவும் இவர் உயர்ந்தார்.

அக்காலத்தில் ரெவினியூ போர்டாருக்கிருந்துவந்த அலுவல்களைப் பற்றியும் இங்கு குறிப்பிடுவது உசிதமாகும். நில சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்னைகளை அவ்வப்போது முடிவு செய்யும் கடமை அதனிடமே இருந்தது. ரெவினியூ போர்டு மூன்று அங்கத்தினர்களையும் ஒரு காரியதரிசியையும் ஒரு துணைக் காரியதரிசியையும் ஒரு சிரஸ்தேதாரரையும் இரண்டு உதவிக் காரியதரிசிகளையும் மானேஜர் ஒருவரையும் மற்றும் பல குமாஸ்தாக்களையும் கொண்டது. வரிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வசூலிப்பது போர்டின் முதல் கடமை. ஜனத்தொகை, விவசாயம், ஏற்றுமதி, இறக்குமதி, சுகாதாரம், மக்கள் நிலை, அவர்கள் அபிவிருத்தி ஆகியவற்றைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தயாரித்து அது வெளியிட வேண்டும். லோகல் பண்டு நிதி முதலியவற்றை நன்கு நிர்வகிக்க வேண்டும். மைனர் எஸ்டேட்டுகளை 'கோர்ட் ஆப் வார்ட்ஸ்' என்ற முறையில் மேற்கொண்டு பராமரிக்க வேண்டும். தர்மநிதிகள் தக்கபடி விநியோகமாகின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். ரயத்துக்களுடன் ஏற்படும் தகராறுகளையும் அவர்களது அப்பீல்களையும் அவ்வப்போது தீர்த்து வைக்க வேண்டும்.* இதிலிருந்து இவருக்கேற்

*டாக்டர் மக்ளீன் எழுதிய "சென்னை சர்க்காரின் நிர்வாகம்" பக்கம் 154, 155

பட்ட பொறுப்பு எளிதில் புலப்படும். மாகாணத்தைப் பற்றி விசேஷ ஞானம் சம்பாதிக்க இதனுல் இவருக்கு விசேஷ சந்தர்ப்பம் வாய்த்தது. சுவபாவமாகவே சிரத்தையுள்ளவருக்குத் தக்க வசதிகள் வாய்த்தால் அதைக் காட்டிலும் வேறு எதை அவர் விரும்புவார்? ஆகவே போர்டாபீஸிற்கு வந்து ஐந்துவருஷ காலம் பூர்த்தியாகு முன்பேயே இவருக்கிருந்த விஷய ஞானம் வேறு யாருக்கும் கிடையாது என்ற பிரசித்தி எங்கு பார்த்தாலும் பரவி விட்டது. பல சர்க்கார் தஸ்தவேஜிகளைப் புரட்டிப் படித்து நாட்டின் பொருளாதார நிலைமைப்பற்றி இவர் நன்கறிந்து கொண்டிருந்ததால் அதிகாரிகள் இவரையே அடிக்கடி அண்டுவர். தங்களுக்கு எந்த சந்தேகம் ஏற்பட்டாலும் இவரிடமே வந்து அதைத் தீர்த்துக் கொள்வர். நடைமுறையைப் பற்றியதாஞலும் சரி இனி நடக்க வேண்டியதைப் பற்றியதாஞலும் சரி இவரை நாடினுல் நிர்ப்பயமாக இருக்கலாம் என்ற நம்பிக்கை மேலதிகாரிகளுக்குப் பூரணமாக இருந்தது.

தென்னிந்தியாவைப் பஞ்சம் பீடித்தது காரணமாகப் பல பிரச்னைகள் தலைகாட்டின. இனிமேல் அம்மாதிரி கொடுமையால் மக்கள் வருந்தாமல் இருக்க ஏற்பாடு செய்யவேண்டும் என இந்திய சர்க்கார் தீர்மானித்தனர். மாகாண சர்க்கார் முரண்படுவதற்கு இடம் கொடாமல் முன்னேற்பாடுகளைச் செய்ய லிட்டன் பிரபு விரும்பினார். நல்ல திட்டத்தை வகுத்து நாட்டைப் பாதுகாக்க அவர் உத்தேசித்தார்.

லிட்டன் பிரபுவுக்கும் இந்தியா மந்திரிக்குமிடையே இதைக் குறித்துக் கடிதப் போக்குவரத்து நடந்தது. கமிஷன் நியமனத்துக்குச் சம்மதித்து

"பருவக் கோளாறு காரணமாக ஏற்படக்கூடிய விபரீதத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இனி இந்தியா சர்க்காருக்குப் பிரதானமாக இருக்கும். இதனால் ஏற்படக் கூடிய கொடுமையைக் குறைப்பதற்காக மிக்க ஜாக்கிரதையுடன் எல்லா தகவல்களையும் சேகரித்து வருங்கால நிர்வாகிகளுக்கு உதவ வேண்டும்" என்று ராஜப் பிரதிநிதிக்கு இந்தியா மந்திரியான ஸாலிஸ்பரி பிரபு 1878-ம் வருஷம் ஜனவரி மாதம் 10-ம் தேதியன்று எழுதினார்.

ஆகவே அவ்வருஷம் மே மாதம் 16-ம் தேதியன்று இந்திய சர்க்கார் பிறப்பித்த உத்திரவில் இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஜெனரல் ரிச்சர்ட் ஸ்ட்ராச்சி* தலைவராகவும் இங்கிலாந்திலுள்ள நிபுணர் ஜேம்ஸ் கார்ட்**, கல்கத்தா ஹைக்கோர்ட் ஜட்ஜ் கனம் எச். எஸ். கன்னிங்ஹாம்***, சென்னை சிவில் சர்விஸைச் சேர்ந்த ஜி. ஏ. பல்லார்ட், வங்க சிவில் ஸர்விஸைச்

* பிறகு ஸர் ரிச்சர்ட் ஸ்ட்ராச்சி
** பிறகு ஸர் ஜேம்ஸ் கார்ட்
*** பிறகு ஸர் ஹென்ரி கன்னிங்ஹாம்

சேர்ந்த ஜி. எச். எம். பாட்டன், பம்பாய் சிவில் சர்விஸைச் சேர்ந்த ஜே. பி. பில், ஸி. எஸ். ஐ.*, மைசூர் அரண்மனைக் கண்ட்ரோலர் ஸி. ரங்காச்சார்லு ஸி. ஐ. இ.**, கோலாப்பூர் சமஸ்தான கார்பாரி மஹாதேவ வாசுதேவ பர்வே ஆகியோர் அங்கத்தினர்களாகவும் வங்காள சிவில் சர்விஸைச் சேர்ந்த ஸி. ஏ. எலியட் ஸி. எஸ். ஐ***, காரிய தரிசியாகவும் இருக்க ஒப்பினர். ஆனால் மறு வருஷம் ஜனவரி மாதம் பலார்ட் பதவியை விட்டுவிடவே எச். இ. ஸல்லிவன் அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார். ஏப்ரல் மாதத்தில் பாட்டனும் கமிஷனிலிருந்து விலகிக் கொண்டார். பல மாகாணங்களையும் சுற்றிப் பார்த்து ஆங்காங்கு நடத்தவேண்டிய விசாரணையை முடித்துக் கொண்டு இவ்வருஷம் அக்டோபர் மாதம் கமிஷன் மெம்பர்கள் யாதாஸ்தைத் தயாரிப்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றனர். ரங்காச்சார்லுவும் பர்வேயும் அவர்களுடன் புறப்பட்டுப்போக முடியாமையால் கமிஷனின் யாதாஸ்தில் அவர்கள் கையொப்பமிட இயலாமற் போய் விட்டது.

தற்கால நிலையைப்பற்றி அறிய அநேக கேள்விகளைத் தயாரித்து அவற்றைக் கமிஷன் சென்னை சர்க்காருக்கு முன்னதாகவே அனுப்பிவிட்டது. எலியட் ஜூன் மாதம் 22-ம் தேதியன்று மாகாண சர்க்காருக்கு அனுப்பிய மிகவும் நீளமான சுற்றறிக்கையில் இவற்றைக் காணலாம். அக்டோபர் மாதம் முதல் தேதிக்குள் பதில்வேண்டும் என்றும் காரியதரிசி அறிவித்திருந்தார். இந்தக் கேள்விகள் நான்கு அத்தியாயங்கள் கீழ் இனவாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதல் அத்தியாயத்தில் தேசத்தையும் மக்களையும் பற்றியவை இருந்தன. இரண்டாம் அத்தியாயத்தில் கஷ்டம் தலைகாட்டிய சமயத்தில் அளிக்கப்பட்ட சகாயத்தைப் பற்றியவை தென்பட்டன. மூன்றாம் அத்தியாயத்தில் பஞ்சக் கஷ்ட நிவாரணத்தைப்

---

* பிறகு ஸர் ஜேம்ஸ் ப்ரெத்வெயிட் பில்

** 1881 முதல் 1883 வரை மைசூர் திவானாக இருந்தவர்

*** பிறகு ஸர் சார்லஸ் எலியட் கே. ஸி. எஸ். ஐ.

பற்றியவைத் தொகுக்கப்பட்டிருந்தன. நான்காம் அத்தியாயத்தில் பஞ்சம் திரும்பவும் தோன்ருமல் இருப்பதற்காகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்தவை காணப்பட்டன. முதல் அத்தியாயத்தில் இருப்பவைகளுக்குப் பதில் கூறும் பொறுப்பு அருகதை வாய்ந்த விசேஷ அதிகாரி ஒருவரிடமே ஒப்படைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

முதல் அத்தியாயத்தில் காணப்படும் கேள்விகளின் விவரத்தைக் கீழே காணலாம். சென்னை ரெவினியூ போர்ட் முதல் மெம்பரிடம் இந்தப் பொறுப்பு மாகாண சர்க்காரால் ஒப்புவிக்கப்பட்டது.

பொதுவாக உங்கள் மாகாணத்தில் எவ்வளவு மழை பெய்கிறது? எந்தப் பக்கததிலிருந்து மழை வருகிறது? எந்த மாதங்களில் அதிகம்? மாதா மாதம் எவ்வளவு பெய்திருக்கிறது? பயிரிடுவதற்கு எவ்வளவு மழை வேண்டும்? இந்த மழைப் பெய்யத் தவறினுல் எத்தகைய நிலைமை தலைகாட்டுகிறது? கேவலமான ஸ்திதி ஏற்படுவதற்கான காரணங்கள் எவை? ஒரு ஏகரா பூமியில் எவ்வளவு அளவுக்கு உணவுப் பொருள் உற்பத்தியாகும்? அது பூராவும் அங்கு செலவாகிவிடுகிறதா? உற்பத்தி அதிகமா அல்லது குறைவா? இதற்கான புள்ளி விவரங்கள் எப்படி தயாராகின்றன? சாதாரண காலத்தில் உங்கள் மாகாணத்தில் எந்த ஜில்லாக்களில் கிணறுகள், குளங்கள், கால்வாய்கள், நதிகள் ஆகியவற்றினுல் நீர்ப்பாசனம் செய்யப்பட்டு பயிர் செழிப்பாக இருக்கிறது? இந்தப் பிரதேசத்தில் எவ்வளவு அளவுக்கு உணவு தானியங்கள் உற்பத்தியாகின்றன? இந்த நீர்ப்பாசன வசதிகள் நல்ல நிலையில் இருந்தும் மழை தவறிப் போதுமானுல் எங்கெங்த பிரதேசம் பஞ்சத்திலிருந்து தப்பமுடியும்? மக்களின் போஷணைக்கான தானியங்கள் எவை? விதைக்கும் காலமும் அறுவடையும் எப்போது? எந்தக் காலத்தில் அவைகளுக்கு மழை தேவை? எந்தக் காலத்தில் மழை அதிகமாகவோ குறைவாகவோ இருக்குமானுல் அவர்களுக்கு கெடுதி விசேஷம்? எரு உபயோகமாவது எங்கெங்கு? உங்கள் மாகாணத்தில் சர்க்காரோ அல்லது தனிப்பட்ட பிறரோ விவ

சாய அபிவிருத்திக்கு ஏதாவது புதுமுறைக் கண்டுபிடித்திருக்கின்றனரா? அப்படியாயின் அது எத்தகையது? இது விஷயமாக நீங்கள் ஏதாவது யோசனை அளிக்க முடியுமா? உங்கள் மாகாணத்தில் விவசாயப் பொருட்காட்சி நடத்தப்பட்டிருக்கிறதா? அப்படியாயின் அதன் மூலம் பலன் பிறந்ததுண்டா? முன்னைவிட இப்போது சில இடங்களில் பூமியின் தரம் குறைந்திருக்கிறதா? ஜனத்தொகையில் எவ்வளவு பேர் விவசாயத்தைத் தொழிலாகவோ அல்லது வேறு தொழிலை நடத்தியும் அதன் மூலம் ஜீவிப்பவர்களாக இருக்கின்றனர்? இதில் எவ்வளவு பேர் சொந்தமாகப் பயிரிட்டு வாழ்கின்றனர்? இதற்குப் பிறர் உதவியை எதிர்பார்ப்பவர் எவ்வளவு பேர்? விவசாயிகளின் தற்போதைய பொருளாதார நிலைமை என்ன? அவருக்குக் கிடைக்கும் வருமானமும் அவருக்கேற்படும் செலவும் எவ்வளவு? மீதம் இருந்தால் அதை அவர் என்ன பண்ணுகிறார்? அவரது கடன் பளு எவ்வளவு? அதற்குக் காரணம் என்ன? உங்கள் மாகாணத்திலுள்ள நில பாத்தியதைகள் எத்தகையவை? நில பாத்தியதைகளைத் தீங்கு ஏற்படாத வண்ணம் மாற்றித்தர முடியுமா? நிலத்தில் உரிமையுள்ளவர்கள் அங்கு அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனரா? நிலவரி எவ்வளவு தூரத்திற்குப் பாதிக்கிறது? தற்போதைய தீர்வை விகிதம் நியாயமாக இருக்கிறதா? இல்லாவிட்டால் அதைத் திருத்த வேண்டுமா? தீர்வை எப்போது நிர்ணயிக்கப்பட்டது? தற்போது விதிக்கப்பட்ட தீர்வையை வசூலிப்பதில் எப்போதாவது சிரமம் ஏற்பட்டதுண்டா? நிலவரி பாக்கிக்கு எவ்வளவு வட்டி செலுத்தவேண்டியிருக்கிறது? ஒரு ஏகரா பூமியின் சராசரி விலை எவ்வளவு? நிலவரி பாக்கிகளாகவும் கோர்ட்டு தீர்ப்பு காரணமாகவும் பிரதி வருஷமும் எவ்வளவு பூமி விற்கப்படுகிறது? விவசாயி யல்லாதவருக்கும் வேறு ஊராருக்கும் எவ்வளவு பூமி மாற்றப்பட்டிருக்கிறது? நிலத்தை உழுது பயிரிடும் பண்ணையாளுக்கு எவ்வளவு ஊதியம் அளிக்கப்படுகிறது? அவர்களுக்குக் கொடுக்கப்படுவது பணமா தானியமா? இதைக்கொண்டு அவர்கள் ஜீவனம் நடத்த முடிகிறதா? அல்லது முன்கூட்டியே கடன்வாங்க வேண்டி யிருக்கிறதா? முக்கிய உணவு தானியங்களின் விலை என்ன?

அறுவடைக் காலத்திலும் இதர சமயங்களிலும் விலைவாசியில் வித்தியாசம் உண்டா? எவ்வளவு அதிகத்திற்கு விலை உயர்ந்தால் தேசத்தில் க்ஷாமம் வரப்போகிறது என்பது தெரியவரும்? பஞ்சம் முன்பு சம்பவித்தபோது தானிய விலை அதனால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருந்தது? உங்கள் மாகாணத்தில் வர்த்தகம் செழிப்பாக நடக்கிறதா? போக்குவரத்து வசதிகள் சரிவர இருக்கின்றனவா? ரஸ்தாக்கள் நல்ல நிலையில் உள்ளனவா? மாகாணத்தில் ரயில் பாதை எவ்வளவு தூரத்திற்குப் போடப்பட்டிருக்கிறது? எந்தெந்த ஜில்லாக்களில் அது இல்லை? தற்போதைய ரயில்வே பாதை காரணமாக விலை ஒரே சீராவதுடன் வர்த்தகம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதா? ஜலமார்க்கமாகப் போய்வர வசதியுண்டா? ரஸ்தாக்கள் கெட்டிருப்பதாலோ அல்லது வேறு காரணம் பற்றியோ க்ஷாம காலத்தில் எந்தப் பாகத்திற்காவது போதிய தானியங்களை அனுப்புவதற்கு இடையூறு இருக்கிறதா? தந்திப் போக்குவரத்துக்கு முக்கிய நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

உங்களுக்குத் தெரிந்தவரையில் உங்கள் பிரதேசத்தை யடுத்திருந்த காடுகள் அழிக்கப்பட்டுள்ளனவா? அதைப் புள்ளி விவரங்களைக் கொடுத்து அளவிட்டுக்காட்ட முடியுமா? அப்படி அழிக்கப்பட்டதால் மழை பாதிக்கப்பட்டிருக்கிறதா? காடுகள் அழிக்கப்பட்டதால் கெடுதல் ஏற்பட்டிருந்திருக்குமாயின் அதை நிவர்த்திக்க வழி இருக்கிறதா? இதற்கு சுலபமான மார்க்கம் எது? பஞ்சத்தின் காரணமாக மரிப்பவர்களின் தொகையைக் கணக்கிட்டுக் கூற முடியுமா? இந்த மரண விகிதம் எத்தகையது?

கூடிய மட்டில் பஞ்சத்திற்கான செலவை மாகாண சர்க்கார்களே மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாலும் புதிய வரிகளை விதித்து பஞ்சக் கஷ்ட நிவாரண நிதியைச் சேமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாலும் அந்தந்த மாகாணத்திலும் வரி வசூலிக்க வேண்டுமென்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும் எந்தப் பிரதேசத்தில் கஷ்ட நிவாரணத்துக்கு சர்க்கார் உதவி யளித்திருக்கிறதோ அங்கு வரி

வசூலித்து செலவைச் சரிக்கட்ட வழி காட்ட முடியுமா? தன் எல்லைக்குட்பட்ட கேள்விகளைப் படித்தாலேயே பலர் பிரமித்துப் போவர். இவ்வளவு விரிவான ஆராய்ச்சி எப்படி சாத்தியம் என்ற திகைப்பே எல்லோருக்கும் ஏற்படும். மிகவும் சூக்ஷ்மமான அம்சங்களைப் பற்றியெல்லாம் வினுக்கள் கிளம்பின. திரும்பவும் மக்கள் துயரப்படாத வண்ணம் இருப்பதற்கான வழிகளை வகுத்துக் கூறும்படியும் கமிஷனர்கள் கேட்டுக்கொண்டனர். இவைகளுக்குப் பதிலைத் தயாரிப்பதில் போர்டு மெம்பருக்கு உதவி புரியும் விசேஷ அலுவல் ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் ஒப்படைக்கப்பட்டது.

"இது விஷயத்தில் இவர் காட்டிய திறமையைக் கமிஷன் மெம்பர்கள் அனைவரும் ஒரு முகமாகப் பாராட்டினர்" என்று பயோனீர் பத்திரிகை எழுதியது.

கமிஷன் சென்னை நகருக்கு விஜயம் செய்த போது இம்மாகாணத்திலிருந்துக் கிடைத்தத் தகவல்களை ரங்காச்சார்லு பெரிதும் சிலாகித்தார். அவற்றைத் தயாரித்தவர்களைத் தாம் நேரில் பார்த்துப் பேசவேண்டும் என்றும் அப்பெரியார் ஆசைப்பட்டார். ஆகவே ஸ்ரீநிவாஸராகவையங்கார் அப்போது அவருக்கு அறிமுகமாக்கப்பட்டார். அவரும் இவரை அன்புடன் ஆசீர்வதித்து சேஷைய சாஸ்திரியாரைப் போலவே தம்முடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தினர். ரங்காச்சார்லு ஒரு தனிப்பட்ட புருஷர்: 'கரடு முரடான' சுவபாவமுள்ளவர்? மனசில் இருப்பதை சுலபத்தில் பிறர் அறிய விடமாட்டார். கடுமையாக வேலை வாங்குபவர். அவர் வாயிலிருந்து பாராட்டு மொழிகள் கிளம்புவது கஷ்டம். சேஷாத்திரி ஐயர் போன்றவர்களிடம் தான் அவருக்கு மதிப்பு இருந்தது.

இந்தக் கமிஷனின் யாதாஸ்து 1880-ம் வருஷம் ஜுலை மாதம் 7-ம் தேதி சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் காணப்படும் சில வாக்கியங்கள் இவர் போன்றவர்கள் மேற்கொண்ட சிரமம் வீணுகப் போகவில்லை என்பதைத் தெரியப்படுத்துகின்றன. "இவ்விதம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் மக்களின் வாழ்க்கை நிலை பற்றி எங்களுக்குப் போதிய ஞானத்தை வழங்கியதுடன்

பஞ்சக் கொடுமையைப் போக்க நாங்கள் தெரிவித்திருக்கும் சிபாரிசுகளுக்கும் அடிப்படையாக இருந்திருக்கின்றன.* சுமார் இரண்டு வருஷ காலம் விசாரணை நடத்திய தன் பயனாகப் பிறந்த இந்த ரிப்போர்ட்டில் பல அரிய யோசனைகள் காணக்கிடக்கின்றன. சென்னையிலுள்ள ரெவினியூ போர்டைக் கலைத்து அதற்குப் பதில் பிற மாகாணங்களில் போல் கமிஷனர்களை நியமிக்கவும் அளவு கடந்திருக்கும் சில ஜில்லாக்களை இரண்டாக்கவும் இவ்விதம் நிர்வாகத்தை லகுவாக்கலாம் எனவும் பஞ்ச காலத்தில் ஒரு பிரத்தியேக அதிகாரி பூரண உரிமையுடன் இருந்து கால தாமதமின்றி தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இந்தக் கமிஷன் சிபாரிசு செய்தது.

நாடு முழுமைக்கும் நீர்ப்பாசனத்திற்கு ஏற்பாடு செய்து போக்குவரத்து வசதிகளைப் பெருக்கினால் பஞ்சத்துடன் சுலபமாய்ப் போராட முடியும் என்று கமிஷனர்கள் ஒரு முகமாக அபிப்பிராயப்பட்டனர். தொழில் வளம் செழித்தால் விவசாயிகளல்லாதாரும் க்ஷேமமாய் வாழ வழி பிறக்கும் என்றும் இந்தியாவில் விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் இராமை மிக்கவும் வருந்தத்தக்கது என்றும் ஆகவே மக்கள் தங்கள் ஆற்றலைக் காட்டுவதற்கான பல துறைகள் இருக்க வேண்டியது அவசியம் எனவும் அவர்கள் மேலும் அறிவித்தனர். இந்திய சர்க்கார் திரும்பவும் விவசாய இலாகாவைப் புதுப்பித்து நடந்த சம்பவங்களிலிருந்து நடைமுறைகளை நிர்ணயிக்க அது உதவும்படிச் செய்ய வேண்டுமெனவும் எல்லா மாகாணங்களிலும் விவசாய இலாகா அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும் விவசாயிகள் நிலத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்க சர்க்கார் வசதி தர வேண்டுமென்றும் ஏழைக் குடியானவர்களின் கடன் பளுவைக் குறித்து விசாரணை நடத்தி அதை நியாயமான ரீதியில் குறைப்பதற்கான நீதி மன்றங்கள் நிறுவப்பட வேண்டும் எனவும் பல தவணைகளில் திருப்பித் தருவதற்கும் அனுமதி அளிக்கப்பட வேண்டுமெனவும் இந்தக் கமிஷன் இந்திய சர்க்காருக்கு யோசனை கூறியது.

* பஞ்சக் கமிஷன் யாதாஸ்து (1880) பக்கம் 3

"இந்தக் கமிஷனின் வேலை காரணமாக பஞ்ச நிவாரணத்துக்கான திட்டம் வகுக்கப்பட்டது. இதனால் விவசாய முறைகள் சீர்திருந்த வழிதென்பட்டது. இக் கமிஷனின் உழைப்பை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு புறம் பஞ்சக் கஷ்ட நிவாரணத்திற்காக சில கொள்கைகள் குறிப்பிடப்பட்டன. மற்றுமொரு புறம் பஞ்சத்தைத் தடுப்பதற்கான யோசனைகளும் தெரிவிக்கப்பட்டன. பஞ்ச காலத்தில் அவதிப்படுவோருக்கு உதவி புரிவது சர்க்காரின் முக்கிய பொறுப்பு என்று இக்கமிஷன் பூரணமாக ஒப்புக்கொண்டது. ஆனால் இது மக்கள் சிக்கன வாழ்க்கை நடத்தி சுயமாகவே சிரமத்தைத் தாங்கி நிற்பதற்குப் பாதகமாக இருக்கலாகாது என முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது. அல்லது அவர்கள் ஒன்று சேர்ந்து பொது ஏற்பாடுகளைச் செய்வதற்கும் விரோதமாக இருக்கக் கூடாது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நோக்கத்துடன் தாற்காலிகமாகப் பஞ்ச காலத்திற்காக நிர்வாக வசதிகள் தயாரிக்கப்பட்டன. தற்போது அமுலாகிவரும் நிவாரண ஏற்பாடுகளும் அப்போது பிறந்தன.* இந்தக் கமிஷன் வெளியிட்ட சிபாரிசுகளில் பல ஸ்ரீநிவாஸராகவையங்காரின் கருத்துப் பிரகாரமே அமைந்திருந்தன.

> "இதன் சிபாரிசுகளை இந்திய சர்க்கார் உடனே நிறைவேற்ற முயலவில்லை. அடுத்த பத்து வருஷ காலம் மகாநாடுகளைக் கூட்டுவதிலும் ஒவ்வொரு மாகாணத்திலும் அபிவிருத்திக்காக எத்தகைய மார்க்கத்தைக் கண்டு பிடிக்கலாம் என்பதை விசாரித்துக் கொண்டிருப்பதிலுமே கழிந்தது" என நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கப்புறம் லின்லித்கோ பிரபு தலைமையில் இந்தியாவுக்கு வந்து விசாரணை நடத்திய ராயல் விவசாயக் கமிஷன் குறிப்பிட்டது.**

ஸ்ட்ராச்சி கமிஷனின் யாதாஸ்து மூன்று பாகங்களாக வெளி வந்ததுடன் அதற்கு அனுபந்தங்களாகப் பல இடங்களில் கிடைத்த சாக்ஷியங்களும் மற்றும் அனுபவ

* இந்திய பஞ்ச கமிஷன் யாதாஸ்து (1901) பக்கம் 2

** ராயல் விவசாயக் கமிஷன் யாதாஸ்து (1926) பக்கங்கள் 17, 18

மும் தேர்ச்சியும் பெற்ற அதிகாரிகளின் கருத்துக்களும் தொகுக்கப்பட்டுப் பிரசுரமாயின. மிகச் சிரமப்பட்டுத் தயாரிக்கப்பட்ட இந்த தஸ்தவேஜிகளை ஆர்வத்துடன் ஸ்ரீநிவாஸராகவையங்கார் படித்தார். 'கரைத்துக் குடித்தார்' என்றும் கூறலாம். இந்தப் பஞ்ச நாளில் கற்ற விஷயங்கள் இவருக்கு பிற்காலத்தில் துணை நின்றன. அதிகாரிகளின் 'குஸ்தி' நிர்வாகத்தில் தோன்றிய விக்கினங்கள் கஷ்டத்தைக் குறைப்பதிலிருந்த கவலை, எதிர்பாராமல் தலைகாட்டும் பெரிய இடையூறுகள்—இவற்றை யெல்லாம் இந்த நாளில் இவர் நேரில் கண்டதால் பின்பு சந்தர்ப்பம் வந்தபோது சுலபமாய் சிரமத்தைத் தாங்கி நிற்பது சாத்தியமாகியது.

இதற்கப்புறம் வெகு விரைவில் போர்டாபீஸில் இவர் பதவியும் உயர்ந்தது. 1879-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இவர் போர்டாபீஸில் இரண்டாவது உதவிக்காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். மறு வருஷாரம்பத்தில் முதல் உதவிக் காரியதரிசி ஸ்தானத்தையும் இவர் சிறிது காலம் வகித்தார்.

இதே காலத்தில் மேலதிகாரிகள் ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் கொண்டிருந்த மதிப்புக்கு மற்றொரு அத்தாட்சி எடுத்துக் காட்டவேண்டும். ஒரு முக்கியமான விஷயத்தில் முடிவு கூறும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப் பட்டது. அனுபவமும் அறிவும் மிகுந்த இருவர் முரண்பட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். ஒருவரது கூற்றை மற்றொருவர் பலமாகக் கண்டித்தார். ஆதாரத்துடன் அவர் அவ்விதம் செய்தாரா? அல்லது அவர் ஆத்திரப்பட்டு விட்டாரா? இரண்டு கட்சிகளையும் விமர்சித்து எது நியாயம் என்பதை இவர் நிர்ணயிக்க வேண்டியதாகியது. ஸர் வில்லியம் ஹண்டருக்கும் ஸர் சார்லஸ் எலியட்டுக்கும் அபிப்பிராய பேதம் உண்டாகியது. டாக்டர் ஹண்டர் மகா நிபுணர். இந்திய சரித்திரத்தில் அபார ஞானமுள்ளவர். புள்ளி விவரங்களைப் பார்த்துவிட்டால் பரம திருப்தி அடைபவர்; பரந்த படிப்பாளி. இந்திய சர்க்கார் கீழ் பெரிய பதவி வகித்தவர். எலியட் அவர் போலவே திறமை வாய்ந்தவர்; ஐக்கிய மாகாணத்தில் சேவை செய்து ரெவினியூ விவகாரங்களில் அதிக பரிச்சயம் பெற்றவர். மைசூரில் ஏற்பட்ட பஞ்சத்துடன் போராடி ராஜப் பிரதிநிதியின் பாராட்டைக் கவர்ந்தவர். பஞ்ச விசாரணைக் கமிஷன் காரியதரிசியாக இருந்து நாட்டின் நிலைமையை நன்கறிந்தவர்; இவ்வளவு பெரிய உத்தியோகஸ்தர்களின் வாதப் பிரதிவாதங்களைப் பரிசீலித்துத் தீர்ப்பளிப்பது சாமான்ய காரியமாகுமா? ஸ்ரீநிவாஸராகவையங்கார் மிக்க சாமான்ய உத்தியோகஸ்தராக இருந்தவர். ஆயினும் தம்மிடம் விடப்பட்ட பொறுப்பின் மஹத்துவத்தை இவர் உணராமல் இல்லை. மிக்க பொறுமையுடன் நடந்து கொண்டார். தீர ஆராய்ந்த பின்பே தம் கருத்தைத் தெரிவித்தார்.

பல மாகாணங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துப் பிரசுரிக்கும் அலுவலை அப்போது டாக்டர் ஹண்டர் மேற்கொண்டிருந்தார். 1876-ம் வருஷம் இறுதியில் இந்த

வேலைக்குப் பாதகமான நிலைமை சென்னையில் தலைகாட்டி யிருப்பதாக அவருக்கு அறிவிக்கப்பட்டது. முன்னதாக வகுத்துக் கொண்டிருந்த திட்டம் வியர்த்தமாகிப் போய் விட்டதாயும் அவருக்குத் தெரியவந்தது. ஆகவே அவசரம் அவசரமாக ஹண்டர் சென்னைக்கு வந்தார். இங்கு பஞ்சம் ஏற்படக்கூடும் என்ற பீதி பலருக்குப் பிறந்திருப்பதை அவர் பார்த்தார். உடனே அவர் மனம் அந்த விஷயத்தில் பற்றுதல் கொண்டது. பஞ்சம் எப்படி ஏற்படுகிறது? அது ஏன் ஏற்படுகிறது? அது எப்போது ஏற்படுகிறது? தம் உள்ளத்தில் ஊறிய இந்த வினுக்களுக்கு தக்க விடைகளைக் கண்டுபிடிக்க அவர் ஆசைப்பட்டார். அவரும் சென்னை சர்க்கார் வான சாஸ்திர நிபுணரும் இதைப் பற்றிக் கூடிப் பேசினர்.

"இரவு பூராவும் நான் பாக்ஸனுடன் சென்னை வான ஆராய்ச்சி நிலையத்தில் தங்கி நட்சத்திரங்களையும் சூரியனில் காணப்படும் புள்ளிகளையும் கவனித்துக் கொண்டிருந்தேன்" என 1877-ம் வருஷம் ஜனவரி மாதம் 10-ம் தேதியன்று அவர் தமது தினசரிக் குறிப்பில் எழுதிவைத்தார்.* இதற்கப்புறம் ஹண்டர் 1810-ம் வருஷத்திற்கப்புறம் இருந்து வரும் நிலைமையை நிலையத்திலுள்ள தஸ்தவேஜிகள் மூலம் கண்டறிந்தார். இந்த ஆராய்ச்சியிலிருந்து அவருக்கு ஒரு உண்மை தெளிவாகியது. அதாவது நாட்டின் துர்ப்பிக்ஷத்திற்கும் சூரியனில் தென்படும் புள்ளிகளுக்கும் இருக்கும் தொடர்பு அதிகம் என்று அவருக்குத் தெளிவாகியது. பதினேரு வருஷங்களுக்கொருமுறை திரும்பத்திரும்ப ஒரே நிலைமை தலைகாட்டுகிறது என்று அவர் முடிவு கட்டினுர். இதற்கிடையில் புள்ளிகள் அதிகரித்தும் குறைந்து கொண்டும் வருவதாக அவர் நிர்ணயம் செய்தார். புள்ளிகள் மிகக் குறைவாக இருக்கும் சமயத்தில் மழை பெய்யாமல் நாட்டில் பயிர் நாசமாய்ப் போகிறது என்று அவர் தீர்மானித்தார். 1810-ம் வருஷத்திற்கப்புறம் சென்னையில் ஏற்பட்ட ஆறு பஞ்சங்

*ஸ்க்ரைன் எழுதிய ஸர் வில்லியம் ஹண்டர் (பக்கம் 261)

களில் ஐந்து சூரிய மண்டலத்தில் புள்ளிகள் மிகவும் சொற்பமாக இருந்தபோது நேர்ந்திருப்பதை அவர் கண்டு கொண்டார். ஆகவே இதைக் கணக்குப் போட்டுக் காட்ட முடியும் என்றும் அவர் கருதினுர்.

சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குச் சென்றதும் ஹண்டர் இதைப்பற்றி ராஜப் பிரதிநிதியிடம் நீண்ட நேரம் சம்பாஷித்து தாம் கண்டுகொண்ட விஷயங்களை அவருக்கு அறிவித்தார். அப்போது லிட்டன் பிரபு அவற்றையெல்லாம் விவரமாக எழுதிவைத்தால் எல்லோருக்கும் பயன்படும் என்று பதில் அளித்தார். இதற்கிணங்கி அவர் "பஞ்சச் சுழலும் சூரியப் புள்ளிகளும்" என்ற மகுடத்துடன் நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதிமுடித்தார். காலதாமதமின்றி அதை அச்சிட்டு அதன் பிரதிகளை ராஜப் பிரதிநிதிக்கும் லண்டனிலுள்ள முக்கியஸ்தர்களுக்கும் அவர் அனுப்பினுர். இதன் பின்பு அவர் இங்கிலாந்துக்கும் புறப்பட்டுப் போனுர். இதற்கிடையில் அவர் நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகள் பல இடங்களுக்கும் பரவிவிட்டன. மே மாதம் பிரிட்டிஷ் ராயல் சங்கத்திலும் இதைக் குறித்துப் பெரிய விவாதம் நடந்தது. ஸர் க்ளெமண்ட் மார்க்ஹாம், புரொபஸர் பால்பூர் ஸ்டிவர்ட், ஸர் நார்மன் லாக்கியர் ஆகியோர் ஹண்டரின் கக்ஷியை ஆதரித்தனர். இந்தியா மந்திரி சபையில் இடம் பெற்று இத்தகைய விஷயங்களில் மகா மேதாவி என்று பெயர் பெற்ற ஜெனரல் ஆர்தர் ஸ்ட்ராச்சி இதைப் பலமாக எதிர்த்துப் பேசினுர். அவர் முடிவில் கூறியதாவது:—

"டாக்டர் ஹண்டரின் அபிப்பிராயத்தைக் குறித்தமட்டில் அவர் எந்த ஆதாரங்களைக் கொண்டு முடிவு செய்திருக்கிருரோ அவை அவருக்கு அனுகூலமாக இல்லை என்பதே என் கருத்து. இதை வெளியிட நான் தயங்கமாட்டேன். போதிய அளவுக்குத் தகவல்கள் இராமலேயே அவர் ஒரு கிரமமான நீதி இருப்பதாக ஊஹிக்கிருர். கணக்குப் போட்டு அவர் 11-வருஷ சக்கரத்தைத் தயாரித்திருப்பதுடன் அதில் மழை எந்தக்காலத்தில் அதிகமாகப்

பெய்கிறது என்பதையும் நிர்ணயித்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் இம்மாதிரி நடப்பதாகத் தெரிவிக்கிறார். ஆனால் இந்த முடிவினால் மட்டும் எதையும் நிரூபிக்க இயலாது.*

ஸ்ட்ராச்சி படித்த வியாசத்தை ஸர் ரிச்சர்ட் ஹூக்கர் வெகுவாகச் சிலாகித்தார். ஆயினும் ஸ்ட்ராச்சி மேற்கொண்ட போக்கு வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஹண்டருக்கு இது விஷயமாகக் கவலை ஏற்பட்டிருந்தது. நிபுணர்கள் தம்மைப்பற்றி மனம்போன படி எல்லாம் பேசப் போகின்றனரே என்று அவர் அஞ்சினார். முடிவில் அவருக்குத் திருப்தி ஏற்படும் விதத்தில் பிரச்னை தீர்ந்தது. ஆகவே ஹண்டர் இந்த ஆராய்ச்சியில் மேலும் மும்முரமாக ஈடுபட்டார். "பத்தொன்பதாம் நூற்றாண்டு" என்ற பிரபல மாதாந்தப் பத்திரிகையில் அவரும் விஞ்ஞான நிபுணருமான ஸர் நார்மன் லாக்கியருமாகச் சேர்ந்து "சூரியப் புள்ளிகளும் பஞ்சங்களும்" என்ற மகுடத்துடன் பெரிய வியாஸத்தை வரைந்தனர்.

ஹண்டர் 11 வருஷத்திற் கொருமுறை மூன்று வருஷங்களை ஒரு தொகுதியாகச் சேர்த்து இந்த "அபாயகரமான" காலததில் நாட்டில் துர்ப்பிக்ஷமோ பஞ்சமோ ஏற்பட்டு வந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டினார். இந்த வருஷங்களில் சூரிய மண்டலத்தில் புள்ளிகள் மிகக் குறைவாகக் காணப்படுவதாயும் அப்போது தேசத்தில் கஷ்டம் இருந்து வந்திருப்பதாயும் அவர் அறிவித்தார்.

1810, 1821, 1832, 1843, 1854, 18 5, 1876,
1811, 1822, 1833, 1844, 1856, 1866, 1877,
1812, 1823, 1834, 1845, 1857, 1867, 1878.

இம்மாதிரி சக்கரம் சுழன்றுகொண்டே யிருப்பதாயும் அவர் தெரிவித்தார். இத்தகைய ரீதியில் நிர்ணயிப்பது மக்களுக்கு எதிர்காலத்தில் அனுகூலம் புரியக்கூடுமென வும் ஆனால் தாம் திட்டமாக எதையும் தெரிவிக்க முடியாது என்றும் ஹண்டர் தம் அபிப்பிராயத்தை அறிவித்

* பிரிட்டிஷ் ராயல் சங்கத்தில் 18-5-1877 அன்று செய்த பிரசங்கம்.

திருந்தார். இந்த ஆராய்ச்சி முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்பாடுகளைச் செய்வது நலம் என்றே அவர் கருதினார்.

"நாம் இப்போது பின்கண்ட முடிவுகளைச் செய்திருக்கிறோம். கிடைத்திருக்கும் தகவல்கள் எவ்வளவோ அலங்கோலமாய் இருந்தபோதிலும் அது எளிதில் நிரூபிக்கக் கூடியதாய் இராதபோதிலும் அதை ஆதாரமாகக்கொண்டு பொதுப்படையான சக்கரங்களை நிர்ணயிக்க முடியும். இரண்டாவதாக, விஞ்ஞான சாஸ்திரிகளும் இந்திய நிர்வாகத்தில் அக்கறை கொண்டுள்ளவர்களும் இந்த விஷயத்தை சிரத்தையுடன் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும்... இப்போது கிடைத்திருக்கும் ருசுக்களை வைத்துக் கொண்டு சென்னையில் இனி எப்போது பஞ்சம் தலை காட்டும் என்று ஜோசியம் கூறுவது விவேகமல்ல. திட்டமாகத் தெரிவிக்கும் நிலைமையை நாம் இன்னமும் எட்டவில்லை."

ஹண்டர் அனுசரிக்க வேண்டிய பாதையை வகுத்துக் காட்டிய போதிலும் அவர் எந்த நோக்கத்துடன் ஆராய்ச்சியை நடத்தி முடிவுகளை அறிவித்தாரோ அதே நோக்கத்துடன் பிறர் அவற்றை வரவேற்கவில்லை. இந்தியாவைச் சுற்றி வந்த பஞ்சக் கமிஷன் அங்கத்தினர்களிடம் டாக்டர் ஹண்டரின் வியாஸம் சமர்ப்பிக்கப்பட்டது. முன்பு குறிப்பிட்டபடி கமிஷனில் தலைமை வகித்த ஸர் ரிச்சர்ட் ஸ்ட்ராச்சி இந்த முடிவை ஆக்ஷேபித்தவர்களுள் ஒருவர்: கமிஷனின் காரியதரிசியாக இருந்த எலியட்டிடம் தலைவர் சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட பஞ்சங்களைப் பற்றிய குறிப்பைத் தயாரிக்கும்படிச் சொன்னார்.

கமிஷனின் யாதாஸ்திலும் இதைப் பற்றிய பிரஸ்தாபத்தைப் பார்க்கலாம். சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்பு தலைவர் வேறு ஒரு இடத்தில் தெரிவித்த கருத்துக்கள் திரும்பவும் இதில் இடம் பெற்றன.

"தேசத்தில் பிரதி வருஷமும் மழை பலபாகங்களிலும் ஒரே அளவுக்குப் பெய்வதில்லை. சில சம

யங்களில் 50 சத விகிதம் அதிகமாயும் மற்றும் சில சமயங்களில் 50 சத விகிதம் குறைவாயும் அது இருக்கிறது. தங்களுக்கிருக்கும் விஞ்ஞான சாஸ்திர பாண்டித்தியம் காரணமாக இது விஷயமாக முடிவு கூறக் கூடிய சிலர் சில சந்தர்ப்பங்களில் இந்த மழைக்கும் சூரியனிலுள்ள புள்ளிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றனர். நீடித்து நடந்த ஆராய்ச்சியின் மூலம் 11 வருஷ காலத்திற்கொரு முறை சூரியனில் உள்ள புள்ளிகள் குறைந்தும் அதிகரித்தும் இருப்பதாகவும் இதற்கும் மழைக்கும் நெருங்கிய பிணைப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்த முடிவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டதாகக் கூறலாகாது. விஞ்ஞான நிபுணர்களும் இதை ஆதரிப்பதாகக் கருதக்கூடாது. பல காரணங்கள் பற்றி இந்த சித்தாந்தம் ஆக்ஷேபிக்கப்படுகிறது. கிடைத்திருக்கும் ருசுக்கள் இதற்கு விரோதமாயுள்ளன. மற்றும் இதர அடிப்படைத் தகவல்களும் இதைப் பின்பற்றுவதற்குப் போதியவையாக இல்லை; சூரிய மண்டலத்தில் புள்ளிகள் மிகக் குறைவாக இருக்கும்போது அதிக மழை சில சம்பவங்களில் சம்பவித்திருக்கிறது. இந்த விஷயம் திர விசாரிக்கப் படவேண்டியது என்பதைத் தவிர அதிகமாக நாம் இப்போது கூற முடியாத நிலையில் இருக்கிறோம்.*

ஸ்ட்ராச்சியின் விருப்பப்படித் தாம் தயாரித்த குறிப்பில் எலியட் ஹண்டரின் முடிவுகளைப்பற்றி சர்ச்சைச் செய்து அவை ஒப்புக்கொள்ளத் தகாதவை என்று தெரிவித்தார். நடந்த சம்பவங்கள் தமக்கே ஆதாரமாயிருப்பதாகவும் அவர் அதில் அழுத்தமாக அறிவித்தார். சூரிய மண்டலத்தில் புள்ளிகள் மிகக் குறைவாக விருந்த நான்கு தடவைகளில் மட்டும் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டதாகவும் இதில் இரண்டு தடவைதான் 'கடும் பஞ்சம் சம்பவித்ததாயும் மிகுந்த தடவைகளில் பஞ்சம் பிறக்கக் கூடிய ஸ்திதி இருந்ததாகக்கூட கூற முடியாதெனவும் எலியட்

*பஞ்சக் கமிஷன் யாதாஸ்து (1880) பக்கம் 7

கருதினர். 1810, 1843, 1854 ஆகிய மூன்று வருஷங்களும் அவற்றைத் தொடர்ந்த இரண்டு வருஷங்களிலும் ஹண்டர் குறிப்பிட்டபடி பஞ்சம் சம்பவிக்கவில்லை என்று அவர் சொன்னர். 1854-ம் வருஷத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில் முந்திய வருஷத்தில் பயிர் நாசமாகிவிட்டதே அதற்குக் காரணம் எனவும் 1853-ம் வருஷத்தை ஹண்டர் குறிப்பிட்ட "அபாயகரமான" வருஷத் தொகுதியில் சேர்க்கக்கூடாது எனவும் எலியட் அபிப்பிராயப்பட்டார். 1866-ம் வருஷத்தில் கஞ்சத்தில் தவிர மாகாணத்தின் இதர பாகங்களில் பஞ்சம் சம்பவிக்கவில்லை எனவும் அவர் அதே சமயம் எடுத்துக் காட்டினர். முடிவில் எலியட் அடியிற்கண்டபடி எழுதி வைத்தார்.

> "டாக்டர் ஹண்டரின் முடிவுகள் பிரகாரம் அபாயத்தை எதிர்பார்க்கவேண்டிய இருபத்தொரு வருஷங்களில் நான்கு வருஷங்களில் மட்டுமே பயிர் நஷ்டம் காரணமாகப் பஞ்சம் சம்பவித்திருப்பதாலும் இதில் மிகச் சாமான்யமானவையான இரண்டு அபாயகரமானதாகக் கருதப்படவேண்டிய வருஷங்களில் சென்னையில் சம்பவிக்காமையாலும் சர்க்காரின் நிர்வாகக் கொள்கைகளைத் திருத்திக் கொள்ள வேண்டிய அளவுக்கு இந்தத் திட்டம் உதவவில்லை: அல்லது எப்போது அபாயம் நேரும் என்பது இன்னமும் நிச்சயிக்கக் கூடாத நிலைமையில் இருந்துகொண்டிருக்கையில் இதை அடிப்படையாகக் கொண்டு அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதும் விவேகம் எனத் தோன்றவில்லை.

கமிஷன் தலைவர் போலவே காரியதரிசியும் கருத்தைத் தெரிவித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் சென்னை சர்க்கார் இவ்விருவர் எழுதியவற்றை ரெவினியூ போர்டுக்கு அனுப்பி அங்குள்ள அதிகாரிகளின் அபிப்பிராயத்தை நாடினர். உடனே ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு சீட்டு விழுந்தது. இவற்றின் தராதரங்களை எடை போட்டு அறிவிக்கும் அலுவல் இவருக்கு அளிக்கப்பட்டது. முடிவுக்கு வருமுன் இவர் போர்டாபீசிலுள்ள பழைய தஸ்தவேஜிகளைப் புரட்டிப் படிக்கவேண்டியிருந்தது. மிக்க

சிரத்தையுடன் அவற்றையெல்லாம் படித்தார். மாகாணத்தில் அறுபது வருஷங்களுக்கு முன்பு மேலதிகாரிகளின் மனப்பான்மை எப்படி இருந்தது என்பதை இவர் அவை மூலம் அறிந்தார். ஆரம்ப நாட்களில் விவசாயிகளுக் கேற்பட்ட துயரத்தை சர்க்கார் தக்கபடி கவனிக்கவில்லை என்பதையும் அவர் கண்டார்.

ஆகவே ஸ்ரீநிவாஸராகவையங்கார் அளித்த தீர்ப்பு கவனத்திற்குரியது. நிஷ்பக்ஷபாதமானது என்றே படித்தவர் கூறுவர். சர்க்காரின் முக்கிய தஸ்தவேஜிகளில் ஒன்ருக இதையும் கருதவேண்டும்.

"1810-ம் வருஷத்தையும் அதற்கு அடுத்த இரண்டு வருஷங்களையும் பற்றிய வரையில் டாக்டர் ஹண்டரின் முடிவு வீணுகப்போயிற்று என்று கூற முடியாது. அவர் அபிப்பிராயத்தை ஆதரித்து அதிகம் எழுத முடியும். போர்டாபீஸ் தஸ்தவேஜிகளைப் பார்த்தபின் அந்த வருஷங்களில் உணவுப் பொருள் அதிக கிராக்கியாயிருந்திருப்பது தெரியவருகிறது. பல ஜில்லாக்களிலிருந்து பருவ நிலை அதிருப்திகரமாக இருப்பதாகவும் அப்போது அறிவிக்கப்பட்டது. அநேக இடங்களில் மழை மிகவும் சொற்பம். ஆனல் ரெவினியூ போர்ட் அதிகாரிகள் மட்டும் சர்க்கார் தலையிடக் கூடிய அளவுக்குக் கஷ்டம் தோன்றியிருப்பதாகக் கருதவில்லை. பருவ மழை எதிர்பார்த்தபடி பெய்யாமையும் கஷ்டம் ஏற்படக் கூடுமென்ற பீதி இருந்தமையும் ஹண்டரின் முடிவுக்குச் சாதகமாக இருக்கின்றன என்றே குறிப்பிடவேண்டும். கொடுமையால் பஞ்சம் ஏற்பட்டிருக்குமா என்பதைத் திட்டமாகக் கூற முடியாதாயினும் எது பஞ்சம், எது பஞ்சம் இல்லை என்று நிர்ணயிக்கும் பொறுப்பு அதிகாரிகளிடமே அந்நாளில் இருந்தது. அது அவர்களது மனேபாவத்தையே தழுவி யிருந்தது. அந்த வருஷத்தில் பல ஜில்லாக்களிலிருந்தும் வந்த தகவல்களை யெல்லாம் ரெவினியூ போர்டு அதிகாரிகள் அவசியமின்றி அதிக ஜாக்கிரதையாகக் கவனித்திருப்பது தெரியவருகிறது. (1807-ல் கூட பஞ்சம் ஏற்பட்டதே இதற்குக் காரணமாக இருந்திருக்

கக் கூடும்.) அப்போது போர்ட் அதிகாரிகள் பின் கண்டபடி தெரிவித்தனர்: மிக்க அதிருப்திகரமான விதத்தில் பருவக் கோளாறைப்பற்றி அறிய ஜில்லா உத்தியோகஸ்தர்களும் இதரர்களும் தயங்குவதே இல்லை. இதே மாதிரி மேலதிகாரிகளும் அபிப்பிராயப் படலாமாதலால் இது விஷயமாக மேற்கொண்டு தகவல்களைச் சர்க்காரும் ரெவினியூ போர்டாரும் வர வழைப்பது உசிதமாகாது. தவிரவும் அவற்ருல் பலன் ஏற்படப் போவதில்லை. பொருள் கிடைப் பது அரிதாகப் போகும் காலத்தில் கூட அந்தந்த ஸ்தலத்தில் ஏற்படும் கஷ்டத்தை மட்டும் போக்க சர்க்கார் முன்வந்தால் பலனுண்டு. பொதுவாக எல்லா இடங்களிலும் நிவாரணத்துக்கு ஏற்பாடு செய்வதால் எதிர்பார்த்தபடி பலன் கிடைக்காது. மேற் குறிப்பிடப்பட்ட வருஷங்களில் கஷ்டத்தைத் தாங்க முடிந்ததற்கு முந்திய வருஷங்களில் உற்பத்தி அதிகமாக இருந்தமையும் ஆகவே உணவு தானியங் களின் விலை மிகக் குறைவாக இருந்தமையுமே கார ணங்கள். பருவமழை தவறிப்போய்விட்டது என் பதுபற்றி சந்தேகமே இல்லை. சில ஜில்லாக்களில் கோவில்களில் விசேஷ அர்ச்சனைகளை நடத்தி மழை யை வருவிக்கப் பிரார்த்தனை செய்வதற்கானச் செலவு களையும் சர்க்கார் மேற்கொண்டனர்.

டாக்டர் ஹண்டர் சூரியமண்டலத்தில் உள்ள புள்ளிகளுக்கும் பஞ்சங்களுக்கும் மட்டுமே தொடர்பு இருக்கிறது எனக் கருதுவதாக எண்ண லாகாது. இதில் மழைக்குத்தான் உண்மையில் சம் பந்த முண்டு என்பது அவர் கொள்கை. பருவமழை தவறும்போது பஞ்சம் உடனே தலைகாட்டுகிறது. இதன் பிரகாரம் சூரிய மண்டலத்தில் புள்ளிகள் மிகவும் குறைந்திருக்கும் காலத்தில் தென்னிந்தியா வில் பயிர் நாசத்தினுல் கஷ்டமும் கொடுமையும் ஏற் பட்டன என்பதே இந்திய சர்க்காருக்கு முக்கிய மானது. மழை, கஷ்டம், பஞ்சம் ஆகியவற்றிற் குள்ள சம்பந்தம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப் பதாகக் கூறக்கூடாது. இதர வியாஜங்கள் கார

ணமாக மழை அதிகம் பெய்யாவிட்டாலும் கஷ்டம் அதிகமாக இருப்பதில்லை! கொடுமையின் அளவு சில சமயங்களில் வெகுவாகக் குறைவதும் உண்டு. உதாரணமாக கன்னடத்திலும் மலையாளத்திலும் மழை சாதாரணமாகவே அதிகமாதலால் அங்கு 10 அல்லது 20 அங்குலம் மழை ஒருவருஷத்தில் குறைந்தாலும் பாதகம் இல்லை. ஆனால் கிழக்குக் கரையோர ஜில்லாக்களில் இம்மாதிரியானல் கஷ்டம் தாங்கமுடியாததாக இருக்கும். விவசாயம் செழிப்புற்றிருப்பதற்கு வருஷம் முழுதும் மழை பெய்துகொண்டே இருக்க வேண்டும். மழை குறைவாக இருக்கும் காலத்திலும் வருஷம் முழுதும் மழை பெய்து வந்தால் அதிக பாதகம் ஏற்படாது.

1843-ம் வருஷத்திலும் அதை அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் கஷ்டம் நாட்டில் வியாபித்திருந்ததாகத் தெரியவில்லையாயினும் 1845, 46-ம் ஆண்டுகளில் சேலம், கோயமுத்தூர், கடப்பை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களில் மழை மிகக் குறைவாக இருந்தது. துர்ப்பிக்ஷமும் எதிர்பார்க்கப்பட்டது. நிவாரண முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. 1846-ம் வருஷ மத்தியில் மழை தாராளமாகப் பெய்ததால் அவைகளுக்குப் பிறகு அவசியமிராமற் போய்விட்டது. மேலே குறிப்பிடப்பட்ட ஜில்லாக்களில் மழை குறைவாக இருந்தது டாக்டர் ஹண்டரின் முடிவை ஆதரிக்கிறதா அல்லது நாட்டில் பிரதி வருஷமும் ஏதாவது ஜில்லாவொன்றில் மழைக்குக் குறைவு இருப்பதற்கு ருசுவா என்பதைத் திட்டமாகத் தெரிவிக்க முடியாது.

1854-ம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்திற்குக் காரணம் அதற்கு முந்திய வருஷத்தில் பயிர் சாவியாகப் போனதே என்று எலியட் குறிப்பிட்டு ஹண்டரின் கொள்கையைக் கண்டித்ததற்கும் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் பலரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் தமது சமாதானத்தை அறிவித்தார்.

"இது உண்மைதான். ஆயினும் டாக்டர் ஹண்

டரின் முடிவுக்கு இது விரோதமாக இருப்பதாகத் தீர்மானிக்க முடியாது. அபாயகரமானது என்று குறிப்பிடப்பட்ட வருஷத்திற்குச் சற்று முன்பு மழைக் குறைவு இருந்திருக்கிறது. சூரியனிலுள்ள புள்ளிகளுக்கும் மழைக்கும் தொடர்பு இருப்பதைக் கண்டு பிடிக்கையில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சற்று முன்போ அல்லது அதற்கு பின்போ எதிர்பார்க்கும் சம்பவம் நிகழக் கூடுமென்பதை நாம் எதிர் பார்த்தே யாகவேண்டும். இதற்குச் சில சாமானிய மான காரணங்கள் இருக்கக்கூடும். ஆகவே இந்த முடிவு ஒப்புக்கொள்ளத்தக்கது என்று நாம் கருத வேண்டும். 1853-ம் வருஷத்தில் மாகாணம் பூரா வும் கஷ்டம் இருந்தது. ஆனால் இயற்கை ஸ்திதி காரணமாக சில ஜில்லாக்களில் அதிகமாயும் சிலவற் றில் குறைவாயும் அது இருந்தது''

1866-ம் வருஷத்தில் எலியட் குறிப்பிட்டதுபோல கஞ்சம் ஜில்லாவில் மட்டும் பஞ்சக் கஷ்டம் அதிகமாக இருக்கவில்லை எனவும் மாகாணம் பூராவிலும் மக்கள் அவதிப்பட்டிருப்பதிலிருந்து டாக்டர் ஹண்டரின் முடிவை ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பதாயும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தெரிவித்தார்.

இரண்டொரு விஷயங்களில் ஹண்டரின் முடிவுக் கும் நடந்த நிகழ்ச்சிகளுக்கும் முரண்பாடு இருந்த போதி லும் பொதுவாக அதை ஆக்ஷேபிப்பது சரியல்ல என்பதே இவர் சித்தாந்தம். ஹண்டர் மூன்று வருஷங்களை "அபாய கரமானவை" எனக் குறிப்பிட்டதற்கு அதில் எந்த வரு ஷத்தில் வேண்டுமானாலும் கஷ்டம் சம்பவிக்கக் கூடும் என்பதே காரணம் என்றும் அந்த மூன்று வருஷங்களி லும் பஞ்சம் இருக்கும் என எதிர்பார்க்கக் கூடாது என வும் இதை மனசில் இருத்திக்கொண்டு ஹண்டரின் முடிவு களைப் பரிசீலனை செய்பவர்களுக்கு அவர் கண்ட உண்மை தெளிவாகத் தெரியும் எனவும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தெரிவித்தார்.

இந்த ஏழு தொகுதிகளில் ஐந்தில் பஞ்ச நிலைமை தலை காட்டியிருப்பதாயும் ஒரு சமயம் இதற்குச் சற்று முந்திய

வருஷத்தில் பஞ்சம் ஏற்பட்டதாயும் மற்றும் ஒரு சமயத்தில் அதாவது 1843-ம் வருஷத் தொகுதியில் சந்தேகத்திற்கு இடமேற்பட்டதாயும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வெளியிட்டார். ஹண்டர் இரண்டொரு சந்தர்ப்பங்களில் பிசகிப்போயிருப்பதால் அதற்கும் நிகழ்ச்சிகளுக்கும் அதிகப் பொருத்தம் இருப்பதாகக் கருதவேண்டும் என இவர் அபிப்பிராயப்பட்டார். பிசகுக்கு காரணம் என்ன என்பதையும் அதனுல் முடிவு ஆக்ஷேபிக்கத்தக்கதா என்பதையும் நிபுணர்கள் ஆராய்ந்து அறிவிக்க வேண்டும் என்று இவர் அச்சமயம் கூறினர்.

புள்ளிகள் சொற்பமாக இருக்கும் காலத்தில் பஞ்சம் தான் நாட்டில் ஏற்பட வேண்டுமென்பது அவசியமில்லை என்றும் அப்படி முடிவு கூறுவது சரியல்ல எனவும் ஆனல் அந்தச் சமயத்தில் மழை மிகக் குறைவாக இருக்கும் என்பதை மட்டும் நிச்சயமாக நிர்ணயித்துச் சொல்லலாம் என்றும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதினர். பஞ்சம் சம்பவிப்பதும் அது சம்பவியாமையும் மழையின்மையுடன் இதர காரணங்களும் சேருவதையே தழுவியிருப்பதாக இவர் தெரிவித்தார். ஆனல் இந்தக் குறிப்பிட்ட வருஷங்களில் மிக்க ஜாக்கிரதையாக இருந்து நிலைமை மிதம் மீறிப் போகாமல் பார்த்துக் கொள்வதே விவேகம் என்றும் இவர் அபிப்பிராயப்பட்டார்.

சூரிய மண்டலத்தில் காணப்படும் விநோதத்தில் மனசைப் புகுத்தாமல் பொதுவாக நாட்டில் இருந்துவரும் நிலைமையைப் பரிசீலித்து இதே மாதிரியான முடிவுக்கு ஒரு பெரிய அதிகாரி வந்திருப்பதும் குறிப்புக்குரியது.

"மொத்தத்தில் வங்காள மாகாணத்தைத் தவிர மற்ற மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் 11 அல்லது 12 வருஷங்களுக் கொரு முறை பஞ்சம் ஏற்படும் என ஓரளவுக்கு எதிர்பார்க்கலாம். ஒரே நூற்றுண்டில் இரண்டு தடவை மிகப்பெரிய பஞ்சம் நாட்டைப் பீடிக்கிறது,"* என்கிருர் ஜஸ்டிஸ் ஸர் ஹென்ரி கன்னிங்ஹாம். ஆகவே இந்த விஷயத்தி

*பிரிட்டிஷ் இந்தியாவும் அதன் அதிகாரிகளும் (1881) பக்கம் 254

லும் ஒரு நியதி இருப்பது தெளிவுபடும். நியதியைத் தெரிந்துக்கொண்டு நடந்து கொள்வது விவேகமல்லவா?

சூரிய மண்டலத்தில் காணப்படும் இந்த விசேஷத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றும் இதர பிரச்னைகள் தீர்க்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடிக்கும் இதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஜெவான்ஸ் என்ற பொருளாதார நிபுணர் தெரிவித்தார். இதே அதிசயத்தை ஆதாரமாகக் கொண்டு யுத்தங்கள் அடிக்கடி நடப்பதேன் என்பதை ரஷ்ய விஞ்ஞானியான சிஜவ்ஸ்கி நிர்ணயித்தார். சூரிய மண்டலத்திலிருந்து கிளம்பும் கிரணங்கள் மனிதர்களின் மனதைக் கெடுத்து மஹா யுத்தங்கள் முளைக்க ஹேதுக்களாய் இருப்பதாக அவர் கருதினர். தற்போது நடக்கும் இந்த யுத்தம் சூரியனின் புள்ளிகள் அதிகமாக இருக்கையிலேயே ஆரம்பித்ததல்லவா?*

ஆனல் இந்த பதினேரு வருஷகாலத்தில் சூரியனில் உள்ள புள்ளிகள் அதிகரிப்பதும் குறைவதும் இன்னமும் மர்மமாகவே இருக்கிறது. ஆராய்ச்சியில் நாம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறபோதிலும் இதன் சூக்ஷ்மத்தை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை. 1876-ம் வருஷத்தில் ஜெர்மனியில் ஷ்வாபே என்பவர் தூரதிருஷ்டிக் கண்ணுடியைக் கொண்டு சூரிய மண்டலத்தை ஆராய்ந்தார். புதிய கிரஹத்தைக் கண்டுபிடிக்க அவர் செய்த முயற்சியே இதற்குக் காரணம். சுமார் 16 வருஷ காலம் அவர் இடைவிடாமல் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். புள்ளிகள் எப்போது எங்கு தென்படுகின்றன என்பதையெல்லாம் அவர் குறிப்பிட்டு வைத்துக்கொண்டார். கடைசியில் புள்ளிகள் சில சமயங்களில் சொற்பமாக இருப்பதையும் அவர் கண்டார். ஆனல் இந்த விஷயத்தில் அவர் ஒரு நெறிமுறையை நிர்ணயித்தார். அதாவது பத்தரை வருஷங்களுக்கொரு முறை புள்ளிகள் அதிகரித்தும் குறைந்து கொண்டும் வருவதாக அவருக்குத் தெரிய

*ஸ்ரீ எம். வி. ராமகிருஷ்ணன் வியாஸம், 'ஹிந்து': 24. 1. 43.

வந்தது. அவர் இதை உலகுக்கு அறிவித்தபோது இதைப் பற்றி எல்லோரும் அசட்டையாக இருந்தனர். இதற்கு 9 வருஷங்களுக்கப்புறம் முனிச்சிலிருந்து வான் லேமண்ட் என்ற வான சாஸ்திர நிபுணர் பூமியிலுள்ள காந்த சக்திக்கும் சூரியனிலுள்ள புள்ளிகளுக்கும் உள்ள ஆகர்ஷண உறவைக் கண்டறிந்தார். புள்ளிகள் அதிகமாயிருக்கும் போது ஆகர்ஷணமும் அதிகமாயிருப்பதாக மறு வருஷம் ஸர் எட்வர்ட் ஸபைன் அறிவித்தார். இதற்கப்புறம் தான் இந்தப் புதிய ஆராய்ச்சியில் சிரத்தை மேலிட்டது. சூரியனில் உள்ள புள்ளிகள் அங்குள்ள காந்தத்தின் அறிகுறிகள் என்பதும் புள்ளிகள் அதிகமானவுடன் பூமியும் அவற்றினல் பாதிக்கப்படுவதாயும் பிறகு இங்கும் இடி மழை முதலியன ஏற்படுவதாயும் விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளனர்.

படிக்கும் நாளில் பிறந்த பழக்கம் காரணமாகப் புதிய புதிய விஷயங்களைக் கற்றுத் தெரியவேண்டும் என்ற ஆர்வம் கடைசிவரையில் ஸ்ரீநிவாஸராகவையங்காரைக் கவ்விக் கொண்டிருந்தது. உத்தியோகமேற்ற பின்பும் அதிலிருந்த உவப்பு இவரை விடவே இல்லை. ஆகவே நல்ல படிப்பாளி, நாலு விஷயங்களையும் நன்கு அறிந்தவர் என்ற பிரசித்தி வெகு சீக்கிரத்திலேயே இவருக்கு வாய்த்தது. காரியாலயத்தில் உடனிருந்தவர்களுக்கெல்லாம் இவரிடம் ஒரு தனி மதிப்பு ஏற்பட்டது. தஞ்சையைவிட்டு சென்னைக்கு வந்ததும் மயிலையில் இவர் குடியிருந்தார். கபாலீஸ்வரர் குளத்தைத் தாண்டிச் சற்றுத் தென்புறமாகச் சென்றதும் ப்ராடீஸ் ரோட்டில் இருந்த வீடொன்றில் இவர் அந்நாளில் வாசம் செய்தார். எதிர் வாடையில் நூறுகெஜ தூரத்தில் ஒரு பெரிய கட்டடத்தில் வெங்காசாமி ராவ் வாழ்ந்து வந்தார்; வரும் வழியிலேயே திவான் பஹதூர் ரகுநாத ராவின் கிருஹம் இருந்தது. லஸ் ரோட்டில் பாஷ்யமையங்கார் அப்போதுதான் பங்களா வாங்கியிருந்தார். மாலையில் இவர் நேராகத் தமது வீட்டுக்குத் திரும்பிவருவார். வந்ததும் வராததுமாகப் புத்தகத்தை எடுத்துக் கொள்வார். படிக்க வாரம்பித்தால் பொழுது போவது கூடச் சில சமயங்களில் தெரியாமற் போய்விடும். சாப்பிடுவதற்கு மனைவி அறைக்கு வந்து அழைக்கும்போதுதான் அதிக நேரம் கழிந்துவிட்டதை இவர் கண்டுக்கொள்வார். படிப்பில் கவனத்தைச் செலுத்த முடியாவிட்டால் வெங்காசாமி ராவிடம் போய்ப் பேசிவிட்டு வருவார். ஆனால் அது வெட்டிப் பேச்சாக இராது. தினசரி வாழ்க்கைத் திட்டப்படி நடந்து வந்தது.

இதே சமயம் தந்தையாரின் தேக வியோகத்திற்கப்புறம் மூத்த புத்திரனான இவர் மீதே அவர் வகித்துவந்த பூரா பொறுப்பும் விழுந்தது. இருபத்தி ஏழாம் பிராயத்திலேயே பாரத்தைத் தாங்கவேண்டி வந்தது. உடன்பிறந்தவர்களின் சுக வாழ்வில் சிரத்தை உதயமான சமயத்தில்

இவருக்குச் சொந்த குடும்பமும் அபிவிருத்தியடைந்தது. 1872-ல் புத்திரி சுந்தரமும் பிதாவின் மரணத்திற்கப்புறம் அக்டோபரில் புத்திரர் சேஷாத்ரியும் பிறந்தனர். புத்திர னுக்குப் பாட்டனுரின் பெயரையே இவர் அளித்தார்.

ஸ்ரீநிவாஸராகவையங்காரின் முதல் சகோதரியான கோமளம் சுரக்குடியில் விவாகம் செய்விக்கப்பட்டு அவ ருடைய கணவர் ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார் பிறகு வெகுகாலம் நாகப்பட்டினத்தில் வக்கீலாக இருந் தவர். இரண்டாவது சகோதரிக்கு திருவாரூருக் கரு காமையிலிருக்கும் எருக்காட்டூரில் கல்யாணம் நடந்தது. எருக்காட்டூர் அழகிய சிங்கையங்கார் மிராசுதாராக இருந்து கஷ்டமின்றி வாழ்ந்துவந்தார். கடைசி இரு சகோதரிகளை தக்க புருஷரிடம் ஒப்புவிக்கும் கடமை இவருக்கேற்பட்டது. 1880-ம் வருஷம் தம் மூத்த குமா ரிக்கும் கல்யாணத்தை நடத்த இவர் ஏற்பாடுகள் செய் தார். கும்பகோணத்தில் விவாகம் மே மாதத்தில் மிக்க திருப்திகரமாக நடந்தது. பந்துக்கள் யாவரும் வந்திருந் தனர். இரண்டாம் குமாரனை சாரங்கபாணி ஜனித்த வருஷம் இதுவே. இந்த விவாகத்திற்காகக் கும்பகோ ணத்திற்குப் புறப்படுமுன் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஸ்டோக்ஸைப் பார்க்கச் சென்றார். அப்போது ஸ்டோக்ஸ் இவருடன் நீண்டநேரம் சம்பாஷித்து இவரது குடும்ப ஸ்திதியைக் குறித்து மிக்க பரிவுடன் விசாரித்தார். இயன்றளவுக்கு ஏதாவது சௌகரியம் புரியவேண்டும் என்பது அவருடைய நோக்கம். அந்தச் சமயம் இவர் தமக்கடுத்தவரான ஸௌந்திரராஜ ஐயங்கார் பி. ஏ. பட் டத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு கள்ளிக்கோட்டை ஜாமுதிரி கலாசாலையில் போதகாசிரியர் வேலையில் இரண்டு வருஷ காலமாய் இருந்து வருவதாயும் கடைசி சகோதர ரான கஸ்தூரி ரங்கையங்கார் சட்டக் கல்லூரியில் படித் துக் கொண்டிருப்பதாயும் அவரிடம் அறிவித்தார். உடனே கள்ளிக்கோட்டையில் உபாத்தியாயர் வேலையை விட்டு, சர்க்கார் உத்தியோகத்தை யேற்க ஸௌந்திரராஜ னுக்குச் சம்மதமானால் தாம் அவருக்கு உதவியளிக்கத் தயாரா யிருப்பதாக ஸ்டோக்ஸ் தெரிவித்தார். படிப்பு பூர்த்தியானபின் அதற்கடுத்தவரைப் பற்றிப் பேசலாம்

என்றும் ஸ்டோக்ஸ் சொன்னார். கும்பகோணத்திற்குச் சென்றதும் அங்கு வந்திருந்த தம்முடைய இரண்டாம் தம்பியிடம் இவர் இதை வெளியிட்டு இதற்கு இணங்கும் படி சொன்னார். அவரும் சம்மதித்தார். ஊர் திரும்பிய தும் இதை இவர் ஸ்டோக்ஸிடம் தெரிவித்தபோது அப் போதுதான் சேலம் ஜில்லா கலெக்டராக நியமிக்கப்பட்ட அவர் உடனே ஸௌந்திரராஜ ஐயங்காருக்கு சேலத்தில் குமாஸ்தா பதவி அளித்து உத்திரவிட்டார். அதிக ஊதி யம் கிடைத்துவந்த உபாத்தியாயர் வேலையைத் துறந்து விட்டு இளைய சகோதரரும் மூத்தவர் போலவே குறைந்த வருமான முள்ள சர்க்கார் உத்தியோகத்தில் பிரவேசித் தார்.*

இதே காலத்தில் மயிலாப்பூர் ஹிந்து சாசுவத நிதியின் நிர்வாக சபையில் ஸ்தானம் ஏற்கும்படி இதர டைரக்டர் கள் இவரைக் கேட்டுக் கொண்டனர். "டைரக்டர்கள் சமூகத்தில் இவ்வருஷம் பின்கண்ட மாறுதல்கள் ஏற்பட் டன. இரண்டு டைரக்டர்களான ஸ்ரீமான்கள் பி. ராமச் சந்திர ராவும், எம். சுப்ரமணிய சாஸ்திரியும் 59-வது விதிப் பிரகாரம் தங்கள் பதவியிலிருந்து விலகிக்கொண்டனர். ஸ்ரீமான்கள் ஸி. சாம்பையச் செட்டியாரும் எஸ். ஸ்ரீநிவா ஸராகவையங்காரும் அவர்களுக்குப் பதிலாகப் பதவி யேற்க சம்மதித்தனர்" என்று அந்நிதியின் 1880-ம் வரு ஷத்திய யாதாஸ்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது நிதியின் அக்ராசனராக இருந்தவர் ஸி. முத்துஸ்வாமி முத லியார்; மயிலையில் இருந்தார். வியாபாரத் துறையில் ஈடு பட்ட அவருக்கு அதிகம் செல்வாக்கு இருந்தது. உப தலைவர் ஸ்தானத்தை சறுக்கை கோபாலாச்சாரியார் ஸ்வீ கரித்திருந்தார். அவர் அப்போது ஹைக்கோர்ட்டில் வக் கீல் தொழிலை மேற்கொண்டிருந்தார். டி. ஆர். ராமநாத ஐயர், எம். சாமிநாத முதலியார், எஸ். துரைசாமி முதலி

*ஸௌந்திரராஜையங்காருக்கும் காங்கிரஸ் மகா சபைத் தலைவரான சேலம் ஸி. விஜயராகவாச்சாரியா ருக்கும் இக்காலத்தில் பிறந்த சிநேகம் சுமார் அறுபது வருஷ காலத்திற்கு நீடித்திருந்தது. சேலத்தில் கல வரம் நடந்தபோது ஸௌந்திரராஜையங்கார் அங் கிருந்தார்.

யார், எம். ஆதிபுரி முதலியார், எம். டி. கோபாலாச்சாரி யார், வி. சுப்பராமையர், எம். தேசிங்கு ராவ் நாயக்கர், ஸி. பாஷ்யமையங்கார் ஆகியோர் மற்ற டைரக்டர்களாக இருந்தனர். அந்த நாளில் கிழக்கு மாட வீதியில் 3-ம் நெ. இல்லத்தில் மயிலை நிதியின் காரியாலயம் இருந்தது. மற்ற நிர்வாகிகளின் அழைப்புக் கிணங்கி இவ்வருஷம் ஏப்ரல் மாதம் இவர் நிதியின் பங்குதாரரானர்.

இந்த நிதியின் பரிபாலனத்தில் இவர் மேற்கொண்ட சிரத்தையைப்பற்றிக் குறிப்பிடுமுன் நிதி ஆரம்பித்து நடந்துவந்த விபரத்தை இங்கு வெளியிடுவது அவசிய மாகும். 1870-ம் வருஷக் கடைசியில் ஒரு நாள் காலை ஆர். பாலாஜிராவ் கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருந் தார். வழியில் ஒரு கூட்டத்தையும் அங்கு பலத்த வாக்கு வாதத்தையும் அவர் பார்த்தார். விஷயம் என்ன வென்று விசாரித்ததில் ஒரு வக்கீல் மார்வாரியிடம் சிக்கிக்கொண்டு மீள முடியாமல் தவிப்பது தெரியவந்தது. இம்மாதிரி நிலைமை நீடிக்க விடுவதா ? இதைத் தடுக்க வழிதேட வேண்டாமா ? வாங்கிய கடனைக் கஷ்டமின்றித் திருப் பித் தருவதற்கு வகைக் கண்டுபிடிப்பது முதல் காரியமல் லவா ?—இவ்விதம் சிந்தித்துக் கொண்டே பாலாஜி ராவ் சென்ருர். இதே யோசனையில் பல நாட்கள் கழிந்தன. இங்கிலாந்தில் கட்டட நிர்மாணத்திற்கு உதவுவதற்காகப் பல ஸ்தாபனங்கள் ஆரம்பித்து அவை மிகவும் திருப்திகர மாக வேலை செய்வதை அந்நாளில் அனைவரும் அறிவர். பரஸ்பர நலனை யுத்தேசித்து அவை நிர்வகிக்கப்பட்டு வந் தது நாடு முழுதும் பிரசித்தமாக இருந்தது. ஆகவே அதே மாதிரி ஒன்றை மயிலையில் நிறுவ பாலாஜி ராவ் தீர்மானித் தார். இந்த ஸ்தாபனத்தில் பங்கெடுத்துக் கொண்டிருப்ப வர் மட்டும்தான் அதன் மூலம் செளகரியம் அடையலாம். பங்குதாரர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத் துக் கொஞ்சம் கொஞ்சமாக அதை வசூலிப்பதே இதன் முதல் பொறுப்பாக இருந்தது. இது தவிர, நிதியில் பணத் தைச் சேமித்து வைப்பவர்களுக்கும் அதே வட்டி அளிக் கப்பட்டு வந்தது. நகர வாசிகளுக்காகவே இது ஸ்தாபிக் கப் பட்டது. 1871-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இந்த நிதியை பாலாஜி ராவ் ஸ்தாபித்தார். இது ஒரு வருஷகாலம்

சரிவர வேலை செய்தது. வாடகை மாதா மாதமும் கொடுத்து வந்தார். இந்தச் சமயத்தில் ஹைக்கோர்ட் தீர்ப்பொன்றின் காரணமாக எல்லா பொது ஸ்தாபனங்களும் சட்டப்படி பதிவாக வேண்டுமென்று விதிக்கப் பட்டது. அப்படி ரிஜிஸ்தராகாத சங்கங்கள் பல இதன் பிறகு கவிழ்ந்து போயின. கம்பனிச் சட்டம் இயற்றப் பட்டு பல வருஷங்களாகியும் இந்த ஸ்தாபனங்களின் நிர் வாகிகளில் பெரும்பாலர் அதை யறியாமலேயே தங்கள் அலுவல்களைக் கவனித்து வந்தனர். ஆனால் புதிய தீர்ப்பு நல்ல பலனைப் பயந்ததாகவே கருதவேண்டும். மயிலை நிதியையும் பதிவு செய்ய இவ்வருஷம் ஆகஸ்டு மாதம் முடிவு செய்யப்பட்டது ஒருபுறமிருக்க, சொந்த லாபத் தையும் நிர்வாகிகள் நலனையும் கோரி நடத்தப்பட்ட பல நிதிகள் இதற்கப்புறம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போயின. "ஹைக்கோர்ட்டு முடிவு காரணமாகப் பல சங்கங்கள் முறிந்தன. இவை கோர்ட்டுக்குப் போனால் செல்லாது என்பதை யறிந்த கடன்காரர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்தனர். ரிஜிஸ்தர் செய்துகொண்ட பின்பு கூட அதற்கு முன்பு அளித்த கடன்களை வசூலிப்ப தைச் சட்டம் அனுமதிக்கவில்லை யாகையால் பல கலைக் கப்படுவது அவசியமாகி விட்டது. சில திரும்பவும் துவக் கப் பட்டன: விதிப்படி பதிவாயின. ஆனால் பல சங்கங் கள் சுமார் 20 லக்ஷ ரூபாய்க்குக் குறையாமல் பறிகொடுத் தன" என்று பின்னொரு சமயம் ஸர் ப்ரெட்ரிக் நிக்கல் ஸன் இதைப்பற்றிக் குறிப்பிட்டார்.*

"சில சங்கங்களில் வேறு சில தவறுகளும் தென்பட் டன; நிதிகளை ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் ஆரம் பித்தவர்களில் பலர் காலமாகிவிட்டனர். மற்றும் சிலர் பதவியிலிருந்து விலகிக் கொண்டனர். இவர்களுக்குப் பதி லாக நேர்மையும் திறமையும் பொறுப்புமற்ற பலர் நிர்வா கத்தை ஸ்வீகரித்தனர். வசூலான சந்தாக்கள் சொந்தத் திற்கு விநியோகமாயின. ஒரு நிதியில் டைரக்டர்களுக்கும் பிறருக்கும் நல்ல ஊதியம் அளிப்பதிலேயே ஆயிரக் கணக் கில் பணம் விரயமாகியது. சென்னையிலும் இதர இடங்

*சென்னையில் நில விவசாய பாங்கிகள் அமைப்பு பற்றிய யாதாஸ்து 1895 பக்கம் 276

களிலும் போலிச் சங்கங்கள் ஏமாற்றிப் பணம் சம்பாதிப்ப தற்காகவே பிறந்தன. லாபம் அதிகம் கொடுப்பதாகச் சிறிது காலம் கூறிவந்து போதிய சந்தா சேர்ந்ததும் சில சங்கங்கள் மூடிவிடப்பட்டன. ஒரு ரூபா செலுத்தினுல் இரண்டு ரூபா லாபம் கிடைக்கும்படிச் செய்வதாயும் சிலர் கூறினர். இத்தகையவை 'லபக்' நிதிகள் என்றழைக் கப்பட்டு சமூகத்திற்கே அவமானம் விளைவித்தன. பணம் போட்டவர்களுக் கேற்பட்ட நஷ்டம் தவிர இம்மாதிரி நாணயச் சங்கங்களிடமிருந்த மதிப்பும் வெகுவாக இத ஞல் குறைந்து போயிற்று.*

பாலாஜிராவ் புதிய நிதியை ஸ்தாபிக்க முன்வந்த சமயத்தில் இருந்த நிலைமை இது. குண தோஷங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டே அவர் இந்த பரோபகாரத் துறையில் பிரவேசித்தார். மயிலை நிதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு 1872-ம் வருஷம் நவம்பர் மாதம் முதற்கொண்டு புதிய நிதிபோல் நடக்கலாயிற்று. ஒன்பது சகாக்களைச் சேர்த்துக் கொண்டு அவர் இந்த வேலையில் முனைந்தார். அர்பத்நெட் கம்பனி துபாஷியான ஸி. வி. முனுஸ்வாமி முதலியார் அக்கிராசனராக முதல் வருஷத்தில் இருந்து இதற்கு ஆதரவு வலுக்க உதவினுர். மற்றொரு துபாஷியான பி. வாசுதேவ முதலியார், கலக்டர் ஆபீஸ் தலைமைக் குமாஸ்தா எம். சிங்காரவேலு முதலியார், சர்க்கார் பென்ஷனர் எம். ஸ்ரீநிவாஸாச்சார்லு, ஹைகோர்ட் மொழிபெயர்ப்பாளர் எம். சுப்பராயமுதலியார், கோவிந்தநாய்க்கர் பள்ளிக்கூடப் பிரதம உபாத்தியாயர் டி. ஆர். ராமநாதையர், நிலச்சுவான்தாரரான ஸி. ராமஸ்வாமி ஐயங்கார், பிரஸிடென்ஸி காலேஜ் குமாஸ்தா ஸி. சேஷையா, பொது மராமத்திலாகா கணக்குப் பரிசோதகர் பி. தர்மலிங்க முதலியார் ஆகியோர் நிர்வாகிகளாக இருந்து பெரும் பொறுப்பைப் பூண்டனர். மாதம் ஒரு ரூபா வீதம் ஏழுவருஷ காலத்திற்குச் சந்தாவை வசூலித்து மூன்றுலக்ஷ ரூபா மூலதனத்துடன் இதை ஸ்தாபிக்க முடிவு செய்யப்பட்டது. ஏழு வருஷம் பூர்த்தியானதும் சந்தாதார் ஒவ்வொருவருக்கும் 100 ரூபா கொடுக்கப் பட்டது. வசூலான சந்தாவிலிருந்து சந்தா

*ஸர் ப்ரெட்ரிக் நிக்கல்ஸனின் யாதாஸ்து 1895 பக்கம் 276

தார்களுக்குக் கடன் கொடுக்க வசதி செய்யப்பட்டது. தவணை மீறி கடனைத் தருபவர்களிடமிருந்து அபராதம் வசூலிக்கவும் ஏற்பாடாகியது.

ஆரம்பத்திலிருந்தே மயிலை நிதி நிர்வாகமுறை எங்கும் பாராட்டப் பட்டது. உண்மையிலேயே அருகதையுள்ளவர்களுக்கு உதவுகிறது என்பதை எல்லோரும் கண்டு கொண்டனர். இத்தகைய பரந்த நோக்கத்துடன் பொது நலனைப் பிரதிக்ஷித்து வரும் இந்த நிதியின் நிர்வாகத்தில் கலந்து கொள்ள ஸ்ரீநிவாஸராகவையங்கார் சம்மதித்தார். நிதி ஆரம்பித்து எட்டு ஆண்டுகள்கூட சரிவர நிறைவேற வில்லை. பால்ய தசையைத் தாண்டிய பின்பு பராமரிப்பது பெரிதல்ல. ஆரம்ப காலத்தில் பொறுப்பேற்று அதை அபி விருத்தி செய்வதுதான் பெரிது. வெகு நாட்கள்வரை பாலாஜிராவே காரியதரிசியாக இருந்தார். காரியத்தில் அவர் கண்ணும் கருத்துமாக ஊன்றியிருந்தது குறிப்புக்குரியது. அவர் அனுஷ்டித்த சிக்கன முறைகள் இன்றும் சிலாகிக்கத் தக்கவை. தாம் முன் நின்ற காலம் முழுமையும் அநாவசியச் செலவுக்கு அவர் இடம் அளித்ததே இல்லை. நிதியின் ஐம்பதாம் ஆண்டு பூர்த்திவிழாவின்போதுகூட இதையே நிதியின் நிர்வாகிகள் மனமாறப் புகழ்ந்தனர். பிரதிப் பிரயோசனத்தை எதிர்பாராமல் எல்லோரும் சேவை செய்தனர். முக்கியமான அலுவல்களை யெல்லாம் மூல புருஷர்களே நேரில் கவனித்தனர். நிதியில் 16 டைரக்டர்கள் இருந்தனர். ஒவ்வொருவரும் நான்கு வருஷகாலம் பதவியில் இருந்தனர். அவர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் பங்குதார்கள். சுமார் மூன்று வருஷங்கள் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சேவை புரிந்தார்.

நிதியின் வரவு செலவுக் கணக்குகளை இவரே பரிசோதிப்பது வழக்கம். கூடியவரையில் பிரதி தினமும் நிதிக்குப் போய்விட்டு வருவார். அன்றாடப் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் காரியதரிசியுடன் சேர்ந்தாலோசிப்பார். சிறிது அசிரத்தையாக இருந்தாலும் சிக்கல்கள் சம்பவிக்கக்கூடும். கொஞ்சம் கண்மூடித்தனமாய்க் கடன் கொடுத்துவிட்டால் நிதிக்குக் கேடுதான் விளையும். போதிய ஜவேஜி ஆதாரமாக இருக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டும். கடன் வாங்குபவர் கண்ணியமான

வரா என்பதையும் தெளிவாகத் தெரிந்துக்கொள்ள வேண்டும். அந்த நாளில் நிதியின் பங்குதார் ஜாபிதாவைப் புரட்டிஞல் பலதரப்பட்டவர்களை அதில் பார்க்கலாம். பலவிதத் தொழில்களை நடத்தியவர்கள் அதில் சேர்ந்திருந்தனர். மிக்க எளியவர் முதற்கொண்டு மேலானவர் வரையில் அங்கு ஒரே சமமாயிருந்தனர். பட்சபாதம் காட்டிஞல் அதிகாரிகளிடம் அவநம்பிக்கை பிறந்துவிடும். தாட்சிண்ய புத்தி தலையிடவிட்டால் தகராறுகளுக்கே இடம் கொடுக்க நேரிடும்.

நிதியின் 1881-ம் வருஷத்திய யாதாஸ்தில் பின்கண்டபடி குறிப்பிடப்பட்டது :—

> "இவ் வருஷம் வழக்குகள் மிகக் குறைவாக இருப்பதற்கும் பாக்கியிருந்த பணத்தில் பெரும்பகுதி வசூலாகியதற்கும் அனுகூலமடைந்த சந்தாதார்கள் செலுத்தும் கட்டணங்களை ஒவ்வொரு கூட்டத்திலும் டைரக்டர்கள் அதி ஜாக்கிரதையாய் கவனித்து வந்ததே காரணமாகும் என்பதில் சந்தேகமில்லை.
>
> நிதியில் போடப்பட்ட பணத்தின் தொகை கொஞ்சம் ஜாஸ்தியாகி யிருக்கிறது."

அடுத்த வருஷத்திய ரிபோர்ட்டிலிருந்து அடியிற்கண்ட பகுதி எடுக்கப்பட்டுள்ளது:—

> "டைரக்டர்கள் அளித்துவந்த கடன்தொகை இப்போது 62, 283 ரூபாயிலிருந்து 90,455 ரூபாய்க்கு அதிகரித்திருக்கிறது. இதஞல் மாதா மாதம் சராசரி 8000 ரூபா கடன் கொடுக்கப்பட்டுவருகிறது. ஏழு வருஷத்திற்கப்புறம் சந்தாதார்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டணத்தின் அதிகரிப்புக்கும் சந்தாவைச் செலுத்தாமல் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டணத்தில் காணப்படும் குறைவும் திருப்திகரமான அம்சங்கள். நிதியில் பணத்தைப் போட்டு வைத்தவர்களுக்கு அதிகப்படி வட்டி கொடுக்க டைரக்டர்கள் முடிவு செய்தனர்"

இவ்விரு குறிப்புக்களிலிருந்து டைரக்டர்களுள் ஒருவராக இருந்த ஸ்ரீநிவாஸராகவையங்காரின் சேவையையும் ஓரளவுக்கு மதிப்பிடமுடியும்.

1881-ம் வருஷம் நவம்பர் மாதம் பக்கிங்ஹாம் பிரபு ஸ்தானத்திற்கு சென்னை மாகாண கவர்னராக க்ராண்ட் டப் வந்து சேர்ந்தார். அவர் அதிகாரம் வகித்த ஐந்து வருஷ காலம் முழுமையும், பிற்போக்காளர்களுக்கே கொண்டாட்டம்! அவர் ஆட்சியில் பிறந்த உத்திரவுகள் மூலம் இதை அறிய இயலும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குத் தடைகளும் கட்டுப்பாடுகளும் தாண்டவமாடின: பொதுஜன நன்மைக்கும் அவர்களுக்கும் எந்த விதச் சம்பந்தமும் இருக்கக்கூடாது என்பதே புதிய கவர்னரின் பிரதான நோக்கம். பதவியேற்ற மறு வருஷமும் இதற்கேற்ப அவர் உத்திரவிட்டார். பொது ஸ்தாபனங்களில் பங்கெடுத்துக்கொண்ட சர்க்கார் உத்தியோகஸ்தர் பலர் தங்கள் ஸ்தானங்களைத் துறந்து விடவேண்டியது அவசியமாயிற்று. ஸ்ரீநிவாஸராகவையங்காரும் நிதி டைரக்டர் பதவியை இது காரணமாக ராஜிநாமா செய்தார்; நான்கு வருஷ காலம் பூர்த்தியாவதற்குள்ளேயே இவர் வெளியே வரவேண்டியதாயிற்று. இதர டைரக்டர்கள் இவர் சேவையைச் சிலாகித்தனர்:

> "டைரக்டர்கள் சபையில் வருஷா வருஷம் ஏற்படுவதைவிட இவ்வருஷம் அதிக மாறுதல்கள் இருந்தன. ஸ்ரீமான்கள் எம். டி. கோபாலாச்சாரியாரும் வி. சுப்பராமையரும் குறிப்பிட்ட காலம் பூர்த்தியானதால் பதவியை விட்டு விலகிக்கொண்டனர். ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார், பி. எஸ். கணபதி ஐயர், டி. சங்கரராவ் ஆகியோர் பதவி வகிப்பது தங்களுக்கு அசௌக்கியமாயிருந்ததுபற்றி தங்கள் ஸ்தானங்களை ராஜிநாமாச் செய்தனர். தாங்கள் பதவி வகித்த காலத்தில் இப்போது விலகிக்கொண்டிருப்பவர்கள் செய்த சேவைக்காக டைரக்டர்கள் அவர்களிடம் நன்றி பாராட்டுகின்றனர்."

நிதியின் மறுவருஷ யாதாஸ்தில் இந்த ராஜிநாமாக்களின் காரணம் தெரிவிக்கப்பட்டது. அவ்வருஷம் (1883) பல டைரக்டர்கள் பதவியை விட்டுவிட்டதாகவும் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்களில் சர்க்கார் ஊழியர்கள் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று சென்னை சர்க்கார் அறிவித்ததே இதற்குக் காரணம் எனவும் ஆனால் பிறகு

சென்னையைத் தழுவியமட்டில் இந்த விதியின் கடுமை தளர்த்தப்பட்டதாயும் அதில் அறிவிக்கப்பட்டது.

நிதி நிர்வாகத்திலிருந்து விடுபட்டபோதிலும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் அவ்வப்போது ஆலோசனைகளை அளிப்பதிலும் அபிவிருத்திக்கான மார்க்கத்தைச் சுட்டிக் காட்டுவதிலும் சிறிதும் பின் வாங்கியதில்லை. மறைமுகமாக இவர் செய்த உதவியைப் பலர் அறியார்.

> "நிதியின் ஸ்தாபனத்திலும் அதன் ஆரம்பகாலத்திலும் சேவை செய்தவர்களுள் திவான்பஹதூர் ரகுநாத ராவ், திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார், கனம் பி. செஞ்சல் ராவ். ஸ்ரீ ஸி. வி. ஐயாசாமி முதலியார், ஸ்ரீ ஆர். பாலாஜி ராவ் ஆகியோர் பிரதானமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்"

எனப் பல வருஷங்களுக்கப்புறம் நிதியின் நிர்வாகத்தை விமர்சித்த ஒருவர் எழுதினர்.* நிதியின் ஐம்பதாமாண்டு விழா கொண்டாடப்பட்ட சமயத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையிலும் இதே மாதிரி தெரிவிக்கப்பட்டது.

> "இதன் தலைவர்கள், ஸ்தாபகர்கள், டைரக்டர்கள் ஆகியவர்களின் ஜாபிதாவைக் கவனித்தால் கனம் பி. செஞ்சல் ராவ், திவான்பஹதூர் ஆர். ரகுநாதராவ், திவான்பஹதூர் பி. ராஜரத்தின முதலியார், திவான் பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார். ஸி. ஐ. இ., வி. ஸி. தேசிகாச்சாரியார், மஹாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஸ்ரீமான் எஸ். கஸ்தூரி ரங்கையங்கார், ஸ்ரீ ஆர். பாலாஜி ராவ், ஸ்ரீ ஐயாசாமி முதலியார் ஆகிய பிரபல உத்தியோகஸ்தர்களும் பெரிய சமஸ்தான நிர்வாகிகளும் பிரசித்தமான நியாயவாதிகளும் இதில் சம்பந்தம் கொண்டிருப்பது புலப்படும்."**

க்ராண்ட் டப் வருகைக்குச் சற்று முன்னர் சென்னையில் "மதராஸ் நேஷனல் அஸோஸியேஷன்" என்ற பெய

---

*ஸ்ரீ ஆர். ராமஸ்வாமி எழுதிய வியாஸம்: ஹிந்து (26-1-1933)

**பொன்விழா ரிப்போர்ட், (26-11-1922)

ருடன் ஒரு புதிய சங்கம் ஸ்தாபிதமாயிருந்தது. பக்கிங்ஹாம் பிரபுவின் ஆட்சி முடியும் தருவாயில் இத்தகைய ஸ்தாபனத்திற்கு அவசியமேற்பட்டது. பொது விஷயங்களைப்பற்றி கூடிப்பேசவும் நாட்டின் முன்னேற்ற மார்க்கங்களைக் குறித்து ஒரு முகமான திட்டங்களை வகுக்கவும் ஒரு சில இளைஞர் அப்போது முன் வந்தனர். பாஷ்யமையங்கார் இதன் தலைவராக இருக்க ஒப்புக்கொண்டார். பி. அநந்தாச்சார்லு, ஜி. சுப்பிரமணிய ஐயர், எம். வீரராகவாச்சாரியார் ஆகியோர் இதில் சிரத்தைக் கொண்டனர். ஸ்ரீநிவாஸராகவையங்கார், செஞ்சல் ராவ், ரகுநாத ராவ் முதலிய உத்தியோகஸ்தர்களும் இதில் சேர்ந்திருந்தனர். உத்சாகம் கொண்டு உழைக்கும் நபர்களுடன் அனுபவமும் அறிவும் மிகுந்த இப்பெரியார்கள் அவ்வப்போது தலைகாட்டும் பல பிரச்னைகளைப்பற்றி மனம் விட்டுப் பேசுவர். நிர்வாக முறைகளை இளைய நண்பர்களுக்கு விவரித்து அவர்களுக்கும் அது சம்பந்தமாகப் பரிச்சயம் ஏற்படும்படிச் செய்து வருவர். ராஜப் பிரதிநிதியான ரிப்பன் பிரபு ஸ்தல சுயாட்சி திட்டத்தை விஸ்தரிப்பதுபற்றி வெளியிட்ட தீர்மானம் அந்தச் சங்கத்தினரால் பூரணமாக ஆலோசிக்கப்பட்டது. பல்வேறு ஜில்லாக்களிலிருந்த பிரமுகர்களின் அபிப்பிராயத்தையும் சபைத் தலைவர் கோரி எழுதினர். மாகாணம் முழுதுமுள்ள முக்கியஸ்தர்களின் கருத்து திரட்டப்பட்டு சங்கம் கடைசியில் அதைப்பற்றி பெரிய விவாதத்திற்கும் ஏற்பாடு செய்தது. இந்த விவாதத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் பங்கெடுத்துக்கொண்டார். ரிப்பன் பிரபுவின் நல்லெண்ணத்தைப் பாராட்டிய பலருள் இவரும் ஒருவர். அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் இவர் அச்சமயம். ஸ்தல ஸ்தாபனங்களில் பொதுஜனப் பிரதிநிதிகள் பெரும்பான்மையினராயிருந்து அவற்றை நிர்வகிப்பதுடன் மக்களின் ஆசார நியமங்களையும் பழக்க வழக்கங்களையும் பாதிக்கும் புதிய சட்டங்கள் பிறக்குமே யானால் முதலில் அவற்றைப் பற்றி இந்த ஸ்தாபனங்களின் அபிப்பிராயம் நாடப்பட வேண்டும் என்று இவர் தெரிவித்தார். இவ்விதம் செய்தால் சர்க்காரிடம் நம்பிக்கை ஊர்ஜிதமாவதுடன் சங்கம் நன்மை புரியவும் வசதி வாய்க்கும் என்றே இவர் கருதினர்.

இந்தச் சமயத்தில் நாம் முன்னமே குறிப்பிட்டபடி க்ராண்ட் டப் சர்க்கார் திடீரென்று தடையுத்திரவைப் பிறப்பித்தனர். உத்தியோகஸ்தர்கள் இதில் அங்கத்தினர்களாகக் கூட இருக்கக்கூடாது என அவ்வுத்திரவு கடுமையாக விதித்தது. மேலதிகாரிகளைப் பகைத்துக்கொள்ள முடியுமா? அப்படி விரும்பினாலும் எவ்வளவு காலம் செய்யக்கூடும்? அங்கத்தினர்கள் பயப்பட்டனர். இந்தச் சங்கத்தின் நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆமோதிக்கவில்லை என்பது தெளிவாகிவிட்டது. ஆகவே அங்கத்தினர் எண்ணிக்கை வெகு சீக்கிரத்தில் குறைந்து போயிற்று. உத்தியோகஸ்தர்களைப் பின்பற்றி மிஞ்சியவர்களும் விலகிக்கொண்டனர். 'அஸோஸியேஷன்' அல்பாயுசில் அழிந்தது. ஸர் மவுண்ட் ஸ்டிவர்ட் க்ராண்ட் டப் மாகாணத் தலைவராக இருந்த ஐந்து வருஷ காலம் பூராவும் மோசமான நிலை தலைகாட்டியது. சேலம் கலவரம் அப்போது தான் நடந்து நாடெங்கும் பிரசித்தி பெற்றது. பல ஜில்லாக்களிலிருந்தும் கவலைக்கிடமளிக்கும் செய்திகளே வந்து குவிந்தன. எப்போது இந்த ஆட்சி ஒடுங்குமோ என்று ஏங்கினர் எல்லோரும். சர்க்கார் கீழ் வேலை பார்த்த உத்தியோகஸ்தர்களுக்கும் மன நிம்மதி கிடையாது. அன்றைய பொழுதைப் போக்கினால் போதும் என்றிருந்தனர் சுதேசிகள்.

(1)

இளமைப் பருவத்திலிருந்தே ஸ்ரீநிவாஸராகவையங்கார் தேக திடமற்றவரா யிருந்தார்: தேகாப்பியாச முறைகளில் இவர் என்றுமே பயிற்சி பெற்றதில்லை. படிப்பதில் காட்டிய சிரத்தையைத் தேகத்தை வலுப்படுத்திக் கொள்வதில் இவர் சிறிதும் காட்டவில்லை. ஓய்ச்சல் ஒழிவற்ற படிப்பினால் இவரது சுகத்திற்கு அதிக பாதகமே விளைந்தது. மிகவும் மெலிந்த சரீரத்தைப் பார்த்து அன்பர்கள் அனைவரும் கவலைப்படுவர். ஆரோக்கியமே அவசியம் என்றும் அவர்கள் அடிக்கடி இவரிடம் முறையிடுவர். இவ்விதம் பல மாதங்கள் கழிந்தன.

1883-ம் வருஷ மத்தியில் தஞ்சையில் கலக்டராக விருந்த ஸ்டோக்ஸ் சென்னை சர்க்காரில் ரெவினியூ இலாகாக் காரியதரிசியாகத் தலைநகருக்குத் திரும்பிவந்தார். அவர் வந்ததும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் அவரைப் பார்க்கப் போனார். இவருக்குச் சற்று முன்பு திருச்சி கலக்டராபீசில் தலைமை சிரஸ்தேதராக இருந்த ஸ்ரீ பட்டாபிராம பிள்ளை அவரைப் பார்த்துவிட்டு வெளியே வந்தார். இவர் உள்ளே சென்றதும் "உங்களுக்கு முன்பு இங்கு வந்துவிட்டுப் போனவர் யார்? தெரியுமா?" என்ற கேள்வியையே முதலில் கேட்டார் ஸ்டோக்ஸ். "தெரியும்" என்று இவர் பகர்ந்தார். "அவர் போல நீங்களும் இருக்க வேண்டாமா? மூளைக்கு வேலை கொடுப்பதை நிறுத்துங்கள். பிறகு நோயின்றி நீங்கள் சுகமாக வாழ முடியும். தேகத்தில் வலு அதிகரிக்கும். மெலிவு மறையும்" என்றார் அவர் அதற்கப்புறம்.* பிறகு தான் ஸ்டோக்ஸ் இவரிடம் மற்ற விஷயங்களைப் பற்றி சம்பாஷித்தார். ஸ்டோக்ஸ் அளித்த புத்திமதி இவர் உள்ளத்தில் ஊன்றிக் கொண்டது. தாம் அசட்டையாக இருப்பதையும் பின்பு

---

*பி. ஹனுமந்தராவ் செய்த பிரசங்கம்: ஏப்ரல் 1916-எஜுகேஷனல் ரெவியூ

தான் உணர்ந்தார். தேகப்பயிற்சியிலும் உடலை வலுப் படுத்துவதிலும் ஆசை உதயமாயிற்று. மாலை நேரங் களில் விளையாடவும் விருப்பம் பிறந்தது. ஆரோக்கிய வாழ்வுக்கு எவை அடிப்படையானவை என்பதையறிய வும் ஆவல் கொண்டார். இதற்காகப் பல புத்தகங்களை யும் வரவழைத்தார்.

இங்கிலாந்தில் அப்போது "தேகாரோக்கிய ஆரம்ப நூல்கள்" என்ற மகுடத்துடன் மிகவும் ஸரஸமான விலை யில் பல புத்தகங்கள் வெளியாயின. இந்தத் தொகுதி பிரசுரமாவதற்கு சில வைத்திய நிபுணர்கள் ஏற்பாடு செய் தனர். ஒவ்வொரு புத்தகத்தையும் சிறந்த அறிவாளி களே எழுதினர். தேகப் பயிற்சி, குடியிருப்பு நலமும் சுற்றுப்புறமும் ஸ்நானமும் அதற்காகப் பல முறைகளும் இதயமும் அதன் வேலையும் சாராயமும் அதன் நன்மை தீமைகளும் அகால மரணத்தைத் தடுக்கும் விதம், உடை, ஜலம், ஆயாஸம், காது, உணவு, திருஷ்டி ஆகிய அநேக விஷயங்களைப் பற்றிய புத்தகங்கள் வெளிவந்தன. இவற் றையெல்லாம் இவர் வாங்கிப் படித்தார்: பலன் பெறவும் விரும்பினர்.

இந்தக் காலத்தில் இவர் போலவே பாஷ்யமையங் காரும் இவற்றில் சிரத்தைப் பூண்டிருந்தது இங்கு குறிப் புக்குரியது. அவர் கம்பீரமான தோற்றத்துடனும் நல்ல தேகக் கட்டுடனும் இருந்தபோதிலும் ஆரோக்கியத்திற் கான அப்பியாசங்களைச் செய்ய இவர் போலவே ஆசைப் பட்டார். ப்ராடீஸ் தெருவிலிருந்து ஸ்ரீநிவாஸராகவை யங்கார் சீக்கிரத்தில் மயிலை பலாத்தோப்புக்கு வந்து சேர்ந் தார். அங்கு இவர் தங்கியிருந்த வீட்டிற்குப் பக்கத்தில் சிறிய மைதானம் ஒன்றுண்டு. அங்கு தினமும் மாலை நேரத்தில் இவரும் பாஷ்யமையங்காரும் மற்றும் சில நண் பர்களும் "பாட்மிண்டன்" ஆடுவது வழக்கம். பின்பு டிபுடி கலக்டராக விருந்த கணித சாஸ்திர நிபுணர் ஆர். சாமிநாதையர், பிரசித்தி பெற்ற ஆசிரியரான ஸாது சேஷையா முதலியோர் நாள் தவருமல் இந்தக் கோஷ்டி யில் வந்து சேருவர். சில இளைய நண்பர்களும் அப்போது அங்கு வருவதுண்டு. சட்டப் பரீட்சைகளில் தேறி அப் ரண்டிஸ்களாக விருந்த சிவஸ்வாமி ஐயரும் வி. கிருஷ்

ணஸ்வாமி ஐயரும் எஸ். கஸ்தூரி ரங்கையங்காரும் இவர்கள் கூடவே இருப்பர். வி. ஸி. தேசிகாச்சாரியார் முதலியவர்களும் ஆட்டத்தில் கலந்துக்கொள்வர். இந்த நாட்களைப் பல வருஷங்களுக்கப்புறம் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் ஞாபகப்படுத்திக் கொண்டு பேசினர்.

> "1884-ம் வருஷம் முதற்கொண்டு ஸ்ரீநிவாஸராகவையங்காரை நான் அறிவேன். அவரைத் தெரிந்து கொண்டவர்கள் அவரிடம் ப்ரீதியையும் விசுவாசத்தையும் மரியாதையையும் காட்டாமல் இருப்பது சாத்தியமல்ல. எனக்கு அவருடைய பரிசயம் ஏற்பட்டபோது நான் அப்ரண்டிஸாக இருந்தேன். நாங்கள் எல்லோரும் அப்போது மயிலாப்பூரில் குடியிருந்தோம். முதலில் நாங்கள் பலாத்தோப்பு 'பாட்மிண்டன்' மைதானத்திலும் பிறகு ஸர் வி. பாஷ்யமையங்காரின் மாளிகையில் இருந்த 'டென்னிஸ் கோர்ட்'டிலும் சந்திப்பது வழக்கம். அந்தக்காலம் முதற்கொண்டு அவர் மரண பரியந்தம் அவருடன் நெருங்கிப் பழகி அநேக விஷயங்களைத் தெரிந்துக் கொள்ளும் பாக்கியம் எனக்கு வாய்த்தது."*

தஞ்சையிலிருந்து இந்த நாட்களில் சென்னைக்குவரும் இளைஞர்கள் முதலில் நீதிபதியான முத்துஸ்வாமி ஐயரையும் பிறகு ஸ்ரீநிவாஸராகவையங்காரையும் சந்தித்து இவ்விருவர் அளிக்கும் உபதேசங்களை மேலாக மதிப்பது வழக்கம். அவர்கள் இதைத் தங்களுடைய முதற்கடமையாகக் கருதினர் என்று கூறுவது மிகையாகாது. ஒவ்வொருவருக்கும் இவர்கள் அளித்த புத்திமதி விசேஷமானது. இவர்களை ஆலோசித்தே அவர்கள் தங்கள் வாழ்க்கையை உருவாக்கி வந்தனர். வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், கல்வித்துறையில் பிரவேசிக்க விரும்பியபோது ஸ்ரீநிவாஸராகவையங்கார் அதைத்தடுத்து நியாயவாதத் தொழிலையே மேற்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தார். அநேக ஆண்டுகளுக்குப் பின்பு கிருஷ்ணஸ்வாமி ஐயர் தொழிலின் சிகரத்தை எட்டி தேசத்தில் முதல்வராகச் சோபித்ததைப் பார்த்தவர்கள் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் உப

*ரானடே ஹால் பிரசங்கம்: ஹிந்து (12-12-1938)

தேசத்தில் குறை காண முடியுமா? அவரவர் குண விசேஷங்கள் பிரகாசிப்பதற்கு இவர்வழி காட்டினுர் என்பது அர்த்தமற்றதாகுமா?

விளையாட்டில் பிறந்த மோகம் இதர தினசரி முறைகளுக்கும் பரவியது. காலேயில் காபி அருந்தியவுடன் நண்பர்களுடன் மெதுவாக உலாவுவதிலும் சாஸ்திரீய முறைப்படி ஸ்நானம் செய்வதிலும் இவருக்கு ருசி பிறந்தது. அவற்றில் இருந்த அக்கறையை அளவிட முடியாது. தாம் படித்த புத்தகமொன்றில் இவர் அனுஷ்டானத்திற்காக எழுதி வைத்துள்ள சில வாக்கியங்கள் இங்கு குறிப்பிடத் தக்கவை. இப்போது படிப்பதற்கு அவை விநோதமாக இருக்கலாம். ஆனல் புதிதாகத் தோன்றிய ஆர்வத்தைக் கொண்டு அவற்றை அளவிடலாம்.

"சாப்பிட்டபின் இரண்டு மணிநேரம் வரையில் குளிக்கக்கூடாது. களேப்பினுலோ அல்லது வேறெந்த காரணத்தினுலோ ஆயாஸம் ஏற்பட்டிருக்கும்போது குளிக்கக் கூடாது. தேகத்திலுள்ள வியர்வை உலர்ந்து கொண்டிருக்கையில் குளிக்கக் கூடாது. சிறிது நேரம் ஜலத்தில் மூழ்கியிருந்தபின் கையும் கால்களும் குளிர் காரணமாக மரத்துப் போகுமாயின் திறந்த வெளியில் எப்போதுமே குளிக்கக் கூடாது. தேகத்தில் சீதோஷ்ணம் சரியாக இருக்கும் சமயத்தில் குளிக்க வேண்டும். ஆனல் ஜலத்தில் இறங்கும்போது சிறிதுகூட தாமதிக்கக் கூடாது. குளித்தபின் கரையிலோ அல்லது படகிலோ ஆடை இல்லாமல் இருந்துகொண்டு தேகத்தின்மீது குளிர்காற்று படும்படி விடக்கூடாது. நீரில் அதிக காலம் இருக்கக் கூடாது. உடம்பில் சற்று குளிர் கண்டாலும் அங்கிருந்து கிளம்ப வேண்டும். விடியற்காலேயில் எதையும் அருந்தாமல் பலவான்கள் மட்டுமே ஸ்நானம் செய்ய வேண்டும். சாப்பிட்டபின் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கழித்தபின்பு பலஹீனர்களும் சிறுவர்களும் ஸ்நானம் பண்ணுவது உசிதம். பகல் போஜனத்திற்கு இரண்டு அல்லது மூன்றுமணி காலத்திற்கப்புறம் இவ்விதம் செய்தல் நலம். மயக்கமாய் விழக்கூடியவர்களும் இருதயப் படபடப்புள்ளவர்களும்

மற்றும் இதர இதயக் கோளாறுகளுக் காளானவர் களும் வைத்தியரை ஆலோசியாமல் ஸ்நானம் செய் வது தவறு.''

தஞ்சை ஜில்லா வாசி ஒருவர் நதியில் நீராடுதலைப் பற்றி இவ்விதம் தெரிவிப்பதில் ஆச்சரியம் ஏது? கும்ப கோணத்தில் பிறந்து வளர்ந்தவர் காவிரி யாற்றங்கரை யைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியுமா? ஸ்நானத் தைக் குறித்து எழுத நேர்ந்தபோது பால்ய தசையில் தமக் கிருந்த பழக்கத்தை மறக்க முடியுமா? ஆனால் எவ்வளவு தூரத்திற்கு இவற்றை அவர் அனுஷ்டித்தார் என்பதே பிரச்னை. படித்துப் பக்குவம் பெற்றவரின் மனப்பான் மையே இதில் தெளிவுபடுகிறது. எதை எடுத்துக் கொண் டாலும் அதைப் பூரணமாய் ஆராய்ந்து முடிவுகூற வல்ல வரின் போக்கு இதில் பிரதிபிம்பிக்கிறது.

(2)

"காஸ்மொபாலிட்டன் கிளப்''பில் 1880-ம் வருஷத் திலேயே சேர்ந்துகொண்டு விட்டபோதிலும் இவர் முதல் இரண்டு மூன்று வருஷங்கள் அங்கு என்றைக்கா வது தான் போய்விட்டு வருவார். 1883-ம் ஆண்டுக்கப் புறம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் தவருமல் அங்கு போய்ப் பொழுதைப் போக்குவது வழக்கம். இந்த கிளப் 1873-ம் வருஷம் அக்டோபர் மாதம் துவக்கப்பட் டது. ஆங்கிலேயரும் இந்தியரும் அடிக்கடி சந்தித்து இரு சமூகங்களுக்கும் இடையேயுள்ள பிளவைப் போக்கும் உத்தேசத்துடன் இது ஸ்தாபிக்கப்பட்டது. அறிஞர்களை அழைத்து அவர்களது பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்வ துடன் அவர்கள் கூடி அளவளாவுவதற்கும் திட்டமிட்டி ருந்தனர். நல்ல புத்தகாலயத்தைச் சேகரிப்பதும் அவர் களது நோக்கங்களுள் ஒன்று. நகருக்குப் புதிதாக வரும் ஆங்கில நாட்டவர்கள் அங்குவந்து இந்திய நிலைமையை அறிவதற்கும் வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டது. அவ் வருஷம் ஜுலை மாதம் சென்னையில் அட்வகேட் ஜென ரலாக இருந்த எச். எஸ். கன்னிங்ஹாம் வீட்டில் சில முக் கியஸ்தர்கள் கூடி தங்களுடைய பரந்த லக்ஷியங்களை நிறைவேற்றுவதில் முனைந்தனர். அந்த முயற்சியே 'கிளப்' உதயத்திற்குக் காரணமாகும். ஜஸ்டிஸ் ஹாலொவே





முதன் முதலில் தலைவராக இருந்தார். கனம் கன்னிங் ஹாம் உபதலைவராகவும் காப்டன் எப். எச். டிர்ரல் காரியதரிசியாகவும் இருக்க சம்மதித்தனர். ஜஸ்டிஸ் இன்னிஸ், கனம் மீர் ஹுமாயூன் ஜா பகதூர் ஸி. ஐ. இ., கனம் வி. ராமையங்கார், டி. முத்துஸ்வாமி ஐயர், கர்னல் ஆர். எம். மக்டானல்ட், எம். வெங்கடசாமி நாயுடு, எட்வர்ட் தாம்ஸன், பாளையம் சோமசுந்தரம் செட்டியார் ஆகியோர் கமிட்டி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். முதலில் இந்த ஸ்தாபனம் நுங்கம்பாக்கத்தில் மீர் ஹுமாயூன்ஜா வீட்டில் வாடகைக்கு இருந்தது. தலைவரும் காரியதரிசியும் இதன் அபிவிருத்தியில் காட்டிய கருத்து எதிர்பார்த்த பலனைப் பயந்தது. அங்கத்தினர்களின் தொகை சீக்கிரத்தில் அதிகமாயிற்று. முதல் ஆண்டிலேயே 177 பேர் சேர்ந்து கொண்டனர். பிறகு வெகு சீக்கிரத்திலேயே பலவித விளையாட்டுகளுக்கும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1884-ம் வருஷத்திற்கப்புறம் இதன் நிர்வாகத்தில் ஆங்கிலேயர் முன்போல முழுமனசுடன் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. அவர்களுடைய தொடர்பு இதற்கப்புறம் இங்கிருந்து மறைந்து விட்டது என்றும் கூறலாம். சென்னை நிர்வாகசபை அங்கத்தினரான ஸர் வில்லியம் ராபின்ஸன், சென்னை சீப் ஜஸ்டிஸ் ஸர் சார்லஸ் டர்னர், வித்தியா இலாகா அதிகாரி எச். பி. க்ரிக் ஆகியோருக்கப்புறம் வெள்ளையர்கள் இங்கு வருவது குறைந்துவிட்டது. ஐந்துவருஷ காலம் சென்னைப் புத்தகப் பதிவு இலாகா அதிபரான வி. கிருஷ்ணமாச்சாரியார் இதன் காரியதரிசியாக இருந்து சிறப்பாக சேவை செய்தார். மவுண்ட்ரோட்டில் புதிய ஸ்தலத்தை வாங்கி 1882-ல் அங்கு மெம்பர்கள் கூடுவதற்கு அவரே ஏற்பாடு செய்தார். அவருக்குப் பின் 1884-ல் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் கணித சாஸ்திர ஆசிரியர் ராய் பஹதூர் பி. ரங்கநாத முதலியார் அந்த ஸ்தானத்தை ஸ்வீகரித்தார். சுமார் ஒன்பது ஆண்டுகள், அதாவது தமது அந்திம காலம்வரையில், அவர் இந்தப் பெரிய பொறுப்பை நிர்வகித்தார். அவருடைய நாட்களில்தான் இந்த 'கிளப்' மேன்மையடைந்தது. சொந்தக் குடும்பத்தைப்போல பாவித்தாரோ என்பது சந்தேகம் தான்!

ஆசிரியர் பூண்டி ரங்கநாத முதலியார் மகா மேதாவி. 'எம். ஏ.' பட்டத்தைப் பெற்று நிகரற்ற நிபுணர் என்ற பிரசித்தி பெற்றவர். கணித சாஸ்திரத்தில் சமர்த்தர். இதர பகுதிகளிலும் அபார பாண்டித்தியத்தைப் பெற்றவர். அவர் ஆங்கிலம் பேசும்போது அவர் உச்சரிப்பில் அபத்தங்களைக் காண முடியாது; கண்ணை மூடிக்கொண்டு கேட்டுக் கொண்டிருந்தால் ஒரு ஆங்கிலேயர்தான் பேசுகிறாரோ என்று தோன்றுமாம். பாஷாரீதிப் பிரகாரம் பதங்கள் பரிசுத்தமாகப் பிரயோகமாகுமாம். பண்டிதரும் பாமரரும் ரசிக்கும் விதத்தில் பேச வல்லவர் அவர். பேச்சில் இருந்த நயம் அவருடைய நடத்தையிலும் இருந்தது. பெரும் போக்கும் பெரிய தோரணையும் அவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன. ஆகையால் அவரை எல்லோரும் நேசித்தனர். ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்த வருஷத்தில் அங்கு மாதாமாதம் மெம்பர்கள் கூடி விவாதங்களை நடத்த ஏற்பாடாகியது. அப்போது அங்கத்தினர் தொகை 120. இதே வருஷம் கிளப்புக்குப் பிரதிதினமும் அதிக அங்கத்தினர்கள் வர ஆரம்பித்ததாகவும் அவர்கள் காட்டிய சிரத்தை குறிப்பிடத் தக்கது எனவும் அவ்வருஷத்திய யாதாஸ்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.* புதிய ஏற்பாடே இதற்குக் காரணம் எனக் காரியதரிசிகள் அப்போது கருதினர். ஸ்ரீநிவாஸராகவையங்கார் கிளப்புக்கு மாலையில் வந்தால் சிறிது நேரம் "பிலியர்ட்ஸ்" ஆடுவார். சீட்டாட்டத்திலும் சற்றுப் பற்றுதல் உண்டு. ரங்கநாத முதலியாரைப் பார்த்து அவருடன் நிம்மதியாகப் பேசுவதில் இவருக்கிருந்த மோகத்தை மதிப்பிடவே முடியாது; வெளி மைதானத்தில் போய் உட்கார்ந்துக் கொண்டு இருவரும் தனிமையில் சம்பாஷிப்பர். கணித சாஸ்திரத்தில் தலைகாட்டும் நுண்ணிய பிரச்னைகளை இருவரும் பரிசீலிப்பர்; சாதாரண நபர்களுக்கு எளிதில் புலப்படாத பல விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்வர்; கூட இருந்து கேட்பவர்களுக்கு சில சமயங்களில் இவர்களிடம் வெறுப்புகூட உண்டாகுமாம். அறிஞர்கள் இருவருக்கு அளவளாவுவதை விட

---

*காஸ்மோ பாலிடன் கிளப் வைர விழா மலர் (15-12-1933) பக்கம் 32

இன்பம் பயக்கக்கூடியது வேறு எது? 1883-ல் இவர் கிளப் நிர்வாகக் கமிட்டியில் இடம் பெற்றார். ஒருவருடைய அந்தஸ்தின் உயர்வுக்கு இந்நாளில் இதுவே அறிகுறியாக இருந்தது.

துலா காவேரி ஸ்நானத்திற்காகக் கும்பகோணத்திற்குச் சென்ற இவரது தாயார் இவ்வருஷம் ஐப்பசி மாதத்தில் காலகதி அடைந்தார். மாதாவின் மரண காலத்தில் மூத்த குமாரரான இவர் அவர் பக்கத்தில் இருக்கும் பாக்கியத்தைப் பெறவில்லையாயினும் கும்பகோணத்திற்குப் போய் அந்திமக் கிரியைகளை முடித்துவிட்டு வந்து சேர்ந்தார். கஸ்தூரிதான் அந்தச் சமயத்தில் தாயாருடன் இருந்தவர்.

(3)

சென்னையில் அந்த நாட்களில் தேசீய இந்திய சங்கத்தின் கிளை ஸ்தாபிதமாகியிருந்தது. காரியதரிசிகளுள் ஒருவரான செஞ்சல் ராவின் அழைப்புக்கிணங்கி இவர் 1881-ம் வருஷத்தில் இந்தப் பொது ஸ்தாபனத்தில் சேர்ந்து கொண்டார். அப்போது கனம் மீர்ஹுமாயூன்ஜா மற்றொரு காரியதரிசியாக இருந்தார். பல வகுப்பாரிடையேயும் நெருங்கிய பிணைப்பை உண்டுபண்ண இந்தச் சங்கமும் பாடுபட்டது. தோட்டக் கச்சேரிகள் நடத்தி, கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, ஒவ்வொருவரும் தமக்குகப்பான விஷயத்தைப் பற்றிப் பேசுவதற்கும் இவ்விதம் எல்லோரும் அந்நியோந்நியமாக இருப்பதற்கும், பழக்கம் பெரிதாவதற்கும் இந்தச் சங்கம் வழிகாட்ட வேண்டும் என்பது இதன் மூல புருஷர்கள் கொண்ட லக்ஷியங்களுள் சில. ஆனால் முக்கியமாகக் கல்வியைப் பரப்புவதையே இது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. பெண்களும் போதிய படிப்பைப் பெறவேண்டும் என்பதும் திட்டத்தில் ஒன்று. கோஷா ஸ்திரீகளுக்கும் வெளியே வருவதற்கு சங்கோசப்படும் பெண்டிருக்கும் வித்தியாதானத்தை வழங்க இவர்கள் ஏற்பாடு செய்தனர். சிறைச்சாலைகளைப் போய்ப்பார்த்து அங்குள்ள கைதிகளை நாகரீக முறைப்படி நடத்தும்படி நிர்ப்பந்திக்கவும் ஆனால் இதுவிஷயத்தில் அநாவசியமாகச் சர்க்காருடன்

சச்சரவைக் கிளப்பாமலும் இருப்பதை இவர்கள் விரும்பி னர். சுகாதார முறைகளைப் பற்றி பிரசாரம் நடத்தி மக்க ளின் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்யவும் இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அந்நாளில் சிலாகிக்கப் பட்டன. இந்த ஸ்தாபனத்தின் நிர்வாகிகளுள் ஒருவராக இவர் நீண்டகாலம் இருந்தார்.

மாதா மாதம் மெம்பர் ஒருவர் ஏதாவது விஷயத்தைப் பற்றி வியாசமொன்றை எழுதிப் படிக்க வேண்டுமென் பது சங்கத்தின் விதிகளில் ஒன்றுதலால் 1884-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமக்குரிய கடமையை நிறைவேற்றினர். "படித்த சுதேசிகளின் பொறுப்புகள்" என்பது பற்றி இவர் அன்று பேசினர்.

"முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும் நாட் டில் இருப்பவர் படித்தவர்களே தங்களுக்கு வழி காட்டுவர் என்று எதிர் பார்ப்பது சகஜம். உலகில் நன்மை, தீமைகளுக்கிடையே நடக்கும் போராட் டத்தில் பங்கெடுத்துக் கொண்டு தீமை நாட்டில் ஊன்றிக் கொள்ளாமல் தடுக்கவும் நன்மையை மேலும் நிலைபெறச் செய்யவும் அவர்கள் போதிய பயிற்சியைப் பெற்றிருக்கின்றனர். தேசத்தின் எதிர் காலம் அவர்களிடமே ஒப்படைக்கப் பட்டிருக்கி றது. அதன் உயர்வும் தாழ்வும் அவர்களுடைய லக்ஷியங்களையே தழுவியிருக்கிறது.

இந்தியாவின் எதிர்காலம் படித்த சுதேசிகளிடமே விடப்பட்டிருக்கிறது. படித்த சுதேசிகள் என்றால் மேனாட்டுக் கல்வியில் தேர்ச்சியடைந்து ஐரோப்பிய நாட்டினரின் உயர்தரமான நூல்களைப் படித்து அறிவை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் என்பதே அர்த்தம். க்ஷேமமாய் வாழ்வதற்கு உதவும் ஐரோப்பி யரின் கல்வி ஞானத்திற்கு எதிரே எந்த ஞானமும் போட்டியிட முடியாது. சுகமாய் காலத்தைக் கழிப்ப தற்கான சாதனங்களே இப்போது மிகவும் அவசிய மாகியுள்ளன. இதற்கு உதவும் ஞானத்தின் பலனை நாம் உடனே காணமுடியும். பாரமார்த்திக ஞான மும் சொந்த உடலைப்பற்றிய அறிவும் ஒருங்கே

பெற்றிருப்பவர்தான் பூரண பக்குவமடைந்தவர் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. தேகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் வெறும் ஆத்மீக விசாரத்தில் மட்டுமே ஈடுபடுவதால் ஏற்படும் விபரீதத்தை இந்தியாவில் பார்க்கலாம். ஹிந்துக்களுக்கு வேதாந்தத்தைப் போதிக்க அவசியமே இல்லை. பழைய நாளைய தத்துவங்களைத் திரும்பவும் உபதேசிக்க வேண்டும் என்று ஒரு சிலர் வற்புறுத்துகிற போதிலும் நான் மட்டும் தற்காலக் கல்வியின் போக்கைப் பற்றி வருந்தமாட்டேன்."

முடிவுகாண உதவாத வீண் வாதத்தில் காலத்தை விரயமாக்காமல் சுக வாழ்வுக்கு வழிகாட்டும் பாதையைக் கடைபிடிக்க வேண்டும் என்பது இவருடைய கருத்து. அன்றாடப் பிரச்னைகளைத் தீர்க்க வகையறியாமல் வேதாந்த உலகில் சஞ்சரிப்பதை இவர் ஆக்ஷேபித்தார்.

படித்த சுதேசிகள் தங்களுக்கேற்பட்டுள்ள பொறுப்பைச் சரிவரத் தாங்கி நிற்கின்றனரா? கௌரவமாக நடந்து கொள்கின்றனரா? அல்லது அதைத் தட்டிக் கழிக்கப் பார்க்கின்றனரா? தற்போது தாழ்வுற்றிருக்கும் இந்தப் பாரதபூமி திரும்பவும் சிறப்புடன் சோபிப்பதற்கு அவர்கள் உதவுவரா? உடனே இல்லாவிட்டாலும் காலப் போக்கிலாவது அதை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கலாமா? இவை பெரிய கேள்விகள். ஆயினும் இவர் அவற்றுக்குச் சமாதானம் அளிக்கத் தயங்கவில்லை. முன்பொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டபடி இந்தியருக்கு உயர்தரக் கல்வியை வழங்குவதற்கு ஒரு சிலரின் .எதிர்ப்பு நீடித்து வந்தது. 1871-ல் இதைப்பற்றி டாக்டர் முர்டாக் சென்னை சர்க்காருக்கு ஒரு முக்கிய கடிதத்தை எழுதினார். அடுத்த வருஷம் வித்தியா இலாகா அதிகாரியான கர்னல் மக்டானல்ட் அந்தக் கடிதத்தை மனசில் இருத்திக் கொண்டே பின் கண்டபடி சர்க்காருக்கு அறிவித்தார். "இந்த மாகாணத்திலும் இதர மாகாணங்களிலும் இருக்கும் கண்டனத்தைக் கவனித்தால் படித்த ஹிந்து தெய்வ பக்தியற்றவர் என்றும் ஒழுக்கம் கெட்டவர் என்றும் ராஜ விசுவாசமற்றவர் என்றும் சுயமதிப்பு மிகுந்தவர் என்றும், நடை

முறைகளை அறியாதவர் என்றும், கோழை புத்தியுள்ளவர் என்றும், சொந்த லாபத்திலேயே நாட்டமுள்ளவர் என்றும், விஞ்ஞானத்திலும் இலக்கியத்திலும் ருசி கொள்ளாமல் சர்க்கார்கீழ் வேலை பார்ப்பதிலோ அல்லது வக்கீல் தொழில் மேற்கொண்டு பணத்தைக் குவிப்பதிலோ மட்டுமே அவருக்குக் கருத்து இருப்பதாகவும் தோன்றும். இந்த மாகாணத்தில் படித்த ஹிந்துக்கள் முக்கியமான பதவிகளைக் கௌரவமாக வகிக்கின்றனர் என்பதை எவரும் ஒப்புக்கொள்ள வேண்டும்'' இவ்விதம் குறிப்பிட்டு விட்டு படித்த ஹிந்துக்களால் கல்வி முறைக்கு அபகீர்த்தி ஏற்பட்டு விடுவதாகக் கூறுவது பிசகு என்பதைச் சுட்டிக் காட்டினார்.* இதற்கு மூன்று வருஷங்களுக்கப்புறம் தங்களுக்கும் தங்கள் சகாக்களுக்கும் நன்மையைப் பயக்கக்கூடிய விதத்தில் வாழ்க்கையை நடத்துவதற்காக வித்யாதானம் அளிக்கப்படுவதாயும் புதிதாகப் படித்துத் தேறிய ஹிந்துக்கள் எழுதும் ஆங்கிலக் கட்டுரைகளில் இலக்கணப் பிழைகள் அதிகம் தென்படுவதாயும் அவர்கள் நடத்தையிலும் தோஷமிருப்பதாயும் சிலர் மிக்கக் கடுமையாகக் கண்டிப்பதாயும் எட்வர்ட் தாம்ஸன் குறிப்பிட்டார். அந்நிய பாஷையில் எழுதுபவர்கள் அம்மாதிரி பிழைகளைச் செய்வதில் ஆச்சரியமில்லை என்றும் நடத்தையில் காணப்படும் தோஷத்திற்கு அவர்களுடைய யௌவன தசையே காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். சுதேசி பி. ஏ. க்கள் படாத பாடில்லை. சிறிது ஏறினால் குற்றம், சிறிது இறங்கினால் குற்றம். இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தனர். அன்று இவற்றையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டே இவர் பேசினார். தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் விஷமக் கூற்றுக்களைப் பிய்த்தெறிந்தார்.

> "படித்த சுதேசிகளைப் பற்றி ஒரு சமயம் மிக்க தாறுமாருகப் பேசப்பட்டதுண்டு. அவர்களைப் பற்றிக் கூறப்பட்ட இழிசொற்களுக்கு அளவு கிடையாது. மனம் போனபடியெல்லாம் தூற்றினர். சுமார்

---

*டாக்டர் சத்யநாதம் எழுதிய சென்னை மாகாணக் கல்வி அபிவிருத்தி, 1894, பக்கம் 96

அரை நூற்றுண்டுக்குமுன் பிரிட்டிஷ் சர்க்கார் சுதேசிகளுக்குக் கல்வியறிவை யூட்ட முன் வந்த காலத்தில் அநேக மேதாவிகள் அதை ஆதரிக்கவில்லை. கறுப்பு மனிதருக்கு இதயமும் கறுப்பாகத்தான் இருக்கும் என்றனர் அவர்கள். இதை மாற்ற முடியாது என்று முறையிட்டனர். ஆனால் கறுப்பு மனிதர்கள் கொடிய குணங்கள் படைத்தவர்களாகவும் இருக்கவேண்டும் என்று கருதுவதற்குத்தான் காரணங்கள் விளங்கவில்லை. இப்போது படித்த சுதேசிகள் நடத்தையைப் பார்த்தபின் இந்தக் கெட்ட நோக்கம் மறைந்து வருகிறதாயினும் பத்திரிகைகளில் மட்டும் அவ்வப்போது ஒரு சிலர் குற்றம் காணும் வழக்கத்தைக் கைவிடவில்லை. சர்க்கார் உத்தியோகங்களையேற்று அவர்கள் நம்பிக்கை தரும் விதத்தில் மிகவும் கண்ணியமாகவும் கௌரவமாகவும் நடந்துகொண்டிருக்கின்றனர். இவர்களுள் வக்கீல் தொழிலை மேற்கொண்டவர்களும் புத்தி கூர்மையுடன் நேர்மையான பாதையைப் பின்பற்றி சிறப்பு சம்பாதித்திருக்கின்றனர். படித்த சுதேசிகள் ஒழுக்கமும் நெறியும் மிகுந்தவர்களாக இருப்பதால் அவர்களுடன் பழகுபவர்களுக்கும் அதனால் அனுகூலம் ஏற்பட்டிருக்கிறது. மேற் குறிப்பிடப்பட்ட இரு தொழில் முறைகளும் எல்லா நாடுகளிலும் சகஜம். இந்தியாவின் ராஜீய அந்தஸ்து மிகவும் தாழ்ந்திருப்பதால் இந்த நாட்டில் வெகு காலத்திற்கு இவ்விரு தொழில்களையும் பலர் பின்பற்றுவர் என்று எதிர்பார்க்கலாம். சமீப வருஷங்களாகவே படித்த சுதேசிகள் இதர தொழில்களில் பிரவேசிக்க நிர்ப்பந்தம் பிறந்திருக்கிறது. உதாரணமாக இஞ்சினியரிங், வைத்தியம் ஆகிய தொழில்களிலும் பயிற்சி பெற ஆவல் அதிகரித்திருக்கிறது. பிராம்மணர்களும் அங்கங்களைப் பிரித்து பரிசோதிப்பதற்குத் தாங்கள் முன்பு கொண்டிருந்த ஆக்ஷேபத்தை இப்போது துறந்துவருகின்றனர். படித்தவர்கள் வியாபாரத்துறையிலும் புகுந்திருக்கின்றனர். இந்தியா ஏழ்மை மிகுந்த நாடாக இருப்பதால் இது விஷயத்திலும் முற்போக்கு மெதுவானதாக இருக்கிறது. அவர்கள் வர்த்தகர்களிடமும் வியாபாரிகளிடமும்

குமாஸ்தாக்களாக வேலைப் பார்த்து காலப்போக்கில் தாங்கள் சுயமாகவே அந்தத் தொழில்களை நிர்வகிப்பர். பல ஜாதியாரும் முன்போல் இல்லாமல் இப்போது ஒருவரோடொருவர் வெகு சகஜமாக நடந்து கொள்கின்றனர். நம்மிடமுள்ள பல குற்றங்களுக்கு இந்த ஜாதி வித்தியாசமே காரணமானது என்பதில் சந்தேகமில்லை. படித்தவர் பொது விஷயங்களில் கூட இதைப் புகுத்துவதாகக் குறை கூறுவதைப் பெருமையாகச் சிலர் கருதுகின்றனர். பழைய நாட்களில் வேரூன்றிவிட்ட வேற்றுமைகளைத் திடீரென மாற்றுவது கஷ்டம். என் சிறந்த நண்பரான ஸ்ரீ ரங்கநாத முதலியார் கீழ் பிரஸிடென்ஸி காலேஜில் படித்த பிராம்மண யுவர் தாம் அவரைக் காட்டிலும் மேலானவர் என்று எண்ணமுடியாது என்பதே என் நம்பிக்கை. இந்த அளவுக்கு நாம் திருப்தி கொள்ளவேண்டும்.

படித்த சுதேசிகளிடம் குற்றம் குறைகள் ஏராளமாகத் தென்படுகின்றன. அவர்களுடைய நடை, அவர்களது உச்சாரணம், அவர்கள் பேசும் ஆங்கில பாஷை, இவை யாவும் பத்திரிகைகளில் எழுதும் நிருபர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் படித்தால் சுதேசி பி. ஏ. க்களைப்போல் ஏளனமானவர்கள் இருக்கமுடியாதெனத் தோன்றும். பழைய நிலைமை மறைந்து புதிய நிலைமை தலைகாட்டும்போது இதுவரை தனிச்சலுகை வாய்த்திருந்த ஒரு வகுப்பார் அதுவரைக் கீழ்ப்பட்டிருந்த பிற வகுப்பாரிடம் பழகவேண்டிவருவதால் இத்தகைய கருத்துகள் வெளியாவது சகஜமாகும். இந்தப் புதிய நிலையிலுள்ள படித்த சுதேசிகள் அதற்கேற்றபடி நடக்கும், திறமையை இயற்கையாகவே பெறுவதில்லை. இதெல்லாம் தற்காலிகமாக இருப்பதால் வெகு விரைவிலேயே படித்த சுதேசிகள் தங்களுக்குரிய ஸ்தானத்தை ஸ்வீகரிப்பர். அப்போது அவர்களிடம் பழுதைப் பார்க்கமுடியாது. ஆனால் இதற்கிடையில் தங்களைத் தெரிந்துகொண்டவர்கள்

தங்களைப்பற்றி தப்பபிப்பிராயத்தைக் கொள்ளமாட்டார்கள் என்ற திருப்தி அவர்களுக்கு உண்டு.''

சென்னை சர்வகலாசாலையில் ரங்கநாத முதலியாருக்கு அதிக சலுகை இருந்தது. செனட், ஸிண்டிகேட் சபைக் கூட்டங்களில் அவர் பேச்சுக்கு மறுவார்த்தைக் கிளம்பாது. உப அத்யக்ஷகர் முதலாக எல்லோரும் அவர் என்ன தெரிவிக்கிருரோ என்று ஆவலாகக் கேட்பர். ஸ்ரீநிவாஸராகவையங்காருக்குக் கணித சாஸ்திரத்தில் இருந்த திறமை அவருக்கு நன்ருய்த் தெரியுமாதலால் எம். ஏ., பி. ஏ., பரீட்சைகளுக்கு இந்தப் பகுதியில் வினு பத்திரங்களைத் தயாரித்து விடைகளையும் பரிசீலிக்கும் காரியத்தை இவரிடம் ஒப்படைக்கும்படிச் செய்தார். அநேக வருஷங்கள் இவர் இந்த அலுவலை மேற்கொண்டிருந்தார்.

இவ்வருஷ இறுதியில் ராஜப்பிரதிநிதியான ரிப்பன் பிரபு இந்தியாவை விட்டுக்கிளம்ப முடிவு செய்தார். உத்தியோக காலத்தில் ஆறு மாதம் பாக்கியிருக்கையிலேயே அவர் தாய்நாடு திரும்ப தீர்மானித்துவிட்டார். ஆளவந்த நாட்டில் அவர் காட்டிய அன்பு அவரிடம் மக்களை ஆகர்ஷித்தது. நாலரை வருஷ காலத்தில் அவர் நடந்துக் கொண்ட விதம் நிலைமையை அடியோடு மாற்றிவிட்டது. லிட்டன் நாளில் மக்களுக்கிருந்த அதிருப்தியை அனைவரும் அறிவர். ஒருபுறம் பணத்தை வாரி விழுங்கும் யுத்தம்; மற்ருருபுறம் மஹத்தான செலவில் தர்பார்; இன்னுமொருபுறம் படுதுயரை விளைவித்த பஞ்சம்! நிர்வாகத்தை நிந்திக்காதவர்களே கிடையாது. இந்த அலங்கோலமான சமயத்தில் ரிப்பன் பிரபு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். ஆரம்பத்திலிருந்தே ஆட்சியில் அக்கறை காட்டினுர். நம்பிக்கையை யூட்டுவதில் நாட்டம்கொண்டார். ஒன்றன்பின் ஒன்ருக அவர் அநேக நற்காரியங்களில் முனைந்தார். பரிவும் பக்ஷமும் பூண்டு பேருபகாரி என்று பெயர் பெற விரும்பினுர். ஸ்தல சுயாட்சி முறையை தேசமெங்கும் புகுத்தினுர். ஐரோப்பியரின் மமதையை அடக்க ஆவல்கொண்டார். சுதேசிகளுக்குச் சமமான ஸ்தானத்தை வழங்கத் தீர்மானித்தார். பறிக்கப்பட்ட பத்திரிகைச் சுதந்திரத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

சேலம் கலகத்தில் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டவர்களை மன்னித்தார். ஐரோப்பியர்கள் அனுபவித்து வந்த அநாவசியச் சலுகையை நீக்கி எல்லோரையும் சமமாகப் பாவிக்க ரிப்பன் பிரபு முயற்சித்தபோது அதற்கு அந்தக் கோஷ்டியாரின் எதிர்ப்பு மிக்க உக்ரமாக இருந்தது. அந்த சமயம் சட்டசபையில் ரிப்பன் பிரபு செய்த பிரசங்கம் சிலாகிக்கத் தக்கது:

"எந்த சாம்ராஜ்யமும் ராணுவ பலத்தினுலோ அல்லது படைவீரர்களின் தீரத்தினுலோ நிலைபெற்றிருக்கவில்லை என்பதையும் அங்குள்ள சட்டதிட்டங்களின் நேர்மையும் நெறிமுறைகளிலுள்ள பற்றுதலும்தான் அதற்கு உதவியுள்ளன என்பதையும் சரித்திர வாயிலாக நான் கண்டுகொண்டிருக்கிறேன். இதை ஒப்புக்கொள்ளாமலிருப்பது நமக்குமேல் எல்லாம் வல்ல ஈசுவரன் ஒருவன் இருக்கிருன் என்பதை மறுப்பவர்களைப் போலவே தேசங்களையும் தண்டிக்கும் சக்தி அவனுக்குண்டு என்பதையும் மறுப்பதற்கொப்பாகும் என்றே நான் கருதுவேன். இம்மாதிரி கொள்கைகளையே நான் ஆக்ஷேபிக்க விரும்புகிறேன். இத்தகைய நோக்கங்களைப் போக்கவே மஹாராணியாரின் பிரகடனம் பிறந்தது. இந்தப் பதவியை நான் வகிக்கும்வரை ராணியும் பார்லிமெண்டும் விதித்த உத்திரவுப் பிரகாரமே இந்நாட்டை நிர்வகித்து வருவேன். இந்த அடிப்படை தர்மத்திற்கு விரோதமான எந்தக் காரியத்தையும் செய்ய சர்க்கார் இதுவரை மறுத்து வந்திருக்கிறது."*

இன்னும் எவ்வளவோ அவர் சாதித்தார். தேசம் பூராவும் "ரிப்பன் எங்கள் அப்பன்" என்று அவரை மனமாற வாழ்த்தியது. அவர் ஊரைவிட்டுப் போகிருர் என்ற செய்தி வெளியானதும் வருந்ாதவரே இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் துக்கித்தனர். ஆயினும் தங்களுடைய விசுவாசத்தை அவரிடம் அறிவிக்க கூட்டங்களைக் கூட்டினர். பாராட்டுத் தீர்மானங்களையும்

*லூஷியன் வுல்ப் எழுதிய ரிப்பன் சரிதை: 2 (பக்கம் 149, 150)

நிறைவேற்றினர். எல்லா நகர்களிலும் இவ்விதம் நடந்தது. இது கண்டு ஐரோப்பியரும் பிரமித்துப் போயினர். "இது உண்மையாயின் இதன் அர்த்தம் என்ன?" என்று எழுதவும் துணிந்தார் ஒரு பிரபல அதிகாரி.*

சென்னையிலும் நவம்பர் மாதம் 19-ம் தேதியன்று ஒரு பெரிய பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. நகரப் பிரமுகர்களும் பிரபல உத்தியோகஸ்தர்களும் பொதுவாழ்வில் பங்கெடுத்துக் கொண்ட பெருமக்களும் இங்கு ஆஜராயிருந்தனர். எல்லா வகுப்பாரும் வந்திருந்தனர். ரிப்பன் பிரபு பம்பாயை விட்டுப் புறப்படுமுன் அங்கு போய் அவரிடம் சென்னையிலுள்ள சுதேசிகள் சார்பில் ஒரு வாழ்த்துப் பத்திரத்தைப் படித்துக் கொடுக்க ஒரு சிலர் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட வேண்டும் என்று பாஷ்யமையங்கார் பிரேரேபித்தார். இது விஷயமான ஏற்பாடுகளைச் செய்யவும் அநேகரைக் கொண்ட சபை அமைக்கப்பட்டது. ஜனுப் ஆமத் மொஹிதீன் பாஷா பஹதூர் ஒரு நீண்ட ஜாபிதாவைப் படித்தார். அதில் ராஜா ஸர் டி. மாதவராவ், ராஜா கஜபதிராவ், மீர் ஹுமாயூன்ஜங், டி. கோபாலராவ், பி. ரங்கநாத முதலியார், கனம் டி. ராமராவ், வி. பாஷ்யமையங்கார், பி. செஞ்சல்ராவ், பி. விஜயரங்க முதலியார், வி. கிருஷ்ணமாச்சாரியார், சேலம் ராமசாமி முதலியார், சவலை ராமசாமி முதலியார், பாளையம் சோமசுந்தரம் செட்டியார், அநந்தாச்சார்லு, ஏ. சபாபதி முதலியார், ஏ. குப்பையா, பி. ஸ்ரீநிவாஸராவ், எம். சேஷகிரி சாஸ்திரி, டி. வெங்காசாமி ராவ், ஸ்ரீநிவாஸராகவையங்கார், என். சுப்ரமணியம், ஸி. சங்கரன் நாயர், ஸி. ராமச்சந்திரராவ் ஸாஹேப், டாக்டர் பழனியாண்டி ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர். க்ராண்ட் டப்பின் 'கெடுபிடி' நாட்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பொதுஜன ஊழியர்களுடன் கூடி வேலை செய்ய அனுமதி கிடைத்தது ஆச்சரியம் தான்!

ராஜப் பிரதிநிதியிடம் சமர்ப்பிக்க வேண்டிய உபசாரப் பத்திரத்தைத் தயாரிக்குமாறு இந்தக் கமிட்டியார் ஸ்ரீநிவாஸராகவையங்காரரையே கேட்டுக் கொண்டனர்; இவரும் இணங்கினர். அப்போது போர்டாபீஸில் குமாஸ்

---

*ஸர் ஏ. கால்வின் : பயோனீர்

தாவாக இருந்த என். பட்டாபிராம ராவ்* மிகவும் அழகாய் அச்சுக் கோர்த்தாற்போல் எழுதும் ஆற்றல் பெற்றிருந்ததால் இவர் தயாரித்த பத்திரம் அவரிடம் கொடுக்கப்பட்டு கண் கவரும் முறையில் அதைத் திரும்ப வரைந்து கொடுக்க வேண்டும் என்று மற்றவர்கள் கேட்டுக் கொண்டனர். இந்தப் பத்திரத்தில் காணப்பட்ட சில வாக்கியங்களை இங்கு எடுத்துக் காட்டவேண்டும். இந்தியர் ரிப்பன் பிரபுவிடம் கொண்டிருந்த மதிப்பை அது தெளிவு படுத்தும்.

"வெகு சமீபத்தில்தான் ஆரம்பித்ததுபோல் தோன்றும் தங்கள் இந்திய ஆட்சி இப்போது முடிந்து விட்டது எங்களுக்கு அதிக வருத்தத்தை விளைவிக்கிறது. சென்ற நாலரை வருஷங்களாக அநாதி காலமாகவே இந்தியாவில் வாழ்ந்துவரும் முப்பதுகோடி மக்களின் நன்றிக்குப் பாத்திரமாகும் விதத்தில் தாங்கள் நிர்வாகத்தை நடத்தியிருக்கிறீர்கள். தேசத்தில் எந்த இடத்திற்குப் போனாலும் உங்கள் பெயரைக் குறிப்பிடாத இடமே கிடையாது. உங்களிடம் எல்லோரும் உள்ளன்பும் உண்மையான மதிப்பும் கொண்டிருக்கின்றனர். உங்கள் ராஜதந்திரத்தில் தென்பட்ட நேர்மையையும் தாங்கள் வழங்கிய பரிசுத்தமான நீதியையும் தங்களுடைய தங்கு தடையற்ற தாராளத்தையும் ஒருவரும் மறக்கவே முடியாது.

தாங்கள் பதவியையேற்ற போதிருந்ததைவிட இப்போது தேசத்தில் எவ்வளவோ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. வடமேற்கே அதிக பணச் செலவில் அநாவசியமாய் நடந்துகொண்டிருந்த யுத்தத்தை நீங்கள் நிறுத்தினீர்கள். பஞ்சம், பொருள் .குறைவு ஆகியவை காரணமாகச் சம்பவித்த கஷ்டத்திலிருந்து நாடு சீக்கிரம் மீளுவதற்குத் தாங்கள் உதவினீர்கள். பொக்கிஷத்தையும் மிகச் சாமர்த்தியத்துடன் பரிபாலித்தீர்கள் : தேசச் செல்வத்திற்கு அடிப்படை ஆதா

*கொச்சி திவானாக இருந்தவர்

ரங்களான விவசாயத்திற்கும் கைத்தொழில்களுக்கும் ஆதரவு அளித்தீர்கள். பத்திரிகைகள் மீது பூட்டப் பட்ட தளையைத் தகர்த்தெறிந்தீர்கள். உயர்தரக் கல் வியை அலக்ஷியம் செய்யாமல் ஆரம்பக் கல்வி அபி விருத்திக்கும் ஏற்பாடு செய்தீர்கள். சர்க்கார் உத்தி யோகத்தைக் குறித்து படித்த சுதேசிகள் விடுத்த கோரிக்கைகளைப் பரந்த நோக்கத்துடன் நிறை வேற்ற முன்வந்தீர்கள். அந்தந்த ஸ்தலத்தைக் குறித்த விவகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடமே ஒப்படைப்பது நியாயமானதுடன் நல்ல கொள்கை என்பதையும் நீங்கள் தெளிவாக்கியிருக்கிறீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வேறு எந்த சர்க்கா ரையும்விட பிரிட்டிஷ் சர்க்காரே தங்கள் உரிமை களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் என்ற நம்பிக் கையை இந்திய மக்கள் உள்ளத்தில் ஊட்டியிருக்கி றீர்கள்.

ஒவ்வொரு ராஜப்பிரதிநிதியும் பதவியை விட்டுப் போகும்போது இதேமாதிரி கூறமுடியுமாயின் இந் தியா மிக்க அதிருஷ்டம் வாய்ந்ததாக இருக்கும்.

இந்தப் பரோபகார விஷயத்தில் தங்களுக்கிருந்த எதிர்ப்புகளையும் அதனுல் ஏற்பட்ட கவலைகளையும் நாங்கள் நன்கறிவோமாதலால் தங்களிடம் எங்க ளுக்கு இருக்கும் நன்றியறிவு சாதாரணமானதா காது.''*

உபசாரப் பத்திரம் இத்துடன் நிற்கவில்லை. ஊருக்குப் போய் ராணியாரைப் பேட்டியிடும்போது அவரிடம் இந்தி யர் கொண்ட விசுவாசத்தை அறிவிக்கும்படியும் சென்னை வாசிகள் கேட்டுக் கொண்டனர்.

இந்த வருஷங்களில் இவரது குடும்பத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியையும் கவனிக்க வேண்டும். 1880-ம் வருஷத் தில் சாரங்கபாணியும் 1882-ம் வருஷத்தில் பங்கஜமும் 1884-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் கிருஷ்ணஸ்வாமியும் பிறந்தனர்.

---

*ஹிந்து: 21-11-1884

தேசீய இந்திய சங்கத்தில் செய்த பிரசங்கத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சமூக சீர்திருத்தத்தைப்பற்றியும் பேசினர். காலநிலையை யறிய இவர் கூறிய வார்த்தைகள் இன்று உதவும்:

"சமூகச் சீர்திருத்தத்தில் சிரத்தை காட்டும் படித்த சுதேசிகளைப்பார்ப்பது உண்மையிலேயே பரிதாபமாயிருக்கிறது. வீட்டிற்குள்ளேயும் வெளியேயும் சமர்த்தியாயிருக்கும் அறியாமையை அகற்றுவதற்காகப் பழைய மார்க்கத்தைப் பின்பற்ருமல் புதிய பந்தாவை மேற்கொள்ள விரும்புபவர்களுக்குத் துணிச்சல் எவ்வளவோ இருக்கவேண்டும். தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றுகையில் தாய் தகப்பன்மாரின் கருத்துக்களை மதியாவிட்டால் அவரைப்போல் பிடிவாத புத்தியுள்ளவரோ அல்லது இயற்கைக்கு விரோதமாய் நடந்துக்கொள்பவரோ இருக்கமுடியாது என்று கூறுகின்றனர். சற்று நிதானமாகச் சென்ருல் அவருக்குச் சிரத்தையில்லை என்றும் சக்தியற்றிருக்கிருர் என்றும் சொல்கின்றனர். இந்தத் துறையில் உண்மையிலேயே நாட்டமுள்ள படித்த சுதேசிகள் பலர் இந்த ஸ்திதியில் சிக்கியுள்ளனர். நடுத்தரமான வழியைக் கண்டுபிடிக்கலாம்; ஆனுல் அதை நிச்சயிப்பதற்கு சாமர்த்தியமும் பகுத்தறிவும் அதிகம் தேவை. ஒன்றுக்கொன்று நேர் முரணுன இரண்டு பாதைகளிலும் சிக்காமல் இருப்பது மிகவும் சிரமமான காரியம். இத்தகைய இடையூறுகளைப் பார்க்கும்போது அநேகர் தங்கள் திடத்தை இழந்து விடுவதில் ஆச்சரியமேதுமில்லை. மேலான வாழ்க்கையை நடத்துவதில் தங்களுக்கிருக்கும் ஆசையை அடக்கிக்கொண்டு எப்படியாவது அமைதியாகக் காலத்தைக் கடத்தலாம் என்ற எண்ணமே அவர்களுக்குப் பெரிதாகி

விடுகிறது. காலப்போக்கில், படித்தவர்களின் சமூகம் பெருகப் பெருக, அநாவசியமான தடைகள் தணிந்துபோகும். இப்போது எல்லோரும் ஒரே மாதிரி மனோதைர்யத்துடன் முன்வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்லவாயினும் தங்களைச் சுற்றியுள்ள விக்கினங்களை உதறித்தள்ளி சீர்திருத்தத்தை அனுஷ்டிக்க முன்வரும் சொற்ப நபர்களிடம் படித்துத் தேர்ச்சி பெற்றவர்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்பதை நிர்ணயிப்பது மிகவும் முக்கியமாகும். அவர்களுடைய கக்ஷியை ஆதரிக்க அசக்தர்களாக விருந்தும் நாம் அவர்களிடம் அனுதாபம் காட்டுகிறோமா? அவர்களது முயற்சி வெற்றி பெறும்போது சந்தோஷம் கொண்டும் முறியும்போது நாம் வருந்துவதுமுண்டா? இந்த விஷயத்தில் நாம் திருப்திகரமான பதிலைத்தரமுடியாது. காலப்போக்கைக் கவனிக்கையில் எனக்குத் தெரிவது இதுதான். அவர்கள் மொத்தத்தில் எதை விரும்புகின்றனர் என்பதைப்பற்றி நன்கு சிந்திக்காமல் அவர்கள் செய்வது யாவும் பிசகு என்று கூறுவதிலும் இங்குமங்கும் சில பிழைகளைக் கண்டு பிடித்து அவற்றை மிக்க திருப்தியுடன் எடுத்துக் காட்டுவதிலும் நாம் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறோம். இப்போது அர்த்தமற்றவையும் பாதகம் புரியக்கூடியவையுமான பல வழக்கங்களுக்கு நல்ல காரணம் இருந்திருக்கவேண்டும் என்பதை மிக்க விரிவான முறையில் விளக்குவதில் நமக்கிருக்கும் மகிழ்ச்சி அதிகம். உண்மையில் மெதுவாக முன்னேறிப்போகும் நாம் சீர்திருத்தவாதிகள் அவசரப்படுவதாகக் கண்டிக்கிறோம். ஒரு விஷயம் விவாதிக்கப்படும்போது அதற்குப் பதிலாக நாம் மற்றொரு வழியைக் காட்டி அதுவே மிகவும் தகுதியானது என்றும் நடக்கக்கூடியது என்றும் கூறுகிறோம். ஆனால் இரண்டு முறைகளையும் அனுஷ்டித்துப்பார்க்கலாம் என்றுகூட நாம் கோருவதில்லை. இதுவும் சாத்தியமாகாவிட்டால் உலகமே கொடிது என்றும் அங்கு எங்கு பார்த்தாலும் அநியாயங்களே தலைகாட்டு

வதால் இப்போது அதைத்திருத்த முயலுவது முடியாத காரியம் என்றும் மனச்சோர்வுடன் பேசக் கிளம்புகிறேம். இவையெல்லாவற்றையும் நாம் வேண்டுமென்றே செய்வதாக நான் கூறவில்லை. நம்முடைய சுற்றுப்புற நிலைமையே இதற்குக் காரணம். அதனுல் நாம் நம்மைப்போல் நியாயமாக நடந்து கொள்பவர் இருக்கமுடியாது என்று எண்ணி ஏமாந்து போகிறேம்.

இளைஞர்களைப்பற்றி மட்டுமே நான் இவ்விதம் கூறவில்லை. வாழ்க்கையில் பிரகாசிப்பவர்களும் சமூகத்திற்கே ஆபரணம்போல் திகழுபவர்களும் சிறியவர்களுக்கு உதாரணமாக விளங்கக்கூடியவர்களுமான சிலர்கூட சமூக சீர்திருத்தம் சம்பந்தமாக ஸ்பார்டாவில் வாழ்ந்த வீரத்தாய் மக்கள் போல நடந்துகொள்ளவில்லை என்பதை நான் குறிப்பிடுவது அவசியமாகும். இவர்கள் சில சமயங்களில் சத்தியமார்க்கத்தைவிட ஜாக்கிரதையாக நடந்து கொள்வதே உசிதம் என்று யுவர்களுக்கு உபதேசித்திருக்கின்றனர். உயர்தரமான நோக்கத்திற்கு இடம் தராமல் சொந்த நன்மையை அபேக்ஷிப்பதையே அவர்கள் ஆமோதித்திருக்கின்றனர். இந்த உபதேசத்தைக் கேளாமலேயே பழைய பாதையைப் பின்பற்றும்படி அவர்களைப் பிதாவின் கோபமும் அன்னையின் அழுகையும் மனைவியின் ஓலமும் அக்கம் பக்கத்தாரின் ஏளனமும் நிர்ப்பந்திப்பது இயற்கையாகும். நாம் மனசில் கபடில்லாமல் இருப்பதுடன் அவர்களது முயற்சியில் பங்கெடுத்துக்கொள்ளாத போதிலும் அனுதாபத்தையாவது காட்ட முன்வர வேண்டும். இவ்விதம் செய்வதால் அவர்களுக்குத் தங்கள் கஷ்டங்களையம் சிரமங்களையும் தாங்கி நிற்பது சுலபமாகும்....

இப்போது தலைகாட்டியுள்ள அசிரத்தை சிறிது காலத்திற்கெல்லாம் மறைந்துபோகும் என்றும் இந்தியாவின் எதிர்காலம் பெருமையளிக்கக் கூடியதாய் இருக்கும் என்றும் நான் நம்புகிறேன். சமூகச் சீர்

திருத்தத்தைத் தழுவிய பிரச்னைகள் பல இருக்கின்றன. இந்தியாவின் ராஜீய எதிர்காலத்தைப்பற்றியும் ஆத்மிய வாழ்வைப்பற்றியும் எவ்வளவோ பேசலாம். அவகாசக் குறைவு காரணமாக அவற்றைப்பற்றி நான் இப்போது பிரஸ்தாபிக்க இயலவில்லை.''

ஸ்ரீநிவாஸராகவையங்கார் இவ்விதம் பேசியதேன்? சீர்திருத்தவாதிகளிடம் சிரத்தைக் குறைவு இருந்ததா? முயற்சிக்கு ஆதரவு அளிக்காவிட்டாலும் முட்டுக் கட்டைபோட மனமுவந்து வந்தது உண்மைதானா? ஆராய்ந்து பார்த்தால் இவர் கூறிய வார்த்தைகள் முழுதும் பொருத்தமுள்ளவை என்பது புலப்படும்.

பால்ய விவாகத்தடை, விதவா விவாகம்—இவை தான் அந்நாளில் சீர்திருத்தக்காரர்களின் கவனத்தைக் கவர்ந்தன. மேனாட்டுப் படிப்புக் காரணமாக இந்நாட்டில் உருவாகிய மனோபாவத்தின் விளைவே இது. இதர தேசங்களில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தியையும் இதே சமயத்தில் இந்தியா தாழ்ந்துகொண்டே இருப்பதையும் கண்ட அறிஞர்கள் நாம் புராதனப் பெருமையைப்பற்றிப் பேசுவதில் மட்டுமே மோகம் கொண்டிருப்பது இதற்கு காரணம் என்பதை உணர்ந்தனர். காலத்தின் ரீதியை அனுசரித்து நாம் முற்போக்கு மார்க்கங்களைக் கடைப்பிடிக்காமையே இதற்குக் காரணம் என்று அவர்கள் தெளிவாகக் கண்டனர். ஆகவே சமமான அந்தஸ்து பெறவேண்டும் என்ற ஆவல் பிறந்தபோது சீர்திருத்தத்தில் பற்றுதல் ஏற்பட்டது. 1856-ம் ஆண்டிலேயே விதவா விவாகத்தை ஒப்புக்கொண்டு சட்டமியற்றப் பட்டது. உரிமை அளிக்கப்பட்டும் அதை ஸ்வீகரிக்க ஒருவரும் முன்வரவில்லை. இந்தச் சட்டத்தை பயன் படுத்திக் கொள்ளும்படிச் செய்வதற்காக சென்னையில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. 1868-ல் இது விஷயமாக செஞ்சல் ராவ் பொறுப்பை யேற்றார். மாகாணத்திலுள்ள முக்கியஸ்தர்களின் சகாயத்தையெல்லாம் அவர் நாடினார். படித்தவர்களிடமும் செல்வாக்குள்ளவர்களிடமும் சென்று அவர் முறையிட்டார். விதவா விவாகத்தினால் ஒருவித தோஷமுமில்லை என்பதைப் பறை சாற்றுவதில் அவர் முழுமனசுடன் முனைந்தார். மதாசாரங்களும்

தர்ம சாஸ்திரங்களும் அதை ஆதரிப்பதாகவும் அவர் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினர். முன்னேர் விதித்த நெறிமுறைகள் இடைக் காலத்தில்தான் மாறியிருப்பதாயும் அவர் அறிவித்தார். மாறுபாடுகளை நீக்கித் திரும்பவும் பூர்வீக நியாயத்தைப் பின்பற்றுவதில் பிசகு ஏது என்றும் அவர் வினவினர். இத்தகைய நோக்கத்துடன் செஞ்சல் ராவ் ஆரம்பித்த சங்கத்திற்கு கனம் வி. ராமையங்கார் தலைவராக இருக்க இசைந்தார். முத்துஸ்வாமி ஐயர் உபதலைவர் பதவியை ஒப்புக்கொண்டார். கனம் வி. சஞ்சீவராவ், சோமசுந்திரம் செட்டியார் முதலிய பல பிரமுகர்கள் கமிட்டியில் இடம் பெற்றனர். செஞ்சல் ராவ் காரியதரிசியானர். மாகாணம் முழுதிலும் அவர் தம் கக்ஷிக்குப் பலத்தைத் திரட்டினர். சமூகக்கட்டுப்பாடுகளை மீறி சீர்திருத்தங்களை சாதிப்பவர்களுக்கு இந்தச் சங்கத்தார் பண உதவியை மட்டுமே அளித்தனர். பகிஷ்கரிக்கப்பட்டவர்கள் விஷயத்தில் அவர்கள் கொண்ட அனுதாபம் அவ்வளவு தூரம்தான் எட்டியது. ஆயினும் செஞ்சல் ராவ் சிறிதும் மனம் தளராமல் இரண்டொரு விதவா விவாகங்களை நடத்திவைத்தார். இதே சமயம் இந்தச் சீர்திருத்தவாதிகளைத் தனியாக ஒதுக்கிவிடவேண்டும் என்ற பிடிவாதம் கொஞ்சமேனும் குறையவில்லை. ஆகையால் வெறும் பண உதவியால் மட்டுமே சீர்திருத்தம் நிறைவேருது என்பதை செஞ்சல்ராவ் கண்டு கொண்டார். முழுமனசுடன் எதிர்த்து நின்ருல்தான் முயற்சி பலன் பெறும் என்று அவர் எண்ணினர். துணிவும் திடமும் தான் தேவை என்று அவர் தீர்மானித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் திவான் பஹதூர் ஆர். ரகுநாத ராவ் இந்த சீர்திருத்தத் துறையில் பிரவேசித்தார். செஞ்சல் ராவ் போன்றவர்கள் மிக்கவும் அவசரப்படுவதாக அவர் நினைத்தார். இதற்காகப் பிரசாரத்தை நடத்த வேண்டும் என்று அவர் விரும்பினர். ஹிந்து சட்டதிட்டங்கள் விதவா விவாகத்தை ஆக்ஷேபிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதே சரியான வழி என்ருர் அவர். இதற்காக அவர் சிறிய புத்தகங்களை எழுதி விநியோகம் செய்தார். ஆங்காங்கு பிரசங்கங்களை நடத்தவும் ஏற்பாடு பண்ணினர். அநேக இடங்களில் சர்ச்சைகளை நடத்தி எதிர்க்கட்சி

யாரைத் தம் பக்கம் திருப்பவும் அவர் திட்டம் வகுத்தார். சாத்வீகமான முறையில் சம்பிரதாயத்தைச் சிதறடிக்க அவர் உத்தேசித்தார். 'இது புதிதல்ல, பெரியோர் இதைத் தான் விதித்தனர்', என்றெல்லாம் போதிய ஆதாரத்துடன் அவர் பேசிப்பார்த்தார். எதிர்பார்த்த பலன் இல்லை! ஆசாரக்காரர்களின் மனம் மாறவில்லை. பிற்போக்காளரின் பிடிவாதமும் சிறிதுகூடக் குறையவில்லை.

சென்னையில் அப்போது வக்கீல் தொழிலை நடத்தி வந்த பி. அநந்தாச்சார்லுவும் இந்தத் துறையில் இறங்கினார். இவருக்குப் பூரண சம்ஸ்கிருத ஞானம் இருந்தது. மூலகிரந்தங்களைத் தாமே படித்து அவற்றின் உட்கருத்துகளை விளக்கிக்காட்ட அவர் முற்பட்டார். சாஸ்திரங்கள் விதித்தபடியே சம்பிரதாயம் நிலவி வருகிறதா? முன்னோர் நிர்ணயித்துவிட்டுப்போன மதாசாரக் கொள்கைகள் முற்றிலும் நியாயமா? தர்ம நூல்கள் அவற்றை ஆதரிக்கின்றனவா?—இவ்விதம் பல கேள்விகள் அவர்முன் நின்றன. இவற்றுக்குப் பதிலைக் கண்டுபிடித்துக் கொடுத்து ஆசார முறைகளைச் சீர்திருத்த அவர் கங்கணம் கட்டிக்கொண்டார். பழைய புத்தகங்களையெல்லாம் புரட்டிப் பார்த்தார். ஊன்றியும் படித்தார். முடிவில், மூடநம்பிக்கைகளும் குருட்டுக் கொள்கைகளுமே நாட்டில் தாண்டவமாடியதைக் கண்டார். ஆகவே அவர் தாம் ஆராய்ந்தறிந்தவற்றைப் பொதுஜன நலனையுத்தேசித்து 1883-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் புத்தக ரூபமாக வெளியிட்டார். "ஹிந்து விவாக விதிகளைச் சீர்திருத்துவது எப்படி?" என்பது அதன் மகுடம். சிறிய நூல்தான்; ஆயினும் சிரத்தையுடன் எழுதப்பட்டது.

> "சீர்திருத்தங்களை விரும்புவோர் சாஸ்திரங்களைத் தாக்குவதோ அல்லது தொழுவதோ கூடாது. ஆனால் அவற்றின் அடிப்படையான அம்சங்களை நன்றாகப் பரிசீலிக்க வேண்டும். வாழ்க்கையின் நோக்கம், லக்ஷியம் ஆகியவைப்பற்றித் தற்காலம் ஏற்பட்டுள்ள மனோபாவத்திற்குகந்தபடி திருத்தவேண்டும்."

இவ்விதம் கூறிவிட்டு இந்தப் பிரச்னைக்கு நான்கு முகங்கள் இருப்பதாகவும் பரோபகார அம்சம், உபயோக

கர அம்சம், சட்ட அம்சம், திருத்தக்கூடிய அம்சம் என அவற்றைப் பிரித்துக் கூறலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். விவாக விதிகளில் பல, சம்பிரதாயம் காரணமாகப் பிறந்தவை என்றும் ஆகவே அவற்றை மாற்றியமைப்பதில் குற்றமில்லை எனவும் அநந்தாச்சார்லு எடுத்துக் காட்டினார். ஹிந்துக்கள் தங்களுடைய மதத்தின் மூலாதார தர்மங்களை மீறக்கூடாதெனினும் காலப் போக்கில் மனிதர் இயற்றிவைத்த மாறுபாடுகளை மறுத்து நிற்கலாம் என்றே அவர் துணிவுடன் தெரிவித்தார்.

ராஜமஹேந்திரபுரத்தில் இருந்த கந்துக்கூரி வீரேசலிங்கம் பந்துலு சமூகத்தில் உள்ள கொடுமைகளை அகற்ற வேறு ஒரு மார்க்கத்தைப் பின்பற்றினார். "ப்ராஹ்மிய விவாகம்" என்று ஒரு அற்புதமான தெலுங்கு நாடகத்தை அவர் இயற்றினார். அதில் அவர் எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் விதத்தில் தாம் கண்ட தோஷங்களை எடுத்துக் காட்டினார். ஐம்பது வயதான கிழவர் ஒருவர் ஒன்பது வயதான இளம் பெண்ணை மணம்புரிந்து கொள்ளும் தீய வழக்கத்தை வீரேசலிங்கம் காரமாகக் கண்டித்தார்.

ரகுநாதராவும் செஞ்சல் ராவும் பால்ய பருவத்தில் விவாகம் நடந்தபோதிலும் யுக்த வயதுக்குமுன் சிறுமி விதவையாகிவிட்டால் அவளை விதவையாகக் கருதக் கூடாது என்றும் தம்பதிகள் ஒன்று சேர்ந்து வாழும் வரையில் விவாகம் பரிபூர்த்தியாகி விட்டதாகக் கருதலாகாது என்றும் பிரசாரம் பண்ணினர். இதற்காக அவர்கள் ஸ்மிருதிகளிலிருந்தும் சில மேற்கோள்களை எடுத்துக் காட்டினர். இதற்கப்புறம் ரகுநாத ராவ் உத்தராதி மடத்து ஸ்வாமிகளுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஸ்வாமிகள் சென்னைக்கு வந்து இந்தப் புனர் விவாகப் பிரச்னையைப் பற்றி பண்டிதர்களின் பரிஷத் ஒன்றைக் கூட்டவேண்டுமென்று அவர் கோரியிருந்தார். 1884-ம் வருஷம் ஜூலை மாதம் ஸ்ரீ ஸத்யவீர ஸ்வாமிகள் சென்னைக்கு அநேகம் பண்டிதர்களை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். ஸதாராவிலிருந்து அநந்தாச்சாரியர், குவாலியரிலிருந்து கோபாலாச்சாரியர் முதலிய வித்வந்மணிகளும் பெரிய விவாதத்திற்குத் தயாராகக் கூடிவிட்டனர். குறிப்பிட்ட

தினத்தன்று விவாதம் ஆரம்பித்தது. மடாதிபதிகள் தலைமை வகித்தார். மூன்று நாட்கள் வாதப்பிரதிவாதங்கள் நீடித்திருந்தன. சப்தபதிக்கு முன்பு ஒரு பெண் கணவனை இழந்து விட்டால் இந்தக் கலிகாலத்தில் அவளை வேறு ஒருவருக்கு மணம் செய்விக்கலாகாது என்று பாப்ரவ்ய ஸ்மிருதியில் விதிக்கப்பட்டிருப்பதாக கோபாலாச்சாரியர் தர்க்கம் செய்தார். வாக்கியங்களுக்கு வியாக்கியானம் செய்வது சம்பந்தமாகச் சிறிது காலம் தகராறு தலைகாட்டியபின் ரகுநாதராவ் தமது புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட ஆதாரங்களை யெல்லாம் அந்த சபையில் படித்தார். தாங்கள் குறிப்பிட்ட ஸ்மிருதியை ஆக்ஷேபித்து எந்த ஆதாரமும் காட்டப்படவில்லை என்றனர் எதிர்க் கட்சியினர். பராசர ஸ்மிருதிக்குக் கூடவா மதிப்பு கிடையாது என்று ரகுநாதராவ் ஒரு சந்தர்ப்பத்தில் மிக்க ரோஷத்துடன் வினவியபோது கோபாலாச்சாரியர் ஜனமேஜயனின் யாகத்திற்கும் முன்னதான காலத்தைத்தான் அந்த ஸ்மிருதி குறிப்பிடுவதாகும், ஆகவே அதைத் தற்காலத்திற்கேற்றதாகக் கருதக்கூடாது என்றும் வாதாடினார். கடைசியில் ரகுநாதராவுக்கு கோபம் பொங்கிக் கிளம்பியது. இந்த ஒரு தலைப் பக்ஷமான வாதத்தை அவர் விரும்பவே இல்லை. இனித் தாம் பாப்ரவ்ய ஸ்மிருதியை ஒப்புக்கொள்ள முடியாது என்றும் கூறிவிட்டார். உடனே சபையில் கூடியிருந்த சாஸ்திரி ஒவ்வொருவரும் எழுந்து நின்று பேசவாரம்பித்து விட்டார். ரகுநாதராவ் மீது ஒரே வசைமாரி! கட்சியில் நியாயமில்லாதபோது அதைச் சாதித்துக் கொள்ள இந்த வழியைத் தவிர வேறு ஏது? அர்த்தமின்றி அதிக ஆர்ப்பாட்டத்துடன் அவதூறுகப் பேசினரேயன்றி எதிராளியைத் தங்கள் பக்கத்திற்கு எப்படியாவது ஆகர்ஷிக்க வேண்டுமே என்ற மனோபாவம் அவர்களுக்கு உண்டாகவில்லை. பண்டிதர்களின் போக்கு விரஸமாகப் போகவே ரகுநாதராவுக்கு அங்கு உட்கார்ந்திருப்பதும் வெறுப்பாகியது. மகாநாட்டின் நடவடிக்கையில் தமக்கேற்பட்ட அதிருப்தியைப் பஹிரங்கப் படுத்துவதற்காக அவர் அது முடியுமுன்பேயே எழுந்துபோய் விட்டார். ஒவ்வொரு கட்டத்திலும் பண்டிதர்கள் முரட்டுப் பிடிவாதத்தைக் காட்டி விரோதத்தைப் பெரிதாக்குவதாகவும் ஆகவே இனி தாம் அந்தக் கேலிக்கூத்தில் கலந்துகொள்ள

விரும்பவில்லை என்பதையும் தலைவரிடம் அறிவித்துவிட்டு அவர் வெளியே வந்துவிட்டார். சுமார் 200 பண்டிதர்களை எதிர்த்து நின்ற அந்த ஒருவரும் கிளம்பிவிடவே ஸ்வாமிகள் பரமதிருப்தியுடன் ஆசார சீர்திருத்தவாதிகளின் கட்சி தோல்வியுற்றதாயும் தாங்களே ஜெயித்து விட்டதாகவும் அந்த சபையில் அறிவித்தார்.

சாத்வீகமான முறையில் சீர்திருத்தத்தைச் செய்ய ரகுநாதராவ் முயற்சித்தது வியர்த்தமாகப் போய்விட்டதாயினும் அவர் இதற்கப்புறம் சும்மா இருக்கவில்லை. ராஜா ஸர் டி. மாதவராவ் ரகுநாதராவின் கட்சியை மனப்பூர்வமாக ஆதரித்தார். அடுத்த மாதம் அவர் சென்னையில் ஒரு பெரிய ஹிந்து சமூகத்தில் இந்த பிரச்னையைப் பற்றிப் பேசினார். புத்திசாலிகளான பெற்றோர் தங்கள் பெண்களுக்கு 12 வயதும் பிள்ளைகளுக்கு 16 வயதும் முடிவதற்கு முன்பு மணம் செய்விக்கக்கூடாது என்று அவர் முறையிட்டார். புனர் விவாகம் செய்துகொள்ளத் தங்களுக்குச் சட்டபூர்வமாக இருக்கும் உரிமைகளைத் துறந்துள்ள விதவைகளைக் கண்ணியமானபடி நடத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பின்னொரு சமயம் இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தி ராய்பஹதூர் பி. ரங்கநாத முதலியார் பேசினார்: "நம் நாட்டில் முன்னணியிலுள்ள இருவர் மிக்க புத்திசாதுர்யத்துடனும் சிரமத்துடனும் ஹிந்துமத சம்பந்தமானப் புத்தகங்களையெல்லாம் படித்து விதவா விவாகத்தை ஒப்புக்கொண்டுள்ள பல வாக்கியங்களை அவைகளிலிருந்து எடுத்துப் பிரசுரித்தனர். இத்தகைய முறை வீணாகப்போகும் என்ற எண்ணம் எனக்கு அப்போதே இருந்தது. விதவா விவாகத்திற்குப் பாதகமாக மேற்கோள்களைக் காட்டுவது எவ்வளவு சுலபமோ அவ்வளவு சுலபம் சாதகமாகக் காட்டுவதும். சமூகத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு பிரச்னையைப் பற்றிய விவாதம் ஒரு வாக்கியத்தின் இலக்கணத்தையோ அல்லது இரண்டு அர்த்தங்கள் தொனிக்கும் ஒரு பதத்திற்கு அக்ஷரத்தையோ அல்லது உட்கருத்தையோ அடிப்படையாகக்கொண்டு வியாக்கியானம் கூறுவதையோ தழுவியதானால் அதில் எந்தத்தரப்பாரும் மற்றொரு தரப்பாரைத் திருப்திச் செய்து தங்கள் வழிக்குத்

திருப்ப முடியாது. அது நீண்டுகொண்டே போகும்.''*
வாதங்களை நடத்தி வசைமாரிகளை வாங்கிக் கொள்வதைக் காட்டிலும் காரியத்தை முடித்துக் கண்டனத்தைப் பெற்ருலும் பாதகமில்லை என்று அவர்கள் எண்ணத்தொடங்கினர். புனர் விவாகம் செய்துகொண்ட தம்பதிகளுடன் சேர்ந்து சமபந்தி போஜனம் செய்ய அவர்கள் பிறகு விரும்பினர். தங்கள் அனுதாபம் பேச்சளவில் மட்டும் இருப்பதைவிட செயலளவிலும் பிரதிபிம்பிக்கவேண்டும் என்ற கருத்து அவர்களைப் பற்றிக்கொண்டது. ராஜமஹேந்திரபுரத்தில் வீரேசலிங்கம் பந்துலு, நியாபதி சுப்பராவ் பந்துலு ஆகியோர் முயற்சியினுல் விதவா விவாக சபை அங்கு தலைகாட்டியது. இந்த சபையார் ஒரு விதவையின் விவாகத்திற்கு ஏற்பாடு செய்து மாகாணம் பூராவிலும் உள்ள படித்த சுதேசிகளை விவாகத்திற்கு வந்து ஆசீர்வதிக்கும்படி அழைத்தனர். இதற்கான திரவிய சகாயத்தைப் புரிய பைடா ராமகிருஷ்ணைய பந்துலு சம்மதித்தார். சிலர் வருவதாகப் பதில் எழுதினர். சிலர் இதை ஆதரிப்பதாகத் தெரிவித்தனர். பதில் அறிவிக்காதவர் அநேகர். கடைசியில் வருவதாகத் தெரிவித்தவர்கள் கூடப் போகவில்லை. இருவர் மட்டுமே அங்கு ஆஜராயிருந்தனர். செஞ்சல் ராவ் இந்த விவாதத்தில் கலந்துகொண்டார். புதிய தம்பதிகளுடனும் சேர்ந்து சாப்பிட்டார். இதனுல் செஞ்சல் ராவும் அவர் சகாக்களும் மட்டும் சிக்கினர். ஹிந்து சமூகத்திலிருந்து அவர்களைத் துரத்தவும் ஒரு சிலர் துணிந்தனர். சமூக க்ஷேமத்தை அபேக்ஷித்தவர்கள் ஜாதி ப்ரஷ்டம் செய்யப்பட்டனர். செஞ்சல் ராவ் இதற்கெல்லாம் சளைக்கவில்லை. தாம் மேற்கொண்ட கடமையிலேயே கடைசிவரை அவர் கண்ணும் கருத்துமாயிருந்தார். அநேக சமயங்களில் அளவு மீறிய உத்சாகத்தினுல் ஆழம் தெரியாமல் கால் வைத்துவிட்டதாகக் கூட அவர் அதைரியப்பட்டதுண்டு. நெருங்கிய நண்பர்களில் பலர் கல்களைப்போல் இருந்தனரே தவிர சரியானவிதத்தில் நடந்துகொள்ள முன்வரவில்லை. இவர்களில் ஒருவர் தாம் ஆசாரவாதிகள் கோஷ்

*ரங்கநாத முதலியாரின் ''ஆசிரியர் விடுமுறை''(1896) பக்கம் 26

டியில் இருக்கப் போவதாகவும் ஆனால் மறைமுகமாகப் பணம் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் அவரிடம் தெரிவித்தார். இவ்விதம் கவலைப்படும்படி இருந்தது நாட்டின் நிலைமை.

> "நாம் மாறுதலையும் முன்னேற்றத்தையும் விரும்புகிறோம். நியாயமோ அநியாயமோ சம்பிரதாயத்தையும் வழக்கத்தையும் பின்பற்ற எதிர்க்கட்சியினர் விரும்புகின்றனர். ஸ்திரீகள் நமக்கு சமமாகவும் சகாக்களாகவும் இருப்பதை நாம் வேண்டுகிறோம். அவர்களை அடிமைகளாகவும் கருவிகளாகவும் கொள்ள எதிராளிகள் கருதுகின்றனர். நாம் அவர்களுக்கு சுதந்திரத்தை அளிக்க ஆவலாயிருக்கிறோம். ஆனால் அவர்கள் அதைக் கட்டுப்படுத்தவே ஆசைப்படுகின்றனர்.
>
> எதை எடுத்துக்கொண்டாலும் சண்டை ஏற்படுவது நிச்சயம். நாம் எதிர்ப்பைப் புறக்கணித்து சீர்திருத்தத்தைச் சாதிக்கவேண்டும். கோட்டையைத் தாக்கினால்தான் அதைக்கைப்பற்ற முடியும். சமரஸத்தினால் அது நடக்காது. இதைச் செய்வது எவ்விதம்? கட்டுப்பாடான முறையில் ஒன்றுபடுவதே அதற்கு வழி. அதைத்தவிர வேறு வழி கிடையாது."*—தம் அனுபவத்தை மனதில் கொண்டு

செஞ்சல் ராவ் இவ்விதம் பேசினார். இதற்காகவே அவர் உழைத்தார்.

சென்னை மாகாணத்தில் நிலைமை இப்படி இருக்கையில் பம்பாயிலிருந்த பெஹ்ராம்ஜி மலபாரி என்ற பார்ஸி பிரமுகர் இந்தப் பிரச்னைகளைக் குறித்து ராஜப்பிரதிநிதியான ரிப்பன் பிரபுவிடம் முறையிட்டார். 1884-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி யன்று இரண்டுவிண்ணப்பங்களையும் அனுப்பினார்.

> "பிரிட்டிஷ் சர்க்கார் சிசு ஹத்தியைச் சட்டபூர்வமாகத் தடுத்திருக்கின்றனர். அதனால் சமூகத்

---

*செஞ்சல் ராவ் பிரசங்கம், இந்தியன் ஸோஷல் ரிபார்மர் (7-12-1895)

திற்குப் பெரிய நன்மை விளைந்தது. ஆனால் சிசுஹத்தியைக் காட்டிலும் பால்ய விவாகத்தினால் சமூகத்திற்கு அதிகக் கேடு விளைகிறது. தக்கபடி பால்ய தசையில் விவாகம் நடக்காவிட்டால் அது ஆயுள் காலம் முழுமையும் வாழ்க்கையைக் கசக்கச் செய்கிறது. நம் சமூகத் தீமைகள் பல இந்த பால்ய விவாகத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. விதவா விவாகத்தை ஒப்புக்கொள்ள மறுப்பதும் அறியாமையாகும்.*

இந்தப் பழக்கங்களினால் ஏற்படும் பாதகங்களையெல்லாம் மலபாரி விவரித்தார். மணம் செய்யவேண்டிய சமயத்தில் ஜாதிக்கட்டுப்பாடுகள் முன் நிற்பதாயும் கல்யாணத்தை எப்படியாவது நடத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்தினால் அவசரப்பட்டு விடுவதாயும் தோஷங்களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை எனவும் பிறக்கும் குழந்தைகள் பலஹீனமாயும் மற்றும் இதர குறைகளுடனும் இருப்பதாயும் இத்தகைய ஸ்திரீ புருஷர்களை 'விவாகமான தியாகிகள்' என்றே கருதவேண்டுமென்றும் மலபாரி எழுதினார்.

பால்ய விவாகத்தின் தீமைகளை அவர் பூரணமாய் விவரித்தார். "வெகு சீக்கிரத்தில் ருது சாந்தி நடக்கிறது. பிறகு தேக திடம் தளர்ந்து வியாதி தலைகாட்டுகிறது. சிறு பிராயத்திலிருக்கும் கணவன் தன் படிப்பை உடனே நிறுத்தவேண்டி வருகிறது. ஆரோக்கியமற்ற சிசுக்கள் ஜனிக்கின்றன. அநேகரை சம்ரக்ஷிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஏழ்மை அதிகரித்து பிறர் சகாயத்தை எதிர்பார்க்கவேண்டியதாகிறது. கடைசியில் குடும்பம் சீர்குலைந்து பாபகாரியத்தில் துணியவும் மனம் முன்வருகிறது. முடிவாகக் கவனிக்கையில் யௌவன தசையிலேயே கிழவர்களாகிப்போகும் இருவர் வாழ்க்கை அவலமாகிறது. எல்லாம் நன்றாக இருந்தால் இவ்விருவரும் எவ்வளவோ சந்தோஷமாக அநேக காலத்திற்கு ஜீவிக்கமுடியும்."

---

*பால்ய விவாகம், விதவா விவாகத்தடை ஆகியவை பற்றிய தஸ்தவேஜிகள் (1886) பக்கம் 3

ஒரு சிலர் பிரசாரபூர்வமாய் மக்களுக்கு அறிவூட்டுவதே நல்லவழி என்று உபதேசிப்பதாயும் இதை ஆக்ஷேபிக்க முடியாதெனவும் ஆயினும் இந்நாட்டில் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கே அதிக தாமதம் இருந்திருப்பதால் பொதுமக்கள் அனைவரும் அறிவாளிகளாவதற்கு எவ்வளவோ நாட்கள் செல்லும் என்றும் மலபாரி அபிப்பிராயப்பட்டார். தேசத்தின் முக்கியமான வழக்கங்களில் பால்ய விவாகத்தை ஒன்ருகக் கருதக்கூடாது என்றும் தமக்குத் தெரிந்தவரையில் 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு மணம் நடப்பதை சாஸ்திரங்கள் அனுமதிக்கவில்லை என்றும் அவர் எடுத்துக்காட்டினுர். இந்த சமயத்தில் சர்க்காருக்குப் பெரிய பொறுப்பு இருப்பதாகவும் அவர் கூறத் தயங்கவில்லை.

"கிடைக்கக்கூடிய ஊழியர்களில்-பிரஜைகளில் - சிறந்தவரை ஸ்வீகரிக்க சர்க்காருக்கு உரிமை உண்டு. அப்படியானுல் ஒரு இலாகா அதிபர் தம்மிடம் ஒரே யோக்கியதையுடன் விவாகமானவரும் விவாகமாகாதவரும் வேலைக்கு வரும்போது விவாகமாகாதவரையே பொறுக்கி யெடுக்கலாம். இந்த யோசனையால் கெடுதல் சிறிது ஏற்படக்கூடுமாயினும் நன்மையே அதிகம் என்பது என் கருத்து. இந்தத் தீமையை விளக்கும் பாடபுத்தகங்களை மாணவர்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்யலாம். முதலில் வெளியூர்களில் பெண் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது சில உத்தியோகஸ்தர்களின் தூண்டுதலே அங்கு சிறுமிகளை அனுப்புவதற்கு உதவியது. தினமும் சிறிது நேரம் கூடத் தங்கள் பெண்கள் தங்களை விட்டுப்போகக் கூடாது என்று தாய் தந்தையர் அப்போது கூறினர். ஆயினும் காரியத்தை நிறைவேற்றவேண்டியிருந்தது. இப்போது அந்தப் பள்ளிக்கூடங்களை மூடுங்கள்; நிச்சயமாக எல்லோரும் உடனே கண்டிக்கக் கிளம்பி விடுவார்கள்."

ஹிந்து சமூகத்தில் விதவைகளைப்போல் கேவலமாக நடத்தப்படுபவர்களைக் காணமுடியாது என்றும் மலபாரி குறிப்பிட்டார்:

"ஸ்திரீகள் புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களாக இருக்கின்றனர். சிறு பிராயத்திலேயே அவளுக்குக் கல்யாணம் நடக்கிறது. ஒருவேளை கணவன் சீக்கிரம் மரித்து விட்டால் அவளுக்கு நிரந்தரமான வைதவ்வியம் சம்பவிக்கிறது. இளமைப் பருவத்திலிருக்கையிலேயே சமூகம் அவளை நிராகரிக்கிறது. அநேக விஷயங்களில் அவள் இதரர்களையே எல்லாவற்றிற்கும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. தனக்குரிய உரிமையை ஸ்வீகரித்து அதைப் பிறர் பறிக்காத வண்ணம் செய்வதற்கு அவள் திறமையற்றிருப்பதே இதற்குக் காரணம். சமூகத்தில் இருக்கும் இந்த ஏற்றத் தாழ்வுகளைப்பற்றி உலகில் இதர நாட்டவர் நன்கு அறியார்: தங்களுக்கிழைக்கப்படும் தவறுதல்களைப் பற்றி ஸ்திரீகள் பஹிரங்கப் படுத்துவதில்லை."

இதை சகித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று ஒரு சிலர் வாதாடுவதாயும் ஆனால் இந்தக் கொடுமைக்குட் படுத்தப்படுபவர் இதற்கு சம்மதிக்கின்றனரா என்பதே முக்கியம் எனவும் மலபாரி தெரிவித்தார். ஜாதிக் கட்டுப்பாடு நாட்டில் வலுத்திருப்பதாகவும் அநீதியை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆசார முறைகளைப் பின்பற்ற மறுப்பவர் பிரித்து வைக்கப்படுவதாகவும் மனைவியை இழந்தவர் மீண்டும் மணப்பது மட்டும் ஒப்புக் கொள்ளப் படுவதாயும் புருஷர்கள் எவ்வளவு பேர்களை வேண்டுமானாலும் விவாகம் செய்துகொள்ளக் கூடும் என்றும் ஆகவே ஸ்திரீக்கு மட்டும் தனிவிதி ஏற்பட்டிருப்பதாயும் அவர் எடுத்துக் காட்டினார். நாட்டில் வலுத்தது எது, ஜாதியா அல்லது சர்க்காரா?—என்பதை அறிய அவர் விரும்பினார். ராஜாங்கத்தார் எதற்கும் துணிந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இல்லாவிட்டால் இந்த அநியாயம் நீடித்துக்கொண்டே போகும் என்றும் அவர் வற்புறுத்தினார். காலப் போக்கைக் கவனித்து அதற்கொத்தாற்போல காரியம் செய்ய வேண்டாமா? இதற்கு வழி காட்டுவது சர்க்காரின் பொறுப்பல்லவா? ஆகவே சர்க்காருக்குச் சில யோசனைகளைத் தெரிவித்தார்.

"மைனரான ஹிந்துப் பெண் தன் புருஷனை

இழந்து விட்டால் அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக அவளை விதவையாக இருக்கும்படிச் செய்யக்கூடாது.

எந்த விஷயத்தில் சந்தேகம் ஏற்பட்டாலும் அவள் தானாகவே விதவையாக இருக்க முடிவு செய்தாளா அல்லது அதற்குக் காரணம் சூழ்ந்திருப்பவர்களின் நிர்ப்பந்தமா என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

ஜாதிப்ரஷ்டத்திற்கும் மேலான விதத்தில் எந்த விதவையாவது கடுமையாக நடத்தப்பட்டால் அதைப்பற்றி அதிகாரிகளிடம் புகார் செய்ய அவள் அனுமதிக்கப்பட வேண்டும். இது விஷயத்தில் அவளுக்கு சர்க்காரே எல்லா உதவியையும் வழங்க வேண்டும்.

புனர் விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீயையும் அவளுடைய கணவனையும் மட்டுமின்றி அவர்களது சுற்றத்தார்களையும் பந்துக்களையும் பகிஷ்காரம் செய்ய புரோஹிதருக்கு அதிகாரம் இருக்கக் கூடாது."

இந்த நான்கு விதிகளையும் ஒப்புக்கொண்டு சர்க்கார் சட்டத்தை இயற்றினால் அதிகாரிகளுக்குப் பயந்து அக்கிரமப் பழக்கங்கள் நின்றுபோய் விடும் என்று மலபாரி எதிர்பார்த்தார். மதாசாரங்களில் குறுக்கிட சர்க்கார் விரும்பாத பக்ஷத்தில் சீர்திருத்தங்களை நிறைவேற்ற விரும்புபவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் அவர் வாதாடினார். விவாக விஷயத்தில் அவரவருக்குப் பூரண உரிமையையாவது வழங்குவதுதான் நியாயம் என்றும் அவர் திடமாய் நம்பினார்.

இதன் பிரதிகளை ரிப்பன் பிரபு எல்லா மாகாண கவர்னர்களுக்கும் உடனே (அக்டோபர் மாதத்தில்) அனுப்பி அதைக் குறித்து முக்கியஸ்தர்களுடைய அபிப்பிராயங்களைச் சேகரித்தறிவிக்கும்படித் தெரிவித்தார். சென்னையில் இதன் பிரதி ஜஸ்டிஸ் முத்துஸ்வாமி ஐயர், ராஜா ஸர் டி. மாதவராவ், பி. செஞ்சல்ராவ் ஆகியோருக்கு அனுப்பப்

பட்டது. இன்னும் எங்கெந்த ஹிந்துப் பிரமுகர்களுக்கு இதை அனுப்பி அபிப்பிராயத்தை அறியலாம் என்பது பற்றி ஜஸ்டிஸ் முத்துஸ்வாமி ஐயரின் உதவியையும் மாகாண சர்க்கார் அபேக்ஷித்தனர். அந்த நீதிபதியும் கால தாமதமின்றி சென்னை சர்க்கார் பிரதம காரியதரிசிக்கு ஜாபிதாவை அனுப்பிவைத்தார். ஸ்மால் காஸ் கோர்ட் ஜட்ஜ் பி. ஸ்ரீநிவாஸராவ், நகர போலீஸ் மாஜிஸ்திரேட் டி. வி. பொன்னுசாமிப் பிள்ளை, சென்னை ஹைகோர்ட் வக்கீல் வி. பாஷ்யமையங்கார், பிரஸிடென்ஸி காலேஜ் புரொபஸர் ராய்பஹதூர் டி. கோபாலராவ், அதே கலா சாலையில் மற்றுமொரு ஆசிரியரான பி. ரங்கநாத முதலியார், சென்னை ஹைக்கோர்ட் வக்கீல் கனம் டி. ராமராவ், மதுரை ஜில்லா கோர்ட் ப்ளீடர் எஸ். சுப்பிரமணிய ஐயர், திருச்சி கலக்டராபீஸ் சிரஸ்தேதார் டி. பட்டாபிராம பிள்ளை, மைசூர் திவான் கே. சேஷாத்திரி ஐயர், திருவாங்கூர் சீப் ஜட்ஜ் கே. கிருஷ்ணஸ்வாமி ராவ், மதுரை சப் ஜட்ஜ் ஸி. ராமச்சந்திரையர், மதுரை அடிஷனல் டிபுடி கலக்டர் தில்லை நாயகம் பிள்ளை, கும்பகோணம் ப்ரொவின் ஷியல் காலேஜ் ஆசிரியர் எஸ். சேஷையா, திருவாங்கூர் திவான் கனம் வி. ராமையங்கார் ஸி. எஸ். ஐ., பள்ளிக்கூட டிபுடி இன்ஸ்பெக்டர் பி. விஜயரங்க முதலியார், புத்தக ரிஜிஸ்திரார் வி. கிருஷ்ணமாச்சாரியார்—இவ்வளவு பேர் களையும் அபிப்பிராயம் கேட்டால் பலன் உண்டு என முத்துஸ்வாமி ஐயர் சர்க்காருக்கு எழுதினார். ஹிந்து சமூ கத்தைத் தழுவிய எந்த பிரச்னைபற்றியும் முடிவுகூற இவர் களுக்கே பூரண யோக்கியதை இருப்பதாயும் நீதிபதி தெரி வித்தார். சர்க்காரும் உடனே அவர்களது அபிப்பிராயத் தைக் கோரினர். தேசீய சங்கக் கூட்டத்தில் ஸ்ரீநிவாஸராக வையங்கார் பிரசங்கம் புரிந்தபோது இத்தகைய நிலை இருந் தது. இதே சமயத்தில் நாட்டில் புதிய உணர்ச்சி தலை காட்டியிருந்தது. ஐரோப்பியர்களுடன் சரிசமமான அந் தஸ்துக்குப் போராடும் இந்தியர் தங்களிடையே மட்டும் பேதங்களுக்கும் தார தம்மியங்களுக்கும் இடம் கொடுப் பதா? அரசியலைவிட சமூகமே முக்கியமல்லவா? நம்முன் இருக்கும் குறைகளைப் போக்கிக் கொண்டால் பிறரிடம் குறை காணுவதையாரும் ஆக்ஷேபிக்க முடியாதல்லவா?- இவ்விதம் ஒரு சாரார் கூறிவந்தனர்.

இந்தச் சமயத்தில் செஞ்சல்ராவ் சும்மாவிருக்கவில்லை. உயர்தரக் கல்விபெற்ற சுதேசிகளின் சகாயத்தைக் கொண்டு தமது லட்சியத்தை நிறைவேற்ற முடியும் என்று அவர் நம்பினர். மூடப் பழக்கவழக்கங்களைப் புறக் கணிக்கப் படித்தவர்களாவது முன்வர மாட்டார்களா? ஆதலால் அவர் கோபாலராவையும் ரங்கநாத முதலியாரை யும் அண்டி சர்வ கலாசாலைப் பட்டதாரிகள் கூட்டத் திற்கு ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். அந்த மகாநாட்டில் வழிபிறக்கும் என்பதே அவர் கருத்து. இதே சமயத்தில் பி. ரங்கநாத முதலியாரும் தேசீய சங்கக் கூட்டத்தில் சமூகச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். அதில் அந்த அறிஞர் திலகம் உடனே அனுஷ் டிக்கப்பட வேண்டிய மார்க்கங்களைக் குறிப்பிட்டார். காரியத்தில் கஷ்டமின்றி நடக்கக் கூடியவற்றையே அவர் எடுத்துக் காட்டினர். ஒவ்வொரு வகுப்பிலும் பல் வேறு பிரிவுகளும் கிளைகளும் இருப்பதாகவும் இவர்கள் எல்லோரும் சில்லரை பேதங்களை மறந்துவிட வேண்டு மென்றும் பெண்களை விவாகம் செய்யும் சமயத்தில் இந் தக் குறுகிய கருத்துக்கு இடம் தரலாகாது என்றும் பால்ய தசையில் இருப்பவர்களுக்கும் சொந்தமாகச் சம்பா திக்காத யுவர்களுக்கும் கல்யாணத்தைச் செய்யக் கூடா தென்றும் சந்தோஷ காலங்களில் செலவைக் கட்டுப் படுத்த வேண்டுமென்றும் தகுதியற்றவர்களுக்குத் தானம் தருவதால் தீமையே சம்பவிப்பதாயும் அவர் அன்று விவ ரித்தார்.

செஞ்சல் ராவ் கோரியபடியே கோபால ராவும் ரங்க நாத முதலியாரும் பட்டதாரிகள் மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்தனர். பட்டம் பெற்று பத்து வருஷ காலம் பூர்த்தி யாகியவர்கள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள அனு மதிக்கப்பட்டனர். இவ்வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியன்று பிரஸிடென்ஸி காலேஜ் கட்டடத்தில் இது நடந்தது. ஆசிரியர்கள் இருவரும் ஹிந்துப்பட்டதாரி களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் விதவா விவாகத்தைப் பற்றியும் மற்றும் இதர சீர்திருத்தங்களைப் பற்றியும் யோசித்து முடிவு செய்யவேண்டும் என்று அறிவிக்கப் பட்டது. இரண்டு நாட்கள் கூடிப் பேசினர். கூட்டத்

தில் கோபால ராவ் தலைமை வகித்தார். நடவடிக்கை களைக் கவனிப்பதற்காக திவான்பஹதூர் ரகுநாத ராவும் செஞ்சல் ராவும் வந்திருந்தனர். கனம் டி. ராமராவ், கனம் எஸ். சுப்ரமணிய ஐயர், பாஷ்யமையங்கார், ரங்கநாத முதலியார், அநந்தாச்சார்லு, ஏ. ராமச்சந்திர ஐயர், ஸி. நாகோஜி ராவ், எம். ஜகராவ் பிள்ளை, ஆர். பாலாஜி ராவ், ஸி. வி. சுந்தரம் சாஸ்திரி, ஸ்ரீநிவாஸராகவையங்கார், எஸ். கோபாலாச்சாரி, பண்டித சிவநாத சாஸ்திரி, சாது சேஷையா, கே. வீரேச லிங்கம் பந்துலு, வி. ஜகந்நாத ராவ், ஜி. சுப்ரமணிய ஐயர், எம். வீரராகவாச்சாரியார், ஆகியோர் அன்று பிரசன்னமாயிருந்தனர். தலைவர் தமது ஆரம்பப் பிரசங்கத்தில் சமூகச் சீர்திருத்தத்தில் சிரத்தை பிறந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார். பெண் கல்வி, பால்ய விவாகத்தடை, புனர்விவாகம் ஆகிய பிரச்னைகளைப் பரிசீலிப்பதுடன் சாஸ்திர சம்மதமற்ற ஜாதிக்கட்டுப்பாடு களையும் தகர்த்தெறியவேண்டும் என்றார் அவர். மனு விதித்த நெறி முறையை எவ்வளவோ விஷயங்களில் நம் மவர் பின்பற்றவில்லை எனவும் குறுகிய கொள்கைகளைக் கடைபிடித்து சமூகத்தைப் பலஹீனமாக்கக்கூடாது என்றும் கோபால ராவ் கூறினார். பட்டதாரிகளுக்கு இப்போது பெரிய பொறுப்பு ஏற்பட்டிருப்பதாயும் சீர் திருத்தக்காரர்களிடம் இதுவரைப்போல் இனியும் பரிவு காட்டாமலிருப்பது நியாயமாகாது என்றும் அவர்களது லக்ஷியம் சித்தியடைவதற்காக இயன்றவரை யெல்லாம் உதவவேண்டுமென்றும் அவர் கூடியிருந்தவர்களை வேண் டிக் கொண்டார்.

ஒவ்வொரு பட்டதாரியும் சாத்தியமான அளவுக்குத் தன் வீட்டிலும் வெளியேயும் பெண் கல்வி அபிவிருத் திக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த மகாநாடு அபிப்பிராயப்படுகிறது எனும் தீர்மானத்தை முதலில் ரங்கநாத முதலியார் பிரேரேபித்தார். புருஷன் தான் எவ் வளவுதான் உயர்ந்து பணத்தையும் பெருமையையும் சம் பாதித்த போதிலும் எவ்வளவுதான் வித்தியா நிலையங்களை ஸ்தாபித்த போதிலும் பெண்டிரும் படித்து அவர்களது சுகதுக்கங்களைப் பகிர்ந்துக் கொள்ளும் சக்தியை அடைந் தால்தான் அவை யாவும் பலன் பெறும் என்றார் அவர்.

இல்லாவிட்டால் அனைத்தும் வியர்த்தமாய்ப் போகும் என்றும் சொன்னார். பாஷ்யமையங்கார் இதை ஆதரித்துப் பேசினார். பிறகு தீர்மானம் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

அடுத்தபடி பால்ய விவாகப் பிரச்னை கிளம்பியது. கனம் சுப்ரமணிய ஐயர் பின்கண்ட தீர்மானத்தை சபையில் சமர்ப்பித்தார். "16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் 10 வயதுக்குட்பட்ட பெண்களுக்கும் விவாகம் நடப்பதைத் தடுக்க ஒவ்வொரு பட்டதாரியும் தன் சக்தியைப் பூரணமாக உபயோகிக்கவேண்டும் என்று இந்தக் கூட்டம் அபேக்ஷிக்கிறது''. இதைக் குறித்துச் செய்த பிரசங்கத்தில் இப்போது பட்டதாரிகள் ராஜீய முன்னேற்றத்தை ஆலோசிப்பதற்காகக் கூடவில்லை எனவும் சமூகச் சீர்திருத்தங்களைச் சாதிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்ட ஒரு ஸ்தாபனம் இனியாவது உதயமாகும் என்று தாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதாயும் சென்ற 50 அல்லது 40 வருஷங்களாகத்தான் பால்ய விவாக முறை அமுலில் இருந்து வருவதாயும் சாஸ்திரங்கள் ஆரம்பத்தில் விதித்த தர்மங்களையும் பிறகு அவற்றில் ஏற்பட்ட மாறுதல்களையும் ஆராய்ந்து ஆசாரங்களைத் திருத்துவது பட்டதாரிகளின் கடமையாகும் என்றும் காரணமின்றி எதையும் தாம் எதிர்க்க விரும்பவில்லை எனவும் சுப்ரமணிய ஐயர் உருக்கமாகப் பேசினார். எஸ். கோபாலாச்சாரியார் இதை ஆமோதித்து ஒரு நீண்ட வியாசத்தைப் படித்தார். பத்து வயதில் பெண்களுக்குக் குடும்ப நிர்வாகத்தைப் பற்றிய ஞானம் இருக்க முடியாதாகையால் 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்குக் கல்யாணம் செய்யக்கூடாது என்று விதிக்கவேண்டும் என ராமையா விரும்பினார். இந்தச் சமயத்தில் பாஷ்யமையங்கார் குறுக்கிட்டு சுப்ரமணிய ஐயர் விவாகத்தைப் பற்றியே குறிப்பிட்டதாகவும் கணவனுடன் கூடி வாழ்வதற்கான வயதை அவர் நிர்ணயிக்கவில்லை என்றும் தெரிவித்தார். நம் நாட்டில் 5 அல்லது 6 வயதில் கல்யாணம் நடந்து பத்து வயதுக்குள்ளேயே பலர் விதவைகளாகிவிடுவதாயும் ஆகவே இந்த ஏற்பாடு எவ்வளவோ முன்னேற்றத்தை சூசிப்பதாயும் அவசரப்படாமல் மெதுவாகத்தான் போகவேண்டும் என்

றும் சர்க்கார் இது விஷயமாகச் சட்டம் இயற்றுவது சரியல்ல என்றும் சட்டத்தைப் பிறப்பிக்கக் கிளம்பிவிட்டால் அப்புறம் அதற்கு எல்லை போடுவது மிக்க சிரமமாகிவிடும் என்றும் அவர் தெளிவுபடுத்தினுர். பிரதி வருஷமும் அதே இடத்தில் மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்றும் அவர் கோரினுர். நாகோஜி ராவ் ராஜமஹேந்திரபுரம் பட்டதாரிகள் சார்பில் திருத்தத்தை எதிர்த்துப் பேசினுர். இறுதியில் திருத்தம் தோல்வியுற்றது. இந்தச் சமயத்தில் சுந்தரம் சாஸ்திரி ஒரு சிறிய ஆக்ஷேபத்தைக் கிளப்பினுர். "இயன்றவளவுக்குச் செய்யவேண்டும்" என்பதற்குப் பதிலாக "நிறைவேற்றுவதாக வாக்குறுதி தரவேண்டும்" என்பதைச் சேர்க்கவேண்டும் என்ருர் அவர். இதனுல் பட்டதாரிகள் நேர்மையற்றவர் என்று எண்ண இடமிருக்கும் எனவும் தமக்குத் தம் சகாக்களிடம் அதிக நம்பிக்கையுண்டெனவும் எதையும் கட்டாயப்படுத்த தாங்கள் கூடவில்லை என்றும் பட்டதாரிகளுக்கு எவ்வளவோ பந்தங்கள் இருக்கின்றன என்பதை மறக்கக்கூடாது என்றும் ராமச்சந்திரையர் இதை ஆக்ஷேபித்து சமாதானம் சொன்னுர். நாகோஜி ராவ், பாஷ்யமையங்கார், ஸ்ரீநிவாஸராகவையங்கார், ஜி. சுப்ரமணிய ஐயர், பாலாஜி ராவ் ஆகியோர் ராமச்சந்திரையரின் கக்ஷியையே ஆதரித்துப் பேசினர். இறுதியில் சுப்ரமணிய ஐயரின் தீர்மானம் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. இத்துடன் முதல்நாள் கூட்டம் கலைந்தது. மறுநாள் மாலை திரும்பவும் கூட ஏற்பாடாகியது.

இரண்டாம் நாள் கூட்டம் ஆரம்பிக்குமுன் கோபால ராவ், பாஷ்யமையங்கார், ஸ்ரீநிவாஸராகவையங்கார், கோபாலாச்சாரியார், ஆகியோரை அழைத்து அவர்களுடன் விதவா விவாகத்தைப்பற்றி நீண்ட நேரம் சம்பாஷித்தார். இவர்களைத் தம் கக்ஷிக்குத் திருப்பி அன்றைய தினம் தகராறின்றி மகாநாட்டை முடிக்க அவர் விரும்பினுர். இவர்கள் யாவரும் கோபால ராவ் கோரிக்கைக்கு ஒப்புக்கொண்டனர். தாங்கள் அவரை ஆதரிக்க சம்மதிப்பதாகவும் தெரிவித்தனர். இது கோபால ராவுக்குப் பரம திருப்தியை அளித்தது. மாலையில் மீண்டும் கூடியவுடன் விவாகம் முதலிய சடங்குகளுக்கானச் செலவைக்

குறைத்துக்கொள்ள பட்டதாரிகள் வழிகாட்டவேண்டும் என்று சாது சேஷையா பேசினார். இதற்கு எல்லோரும் சம்மதித்தனர்.

புனர் விவாகத்தைப் பற்றிய பிரச்னை அடுத்தபடியாக ஆலோசிக்கப்பட்டது. ஏ. ராமச்சந்திரையர் பட்டதாரிகள் மகாநாட்டில் ஏராளமாகப் பிரசன்னமாயிருப்பது தம்மை மிகவும் மகிழ்விப்பதுடன் அதுவே நாட்டில் ஏற்பட்டுவரும் முற்போக்குக்கு சுப சூசகமாகும் என்ற பீடிகையுடன் ஆரம்பித்து விதவையாகிவிட்ட கைம் பெண்களுக்குத் திரும்பவும் கல்யாணம் செய்வதை ஒப்புக் கொள்பவர்கள் தங்கள் சம்மதத்தை எழுத்து மூலமாக அறிவிக்கவேண்டும் என்றும் சந்தர்ப்பம் வாய்த்தால் அதை நழுவவிடக்கூடாதென்றும் உறுதிதரவேண்டும் எனவும் பின்னர் இத்தகையவர்களின் ஜாபிதா வெளியிடப்படும் என்றும் கூறினார். இதை ராமச்சந்திர ராவ் ஸாஹேப் ஆமோதித்தார். ஆனால் இறுதியில் பெரிய சிக்கலாகிவிட்டது. ராமச்சந்திரையரின் ஆர்வம் அளவுமீறி விட்டதாக ஒரு சிலர் அபிப்பிராயப்பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் யோகி பார்த்தசாரதி ஐயங்கார் என்ற வக்கீல் ஒருவர் புனர் விவாகத்தைப்பற்றித் தாம் எழுதிய வியாஸத்தைப் படிக்கக் கிளம்பினார். அதற்கும் ஆக்ஷேபம் எழும்பியது. அதைப்படிப்பதற்கு அவசியமே இல்லை என்றனர் ஒரு சாரார். ஆகவே அவர் அதைப் படிக்காமல் உட்கார்ந்துகொண்டார். சுந்தரம் சாஸ்திரியாரும் ரங்கநாத முதலியாரும் ராமச்சந்திரையர் சமர்ப்பித்த தீர்மானத்தினால் பலன் இராது என்று கருதினர். விதவா விவாகத்தைக் கூட்டத்தார் ஆதரிப்பதாகவும் அது மிகவும் அவசியம் என்று சர்க்கார் கருதுவதாயும் ஆதலால் அது விஷயத்தில் தங்கள் சம்மதத்தைப் பட்டதாரிகள் எழுத்துமூலமாக அறிவிப்பதுடன் அவ்வப்போது அதன் அபிவிருத்திக்கும் பாடுபடவேண்டும் என்றும் ஒரு திருத்தத்தை முந்தியவர் கொண்டுவந்தார். இந்தத் திருத்தம் உடனே பெருத்த விவாதத்தைக் கிளப்பிவிட்டது. பாஷ்யமையங்காரும் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் இதை ஒப்புக்கொள்ள மறுத்தனர். விதவா விவாகத்திற்கு சாஸ்திரம் சம்மதிக்கிறதா என்பதே சந்தேகத்தில் இருக்கையில்

அதை ஒப்புக்கொள்வது எப்படி என்றனர் இருவரும். அவரவர் மனோ தர்மத்தைத் தழுவி நடக்க இடம்தர வேண்டுமேயல்லாமல் இஷ்டத்திற்கு முரணானவிதத்தில் போகும்படி வற்புறுத்தக்கூடாது என்றனர் இருவரும். சுந்தரம் சாஸ்திரியார் பெரிய பிரச்னையைக் கிளப்பிவிட்டதாகவும் இந்தச் சமயத்தில் வோட் கணக்கெடுக்காமல் இந்த விவாதத்தை நிறுத்திக்கொள்வது உசிதம் என்றும் பாஷ்யமையங்கார் தெரிவித்தார். டி. ராமராவ் இந்தக் கோரிக்கையை ஆமோதித்தார். ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஆதரித்துப் பேசினார். இதை அநந்தாச்சார்லு ஆக்ஷேபித்தார். தங்களுக்கு சம்மதமா சம்மதமில்லையா என்பதை பட்டதாரிகள் தெரிவிப்பதுதான் அவர்களுக்கு அழகு என்றும் கெட்டிக்காரத்தனமாய் தட்டிக்கழிக்கப் பார்ப்பது சரியல்ல எனவும் எதற்கும் அஞ்சாமல் முடிவுசெய்ய வேண்டும் எனவும் பிரயோசனமற்ற விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் அழுத்தமாகப் பேசினார். கனம் சுப்ரமணிய ஐயரும் ரங்கநாத முதலியாரும் இந்தக் கோஷ்டியில் சேர்ந்து கொண்டனர். தலைமை வகித்த கோபாலராவ் "என் வைஷ்ணவ நண்பர்கள் இன்று என்னை கைவிட்டு விட்டார்கள்" என்று பகிரங்கமாகவும் தமது வருத்தத்தை அப்போது வெளியிட்டார். விதவா விவாகத்தைப் பூரணமாக ஒப்புக்கொள்வார்கள் என்று தலைவர் எதிர்பார்த்ததே அவருக்கு ஏமாற்றத்தை விளைவித்தது. முடிவில் விவாதத்தை ஒத்திவைக்க சபையோர் விரும்பவில்லை. இதற்கப்புறம் மீண்டும் ரங்கநாத முதலியார் எழுந்து நின்று விவாதத்தைத் தொடர்ந்து நடத்த சபையோர் ஆவலாக இருக்கின்றனரா என்று வினவினார். கடைசியில் அத்துடன் நிறுத்திக்கொள்ள எல்லோரும் அபிப்பிராயப்பட்டனர். சுந்தரம் சாஸ்திரியார் கொண்டுவந்த திருத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மகாநாடு கலையுமுன் அடியிற்கண்ட தீர்மானம் அனுஷ்டிக்கப்பட்டது: "ஒவ்வொரு பட்டதாரியும் தலைவருக்குத் தாம் எத்தகைய ஆதரவு அளிக்கமுடியும் என்பதை அறிவிக்கவேண்டும். பால்ய விவாகத்தையும் விதவைகளின் மறுமணத்தையும் குறித்து மலபாரி விடுத்திருக்

கும் விண்ணப்பத்தைப்பற்றி ஒவ்வொரு பட்டதாரியும் தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும்." இந்த லக்ஷி யங்களை நிறைவேற்றும் நோக்கத்துடன் பட்டதாரிகள் சங்கத்தை ஸ்தாபிக்கவும் முடிவு செய்யப்பட்டது. மகா நாட்டில் உருவான தீர்மானங்களை அனுஷ்டானத்தில் கொண்டுவர ஏற்பாடுகள் செய்வதற்காக ஒரு சிறு கமிட்டியும் அமைக்கப்பட்டது. கோபால ராவ், ரங்கநாத முதலியார், ஜி. சுப்ரமணிய ஐயர், எஸ். ராமசாமி முதலியார். பி. ஹனுமந்த ராவ், ஆர். ரகுநாத ராவ், பி. செஞ்சல் ராவ், கே. வீரேசலிங்கம் பந்துலு, ஏ. ராமச்சந்திரையர், சாது சேஷையா, கனம் சுப்ரமணிய ஐயர் ஆகியோர் இதில் இடம் பெற்றனர். கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டதே தவிர அது பலனைக் கண்டதாகத் தெரியவில்லை. இந்தக் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த சுந்தரராமையர் பின் பொரு சமயம் அடியிற்கண்ட விவரத்தை வெளியிட்டார்:

> "கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த பட்டதாரிகளின் அபிப்பிராய பேதங்களும் மனோவேற்றுமைகளும் இந்த மகாநாட்டில் வெளிப்பட்டன. இதே சமயத்தில் பிரமுகர்களும் அறிவாளிகளுமான (ஸர்) வி. பாஷ்யமையங்கார், திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார், திவான்பஹதூர் எஸ். கோபாலாச்சாரியார் ஆகியோரின் மாறுதல் வேண்டாத உணர்ச்சி எவ்வளவு திடமாகவும் உஷாராகவும் இருந்தது என்பதும் புலப்பட்டது. முக்கியமாக விதவா விவாகப் பிரச்னை கிளம்பியபோது கூட்டத்தில் கலக்கம் பிறந்தது. காலஞ்சென்ற யோகி பார்த்தசாரதி ஐயங்கார் விவாதத்திற்குரிய சீர்திருத்தப் பிரச்னைகளைப்பற்றி பழைய காலத்தில் ரிஷிகள் எத்தகைய நியதிகளை விதித்தனர் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு கட்டுரையைப் படித்தபோது கூட்டத்தில் ஒரு கோஷ்டியார் அதிகக் கூச்சலை எழுப்பி அதைப்படிக்க முடியாதபடி தடுத்துவிட முயன்றனர். இதனால் கூட்டம் ஒழுங்கற்றவிதத்தில் கலைந்தது. இதற்கப்புறம் இம்மாதிரி கூட்டத்திற்கு ஏற்பாடாகவில்லை."*

*புரொபஸர் கே. சுந்தரராமையர்; கும்பகோணம் காலேஜ் ஜர்னல்: நவம்பர் 1916

பத்திரிகைச் செய்திகளிலிருந்து நாம் மகாநாட்டில் கலவரம் நடந்ததாக ஊகிக்க முடியாது. செஞ்சல்ராவ் இதைப்பற்றி பின்பு பிரஸ்தாபிக்கையில் பட்டதாரிகள் தாங்கள் செய்த வேலைகளைப்பற்றி அறிக்கைகளை அனுப் பினரா அல்லவா என்பது தமக்குக் கூடத் தெரியாது என் றும் என்ன பதில் கிடைத்தது என்பதுகூட தமக்கு அறி விக்கப்படவில்லை எனவும் இவை காரணமாகத் தமக் கிருந்த நம்பிக்கை மறையத் தொடங்கிவிட்டதாயும் படித்தவர்கள் தாங்கள் ஆதரவு அளிப்பதாக உறுதி அளித் தாலொழியத் தாம் இனி எந்தக்காரியத்திலும் தலையிடக் கூடாது என்ற எண்ணம் தமக்கு மேலிட்டிருப்பதாயும் தெரிவித்தார்.*

சென்னை சர்க்காருக்கு ஒன்பது பேர்கள்தான் தங் கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். மதுரை ஸப் ஜட்ஜ் ஸி. ராமச்சந்திரையர், கொச்சி நீதிபதி வி. சுப்பராய ஐயர், டிபுடி கலக்டர் தில்லை நாயகம்பிள்ளை, இந்தோர் பிரதம மந்திரி திவான் பஹதூர் ரகுநாதராவ் ஆகிய நால்வரும் சர்க் கார் தலையீடு மிகவும் அவசியம் என்றனர். கணவனை யிழந்த கைம்பெண்களை விதவைகளாகக் கருதக்கூடாது என்றும் கல்யாண மாகாதவர்களாகவே அவர்களைப் பாவிக்க வேண்டும் என்பதற்கான சட்டத்தை பிறப்பிக்க வேண்டும் என்றார் ராமச்சந்திரையர். கலாசாலைகளில் விவாகமாகாதவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று விதிப்பதும் பலன்தரும் என்றார் அவர். மிக்கவும் முற்போக்கான மார்க்கத்தை அவர் வகுத்தார். கொச்சி நீதிபதியும் இதே மாதிரி அபிப்பிராயப்பட்டதுடன் ஹிந் துக்கள் தாங்களாகவே இந்தச் சீர்திருத்தங்களில் சிரத்தை யுடன் முனையவேண்டும் என்று எழுதினார். கலாசாலையி லும் பள்ளிக்கூடங்களிலும் கல்யாணம் செய்து கொண்ட சிறுவர் சேருவதை சர்க்கார் தடுக்கவேண்டு மென்றார் தில்லைநாயகம் பிள்ளை. புனர் விவாகம் செய்து கொள்பவர் கள் பகிஷ்கரிக்கப்படுவதைச் சட்ட பூர்வமாகத் தடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். சமீப காலமாகத்தான் ஆசார முறைகள் மாறியிருப்பதாயும் பத்து வயதுக்குட் பட்ட சிறுமிகளின் விவாகத்தை சர்க்கார் அனுமதிக்கக்

*இந்தியன் ஸோஷல் ரிபார்மர், 7. 12. 1895

கூடாதென்றும் திவான் பஹதூர் ரகுநாதராவ் தெரிவித்தார்.

இதே சமயத்தில் சர்க்காருக்கும் சமூக சீர்திருத்தத்திற்கும் சம்பந்தம் இருக்கக் கூடாது என்று ஹிந்து சபைத் தலைவர் ஏ. சங்கரையாவும் கனம் சுப்பிரமணிய ஐயரும் திருவாங்கூர் சீப் ஜட்ஜ் கிருஷ்ணஸ்வாமி ராவும் பி. செஞ்சல் ராவும் பட்டாபிராம பிள்ளையும் கருதினர். மஹாராணியாரின் பிரகடனத்தை மத விஷயங்களில் மதிக்க வேண்டும் என்றார் ஹிந்து சபை மூலபுருஷர். சர்க்கார் குறுக்கிட்டால் மக்களுக்கு அதனிடம் அவநம்பிக்கை ஏற்பட்டு தீமையை அகற்றுவதற்குப் பதிலாக அது பரவிவிடுவதற்கு வழி காட்டும் என்று எழுதினார் செஞ்சல் ராவ். அவரும் கிருஷ்ணஸ்வாமி ராவும் வயதானவர்கள் சிறிய பெண்களை மணப்பதை மட்டும் எந்த விதத்திலும் தடுக்க வேண்டும் என்று கோரினர். இவர்கள் அனைவரும் உடனே தங்கள் பதிலை அனுப்பவில்லை. அவர்கள் மிக்கவும் தாமதித்தனர். 1886-ம் வருஷத்தில் தான் இவையாவும் பிரசுரமாயின. சென்னை சர்க்கார் இந்தியா சர்க்காருக்கு இது சம்பந்தமாக எழுதிய கடிதத்தில் மலபாரியின் விண்ணப்பம் இந்த மாகாணத்திற்கு வருமுன்னரே அதில் குறிப்பிடப்பட்ட பிரச்னைகளைப்பற்றி விவாதம் நடக்க வாரம்பித்துவிட்டதாயும் பிரமுகர்களில் பலர் பதிலை அனுப்பாமைக்கு சீர்திருத்தம் சம்பந்தமாய் மலபாரிக்கு இருக்கும் யோக்கியதையை அவர்கள் நன்கு அறியாமையே காரணம் என்றும் மத விஷயங்களில் தலையிடுவதில்லை என மஹாராணியார் அளித்த வாக்குறுதியை மீறக்கூடாது என்றே தாங்கள் தீர்மானித்திருப்பதாயும் தெரிவித்தனர். கவர்னர் ஸர் க்ராண்ட் டப் உத்தேசிக்கப்பட்ட சீர்திருத்தங்களினால் நன்மை கிடைக்காது என்று கூறவும் துணிந்தார். சீர்திருத்த வாதிகள் கூறுவதுபோல பழக்க வழக்கங்கள் எப்படி ஆரம்பமாயின என்று அலசி பார்ப்பதைவிட தற்போது நிலவி வருபவற்றை மட்டுமே நாம் பிரதானமாகக் கருத முடியும் எனவும் அவர் அறிவித்தார். 1856-ம் வருஷத்திய சட்டத்தை ஒருவரும் பயன்படுத்திக்கொள்ளாதிருக்கையில் மேலும் மேலும் விதவைகளின் நிலைமை அபிவிருத்திக்கு முயற்சி செய்வது அர்த்தமற்றது என்றும்

அவர் எழுதினர். பெண் கல்வி பெருகி பாமர ஜனங்களுக்கும் உணர்ச்சி பிறந்தால்தான் உண்மையான சீர்திருத்தத்தைக் காண முடியும் என்றும் சங்கங்களை அமைத்து தடபுடலாகப் பேசிக்கொண்டே இருப்பதால் காரியம் நடவாது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டன. நாகரிகம் முதிர்ச்சி அடைய அடைய நாளடைவில்தான் நல்ல காலம் பிறக்கும் என்று அவர் திடமாகத் தெரிவித்து விட்டார். மற்ற மாகாணங்களில் ஐரோப்பியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இந்த சுற்றறிக்கையின் பிரதிகள் அனுப்பப்பட்டன. ஆனல் சென்னை அதிகாரிகள அவ்விதம் செய்யாமல் இருந்து விட்டனர்.

மேலே ஏறினல் குற்றம். கீழே இறங்கினல் குற்றம். இத்தகைய நிலையில் நம்நாட்டு சீர்திருத்த வாதிகள் தவித்தனர். பரிவுகாட்ட வேண்டியவர்கள் பராமுகமாயிருந்தனர். ஆதரவை எதிர்பார்த்த இடத்தில் அண்டிப்போக இடம் இல்லை. எதிர்ப்பும் இடையூறுமே தலைகாட்டின. ஸ்ரீநிவாஸராகவையங்கார் செஞ்சல் ராவின் சிஷ்யர்களுள் ஒருவர். சீர்திருத்தத்தில் சிரத்தைக் கொண்டவர். நம்பிக்கை உதயமாகும் வரையில் நயமாகப் போக வேண்டுமென்ற நாட்டமுள்ளவர். சிக்கல்களையும் சிரமங்களையும் பூரணமாகக் கண்டவர். மலபாரி மும்முரமாய் முனைந்தும் அவரை முழு மனசுடன் ஆதரிக்க முன்வந்தவர் மிகவும் சொற்பமே என்பதைக் கண்டவர்களுக்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் கூறிய வார்த்தைகள் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பது தெளிவாகும். படித்தவரின் ஸ்திதி உண்மையிலேயே பரிதாபகரமாக இருந்தது. செய்து முடிக்க சக்தியில்லாவிட்டாலும் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே இருப்பதா? இவர் அன்று பேசியவை குறிப்புக்குறியவை. உத்சாகம் அதிகம் காட்ட வேண்டுமென்று உபதேசிக்கவில்லை. ஆனல் பிறர் காட்டுவதைக் கெடுக்கக் கூடாது என்று கூறினர்.

11

1885-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-ம் தேதியன்று கும்பகோணத்தில் 'போர்ட்டர் டவுன் ஹால்' ஜில்லா கலக்டரால் திறந்துவைக்கப் பட்டது. அது ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடப்பட்டு மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் போர்ட்டரின் பழைய மாணவர்கள் குழுமி தங்கள் அன்பையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தினர். மைசூர் மஹாராஜாவிற்கு விசேஷ ஆலோசகராக அப்போது இருந்த போர்ட்டர் இந்த விசேஷ சம்பவத்திற்கு அழைக்கப்பட்டு இதற்காக வந்து சேர்ந்தார். ஸ்ரீநிவாஸராகவையங்காரும் சென்னையிலிருந்து சென்றார். சுமார் 55 வருஷங்களுக்கப்புறம் சென்னை மாஜி அக்கவுண்டண்ட் ஜெனரலான ஸ்ரீ எச். பீமசேன ராவ் இதை ஞாபகப்படுத்திக் கொண்டு கும்பகோணம் கலாசாலை வைர விழாக் கொண்டாட்டத்தில் பேசினார். "எனக்கு அப்போது எட்டு வயசு. நான் சென்னையில் விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்தேன். பூஜ்யரான என் தகப்பனார் (புரொபஸர் பி. ஹனுமந்தராவ்) எனக்கு முன்பே கும்பகோணத்திற்குப் போய்விட்டார். ஆகவே இந்த டவுன் ஹால் திறப்பு விழாவுக்காகக் கும்பகோணத்திற்கு வரப்போகும் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காருடன் என்னையும் வரும்படித் தெரிவித்திருந்தார். அந்த நாட்களில் சென்னையிலிருந்து கும்பகோணத்திற்குப் பிரயாணம் செய்பவர் ஜோலார்பேட், ஈரோட் ஆகிய இடங்கள் வழியாகத்தான் போகவேண்டும். ஒரே ஒரு ரயில் வண்டி பகலில் மட்டுமே போய்வந்தது. மத்தியான வேளையில் எங்கள் வண்டி ஜோலார்பேட் போய்ச் சேர்ந்ததும் அங்கு போர்ட்டர் வந்து நாங்கள் இருந்த இடத்தில் உள்ளேறினார், என் தகப்பனார் அவருக்குப் பிரிய சிஷ்யராக இருந்தவராதலால் அவர் என்னைத் தட்டிக் கொடுத்து என்னுடன் பொழுதைப் போக்கிக் கொண்டே வந்து சேர்ந்தார். டிரெயின் கும்பகோணத்திற்கு வந்து சேர்ந்ததும் அங்கு ஸ்டேஷனில் ஏராளமான கூட்டம் திரண்டிருந்தது. அக்கூட்டத்

தில் என் பிதாவைக் கண்டுபிடித்து என்னை அவரிடம் ஒப்புவித்த பின்பே அவர் வண்டியை விட்டுக் கீழே இறங்கினர்."

இதே காலத்தில் இவர்கள் செய்த மற்றுமொரு முயற்சியும் குறிப்புக்குரியதாகும். 1883-ம் வருஷத்தின் கடைசி மாதங்களில் சென்னை சர்வ கலாசாலை செனட் சபையார் புதிய ஏற்பாடொன்றைச் செய்ய விரும்பினர். அதுவரை அமுலில் இருந்துவந்த இந்திய சர்வகாலாசாலைகள் சட்டத்தைத் திருத்த அவர்களுக்கு ஆவல் பிறந்தது. இதற்கு உரு அளித்தவர் டாக்டர் வில்ஸன். இனிமேல் சர்வகலாசாலை விவகாரம் ஏதாவது தலைகாட்டினுல் சர்வ கலாசாலையில் பட்டத்தை ஸ்வீகரித்தவர்களின் கூட்டத்தை அழைத்து அவர்களது ஆலோசனையையே நாடவேண்டும் என்பதே அந்தத் திருத்தத்தின் நோக்கம். செனட் அல்லது ஸின்டிகேட் அங்கத்தினர்கள் மட்டுமே ஒன்றுகூடி விதாயம் தீர்க்காமல் பட்டதாரிகள் எல்லோரிடமும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று செனட் சபையார் கோரினர். இதற்காக ஒரு நகல் மசோதாவும் தயாரிக்கப் பட்டது. 1883-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஏழாம் தேதியன்றே அதை சர்வகலாசாலை அதிகாரிகள் சென்னை சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் அனுப்பி, அவர்களுடைய அங்கீகாரத்தை வேண்டினர். சென்னை மாகாண நிலைமையையும் இங்குள்ள முற்போக்கின் தரத்தையும் கவனிக்கையில் இந்தக் கோரிக்கை மிக்க நியாயமானது என்றே கருதவேண்டியிருப்பதாகவும் ஆனுல் இது போன்ற விஷயங்களில் சென்னையை மட்டும் தனியாக எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் இதர இடங்களில் இருக்கும் சர்வ கலாசாலைகளைப் பற்றியும் சிரத்தைகாட்ட வேண்டியிருப்பதாகவும் அறிவித்து விட்டனர். எழுத்தளவில் ஆதரவு இருந்ததே தவிர எடுத்த காரியத்தை முடிப்பதற்கு அது பக்கபலம் தருவதாக இல்லை.

பல மாதங்கள் கழித்து இந்திய சர்க்காரிடமிருந்தும் பதில் கிடைத்தது. 1885-ம் வருஷம் மார்ச் மாதம் 18-ம் தேதியன்று வந்த கடிதத்தில் இம்மாதிரியான முயற்சிகளை சர்க்கார் பரிவுடன் வரவேற்பதற்கான அவசியமே இல்லை

எனவும் ஆகவே செனட்சபை சமர்ப்பித்த நகல் மசோதாவைத் தாங்கள் நிராகரிக்க வேண்டியிருப்பதாகவும் கூறப்பட்டது பிடிவாத புத்தியைக் காட்டியபோதிலும் ஒரு சிறு விஷயத்தில் மட்டும் பணிவு தென்பட்டது. அவசியமானல் செனட் சபைக்கு அதிகமாகப் பட்டதாரிகளை இனிமேல் நியமித்து உத்தேசத்தைப் பூர்த்தி செய்து கொள்வதே உசிதம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்களுக்கு ஆசை உதயமாகிவிட்டால் அதை அடக்க முடியுமா? இந்திய சர்க்காரின் பதிலைப் படித்துவிட்டு வாய் பொத்தியிருக்க சென்னைப் பட்டதாரிகள் விரும்பவில்லை. சர்க்கார் சம்மதிக்காமற் போனல் பரவாயில்லை. சிரத்தையுள்ள சிலராவது முன் வந்து லட்சியம் நிறைவேற வழி தேடலாமே என்றனர் நகரப்பிரமுகர்கள். பட்டதாரிகள் சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதில் நாட்டம் இருந்தது. முக்கியஸ்தர்கள் எல்லா சர்வ கலாசாலைப் பட்டதாரிகளுக்கும் அனுப்புவதற்காக ஒரு சுற்றறிக்கையைத் தயாரித்தனர். இது பத்திரிகைகளிலும் விளம்பரப் படுத்தப்பட்டது.

"நம் சர்வ கலாசாலை செனட் சபையார் கோரிய விதத்தில் பட்டதாரிகளின் கான்வொகேஷனைக் கூட்ட இந்திய சர்க்கார் ஒப்பாமையால் அடியிற் கையொப்பமிட்டவர்கள் இம்மாதம் 11-ம் தேதியன்று மாலை 5-30 மணிக்கு பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் கூடி, சென்னை நகரில் செனட் சபை விரும்பிய பிரகாரம் பட்டதாரிகள் சங்கமொன்றை அமைக்க வேண்டியது அவசியமா அல்லவா என்பதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றனர்.

ராய்பஹதூர் டி. கோபாலராவ் பி. ஏ.
பி. ரங்கநாத முதலியார் பி. ஏ.
எஸ். ராமஸ்வாமி முதலியார் பி. ஏ., பி. எல்.
எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் பி. ஏ.
பி. அநந்தாச்சார்லு பி. ஏ.
கே. பி. சங்கர மேனன் பி. ஏ., பி. எல்.
ரெவ். எச். செஸ்டர் எம். ஏ.

ஜார்ஜ் மடாக்ஸ் பி. ஏ.
எஸ். ரங்கையா செட்டி பி. ஏ.
என். ஜேசுதாஸன் எம். ஏ., எம். டி.
என். சுப்ரமணியம் பி. எல்.
டபிள்யூ. க்ராண்ட் பி. எல்."

குறிப்பிட்ட தினத்தன்று பட்டதாரிகள் ஏராளமாகப் பச்சையப்பன் மண்டபத்தில் வந்து சேர்ந்தனர். ஜஸ்டிஸ் முத்துஸ்வாமி ஐயர் தலைமை வகித்தார். அவர் ஆரம்பத்தில் இக்கூட்டம் அழைக்கப்பட்டதன் காரணத்தை எடுத்துரைத்தார். திரும்பவும் மக்களுக்கு தேசீயத்தில் சிரத்தை தோன்றவேண்டும் எனவும் இதற்கு அடிப்படையானது கல்வி அபிவிருத்தியே யாகும் என்றும் அவர் கூறினர். இந்த லக்ஷியத்துடன் புதியதாக உதயமாகப் போகும் சங்கம் அவ்வப்போது ஸிண்டிகேட், செனட் சபைகளின் ஆலோசனைக்கு வரும் பிரச்னைகளைப் பரிசிலித்து அபிப்பிராயத்தை எடுத்துக் கூறவேண்டும் எனவும் இதனல் படித்த சுதேசிகளின் கருத்து என்ன என்பதை அதிகாரிகள் அறிய இயலும் எனவும் ஆகவே இது நாட்டின் நிலை மேம்படுவதற்கு ஓரளவுக்கு உதவுமென்றும் அவர் பேசினர். மாகாணங்களில் பலவிடங்களிலும் ஆரம்பப் பாடசாலைகளையும் இதர வித்தியா நிலையங்களையும் நிர்வகித்து வருபவர்களுக்கும் பட்டதாரிகள் ஆலோசனை பெரிதும் ஆதரவாக இருக்கும் என்றும் சொல்லிவிட்டு இந்தச் சங்கத்தார் கல்வி அபிவிருத்தியைத் தங்கள் கடமைகளுள் ஒன்ருகக் கொள்ளவும் வேண்டும் என்று குறிப்பிட்டார். இனிமேல் பிறர் சகாயத்தைப் பிரதீக்ஷியாமல் பாடசாலைகளை நடத்தவேண்டிய காலம் கிட்டிவிட்டதாயும் பெண் கல்வியையும் நாட்டில் பரப்பி சமூக வளர்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் தெளிவாக்கினர். தாய்பாஷை மூலமே கல்வி கற்பிப்பதையும் பொறுப்பாகப் பாவிக்க வேண்டும் என்றும் அப்போதுதான் பொதுமக்களிடை அறிவு பிறப்பது சாத்தியம் எனவும் வாழ்க்கையில் உயர்நிலை எட்டியவர்களும் அதை எட்ட முயன்றுகொண்டு உழலுபவர்களும் அடிக்கடி ஒன்று கூடி ஒருவரோடொருவர் மனம்கலந்து பேசவேண்டும் என்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்,

அடுத்தபடியாக கோபால்ராவ் பேசினர். தலைவரின் பேச்சை அவர் பூரணமாக ஆதரித்ததுடன் நல்ல பாட புத்தகங்களைத் தயாரித்து தாய் பாஷையின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதே பிரதான காரியம் என்பதைத் தெளிவு படுத்தினர். இந்த பீடிகைக்கப்புறம் சென்னை நகரில் சர்வ கலாசாலைப் பட்ட தாரிகள் சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும் அதில் சர்வ கலாசாலைப் பட்டம் பெற்றவர்கள் யார் வேண்டுமானாலும் சேர உரிமையுண்டெனவும் ஆனல் அச்சங்கத்தினர் ஒரு குறிப்பிட்ட சந்தாவைச் செலுத்தவேண்டும் என்றும் ஒரு தீர்மானத்தைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார். இதை கனம் ராமராவ் ஆமோதித்துப் பேசினர். சர்வ கலாசாலையாரிடமிருந்து பட்டத்தை ஸ்வீகரிக்கும் சமயத்தில் அத்தியக்ஷகர், உப அத்தியக்ஷகர் ஆகியோர் முன்னிலையில் கல்வி அபிவிருத்திக்காக உழைப்பதாகப் பட்டதாரிகள் எல்லோரும் பிரமாணம் செய்திருப்பதாகவும் ஆகவே இப்புதிய சங்கத்தை அதற்காக ஸ்தாபிப்பது பொருத்தமேயாகும் என்றும் கூறினர். ஸ்ரீ ஆர். பாலாஜிராவ் இதையே ஆதரித்துச் சில வாக்கியங்களை வெளியிட்டார்.

இதற்கப்புறம் சங்கத்தை ஸ்தாபிக்கும் யோசனை ஒப்புக் கொள்ளப் பட்டது. நிர்வாகசபை அமைப்பு பற்றிப் பிறகு விவாதம் இருந்தது. சங்கத்தைக் காட்டிலும் இந்த சபைக்கு அதிக அதிகாரம் இருக்கக்கூடாது என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதை ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஆக்ஷேபித்தார். இவர் தமது கக்ஷிக்கு ஆதாரமாக மேனட்டு உதாரணத்தை எடுத்துக் காட்டினர். இங்கிலாந்தில் வாக்காளர்களுக்கும் பார்லிமெண்ட் மெம்பர்கள் அடங்கிய கமிட்டிகளுக்கும் எத்தகைய தொடர்பு இருக்கிறதோ அதேமாதிரியான தொடர்புதான் இந்தச் சங்கத்திற்கும் நிர்வாக சபைக்கும் இருக்கவேண்டும் என்று இவர் வாதாடினர். சங்கத்தின் பொறுப்பு பூராவும் நிர்வாகக் கமிட்டியாரிடம் சிறிது காலத்திற்குப் பூரணமாக ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் நிர்வாகஸ்தர்கள் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அவர்களை நீக்கிவிட்டுப் புதிதாக வேறு சிலரை நியமிக்க வேண்டும் என்றும் இவர் தெரிவித்தார். இப்படிச் செய்யா

மல் சங்கம் அடிக்கடி நிர்வாகத்தில் தலையிட்டுக்கொண்டே இருந்தால் காரியம் எப்படி நடக்கும்? வருஷத்திற்கொரு முறை சங்கம் கூடினால் போதும். இடையே கூட வேண்டுமாயின் இருபது மெம்பர்கள் விண்ணப்பம் செய்து கொண்டால் அதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆகவே மூன்று மாதத்திற்கொருமுறை கூடவேண்டு மென்பது அநாவசியம்—இவ்விதம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பேசியதை சேலம் ராமஸ்வாமி முதலியார் மனமார ஆமோதித்தார். இந்தத் திருத்தத்தைப் பற்றிச் சொற்ப விவாதம் நடந்தது. கடைசியில் கோபாலராவ் கோரியபடி ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது திருத்தத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டார். இதற்கப்புறம் சங்கத்தை ஆரம்பித்து அதை நடத்துவதற்காக ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. ராய்பஹதூர் டி. கோபால்ராவ், கனம் எஸ். சுப்ரமணிய ஐயர், பி. ரங்கநாத முதலியார், என். சுப்ரமணியம், எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார், இ. எச். எலியட், மஹம்மது அஜிம்கான், சங்கரமேனன் ஆகியோர் இதில் இடம் பெற்றனர்.*

இந்தச் சங்கம் இதற்கப்புறம் அநேக ஆண்டுகள் ஜீவித்திருந்தது. முதலில் கோபால் ராவ் தலைவராகவும் சுப்ரமணியத்திற்கப்புறம் ஜஸ்டிஸ் முத்துஸ்வாமி ஐயர், ஜஸ்டிஸ் எஸ். சுப்ரமணிய ஐயர் ஆகியோர் முறையே தலைவர்களாக இருந்தனர். உபதலைவர்கள் ஸ்தானத்தை ரங்கநாத முதலியாரும் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்காரும் அநேக வருஷ காலம் வகித்திருந்தனர்.

இதே காலத்தில் மயிலையில் "மயிலாப்பூர் அநீனியம்" என்ற பெயருடன் ஒரு சங்கம் இருந்தது. சில வருஷங்களுக்கு முன்பு திருவல்லிக்கேணியில் ஸ்தாபிக்கப்பட்ட "திருவல்லிக்கேணி லிடரரி சொஸைடி"யை உதாரணமாக இது பின்பற்றியது. உயர்தரப்படிப்பு பெற்று புதிதாகப் பட்டத்தை ஸ்வீகரித்த சில யுவர்கள் இதில் முனைந்திருந்தனர். நாட்டு நிலைமையைக் குறித்த நானாவிதப் பிரச்னைகளைப்பற்றிப் பேசுவதே அவர்கள் நோக்கம். ராஜா ஸர் டி. மாதவராவ் இந்த சங்கத்திற்கு தலைவராக

*மதராஸ் டைம்ஸ் 13-4-1885

இருக்க சம்மதித்தார். காரியதரிசியாக இருந்து இதைப் பொறுப்புடன் வளர்த்தவர் வி. ஸி. தேசிகாச்சாரியார். அவர் நகரில் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்; பரம்பரைப் பணக்காரர்; சென்னை சட்ட சபையில் ஸ்தானம் பெற்ற முதல் இந்தியரான ஆனரபிள் வி. சடகோபாச்சார்லுவின் சகோதரர் புத்திரர். இளமைப் பருவத்திலிருந்தே தேசிகாச்சாரியாருக்குப் பொதுஜனப் பிரச்னைகளில் அதிக சிரத்தையும் அக்கறையும் உண்டு. இந்தச் சங்கத்தை ஸ்தாபிப்பதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பேயே அவர் மயிலையில் மற்றுமொரு பெரிய கைங்கரியத்தை மேற்கொண்டிருந்தார். தாம் பி. ஏ. பட்டத்தைப் பெற்றதுமே "நேடிவ் மிடில் ஸ்கூல்" என்ற பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். சட்ட கலாசாலையில் மாணவராகச் சேர்ந்திருந்த போதிலும் பள்ளிக்கூடத்திற்கு வந்து சிலமணி நேரம் அவர் பாடங்களைப் போதிப்பது வழக்கம். இது தவிர அன்றாடம் நிர்வாக ஏற்பாடுகளையும் அவர் கண்காணித்து வருவார். பிரதிதினமும் அவர் மிகவும் சிரமப்படுவார். தேசிகாச்சாரியாரின் முயற்சி காரணமாக நேடிவ் ஹைஸ்கூலும் மயிலை அதீனியமும் சீக்கிரத்தில் பிரபலஸ்தர்களின் கவனத்தைக் கவர்ந்தன. ஸர் வில்லியம் ஹண்டர் முதலிய பல மேனாட்டு அறிஞர்களையும் அவர் தம் சங்கத்திற்கு ஆகர்ஷித்து அதனிடம் அவர்கள் அத்தியந்த அன்பு காட்டும்படிச் செய்தார். அவருடைய தூண்டுதல் காரணமாக ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கும் அந்தச் சங்கத்திடம் விசேஷப் பற்றுதல் பிறந்தது. அடிக்கடி அவர்கள் கூட்டங்களுக்குப் போய் தமது இளைய நண்பர்களுடன் இவர் நெருங்கிப் பழகுவார். ஆலோசனைக்குவரும் விஷயங்களைப்பற்றி நல்ல அபிப்பிராயங்களை அளிப்பார். தம்மை அண்டி வருபவர்களுக்குத் தம்மிடமுள்ள புத்தகங்களைத் தாராளமாகக் கொடுத்துப் படிக்கும்படி உற்சாகப்படுத்துவார். ஆகவே ஸ்ரீநிவாஸராகவையங்காருடன் அக்காலத்தில் தொடர்பு கொண்ட இளையவர்களுக்குப் பல விதத்திலும் மேன்மையும் நற்பயனுமே விளைந்தன.

இவற்றினால் மட்டுமே ஸ்ரீநிவாஸராகவையங்காருக்குத் திருப்தி ஏற்படவில்லை. பொது விவகாரங்களைப் பற்றிப் பஹிரங்கமாகக் கூடிப் பேசுவதை இவர் விரும்பிய

போதிலும் அறிவின் அபிவிருத்திக்கு பத்து அல்லது பன்னிரண்டு பேர் அந்தரங்கமாக சம்பாஷிப்பதே பலன்தரும் என்று இவர் நம்பினர். நான்குபேருடன் கலந்துபேசினல் நானுவித விஷயங்களைப்பற்றிய ஞானம் வாய்க்குமல்லவா? அரசியல் வாழ்க்கையில் அடிமைக் கோலத்தைச் சகியாத பர்க், அதிகாரவர்க்கத்தின் அவலமான போக்கை ஆக்ஷேபித்து வந்த ப்ரைட், சுதந்திரமே ஜீவநாடி என்று பறைசாற்றி வந்த மில், தாராள புத்தியையும் பெரும் போக்கையும் தர்மம் எனக் கடைபிடித்து வந்த மார்லி, பகுத்தறிவைப் பிரயோகித்து மூடப் பழக்கங்களைச் சிதறடித்த ஸ்பென்ஸர், நாகரிக முதிர்ச்சியுடன் நாட்டில் வளர்ந்த நெறி முறைகளில் சரித்திரத்தை விவரித்த லெக்கி- இந்த மேனுட்டு அறிவாளிகள் எழுதி வெளியிட்ட நூல்களையெல்லாம் இவர் ஆவலுடன் படித்தது பலன்தராமல் போகவில்லை. அவர்கள் அனைவரும் பரந்த லக்ஷியத்தைக் கொண்டவர்கள்; பக்ஷபாத புத்தியைப் புறக்கணித்தவர்கள்; பழையவை என்பதால் அவற்றைப் பெருமையாகவோ அல்லது புதியவை என்பதால் அவற்றைப் பகட்டாகவோ பாவிக்க மறுத்தவர்கள்; பகுத்தறிவையே பிரதானமாகக் கொண்டு பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்த்தவர்கள்; லக்ஷியப் புருஷர்களாக விளங்கி லக்ஷணங்களை எடுத்துக் காட்டியவர்கள்; மேனுட்டாரின் மேன்மையை நிலைநாட்டியவர்கள்; கைவலிமையைவிட மனேவலிமையே பெரிது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படிச் செய்தவர்கள். ஆங்கிலக் கல்வியை அப்பியஸித்த இந்தியரின் வாழ்க்கை இத்தகையவர்களின் நூல்கள் வெளிவந்த பின் பலவகையிலும் மாறுபடலாயிற்று. புத்தம் புதிய கருத்துக்கள் அவர்களுடைய உள்ளங்களில் உதித்தன. சாஸ்திரங்களிலும் சம்பிரதாயங்களிலுமே அதுவரை சிரத்தையும் சிந்தனையும் ஊன்றியிருந்தபோதிலும் இனியாவது கால நிலைக்கேற்ப கொள்கைகளைத் தழுவவேண்டும் என்பதில் அவர்களுக்குக் கவனம் பிறந்தது. சீர்திருத்த முயலுவது சமரஸ முயற்சிகளுள் ஒன்றே எனும் மனேபாவமும் அவர்களுக் கேற்பட்டது.

ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவர் எழுதிய சுயசரிதை அந்நாளில் அதிக பரபரப்பை யுண்டுபண்ணிய புத்தகங்

களில் முக்கியமானதாகும். அப்பெரியார் தாம் வாழ்க்கையில் கண்ட அனுபவங்களையும் தம் மனோ நிலை காலக்கிரமத்தில் பரிபக்குவமடைந்த வரலாற்றையும் பல மேதாவிகளுடைய பழக்கத்தினால் தாம் அறிந்த பல உண்மைகளையும் மிகத்தெளிவாக அதில் விவரித்திருக்கிறார். அறிவு முதிர்ச்சியடையும் விதத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவோருக்கு இந்த நூல் பிரதானமானது. அவருடைய வாழ்க்கை அநேக விஷயங்களில் வழிகாட்டியாக இருந்தது. ஏதாவது ஒரு பிரச்னை தலைகாட்டினால் அதைப் பற்றி விவாதம் நடத்த மில் ஏற்பாடு செய்வார். சுயமாகச் சிந்தித்து சுதந்திரத்துடன் பேசுவதில் ஆர்வமும் ஆவலும் கொண்டவர். இவ்விதம் மனம் கலந்து சம்பாஷித்து அவசியமானால் மனம் மாறவும் சம்மதிக்கும் சுபாவமும் அமைந்திருந்தவர். இந்தச் சுயசரிதை ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு ஒருவித தனிமையான உத்சாகத்தையும் உவப்பையும் ஊட்டியது. அதன் ஆசிரியர் கடைப்பிடித்த மார்க்கத்தைப் பின்பற்றினால் தாமும் அதே மாதிரி பலனைக் காண முடியும் என்ற நம்பிக்கையும் இவரைப்பற்றிக் கொண்டது. ஆகவே தாமும் மில் போலவே சில நண்பர்களையும் அறிவாளிகளையும் மட்டுமே கொண்ட சிறிய ஸ்தாபனமொன்றை அமைக்க ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஆசைப்பட்டார். தாங்கள் தனிமையில் கூடி சுயேச்சையாய் அநேக விஷயங்களை அலசிப் பேச இவருக்கு ஆவல் அதிகரித்தது. புத்தகப்படிப்பினால் மட்டுமே அறிவு அபிவிருத்தி அடைந்து விடாது. பல இடங்களுக்குப் போய் பார்ப்பதும் பலபேர் சொல்லும் விஷயங்களைக் கேட்பதும் அறிவு வளர்ச்சிக்கு சாதகமானவை. நாட்டு விவகாரங்களையும் மக்களின் இயல்புகளையும் தெரிந்துகொள்ளாத வரை புத்தகப்படிப்பினால் எந்தவிதப் பிரயோசனமும் இல்லையல்லவா? ஆனால் ஒரு இடத்தில் ஒரு சிலர் சேர்ந்து கொண்டு ஒருவரோடொருவர் சம்பாஷிக்கும்போது எவ்வளவோ யோசனைகள் வெளிக்கிளம்புமல்லவா? பல கோணங்களிலிருந்தும் பிரச்னைகள் பரிசீலிக்கப்படுமல்லவா? சங்கோசத்தை உதறித்தள்ளிவிட்டு சாதுர்யமாகப் பேசக் கற்கலாமல்லவா? சிறு குழந்தைகளிடமிருந்தும் பல விஷயங்களைக் கற்றுத் தெளியவேண்டுமென்பது முன்னோர் வாக்கு. அதுவே உண்மை அறிஞரின் அடை

யாளமாம். சர்க்கார் காரியாலயத்தில் சிரமப்பட்டு அன்ருடம் கடமையைச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் குடிகொண்டிருந்த குண விசேஷங்கள் சிறிதும் குன்ருமல் இருந்தன. இவர் சிறந்த அறிஞர் என்பதற்கு அவை அத்தாட்சிகளாகச் சோபித்தன.

"தாம் முன்நின்று எல்லா பொறுப்புகளையும் நிர்வகிக்க முடியாது என்ற காரணத்திஞல் ஸ்ரீநிவாஸராகவையங்கார் இவ்விஷயத்தில் சிவஸ்வாமி ஐயரை உத்சாகப்படுத்தி விட்டார். சிவஸ்வாமி ஐயர் எழுதி வைத்திருக்கும் சில குறிப்புக்களிலிருந்து இந்த முயற்சி எவ்வளவு தூரம் பலித்தது என்பதை நாம் ஊகிக்க இயலும். 1885-ம் வருஷம் அக்டோபர் மாதம் 18-ம் தேதி யன்று அவர் எழுதிவைத்த குறிப்புகளில் பின்கண்ட வாக்கியங்கள் காணப்படுகின்றன. "இன்று காலை நான் ஸ்ரீநிவாஸராகவையங்காருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். ஜே. எஸ். மில் மாதிரி தாமும் ஒரு சிலரைக் கூட்டி விவாதங்களை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று அவர் ஆசைப்படுகிருர்." இந்த யோசனையைக் கூறி மூன்று நாட்களுக்குள்ளேயே அது உருவாகியது. அதே மாதம் 21-ம் தேதியன்று சிவஸ்வாமி ஐயர் எழுதிவைத்த குறிப்புகளில் புதிய சங்கத்தின் ஸ்தாபனத்தைப் பற்றிய சில தகவல்களை நாம் அறியக் கூடும்.

> "நார்மல் ஸ்கூல் கட்டடத்தில் ஸ்ரீ சேஷையாவின் அறையில் இன்று மாலை ஒரு கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு மிகவும் திருப்தி தரும்படியாக மில் காட்டிய உதாரணத்தைக் கொண்டு விவாத சபை ஸ்தாபிக்கப்பட்டது. அங்குதான் எம். வீரராகவாச்சாரியாரைச் சந்தித்தேன். 'ஹிந்து'வுக்குத் தவருமல் விஷயதானம் செய்யும்படியும் அதற்குத் தாம் தக்க சன்மானம் தருவதாயும் அவர் என்னிடம் தெரிவித்தார். ஏதாவது ஒரு விசேஷ பகுதியை எடுத்துக்கொண்டு அதைப்பற்றி சர்ச்சை பண்ணும் படியும் அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். இதற்கு என்னையே காரியதரிசியாக நியமித்தார்கள். பேஜ்ஹாட் எழுதிய "பிஸிக்ஸ் அண்ட் பாலி

டிக்ஸ்" (ஆராய்ச்சியும் அரசியலும்) என்ற புத்தகத்தைப் படித்து அதைப்பற்றி முதலில் விவாதத்தை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது."

அடுத்த கூட்டம் நவம்பர் மாதம் முதல்தேதி நடைபெற்றது. இதன் நடவடிக்கையைப் பற்றிய சில ரஸமான விஷயங்களை நாம் சிவஸ்வாமி ஐயரின் குறிப்புகள் மூலம் தெரிந்துகொள்ள முடியும். அக்காலத்திய பிரமுகர்களுடன் பழகும் பாக்கியத்தைப் பெற்ற இருபதாண்டு இளைஞர் அவர்களையெல்லாம் பற்றி என்ன நினைத்தார் என்பதை . நாம் அந்தக் குறிப்புக்களில் படிக்கலாம். வாசிப்பவர்களுக்கு வேடிக்கையாக இருக்கக் கூடும். ஆனால் நிர்ப்பயமான கருத்துகளை கட்டாயம் காண முடியும். மன்றத்தின் காரியதரிசி எழுதியுள்ள வாக்கியங்களில் புது மோஸைப் பார்க்கலாம்.

"காஸ்மோ பாலிட்டன் கிளப்பில் இன்று காலை நடந்த விவாத மன்றத்தின் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். சரியாக காலை 7-30 மணிக்கே போய்விட்டேன். அங்கு ஸ்ரீமான் ரங்கநாதம், ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், ஸ்ரீமான் ஸாது சேஷையா ஆகியோர் எனக்கு முன்பே வந்திருந்தனர். ஒரு அரை மணி நேரம் நாங்கள் இன்பகரமாகக் காலத்தைக் கழித்தோம். இதற்கிடையில் மெம்பர்கள் ஒருவர்பின் ஒருவராக வந்து கூடினர். அநந்தாச்சார்லு, கனம் எஸ். சுப்ரமணிய ஐயர், ஜகராவ் ஆகியோர் பிறகு ஆஜராயினர். 8-30 மணிவரை சில்லரைப் பேச்சுக்களில் காலம் கழிந்தது. விவாதத்தில் நாங்கள் இறங்கவே இல்லை.

பிறகு இந்தச் சங்கத்திற்கு ரங்கநாத முதலியார் "ஸிம்போஸியம்" என்று நாமகரணம் செய்தார். எல்லோரும் அதை பரம சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டனர். ஸ்ரீ ஜகராவ் இன்றைய விவாதத்திற்குத் தயாராக வரவில்லை யாதலால் அவர் அதை ஆரம்பிக்காமல் இருந்து விட்டார். ஆகையால் பேஜ்ஹாட்டின் புத்தகத்தில் முதல் இரண்டு பாராக்களை ஸ்ரீமான் ரங்கநாதமே படித்தார். இதற்கப்புறம் எல்லோரும் எந்த விஷயத்தையும் குறிப்பாகக் கொள்ளாமல் சம்

பாஷித்துக் கொண்டிருந்தனர். ஒருவருக்கொருவர் ஆக்ஷேப சமாதானங்களைப் பண்ணிக்கொண்டு காலத்தைக் கடத்தினர். அந்தக் கூட்டத்தில் ரங்க நாதம் சிம்மம்போல் சோபித்தார். பேஜ்ஹாட்டின் புத்தகம் சிந்தனையைக் கிளப்புவதாக எல்லோரும் அபிப்பிராயப் பட்டனர். ஆனால் எனக்கு மட்டும் பேஜ்ஹாட்டைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை.......ஆனால் அங்கத்தினர் அனைவரும் ரங்கநாத முதலியாரின் பேச்சைக் கேட்டு அதில் மோகம் கொண்டனர். அவர் எவ்வளவு அநாயாஸமாகப் பேசு கிறார்! பேச்சில்தான் என்ன உத்சாகம்? இப்போது தான் நான் இதை முதன்முதலில் கண்டேன். பேசும் போது அவர் அடிக்கடி நேராக நிமிர்ந்து நிற்கிறார். அவர் செய்யும் கோமாளித்தனத்திற்கும் குறை வில்லை. அதில் அவர் அதிக சாமர்த்தியம் வாய்ந்தவர். அவர் நல்ல ஹாஸ்ய உணர்ச்சியும் நிரம்பியவர். அவ ருக்கிருக்கும் குதூஹலத்திற்கும் அளவே கிடை யாது. ஆங்கிலத்தில் அவர் அதிக ஞானம் உள்ளவர். தாம் படித்த புத்தகங்களில் அநேகம் நல்ல வாக்கியங் களை அவர் மனப்பாடம் பண்ணிவைத்திருக்கிறார். அவற்றைச் சந்தர்ப்பத்திற்கேற்றபடி பொருத்தமாகப் பிரயோகிக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு. அவர் பேசும் ரீதி கூடியிருப்போரை பரவசப் படுத்தியிருக் கிறது. படிக்கும்போது மட்டும் குரலில் அவ்வளவு இனிமையைக் காணோம். வேடிக்கையாக வார்த்தை யாடுவதில் அவருக்கு நிகர் இல்லை. அவர் வாக்கில் ஸரளத்தையும் கம்பீரத்தையும் காணலாம்: வளைத் துப் பேசமாட்டார்: அது குறிப்பாக இருக்கும். வேண்டுமென்றே சிரிப்பை வரவழைக்கும் பழக் கத்தை அவர் கைவிடக் கூடாதா? ஸ்ரீநிவாஸராக வையங்காரும் அவரைத் தொடர்ந்து அர்த்தமின்றி எப்போது பார்த்தாலும் சிரிப்பதை நான் விரும்ப வில்லை. ஸ்ரீ ரங்கநாதத்தின் வார்த்தைகளை ஸ்ரீ சுப்ர மண்ய ஐயர் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். தமது வாயைத் திறந்துகொண்டே அவர் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்க்கையில் ஒரு வார்த்தை யைக் கூடத் தாம் கேட்காமல் இருக்கக் கூடாது

என்று அவர் கவலைப்படுகிறாரோ எனத் தோன்றியது. அநந்தாச்சார்லு தமது இயற்கைக்கு மாறாக மௌனமாக இருந்தார். ஜகராவின் வாயிலிருந்து இப்போதும் அப்போதுமாக சில வார்த்தைகள் வெளி வந்து கொண்டே இருந்தன, இவ்வளவு பேரும் ஆச்சரியப்படும் விதத்தில் ரங்கநாதம் நடந்து கொண்டார். பேச்சில் புதிய அல்லது ஆழ்ந்த கருத்துகள் இருக்கவில்லையாயினும் மொத்தத்தில் எல்லாம் இன்பகரமாகவே இருந்தது. இனிமேல் எங்கள் கூட்டம் நார்மல் பள்ளிக்கூடத்திலேயே நடக்கும்."

அடுத்த வாரமும் "ஸிம்போஸிய"த்தின் அங்கத்தினர்கள் வழக்கம்போல் கூடினர். இந்தக் கூட்டத்திற்கு ரங்கநாத முதலியார் வரவில்லை. மனோதத்துவ சாஸ்திரத்தைப் பற்றி விவாதம் நடந்தது.

"ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். பத்து மணிக்குப்பின் விவாதம் முடிந்து கூட்டம் கலைந்தது. மனோவசிய சாஸ்திரப் பிரச்னைகளைக் குறித்து ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையர் நன்றாகப் பேசினார். ஆனால் அவர் மிகவும் அலக்ஷியமான முறையில் நடந்துக் கொள்வதை நான் விரும்பவில்லை. டி. சுப்பராவ் நீண்ட நேரம் பேசினார். உத்சாகத்துடனும் பேசினார். அவர் அதிக திறமை வாய்ந்தவர். ஆனால் சரியான வார்த்தைகளை உபயோகிப்பதில்லை. பேச்சும் அதிருப்திகரமாக இருக்கிறது. இந்தப் பகுதியில் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு நல்ல பயிற்சி இராதது துரதிர்ஷ்டகரமானது. இத்தகைய பிரச்னைகளில் பிரவேசிக்க அருகதையற்றவர் போல ஸ்ரீ எஸ். சுப்ரமணிய ஐயர் தென்பட்டார். அநந்தாச்சார்லுவின் நிலைமையும் அதே மாதிரி இருந்தது. ஜகராவ் ஏதோ தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார். என்னைப்போல சங்கர நாயர் பொறுமை காட்டினார். சேஷையா மிக்க அசிரத்தையாக உட்கார்ந்திருந்தார். இன்றைய கூட்டம் எனக்கு அதிக மகிழ்ச்சியையூட்டவில்லை. ரங்கநாதம் வரவில்லை என்பதோ அல்லது நான் விவாதத்தில் கலந்துக் கொள்ளவில்லை என்

பதோ இதற்கு ஒருவேளை காரணமாக இருக்கக் கூடும்.*

நவம்பர் மாதம் 15-ம் தேதி நகரில் புயல் காற்று கடுமையாக வீசியது. ஆயினும் "ஸிம்போஸியம்" அங்கத்தினர்கள் வழக்கம்போல் சந்திக்கத் தவறவில்லை.

"பேஜ்ஹாட் எழுதிய புத்தகத்தின் முதல் அத்தியாயத்தின் ஸாரத்தை நான் ஆரம்பத்தில் எடுத்துச் சொன்னேன். பேஜ்ஹாட் போலவே நானும் ஒன்றன்பின் ஒன்ருக விஷயங்களை விவரித்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தம்முடைய அதிருப்தியை அறிவித்தார். முக்கியமான கருத்தை எடுத்துக் காட்டிவிட்டு பிறகு சாமான்யமானவற்றைக் குறிப்பிட வேண்டும் என்றும் முந்தியதற்கும் பிந்தியவைகளுக்கும் இருக்கும் சம்பந்தம் தெளிவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் சொன்ஞர்.**

எந்த இயக்கத்தை எடுத்துக் கொண்டாலும் ஆரம்பத்தில் தான் அதிக ஆர்வம் இருக்க முடியும். காரியம் கைகூடிஞலோ அல்லது கவனம் குறைந்து போஞலோ முதலில் இருந்த உத்சாகம் மறைந்து போகும். இயக்கங்களுக்குப் பொதுவானவை ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும். எல்லோருக்கும் ஒரே மாதிரி நோக்கம் இருக்கும் வரையில் எந்த முயற்சியும் பலன்பெற வழியுண்டு! சற்று மாறுபட்டாலும் சிறிது சிறிதாகச் சிதறிப் போகுமல்லவா? "ஸிம்போஸிய"த்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டிருந்தவர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஒருவர் தாம். நண்பர்கள் நழுவப்பார்த்தால் அவர்களைக் கட்டிப் பிடித்து வைக்க முடியுமா? அறிவு வளர்ச்சியில் சிரத்தை கொள்ளாமல் அநாவசியப் பேச்சில் ஈடுபட்டிருப்பவர்களை எவ்வளவு காலம்தான் ஒன்று சேர்த்து வைத்திருக்க முடியும்? வாரங்கள் செல்லச் செல்ல வாதத்தின் தரம் மட்டாகிக் கொண்டே வந்தது. "ஸிம்போஸியம்" மிகவும் மோசமான ஸ்திதியைக் கிட்டிவிட்டது. இதில் இன்னமும் பற்

*சிவஸ்வாமி ஐயரின் குறிப்புகள் 8. 11. 1885.
**சிவஸ்வாமி ஐயரின் குறிப்பு: 15. 11. 1885

றுதல் கொண்டிருப்பவர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஒருவர் தாம். இன்று (டிஸம்பர் 15) அவர்கூட பிரசன்னமாயிருக்க வில்லை. வந்திருந்தவர்களிலும் ஸ்ரீநிவாஸராகவையங்காரைத் தவிர மற்றவர்கள் யாவரும் பேச்சின் கருத்தை அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை." சிவஸ்வாமி ஐயரின் மேற்குறிப்பிட்ட வாக்கியங்களிலிருந்து இந்தச் சங்கம் அதிக காலம் நிலைபெற்றிருக்கவில்லை என்பதை நாம் நிச்சயிக்க இயலும். இம்மாதிரி நேரும் என்பதை ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் எதிர்பாராமல் இருந்திருக்க முடியாது. மில் எழுதிய சுயசரிதையில் அவர் தாம் செய்த இத்தகைய முயற்சிகள் சிறிது காலத்திற்கப்புறம் மங்கிப்போய் விட்ட விவரத்தை மிகவும் விரிவாக எழுதி வைத்திருக்கிறார்.

"ஸிம்போஸியம்" மறைந்ததேன்? சிரத்தைக் குறைவா அல்லது சிந்தனைக் குறைவா? காரணத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல. அரசியலில் மோகம் விழுந்து விட்டால் அதை வேறு வழியில் அப்புறம் திருப்ப முடியுமா? இவ்வருஷக் கடைசியில்தான் புனா நகரில் காங்கிரஸ் மஹாசபை உதயமாகியது. சென்னையிலும் அபரிமிதமான உத்சாகம் தென்பட்டது. ஸ்ரீநிவாஸராகவையங்கார் சர்க்கார் உத்தியோகஸ்தரானபடியால் ராஜீய விவகாரங்களில் தலையிட விரும்பவில்லை. ஆக்க வேலைகளில் ருசி மிகுந்து அறிவையே ஆதாரமாகக் கொண்டிருந்தார். வழிகாட்ட வந்தவர் வகுத்த பாதையைவிட்டு வழுவுவது உசிதமா! ஸ்ரீநிவாஸராகவையங்கார் தம் லக்ஷியத்தைக் கைவிடாதவர். முயற்சி முறிந்துவிட்ட படியால் மனம் சோரவில்லை. ஆதரவைக் கோரி அடிப்படைக் கொள்கையை மாற்றுவதையும் வெறுத்தார். இதற்கப்புறமும் தம்மை அண்டிவந்தவர்களுக்கும் ஆலோசனை கேட்டவர்களுக்கும் அவ்வப்போது யோசனைகளைக் கூறிக்கொண்டு தான் இருந்தார்.

1886-ம் வருஷத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்குப் புதிய கௌரவம் ஒன்று கிடைத்தது. அவ்வருஷம் மார்ச் மாதம் 30-ம் தேதியன்று இவர் சென்னை நகரசபை அங்கத்தினராக சர்க்காரால் நியமிக்கப்பட்டார். இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் சென்னை முனிசிபல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. நகர சபையின் தலைவர், உபதலை

வர் ஆகியவர்களைத் தவிர அதில் ஸ்தானம் வகிக்கும் 32 மெம்பர்களுள் முக்கால்வாசிப்பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அப்போது விதிக்கப்பட்டது. நகரில் மொத்தம் எட்டு டிவிஷன்கள் இருந்தன.

"இதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிஷனர்களே சபைக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் மெஜாரிட்டியாக இருந்து நியமன அங்கத்தினர்களின் எதிர்ப்பை மீறி நடப்பதற்கு வழி ஏற்பட்டது. நகரசபை விவகாரங்களைப்பற்றிய பொறுப்பு வாக்காளர்களிடம் இருக்கிறது. அவர்கள் இந்தத் தேர்தல்களில், அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு வருகின்றனர் என்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்" என்று சட்டம் பிறப்பிக்கப்பட்ட மறு வருஷத்தில் வெளியான நகரசபை நிர்வாக யாதாஸ்தில்* குறிப்பிடப் பட்டுள்ளது. ஸ்ரீநிவாஸராகவையங்கார் நியமிக்கப் பட்டபோது இருந்த நிலைமை இது. அந்நாளில் ரிப்பன் பிரபு தம்முடைய ஸ்தல சுயாட்சி தீர்மானத்தில் உத்தர விட்டபடி தலைநகரிலும் ஜில்லாக்களிலும் உள்ள நகர சபை அங்கத்தினர்களுக்கு "ராவ் ஸாஹேப்," "கான் ஸாஹேப்" என்ற கௌரவப் பட்டங்கள் அவரவர் வகுப்புக்கேற்ப வழங்கப்பட்டு வரலாயிற்று.

சென்னையில் அந்த நாட்களில் எட்டு டிவிஷன்கள் இருந்தன. வடக்கே ஐஸ்ஹவுஸ் ரோட், பீட்டர்ஸ் ரோட், மவுண்ட் ரோட், நுங்கம்பாக்கம் ரோட், கோடம்பாக்கம் ரோட் ஆகிய ரஸ்தாக்களும் தெற்கே அடையாற்றின் தென்கரையும் கிழக்கே சமுத்திரமும் மேற்கே மயிலாப்பூர் ஏரியும் இந்த டிவிஷன்களின் எல்லைக் கோடுகளாக இருந்தன.

நகரசபைக் காரியாலயம் எர்ரபாலுச் செட்டித் தெருவில் இருந்தது. மிஸ்டர் ஜி. டி. மக்கன்ஸி தலைவராகவும் மிஸ்டர் ஜே. ஏ. ஜோன்ஸ் உபதலைவராகவும் ராய் பஹதூர் பி. ராமஸ்வாமி செட்டியார் ரெவினியூ ஆபீஸராகவும் வேலைபார்த்து வந்தனர். அங்கத்தினர்களும் நகரில் மிக்க செல்வாக்குள்ளவர்கள்: கோல்மென், பி. தியாகராயச்

---

*சென்னை நகரசபை நிர்வாக யாதாஸ்து 1884—85 (பக்கம் 2)

செட்டியார், ஏ. தனகோடி முதலியார் (முதல் டிவிஷன்) ராய் பஹதூர் பி. ரங்கநாத முதலியார், ஸி. வி. கன்னையா செட்டி (இரண்டாம் டிவிஷன்) ஸர் சவலை ராமஸ்வாமி முதலியார், பம்மல் விஜயரங்க முதலியார் (மூன்றும் டிவிஷன்), டாக்டர் மில்லர், ஸி. மக்கிஸ்மித் (நான்காம் டிவிஷன்), சேலம் ராமஸ்வாமி முதலியார், டபிள்யூ. எஸ். வெங்கடராமானுஜாலு நாயுடு, ஸர்ஜன் ஜெனரல் தாம்ஸன் (ஐந்தாம் டிவிஷன்), பேஸில் லவரி, என். சுப்ரமணியம், (ஆறும் டிவிஷன்), பி. அநந்தாச்சார்லு, டாக்டர் மொஹியுதின் ஷெரிப், பாலவாய் ரங்கையா நாயுடு, கனம் மீர்ஹுமாயூன்ஜா பஹதூர் (ஏழாம் டிவிஷன்), எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார், டபிள்யூ. மார்கன், ஜே. பி. நிக்கொலஸ், திவான்பஹதூர் ஆர். ரகுநாதராவ் (எட்டாம் டிவிஷன்) ஆகியோர் அப்போது நகரசபையின் மூல புருஷர்களாக விளங்கினர்.

நகரசபை நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் கலந்து கொள்ளவோ அல்லது அதன் அன்றுடப் பிரச்னைகளில் பூரணமான சிரத்தை எடுத்துக்கொள்ளவோ ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு சாத்தியப்படவில்லை. உத்யோக அலுவல்களே இவருடைய கவனம் பூராவையும் கவர்ந்துவிட்டன. அந்தக் காலத்தில் இவர் ஒய்வுகூட எடுத்துக் கொள்ளாமல் உழைத்தார். வெறும் கௌரவத்திற்காகப் பதவி வகிப்பதை இவர் மனம் ஒப்பவில்லை. ஒருவருஷ காலம் ஸ்தானத்தை வகித்துப் பார்த்தார். நகருக்காகவும் உழைக்க வேண்டும் என்று ஆவல் இருந்ததேயன்றி அதை நிறைவேற்றி வைக்க இயலவில்லை. சேவையில் தம்மைக் காட்டிலும் அதிகப் பற்றுதல் கொண்டிருப்பவர் சார்பில் அதைவிட்டு விலகுவதே மேலான சேவை என்றும் இவர் தீர்மானித்தார். ஆகவே அடுத்த வருஷம் மார்ச் மாதம் 21-ம் தேதியன்று இவர் தமது ஸ்தானத்தை ராஜினமாச் செய்தார்.

1886-ம் வருத்தின் மத்தியில் ஸ்ரீநிவாஸராகவவையங்கார் லஸ்ரோட்டில் பங்களா வாங்கிக் கொண்டு, பலாத் தோப்பிலிருந்து அங்கு வந்துசேர்ந்தார். இது இவருடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமான சம்பவமாகும். இது முதற்கொண்டு இவர் தமது அந்திம காலம்வரை இந்த மாளிகையிலேயே வாழ்ந்திருந்தார். முதலில் இவரும்

புரொபஸர் பி. ஹனுமந்தராவும் சேர்ந்து அதை வாங்கினர். அந்தப் பங்களா அப்போது பிரஸிடென்ஸி காலேஜ் ஆங்கில போதகாசிரியராக இருந்த இ. எச். எலியட் என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. தோட்டத்தில் பெரிதும் சிறிதுமான இரண்டு கட்டடங்கள் உண்டு. சிறியதில் ஹனுமந்தராவ் தங்கியிருந்தார். குடிபுகுந்த சில நாட்களுக்கெல்லாம் அவருடைய மனைவி காலமாகி விட்டபடியால் அவர் அங்கிருக்க சம்மதியாமல் வேறு இடத்திற்குக் கிளம்பிவிட்டார். அவரது பாகத்தையும் இதற்கப்புறம் ஸ்ரீநிவாஸராகவையங்காரே சொந்தமாக்கிக் கொண்டார்.

லஸ்ரோட் அந்த நாட்களில் பெரிய மனிதர்கள் இருக்கும் இடம் என்ற பிரசித்தியை எட்டிவிட்டது. ஆயினும் அங்கு அஸ்தமனத்திற்கப்புறம் நடமாடுவது ஆபத்தான காரியம். வண்டி வைத்துக்கொண்டிருப்பவர்கள் மட்டும் இரவு வேளையில் வெளியே போய்வரலாம்; தெருவில் பாம்பு முதலிய விஷஜந்துக்கள் ஊர்ந்துகொண்டே இருக்கும். நரிகள் ஊளையிடும் சப்தமும் இரவின் அமைதியைக் கெடுத்துக்கொண்டே இருக்கும்; பாராக்களின் 'உஷார்' கூக்குரலும் நிசப்தத்தைப் பிளந்துகொண்டே இருக்கும். பெரிய தோட்டங்களின் நடுவே ஒரு சில பங்களாக்கள் மட்டுமே இருந்தனவாதலால் திருடர் பயமும் அதிகம்.*

இதைக் காட்டுக் கோவில் தெரு என்றும் வழங்குவதுண்டு. இந்த ரஸ்தாவில் மிகப் பழமையான ஒரு மாதா கோவில் இருக்கிறது. "லஸ் சர்ச் தான் மிகவும் பழையது என்பது என் நம்பிக்கை. இந்தக் கரையோரமாய்ப் போர்த்துகீஸியர் முதல் முதல் வந்தபோது எங்கு இறங்குவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை எனவும் பிறகு அதிக நேரம் கழித்து அவர்கள் ஆச்சர்யமானதொரு ஜோதியைக் கண்டதாகவும் இறைவனே தங்களுக்கு அவ்விதம் வழி காட்டியதாக அவர்கள் முடிவு செய்ததாகவும் கூறப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். பிறகு அங்கு வந்து குடியேறியவுடன் ஜோதி தோன்றிய இடத்தில் ஒரு

---

*இப்போது இந்த ரஸ்தாவில் காலி மனையைக்கண்டு பிடிப்பது கஷ்டம்; அன்றும் இன்றும் உள்ள வித்தியாசம் அனந்தம்.

மாதாகோயிலை அவர்கள் கட்டி வைத்தனர். அதற்கு 'லஸ்' அதாவது 'ஜோதி' என்றும் பெயரிட்டனர். அது சிறியது; மிகத் தொன்மையானது கூட; சென்னைக்கருகே கிறிஸ்தவர் வசம் வந்தமுதல் பிரதேசம் என்ற சிறப்பும் அதற்கே உரித்தாகும்," என்று சுமார் எண்பது ஆண்டுகளுக்குமுன் பிருந்த சென்னை நகரைப் பற்றிய புத்தகத்தை எழுதியிருக்கும் மன்ரோ கூறுகிறார்.*

ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்த மூன்றும் நெம்பர் பங்களாவை வாங்கிய காலத்தில் அந்த ரோட்டில் ஆங்கிலேயரும் வாழ்ந்து வந்தனர். கிழக்கேயிருந்து புறப்பட்டு மேற்கு பக்கமாய் வந்தால் ரஸ்தாவின் ஆரம்பத்தில் இரண்டு வாடைகளிலும் மூன்று சமஸ்தானங்களில் திவான் பதவி வகித்துப் பெரும் சிறப்பைச் சம்பாதித்த ராஜா ஸர் டி. மாதவராவும் வக்கீல் தொழிலின் சிகரத்தை எட்டிய வி. பாஷ்யமையங்காரும் வசித்திருந்தனர். தெருக்கோடியில் மதுரையிலிருந்துவந்து பிறகு நீதிபதி பதவிக்கு உயர்ந்தவரான எஸ். சுப்ரமணிய ஐயர் தங்கியிருந்தார். இதன் மத்தியில் ஸ்ரீநிவாஸராகவையங்கார், துபாஷி வெங்கடஸாமி நாயுடு, பிரபல பாரிஸ்டரான நார்ட்டன், ஜஸ்டிஸ் கெர்னன், பிரின்ஸிபால் ஹால் ஆகியோரின் மாளிகைகள் காணப்பட்டன.

இந்த மாளிகைக்கு வந்தபிறகு டிஸம்பர் மாதத்தில் கடைசி புத்திரரான ரங்கஸ்வாமி பிறந்தார். தோட்டத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் மாலை நேரத்தில் தமது நண்பர்களுடன் 'டென்னிஸ்' ஆடிப் பொழுதைப் போக்கவும் ஏற்பாடு செய்தார்.

---

*மன்ரோ; 'மதராஸியானு'; பக்கம் 2

டபரின் பிரபு இந்திய ராஜப்பிரதிநிதியாகப் பதவி யேற்றபோது அவர் கண்ட நிலைமை அவரைத் திகைக்க வைத்தது. ரிப்பன் பிரபு காலத்தில் நிலவிய அமைதி நாட்டை விட்டகன்றுவிட்டது. 1882-ம் வருஷத்திற் கப்புறம் மூன்று வருஷ காலத்திற்குத்தான் மக்கள் திருப் திப்படும்படி இருந்தது. கிழக்கேயும் மேற்கேயும் ராணுவ நடவடிக்கைகளைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேற்கே ரஷ்யா படையெடுக்குமோ என்ற பீதி தலைகாட்டியது. மெள்ள மெள்ள ரஷ்யர்கள் ஆப் கானிஸ்தானத்திற்கும் வந்துவிட்டனர். கிழக்கே பர்மா வில் இந்திய சர்க்கார் போரை நடத்தவேண்டி வந்தது. ஒருபுறம் பந்தோபஸ்து ஏற்பாடுகள்: மற்றொரு புறம் படையெடுப்பு முஸ்தீபுகள்! செலவு அபரிமிதமாகிவிட் டது. சர்க்காரின் திட்டமெல்லாம் சிதறிப்போயிற்று. துண்டுவிழுந்த தொகை கொஞ்சமல்ல. இந்த சந் தர்ப்பத்தில் வெள்ளியின் மதிப்பும் வெகுவாகக் குறைந்து விட்டது. நாணயமாற்று விகிதம் இதனால் அதிகம் பாதக மடையவே மேலும் அதிகப்பளு இந்திய சர்க்கார் மீதே விழுந்தது. இதே சமயத்தில் பஞ்சம் தலைகாட்டாமல் தடுக்கவேண்டிய பொறுப்பும் இந்திய சர்க்காரிடமே இருந்ததால் உள்நாட்டில் ரயில்பாதைகளை அமைக்க சிரத் தைப் பிறந்தது. ராணுவத்தைப் பராமரிப்பது மட்டுமே வெள்ளை யானைக்குத் தீனிபோடுவதற்கு சமமாகும். அது போதாதென்று இதர சிக்கல்களும் சேர்ந்துகொண்டால் சர்க்கார் மட்டும் என்ன செய்யமுடியும்? வருமானம் வேண்டுமானால் வரி போடுவதைத் தவிர வேறுவழி இல்லை யல்லவா? விவசாயத்தைத் தவிர இதர தொழில்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது வரிவிதிக்க இந்திய சர்க் கார் முடிவு செய்தனர். 1886-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ம் தேதியன்று கல்கத்தாவில் ராஜப் பிரதிநிதி சபை அங் கத்தினர்கள் கூடியபோது, பொக்கிஷ மெம்பரான ஸர் ஆக்லண்ட் கால்வின் இந்தப் புதிய வரி முறையைப்பற்

றிப் பேசினர். இது காலத்திற்கேற்றது; எல்லா வகுப்பாருக்கும் பொதுவானது; தற்போதைய நிலைமையில் இது மிகவும் அவசியமானது—இவ்விதம் ஸர் ஆக்லண்ட் கால்வின் முறையிட்டார். அவரைத் தொடர்ந்து ராஜப் பிரதிநிதியும் சபையில் பேசினர். புதிய வரி விதிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவரும் விவரிக்கவேண்டியதாயிற்று. ஆயினும் இதே சமயம் பொதுமக்களுக்கு ஆறுதலை அளிக்கும் வண்ணமும் அவர் பேசவேண்டியிருந்தது. தமக்கிருக்கும் சங்கடத்தை விளக்கிவிட்டு இனி சிக்கனத்திலும் தமது சிந்தை விழுந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். தம் சர்க்காருக்குப் பிந்திய விஷயத்தில் சிபாரிசுகளை செய்வதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படும் என்பதை அவர் அப்போது முதன் முதலாக வெளியிட்டார்.

"நமது செல்வ நிலையின் அஸ்திவாரத்தை ஆட்டி வைக்கும் நாணயமாற்று விகிதத்தில் கோளாறுகளும் ராஜீய நிலைமையில் கலக்கத்தை யுண்டுபண்ணும் சுற்றுப்புறப் பிரதேச முஸ்தீபுகளும் நாம் சிக்கனத்தை அனுஷ்டிப்பதுடன் செலவை அதிகம் குறைத்துக் கொள்ள தீவிரமாக முயலவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. நாம் இந்தக் கொள்கையை ஏற்கெனவே ஆரம்பித்து அது பயன் அளித்துவருகிறது. மாகாண சர்க்கார்களுக்கு நாம் முறையிட்டதன் காரணமாக அவை விசுவாசத்துடன் உதவி அளிக்கவே நாம் ராணுவச் செலவை அதிகம் சமாளித்துக் கொள்வது சாத்தியமாகியது. தற்காலிகத் தேவையை உத்தேசித்து தற்காலிகமான இந்த நடவடிக்கை அனுஷ்டிக்கப்பட்டது. மாகாண, மத்திய சர்க்காரின் செலவினங்களை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பரிசீலித்து செலவைக் கட்டுப்படுத்தியும் இந்தப் புதிய மசோதா மூலம் கிடைக்கும் வருமானத்தையும் கொண்டு பணத்தைச் சேமித்துவைக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. இந்த நோக்கத்துடன் இந்திய சர்க்கார் செல்வ நிலை பரிசீலனைக் கமிஷனை நியமிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். இதில் திறமை மிகுந்தவர்கள் அங்கத்தினர்களாக நியமிக்கப்படுவர். காரியம் நன்குக நிறைவேறக்கூடிய விதத்தில் அவர்களுக்கு

பொறுப்புகள் இருக்கும். ராஜப்பிரதிநிதியும் அவர் சட்டசபை அங்கத்தினர்களும் சாம்ராஜ்யத்தின் செல்வநிலைக் கேற்ப பல இலாகாக்களையும் நிர்வகிக்க உறுதிகொண்டிருக்கின்றனர் என்பதும் இதற்கப் புறம் ருசுவாகும்.*

பிப்ரவரி மாதம் 10-ம் தேதியன்று இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது. அஸ்ஸாம் சீப் கமிஷனர் மிஸ்டர் ஸி. ஏ, எலியட் தலைவராகவும் கனம் ஜஸ்டிஸ் கன்னிங் ஹாம், டாக்டர் ஹண்டர், கனம் ராவ்பஹதூர் எம். ஜி. ரானடே, ஆடிட்டர் ஜெனரல் மிஸ்டர் ஜேம்ஸ் வெஸ்ட் லண்ட், பொது மராமத்திலாகா அக்கவுண்டண்ட் ஜெனரல் லெப்டினன்ட் கர்னல் எ. ஜே. பில்கேட், மிஸ்டர் எச். டபிள்யூ. ப்லிஸ், வங்காள பாங்கி காரியதரிசி மிஸ்டர் ராபர்ட் ஹட்டி ஆகியோர் அங்கத்தினர்களாகவும் மிஸ்டர் எஸ். ஜாகோப் காரியதரிசியாகவும் இருக்கச் சம்மதித்தனர். இந்தக் கமிட்டி நியமனத்தைக் குறித்து இந்திய சர்க்கார் வெளியிட்ட அறிக்கையிலேயே அதன் பொறுப்புகளும் அலுவல்களும் குறிப்பிடப்பட்டன.

> "மாகாண, மத்திய சர்க்கார்களின் செலவினங்களைப் பரிசீலித்து எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் சாத்தியமான சிக்கனங்களை அறிவிப்பதற்காக ஒரு கமிட்டியை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன் அங்கத்தினர்கள் சீக்கிரத்தில் கூடி அடுத்த மாரி காலத்திற்குள் சர்க்காருக்குத் தக்க யோசனைகளைச் சமர்ப்பிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
>
> சமீப வருஷங்களில் செலவைக் குறித்து ஒரு தடவைக்கு அதிகமாகவே சர்க்காரிடம் முறையிடப்பட்டிருக்கிறது. ஒருபுறம் சென்ற 5 வருஷ காலத்தில் சர்க்காரின் சிவில் இலாகாக்களில் செலவு அதிகரித்து வந்திருப்பதாகப் புகார் கிளம்பியிருக்கிறது. மற்றொருபுறம் இந்த அதிகரிப்புக்கான காரணத்தை இந்திய சர்க்கார் இந்தியா மந்திரிக்குத் தெரிவித்திருக்கின்றனர். இது சம்பந்தமான தஸ்தவேஜிகள் கமிட்டி பார்வைக்குக் கொடுக்கப்படும். இந்த பிரச்

*லார்ட் டபரின்: இந்திய பிரசங்கங்கள்: பக்கம் 80,81

னையைப் பற்றிக் கிளம்பிய விவாதம் ஒருபுறமிருக்க இப்போது சர்க்காருக்குப் பணவிஷயத்தில் தலைகாட்டக் கூடிய சிரமங்களைப் போக்குவதற்குச் செலவைக் குறைக்க வழிதேடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதுவே இதற்குத் தக்க சந்தர்ப்பம், வருகிற மார்ச் மாதத்துடன் இந்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுடன் வருமானப் பங்கீடு விஷயமாகச் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் பூர்த்தியாகின்றன. பஞ்சத்திலிருந்து பாதுகாக்கவும் எல்லைப்புறத்தில் அபாயத்தைத் தடுக்கவும் செய்ய வேண்டிய மராமத்துக் காரியங்களைப்பற்றி சர்க்கார் பெரிய திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. இதை அமுலாக்க இதர இலாகாக்களில் சிக்கனம் செய்ய வேண்டியது அதி அவசியமாகும். தங்கம், வெள்ளி, ஆகியவற்றின் மதிப்பு குறைந்துவருவது காரண மாகவும் சர்க்கார் இப்போது அவசியமில்லாத சில செலவுகளையும் செய்யவேண்டியிருக்கிறது.

இப்போது மாகாண, மத்திய சர்க்கார்களுக்கிடையே செய்யப்பட்ட செல்வ ஒப்பந்தங்களை மாற்றுவதுடன் மாகாண, மத்திய சர்க்கார்களைச் சேர்ந்த எல்லா இலாகாக்களையும் பற்றி கமிட்டி விசாரணை நடத்தவேண்டும். ராணுவக் கமிஷன் செய்த சிபாரிசுகளில் சில அமுலாக்கப்பட்டிருப்பதும் மற்றும் சில சீக்கிரத்தில் முடிவாகும் என்பதும் கமிட்டியாருக்குத் தெரியவரும். ராணுவக் கமிஷன் போலவே இந்தக் கமிட்டியும் விசாரணை நடத்துவது எதிர்பார்க்கப் படாதபோதிலும் ராணுவ நிர்வாகத்தில் சம்பந்தப் பட்ட பல இலாகாக்களிலும் இன்னும் எவ்வளவு தூரத்திற்குச் செலவைக் குறைக்கலாம் என்பதைப் பற்றி அறிவிக்க அதிகாரம் கமிட்டிக்கு உண்டு. இந்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு ஆனால் அமுலாக் கப்படாமல் இருக்கும் ராணுவ சிக்கனத்தைப்பற்றி பரிசீலிக்கவும் அவற்றை அமுலாக்குவதற்கு எம் மாதிரி நடவடிக்கைகளை எடுப்பது திருப்திதரும் என் பதைப்பற்றி ஆலோசனை அளிக்கவும் கமிட்டிக்கு உரிமை இருக்கிறது. இதே மாதிரி சமீப காலத்தில்

சர்க்கார் இலாகாக்களில் சிக்கனத்தைக் குறித்து நடத்தப்பட்ட விசாரணைகளையும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் ஆராய்ந்து மேலும் அதிகமாக சிக்கனம் செய்ய கமிட்டி வழிகாட்டவேண்டும்...

ராணுவச் செலவைப் பிரிட்டிஷ் சர்க்காரும் இந்திய சர்க்காரும் பங்கு போட்டுக்கொள்ளும் முறையைக் கவனித்து அது சரியா அல்லது மாற்றப்படவேண்டுமா என்பதைக் குறித்து இந்திய சர்க்காருக்குத் தக்க சிபாரிசுகளைத் தெரிவிக்கவேண்டும்."

எலியட், கன்னிங்ஹாம், கமிட்டிக் காரியதரிசி ஆகிய மூவரும் மார்ச் மாதத்திலேயே கல்கத்தாவில் ஒன்று கூடி அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினர். இந்தக் கமிட்டிக்குப் பல வரையறைகள் சீக்கிரத்தில் விதிக்கப்பட்டன. சர்க்கார் உத்தியோகங்களுக்கு இந்தியர்களையே அதிகமாக நியமிக்கும் விஷயமாக இவர்கள் விசாரணை நடத்த ஆரம்பித்தபோது அதைப்பற்றி விசாரிப்பதற்காக ஸர் சார்லஸ் எக்கிஸன் தலைமையில் மற்றொரு கமிஷன் நியமிக்கப்பட்டது. எலியட் கமிட்டி அங்கத்தினர்கள் மாகாண சர்க்கார்களுக்கும் இந்திய சர்க்கார் கீழ் முக்கிய இலாகாக்களை நிர்வகிக்கும் அதிகாரிகளுக்கும் தேசத்தில் உள்ள பல்வேறு ஸ்தாபனங்களுக்கும் சுற்றறிக்கைகளை அனுப்பி ஒத்துழைப்பைக் கோரினர். அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படியும் கேட்டனர். இந்தக் கமிட்டியார் ஸெப்டம்பர் மாதம் 22-ம் தேதி சென்னைக்கு வந்து சேர்ந்தனர். இக் கமிட்டியுடன் ஜே. எச். கார்ஸ்டினும் எச். இ. ஸ்டோக்ஸும் சேர்ந்துகொண்டனர்.

எலியட் கமிட்டி சென்னைக்கு வந்தபோது ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் போர்டாபீஸில் பிரதம உதவிக் காரியதரிசியாக இருந்தார். ரெவினியூ போர்டு அங்கத்தினர்களின் விருப்பப்படி இந்திய சர்க்காரின் செல்வ நிலைமையைப் பற்றி ஒரு பெரிய யாதாஸ்தை இவர் தயாரித்தார். இதற்கு முன்பு இருபது வருஷ காலம் பிரதிவருஷமும் இந்திய சர்க்கார் வெளியிட்டு வந்த வரவு செலவுத் திட்டங்களை மிகக் கவனமாக இவர் படித்தார். இந்திய சர்க்கார் பல விஷயங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் இந்

தியா மந்திரி அவ்வப்போது அனுப்பி வந்த தாக்கீதுகளை யும் இவர் மிக்க பொறுமையுடன் பரிசீலித்தார். பாரபக்ஷ மின்றி பலாபலன்களை முடிவு கட்டினுர். சிக்கனத்தை எப்படிச் செய்வது என்பதைச் சுட்டிக் காட்டுவதைவிட சிக்கனத்திற்கு அவசியம் பிறந்தது எப்படி என்பதைத் தெளிவாக்க இவர் முற்பட்டார். இந்தியா பராதீனப்பட்ட நாடாக இருப்பதால் விளைந்த பாதகங்களை இவர் விவரித் தார். ராணுவ விஷயத்தில் எவ்வளவு அநியாயம்! பிரிட் டிஷ் சர்க்கார் நடத்தும் சண்டைகளுக்காக இந்தியா எவ் வளவு செலவழித்திருக்கிறது! இவற்றையெல்லாம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஆதாரபூர்வமாக எடுத்துக் காட் டினுர். ஆதிமுதற்கொண்டு நடந்துவரும் சம்பவங்களை விவரமாகக் குறிப்பிட்டார்.

இவர் எழுதிய குறிப்பின் சாரத்தை இங்கே தருவது அவசியமாகும். அப்போதுதான் உள்ளதை உள்ளபடி அறிய இயலும். விவரத்தை நீட்டி எழுதினுல்தான் விமர் சனம் செய்ய வசதி இருக்கும். 1861-ம் வருஷத்தில் நிய மிக்கப்பட்ட இங்கிலீஷ் கமிஷன் இந்தியாவில் தங்கியிருக் கும் துருப்புகளின் விடுதிகளில் சுகாதார ஏற்பாடுகள் மிக வும் அதிருப்திகரமாக இருப்பதாக அபிப்பிராயம் கூறினர். சில வருஷங்களுக்கு முன்பு இங்கு வந்த பிரிட்டிஷ் துருப் புகள் தங்கியிருப்பதற்காக அவசரம் அவசரமாகச் செய் யப்பட்ட ஏற்பாடுகளையும் அவர்கள் கண்டித்தனர். ஆகவே அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு நவீன முறை யில் கட்டடங்களைக் கட்டவேண்டும் என்று தெரிவித் தனர். இதற்காக விசேஷ உத்தியோகஸ்தர்கள் நியமிக் கப்பட்டு 1864-ம் ஆண்டில் ராஜப்பிரதிநிதியாக இருந்த லாரன்ஸ் பிரபு புதிய படைவீடுகளைக் கட்ட 115 லக்ஷம் பவுன் செலவழிக்கத் திட்டமிட்டார். இந்தியா. முழு திலும் பல நகரங்களிலும் இவற்றை நிர்மாணிக்கவும் வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் திட் டத்தை நிறைவேற்றவும் இதற்கான செலவை இந்திய பொக்கிஷத்திலிருந்தே சரிக்கட்டவும் இந்திய சர்க்கார் சம்மதித்தனர். மறு வருஷம் இதற்கான வேலை துவக்கப் பட்டது. ஆனுல் வெகு சீக்கிரத்திலேயே இந்தச் செலவு அளவை மீறியிருப்பதாக இந்திய சர்க்கார் உணர்ந்து

கொண்டனர். கடன் வாங்கினுல்தான் கட்ட முடியும் என்று 1867-ல் பொக்கிஷ மெம்பர் மாஸி தீர்மானித்தார். இம்மாதிரியான நிலைமையில் சுமார் 55 லக்ஷம் பவுன் செலவாகியது. இவ்வளவு செலவு செய்தும் அது வீணுகி விட்டது. விடுதிகள் மிகவும் கேவலமாக இருப்பதாக சில அதிகாரிகள் புகார் செய்தனர். ராணுவத்தை மலைப்பிரதேசத்திற்குக் கொண்டுபோகவும் முடிவு செய்யப்பட்டது. ஆகவே இந்த கட்டடங்கள் யாவும் அநாவசியமாகப் போயின. எங்கு பார்த்தாலும் இந்த வீண் விரயத்தைப் பற்றியே பேச்சு கிளம்பியதால் 1873-ம் வருஷத்தில் கட்டட நிர்மாண காரியத்தை சர்க்கார் கைவிட்டனர். இது தவிர 1865-ம் வருஷத்தில் ராணுவத்திற்காக 25 லக்ஷம் பவுன் மேலும் அதிகமாகச் செலவாகியது. இங்கிலீஷ் படையும் இந்தியத் துருப்புகளும் ஒன்று சேர்க்கப்பட்டதே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. இதைப் பலர் ஒப்பவில்லை. ராஜப்பிரதிநிதி சபையில் ஸ்தானம் வகித்த 14 பேர்களுள் 13 பேர் இதை ஆக்ஷேபித்தனர். ராஜப்பிரதிநிதியும் தாம் இதற்கு சம்மதிக்கவில்லை என்று தெரிவித்திருந்தார். ஆயினும் காமன்ஸ் சபையார் இவற்றை யெல்லாம் அலக்ஷியம் செய்து விட்டனர். லெஸ்லி ஸ்டீபன் தாம் எழுதிய "ஹென்ரி பாஸெட் சரிதை"யில், "நியாயமோ அநியாயமோ இதில் சம்பந்தப்பட்டவர்களின் ஆக்ஷேபத்தை மதியாமல் செய்யப்பட்ட இந்த ஏற்பாட்டினுல் செலவு மட்டும் மிகவும் அதீதமாகி விட்டது" என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் சேர்க்கையினுல் மற்றும் இதர புதிய விளைவுகளும் முளைத்தன. இங்கிலீஷ் படைவீரர்களுக்கு அதிகப்படி சம்பளம் அளிக்க வேண்டி வந்தது காரணமாக இந்திய சர்க்காரின் செலவும் அதிகமாகி விட்டது ஒருபுறமிருக்க, படைக்கு ஆட்களைச் சேர்ப்பது சம்பந்தமாகவும் தகராறு தலைகாட்டத் தொடங்கியது. 'சம்பளத்தை அதிகப்படுத்தி இந்திய சர்க்கார்மீது அதிக பளுவைப் போடுவதா என்பதைப் பற்றிய விவாதம் அப்போதே ஆரம்பித்து விட்டது. ஆக்ஷேபித்திருக்கையிலும் அநாவசியமான செலவைச் சுமத்துவதா என்ற கூக்குரலும் கிளம்பியது. இந்தச் சமயத்தில் (1879) லிட்டன் பிரபு, ஸர் ப்ரெட்ரிக் ராபர்ட்ஸ், ஸர் பீட்டர் லம்ஸ்டன் முதலிய ராணுவ நிபுணர்கள் அடங்கிய விசேஷக் கமிஷனை

நியமித்தார். பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்த 200,000 அல்லது 300,000 ஸோல்ஜர்கள் இந்தியாவுக்கு வருவதைத் தடுத்து இங்கேயே படைகளைத் திரட்ட ஏற்பாடு செய்வதால் 16000 முதல் 24000 பவுன்வரை இந்திய சர்க்காரின் செலவு குறையும் என்பதைத் தாங்கள் மறுக்க முடியாதாயினும் இம்மாதிரி மாறுதலைச் செய்வதால் பிரிட்டனுக்குப் பாதகம் ஏற்படுவதுடன் இந்தியாவில் கிடைக்கும் நல்ல பயிற்சியை பிரிட்டிஷ் ராணுவத்தினர் இழக்க நேரிடும் என்பதைத் தாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவதாகக் கமிஷன் மெம்பர்கள் அறிவித்தனர். இந்தியாவில் இருக்கும் பிரிட்டிஷ்படை இந்திய மக்களின் அனுகூலத்திற்காக உபயோகிக்கப்பட வேண்டுமே தவிர இங்கிலாந்தின் தற்காப்பு திட்டத்திற் கேற்றபடி பயன்படுத்திக் கொள்ளப்படலாகாது என்றும் இந்தியச் செலவில் பராமரிக்கப்படும் இந்தத் துருப்புகள் இங்கிலாந்தில் உள்ள ராணுவத்தின் உதவிக்காக அநாவசியமாக அனுப்பப்படலாகாது என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். பட்டவர்த்தனமாக அபிப்பிராயத்தைத் தெரிவித்தும் பலன் காண இயலவில்லை. 1881-ல் ராஜப்பிரதிநிதி ரிப்பன் பிரபு இந்தியா மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் இந்தியாவில் ராணுவச் செலவு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போவதைப்பற்றி தமது கவலையைத் தெரிவிக்கத் தயங்கவில்லை. "இந்தியாவில் தங்கியுள்ள ஐரோப்பிய படைகளுக்கான செலவு சர்க்காருக்கும் தெரியாமலேயே மிதத்தை மீறிக் கொண்டிருக்கிறது" என்று கூறிவிட்டு புதிதாகப் பல உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அதனல் எத்தகைய செலவு ஏற்படும் என்பதை இப்போது சுட்டிக்காட்டுவது சாத்தியமில்லை என்பதையும் ரிப்பன் பிரபு தெரிவித்தார். 1864-ம் வருஷம் முதற்கொண்டே இந்திய சர்க்காருக்கு பிரிட்டிஷ் ராணுவம் சம்பந்தமாக ஏற்பட்டு வந்திருக்கும் செலவுகளைப் பற்றிய விவரமான ஜாபிதாவையும் அக் கடிதத்தில் சேர்த்தனுப்பியிருந்தார். இந்திய சர்க்கார் மேலும் அதிகமாக 800,000 பவுன்களைப் பிரதி வருஷமும் செலவழிக்க வேண்டியிருப்பதாகவும் இதில் அநாவசியமான செலவு தான் அதிகம் எனவும் இது விஷயமாக இந்திய சர்க்காரின் ஆலோசனையை பிரிட்டிஷ் சர்க்கார் அபேக்ஷிக்கவே

இல்லை என்றும் ரிப்பன் பிரபு அப்போது எழுதினர். இதற்கிடையில் இந்திய ராஜப்பிரதிநிதிகள் இந்தச் செலவைப் பற்றி சமயம் வந்த போதெல்லாம் முறையிடாமல் இருக்கவில்லை. 1867-ல் இந்தியா மந்திரியாக விருந்த ஸாலிஸ்பரி பிரபு லாரன்ஸ் பிரபுவுக்கு செலவைக் குறைப்பது பற்றி மிகவும் வேடிக்கையான கடிதம் ஒன்றை எழுதினர். வார்த்தைகளில் பரிகாசத் தொனி இருந்ததே தவிர காரியத்தில் கெடுபிடி தளரவில்லை. 'பிரிட்டிஷ் படையின் அளவைக் குறைக்க வேண்டியது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்தான். இப்போதைய நிலைமையில் மேலும் அதிக நபர்களைச் சேர்க்க வேண்டியிருக்கிறதே? நாம் வாளாவிருக்க முடியுமா? அல்லது இந்தியத் துருப்புகளை நம்பியிருக்கக்கூடுமா? பிரிட்டிஷ் வீரர்கள் அதிகமாக இருந்தால் தானே இந்தியர்களை அடக்கிவைக்க இயலும்? இப்போது உங்கள் கருத்து என்ன?'—இந்த ரீதியில் இருந்தது இந்தியா மந்திரி விடுத்த கடிதம். லாரன்ஸ் பிரபு இதற்கு என்ன பதில் எழுதினர் என்பது தெரியவில்லை. ஆனல் அவருக்கடுத்தபடி அந்த ஸ்தானத்தை ஸ்வீகரித்த நார்த்ப்ருக் பிரபு காலதாமதமின்றி இந்த அநியாயத்தை எடுத்துக் காட்டினர். இதில் நேர்மையும் நியாயமும் இருப்பதைக் கண்டு ஆர்கில் பிரபு யுத்த மந்திரியுடன் சிறிதுகாலம் விவாதத்தை நடத்திப் பார்த்தார்: காரியம் மட்டும் கைகூடவில்லை.

லாரன்ஸ் பிரபு காலத்தில் மற்றுமொரு முக்கிய சம்பவமும் நிகழ்ந்தது. பிரிட்டிஷ் சர்க்கார் அபிஸீனியப் போரில் கலந்துகொள்ள இந்தியத் துருப்புகளை அனுப்பும்படி நிர்ப்பந்தித்து அந்த யுத்தத்திற்கான செலவை இந்தியாமீதே சுமத்தினர். ராஜப்பிரதிநிதி இந்த நடவடிக்கையைப் பலமாகக் கண்டித்தார். இந்தியா மந்திரிக்கு இதைப் பற்றி எழுதிய கடிதத்தில், இந்த அநீதிக்கு எல்லையே இருக்காது என்று தமக்குத் தோன்றுவதாகவும் இந்திய மக்களிடையே இப்போது ஆத்திரம் மூண்டிருப்பதாகவும் தெரிவித்தார். செலவைத் தாங்கி நிற்க பிரிட்டிஷ் சர்க்கார் சக்தியற்றுபோய் இந்தியச் செல்வ நிலைமை திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் இந்திய சர்க்காரின் உதவியைக் கேட்டிருந்திருக்க வேண்டும் என்வும் ஆனல் இப்போதைய

நிலைமை இதற்கு முற்றிலும் மாறுபட்டிருப்பதாகவும் இந்தியர் ஏழ்மையில் தவிப்பதாகவும் ஆகவே வரிகளை அதிகமாக்குவது விபரீதமாகிவிடுமோ என்று தாங்கள் அஞ்சுவதாயும் இத்தகைய சந்தர்ப்பத்தில் இந்தியா தனக்கு எந்தவித சம்பந்தமுமில்லாத காரியத்திற்காக செலவைச் சுமக்கவேண்டும் என்று பார்லிமெண்ட் முடிவு செய்திருப்பது விந்தையாகும் என்றும் அவர் காரமாகக் குறிப்பிட்டார். இந்தியாவை இதர குடியேற்ற நாடுகளுக்குச் சமமாக பிரிட்டிஷ் சர்க்கார் பாவிக்கவில்லை என்றும் அவர் அடுத்த கடிதத்தில் முறையிட்டார்.

இந்தியா மந்திரிக்கும் ராஜப்பிரதிநிதிக்கும் இடையே அடிக்கடி தலைகாட்டிய இந்தத் தகராறுகளை யெல்லாம் விளக்கிவிட்டு "இவ்வளவு அழுத்தமாக ஆக்ஷேபங்கள் அறிவிக்கப்பட்டும் அவை யாவும் அலக்ஷியம் செய்யப்பட்டன" என்று ஸ்ரீநிவாஸராகவையங்கார் முடிவில் வெளியிட்டார். இந்த ஒரு வாக்கியத்திலிருந்தே இவரது உள்ளக் கருத்தை ஊகிக்க வேண்டும். இதன்மூலம் முதலில் எந்த இனத்தில் சிக்கனத்தைச் செய்யவேண்டும் என்பதை இவர் இவ்விதம் சூசிப்பித்தார்.

"சீமை ஜவுளிகள்மீது வரி விதிப்பது சம்பந்தமாகக் கிளம்பிய அருவெறுப்பான விவாதம் இந்தியாவின் செல்வ நிலைமைக்கும் இந்தியாவின் தொழில் முறைகளுக்கும் நேரிடக்கூடிய பெரிய ஆபத்தைத் தெளிவு படுத்துகிறது" என்று அடுத்தபடியாக இதே யாதாஸ்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதினர். இதற்கப்புறம் வெளிநாட்டு ஜவுளிமீது இந்திய சர்க்கார் வரிவிதித்த விதத்தையும் அதைக் குறித்து இந்தியா மந்திரிக்கும் இந்தியா சர்க்காருக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தையும் இவர் இந்த அரிய வியாஸத்தில் வெளிப்படுத்தினர். விருத்தாந்தத்தை இந்த சமயத்தில் விவரித்தால்தான் வாதப் பிரதிவாதங்கள் எப்படி இருந்தன என்பதை யறிந்து முடிவு க்காண்பது எளிதாகும். 1875-ம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் ஜவுளிகள்மீது விதிக்கப்பட்ட வரி 5 சத விகிதத்திற்கும் நூல்மீது விதிக்கப்பட்ட வரி மூன்றரை சத விகிதத்திற்கும் குறைக்கப்பட்டது. அச்சமயம் பொக்கிஷ மெம்பராக விருந்த மிஸ்டர் லேங் இந்த வரி மிகவும் சாமான்யமானதாக இருப்பதாகவும் கட்டுப்பாடற்ற

வர்த்தகம் வேண்டும் என்ற கொள்கையை அனுஷ்டிப்ப வர்களும் இதை ஆக்ஷேபிக்க முடியாது என்றும் கட்டுப் பாடற்ற வர்த்தகம் வேண்டும் என்பதற்கு வரி விதிப்பு கூடாது என்பது தாத்பர்யமல்ல எனவும் ஆனால் வருமா னத்திற்காக வரி விதிக்கப்பட வேண்டுமே தவிர ஒரு நாட் டுத் தொழில்களுக்கு காப்பு அளிப்பதற்காக அது விதிக்கப் படக் கூடாது என்பதே அதன் கருத்து எனவும் வாதித் தார். எந்தப் பொருள்மீது சுங்கவரி விதித்தாலும் உள் நாட்டில் உற்பத்தியாகும் அதே பொருள்மீது எதிர் வரி விதிக்கப்பட வேண்டியது அவசியம் என்று கூறப்படுவ தாகவும் ஆனால் வரி மிகவும் குறைவாக விதிக்கப்பட்டு அதனால் வர்த்தகம் பாதகமடையாமல் இருக்கும்போது எதிர் வரி விதிப்புக்கு இடமே இல்லை எனவும் இந்தச் சொற்ப வரியை வசூலிப்பதற்காக ஏற்பாடு செய்வதும் அநாவசியமான செலவில் முடியும் எனவும் அவர் திட மாகத் தெரிவித்தார். பிரிட்டனில் வெளிநாட்டிலிருந்து வரும் தான்யங்கள் மீது 5 சத விகிதத்திற்கு சுங்கவரி வசூ லாவதாயும் இந்தியாவில் ஜவுளிகள்மீது விதிக்கப்படும் வரி யும் இதைப் போன்றதே எனவும் ஆகவே நியாயபுத்தி யுள்ளவர் யாரும் எதிர்க்க முடியாது என்றும் அவர் இந் தச் சந்தர்ப்பத்தில் பேசினார். ஆரம்பத்திலிருந்தே மாஞ் செஸ்டர் பஞ்சாலை முதலாளிகளுக்கு இந்த வரிவிதிப்பு சிறி தும் உத்சாகத்தைத் தரவில்லை. எப்படியாவது பிரிட்டிஷ் சர்க்காரிடம் தமக்கிருக்கும் சலுகையை உபயோகித்து இதை நீக்கிவிட வேண்டும் என்பதில் அவர்கள் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஆகவே 1872-ம் வருஷம் முதற் கொண்டு இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படும் ஜவுளிமீது வரி விதிப்புக்காக மதிப்பிடும் முறை திருத்தப்பட வேண் டும் என்று அவர்கள் முறையிடத் தொடங்கினர். இதை இந்திய சர்க்காருக்கு இந்தியா மந்திரி ஸாலிஸ்பரி பிரபு அறி விக்கையில் இந்தியாவின் செல்வ நிலை எப்போது இடம் அளிக்கிறதோ அப்போது இந்த முறையீடுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கோரினார். மாஞ்செஸ்டர் முதலாளிகள் தங்கள் விண்ணப்பத்தில் இந்த வரி காரண மாகத் தாங்கள் மோட்டா ரக துணிகளை இந்தியாவுக்கு அனுப்பி வர்த்தகம் நடத்துவது பாதிக்கப்படுவதாகவும் இந்தியாவில் நல்ல உயர்ந்த ரகத் துணிகளை உற்பத்தி செய்

வதற்காக அமெரிக்காவிலிருந்தும் எகிப்திலிருந்தும் பருத்தி வரவழைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த வரியினால் பொருளின் விலை அதிகமாகி அதை வாங்குபவருக்கு அசௌகரியமும் ஏற்படுவதாயும் இந்தியத் தொழில்களுக்கு இதன் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டு அங்கு புதிய ஆலைகளை ஆரம்பிப்பதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் இதனால் சர்க்காரின் கொள்கைக்கு ஆபத்து விளைவதாயும் இந்த வரியை உடனே ரத்து செய்ய வேண்டியது அதி அவசியம் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இதற்கப்புறம் 1874-ல் எந்தெந்த வரிகளைக் குறைத்தால் இந்தியாவின் வருமானத்திற்கு பாதகம் வராது என்பதை விசாரித்துத் தெரிவிக்கும்படி ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது. மாஞ்செஸ்டர் முதலாளிகளின் கோரிக்கையை முக்கியமாகக் கவனிக்கும்படியும் கமிட்டிக்கு அறிவிக்கப்பட்டது. இது இந்தியா மந்திரிக்கு அறிவிக்கப்பட்டதும் அவர் இதற்கு இணங்கினார்.* தீர்வை மதிப்பீட்டை திருத்துவதுதான் தற்போது ஒரே மார்க்கம் என்பதை அவர் ஒப்புக்கொண்டு சாத்தியமானபோது வரியை எடுப்பதில் சிரத்தைக் காட்டவேண்டும் என்றும் அறிவித்தார். இந்தியாவின் பருத்தித் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகவும் இது அபிவிருத்தி அடைவதற்கு இங்கிலீஷ் மூலதனமும் தொழில் நுட்பமும் தேவை என்றும் ஆனால் இந்தத் தொழிலுக்குக் காப்புவரி இருக்கும் வரையில் இங்கிலீஷ்காரர் இதைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளாமல் சகாயம்புரிய முன்வராமல் போகலாம் எனவும் குறிப்பிட்டுவிட்டு இந்த 5 சதவிகித வரியைப்பற்றி எல்லோரும் மிகைப்படுத்திப் பேசுவதை தாம் ஒப்புக்கொள்ள வேண்டும் எனவும் அவர் எழுதினார். ஆனால் காப்புவரி நீடிப்புக்கு பார்லிமெண்ட் ஒப்புக்கொள்ளாது எனவும் இதைப்பற்றிப் பார்லிமெண்டில் விவாதம் கிளம்பும்போது பார்லிமெண்ட் இங்கிலீஷ் நலனை உத்தேசித்து இந்திய உரிமைகளைப் புறக்கணித்தனர் என்ற மனோபாவமே எங்கும் பரவியிருக்கும் எனவும் இருதரப்பாரிடையேயும் கொதிப்பு அப்போது அதிகரிக்கும் எனவும் காலக்கிரமத்தில் இது மேலும் விருத்தியாகுமெனவும் இதைத்

*15. 7. 1875

தவிர்க்க வரியை நீக்கி விடலாமென்றும் அவர் வெளியிட்டார். இந்தக் கடிதத்தைப்பற்றி ஸ்ரீநிவாஸராகவையங்கார் தெரிவித்திருக்கும் அபிப்பிராயத்தை இங்கே பொருத்த வேண்டியது அவசியமாகும்: "ஸாலிஸ்பரி பிரபு எழுதிய கடிதத்தின் அர்த்தத்தில் சந்தேகம் இருப்பதற்கில்லை. நாட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவுக்கு வரி விதிப்பு இல்லை; ஆயினும் மாஞ்செஸ்டர் முதலாளிகள் அதற்கு சம்மதிக்கவில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டும் அவர்களது கக்ஷியையே ஆதரிக்கும் என்பது நிச்சயம். இந்திய முதலாளிகள் இது விஷயமாகத் தகராறுபண்ண ஆரம்பித்துவிட்டால் அது இருதரப்பாரிடையேயும் அதிக மனஸ்தாபத்திற்கு இடம் அளிக்குமாதலால் அதற்கு முன்னமேயே தைரியமாக இந்த வரியை ரத்து செய்யக் கூடாதா?" இதுவே ஸாலிஸ்பரியின் கருத்து. நார்த்ப்ருக் சர்க்கார் இத்தகைய வார்த்தைகளை கேட்டு மயங்கவில்லை. இந்தக் கடிதம் இந்தியா வந்து சேருவதற்குப் பல நாட்களுக்கு முன்னமேயே இந்தச் சுங்கவரிகள் விஷயமாக நார்த்ப்ருக் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்; இதன் காரணமாக சீமைத் துணிகள்மீது சீக்கிரத்தில் வரி எடுக்கப்படுமென்று எதிர்பார்க்க முடியாதபடி இருந்தது. முந்திய வருஷத்தில் நியமிக்கப்பட்ட பாதுகாப்பு வரி பரிசீலனைக் கமிட்டியார் இந்த வருஷாரம்பத்திலேயே இந்தியசர்க்காருக்குத் தங்கள் சிபாரிசுகளை சமர்ப்பித்திருந்தனர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு வரிவிகிதம் 5 சத விகிதத்துக்கு குறைக்கப்பட்டும் அது மாஞ்செஸ்டர் முதலாளிகளின் கோரிக்கையைத் திருப்தி செய்யவில்லை, என்றுஇவர் எழுதினர்.

காப்பு வரிக் கமிட்டியாரின் சிபாரிசுகள் பிரகாரம் செய்யப்பட்ட திருத்தங்கள் காரணமாக இந்திய சர்க்கார் பிரதி வருஷமும் 320,000 பவுன் வருமானத்தைப் பறி கொடுக்க வேண்டி வந்தது. விதேசித் துணிகள்மீது விதிக்கப்பட்ட வரியினல் இங்கிலீஷ் தொழிற்சாலைகளுக்குக் கெடுதல் சம்பவித்திருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் எனவும் ஆனல் அதன்மீது மட்டுமே குற்றத்தைக் காணக் கூடாதெனவும் இந்தியாவில் மோட்டா துணிகளைச் செய்வதற்கே அதிக வசதிகள் இருப்பதாகவும்

அவைதான் அங்கு அதிகம் விற்பனையாகும் எனவும் ஆகை யால் இந்த வரியை நீக்கிவிட்டால் எல்லாம் சாதகமாகி விடும் என்று எதிர்பார்ப்பது பிசகு எனவும் ஒரு பகுதியில் போட்டி ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக இந்த வரியை நீக்கிவிட்டு மொத்த வருமானத்தை இழப்பது நியாயமல்ல எனவும் ஆகவே இது விஷயத்தில் இந்தியாவின் செல்வ நிலையைப் பற்றி சிந்திக்கவும் அவசியம் இல்லை எனவும் கமிட்டியார் தெளிவுபடுத்தினர். இதே சமயத்தில் இந்திய உற்பத்திகள்மீது எதிர்வரி விதிப்பதும் உசிதமாகாது என வும் அறிவித்தனர். 1875-ல் ராஜப்பிரதிநிதி சட்டசபை இந்த வரிவிதிப்பைப் பற்றி ஆலோசிக்கக் கூடியபோது பல அங்கத்தினர்கள் இந்தியா ஏழைநாடு என்பதையும் அதிகபக்ஷமான எல்லையை வரி விதிப்பு எட்டி விட்டதா யும் ஆகவே மேலும் புதிய வரிகளைப் போட்டு இந்த வரி களை எடுத்துவிட முயலுவது ராஜீயக் கிளர்ச்சியில் முடி யும் என்றும் எதிர் வரிகளை விதித்தால் அவற்றை வசூலிப் பதில் சர்க்காருக்கு மேலும் அதிக செலவுதான் ஏற்படு மென்றும் வாதித்தனர். இந்தியாவின் நலனையே முக்கிய மாகக் கருதவேண்டும் என்று பலர் அச்சமயம் முறையிட் டனர். அயல் நாட்டு ஜவுளிமீது போடப்பட்ட வரி இனத்திலிருந்து 800,000 பவுன் பிரதி வருஷமும் கிடைப் பதாயும் ஆகவே இவ்வளவு பெரிய தொகையை இழப்பது நாட்டின் செல்வநிலை சீர்குலையச் செய்யும் என்றும் அவர் கள் ஒருமுகமாக அபிப்பிராயப் பட்டனர்.

இதற்கப்புறம் ஸாலிஸ்பரி பிரபுவுக்கும் நார்த்ப்ருக் பிரபு வுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்து மிகவும் ரஸ மானது. 'தம்மைக்கேட்காமல் புதிய வரிச் சட்டத்தை எப்படி இந்திய சர்க்கார் நிறை வேற்றலாம் என்றார் இந்தியா மந்திரி. காப்பு வரிகளின் சகாய மின்றியே இந்தியத் தொழில்கள் அபிவிருத்தியாகி வரும்' போது அந்த வரிகளை எடுப்பதோ, குறைப்பதோ அவற்றுக்குப் பாதகமாகாது என்றும் தடபுடலாக அவர் எழுதினர். ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த வரியை எடுத்து விட சர்க்கார் திட்டம் போடவேண்டும் என்றும் அவர் நிர்ப்பந்தித்தார். இவ்வளவும் போதா தென்று தம் உதவிக்காரியதரிசியான ஸர் லூயி மாலெட்

இந்தியாவுக்குப் போய் செல்வ நிலே சம்பந்தமாக ராஜப் பிரதிநிதிக்கு ஆலோசனே அளிப்பார் என்றும் ஸாலிஸ்பரி பிரபு அறிவித்தார். ஸர் லூயி தேக அசௌக்கியம் காரண மாக இந்தப் பிரயாணத்தைக் கைவிட நேர்ந்தது. திரும் பவும் இந்திய சர்க்கார் சிறிதும் விட்டுக்கொடுக்கவில்லே. புதியவரி விதிப்புக்கோ அல்லது காப்புவரியை ரத்துசெய்ய காலவரையறையைக் குறிப்பிடவோ அவர்கள் மறுப்பை வெளியிட்டனர். இங்கிலாந்தில் ஒரு சிலர் இதை வெறுக்கின்றனர் என்பதற்காகத்தமது சர்க்கார் இந்திய ரின் நலனேக்காற்றில் பறக்க விட முடியாது என்றும் திடமாகத் தெரிவித்தனர். ஸாலிஸ்பரி பிரபுவின் பிடிவாத புத்தியும் தளரவில்லே. 1876ம் வருஷம் மே மாதம் 31ம் தேதி யன்று எழுதிய கடிதத்தில் தமது தீர்மானத்தை அவர் வெளியிட்டார். இந்த வரி நிரந்தரமாக இருக்காது என்பதை இந்தியா சர்க்கார் கட்டாயம் வெளியிட வேண்டும் என்று அவர் நிர்ப்பந்தித்தார். ஸாலிஸ்பரி பிரபு செய்த முடிவைப் பற்றி ஸ்ரீநிவாஸராகவையங்கார் பின் கண்டபடி குறிப்பிட்டார்: இந்திய ஜவுளித் தொழிலின் எதிர்காலம் மகத்தானது, மாஞ்செஸ்டர் ஜவுளிகளே வெருட்டி அதன் ஸ்தானத்தைக்கைப்பற்றக் கூடியது, என்று ஸாலிஸ்பரி பிரபு கூறியதை ஒப்புக் கொண்டால் 'தானுகவே செழிக்க முடியாத ஒரு தொழி லுக்கு இந்த வரி கொஞ்ச காலத்திற்கு புத்துயிர் அளிக்கும்' என்ற பீதி ஆதாரமற்ற தாகும். இந்த வரியை ரத்துச் செய்தல் அர்த்த மற்ற குரோதத்தைக் கண்டு பின் வாங்குவதற் கொப்பாகும். இந்த முடிவு காரணமாக நார்த்ப்ரூக் உடனே ராஜீநாமாச் செய்தார்."

லிட்டன் பிரபு ராஜப் பிரதிநிதியாக வந்த வுடனேயே இந்த சீமைத் துணிகளுக்கு விதிக்கப்பட்ட வரியை எடுத்துவிட இயல வில்லே. நாட்டில் பஞ்சமும் வெள்ளி யின் விலே குறைந்து விட்டதால் ஏற்பட்ட குழப்பமும் அவரைக்கவலேயில் ஆழ்த்தி விட்டனவாதலால் 1877ம் வருஷத்திய வரவு செலவுத்திட்டத்தை சபை முன்பு சமர்ப்பிக்கையில் பொக்கிஷ மெம்பரான ஸர் ஜான் ஸ்ட்ராச்சி இதை பற்றி பிரஸ்தாபிக்க வேண்டி வந்தது. அடுத்த வருஷத்தில் லிட்டன் சர்க்கார் இந்த வரி விஷய

மாகத் தாங்கள் எடுத்துக்கொள்ளப் போகும் நடவடிக்கையைப் பகிரங்கமாக்கினர். அதில் காப்பு வரிகளால் விளையும் தீமைகளையும் கட்டுப்பாடற்ற வர்த்தக முறையினால் ஏற்படும் அனுகூலங்களையும் சர்க்கார் விஸ்தரித்துக் கூறுவதற்கு அவசியமே இல்லை என்றும் பிரிட்டிஷ் சர்க்காரையே இந்திய சர்க்கார் பின் பற்ற வேண்டும் எனவும் நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் எந்த வரியும் விதிக்கப்படக் கூடாதென்றும் எந்த வரியும் வருமானத்தை உத்தேசித்துத் தான் விதிக்கப் படவேண்டும் என்பதும் வெளிநாட்டுப் பொருள்களுக்கு வரி விதிக்கப்பட்டால் எதிர் வரியும் உடனே போடப்பட வேண்டும் என்பதும் கூடிய வரையில் மூலப் பொருள் களுக்கு எந்த விதமான வரியும் விதிக்கப்படக் கூடாதென்பதும் போதிய வருமானத்தைக் கொண்டு வரக் கூடிய பொருள்கள் மீதே வரிபோடப்பட்டு ஒரு நாட்டின் ஏக போக உற்பத்தி என்று சொல்லத்தக்க பொருள் கள் மீதே ஏற்றுமதி வரி விதிக்கப்படலாம் என்பதும் இந்திய சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் இந்தக் கொள்கைகள் இந்தியாவுக்குப் பல விதத்திலும் பொருத்தமாயிருப்பதாகவும் இந்திய சர்க்கார் கூறினர். இந்தியாவில் உற்பத்திக்கு நல்ல வசதிகள் இருந்த போதிலும் வெளி நாட்டிலிருந்தே அதற்கான தொழில் களை நிர்வகிப்பதற்குத் தேவையான மூலதனம் வர வேண்டியிருப்பதாகவும் ஆகவே இந்தியா அதிக மதிப்புள்ள பொருள்களை ஏற்றுமதி செய்வதாயும் இது தான் ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு அளிக்கும் கப்பம் என்று பொருளாதார நிபுணர்களால் கூறப்படுவதாகவும் இந்தியாவின் வெளி நாட்டு வர்த்தகம் இப்போது அதிகம் இல்லை எனவும் அவர்கள் அறிவித்தனர்.

"இந்தியா ஏழ்மை மிகுந்த நாடு: அங்கு பண்டைய நாளைய கொள்கைப் பிரகாரம் தொழில் நடக்கிறது. இது வரையும் அங்குள்ள ராஜீய நிலையும் அந்த நாட்டு வசதிகளை மிகவும் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும் என்பதையும் வெளி நாட்டுப் பொருள்கள் அங்கு அதிகம் தேவையென்பதையும் புலப் படுத்துகின்றன. இந்தியாவில் உற்பத்தி எவ்வளவு? அங்கு எவ்வளவு செலவா

கிறது ? வரிவிதிப்புக் கொள்கைகளை அனுசரித்து எந்த அளவுக்கு அங்கு ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் வரிகளைப்போடலாம் ? தற்போதய வரிகள் இந்தக் கொள்கைகளுக்கு எவ்வளவு தூரம் ஒத்திருக்கின்றன ? இந்தியாவின் அமைப்பும் விஸ்தீரணமும் அங்கு மனிதனுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியும் என்பதையே காட்டுகின்றன. ஆகவே அங்கு இறக்குமதியாகும் பொருள்கள்மீது வரிவிதிக்கப்பட்டால் அது காப்பு வரிகளை விதிப்பதற் கொப்பாகும். உள்நாட்டுப் பொருள்கள் மீதும் எதிர் வரிப்போட்டால்தான் இதைத் தடுக்க இயலும். இந்தியாவில் எதிர்வரிகளைப் போட்டால் அவற்றை வசூலிப்பது மிகவும் சிரமமான காரியம். அதனால் பிறகு அநாவசிய உபத்திரவமும் அருவெறுப்பும் தலைகாட்டும். இந்த ஒரு காரணமே சுங்கவரிகளை நிரந்தரமாகப் போடக்கூடாது என்பதற்குத்தக்க ஆக்ஷேபத்தை எடுத்துக்காட்டுகிறது. இப்போது வரிக்குட்படுத்தப்பட்ட பொருள்கள் அனைத்தையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யமுடியுமாகையால் அங்கு இறக்குமதி வரி அவசியம் காப்பு வரியாகத்தான் மாறிவிடும். இந்திய மக்கள் ஆடம்பரத்திற்கு அறிகுறியான பொருள்களை உபயோகிப்பதில்லை. அவற்றை வாங்குவதற்கு அவர்களுக்கு சக்திகிடையாது. ஆகவே தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்களோ அல்லது வாழ்க்கைக்கு அவசியமான வஸ்துக்களோ தான் இங்கு வருகின்றன." தமது வியாஸத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்த அறிக்கையை விவரமாக வெளியிட்டு இதைப் பற்றித் தமது கருத்தையும் வெளியிட்டார்.

"கட்டுப்பாடற்ற வர்த்தகக்கொள்கை இந்தியாவுக்கு விசேஷமாகப் பொருந்தும் என்பதற்கு இந்தியா சர்க்கார் காட்டியுள்ள காரணங்கள் விநோதமா யிருக்கின்றன. தொழிலுக்குப்பாதுகாப்பு வேண்டும் என்று வாதிப்பவர்கள் எத்தகைய காரணங்கள் எடுத்துக் காட்டுவரோ அதே மாதிரி இவை இருக்கின்றன."

இந்தியா சர்க்கார் இதற்கப்புறம் 51,400 பவுன் வருமானத்தை இழக்கவும் சம்மதித்தனர். முரட்டுத்துணிகள் மீது போடப்பட்ட வரி அடுத்தபடியாக ரத்து செய்யப்

பட்டு இந்திய சர்க்கார் இதன் காரணமாக 150,000 பவுன்களை ஒவ்வொரு வருஷமும் இழக்க ஒப்பினர். இதனுல் இந்தியாவில் உற்பத்தியாகும் முரட்டுத் துணிக்குப் போட்டி அதிகமாகிவிட்டது. வெளி நாட்டிலிருந்து குறைந்த விலைக்கு அவை இங்கு வந்தன. இதன் பின் இந்திய சர்க்காரின் நடவடிக்கையை ஆதரிப்பதற்காக காமன்ஸ் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது, "இந்தியாவில் வெளி நாட்டுத் துணிகளுக்கு விதிக்கப்படும் இறக்குமதி வரி இந்தியாவில் அவற்றை வாங்குவோருக்கும் முதலாளிகளுக்கும் கூட நியாயமாக இராததால் அது உடனே ரத்தாக வேண்டும். பிரிட்டிஷ் சர்க்காரின் தீர்மானத்திற்கொப்ப சமீபத்தில் இந்த வரிகளைக் குறைத்த இந்தியா சர்க்கார் இது பூரணமாக நீக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்."

இது இவ்வளவுடன் நிற்கவில்லை. இந்த வரியை எடுத்துவிட லிட்டன் பிரபு கங்கணம் கட்டிக் கொண்டார். 1879-ம் வருஷம் வெளியிட்ட அறிக்கையொன்றில் அவர் தமது கக்ஷியை சாதித்துக்கொள்ளப் பெரிதும் முயன்றுர். ஆப்கன் யுத்தத்தில் இந்தியா ஈடுபட்டு அதிக செலவை மேற்கொண்டிருக்கையில் இந்த வருமானத்தை இழப்பதா என்றனர் அநேகர் இந்த நாட்டில் அச்சமயம். யுத்தம் நடந்து கொண்டிருப்பதை ராஜப்பிரதிநிதி உணராமல் இல்லை. ஆனுல் இதற்காகத் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமல் எவ்வளவு காலம் ஒத்திப் போட்டுக் கொண்டே போகலாம்? இந்த வரிகள் நீடிப்பதால் இந்திய வர்த்தகமே பாதகமடைகிறதல்லவா? நாணயமாற்று விகிதம் பிரதிகூலமாகிவிட்ட போதிலும் சுமார் 200,000 பவுன் வருமானத்தைத் துறப்பதால் அதிக நஷ்டம் ஏற்பட்டுவிடாது—இவ்விதம் இந்திய சர்க்கார் கக்ஷியாடினர்.

> "இத்தகைய வாதம் சரிவரத் திருப்தி அளிக்கமாட்டா. இந்த நடவடிக்கையை ராஜப்பிரதிநிதி சபை அங்கத்தினர்களும் மற்றும் இதரர்களும் பலமாகக் கண்டித்தனர். நிர்வாக சபையில் பெரும்பான்மையானவர்கள் இதற்கு எதிராக வோட் செய்தனர். தமது விசேஷாதிகாரத்தைப் பிரயோகித்து ராஜப்பிரதி

நிதி தமது உத்தேசத்தை அமுலாக்கினர். இதற்காக சட்ட வரம்பையும் மீறி அவர் தமது அதிகாரத்தை உபயோகித்தார்."

இவ்விதம் குறிப்பிட்டுவிட்டு ஸ்ரீநிவாஸராகவை யங்கார் ராஜப்பிரதிநிதி சபையைச் சேர்ந்த விட்லி ஸ்டோக்ஸ், ஸர் அலெக்ஸாண்டர் அர்பத்நெட், ஆகியோர் எவ்வளவு ஆழமாகத் தங்கள் ஆக்ஷேபத்தை வெளியிட்டனர் என்பதையும் விஸ்தாரமாக் விவரித்தார்.

"இந்தியாவிலுள்ள ஐரோப்பிய, சுதேசி பத்திரிகைகளும் இந்த வரி ரத்து செய்யப்பட்டதை ஒரு முகமாகக் கண்டித்தன. டைம்ஸ் ஆப்இந்தியா பத்திரிகையும் சமீபத்தில் நிகரிலாத அநியாயச் செயல் என்று இதைப்பற்றி அபிப்பிராயம் கூறியிருக்கிறது. ஸர் ஜான் ஸ்ட்ராச்சி தாம் எழுதிய 'இந்தியாவின் செல்வமும் மராமத்து காரியங்களும்' என்ற புத்தகத்தில் இந்த நடவடிக்கையினுல் எங்கு பார்த்தாலும் கிளம்பிய கொதிப்பைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில் 'இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தராயினும் சரி உத்தியோகப் பற்றில்லாதவராயினும் சரி கட்டுப்பாடற்ற வர்த்தகக் கொள்கையை அனுஷ்டித்து வரிகளை விதிக்கும் முறையை எப்போதும் விரும்பியதில்லை. இந்தியாவில் படித்தவர்களும் பணக்காரர்களுமான சுதேசிகளுக்கும்கூட இத்தகையப் பிரச்னைகளைக் குறித்தவரையில் அடிப்படையான அம்சங்களைப்பற்றி சிறிதும் ஞானம்கிடையாது. அப்படி அறிந்தவர்கள் வெகு சொற்பம். இந்தத் துணி வரிகளை ரத்துசெய்ய வேண்டும் என்று முறையிட்டவர்களுக்கு ராஜீய நோக்கமோ கக்ஷிப்பற்றுதலோ தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும் என்று துவேஷபுத்தியுடன் இவர்களில் அநேகர் அறிவிக்கவும் தயங்கவில்லை' என்று எழுதியிருக்கிருர். சுதேசிகளைப் பற்றிய பிரஸ்தாபத்தைப் புறக்கணித்தாலும்கூட ராஜப்பிரதிநிதி சபையில் இருந்த தமது சகாக்களைப்பற்றி ஸர் ஜான் ஸ்ட்ராச்சி இவ்விதம் எழுதியிருப்பது அழகல்ல. அவர் விடுத்திருக்கும் விளக்கமும் திருப்திகரமானது என்று ஒப்புக்கொள்ளத் தகுந்ததல்ல."

இந்த வரிகளை ஸாலிஸ்பரி பிரபுவும் லிட்டன் பிரபுவும் ஏதோ ரகசிய நோக்கத்தைக்கொண்டே நீக்கி விட்டனர் என்ற பொதுஜன மனோபாவம் நியாயமானாலும் சரி அநியாயமானாலும் சரி இந்தியா வின் நலனைப் பிரதீக்ஷித்து இந்த வரிகள் ரத்து செய் யப் பட்டது பெரிய தவறு என்பதே என் அபிப்பிரா யம். கட்டுப்பாடற்ற வர்த்தக முறை விஷயத்தில் இரண்டு விதமான கக்ஷிகள் இருக்கின்றன. பாது காப்பு தீங்கானபோதிலும் சாதாரணமாய் அது அப் படியல்ல என்பதும் ஒரு சில சந்தர்ப்பங்களில் தாற் காலிகமாகவாவது அதற்கு ஏற்பாடு பண்ணவேண் டும் என்பதும் ஒருசாரார் கருத்து. மற்றொரு சாரார் அதனால் அனர்த்தம் தவிர வேறு இல்லை என்கின்ற னர்.''

இவ்விதம் தெரிவித்துவிட்டு ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஜே. எஸ். மில், ஹென்ரி ஸிட்ஜ்விக் ஆகிய அர்த்த சாஸ் திர நிபுணர்கள் கட்டுப்பாடற்ற வர்த்தகக் கொள்கை யைப்பற்றி வெளியிட்ட கருத்துக்களை எடுத்துக்கூறி பாதுகாப்புவரி விதிப்புக்கு எந்தெந்த காரணங்கள் இருக்க வேண்டுமோ அவை இந்தியாவுக்கு சாதகமாக இருந்ததாக வும் எழுதினார்.

இந்தியாவில் பருத்தி உற்பத்தியாகும் பிரதேசத் திற்கருகே யந்திரங்களுக்கு விசை யளிக்கும் கரியும் கிடைப்பதாயும் பொருள் விற்பனைக்கு வசதி இருப்ப துடன் தொழிலாளருக்கு அதிக சம்பளம் கொடுக்கப் படுவதில்லை என்றும் ஆகவே இந்திய முதலாளி களுக்கு விசேஷ சௌகரியங்கள் இருப்பதாயும் அவர்களுடன் யாரும் போட்டிபோட முடியாது எனவும் ஸாலிஸ்பரி குறிப்பிட்டார். ஆகவே ஒரு பல ஹீனமான தொழில் நிரந்தரமாகப் பாதுகாப்பை வேண்டி வருகிறது என்று இதற்கப்புறம் கூற லாமா? ஆனால் தேர்ச்சியும் அனுபவமும் கொண்ட வர்களும் இந்தியாவின் கைத்தறி நெசவுப் பொருள் களை விரட்டிவிட்டு தங்கள் பொருள்களின் விற்ப னைக்கே வழி தேடிக் கொண்டவர்களுமான இங்கி லீஷ்காரர்களுடன் இந்திய முதலாளி போராடவேண்

டிய நிலைமை ஏற்பட்டதுதான் கண்கூடு. 'தங்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தை மதியாமல், நீண்டகால அப்பியாஸத்தாலும் அனுபவத்தாலும் தேர்ச்சியடைந்தவர்களுக்கொப்பாக, புதுரகத் துணிகளை இந்திய முதலாளிகள் தயாரிக்க முடியாது' ஆனபடியால் இந்திய சர்க்கார் தேசத்தின் நன்மையை உத்தேசித்து இந்த வரியை எடுத்திருக்கக் கூடாது. காலக் கிரமத்தில் இந்தியரின் முயற்சி வெற்றிபெறும் என்பதும் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால் இதைச் சிறிது காலம் நீடித்திருப்பது அவசியமாகும். கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்பதற்கான வாதத்தை ஸாலிஸ்பரி பிரபு தீவிரமாகக் கையாளவில்லை, இந்த வரி மிகவும் சொற்பமாதலால் இதனுல் அதிக பாதுகாப்பு இருக்கும் என்பதை அவர் ஒப்புக் கொள்ளாமையே இதற்கு காரணமாம். ஆனுல் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் தொடர்பை ஏற்படுத்தியுள்ள வர்த்தகம் க்ஷீணித்துப் போவதை பெரும் கலக்கத்துடன் கவனியாமல் இருக்க முடியாது என அவர் குறிப்பிட்டிருப்பதே இதற்கு உண்மையான காரணமாகும். இந்த வாதத்திற்கும் கட்டுப்பாடற்ற வர்த்தகக் கொள்கைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. ஸாலிஸ்பரியின் வாதத்தை யேற்ருல், இந்தியாவில் நெசவுத் தொழில் நசித்து அதனுல் பெரும்பாலான மக்களுக்குக் கஷ்டம் ஏற்படுமே என்பதையும் இந்தியா மந்திரி அதிகக் கவலையுடன் யோசித்திருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறில்லை. இந்திய சர்க்கார் கூறிய காரணங்களும் நிற்கமாட்டா: இந்தியாவில் ஏராளமான மூலப் பொருள்கள் இருப்பதாகவும் ஆனுல் அது ஏழ்மை மிகுதியால் பண்டையகால வர்த்தக முறைகளைப் பின்பற்றி வருவதாயும் இவை காரணமாகவும் அங்குள்ள ராஜீய நிலைமைபற்றியும் அதன் வசதிகளை சர்க்கார் மிகவும் சிக்கனமாக உபயோகித்துவர வேண்டியிருப்பதாகவும் இந்திய சர்க்கார் கூறிவந்திருக்கிறது. சிக்கன நடவடிக்கையாகத்தான் போலும் ஜவுளி வரிகளை எடுத்துவிட சர்க்கார் தீர்மானித்துவிட்டிருக்கிறது!

கட்டுப்பாடற்ற கொள்கையை ஒப்புக் கொள்ளும் நாட்டார் தங்கள் நாட்டினரின் செல்வத்தை அபி விருத்தி செய்வதில் முனையவேண்டும் என்பதே அக்கொள்கையின் அடிப் படையான அம்சமாகும். இந்தக் கொள்கைப் பிரகாரமே ஒவ்வொரு நாட்டிலும், அதன் சீதோஷ்ணம், பூகோள நிலைமை, பூமியின் தரம் இவற்றுக் கொத்த விதத்தில் முதலாளிகள் தொழில்களை நடத்தி பொருள்களை உற்பத்திபண்ண வேண்டும். பிற நாடுகளிலிருந்து தங்களால் அவ்வளவு சுலபமாக உற்பத்தி செய்ய முடியாத வஸ்துக்களைத் தங்களுடைய வஸ்துக்களுக்குப் பதிலாக வரவழைத்துக் கொள்ள வேண்டும். இதனால் தொழில்களும் வர்த்தகமும் செழித்திருக்க வேண்டும். எல்லா நாடுகளுக்கும் அனுகூலம் பிறக்க வேண்டும். எல்லாத் தொழில்களிலும் போட்டி தலைகாட்டும்போது சரஸமான விலைக்குச் சில பொருள்கள் கிடைக்குமாயின் அவற்றுடன் போட்டியிடுபவர்கள் அந்தத் தொழிலைத் துறந்துவிட்டு தங்களுக்கு லாபகரமான இதர தொழில்களையே மேற்கொள்ள வேண்டும் என்பதும் இந்தக் கொள்கையின் மற்றொரு அடிப்படையான அம்சமாகும். இவ்விதம் அவசியம் ஏற்படும்போது புதிய தொழில்கள் முளைத்துச் செழிக்க வேண்டும். மூலதன வசதி இருப்பதாகச் சொல்லிக்கொள்ள முடியாத ஒரு நாட்டில் பரம்பரையாகத் திறமை வாய்ந்த தொழிலாளர்களே இருந்து, அங்கு சில வகுப்பார் சில குறிப்பிட்ட தொழில்களை நடத்த வேண்டும் என்ற சம்பிரதாயமும் இந்திய சர்க்கார் குறிப்பிட்டபடி அங்கு பண்டையக் காலத்துக் கொள்கைகளும் நிலை பெற்றிருக்குமானால் அந்தப் பிரதேசத்தில் கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை நிர்ப்பந்திக்க முடியாது. தொழில்களில் பயிற்சி பெற்ற சமூகத்தாரைவிட மேற்குறிப்பிட்ட சமூகத்திற்கே கட்டுப்பாடற்ற வர்த்தகம் வேண்டும் என்று கூறுவது உண்மையை மறைத்துப் பேசுவதற்கொப்பாகும். இங்கிலாந்துக்கு இந்தியா கப்பம் அளிப்பதாக இந்திய சர்க்கார் தெரிவித்திருப்பதற்கும் இந்த பிரச்னைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டம்; அல்லது

கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை நடத்துவதால் கப்பம் கட்டும் இந்த நிலைமை எப்படி மறைந்து போகும் என்பதை உணருவதும் சிரமம்தான்.

இங்கிலாந்து ஒன்றுதான் காப்புவரி பற்றியதில் இந்தக் கட்டுப்பாடற்ற வர்த்தகக் கொள்கையைக் கடைபிடித்திருக்கிறது என்பது குறிப்புக்குரிய தாகும். பிரான்ஸ், ஜெர்மனி, யுனைடெட் ஸ்டேட்ஸ் அறிவாற்றல் இராத நாடுகளா? இவை காப்புவரிகளை விதித்து வருகின்றன. இந்த நாட்டு ராஜதந்திரிகள் செய்கை தற்கொலைக் கொப்பானது என்றும் இதை ஆதரிக்கும் அர்த்த சாஸ்திர நிபுணர்களைப் பின்பற்று வது கண்மூடித்தனமான காரியம் என்றும் அடிக்கடி எதிராளிகள் கூறுகின்றனர். ஜவுளிவரி விஷயமாகக் கிளம்பிய விவாதத்தில், சில விசேஷ சந்தர்ப்பங்களில் காப்புவரி விதிப்பதன் அவசியத்தை மில் எடுத்துக் காட்டியிருப்பது ஒப்புக்கொள்ளத் தக்கதா அல்லவா என்பதைப் பற்றிப் பேச்சே எழும்பவில்லை. நார்த் ப்ரூக் பிரபு அறிவித்தபடி ஜவுளிமீதும் இதர பொருள் கள்மீது போலவே சொற்ப வரி போடப்பட்டது. இந்த வரியில் ஒரு சிறிய பாகம்தான் நாட்டுத் தொழி லுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அளவுக்கு இருந்திருக் கிறது. 5 சத வரி விதிப்பினால் இந்தியாவுக்குச் சாதக மாக வர்த்தக நிலை மாறக்கூடுமாயின் மாஞ்செஸ்ட ரில் தொழில் நிலைமை மிகவும் மோசமாக அல்லவா இருந்திருக்க வேண்டும்! நாணயமாற்று விகிதம் குறைந்து போனபோதே அது நசித்துப்போயிருக்க வேண்டும். ஆனால் பம்பாய் வியாபாரி ஒருவர் லிட் டன் பிரபுவுக்கு எழுதியதுபோல மாஞ்செஸ்டர் ஆலை களுக்கும் இந்திய ஆலைகளுக்கும் போட்டி ஏற்படா மல் இந்திய ஆலைகளுக்கும் இந்தியக் கைத்தறிகளுக் கும் போட்டி ஏற்பட்டது என்பதுதான் உண்மை.''

ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்திய சர்க்காரின் போக் கைக் கண்டிப்பதற்கு அஞ்சவில்லை. அவர்கள் வகுத்த தர்மம் எவ்வளவு அதர்மமானது என்பதைச் சுட்டிக்காட் டவும் இவர் பின்வாங்கவில்லை. மேனாட்டு மேதாவிகளின் ஆதாரத்தைக் கொண்டே சர்க்காரின் செயல் அர்த்தமற் றது என்பதை இவர் நிரூபித்தார். சர்க்கார் உத்தியோகத்

தில் மேலும் உயர் பதவிகளை எட்டுவதற்கு யோக்கியதை யுள்ளவர் ஒருவர் சர்க்காரின் நடவடிக்கைகளைப் பற்றி குறைகூறுவதாயின் அவருக்கு எவ்வளவு துணிவும் தைரியமும் இருக்க வேண்டும். நேர்மையில் நோக்கமும் நியாயத்தில் நம்பிக்கையும் கொண்டவர்தான் அவ்விதம் முன்வர முடியுமன்றோ!

இந்தியாவின் செல்வ நிலைமையை விமர்சித்து இவர் எழுதிய இந்த வியாஸம் கமிட்டி அங்கத்தினர்கள் அனைவருக்கும் திருப்தி அளிக்கவில்லை. தலைவர் ஸர் சார்லஸ் எலியட்டும் ரானடேயும் அதை வெகுவாகச் சிலாகித்தனர். கமிட்டியில் சென்னை மாகாணத்தின் பிரதிநிதியாக இருந்த ப்ளிஸ் மட்டும் இவ்விருவர் கூறியபாராட்டு மொழிகளைச் சிறிதும் சகிக்கவில்லை. இவருக்குச் சில்லறை உபத்திரவங்களைப் புரியவும் அவர் ஆசைப்பட்டார்.

மஹாதேவ கோவிந்த ரானடே சாமான்ய புருஷரல்ல: பரந்த நோக்கமும் விரிந்த லக்ஷியங்களும் கொண்டவர் அவ்வுத்தமர். மதிப்பிருக்கும் இடத்தில் மனமாற மரியாதைச் செய்யவல்லவர். அவர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் இருக்கும் அறைக்கு ஒருநாள் திடீரென்று நேரில் வந்து தமது மகிழ்ச்சியை அறிவித்தார். பொருளாதார சாஸ்திரத்தில் இவரைப் போல் தெளிவான ஞானத்தையும் அதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய திறமையையும் ஒருங்கே வாய்த்தவரைத் தாம் இதுவரைக் கண்டதே இல்லை என்றும் கூறிவிட்டு தமது கமிட்டியின் பொறுப்பு இப்போது வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டதாயும் தெரிவித்து விட்டுப் போனார்.

எலியட் கமிட்டி கூட்டப்பட்ட சமயத்தில் அது அநேக பிரச்னைகளைப் பரிசீலிக்க வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது. இந்தியாவின் செல்வ நிலைமை குறித்து அது விமர்சனம் செய்யும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் போகப் போக அதன் கடமை குறுகிக் கொண்டே வந்தது. இதில் தலையிடக் கூடாது, அதில் தலையிடக் கூடாது என்றெல்லாம் இந்திய சர்க்கார் நிர்ப்பந்திக்கத் தொடங்கினர். சாத்தியமான அளவுக்கு சம்பள விகிதத்தைக் குறைத்து உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தி மாகாண சர்க்கார்களுக்கு மத்திய

சர்க்கார் அளிக்கும் மான்யம் பற்றிப் பேரம் பேசுவது மட்டுமே இதன் பொறுப்பாகியது. கமிட்டி மெம்பர்களில் ஒருவரான டாக்டர் ஹண்டர் தாம் எழுதிய கடிதமொன்றில் "டபரின் பிரபு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட விசேஷக் கமிட்டியில் நான் இடம் பெற்றேன். ஆனல் இப்போது அசையாமல் இருந்த இடத்தில் இருப்பதைத் தவிர வேறு வழியைக் காணோம். இந்த நிலை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மற்ற மெம்பர்கள் என்ன எண்ணிய போதிலும் நான் இந்த விசாரணையினல் பலன் பிறக்கும்படிச் செய்ய முயலுவேன்" என்று தெரிவித்தார்.* ராஜப்பிரதிநிதி காரியதரிசிக்கு எழுதிய மற்றொரு கடிதத்திலும் அவர் மனசில் இருப்பதை ஒளிக்கவில்லை. பொதுஜனப் பிரதிநிதிகளிடம் அதிகாரம் மாறுவதற்குப் பூர்வாங்கமானவை இத்தகைய கமிட்டிகள். எங்கு கஷ்டம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து பொதுஜன அபிப்பிராயத்தை சர்க்காருக்குத் தெரிவிக்கும் பொறுப்பு இவைகளுக்கே உண்டு. டபரின் பிரபு சட்டசபையில் பேசிய பெருந்தன்மையான வார்த்தைகளுக்கேற்ப செல்வ நிலைக்கமிட்டி வேலை செய்யவில்லை. மாகாண சர்க்கார்களுக்கு அளிக்கப்படவேண்டிய மான்யங்களைப் பரிசீலனை செய்யும் விஷயத்தில் அது பொக்கிஷ இலாகாவுக்கே அதிக ஒத்தாசைப் புரிந்தது.**

இந்த எலியட் கமிட்டி சென்னையில் அலுவலை முடித்துக்கொண்டு ஸெப்டம்பர் மாதம் 24-ம் தேதியன்று கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போயிற்று. அன்றைய தினமே ஸ்ரீநிவாஸராகவையங்கார் நீண்ட ரஜா எடுத்துக் கொண்டார். இக்கமிட்டியாருக்காகத் தயாரித்த நீண்ட குறிப்பும் மற்றும் உத்தியோகப் பொறுப்பினல் ஏற்பட்ட சிரமமும் இவரது தேக சுகத்தை மிகவும் கெடுத்து விட்டன. வைத்தியர்கள் ஓய்வெடுத்துக் கொண்டால்தான் திரும்பவும் பதவி வகிக்க இயலும் என்று இவருக்கு அறிவித்தனர். ஆதலால் இவர் ஐந்துமாதம் 25 நாட்களுக்கு ரஜா எடுத்துக் கொண்டார்.

*ஸ்க்ரைன்: ஹண்டர் சரிதை பக்கம்: 353
** ,, ,, ,, பக்கம்: 365

13

முதலாவது காங்கிரஸ் மஹாசபைக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. நம்நாட்டு தேசீய வாதிகள் கோரிக்கை அச்சமயத்தில் விளக்கப்பட்டது. இந்தியா நிர்வகிக்கப்படும் முறையைப் பரிசீலித்து அதில் உள்ள குற்றம் குறைகளை நிவர்த்திக்கவேண்டும். இந்திய சிவில் சர்விஸ் பரீட்சைகள் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏககாலத்தில் நடத்தப்பட்டு சர்க்கார்கீழ் பொறுப்புள்ள பதவிகளை இந்தியரே அதிகமாக வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்தியர் மேனாட்டினருடன் சமமாகப் போட்டியிடுவதற்காக பரீக்ஷைக்கு 23 வயசு வரையும் ஆஜராக அனுமதிக்கப் படவேண்டும்—மகாநாட்டில் கூடிய மூலபுருஷர்கள் இந்த நோக்கத்துடன் முனைந்தனர். முந்திய அத்தியாயத்தில் முயற்சி ஓரளவுக்குப் பலன் பெற்றது விவரிக்கப்பட்டது. இந்த அத்தியாயத்தில் சர்க்கார் உத்தியோகங்களைக் குறித்த வரையில் என்ன நடந்தது என்பது விஸ்தரிக்கப்படும்.

ஆளவந்த அந்நியர் நம்மை மேலும் அடக்கி வைப்பதா? சொந்த நாட்டில் சுதேசிகள் அல்லவா சம்பத்துக்கு உரியவர்கள்? வயிற்றுப் பிழைப்புக்காக வியாபாரம் செய்யவந்த விதேசிகள் நாம் அவர்களை அண்டிப் பிழைக்கும்படிச் செய்வதா? மக்களின் மனப்பான்மை இத்தகைய விதத்தில் கொதித்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் மேன்மையை யுணர்ந்து அதைப் பாராட்டிய அறிவாளிகளும்கூட இம்மாதிரியான நிலைமை நீடிப்பதற்கொப்பவில்லை. 1833-ம் வருஷத்தில் பார்லிமெண்ட் ஒரு சட்டத்தை அமுலாக்கியது. இதனால் கிழக்கிந்திய கம்பெனியார் நாட்டு நிர்வாகத்தை மட்டுமே நடத்தவேண்டும் என்று விதிக்கப்பட்டது. சுதேசிகள் ராஜாங்கத்தில் பதவி வகிப்பதற்கு இனி யாதொரு தடையும் கூடாது எனவும் அப்போது விதித்தனர். இதை மெக்காலே பிரபு பாராட்டினார்: "எவ்வளவு நேர்மையானது!" என்றார் அவர். இந்தப் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதாக

இந்திய சர்க்காருக்கு கம்பெனி அதிகாரிகள் லண்டனிலிருந்து எழுதினர்.

> "பிரிட்டிஷ் இந்தியாவில் இனிமேல் ஆளும் ஜாதி என்பது இருக்கக்கூடாது என்பதே இந்தச் சட்டத்தின் தாத்பர்யம் என்று நாங்கள் கருதுகிறோம். உத்தியோகத்திற்கான அருகதை சம்பந்தமாக எந்த மாதிரி விதிகள் தயாரிக்கப்பட்டாலும் ஜாதியோ மதமோ இனிமேல் அதற்குப் பாதகமாக இருக்கக் கூடாது. மன்னரின் பிரஜைகள், இந்தியராளுலும் சரி, பிரிட்டிஷாராளுலும் சரி, கலப்புவர்க்கமாயினும் சரி இந்தியாவில் எந்தப் பதவிகளிலிருந்தும் இனி விலக்கி வைக்கப்படலாகாது. ஆனல் அவர்கள் அருகதையுள்ளவர்களாக மட்டும் இருக்கவேண்டும்."*

இந்தியாவில் சர்க்கார் உத்தியோகமேற்பதற்கு ஜாதி குறுக்கே நிற்கக்கூடாது என்றும் ஆனல் யோக்கியதையே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும் என்றும் இதனல் முடிவாகியது. இதனல் நிலைமை திருந்தவில்லை. இந்திய சிவில் சர்விஸ் பதவிகளுக்குப் பழையபடியே ஆட்கள் பொறுக்கப்படலாயினர். திரும்பவும் இருபது வருஷங்களுக்கப்புறம் பார்லிமெண்டில் இந்தியாவைப்பற்றி விவாதம் வந்ததும் பழைய சட்டத்தை ரத்துசெய்து புது சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அப்போது இந்தியாவின் அன்பரான ஜான் ப்ரைட் உணர்ச்சியுடன் காமன்ஸ் சபையில் பேசினர். விதி தளர்த்தப்பட்டும் இந்த இடைக் காலத்தில் இந்தியரைப் பொறுப்பு வாய்ந்த ஸ்தானங்களுக்கு நியமிக்காததேன் என்று அவர் வினவினர். 1853-ம் வருஷச் சட்டத்தில் இந்திய சிவில் சர்விஸ் பதவிகளுக்கு சில நபர்களைத் தங்கள் இஷ்டப்படி நியமிக்க கம்பெனியாருக்கிருந்து வந்த உரிமை பறிக்கப்பட்டது. ராணியின் பிரஜைகள் எல்லோரும் போட்டிப் பரீட்சையில் ஆஜராகி பதவிகளைப் பெற உரிமையும் அளிக்கப்பட்டது. ஐந்து வருஷங்களுக்கப்புறம் நிறைவேறிய சட்டத்திலும் இந்த உரிமை வழங்கப்பட்டது. சட்டப்

---

*கனம் என். சுப்பராவ்: இந்திய பப்ளிக் சர்விஸ் பிரச்னே, பக்கம் 2

படி இந்தியர் சிவில் சர்விஸ் பரீக்ஷைக்கு ஆஜராக ஆக்ஷேப மில்லாத போதிலும் பின்னர் தயாரிக்கப்பட்ட விதிகளின் மூலம் லண்டனுக்குப்போய் அங்கு நடக்கும் பரீட்சை யில் ஆஜராகவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டது. ஸ்டான்லி பிரபு அப்போது இந்த முறையைப் பலமாகக் கண்டித்தவர்களுள் ஒருவர். "பரீட்சை லண்டனில் நடக் காமல் கல்கத்தாவில் நடப்பதாக வைத்துக்கொள்வோம். அங்கு எவ்வளவு இங்கிலீஷ்காரர்கள் செல்வர்? அல்லது எவ்வளவு இங்கிலீஷ்காரர் அந்நாட்டில் இரண்டு அல்லது மூன்று வருஷகாலம் தங்கி உத்தியோகத்திற்குப் போட்டி யிடுவதை ஒப்புக்கொள்வர்? இந்திய சுதேசிகள் விஷயத் தில் மட்டும் இம்மாதிரி ஏற்பாடு செய்யப்படுகிறது!" என்றார் அவர். "நிலைமை திருந்தாவிட்டால் இந்தியர் எப்படி நம்மை நேசிப்பர்? அவர்களை ஒதுக்கிவைத்து ஆளப் பார்ப்பது பெருந்தன்மையாகாதே?" என்றார் பிலி மோர் எனும் கனவான். போட்டி இங்கிலாந்தில் நடத்தப் பட்டதால் ஏற்பட்ட இடையூறுகளைத் தவிர இதர சில விக்கினங்களும் இந்தியருக்கு இருந்தன. 1858-ம் வரு ஷத்தில் கம்பெனியிடமிருந்து அதிகாரம் பிரிட்டிஷ் சர்க் கார் வசம் வந்து சேர்ந்தது. அப்போது மஹாராணியார் தமது இந்திய பிரஜைகளுக்காக ஒரு பிரகடனத்தை விடுத் தார். இன்றும் புனிதமானதாகப் போற்றப்படும் இப் பிரகடனத்தில் மஹாராணியார் இந்திய மக்களையும் இதரப் பிரஜைகள் போலவே சமமாகப் பாவிக்கப்போவதாக அறி வித்தார். இதுவரை இருந்துவந்த தோஷங்களைபகற்றி ராணியாரின் பிரகடனத்தை அமுலாக்குவதற்கான ஏற் பாடுகளைச் செய்வதற்காக இந்தியா மந்திரி 1859-ல் இந் தியாவில் நீண்டகாலம் சேவை செய்து சிறப்பு சம்பாதித் தவர்களும் தமது ஆலோசனை சபையில் ஸ்தானம் வகிப் பவர்களுமான ஐந்து பிரமுகர்களைக் கொண்ட கமிட் டியை அமைத்தார். இவர்கள் மறு வருஷம் ஜனவரி மாதம் தங்கள் அபிப்பிராயத்தை இந்தியா மந்திரிக்கு அறி வித்தனர். இந்திய சிவில் சர்விஸ் பரீட்சைகள் இந்தியா விலும் இங்கிலாந்திலும் ஒரே காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் ஒருமுகமாக சிபாரிசு செய் தனர்.

"இப்போது பார்க்கப்போனால் இந்தியர் ஒதுக்கி

வைக்கப்பட்டிருக்கின்றனர். சட்டப்படி அவர்களுக்கு அருகதையுண்டு. ஆனால் இந்தியாவை விட்டு சுதேசி ஒருவர் இங்கிலாந்துக்கு வந்து தங்குவதற்குப் பலவித இடையூறுகள் இருப்பதால் இங்கிலாந்தில் அவ்வப்போது நடத்தப்படும் பரீட்சைகளில் அவர் கலந்துகொள்ள முடியவில்லை. இந்த தாரதம்மியம் நீக்கப்பட்டால்தான் காது குளிரப் பேசி உள்ளம் உடையச் செய்கிறோம் என்ற அபக்கியாதியிலிருந்து நாம் தப்பமுடியும்.

இதற்கு இரண்டு வழிகள் காட்டப்பட்டுள்ளன. பிரதி வருஷமும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உத்தியோகங்களுக்கு நபர்களைப் பொறுக்க இந்தியாவில் பரீட்சை நடத்தப்படும் என்று அறிவிப்பது ஒரு மார்க்கம். மற்றொன்று, ஒரே சமயத்தில் இரண்டு இடங்களிலும் பரீட்சைகளை ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாதபடி நடத்தி, இரண்டு பரீட்சைகளிலும் தேறுபவர்களை அவர்கள் தரத்திற்கேற்ப ஒரே விதமாகப் பாவிப்பது. இரண்டாவது மார்க்கமே போட்டி முறைக்கேற்றது என்று கமிட்டி கருதுகிறது.''*

இவ்விதம் கமிட்டி யோசனை கூறியும் காரியம் நடக்கவில்லை. மறு வருஷம் இந்திய சிவில் சர்விஸ் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் இந்தியருக்கு இடம் கொடுக்கமட்டும் மனம் வரவில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு விண்ணப்பங்கள் சென்றன. இந்திய சர்க்காருக்கும் இந்தியா மந்திரிக்கும் இடையே நீண்ட கடிதப் போக்குவரத்தும் இதைத் தொடர்ந்தது. பார்லிமெண்டில் ஹென்ரி பாஸெட் இந்தியர் கட்சியை ஆதரித்தார். கடைசியில் 1870-ம் வருஷம் மார்ச் மாதம் மற்றொரு சட்டம் இயற்றப்பட்டது. இதற்கப்புறமும் வழக்கம் போல் ஓயாத கடிதப்போக்குவரத்து ஆரம்பித்தது. விதிகளைத் தயாரிப்பதில் அநாவசியமாகத் தாமதித்தனர்.

1877-ம் வருஷாரம்பத்தில் நடந்த டில்லி தர்பாரில்

*என். சுப்பராவ்: இந்திய பட்ளிக் சர்விஸ் பிரச்னை, பக்கம் 4

இந்திய ராஜப் பிரதிநிதியான லிட்டன் பிரபு இந்தியரின் உரிமையைச் சுட்டிக் காட்டினார். சம அந்தஸ்து உண்டு என்பதை எடுத்துச் சொன்னார். ஒரு கடிதத்தில் அவர் பிரிட்டிஷார் இந்தியரை ஏமாற்றி வருகின்றனர் என்பதை வெளியிடவும் தயங்கவில்லை. சர்க்கார் செய்து வந்திருக்கும் காரியங்கள் யாவும் சட்டத்தை மீறுவதற் கான நடவடிக்கைகளே தவிர வேறில்லை என்றும் அவர் தைரியமாகக் குறிப்பிட்டார். கடைசியாக 1876-ல் லிட்டன் பிரபு இந்தப் பிரச்னையைத் தீர ஆராய்ந்து சுதேசிகளுக்காகப் பிரத்தியேக சிவில் சர்விஸ் ஒன்று ஏற் படுத்தலாமென்று இந்தியா மந்திரிக்கு யோசனை அளித் தார். தற்போது இந்திய சிவில் சர்விஸ் பரீட்சைகளில் தேறுபவர்களுக்கும் சர்க்காரில் ஏற்கெனவே சாதாரண பதவி வகித்து உயர் நிலை எட்டி வருபவர்களுக்கும் கிடைக்கக்கூடிய ஸ்தானங்களை இந்தப் புது ரகத்தின ருக்குக் கொடுக்கலா மென்றும் இந்திய சர்க்கார் எழு தியது. போட்டிப் பரீட்சை நடத்தாமல் சர்க்காரே இந்த உத்தியோகங்களுக்கு நபர்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும் என்றும் இந்திய சிவில் சர்விஸ் பரீட்சைக்கு இனிமேல் இந்தியர்கள் ஆஜராக அனுமதிக்கப்படலாகாது என்றும் இந்தியாவிலிருந்து சிபாரிசுகள் சென்றன. இவ்விதம் செய்தால் இந்தியரின் ஆசைபூர்த்தியாவதுடன் நிர்வாகச் செலவும் குறைந்து போகும் என்று லிட்டன் சர்க்கார் இதற்கு ஆதரவாகக் குறிப்பிட்டனர். இந்தியா மந்திரி இந்த யோசனைகளை வரவேற்காமல் லண்டனில் எல்லா இந்திய சிவில் சர்விஸ் பதவிகளுக்கும் பரீட்சையை நடத்தாமல் ஒரு சிலவற்றை ஒதுக்கிவைத்து அவற்றுக்கு இந்தியாவில் சர்க்காரேதகுந்தவர்களைப் பொறுக்கியெடுத்து நியமிக்கலாம் என்று பதில் அனுப்பினார். இது இந்திய சர்க்காருக்கு திருப்தி தரவில்லை யாயினும் இங்கிலாந்தில் பரீட்சை மூலம் பொறுக்கப்படும் தொகையில் ஐந்தில் ஒரு பாகம் இந்தியாவிலும் நியமனம் பண்ணுவ தென்று அவர்கள் முடிவு செய்தனர். இதர உத்தியோகங்களுக்கும் இந்தியரையே அதிகமாக நியமிக்கவும் அப்போது முடி வாகியது. ஆனால் ரெவினியூபோர்ட் மெம்பராகவோ அல்லது சர்க்கார் இலாகாக்களில் காரியதரிசியாகவோ ஜில்லாக்களில் பிரபல உத்தியோகஸ்தர்களாகவோ கவர்

னர் ஜெனரலின் அனுமதியின்றி இந்தியரை நியமிக்கக் கூடாது என்று இந்திய சர்க்கார் விரும்பியதற்கு இந்தியா மந்திரி சம்மதிக்க வில்லை. 1879-ல் இந்தப் புது விதிகள் அமுலாகின. இதற்கப்புறம் பிரதி வருஷமும் இந்தியா வில் சிலர் உயர்தர பதவிகளுக்கு நேராகவே நியமிக்கப் பட்டனர். நல்ல குடும்பத்தில் பிறந்து கண்ணியம் வாய்ந் தவர்களுக்கே இம்மாதிரி ஸ்தானங்கள் வழங்கப்பட்டு வந்தன. யோக்கியதையும் தகுதியும் அவ்வளவு முக்கிய மாகக் கவனிக்கப்படாமையால் இந்த நியமனங்கள் காலப்போக்கில் கண்டனப் பேச்சுகளுக்கு இடம் தந்தது. பொதுவாக எல்லோருமே இதற்கு ஆக்ஷேபத்தை அறி வித்தனர். இந்திய சிவில் சர்விஸ் பரீட்சைக்கு ஆஜ ராகுபவர்களுக்கு 1878-ல் சில புது இடையூறுகள் தலை காட்டின. 22 வயது வரை ஆஜராகலாம் என்ற விதி நீக்கப்பட்டு 19 வயசுக்கப்புறம் ஆஜராகக்கூடாது என்று கட்டாயப்படுத்தப்பட்டது. அதாவது சர்வகலாசாலை படிப்பு பெறுமல் பள்ளிக்கூடங்களில் படித்து வந்த மாணவர்களே இந்தப் பரீட்சைக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். 1892-ம் வருஷம் வரை இந்த வழக்கம் நீடித்திருந்தது. இந்தியர் உள்ளே வருவதற்குத் தடை இல்லை. ஆனால் அவர்கள் வெகு தூரம் முன்னேறுவது மட்டும் மிகச்சிரமமாக இருந்தது."*

1853-ம் வருஷத்திற்கப்புறம் 1870-ம் வருஷத்திற் குள் இந்திய சிவில் சர்விஸ் வர்க்கத்தில் ஒரே ஒரு இந்தி யர்தான் சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஆனால் 825 ஐரோப்பியர்கள் இதே காலத்தில் அதில் இடம் பெற் றனர். 1870 முதல் 1886 வரை 576 ஐரோப்பியர் கள் நியமிக்கப்பட்டனர். இந்தியர்களில் 11 பேர்களுக்கு மேல் உள்ளே புக முடியவில்லை. இதைக் கண்டு யார் தான் சகித்திருக்க முடியும்? அடிமை வாழ்வில் எவ்வளவு தான் மூழ்கியிருந்த போதிலும் அவலமான நிலையைப் பார்த்துக்கொண்டு எவ்வளவு நாட்கள்தான் பொறுத் திருக்க முடியும்? முதல் காங்கிரஸ் வெளியிட்ட கோரிக்கை முற்றிலும் நியாயமல்லவா?

---

*மோர்லண்ட், ஸர் ஏ. ஸி. சாட்டர்ஜி ஆகியோர் எழு திய 'இந்திய சரித்திரச் சுருக்கம்' (1936) பக்கம் 400.

இந்திய வைஸ்ராய் டபரின் பிரபு 1886-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ம் தேதி யன்று பப்ளிக் சர்விஸ் கமிஷன் ஒன்றை நியமித்தார். சர்க்கார் கீழ் இந்தியருக்கு மேலும் அதிகப்படி உத்தியோகங்களை அளித்து அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கான வழிகளைக்காட்டும் பொறுப்பு இக்கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் விசாரணை முடிந்ததும் இந்தியாவுக்கு பார்லிமெண்ட் மெம்பர்கள் கொண்ட கமிட்டி ஒன்றும் நேரில் வந்து விவகாரங்களை அறியும் என்றும் அப்போது ராஜப்பிரதிநிதி தெரிவித்தார். இந்தக் கமிஷனுக்கு பஞ்சாப் மாகாண கவர்னர் ஸர் சார்லஸ் எக்கிஸன் அக்கிராஸனரானார். இதில் அனுபவம் மிகுந்த பலர் ஸ்தானம் வகித்தனர். மொத்தம் 15 அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டனர். சென்னை ஹைக் கோர்ட் மாஜி சீப் ஜஸ்டிஸ் ஸர் சார்லஸ் டர்னர், கல்கத்தா ஹைக் கோர்ட் ஜட்ஜ் கனம் ரமேச சந்திர மித்தர், ராஜப் பிரதிநிதி நிர்வாக சபை மெம்பர் கனம் க்விண்டன், வங்க சர்க்கார் பிரதம காரியதரிசி மிஸ்டர் எப். பி. பீக்கம், ராஜா உதயப்ரதாப சிங், சென்னை சிவில் சர்விஸைச் சேர்ந்த மிஸ்டர் எச். ஜே. ஸ்டோக்ஸ், பம்பாய் சிவில் சர்விஸைச் சேர்ந்த மிஸ்டர் டி. எச். ஸ்டிவர்ட், ஸையத் ஆமத்கான் பஹதூர், மிஸ்டர் டபிள்யூ. பி. ஹட்ஸன், பரோடா மாஜி திவான் கனம் கான்பஹதூர் காஜி ஷஹாபுதீன், ஸ்ரீமான் சேலம் ராமஸ்வாமி முதலியார், கல்கத்தா ஸ்டாம்பு ஸ்டேஷனரி இலாகா அதிபர் மிஸ்டர் டபிள்யூ. எச். ரைலண்ட், ராய்பஹதூர் கிருஷ்ணாஜி லக்ஷ்மண் நூல்கர், மிஸ்டர் டி. எஸ். ஒயிட் இந்தக் கமிஷனில் அங்கத்தினர் களாகவும் இந்திய சர்க்கார் உள் நாட்டிலாகா உதவிக்காரியதரிசி மிஸ்டர் எப். ஸி. பிக்ஸ் இதன் காரியதரிசியாகவும் இருக்க இணங்கினர்.

1887-ம் வருஷம் ஜனவரி மாதக் கடைசியில் இந்தக் கமிஷன் சென்னைக்கும் வந்து சாட்சிகளை விசாரித்தது. மாகாணத்தில் முக்கிய ஸ்தானங்களை வகித்த பல அதிகாரிகளும் மற்றும் பொது வாழ்வில் அதிகப்பங்கெடுத்துக் கொண்ட பல பிரமுகர்களும் கமிஷன் முன் ஆஜராகித் தங்களது அபிப்பிராயத்தை வெளியிட்டனர். அப்போது ஸ்ரீநிவாஸராகவையங்கார் ரஜாவில் இருந்தா ராயினும் சாட்சியம் சொல்லும்படி பிப்ரவரி மாதம் முதல் தேதி

யன்று அழைக்கப்பட்டார். அப்போது இவர் சிவில் சர்விஸ் பதவி பரீட்சைக்கு ஆஜராகாத சுதேசிகள் நேரில் நியமிக்கப்படும் முறை பொது ஜனங்களின் ஆதரவைப் பெற வில்லை என்பதை அவர்களிடம் அறிவித்தார். பொறுக்கி யெடுக்கப்பட்ட நபர்களில் சிலருக்கு படிப்பு முதலியவை சம்பந்தமாகப் போதிய அருகதை இல்லை எனவும் அவர்களில் மற்றும் சிலர் கீழ்த்தர உத்தியோகங்கள் கிடைத்திருந்தால் அதை ஒப்புக்கொள்ளக் கூடியவர்கள் என்றும் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்களில் அநேகருக்கு இவர்களுக்குச் சமமான அந்தஸ்து இருப்பதாகவும் இவர் அச்சமயத்தில் சொன்னார்.

இந்தக் இறைகளை நீக்குவது எப்படி என்று கமிஷன் மெம்பர் ஸ்டோக்ஸ் வினவினார். இதற்காகச் சில திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பதாக இவர் தெரிவித்தார்.

> "சர்க்கார் உத்தியோகத்திலோ அல்லது வேறு எந்தத் தொழிலிலோ திறமை வாய்ந்தவராகவோ அல்லது நிபுணர் என்றோ கருதப்படுபவர் மட்டுமே இம்மாதிரி சிவிஸ் சர்விஸ் பதவிகளுக்குப் பொறுக்கப்படவேண்டும். தற்போதைய விதிகளை நீக்கி விட்டுப் புதிய விதிகளைத் தயாரிக்க வேண்டும். சர்க்கார் கீழ் சிவில் சர்விஸ் இனத்தைச் சேராத பதவிகளில் சீலமும் சீரிய குணமும் மிகுந்தவர்களையே சிவில் சர்விஸ் பதவிகளுக்கு நியமிக்கவும் பொறுக்கி யெடுக்கப்பட்டவர்கள் சாமான்யமாக அல்லாமல் சிறந்த படிப்பு யோக்கியதைகளைப் பெற்றவர்களாக இருப்பதற்கும் சிவில் சர்விஸிற்கு நியமனங்களைச் செய்வதற்கு முன்னர் சர்க்காரின் பல இலாகாக்களிலும் அமர்ந்து வேலை செய்பவர்களின் தராதரங்கள் சர்க்காரின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டு அவை பரிசீலிக்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்"

போட்டிப் பரீட்சை நடத்தாமல் நேரில் சிவில் சர்விஸ் பதவிகளுக்கு நியமிக்கும் முறை நீடிக்கப்பட்டால், நியமிக்கப்பட்ட நபர்கள் இங்கிலாந்துக்குப்போய் விட்டுத் திரும்புவதற்கு அவசியம் இருக்கிறதா என்று மேலும் அதே அங்கத்தினர் வினவியபோது, இவர் அவர்களை இங்

கிலாந்துக்கு அனுப்பக்கூடாதெனவும் அப்படிப் போகும் படி நிர்ப்பந்திக்கவும் கூடாது எனவும் தெரிவித்தார்.

இந்தப் போட்டிப் பரீட்சை விஷயத்தில் இந்தியருக்குச் சில பிரதிகூலங்கள் இருப்பதாகவும் இவர் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்டினுர். பரீட்சைக்கு ஆஜராகக் கூடிய உயர்ந்த பட்ச வயது அளவு மிகவும் குறைக்கப்பட்டு விட்டதால் அநேகர் அதில் கலந்துகொள்வதற்குப் பாதகம் ஏற்பட்டிருப்பதாகவும் 22 வயசு வரை ஆஜராகலாம் என்று விதிக்கவேண்டும் எனவும் இவர் சொன்னுர். மற்றுமொரு பெரிய பிரதிகூலத்தையும் இவர் குறிப்பிட்டார். பரீட்சை இங்கிலாந்தில் நடப்பதால் அதிகம் செலவழித்துக்கொண்டு அங்கே போய்வர அநேகருக்கு சாத்தியமில்லை எனவும் இது போதாதென்று சிலர் விஷயத்தில் ஜாதிக் கட்டுப்பாடுகளும் முன் நிற்பதாகவும் அப்படி இவற்றை மதியாமல் துணிந்து பிரயாணம் செய்தாலும் போட்டியில் வெற்றி கிடைப்பது எளிதல்ல என்ற அவநம்பிக்கையே அநேகருக்கு இருப்பதாகவும் இவர் சொன்னுர். இதற்கப்புறம் இவர் பரீட்சை சம்பந்தமாக மேலும் சில யோசனைகளை வெளியிட்டார்.

> "லத்தீன், கிரேக்க பாஷைகள் போல் சுதேசிகளுக்குப் பரிச்சயமான அரபி, சம்ஸ்கிருத பாஷைகளுக்கும் சமமான ஸ்தானத்தைத் தரவேண்டும். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. இதனுல் பரீட்சைக்கானப் பாடங்களைப் பற்றியவரையில் சுதேசிகளும் ஐரோப்பியரும் சமமாகப் போட்டியிட இயலும். இந்த இரு பாஷைகளிலும் போதிய ஞானம் அபேக்ஷகர்களுக்கு இருக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும். அவர்கள் தங்கள் வாழ்நாளில் நல்ல பகுதியை ஹிந்துக்களிடையேயும் மஹம்மதியர்களிடையேயும் தான் கழிக்கவேண்டுமாதலால் இந்தப் பாஷைகளில் சரியான ஞானம் இல்லாவிட்டால் அந்த வகுப்பார்களின் பழக்கவழக்கங்களையும் சமூகக் கோட்பாடுகளையும் அறிந்துகொண்டு காலத்தைக் கடத்த முடியாமற்போகும்"

இதற்கப்புறம் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் பரீட்சைகள் நடத்தப்பட்டால் அதில் இந்தியர்

சரிசமமாகப் போட்டியிட்டுக் கௌரவமானவிதத்தில் பல ஸ்தானங்களைக் கவர்ந்துகொள்வது சுலபம் என்பதையும் இவர் அங்கத்தினர்களிடம் அறிவித்தார்.

இந்தியாவில் மட்டும் பரீட்சை நடத்தப்படுமாயின் அதில் தேறியவர்கள் இங்கிலாந்துக்குச் செல்லவேண்டுமா?—இது அவசியமே இல்லை என்று இவர் சொல்லிவிட்டு அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டார். "இங்கிலாந்தில் இரண்டு வருஷகாலம் தங்கி அவர்கள் தேர்ச்சி பெறுவதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அங்கு இந்திய பாஷைகள், இந்திய சரித்திரம், இந்திய பூகோளம் முதலியவைகளைப்பற்றி அவர்கள் படிக்கின்றனர். இவற்றையெல்லாம் இந்தியாவிலேயே படித்தால் போதும். அவர்கள் எதிர்பார்க்கும் பயிற்சி இதனால் கிடைக்காது. இத்தகைய பயிற்சிதான் அவர்களுக்கு இங்கிலாந்தில் கிடைக்குமென்றால் அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் அவர்கள் அங்கு போவதை நான் விரும்பமாட்டேன். ஒரு சுதேசி இங்கிலாந்துக்குப்போய் அங்குள்ள மக்களுடன் நெருங்கிப் பழகவும் ஆசிரியர்களின் கிருஹங்களில் அனுமதிக்கப்பட்டு சமூகத்தில் சிறந்த ஸ்தானத்தை ஸ்வீகரிப்பவர்களுடன் கலந்து பேசவும் வசதிகிடைத்தால் அதைக் காட்டிலும் உத்தமமானது எதுவும் இருக்க முடியாது. ஆனால் அங்கு போன பின்பும் ஜாதிக்கட்டுப்பாடுகளுக்குப் பயந்து பட்டதும் படாததுமாய் அங்கிருக்கும் சமூக வாழ்வில் கலந்துகொண்டால் அதனால் அவருக்கு அனுகூலம் பிறக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்தியாவிலுள்ள தமது நண்பர்களும் உறவினரும் தாம் ஜாதி நியதிகளை மீறவில்லை என்று நம்பியிருக்க வேண்டும் என்பதற்காக இந்தியர் அங்கு அதிகம் நெருங்கிப் பழகுவதில்லை. இத்தகைய பயிற்சியினால் ஒவ்வொருவருடைய இயற்கை குணம் பிரகாசித்து நன்மையாகவோ அல்லது கெட்டதாகவோ முடிவதில் தவிர வேறு வழி இல்லை. ஆகவே முதிர்ச்சி பெறாத யுவர்களை அங்கு அனுப்புவதற்கு நான் சம்மதிக்கமாட்டேன்."

போட்டிப் பரீட்சைகளுக்கு ஆஜராக சர்வகலாசாலைப் படிப்பு பெற்றவர்களே அனுமதிக்கப்படவேண்டும் என்றும் இவர் நிர்ப்பந்தித்தார். இந்தியாவின் நல்ல நிர்

வாகத்தை யுத்தேசித்து தகுதிவாய்ந்தவர்களுக்கே பதவி வழங்க வழி தேடவேண்டும் என்பதையும் இவர் வற்புறுத்திச் சொன்னார்.

சிவில் சர்விஸ் வர்க்கத்தைச் சேராதவர்களுக்காக ஒதுக்கிவைக்கப்படும் உயர்தர உத்தியோகங்களுக்கு நியமனம் எப்படி நடக்கவேண்டும் என்பதைக் குறித்தும் இவர் யோசனை சொன்னார். போட்டிப் பரீட்சை மூலமாக நபர்களைப் பொறுக்கியெடுப்பதுடன் அவசியமானால் நியமன முறையையும் கையாளலாம் என்றார் இவர். தாம் இந்தப் பதவிகளை இரு கிளைகளாகப் பிரிக்கவேண்டும் என்று விரும்புவதாயும் இந்தப் பதவிகளில் இருப்பவர்களே சிவில் சர்விஸ் ஸ்தானங்களுக்கும் உயர்த்தப்படவேண்டும் என்று தாம் கோருவதாகவும் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்களே இவற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது மிகவும் முக்கியமானது எனவும் இவர் தெரிவித்தார்.

> "அடுத்த வருஷத்தில் எவ்வளவு ஸ்தானங்கள் காலியாகக் கூடுமென்பதை முன்னடியே நிர்ணயித்து அவற்றில் மூன்றில் ஒரு பாகத்தைத் தவிர இதர ஸ்தானங்களுக்கு நபர்கள் போட்டி மூலம் பொறுக்கியெடுக்கப்படுவர் என்று விளம்பரம் பண்ணுவேன். ஒதுக்கப்பட்ட மூன்றில் ஒரு பாகமான ஸ்தானங்களுக்குக் கீழ்த்தரப் பதவிகளில் இருப்பவர்களையே நான் உயர்த்துவேன். அவர்களுடைய தலைமை அதிகாரிகள் அவர்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் தெரிவித்தால்தான் அவர்கள் உயர்த்தப்படவேண்டும். இப்போது கீழ்த்தரப்பதவிகள் அல்லது உயர்தர பதவிகள் என்ற வித்தியாசமே இருக்கவில்லையாதலால் நான் இதைச் சுட்டிக்காட்ட வேண்டியதாகிறது. சாமான்யமான பதவிகளை வகிப்பவர்களும் மேலே உயர்ந்துபோக வழிகாட்டாமை அவர்களுக்கு அநியாயம் புரிவதற்கொப்பாகும். ஆரம்பத்தில் சிறிது காலம் அதாவது சுமார் பத்து வருஷங்கள்வரை இம்மாதிரி உயருவது சகஜமாக இருக்கும். கீழ்த்தரப்பதவிகளில் இருக்கும் சாமர்த்தியசாலிகள் மேல் அந்தஸ்தை எட்டியவுடன் இம்மாதிரி அடிக்கடி உயர்த்தப்படுவது

குறைந்து போகும். அசாதாரண திறமை வாய்ந்த வர்களே மேலே உயரமுடியும். இல்லாவிட்டால் அந்த ஸ்தானங்களுக்கும் போட்டிப் பரீட்சையை நடத்தலாம். இது தவிர போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்று சர்க்கார் உத்தியோகத்தை சம்பாதிக்க முடியாமல் எந்த ஒரு வகுப்பாவது இருக்குமாயின் இந்த ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் அதற்கும் இட மளித்து அதன் உரிமைகளே மதிக்கவேண்டும். உதா ரணமாக மஹம்மதியர் படிப்பு விஷயத்தில் பிற்போக் காளர்களாகவே இருப்பதால் அவர்கள் போட்டியில் தேற முடியாமற் போய்விட்டால் உயர்தர உத்தியோ கங்களுக்கு போதிய படிப்பு வாய்ந்த மஹம்மதியர் களே நியமிக்கவேண்டும். இதற்கப்புறம் அவர்கள் தங்கள் சொந்த திறமையையும் சாமர்த்தியத்தையுமே அடிப்படையாகக் கொண்டுதான் உத்தியோகக்தில் உயரவேண்டும். இங்கிலாங்தைப்போல் இங்கும் சிவில் சர்விஸ் கமிஷனர்கள் இருக்கவேண்டும். இந்த மத்திய ஸ்தாபனத்தார் மேல் பதவிகளுக்கு உத்தியோகஸ்தர்களே உயர்த்தும் விஷயமாகப் பொறுப்பு வகிப்பதுடன் அடிக்கடி அவர்களது நடத்தை முதலியவற்றைப் பற்றிய தகவல்களேச் சேகரித்து வரவேண்டும். ஒரு கிளேயிலிருந்து மற் ருெரு கிளேக்கு மாற்றும் உரிமை இந்தக் கமிஷனர் களிடமே இருக்கவேண்டும். சிவில் சர்விஸ் பதவி களுக்கும் அவசியம் வரும்போது இந்த உத்தியோகஸ் தர்களிலிருந்தே நபர்களேப் பொறுக்கவேண்டும்."

இதற்கப்புறம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்த நிய மனம் விஷயமாக யோக்கியதாம்சங்களேப் பரிசீலித்து முடிவு செய்ய ஒரு கமிட்டி அமைக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார். இதில் மூன்று ஹைக்கோர்ட் ஜட்ஜ் களும் (ஒருவர் இந்தியர், ஒருவர் பாரிஸ்டர், ஒருவர் சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்) இரண்டு சர்க்கார் காரியதரிசி களும் ரெவினியூபோர்டு அங்கத்தினர்களும் பெரிய பதவி யில் இருக்கும் ஒரு இந்தியரும் ஸ்தானம் வகித்து தங்கள் முடிவுகளே அவ்வப்போது சர்க்காருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் இவர் கோரினர்.

சென்னை மாகாணத்திற்கு வெளி மாகாணங்களிலி ருந்து உத்தியோகஸ்தர்களைக் கொண்டுவர வேண்டிய அவ சியமே இல்லை எனவும் இம்மாதிரி வெளியார் வந்து தங்க ளுக்குச் சேரவேண்டியதை எடுத்துக் கொண்டுபோவதாக எவராவது கருதும் பட்சத்தில் அந்தக் குறையைப் புறக் கணிக்கலாகாது என்றும் இவர் தெரிவித்தார்.

இதற்கப்புறம் சம்பளப் பிரச்னை கிளம்பியது. ஐரோப் பிய உத்தியோகஸ்தர்களுக்கும் சுதேசி அதிகாரிகளுக் கும் ஒரே சம்பளத்தை அளிப்பதா? அல்லது அதில் ஏதா வது தாரதம்மியம் இருக்கலாமா?—இந்தக் கேள்விகளுக்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் அளித்த பதில் குறிப்புக் குரியது:—

"இருவர் சம்பள விகிதத்தில் ஏதாவது வித்தி யாசம் இருக்க வேண்டும் என்று உத்தேசிக்கப்பட் டால் அது விஷயமாகச் சில சந்தேகங்களை நான் முத லில் அகற்ற வேண்டும். சுதேசிகள் சொற்ப சம்பளத் தில் காலம் கழிக்க முடியும் என்று எல்லோரும் எண்ணுகின்றனர். நியமனம் மூலமாகவோ அல்லது போட்டிப்பரீட்சை வழியாகவோ சிவில் சர்விஸ் பதவிகளுக்கு உயரக்கூடிய சுதேசிகள் சொற்ப சம் பளத்தைக் கொண்டு ஜீவிக்க முடியாது. சுதேசிக ளுக்கு ஏற்படக்கூடிய சில செலவுகளைப் பற்றி ஐரோப்பியர் அறியார். இந்தியாவில் அதிகம் பரவி யுள்ள அவிபக்த குடும்பமுறை காரணமாகவும் பால்ய விவாகப் பழக்கம் காரணமாகவும் அநேகரை சம்ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு சுதேசிகள் மீது விழுந்திருக்கிறது. உறவினரில் அநேகர் அவர்களையே ஆதாரமாகக் கொண்டு நம்பியிருக்கின்றனர். அவர்க ளுக்காகப் பல வகையில் செலவழிக்க வேண்டியும் இருக்கிறது. தேசியப் பழக்க வழக்கங்களை யாரும் அலக்ஷியம் பண்ணமுடியாது. ஆங்கிலப்படிப்பு, ஆங் கில ஞானம் ஆகியவை அதிகரிப்பதால் இப்போது சுதேசிகளுக்கு தாங்களும் நல்ல விதத்தில் வாழ்க் கையைநடத்தவேண்டும் என்ற அபிலாஷை மேலிட் டிருக்கிறது. இவை காரணமாகத் தற்போது சுதேசிக ளின் செலவு மிகவும் அதிகமாகி அந்திய காலத்தில் தம்

மக்களுக்காக அதிகம் சேமித்து வைக்க முடியாத நிலையில் இப்போது நல்ல அந்தஸ்தில் உள்ள சுதேசிகள் இருக்கின்றனர். சுதேசிகளின் சம்பள விகிதத்தை நிர்ணயிக்கும்போது இந்த அம்சங்களை மறக்கக் கூடாது. ஆனால் சிக்கனத்தை உத்தேசித்து ஐரோப்பியரைக் காட்டிலும் குறைந்த பக்ஷ சம்பளம் அவர்போல் வேலையைச் செய்யும் சுதேசிக்கு அளிக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால் இங்கிலாந்தில் வருமான வரிவிதிப்பு விஷயமாக அனுஷ்டிக்கப்படும் கொள்கை இங்கும் பின் பற்றப் படவேண்டும். அதாவது சம்பளத்தில் ஒரு பகுதி மீது வரி வசூல் கூடாது. அதிகப்படியாக மிஞ்சியிருந்தால்தான் வருமான வரியை வசூலிக்க வேண்டும்''

சர்க்கார் உத்தியோகத்தில் பிரவேசிக்கும் பட்டதாரிகளுக்கும் மற்றும் யோக்கியதை மிகுந்தவர்களுக்கும் ஆரம்பத்தில் குறைந்தபட்சம் எழுபது ரூபா சம்பளம் அளிக்கப்படவேண்டும் என்றும் உயர்தர பதவிகளுக்கு பொறுக்கியெடுக்கப்படுவோர் குண விசேஷம் பொருந்தியவர்களாய் கெட்ட நடத்தையற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும் தீய முறைகளைக் கடைபிடிக்காமல் சம்பளத்தை வைத்துக்கொண்டு ஜீவனத்தை நடத்தும் சக்திவாய்ந்தவர்களாய் அவர்கள் இருக்கவேண்டும் என்றும் இவர் குறிப்பிட்டார்.

தகுதியற்றவர்களை எப்படி பதவியிலிருந்து நீக்குவது என்ற கேள்விக்குப்பதில் தருகையில் நீக்கப்படும் உத்தியோகஸ்தரின் யோக்கியதைகளைப் பற்றி விசாரித்தறிவிக்க கமிஷன் நியமிக்கப்படவேண்டும் என்றும் ஒரு உத்தியோகஸ்தர் கூறுவதைப் பிரதானமாகக் கொண்டு எவரையும் பதவியிலிருந்து நீக்கக்கூடாது என்றும் வேறு ஒருவர் கீழ் அவரை அமர்த்தி அவர் திருப்திகரமாக நடந்து கொள்கிறாரா என்பதும் கவனிக்கப்பட வேண்டுமென்றும் இதற்கப்புறமும் அவர் யோக்கியதை யற்றவர் என்பது தெளிவாகிவிட்டால் ஏதோ சொற்ப உபகாரச் சம்பளத்தைக் கொடுத்து அவரை வேலையிலிருந்து நீக்க வேண்டும் எனவும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சொன்னார்.

இந்தியர்களுக்கிருக்கும் திறமை, அருகதை முதலிய வற்றைக் குறித்தும் சுதேசிகளுக்கும் விதேசிகளுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்பதன் அவசியத்தைப் பற்றியும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தம்முடைய சாட்சியத்தில் வெளியிட்ட கருத்துக்கு அதிகமாகக் கூறத்தேவை இல்லை. இதே கமிஷன் முன்பு ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸ் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அப்போது அவர் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் போட்டி பரீட்சை நடத்தப்படவேண்டும் என்று நிர்ப்பந்தித்தார். அவர் இம்மாதிரி தெரிவித்ததற்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் போன்றவர்கள் தங்கள் உத்தியோகத்தில் காட்டிய திறமையும் அவர்களுக்கிருந்த குண விசேஷங்களும் தான் காரணம் என்று அந்நாளில் பகிரங்கமாகக் கூறப்பட்டதுண்டு. சென்னை சர்க்கார் இந்த முறையை ஒப்புக்கொண்டு எழுதும்படிச் செய்தவரும் அவர் தாம்.

> "உண்மையில் ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸ் ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் தமக்கிருந்த மதிப்பையும் ப்ரீதியையும் ஒளித்துவைத்ததே இல்லை. அவருக்குத் தாம் சிபாரிசு செய்த முறையில் பூரணமான நம்பிக்கை இருந்தது. இந்த நம்பிக்கை அவருடைய உள்ளத்தில் உதயமானதற்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் நிரூபித்த விசேஷ திறமையே காரணமாகும்"

இவ்விதம் ராவ் பஹதூர் ஸி. ஹயவதன ராவ் சில வருஷங்களுக்கு முன் எழுதினர்.*

மறு வருஷம் ஜனவரி மாதத்தில் கமிஷன் யாதாஸ்து பிரசுரிக்கப்பட்டது. ஏக காலத்தில் இருநாடுகளிலும் பரீட்சை நடத்துவதற்கு கமிஷன் சம்மதிக்கவில்லை. ஆனால் சிவில் சர்விஸ் இரண்டு பிரிவுகளாக்கப்பட்டு "இந்திய" அல்லது "சாம்ராஜ்ய" சர்விஸ் என ஒரு பிரிவும் மற்றொரு பிரிவு "மாகாண" சர்விஸ் எனவும் வழங்கப்படவேண்டும் என்று கமிஷன் முடிவு செய்தது. முதல் வர்க்கத்திற்கு இங்கிலாந்தில் போட்டி பரீட்சை நடத்தப்படவேண்டும். இரண்டாம் வர்க்கத்திற்கு ஒவ்

*ஹிந்து : 19-12-1938

வொரு மாகாணங்களிலும் பரீட்சை நடத்தப்படவேண்டும். இதற்கு இந்த பரீட்சையில் தேறியவர்களும் சர்க்காரால் பொறுக்கியெடுக்கப்படுபவர்களும் நியமிக்கப்பட வேண்டும். கீழ்த்தர பதவிகளில் இருப்பவர்களும் இந்த வர்க்கத்தாருக்காக இருக்கும் ஸ்தானங்களை எட்ட வசதி செய்யவேண்டும். இதற்காக இதுவரை இந்திய சிவில் சர்விஸ்காரர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் ஆறில் ஒரு பாகம் மாகாண சர்விஸ்காரர்களுக்கு வழங்கவேண்டும் என்றும் கமிஷன் சிபாரிசு செய்தது. சென்னை, வங்காளம், பம்பாய் ஆகிய மாகாணங்களில் ரெவினியூ போர்ட் மெம்பர் பதவி ஒன்றும் பம்பாயிலும் அஸ்ஸாமிலும் தவிர இதர மாகாணங்களில் ஒரு கமிஷனர் ஸ்தானமும் இந்திய சர்க்கார் கீழ் உதவிக் காரியதரிசிகள் பதவிகளும் சென்னை, வங்காளம், ஐக்கிய மாகாணம் ஆகிய பிரதேசங்களில் ரெவினியூ போர்டு காரியதரிசி ஸ்தானமும் மொத்த ஜில்லா நீதிபதிகளில் மூன்றில் ஒரு பாகமும் வரிவசூல் இலாகாவில் இருக்கும் முக்கிய பதவிகளில் பத்தில் ஒருபாகமும் சுதேசிகளுக்கே இனி கொடுக்க வேண்டும் என்றும் கமிஷன் யோசனை கூறியது. வயசு எல்லையை 23 ஆக உயர்த்தவும் சிபாரிசு செய்யப்பட்டது.

ஆனால் இந்திய சர்க்கார் கமிஷன் விரும்பியவிதம் நடக்கவில்லை. சிவில் சர்விஸை இரண்டாகப்பிரிக்க மட்டும் சம்மதித்தனரேதவிர,கமிஷன் உத்தேசித்தபடி சில ஸ்தானங்களை இந்தியர்களுக்கும் இனி கொடுக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. உயர்தர பதவிகளுக்கு நாட்டு மக்களையே நியமிக்க அவர்கள் தயாராக இல்லை. இதனால் நிலைமை திருந்த வழியைக்காணோம். 'சிக்கனமான முறையிலும் நல்ல விதத்திலும் சரியான நியதிகள் பிரகாரமும் நிர்வாகம் நடக்க வேண்டுமானால் இங்கிலாந்தில் உத்தியோகஸ்தர்களைப் பொறுக்குவதைக் குறைத்துக் கொண்டு இந்தியாவிலேயே தகுதி யானவர்களை நியமித்துக் கொள்ள வேண்டும்' என்று கமிஷன் திட்டமாகத் தெரிவித்தும் இந்தியா மந்திரி அதற்கு முட்டுக்கட்டை போட்டார். இந்தக் கமிஷனின் சிபாரிசுகளைப்பற்றி ஒரு புறம் அதிருப்தி அதிகரித்திருந்த போதிலும் மற்றொரு புறம் பிரிட்டிஷ் சர்க்கார் அந்த சிபார்சுகளை ஒப்புக்கொள்ள விரும்பாமை

நாட்டில் நிலவிய அதிருப்தியைப் பன்மடங்காக்கி விட்டது. பத்திரிகைகள் வாயிலாகவும் பிரசங்க மேடைகளிலிருந்தும் பலத்த கண்டனங்கள் வெளிப்பட்டன. சரிசமமான அந்தஸ்தை வேண்டுகையில் ஏற்கெனவே இருந்து வரும் ஏற்றத் தாழ்வுகளைப் பட்டவர்த்தனமாக்கி ஊர்ஜிதப்படுத்துவதா என்று பொது ஜனத்தலைவர்கள் சீறினர். கமிஷன் மெம்பர்களில் சிலர் அதன் சிபாரிசுகளை ஒப்புக் கொண்டதற்கு சர்க்கார் முன் போல் இனியும் பிடிவாத புத்தி காட்டமாட்டார்கள் என்ற நம்பிக்கையே காரணமாக இருந்தது. சிறிது காலத்திற் கப்புறம் சேலம் ராமஸ்வாமி முதலியார் தம் உள்ளத்தில் இருப்பதை ஒளிக்காமல் எடுத்துக் கூறினார். நம்பிக்கை மோசம் போய்விட்டதாகத் தெரிவிக்க அவர் தயங்கவில்லை. பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமிக்கப்பட்டபோது இருந்ததை விட மிகவும் கேவலமான நிலைமை இப்போது இந்தியா மந்திரியின் உத்திரவு காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்று அவர் பகிரங்கமாகச் சொன்னார்.

எலியட் கமிட்டியின் சிபாரிசுகளை அனுசரித்துப் பல மாகாணங்களிலும் சிக்கன முறைகள் அனுஷ்டிக்கப் பட்டன. நீண்டகாலமாய் உத்தியோகம் பார்த்து வந்த சிலரும் பென்ஷனுடன் விலகிக்கொண்டனர். 1887-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று சென்னையில் ஸ்டாம்பு, ஸ்டேஷனரி இலாகா அதிபராக இருந்து வந்த பி. செஞ்சல் ராவ் அந்த ஸ்தானத்தை விட்டுப்பிரிந்தார். தாம் வகித்து வந்த பதவியை சென்னை கலக்டரிடமே ஒப் படைத்தால் சர்க்காருக்குப் பிரதி வருஷமும் 12,000 ரூபா மீதம் ஏற்படும் என்று உண்மையை எடுத்துக்காட்ட அவர் தயங்கவில்லை. இதே சந்தர்ப்பத்தில் சுமார் பன்னி ரண்டு வருஷகாலமாய் மிக்க திறமையுடனும் பெருமை யுடனும் ரெவினியூ இலாகாவில் உதவிக் காரியதரிசியாக இருந்து வந்த திவான் பஹதூர் வெங்காசாமி ராவும் பென்ஷன் பெற்றுக்கொண்டு பதவியைத்துறந்தார். அப்போது அவருடைய கண்ணியமான சேவையைச் சிலாகித்து சர்க்கார் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. ரெவினியூ போர்டா பீஸிலும் சில மாறுதல்கள் செய்யப் பட்டன.

வெங்காசாமி ராவ் வகித்து வந்த ஸ்தானத்திற்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் உயர்த்தப்பட்டார். இதே காலத்தில் இவர் அப்போது சர்க்காரின் பிரதம காரியதரிசி யாக இருந்த ஹென்ரி ஸ்டோக்ஸிடம் தமக்கு இருந்த சலுகையை உபயோகித்து கணித சாஸ்திர நிபுணர்களான ஆர்..வி. ஸ்ரீநிவாஸையரும் ஆர். சாமிநாதையரும் கலாசாலை ஆசிரியர் பதவியை விட்டு விட்டு போர்டாபீசில் உத்தி யோகத்தை யேற்கும்படி செய்தார். ஸ்ரீநிவாஸராகவை யங்கார் புதிய பொறுப்பை ஒப்புக்கொண்டு நான்கு மாத காலம் பூர்த்தியாவதற்குள்ளேயே ஆகஸ்ட் மாதத்தில் சென்னை குடிபாத்தியதைக் கமிட்டியின் யாதாஸ்து சர்க் காரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக் கமிட்டியின் பூர்வோத்திரங்களைத் தெரிந்து

கொண்டால்தான் இதற்கும் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு மிருந்த தொடர்பு தெளிவுபடும். 1865-ம் வருஷத்தில் குத்தகை வசூல் சட்டம் அமுலாக்கப்பட்டது. இதற்கு ஆறு வருஷங்களுக்குப் பின்பு ஹைக்கோர்ட்டு, பஸலி வருஷத்திற்கப்புறம் குடியை வெளியேற்ற நிலச்சுவா னுக்குப்பூரண அதிகாரமுண்டு என்று தீர்ப்பு அளித்தது. குத்தகைச் சட்டமோ அல்லது பழைய ரெகுலேஷன் களோ இந்த உரிமையைக்கட்டுப் படுத்த முடியாது என்பதும் அதில் குறிப்பிடப்பட்டது. ஆகவே சர்க் காருக்கு இதனால் கவலை பிறந்தது. இதற்கப்புறம் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக இந்த விஷயம் அதிகாரி களின் கவனத்தை முன்னைக்காட்டிலும் அதிகமாகக் கவர்ந்தது. 1879-ல் ஜமீன்தார்கள் நிலச்சுவான்தார்கள் என்ற முறையில் மிகவும் மோசமான நிலைமையில் இருப்ப தாகவும் ஆகவே அவர்களுக்கும் அவர்களது குடிகளுக்கும் இடையே உள்ள உறவு, பஞ்சகாலத்தில் அவர்கள் செய்ய வேண்டிய கடமை, பொதுமராமத்து சம்பந்தமாக அவர்களுக்கிருக்கும் பொறுப்பு, ஜமீன்தாரிப் பிரதேசங்களி லிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களின் அந்தஸ்து, கிராமக் கணக்குகள் பரிசீலனை, புள்ளி விவரங்கள் சேகரிப்பு ஆகிய பிரச்னைகளைப்பற்றி தீர்க்கமாக ஆலோசித்து முடிவுகளை அறிவிப்பதற்கான ஒரு கமிஷன் நியமிக்கப் படுவது உசிதமாகும் என்று போர்ட் மெம்பர்கள் சர்க்காருக்கு எழுதினர். அடுத்த ஆண்டில் பஞ்சக் கமிஷனின் யாதாஸ்து பிரசுரமாகியது. ஜமீன்தார் களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் நாளுக்கு நாள் விரோதம் விருத்தியாகிக் கொண்டே வருவதாகவும் குடி களுக்குக் கஷ்டம் நேரிட்டால் அவர்களை மேலும் உபத்திரவித்து, விரட்டவே ஜமீன்தார்கள் முயலுவதாக வும் குடிகளின் கைப்பற்று நிலத்தில் எந்த விதமான பாத்தியதையும் பிறக்காதபடி செய்வதே ஜமீன்தார் களின் நோக்கம் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆகவே இந்திய சர்க்கார் இந்தக் குறிப்புகள் அடங் கிய பகுதிகளையெல்லாம் ஒருங்கே திரட்டி எல்லா மாகாண சர்க்கார்களுக்கும் அனுப்பினர். பட்சபாத மின்றி விசாரித்து அபிப்பிராயத்தை அறிவிக்கும்படியும்

கோரினர். மேற்கொண்டு எத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொண்டால் எல்லோருக்கும் சமதர்மம் வழங்கப்படும் என்பதிலேயே மத்திய சர்க்காரின் நாட்டம் விழுந்தது. பாத்தியதை கொண்டாடும் குடியானவர்கள் தங்கள் வசமிருக்கும் நிலத்தைப் பங்கிட்டுக்கொண்டு சாகுபடி செய்வதை நிறுத்துவது உசிதமல்லவா? இதற்காகச் சட்டத்தைப் பிறப்பிப்பது அவசியம் அல்லவா? ஜமீன்தார்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் குடிகளை வெளியேற்றுவதைத் தடுத்து பயிரிடும் குடிகள் எல்லோருக்குமே நிலத்தில் சில உரிமைகளை அளிப்பது தர்மம் அல்லவா? இந்தக் கேள்விகளை மனசில் வைத்துக்கொண்டு விசாரணையை நடத்தும்படி இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டிருந்தனர். 1881-ம் வருஷத்தின் ஆரம்பத்திலே இந்த சுற்றறிக்கை சென்னைக்கும் வந்தது. காலஹரணம் எதுவுமின்றி அவ்வருஷம் மார்ச் மாதத்தில் மாகாண சர்க்கார் அதை ரெவினியூபோர்ட் அங்கத்தினர்களுக்கும் சில குறிப்பிட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி அவர்களது கருத்தைத் தெரிவிக்குமாறு வேண்டினர். குடிகளில் சிலர் நிலத்தைப் பயிரிடும்படி மற்றவர்களிடம்விட்டு அவர்களிடமிருந்து வாரத்தை வசூலிக்கும் வழக்கத்தைத் தடுக்க அவசியம் இருப்பதாகத் தோன்றவில்லை என்று உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலோர் கூறினர். சென்னை மாகாணத்தில் இது மிகவும் சகஜமான முறை என்றும் இம்மாதிரி உபகுடிகளே அதிகமாகப் பரவியிருப்பதாகவும் செஞ்சல்ராவ் அறிவித்தார். ஆனால் நிலத்தில் தங்கள் சொந்த உழைப்பினால் குடிகள் செய்யும் அபிவிருத்திகளுக்கான செலவை ஜமீன்தார்கள் ஈடுபண்ண வேண்டும் என்றும் ஜமீன்தார்களுக்கு நிலத்தில் எந்தவிதமான அதிகாரமும் இருக்கலாகாது என்றும் மாசூலில் ஒரு குறிப்பிட்ட பங்கை எடுத்துக்கொள்ள மட்டுமே அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும் எனவும் சர்க்கார் ரயத்துக்கள் போலவே ஜமீன்தார் குடிகளுக்கும் குடிவார பாத்தியதை இருக்கிறதை சர்க்கார் ஒப்புக்கொள்ளாத பட்சத்தில் இது விஷயமாக எவர் எவருக்குப் பாத்தியதை உண்டு என்பதை விசாரித்து முடிவுபண்ண கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் யோசனை கூறியிருந்தார்.

1865-ல் நிறைவேற்றப்பட்ட நிலக் குத்தகை வசூல் சட்டம் திருத்தப்பட்டு நிலத்தில் பாத்தியதையுள்ள குடிகளுக்கிருக்கும் உரிமைகள் சந்தேகத்திற்கு இடம் தராதபடி தெளிவு படுத்தப்படுவது மிகவும் முக்கியமான காரியம் என்று அப்போது தஞ்சையில் கலக்டராக இருந்த ஹென்ரி ஸ்டோக்ஸ் சர்க்காருக்கு எழுதினர். தற்போதைய சட்டத்தினுல் குழப்பமே ஏற்படுவதாகவும் அவர் கூறினர். ரெவினியூ போர்டாரும் சர்க்காருக்குத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கையில் உப குடிகளை ஏற்படுத்தும் வழக்கத்தைத் தடுப்பதற்குத் தாங்கள் சம்மதிக்கவில்லை எனவும் ஆனுல் நிலக்குத்தகை வசூல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதே தங்கள் முடிவெனவும் குறிப்பிட்டனர். "நீண்டகால சம்பிரதாயம் காரணமாகத் தற்சமயம் நிலவும் உரிமைகளை நன்கு எடுத்துக்காட்டி அவற்றை அமுலாக்குவதற்கே ஏற்பாடு செய்ய வேண்டும். ஜமீன்தார்களுக்கும் அவர்களது குடிகளுக்கும் இடையே உள்ள உறவைப் புதிய சட்டப்படி நிச்சயிக்கக் கூடாது" என்று போர்ட் அப்போது தெரிவித்தது.

உப குடிகள் சம்பந்தப்பட்டவரையில் தாங்களும் அந்தப் பழக்கத்தை மாற்ற உத்தேசிக்கவில்லை என்று சர்க்காரும் அறிவித்தனர். குடிவார பாத்தியதைப் பிரச்னையைப் பற்றி அவர்கள் கூறியது வருமாறு:—

> "சென்னை ஹைக்கோர்ட் தீர்ப்பின் கருத்தும் போக்கும் யாதாக இருப்பினும் சட்டத்தைக் குறித்து நீதிபதிக்கு இருக்கும் அபிப்பிராயத்தைக் குறித்து சம்சயம் தோன்ற முடியாது. வருஷ முடிவில் ஜமீன்தார் விரும்பினுல் தம் கீழிருக்கும் குடியைத் துரத்திவிடலாம் என்பதை அந்தத் தீர்ப்பு ஒரு அளவுக்கு அனுமதித்து விட்டதால் இப்போது பல ஜமீன்தார்கள் யதேச்சாதிகாரமான நிபந்தனைகளை விதிப்பதற்கும் ரயத்துகளிடமிருந்து தங்களுக்குச் சேரவேண்டிய வாரத்தின் அளவை அதிகரிக்கவும் அது இடம் அளித்திருக்கிறது. 1865-ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட 8-ம் சட்டமும் 1802, 1822-ம் வருஷங்களில் அமுலாக்கப்பட்ட ரெகுலேஷன்களும் எந்த அதிக்கிரமத்தைத் தடுத்து குடிகளுக்கு அதிக உரிமைகளை

யும் பூரணமான பாத்தியதைகளையும் அளிக்க உத்தேசித்தனவோ அவை நிறைவேறவில்லை என்பது இப்போது தெளிவாகியிருக்கிறது.

இது கவலையைத் தரும் பெரிய பிரச்னையாதலால் நிவாரண ஏற்பாடுகளைக் கடைபிடிப்பதில் இனி தாமதம் கூடாது என்று மே. த. கவர்னர் நிச்சயித்திருக்கிறார். ஆகவே அவர் கனம் மிஸ்டர் கார்மைக்கேல், கனம் மிஸ்டர் ஸல்லிவன், மிஸ்டர் பாஸ்டன் வெப்ஸ்டர், மிஸ்டர் எச். இ. ஸ்டோக்ஸ், கவர்ன்மெண்ட் ப்ளீடர் (பவல்) ஆகியோர் அடங்கிய கமிட்டி குடிவார பாத்தியதைகளைப்பற்றிய சந்தேகங்களை அடியோடு ஒழிப்பதற்கான மசோதாவை தயாரிப்பதற்காகவென்று நியமிக்கத் தீர்மானித்திருக்கிறார். ரயத்துகளுக்கும் அவர்களது வார்சுகளுக்கும் அவர்களிடமிருந்து உரிமையை ஸ்வீகரிப்பவர்களுக்கும் குடிவார பாத்தியதை தங்கு தடையின்றி உண்டு எனவும் ஆனால் அவர்கள் சர்க்காருக்கோ அல்லது சர்க்காரால் குறிப்பிடப்படும் நபர்களுக்கோ மாசூலில் சர்க்காருக்குச் சேரவேண்டிய பாகத்தைத் தரவேண்டும் என்பது அடிப்படையானது எனவும் அதை எப்படித் தருவது என்பது வழக்கத்தையோ அல்லது ஒப்பந்தத்தையோ அல்லது தக்க அதிகாரிகளின் முடிவையோ தழுவியதாக இருக்கவேண்டும் எனவும் இதற்கு அத்தாட்சியாக பட்டாவும் முச்சலிக்காவும் இருக்க வேண்டும் எனவும் இவை இரண்டும் இல்லாமல் பரஸ்பர உடன்பாடு மூலமாகவும் ஏற்பாடு செய்து கொள்ளலாம் எனவும் தீர்வை பாக்கிக்காக சட்ட பூர்வமான நடவடிக்கை மூலம் நிலத்தைவிட்டு விரட்டப்படாத வரையிலும் அல்லது சட்டம் விதித்திருக்கும் முறையில் ஒப்பந்தம் செய்துகொள்ளும் பட்சத்திலும் குடிகள் தங்களுக்கிருக்கும் பாத்தியதைகளை கிரயம் பண்ணவோ அல்லது தானமாகத் தரவோ சுதந்திரம் உண்டு எனவும் திட்ட வட்டமாகத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் விரும்புகிறது.

பஞ்சக் கமிஷன் சிபாரிசு செய்த விதத்தில் ஜமீன்தாரிகளிலும் இனும் நிலங்களிலும் இருக்கும் குடி

களுக்கு குடிவார பாத்தியதைகளும் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் உரிமையும் மசோதா மூலம் வழங்கப்பட வேண்டும் என்பது சர்க்காரின் விருப்பம். இந்த உரிமைகளும் பாத்தியதைகளும் குடிகளுக்கு இல்லை என்று கருதும் நிலச்சுவான்தார் அதைத் தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும் என்பதும் அறிவிக்கப்படுவது அவசியமாகும். முதலில் நிலச்சுவானுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் ரயத்து நிலத்திலிருந்து தாம் வெளியேற்றப் படுவதற்கும் அதிக பட்சம் குத்தகை தருவதற்கும் சம்மதித்ததாகக் காணப்படுமாயின் யார் இதை எடுத்துக் காட்டுகிருரோ அவரே அதை நிரூபிக்கவேண்டும்.''

இந்தக் கமிட்டி ஒருநாள்கூட சந்திக்கவே இல்லை. இதற்கிடையில் 1882-ல் பஞ்ச காலத்தில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய விதிகளைத் தயாரிப்பதற்காக சர்க்காரால் நியமிக்கப்பட்ட கமிட்டியார் 1865-ம் வருஷத்திய சட்டத்தில் எந்த நிலச்சுவானும் பஞ்ச நாட்களில் ஒரு வருஷத்திற்கு மேல் தமக்குச் சேரவேண்டிய பாகத்தை வசூலிக்காமல் இருந்துவிட்டால் அதை அவர் பறிகொடுக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினர். ஆகவே சட்டம் திருத்தப்படும் போது இந்த நிர்ப்பந்தம் ஒழிய வேண்டும் என்றும் யோசனை கூறினர்.

பஞ்சக் கமிஷன் அங்கத்தினர்களுள் ஒருவராக இருந்து தேசம் முழுதும் சுற்றிப்பார்த்து நேரில் பல விஷயங்களைத் தெரிந்துகொண்ட ஸர் ஜேம்ஸ் கேர்ட் இங்கிலாந்துக்குத் திரும்பியபின் 1883-ல் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அவர் அதில் தெரிவித்திருக்கும் சில அபிப்பிராயங்கள் நாட்டின் நிலைமையை அறிவதற்கு உதவும்: நிலமுடையவர்களிடமிருந்து சர்க்கார் வசூலிக்கும் கிஸ்தியைக் காட்டிலும் ரயத்துகள் செலுத்தும் குத்தகை மூன்று மடங்கு அதிகமாக இருப்பதாக அவர் அறிவித்தார். "பயிரிடுவோருக்குக் குடிவார பாத்தியதை இருப்பதில்லை: ஆயினும் ஜமீன்தார்கள் அவர்களை உபத்திரவிப்பதில்லை'', என்று குறிப்பிட்டுவிட்டு தங்கள் அதிகாரத்தை விஸ்தரித்துக் கொள்வதற்காகப் பெரிய உத்தியோ

கஸ்தர்கள் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளே இந்த உபத்திரவங்களுக்குக் காரணமாயிருப்பதாக அவர் கூறினர்.

"தலைநகரில் உள்ள முக்கிய அதிகாரிகள், எல்லோரையும் தங்கள் ஆதீனத்திற்குட்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் அடிக்கடி புள்ளிவிவரங்களைக் கேட்பதும் மிக்க சிரமத்துடன் ஜில்லா உத்தியோகஸ்தர்கள் அவற்றைச் சேகரித்து அனுப்பிய பின்பு அவற்றை வாங்கித் தங்கள் பீரோக்களில் பத்திரமாகப் பூட்டிவைப்பதும் சகஜமாக இருந்துவருகிறது. எந்தக் காலத்திலும் நிலத்தைச் சொந்தமாக வைத்துக்கொள்ளாதவர்கள் நிலச்சுவான்களுக்கும் குடிகளுக்கும் இருக்கவேண்டிய தொடர்பைக் குறித்து தங்களது கொள்கைகளைப் பரீட்சைசெய்து பார்க்கின்றனர். ஆனால் அதிகாரத்திற்கு வந்ததும் சமூகத்தில் முக்கியமாக இருக்கும் இந்தப் பிரச்னையை முடிவுசெய்து பெருமை சம்பாதிக்க ஆசைப்படுகின்றனர்*

உண்மையான ஸ்திதி இதுதான்! ஒவ்வொருவரும் தாம் போற்றித்தொழுது வந்த சில கொள்கைகளைக் காரியத்தில் நடத்தவே ஆசைப்பட்டனர்.

இந்தச் சிக்கலான பிரச்னையை சமரஸமாகத் தீர்ப்பதற்காக ஸர் பிலிப் ஹட்சின்ஸ் ஒரு சிறிய மசோதாவைத் தயாரித்தார். நாட்டின் சம்பிரதாயப்படி நிலத்தில் குடிகளுக்கு அனுபவ பாத்தியதை இருப்பதாகவும் ஆகவே கோர்ட்டார் தங்கள் விசாரணைக்கு வரும் வழக்குகளில் அந்த உரிமை இல்லை என்று நிரூபிக்கப்பட்டால்தான் அதை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் உபகுடிகளும் ஜமீன்தாரி பண்ணைகளைச் சாகுபடி செய்பவர்களும் நிலச்சுவான் சார்பில் நிலத்தைப் பயிரிடுவோரும் இந்த சட்டத்தினால் பாதிக்கப்படலாகாது என்றும் அதில் விதிக்கப்பட்ட நிலத்தைச் சாகுபடி செய்யாமல் தாம் அப்புறப்படுத்தப் படுவதற்கு ஒரு குடி எழுத்துமூலம் ஒப்புக்கொண்டிருந்தாலும் அதற்குப் போதிய காரணம் இருக்கவேண்டும்,

*இந்தியா: நாடும் மக்களும், பக்கம் 124

குடிகளுக்கு இந்த அனுபவ உரிமை நிலைக்கவேண்டு மாயின் அவர்கள் 12 வருஷ காலத்திற்குக் குறையாமல் அந்த உரிமையை அனுபவித்து வந்திருக்கவேண்டும், இந்த மசோதா சட்டமான பிறகு எவராவது இந்த உரிமையை இழக்க விரும்பும் பட்சத்தில் அதை கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீஸர் முன்னிலையில் அறிவிக்க வேண்டும் என்றூர் அவர். இதற்கப்புறம் ஸர் பிலிப் ஹட்சின்ஸ் சர்க்கார் நிலவரி வசூல்செய்வது போலவே ஜமீன்தாரும் தமக்குச் சேரவேண்டிய குத்தகை பாக்கியை முதலில் வசூலித்துக்கொள்ளும் உரிமையும் அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். குடிகள் அநியாயமாகவோ அல்லது குத்தகைச் சீட்டில் குறிப்பிடப்பட்ட ஷரத்துக்களுக்கு முரணுகவோ நடந்துகொள்ளும் பட்சத்தில் குடிகளை வெளியே துரத்த நிலச்சுவானுக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்றும் அவர் உத்தேசித்தார்.

இந்த மசோதாவின் பிரதிகள் மாகாணத்தில் பல உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக அனுப்பப்பட்டன. கிருஷ்ணு ஜில்லா கலெக்டர் ஹார்ஸ்பால் தமது ஜில்லாவில் குடிகள் தங்களுக்கிருக்கும் உரிமைகளை இழந்திருப்பதாகவும் குத்தகைச் சீட்டு புதுப்பிக்கப்படும் சமயத்தில் நிலச்சுவான்கள் அதிக வாரத்தை நிர்ப்பந்திப்பதாகவும் இதை நிவர்த்திக்க ஜமீன்தாரி பிரதேசம் பூராவுக்கும் நிலத்தீர்வை விகிதம் நிர்ணயமாகவேண்டும் எனவும் உரிமையைக் காட்டிலும் குத்தகை ஒரு அளவுக்குக் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்பதே அங்குள்ள ரயத்துகளின் பிரதான கோரிக்கை எனவும் எழுதினூர். விசாகப்பட்டினம் ஜில்லா கலெக்டரான விண்டர்பாதம் அங்கு சென்ற 15 வருஷங்களாக ஜமீன்தாரி நிலங்களில் குடிகளுக்கிருக்கும் உரிமையைப் புறக்கணித்தே கோர்ட்டார் தீர்ப்பு கூறிக்கொண்டு வருவதாகவும் இந்த உரிமையை சம்பிரதாயம் அங்கீகரிக்கவில்லை என்றும் நாளடைவில் சாதிக்கப்பட்டுவிடும் எனவும் அறிவித்தார். தஞ்சையில் கலக்டராயிருந்த ஹென்ரி ஸ்டோக்ஸ் தம்முடைய ஜில்லாவில் நிலச்சுவான்தான் பாதுகாப்பை அபேக்ஷிப்பதாயும் குடிகளின் நிலைமை கவலைக்கிடம் தரவில்லை எனவும் கூறிவிட்டார். இறுதியில் ஹட்சின்ஸ் மசோதா நழுவவிடப்பட்டது.

அடுத்தபடியாக கவனத்திற்குரியது கார்மைக்கேல் மசோதா. 1883-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கார்மைக்கேல் அதை சர்க்காரிடம் சமர்ப்பித்தார். இந்தப் பிரச்னையைப் பரிசிலிப்பதற்கான கமிட்டி ஒன்றில் கார்மைக்கேல் அங்கத்தினராக நியமிக்கப்பட்டும் தம் சகாக்களைக் கலக்காமல் ஒரு மசோதாவைத் தயாரித்தார். (இக்கமிட்டியின் அங்கத்தினர்களாக பின்பு ஹட்சின்ஸ், ஏ. எல். வேங்கடரமண பந்துலு ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டனர். இவர்களில் பிந்தியவர் இந்த மசோதா தயாரிப்புக்கு உதவினர்.) கார்மைக்கேல் இந்த மசோதாவில் வங்காளத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தையே தமக்கு ஆதாரமாகக் கொண்டிருந்தார். சென்னை மாகாணத்திற்கேற்றதான சில திருத்தங்களுடன் வங்காள சட்டத்தை இங்கும் அமுலாக்க அவர் உத்தேசித்தார். இந்த மசோதாவும் மாகாணத்தில் உள்ள முக்கியஸ்தர்களுக்கும் ஜில்லா அதிகாரிகளுக்கும் அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வதற்காக அனுப்பப்பட்டது.

பலர் பலதரப்பட்ட ஆக்ஷேபங்களை வெளியிட்டனர். பறிமுதல் செய்வதாகவும் அநாவசியம் எனவும் நடக்கக்கூடாதது எனவும் அதர்மமானது எனவும் அநியாயமானது எனவும் புரட்சிகரமானது எனவும் அதைப்பற்றி அவர்கள் ஒருமுகமாகக் கருதினர். அவர்கள் கூறியதன் சாரம் வருமாறு: இந்த மசோதாவின் நோக்கம் கண்டிக்கத் தக்கது. இதில் சம்பிரதாயம் அலக்ஷியம் செய்யப்பட்டு புதுரகக் குடிகள் தலைகாட்ட ஏற்பாடாகியிருக்கிறது. இதுவரை எவரும் கண்டறியாத உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மசோதாவின் பீடிகையில் சுட்டிக்காட்டப்பட்ட லக்ஷியம் கைகூடாமல் புதிய நிலைமை இதற்கப்புறம் தலைகாட்டும். நாடு முழுதும் அதிருப்தி பரவி, தகராறுகள் முளைத்து, தாவாக்கள் அதிகரிக்கவே இது உதவும். இதனால் காலப்போக்கில் ஜமீன்தார்களும் குடிகளும் ஏழ்மையில் தவிக்கவேண்டியிருக்கும். நடவடிக்கை விஷயமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் வரிவசூல் இலாகாமீது தாங்க முடியாத பாரத்தைச் சுமத்தும். சாமான்ய இனம்தார்களுக்கு இதனால் அனர்த்தம் சம்பவிக்கும். குத்தகை ஒரு அளவுக்கு

நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதை எல்லோரும் ஒரு முகமாக ஒப்புக்கொள்ளவில்லையாயினும் இந்த மசோதாவில் விதிக்கப்பட்டிருக்கும் விகிதம் மிகக் குறைந்தபட்சமானதாக இருக்கிறது. ஒப்பந்தங்களை உடனே நிராகரித்து விடக்கூடாது. பண்ணை நிலங்களிலிருந்தும் வரி வசூல் செய்வது நூதன ஏற்பாடாதலால் அதை அங்கீகரிக்கக் கூடாது. அபிவிருத்தி செய்வதுபற்றிய பிரிவுகள் நேர்மையாக இல்லை. புதிதாக நிலங்களைப் பயிரிடுவது சம்பந்தமாக விதிகள் தெளிவாக இல்லை. தமக்குச் சேரவேண்டிய குத்தகைப் பாக்கிக்காக நிலத்தை ஜப்தி செய்ய ஜமீன்தாருக்கிருக்கும் உரிமையைப் பறிக்கக் காரணம் எதுவும் கிடையாது. அனுபவபூர்வமாக இதற்கு அவசியம் இல்லை என்பது தெளிவாகியிருப்பதுடன் இந்த நடவடிக்கையால் இருதரப்பாருக்கும் அதிகச் செலவும் சிரமும் தான் சம்பவிக்கும்.

போர்ட் மெம்பர்கள் இந்த அபிப்பிராயத்தைத் திரட்டி ரெவினியூ இலாகா காரியதரிசிக்கு அனுப்பியபோது ஸ்ரீநிவாஸராகவையங்கார் அங்கு அவருக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தார். ஆதலால் மேற்கொண்டு என்ன செய்வது என்பதுபற்றி இவர் ஒரு குறிப்பைத் தயாரிக்க வேண்டி வந்தது.

"1. எல்லா உத்தியோகஸ்தர்களும் இந்த குடிபாத்தியதை மசோதாவைப்பற்றி அதிருப்தியையே ஏகமனதாக வெளியிட்டிருப்பதால் சந்தர்ப்பத்திற்கொத்தாற்போல் புதிய மசோதா ஒன்று தயாரிக்கப்படவேண்டும் என்று போர்ட் அபிப்பிராயப்படுகிறது.

2. கிராம முன்சீப் கோர்ட்டுகளை ஜமீன்தார்கள் தங்களுக்கும் தங்களது குடிகளுக்குமிடையே இருக்கும் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தி வருவதாகவும் ஆகவே எந்தவிதமான வழக்கு வந்தபோதிலும் கிராம முன்சீப்கள் இத்தகைய பிரச்னைகளைத் தீர்க்கக் கூடாது என்று ஹைக்கோர்ட்டிலிருந்து சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. 1865-ம் வருஷத்திய சட்டத்தில் காணப்படும் தோஷங்களை

யும் நீக்கவேண்டும் என்று நீதிபதிகள் விரும்புகின்றனர்.

3. குடிபாத்தியதை மசோதாவின் 61-வது பிரிவு பிரகாரம் குத்தகைப் பாக்கியை வசூலிப்பதற்கான வியாஜ்ஜியங்களை கலெக்டர் தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது

4. 1865-ம் வருஷத்திய எட்டாம் சட்டத்தைத் திருத்துவது சம்பந்தமாக ஹைக்கோர்ட் அளித்த யோசனையை யொட்டி இந்த விஷயமாய் அப்பீலின் போது ஹைக்கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளைத் தொகுக்க ஏற்பாடாகி இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமுலாக்குவதற்குப் பாதகமாகக் கீழ்த்தர ஜில்லா கோர்ட்டுகளில் வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்புகளின் விவரங்களை அறிவிக்கும்படியும் ரெவினியூ அதிகாரிகளும் ஜில்லா ஜட்ஜ்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.''

அப்போது ரெவினியூ இலாகாவில் காரியதரிசியாக இருந்தவர் டபிள்யூ. வில்ஸன். அவர் நிலவரி வசூல் விவகாரங்களில் தெளிவான ஞானம் படைத்தவர். எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் தைர்யமாகவும் திடமாகவும் அதைச் சாதிக்கும் சக்தி வாய்ந்தவர். கார்மைக்கேல் மசோதாவில் பல குற்றங் குறைகள் இருப்பதை உணர்ந்தவர். கமிட்டியாரை ஆலோசியாமல் அது இயற்றப்பட்டது என்பதும் வில்ஸனுக்கு சகிக்க முடியாத கோபத்தை விளைவித்தது. ஆகவே ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதிய குறிப்பை அனுசரித்து அவர் இந்தப் பிரச்னையைத்தீர்க்கத் தீர்மானித்தார். திரும்பவும் ஒருபெரிய கமிட்டியைக் கூட்டி சாதகபாதகங்களை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து சரியான ஏற்பாடு செய்யவேண்டும் என்ற ஆவல் அவருக்கு மிகுந்திருந்தது.

1885-ம் வருஷம் ஜூலை மாதம் சர்க்கார் இந்தக் கமிட்டியை அமைத்தனர். கனம் மிஸ்டர் மாஸ்டர், கனம் மிஸ்டர் வெப்ஸ்டர், கனம் மிஸ்டர் குட்ரிச், கனம் ஸ்ரீ எஸ். சுப்ரமணிய ஐயர், மிஸ்டர் கார்ஸ்டின், மிஸ்டர் எச். ஜே. ஸ்டோக்ஸ், கவர்ன்மெண்ட் ப்ளீடர் மிஸ்டர்

பவல், ஸ்ரீ பி. செஞ்சல் ராவ், போர்டு சிரஸ்தேதார் ஸ்ரீ பி. ராஜரத்தின முதலியார், ரெவினியூ ஸெடில்மெண்டு டிபுடி டைரக்டர் ஸ்ரீ ஜே. லக்ஷ்மீகாந்த ராவ், டிபுடி கலெக்டர் ஸ்ரீ அதங்கி சுதர்சன ராவ், டிபுடி கலெக்டர் ஸ்ரீ காஞ்சி சுப்பராவ், ஸ்ரீ வி. பாஷ்யம் ஐயங்கார் ஆகியோர் இதில் இடம் பெற்றனர். ரெவினியூ இலாகா உதவிக் காரியதரிசி ஸ்ரீ டி. வெங்காசாமி ராவ் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். "இதுவரை எல்லோரும் ஒரு முகமாக ஒப்புக்கொண்டுள்ள தோஷங்களைக் கவனித்து அநாவசியமான மாறுதல்களைச் செய்யாமல் நிலச்சுவானுக்கும் குடிகளுக்கும் பாரபக்ஷமின்றி நியாயத்தை வழங்கப் புது மசோதாவைத் தயாரிக்கவேண்டும்" என்றும் சர்க்கார் இந்தக் கமிட்டிக்குத் தங்கள் உத்திரவில் அறிவித்தனர்.

சுமார் இரண்டு வருஷங்களுக்கப்புறம் 1887-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இந்தக் கமிட்டியின் யாதாஸ்து சர்க்காருக்குக் கிடைத்தது. இதன் அங்கத்தினர்கள் முதலில் கார்மைக்கேல் மசோதாவை நிராகரித்துவிட்டு வங்காளத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய மசோதாவைத் தயாரித்தனர்.

> "மிகவும் ஆழ்ந்த ஆலோசனைக்கப்புறம் இந்த மாகாணத்தைத் தழுவிய வரையில் புதிய வங்கச் சட்டத்தை உதாரணமாக வைத்துக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம். பிந்திய சட்டம் தீர்க்கமான விவாதத்திற்கப்புறம் உருவாகியதாகும். நிலச்சுவான்தாருக்கும் குடிக்கும் இருக்கும் உரிமைகளைப்பற்றியும் இடையில் அலசிப் பேசப்பட்டது. முதல் வங்காள மசோவில் காணப்பட்ட குறைகள் எங்கள் ஆலோசனைக்கு விடப்பட்ட நகல் மசோதாவில் இடம் பெற்றுவிட்டதால்தான் அது எங்கும் பலமாகக் கண்டிக்கப்பட்டது. எனவே அவற்றை இப்புதிய மசோதாவில் நாங்கள் சேர்க்கவில்லை, இப்போது நிலத்தில் பாத்தியதைக் கொண்டாடும் குடியின் உரிமைகளைப் பாதுகாக்க ஏற்பாடாகியிருக்கிறது. மத்திய சட்டசபையில் வங்காளத்திற்காக இயற்றப்பட்ட சட்டத்தில்

காணப்படாத புதிய ஷரத்துகள் இப்போது புகுத்தப் பட்டால் அது சென்னை சர்க்கார் 1882-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 29-ம் தேதியன்று வெளியிட்ட தீர்மானத்திற்கு விரோதமாகிவிடும். இது தவிர இதனுல் இதர பாதகங்களும் சம்பவிக்கும்.''

சில விஷயங்களில் இந்தக் கமிட்டி அங்கத்தினர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருந்தது. சிலர் தங்கள் கருத்துகளை தனியாக அறிவித்தனர். இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் அநியாயமாகக் குத்தகை உயர்த்தப்பட்டது என்ற காரணத்தைக் கொண்டு அதைக் குறைக்கவேண்டும் என்று ரயத்துகள் வழக்காடுவதற்கு அனுமதி அளிப்பது உசிதமல்ல என்று குட்ரிச் குறிப்பிட்டார். இதனுல் வீண் வியாஜ்ஜியங்கள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறினர். காஞ்சி சுப்பராவ் இந்தச் சட்டம் அமுலாவதற்கு 12 வருஷங்களுக்கு முன்பிருந்த குத்தகையை ஆக்ஷேபித்து வழக்குத் தொடரும் உரிமையை ரயத்துக்கு தரக்கூடாது என்று கருதினர். லக்ஷ்மிகாந்த ராவ் இந்தக்காலவரையறை 3 அல்லது 4 வருஷங்களுக்கு மேற்பட்டிருக்கலாகாது என்ருர். ராஜரத்தின முதலியார் நிலத்தில் இருக்கும் பாத்தியதைகளையும் குத்தகை விகிதங்களையும் எடுத்துக்காட்டும் ரிஜிஸ்தர்கள் தயாரிக்கப்படாத வரையில் தகராறுகள் முளைத்துக் கொண்டே இருக்கும் எனத் தெரிவித்தார். நிலச்சுவான்கள் தங்கள் எஸ்டேட்டுகளை ஸர்வே பண்ணி தீர்வையை விதிப்பது சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் யோசனை கூறினர். அவர் எழுதியது வருமாறு:—

"தற்போதிருக்கும் சட்டத்தைவிட இந்த மசோதா எவ்வளவோ திருப்திகரமானது. குடிகள் ஹிம்சிக்கப் படுவதைத் தடுத்து நிலச்சுவான்களின் நியாய உரிமைகளுக்குப் பாதகமிராதபடிச் செய்யும் நோக்கத்துடன் அவ்விரு சாராருக்கும் உரிமைகளை இது தெளிவாக்கியிருக்கிறது. இரு தரப்பாருக்கும் நியாயத்தை வழங்க வேண்டும் என்ற விருப்பம் காரணமாக இதில் அநேகம் ஷரத்துகளும் விதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை பின்னர் அமுலா

கும்போது வழக்குகள் அதிகரிக்கும் என்றும் அதனுல் ஏற்படும் காலதாமதம், செலவு ஆகியவை காரணமாக இறுதியில் குடிகளே கஷ்டப்படவேண்டியிருக்கும் என்றும் நான் அஞ்சுகிறேன். இந்த மசோதாவின் உத்தேசம் சுலபமாயும் சரியாகவும் கைகூட வேண்டுமாயின் நிலத்தில் இருக்கும் பாத்தியதைகளேயும் வசூலிக்கப்படும் குத்தகை விகிதங்களேயும் எடுத்துக் காட்டும் உரிமைப்பதிவு ரிஜிஸ்தர்கள் தயாரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்கப்புறம் அவ்வப்போது இது திருத்தப்பட்டு வரவேண்டும்."

இந்தப் புதிய கமிட்டியாரின் அறிக்கை சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்ட சமயத்திலும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ரெவினியூ காரியதரிசிக்குத் துணையாக இருந்தார். முதலில் இந்தக் கமிட்டியில் ஸ்ரீநிவாஸராகவையங்காரையும் சேர்த்துக் கொள்ள சர்க்கார் உத்தேசித்தனர், ஆனுல் ஏற்கெனவே பல உத்தியோகஸ்தர்களேப் பொறுக்கிவிட்டபடியால் இவர் விலகி நிற்க நேர்ந்தது. நீதிபதிகளின் தீர்ப்புகளேத் திரட்டிவைக்க இவர் ஏற்பாடு செய்திருந்தது கமிட்டிக்குப் பெரிதும் உதவியது. இந்தத் தீர்ப்புகளின் பலாபலன்களேப் பற்றியும் அவற்றின் போக்கைக் குறித்தும் இவர் ஒரு சிறிய குறிப்பை எழுதித்தந்தார்.

கமிட்டியின் யாதாஸ்து சர்க்காரின் பார்வைக்கு வந்ததும் அதைப்பற்றி அபிப்பிராயத்தை அறிவிக்குமாறு இவர் கேட்டுக்கொள்ளப் பட்டார். அப்போது இவர் நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் குடிகளுக்கும் இடையே எத்தகைய தொடர்பு இருக்கவேண்டும் என்பதை விவரித்தார். புதிதாகச் சட்டம் இயற்றப்பட்டால் அது எவ்விதம் அமைந்திருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டினுர். இவர் வெளியிட்ட கருத்துக்கள் வாயிலாக நிலப் பிரச்னேகளில் இவருக்கிருந்த அதிசய ஞானத்தை நாம் அறிய முடியும்.

"ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்கும் இருக்க வேண்டிய உறவை நிர்ணயிக்கும் சட்டத்தில் அடியிற் கண்ட அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும். நிலத்தில் மேல்வாரம், குடிவாரம் என்ற இரு பாத்தியதைகள் உண்டு. ரயத்தி அல்லது அயன்நிலம் என்றும்

பண்ணை அல்லது காமர் நிலம் என்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. முந்தியதில் ஜமீன்தாருக்கு மேல் வாரம் வசூலிக்க மட்டுமே அதிகாரம் உண்டு. பிந்தியதில் அவர் இரண்டுவித வாரங்களையும் வசூலிக்கலாம். மாகாணம் முழுதிலும் இந்தப் பாகுபாடு நன்ருகத் தெரியும். தொன்று தொட்டு வழங்கிவரும் சட்டமும் இதை ஒப்புக்கொள்கிறது. இந்த வித்தியாசத்தை மனசில் முக்கியமாக இருத்திக்கொண்டு அந்த அஸ்திவாரத்தின் மீதே ஜமீன்தாருக்கும் குடிக்கும் இருக்க வேண்டிய உறவு ஊர்ஜிதமாகவேண்டும். இதற்கப்புறம் நான்கு விதமானவர்களைப் பற்றி கவனிக்க வேண்டிவரும். முதலாவது, மேல்வாரம்தார் அல்லது சர்க்காருக்கு அடுத்தபடி நிலத்திற்கு உரிமை கொண்டவர்; இரண்டாவது, மேல்வார உரிமை மூலம் பாத்தியதைகளை அனுபவிப்பவர்; மூன்ருவது, ரயத்து அல்லது குடிவார உரிமை உள்ளவர்; நான்காவது ரயத்துகளுக்கும் கீழ்ப்பட்டவர்கள். இரண்டாவது, நான்காவது வர்க்கத்தினருக்கு விசேஷமான பாதுகாப்பு தேவை இல்லை. ஒப்பந்தங்கள் மூலம் அவர்கள் அதிகாரங்கள் நிர்ணயிக்கப்படலாம். இப்போது செய்யப்படவிருக்கும் சட்டத்தில் ரயத்துகளுக்கும் அவர்களுக்கு மேல் இருக்கும் மேல்வாரதார்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவு தான் தெளிவாக விதிக்கப்பட வேண்டும்.

1. அனுபவ உரிமைகள்

(1) ஆக்ஷேபம் இராத வரையில் எல்லா பூமியும் ரயத்தி நிலம் என்றே கருதப்பட வேண்டும் (2) ஜமீன்தாரின் சொந்த நிலத்தை ஒருவர் 12 வருஷங்களுக்குக் குறையாமல் தங்குதடையின்றி அனுபவித்து வந்திருக்கும் பட்சத்தில் அது ரயத்தி நிலமாக நிச்சயிக்கப்பட வேண்டும் (3) ரயத்தி நிலத்தைப் பயிரிடுவோர்களுக்கு அதில் பாத்தியதை உண்டு (4) ரயத்தி நிலத்தைப் பயிரிடும் குடிகள் கோர்ட் உத்திரவின்றி வெளியேற்றப்படக் கூடாது (5) தரிசு நிலத்தை மேல்வாரதார் முதலில் தம் கீழ் பயிரிடும் குடிகளுக்குத் தரவேண்டும். அவர்கள் ஒப்புக்கொள்

ளாவிட்டால் தான் அதை அந்நியர்களிடம் கொடுக்க வேண்டும். அந்தக் கிராமத்தில் அதைப்போல் இருக்கும் நிலம் எந்த நிபந்தனைகளின் பேரில் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதோ அதையே இது விஷயத்திலும் அனுசரிக்க வேண்டும் (6) தங்கள் கைப்பற்று நிலத்தை அளந்து பார்க்கவும் அது ரயத்தியா அல்லது பண்ணையா என்பதை முடிவு செய்யவும் ரயத்துகளும் மேல்வாரம் தார்களும் கலக்டரிடம் மனுப் போடலாம். (7) தரிசு நிலத்தைத் தமது பண்ணையில் சேர்த்துக் கொண்டு அங்கு தோட்டம் வைக்கவும் மரங்களை வளர்க்கவும் கோர்ட்டாரின் அனுமதியைக் கேட்க மேல்வாரதாருக்கு உரிமை உண்டு. வனப் பராமரிப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விதத்தில் ரயத்துகளது ஆக்ஷேப சமாதானங்களைக் கேட்டபின் கோர்ட்டார் அனுமதி அளிக்கலாம். சாகுபடியை அதிகரிப்பதன் அவசியமும் ரயத்துகளின் தேவையும் முடிவு கூறுமுன் கவனிக்கப்பட வேண்டும். (8) பொது நலனை முன்னிட்டு ரயத்தி, பண்ணை நிலங்களை நிர்ணயிப்பதற்காக எந்த எஸ்டேட்டையும் ஸர்வே செய்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். இதற்கான செலவை மேல்வாரதார்களிடமிருந்தும் ரயத்துகளிடமிருந்தும் அந்த இரு சாராருக்கும் பூமியில் இருக்கும் உரிமைக்கேற்ப வசூலிப்பதற்கு கலக்டர் ஏற்பாடு செய்யவேண்டும். ஜமீன்தாருக்குக் கொடுக்கப்படும் குத்தகையில் பத்தில் ஒருபாகம் என்ற தவணையில் இதைக் கொடுத்துத் தீர்க்கலாம். (9) பண்ணை நிலத்தில் மேல்வாரதாரின் உரிமைகள் சாதாரண சொத்துரிமைச் சட்டத்தைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும்.

2. குத்தகை அதிகரிப்பும் அபிவிருத்தி ஏற்பாடுகளும்

(1) ரயத்தி நிலத்தைச் சேர்ந்த குடிகள் வழக்கத்திற்கு அதிகபக்ஷமான குத்தகையை---அது பணமானாலும் சரி, தான்யமாயினும் சரி, உற்பத்தியில் ஒரு பங்காயினும் சரி—தரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கக்கூடாது. அநியாயமானதும் அதர்மமானதுமான அளவுக்கு வசூலிக்கக்கூடாது. அதாவது,

அந்தக்குத்தகை, ரயத்து தன் சாகுபடிச் செலவை ஈடுபடுத்திக்கொண்டு தான் மேற்கொண்ட சிரமத்திற்குப் பிரதி பலன் பெறுவதற்கும் பாதகமாக இருக்கக் கூடாது (2) முந்திய மூன்று வருஷகாலத்தில் கொடுத்து வந்த குத்தகையையே நியாயமானதாகக் கருதப்படவேண்டும். (3) கிராமத்துப் பயிரைப் பிரதானமாகக்கொண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட குத்தகையை ரயத்தி நிலத்திலிருக்கும் குடி கொடுக்கும் வரையில் அவர் தமக்கிஷ்டமான விதத்தில் பயிரிட அனுமதிக்கப்பட வேண்டும் (4) நிலத்தை அபிவிருத்தி செய்ய அவருக்கே முதலில் உரிமை இருக்கவேண்டும். இதற்கடுத்தபடி தான் மேல் வாரதாருக்கு உரிமை உண்டு. (5) ரயத்து செய்த அபிவிருத்திகாரணமாக ரயத்தி நிலத்தின் மதிப்பு ஜாஸ்தியாகுமாயின் அதனல் ஏற்படும் அனுகூலத்தை அனுபவிக்க ரயத்து அனுமதிக்கப்படவேண்டும். (6) மேல் வாரதார் முயற்சி காரணமாக மதிப்பு மேலிட்டால் அந்த அனுகூலத்தை அனுபவிக்கும் அதிகாரம் அவருக்கே இருக்க வேண்டும். ஆனல் பயிரிடும் செலவில் ஏற்படும் அதிகரிப்பும் இவ்விதம் அதிகமாகச் செலவழிப்பதன் பலனை ரயத்து அனுபவிப்பதற்கும் வசதி செய்யவேண்டும் (7) நிலத்தின் மதிப்பு அபிவிருத்தியாவதற்கு சர்க்காரின் தண்ணீர் உபயோகப்பட்டு அதற்கான தீர்வையை ரயத்து கொடுத்தால் லாபத்தை அனுபவிக்க ரயத்துக்கே உரிமை இருக்கவேண்டும். ஆனல் அந்தத்தீர்வையைக் கொடுக்க ஜமீன்தார் சம்மதித்தால் சர்க்கார் விதித்துள்ள தண்ணீர்த் தீர்வையை அனுசரித்து ரயத்திடமிருந்து அதிகமாகத் தீர்வையை வசூலிக்கலாம் (8) இயற்கை வசதிகள் காரணமாகவோ விவசாய ஞானம் அதிகரித்ததன் பலனகவோ சரஸமாக எரு முதலிய உரங்கள் கிடைத்ததனலோ நிலத்தின் உற்பத்தி அபிவிருத்தியடைந்தால் அது ரயத்துக்கே சொந்தமாக வேண்டும். (9) தான்ய விலை அதிகமாகி வருமானம் விருத்தியடைந்தால் அந்த அளவுக்கேற்ப குத்தகையில் மூன்றில் இரண்டு பாகத்தை மேலும் மேல்வாரதார் வசூலிக்கலாம். மிகுந்த ஒரு பாகத்தை அதிகரித்திருக்கும் சாகுபடிச் செலவுக்காக

வைத்துக் கொள்ளவேண்டும் (10) ஒரு ரூபாய்க்கு இரண்டு அணுக்களுக்கு மேலும் அல்லது பன்னிரண்டரை சத விகிதத்திற்கு அதிகமாயும் குத்தகை தர தாங்களாகவே சம்மதிக்கக்கூடாது. ஒப்பந்தம் எழுத்து மூலமாக இருப்பதுடன் பதிவும் செய்யப்படவேண்டும் (11) ஒரு தடவை ரயத்து தாமாகவே அதிகமாகக் குத்தகை தர ஒப்புக்கொண்டாலும் அல்லது கோர்ட் தீர்ப்பினுல் அது உயர்த்தப்பட்டாலும் அடுத்த 15 வருஷகாலத்திற்கு அது மேலும் உயர்த்தப்படலாகாது. (12) உயர்த்தப்பட்ட குத்தகையை ரயத்துக்கு சிரமமில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி மேல்வாரதார் வசூலிக்குமாறு விதிக்க கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்க வேண்டும் (13)கைப்பற்று நிலத்தில் உற்பத்திகுறைந்துவிட்டபோது குத்தகைவசூலை நிறுத்திவைத்தும் இயற்கை சம்பவங்கள் காரணமாக பயிர் நாசமாகப் போகுமாயின் வழக்கமான வஜாவும் அளிக்கப்படவேண்டும். (14) தான்யத்திற்குப் பதிலாகப் பணமாகக் குத்தகை செலுத்தப்படுவதை மேல் வாரதாரோ அல்லது ரயத்தோ விரும்பினுல் அவர் அதற்காக சர்க்காரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும். (15) குத்தகை விஷயமாக சாகுபடி செய்யப்படும் பயிர்களைக் குறித்து சர்க்கார் விதிகளை இயற்றி அவ்வப்போது அகவிலைகளைக்கொண்ட ஜாபிதாக்களை வெளியிட வேண்டும். (16) இந்த விதிகளில் ஒன்றும் மேல் வாரதாரரின் சொந்த நிலத்தைப் பாதிக்கக்கூடாது.

3. கைப்பற்று நிலத்தை மாற்றித்தரும் உரிமையும் அதைத்துண்டு போடுவதும்

(1) ரயத்தி நிலத்தில் குடிவார பாத்தியதையுள்ள குடி தம் நிலத்தைக்கட்டுப்பாடின்றி தமக்கிஷ்டமானவருக்கு மாற்றிக்கொடுக்க உரிமை பெறவேண்டும். ஆனுல் அது மாற்றித்தரப்படுமுன் ஜமீன்தார் தமக்குச் சேரவேண்டிய குத்தகைப் பாக்கிக்காக அதை எடுத்துக் கொள்ளலாம். மூன்று வருஷத்திற்குமேற்பட்ட பாக்கியை வசூலிக்க உரிமைகூடாது. பண்ணை நிலத்தைப்பயிரிடுவோருக்கு இந்த அதி

காரம் கிடையாது. (2) ஒன்பது வருஷகாலத்திற்கு மேல் உபகுடிகளிடம் நிலத்தை ஒப்படைத்து எந்தச் சமயத்திலும் ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடாது. (3) தங்களிடம் குத்தகை செலுத்தும் ரயத்துகளின் ரிஜிஸ்தரை மேல் வாரதார்கள் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். நிலம் கோர்ட் உத்திரவுப்படியோ அல்லது ஒப்பந்தம் காரணமாகவோ கைமாறினுல் அதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். இது பதிவாகும் வரை மாற்றித் தருபவர் மீதே குத்தகை செலுத்தும் பொறுப்பு இருக்க வேண்டும்.

4. குத்தகை வசூல் பற்றி ஏற்பாடுகள்

(1) குத்தகை பாக்கி வசூல் பற்றிய விசேஷ சட்டத்தின் பிரகாரம் குடி ஒப்புக்கொள்ளக்கூடிய பட்டாவை வழங்கியிருக்கும் நிலச்சுவான்தார் தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் (2) நிலத்தில் இருக்கும் பயிரையோ அல்லது களத்து மேட்டில் குவிக்கப்பட்டிருக்கும் தான்யத்தையோ தான் குத்தகை பாக்கிக்காக நிலச்சுவான் கோரலாம். (3) குத்தகையைச் செலுத்தாத காரணத்தினுல் குடிவார பாத்தியதையுள்ள ரயத்து நிலத்தை விட்டு துரத்தப் படலாகாது. ஆனுல் நிலத்தில் அவருக்கிருக்கும் பாத்தியதை கிரயம் செய்யப்படலாம். நிலத்திற்குடையவரின் சம்மத மின்றியே கிடைத்திருக்கும் குடி வார பாத்தியதை கட்டுப்படுத்தப்பட்டு நிலம் விற்கப்படக்கூடாது. (4) பண்ணை நிலத்தைப் பயிரிடுபவர் அங்கிருந்து வெளி யேற்றப்படலாம். (5) விசேஷ சட்டத்தின் பிரகாரம் கோர்ட் டாருக்கிருக்கும் அதிகாரங்களை சர்க்கார் ஒரு உத்தியோகஸ்தருக்கு அளிக்கலாம்.

5. நிலச்சுவானின் கடமைகள்

(1) பட்டாவில் குறிப்பிடப் பட்டதற்கு மேல் அதிகாரம் எதுவுமின்றி நிலச்சுவான்தார் புதுத்தீர்வையை ரொக்கமாகவோ அல்லது தேக உழைப்பின் வாயிலாகவோ வசூலிக்கக்கூடாது (2) நீர்ப்பாசன

வசதிகளை நிலச்சுவான்தார் பராமரித்து வரவேண்டும். இவற்றை அவ்வப்போது சீர்படுத்திவரும் ரயத்துகள் புகார் செய்தால் அதற்கான செலவு நிலச்சுவான் தாரிடமிருந்து வசூலாகவேண்டும். (3) ஜமீன்தாரி முதலிய எஸ்டேட்டுகளில் இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களின் நிலை சீரானதாக இருக்க வேண்டும்.''

1

1888-ம் வருஷம் ஜூன் மாதம் 3-ம் தேதியன்று மஹாராணியாரின் ஜன்ம தினத்தைக் கொண்டாட சிலருக்கு கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீநிவாஸராகவையங்கார் 'திவான்பஹதூர்' ஆனார். "மதராஸ்மெயில்" பத்திரிகை மறுநாள் புதிய பட்டதாரிகளை வாழ்த்துகையில் பின்கண்டபடி குறிப்பிட்டது:

"ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தஞ்சை ஜில்லாவில் நாகப்பட்டினத்தைச் சேர்ந்தவர். அநேக வருஷங்களுக்குமுன் சென்னை சர்வகலாசாலைப் பட்டத்தை ஸ்வீகரித்து தஞ்சை எஸ். பி. ஜி. காலேஜில் உபாத்தியாயராகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்தவர். பிறகு ரெவினியூ போர்டாபீஸில் சேர்ந்து அங்கிருக்கையில் 1876-78ம் வருஷத்திய பஞ்சத்தின் போது மிகவும் உயர்தரமான சேவையைப் புரிந்தார். ஹிந்து சமூகத்தில் அவர் மிக்க மதிப்பு வாய்ந்தவர். தமது கண்ணியமான நடத்தையினாலும் விடாமுயற்சியினாலும் ரெவினியூ காரியதரிசியின் ஆபீசில் தற்போது வகிக்கும் ஸ்தானத்தை அவர் எட்டினார்."

"சர்க்கார் காரியாலயத்தில் "திவான்பஹதூர்" பட்டத்திற்கு ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்காரைக் காட்டிலும் யோக்கியதை வாய்ந்தவர் வேறு எவரையும் குறிப்பிட முடியாது" என்று 'ஹிந்து' பத்திரிகையும்* அபிப்பிராயத்தை வெளியிட்டது.

அந்த நாட்களில் இந்தப் பட்டத்தைப் பெற்றவர்கள் மிகவும் சொற்பம். ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு முன் இந்தோர் சமஸ்தான திவானான ஆர். ரகுநாத ராவ், சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் நீதிபதி பி. ஸ்ரீநிவாஸ ராவ், ரெவினியூ இலாகாவில் உதவிக் காரியதரிசியாக இருந்த

*1888-ம் வருஷம் ஜூன் மாதம் 6-ம் தேதி

டி. வெங்காசாமி ராவ், ரெவினியூ ஸெடில்மெண்ட் இலாகா டிபுடி டைரக்டர் ஜே. லக்ஷ்மீகாந்த ராவ் ஆகியோர் தான் இந்த மாகாணத்தில் இத்தகைய கௌரவத்தை அடைந்தவர்கள்.

2

1889-ம் வருஷம் ஏப்ரல் 30-ம் தேதி மிகவும் முக்கியமான தினமாகும். அன்று இந்தியப் பிரச்னை ஒன்றைக் குறித்து லண்டனில் காமன்ஸ் சபையில் விவாதம் நடந்தது. அது விஷயமாக சர்க்காருக்கும் அன்று தோல்வி ஏற்பட்டது. இந்தியா கவர்ன்மெண்டின் கலால் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மதுபானத்தினுல் மக்களுக்கு விளையும் தீமைகளும் அனர்த்தங்களும் அன்று சுட்டிக் காட்டப்பட்டன. சர்க்கார் இந்தக் குடிப் பழக்கத்தைக் குறைத்து இதை அடியோடு ஒழிக்க வழி தேடவேண்டும் என்றே காமன்ஸ் அங்கத்தினர்கள் முறையிட்டனர். விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களில் பெரும்பாலர் இந்தியாவுக்கு நேரில் வந்து நிலைமையை அறிந்தவர்கள். மிகுந்த சிலர் இந்த நாட்டைப்பற்றிய விவகாரங்களில் சிரத்தையுள்ளவர்கள். இந்தியரின் ஒழுக்கமும் ஆரோக்கியமும் தளரக்கூடாது என்பதில் அவர்களுக்கிருந்த அக்கறை இந்த விவாதத்தின் மூலம் வெளிப்படும்.

ஸாமுவேல் ஸ்மித் என்பவர் பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார்:—

> "இந்திய சர்க்காரின் கலால் கொள்கை பொது மக்களின் கருத்துக்கு விரோதமாக முன்பு இல்லாத இடங்களில் கூட புதிது புதிதாக மதுபானக் கடைகள் ஏற்படுவதற்கு இடமளிக்கிறது. இவ்விதம் குடிப்பதற்கான வசதிகளைப் பெருக்குவதால் குடிப் பழக்கம் அபிவிருத்தியடைந்து இந்தியத் தொழிலாளரின் வாழ்வைப் பாழாக்கி வருகிறது. இதைக் குறைப்பதற்கானவிதத்தில் இந்திய சர்க்கார் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தச் சபை அபிப்பிராயப்படுகிறது."

ஸ்மித் மிகவும் அழுத்தந்திருத்தமாகப் பேசினுர். மது

பானத்தினால் ஏற்படும் கெடுதல்களையும் அந்தப் பழக்கத்தினால் பிறக்கும் கஷ்டங்களையும் அவர் விவரித்தார். இந்தியாவின் சீதோஷ்ண நிலைமை, மக்களின் தேக அமைப்பு, இவை காரணமாக மதுவகைகள் விஷமாக இருக்கின்றன எனவும் சிறிது காலத்திற்கு மிதமிஞ்சிக் குடித்தால் கூட அவை ஜனங்களைக் கொன்றுவிடுகின்றன எனவும் அவர் காரமாகச் சொன்னார். தரித்திரத்தில் தவிக்கும் தொழிலாளர்கள் இந்தத் துர்ப்பழக்கம் காரணமாகத் தினமும் ஒரு அணு செலவழிப்பதாயின், அவர்கள் வீட்டில் சாப்பாடின்றி பட்டினி கிடப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். இந்த இனத்தில் சர்க்காருக்கு அபரிமிதமான வருமானம் கிடைப்பதால் தான் அவர்கள் இதைப்பற்றி கண்மூடித்தனமாக இருந்து நடப்பது நடக்கட்டும் என்ற மனப்பான்மையைக் காட்டுவதாயும் சுலபமாக வரும் பணத்தை விட்டுக் கொடுக்க அவர்களுக்கு மனமில்லை என்றும் இனியும் இதை எவ்வளவு அதிகமாக்க முடியுமோ அவ்வளவுக்கு உயர்த்துவதையே தங்கள் நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும் ஸ்மித் கடுமையாகப் புகார் செய்தார். குடி மூலமாக சுமார் எழுபது லக்ஷம் ரூபா கிடைத்துவருவதால் இந்தியாவில் அதிகாரிகள் அதைப்பார்த்து சும்மா இருப்பதாகவும் அவர் அன்று குறிப்பிட்டார். அதிகம் விற்பனை செய்யும் சக்தியுள்ளவரிடமே விற்பனை பொறுப்பு விடப்படுவதாயும் வருமானத்தை விருத்தி பண்ணும் உத்தியோகஸ்தரையே மேலதிகாரிகள் பஹுமானிப்பராதலால் அவர்களுக்கு அந்தப் பாராட்டுதலைப் பெறுவதிலேயே முதல் கவனம் இருப்பதாகவும் அவர் சொன்னார். "குடியினால் ஏற்படும் நாசத்தைக் காட்டிலும் சண்டையினாலும் கொள்ளை நோய்களினாலும் ஏற்படும் நாசம் அதிகமாக இருக்கமுடியுமா?" என்றும் அவர் மனமுருகி வினவினார். இந்த மாபெரும் அக்கிரமத்தை அடக்குவதே தமது முக்கிய கடமையாக இருப்பதாகவும் அவர் இதர அங்கத்தினர்களிடம் அந்தச் சமயத்தில் அறிவித்தார். மேலும் அவர் முறையிட்டதாவது:—

"ஊதாரிகளாகப் பணத்தை விரயம் செய்வதாலேயே இந்திய சர்க்கார் துன்மார்க்க வழியில் வரு

மானங்களை அதிகமாக எதிர்பார்த்து நிற்கவேண்டியிருக்கிறது. ஆகவே நாம் எப்படி அபினியைக் கொடுத்து சீனர்களை விஷம் பருகச் செய்தோமோ அதே மாதிரி இப்போது இந்தியாவிலுள்ள மக்களுக்கு இந்தக் குடியின்மூலம் விஷத்தை நாம் அளித்துவருகிறோம். இந்திய வருமானம் சன்மார்க்க நெறியில் இந்தியாவின் நன்மைகளுக்குகந்த விதத்தில் வசூலிக்கப்படவேண்டுமென்பதை நாம் வற்புறுத்தவேண்டும்.''

இந்தத் தீர்மானத்தை டபிள்யு. எஸ். கெயின் ஆதரித்துப் பேசினார். இவரும் இந்திய விவகாரங்களில் விசேஷ ஞானம் கொண்டவர். இந்த நாட்டுக்கு விஜயம் செய்து மக்களின் அவலமான கதியைப்பார்த்து அனுதாபத்தைப் பூண்டவர், அடிமை வாழ்வின் கோலமே இது என்பதைக் கண்டு அதன் தளைகளை அறுக்க அவர் ஆசைப்பட்டார். அரசியல் அந்தஸ்து உயருவதால் அறியாமை அகலாது என்பதே அவர் கருத்து. அவரும் சர்க்காரின் கேவலமான போக்கைக் கண்டித்தார்.—

''இந்தியாவில் அனுஷ்டிக்கப்படும் கலால் விதிகள்—சிறந்தவையும் சரி, மோசமானவையும் சரி—குடிப்பதற்கே அதிக சௌகரியமாக இருக்கின்றன. இதன் பலனாகக் குடி அதிகரிக்கிறது. இதே காலத்தில் பலதீமைகளும் விளைகின்றன''

இன்னும் பலர் இதே ரீதியில் தங்கள் உள்ளத்தை வெளிப்படுத்தினர். நாகரிக உலகில் வேறு எங்கும் இவ்வளவு கேவலமாக கலால் நிர்வாகம் நடக்கவில்லை என்றார் ஒருவர். வங்காளத்தில் உள்ள குறையைக் காட்டிலும் கொடிது காணக் கூடாதது என்றும் அவர் கூறினார். இந்தியாவில் கலால் இலாகாவில் அதிக காலம் வேலை பார்த்து அனுபவம் மிகுந்த மெட்காப் என்பவர் மதுபான வகைகள் மிகவும் மலிவாக விற்கப்படுவதாயும் ஆகவே அந்தப் பழக்கம் நாட்டில் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார். இதனால் ஏற்படும் கொடுமைகளைப்பற்றி அவர் மிகவும் வருந்தினர். ''என் குதிரை ஜேணத்தைப் பழுது பார்க்க நான் விரும்பும் பக்ஷத்தில் அதைப் பழுதுபார்க்க வேண்டியவர் முதல்நாள் இரவு குடிக்காமல் நான் பார்த்

துக் கொள்ளவேண்டும். இப்போது தொழிலாளிகள் போஜனத்தைப்போல் சகஜமாக மதுபானத்தை அருந்துகின்றனர். சச்சரவுகளும் முன்னேக் காட்டிலும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன" என்ருர் அவர்.

இவ்விதம் ஒரு சாரார் பேசியதுடன் விவாதம் தீர்ந்துவிடவில்லே. சர்க்கார் சார்பில் முன்வந்தவர்கள் ஸ்மித் வெறும் உணர்ச்சிப் பெருக்கினுல் பேசினுரே யொழிய, தம்முடைய கண்டனத்திற்கு ஆதாரமாகப் புள்ளி விவரங்களே எடுத்துக்காட்டவில்லே என்றனர். ஸர் கோப்பர் லெத்ப்ரிட்ஜ் தமது பிரசங்கத்தில் ஸ்மித் வெளியிட்ட அபிப்பிராயங்கள் மிகைப்பட்டவை என்று கூறிவிட்டு சர்க்காரின் கொள்கை குடிப்பழக்கத்தை அபிவிருத்திசெய்வதாக இருக்கிறது என்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டார். இந்தியர் இதை மிகவும் கொடிய பழக்கமாகப் பாவிப்பதால் பூரண மதுவிலக்கு பின்பற்றத் தக்கது என்பதையும் அவர் அறிவித்தார். வருமானப் பிரச்னே மிகவும் முக்கியமானதாகையால் ஜனங்களின் வரிப்பளு அதிகமாவதற்குப் பார்லிமெண்ட் ஏதாவது செய்தால் அது நியாயமாகாதென்றும் அவர் கூறினுர். அந்தந்த ஸ்தலத்தின் இஷ்டத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்க அனுமதித்தால் இந்தக் குடிப் பிரச்னேயைத் தீர்த்துவைப்பது சாத்தியமாகும் என்று பொரேன் என்பவர் அபிப்பிராயப்பட்டார். ஆனுல் இது விஷயத்தில் அபிப்பிராயபேதம் அதிகமாகவே இருந்தது.

விவாதத்தின் முடிவில் இந்தியா உதவி மந்திரியான ஸர் ஜேம்ஸ் கோர்ஸ்ட் கண்டனங்களுக்கும் புகார்களுக்கும் சமாதானம் அளித்தார். குடியைக் கட்டுப்படுத்துவதே சர்க்காரின் கொள்கை என்பதைக் குறிப்பிட்டுவிட்டு ஒவ்வொரு மாகாணத்திலும் கலால் இலாகா நிர்வாகம் தனிப்பட்ட முறையில் நடந்துவருவதாகவும் ஆகவே இந்தியாவில் பலதரப்பட்டமுறைகள் அமுலாகிக்கொண்டிருப்பதாகவும் மாறுதல்களேச் செய்வதற்கும் சில முறைகளில் அவசியம் இருக்கக்கூடுமென்றும் தெரிவித்தார். குடிப்பழக்கம் நாட்டில் முன்னேக்காட்டிலும் அதிகமாகக் குறைந்துவருவதை மறக்கக்கூடாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினுர். சர்க்கார் உத்தியோ

கஸ்தர்கள் வருமானத்தைப் பெருக்குவதே தங்கள் லக்ஷியம் எனக்கொண்டிருக்கின்றனர் என்ற குற்றச் சாட்டைத் தாம் ஒப்புக்கொள்ள இயலாது என்பதையும் அவர் அறிவித்தார்.

கடைசியில் ஒட்டுகள் கணக்கெடுக்கப்பட்டபோது காமன்ஸில் அங்கத்தினர்களுக்கு இந்தப் பிரச்னையில் எவ்வளவு சிரத்தை இருந்தது என்பது தெளிவாகத் தெரிந்தது. 113 பேர்கள் தீர்மானத்தை ஆதரித்தனர். சர்க்கார் கட்சியில் 110 பேர்கள் தான் இருந்தனர். மூன்று பேர்கள் அதிகமாக சர்க்காருக்கு விரோதமாய் ஓட் செய்தனர். சர்க்கார் கக்ஷிக்கு தோல்வி ஏற்பட்டது.

பார்லிமெண்டில் நடந்த இந்த விவாதமும் சர்க்காருக்கேற்பட்ட அபஜயமும் இந்திய சர்க்காருக்குக் கவலையை உண்டுபண்ணி விட்டன. இவ்வருஷம் மே மாதம் 16-ம் தேதியன்று இந்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு கலால் கொள்கையைக் குறித்து ஒரு சுற்றறிக்கையை விடுத்தனர். இனிமேல் இந்திய மக்களிடையே குடிப்பழக்கம் அதிகரிப்பதைத் தடுக்க வேண்டும். கள்ளத்தனமாக சாராயத்தைத் தயாரித்து அதை விற்பதற்கு இடம் அளிக்காமல் சாத்தியமான அளவுக்கு மது வகைகள்மீது உயர்ந்தபட்ச வரி விதிக்கப்படவேண்டும். இந்த நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு குடிப் பழக்கத்தைக் குறைத்தும் அதிகமாக வருமானத்தை வசூலிக்கவும் ஏற்பாடு பண்ணவேண்டும்—இவ்விதம் அந்தச் சுற்றறிக்கை கூறியது.

சென்னை மாகாணத்தில் கலால் இலாகா நிர்வாகத்தைப் பற்றிய குறிப்பைத் தயாரிக்கும் பொறுப்பு வழக்கம்போல் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு ஏற்பட்டது.

> "அப்காரி இலாகா நிர்வாகத்தைப் பற்றிச் செய்யப்படும் ஏற்பாடுகளில் குடிப்பழக்கத்தைக் குறைப்பதே முதன்மையானதாக இருக்கவேண்டும். குடிப் பழக்கமுள்ளவர்கள் பூரண மதுவிலக்கை அனுஷ்டிக்கும்படிச் செய்வது சாத்தியமல்ல. அது அப்படி விரும்பத்தக்கதாயினும் அதனால் அதிக சிரமம் சம்பவிக்கும். இத்தகைய நிலைமையில் குடிப்பழக்க முள்ள

வர்கள் கள்ளத்தனமாய் சாராயத்தைத் தயாரித்து அதைப் பருகுவார்கள் என்பது நிச்சயம். சட்டத்தை மீறுவதுடன் இந்தக் குடிப்பழக்கம் காரணமாக அவர்களது ஒழுக்க நிலை சீர்குலையும். மதுவகைகள் மீது அதிகமாக வரி விதிக்கப்பட்டு அவற்றை வாங்கு வதைத் தடுப்பதே சர்க்காரின் உத்தேசம். இதே காலத்தில் கள்ளத்தனமாக சட்ட விரோதமான முறையில் அவை தயாரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அதிக சிப்பந்திகள் தேவையாதலால் அந்த அநாவசிய மான செலவுக்கு இடம் அளிக்கும் அளவுக்கு வரி உயர்ந்திருக்கவும் கூடாது எந்த அளவுக்கு வரி விதிப்பது என்பதை எல்லா இடத்திற்கும் ஒரே மாதிரி நிர்ணயிக்க இயலாது. பல இடங்களிலும் நிலைமை வேறுபட்டதாகவே இருக்கிறது. பல தரப் பட்ட வழக்கங்கள், சம்பிரதாயம், ஜாதிக்கட்டுப்பாடு கள், சீதோஷ்ண பேதங்கள், நிவாரணசக்தி, கள்ள நடவடிக்கைக்கு அனுகூலமான ஸ்திதி ஆகிய பல பிரச்னைகள் கவனிக்கப்பட வேண்டியவை. ஆகவே இந்த அளவைக் கண்டுபிடித்து ஒவ்வொரு ஸ்தலத் திற்கேற்ப அதை அமுலாக்குவதே கலால் இலாகா வின் முதல் காரியமாகும்.

அப்காரி இனத்திலிருந்து வருமானத்தைச் சம்பா திப்பது பிரதான நோக்கமாக இருக்கக்கூடாது. அதா வது, வரிவிகிதத்தைக் குறைத்து போதை விளைவிக் கும் மதுபானங்களின் உபயோகத்தை அதிகமாக்கக் கூடாது. ஆனால் வரியை அதிகமாக்கி உபயோகத் தைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட உயர்ந்தபக்ஷ அளவுக்கு வரியை உயர்த்தியும் கிடைக் க்க் கூடிய வருமானத்தை இடையில் மது வகைகளை விற்பவர்களே எடுத்துக் கொண்டு சர்க்காருக்குச் சேரவிடாமல் செய்வதைத் தடுத்தும் வருமானத்தை விருத்தி பண்ணுவது விரும்பத்தக்கதே. மது வகை கள் மீது போடப்படும் வரிக்கும் இதர வஸ்துக்கள் மீது போடப்படும் வரிக்கும் ஒரு விஷயத்தில் வித்தி யாசம் இருக்கிறது. மற்ற வரிகள் பொருள்களின் உப யோகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. ஆனால் இந்த

வரி அந்த ஒரு காரணத்தை உத்தேசித்தே நன்மையைப் புரிவதாகும்."

வரிவிதிப்புக் கொள்கையில் உள்ள தர்மங்களை விவரித்துவிட்டு ஸ்ரீநிவாஸராகவையங்கார் சென்னை மாகாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டுவந்த நடவடிக்கைகளைப் பற்றியும் சில விவரங்களை வெளியிட்டார்.

"அடியிற் குறிப்பிடப்பட்ட சில தகவல்களிலிருந்து இந்த மாகாணத்தின் அப்காரி இலாகா நிர்வாகத்தில் சென்ற 15 அல்லது 20 வருஷகாலமாக இந்தக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன என்பது புலப்படும். ஆரம்பத்தில் இந்த மாகாண சர்க்காருக்கு இது விஷயமாகப் பல விக்கினங்கள் இருந்த போதிலும் இந்தக் கொள்கைகளை வெற்றிகரமாக இது அனுஷ்டித்திருக்கிறது என்று இப்போது நியாயமாகவே பெருமைப்பட ஹேது இருக்கிறது.

இந்த மாகாணம் சுமார் 1,40,000 சதுரமைல் விஸ்தீர்ணம் கொண்டது. இதன் ஜனத்தொகை 310 லக்ஷத்திற்குக் குறைவாக இல்லை. இந்த மாகாணத்தில் சுமார் 20000 சதுர மைல் அடங்கியதும் 10 லக்ஷம் பேர் கொண்டதுமான பகுதி ஏஜன்ஸி பிரதேசம் என்று வழங்குகிறது. கஞ்சம், விசாகப்பட்டிணம், கோதாவரி ஜில்லாக்களைச் சேர்ந்தது இந்தப் பிரதேசம். மலைகளும் காடுகளும் இங்கு அதிகம். நாகரிக முதிர்ச்சி பெறுத ஜாதியார் இங்கு வாழ்கின்றனர். சர்க்கார் இந்த ஸ்தலத்தில் சாஸ்திரீய முறைப்படி நிர்வாகத்தை நடத்துவது சாத்தியமல்ல. இந்த ஏஜென்ஸி பிரதேசத்தில் பனைமரக் கள்ளுமீது வரிபோடப் படுவதில்லை. 1880-ல்நடந்த ரம்பா கலகத்திற்கு கள்ளுக்குத்தகைக்காரர்களின் அதிக்கிரமங்களே காரணம் என்றும் கூறப்படுகிறது. கஞ்சத்தில் இருக்கும் கோண்ட் ஜாதியார் தங்கள் சொந்த உபயோகத்திற்காக மட்டும் சாராயம் தயாரிக்க அனுமதி பெற்றிருக்கின்றனர். அவர்கள் விற்கக் கூடாது. கோண்ட் ஜாதியார் இருக்கும் பிரதேசத்தில் உரியா ஜாதியார் இந்தக் குடிப்பழக்கத்தை அபிவிருத்தி பண்ணி அவர்களுடைய நில புலன்களை ஸ்வீகரித்துக் கொண்டுவருவதாக எல்

லோரும் எண்ணியதுண்டு. ஆகவே உரியாக்கள் அங்கு கள்ளைத் தயாரித்து விற்பனை செய்வது தடுக்கப்பட்டது. இப்போது கலக்டரிடமிருந்து கிடைத்த ரிபோர்ட் மூலம் கோண்ட் ஜாதியார் தாங்களாகவே சாராயத்தைத் தயாரிக்காமல் உரியாக்களின் சகாயத்தை நாடுகின்றனர் என்பது வெளிப்பட்டது. இந்தத் தடை உத்திரவு காரணமாகக் கள்ளப் பழக்கம் அதிகரித்து வருவதும் தெரியவந்தது. உரியர்களுக்கே இந்த உரிமையைத் திரும்பவும் சில நிபந்தனைகளின் பேரில் அளிப்பது பற்றி அப்காரி இலாகா அதிகாரிகள் யோசித்து வருகின்றனர்..........ஏஜன்ஸி பிரதேசத்தில் இந்தியா மந்திரி விதித்த திட்டத்தின் பிரகாரம் நடப்பது அசாத்தியம். ஆகவே இந்த விவகாரத்தைப் பற்றிய வரையில் இந்தப் பிரதேசத்தை நம் பரிசீலனையிலிருந்து ஒதுக்கிவைக்க வேண்டும். ஆனால் இதே காலத்தில் இங்கு குடிப்பழக்கம் பெருகி விட்டது என்று நினைக்கவும் இடம் கிடையாது."

மிஞ்சிய பிரதேசத்தில் இந்தியா மந்திரியின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய முடியும் என்றும் இவர் குறிப்பிட்டார்:—

"இருபது வருஷங்களுக்கு முன்பு அப்காரி இலாகா நிர்வாகம் பழைய காலத்திய முறைகளையொட்டியதாக இருந்தது. ஜில்லாக்கள் முதலிய அதிக விஸ்தீரணமான பிரதேசங்களில் பெரிய தொகையைக் கட்டும் குத்தகைக்காரர்களிடம் கள்ளு தயாரித்து அதை விற்பனை செய்யும் உரிமை அளிக்கப்பட்டது............அனுமதிக்கப்பட்ட கடைகளில் கள் விற்பனையாகி வந்தது. எவ்வளவு கடைகளைத் திறக்கலாம் என்பதற்குத் தடை எதுவும் இருக்கவில்லை. அப்காரிச் சட்டத்தின் விதிகளை அனுசரித்து இதற்குக் குறைந்தபக்ஷ விலை நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அந்த போதையை விளைவிக்கக் கூடிய சக்தி சாராயத்திற்கு எவ்வளவு இருக்கிறது என்பதை மதியாமல் அந்த விலை நிர்ணயிக்கப்பட்டு வந்ததால் அதனால் பலன் ஏற்படவில்லை. சுறுக்கிக் கூறுவதாயின் வரி விதிப்புமுறை ஒழுங்குபடுத்தப்பட

வில்லை. அல்லது அது எந்த அளவுக்கு உபயோகமா கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டு கட்டுப் படுத் தப்படவுமில்லை. ஆகவே இந்த மதுபான பழக்கத்தை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் இந்தக் குத்தகைக் காரர்கள் சுயேச்சையாக இருந்தனர்."

இத்தகைய நிலைமையைத் திருத்தவே புதிய கலால் முறை அமுலாக்கப்பட்டதாயும் 1869 முதல் 1874 வரை பொறுக்கி யெடுக்கப்பட்ட ஜில்லாக்களில் இந்தப் புதிய திட்டம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டதாகவும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் குறிப்பிட்டார். வெகு சீக்கிரத் தில் கள்ளத்தனமாக சாராயம் தயாரிக்கப்படுவதைத் தடுக் கவும் ஏற்பாடாகியது. இந்தக் கடமை குத்தகைக்காரர் மீது சுமத்தப்பட்டது. அவர்கள் சர்க்காரால் குறிப்பிடப் பட்ட விலைகளுக்குக் குறையவோ அதிகமாகவோ விற் கக்கூடாதென்றும் விதிக்கப்பட்டது. "குத்தகைக்காரர் விலையை மேலும் குறைத்து பழக்கத்தை அதிகமாக்கக் கூடாது என்பதே குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்ட தற்குக் காரணமாகும். சில இடங்களில் விலையை அமித மாக உயர்த்தி குடியில் பற்றுதல் கொண்டவர்களுக்கு சிர மம் தலைகாட்டுவதைத் தடுக்கும் நோக்கத்துடன்தான் அதிகபக்ஷ விலையும் நிர்ணயமாகியது. மது வகைகளைத் தயாரிப்பதால் ஏற்படக்கூடிய செலவு, வரி முதலியவற்றை சரிகட்டிய பின்னரும் குத்தகைக்காரருக்குக் கொஞ்சம் லாபம் கிடைக்கவேண்டும் என்ற உத்தேசத்துடன் குறைந்தபக்ஷ விலை முடிவாகியது. சில ஸ்தலங்களில் நிலை மைக் கேற்றுப்போல் விலையை உயர்த்துவதை அனுமதிக் கவே உயர்ந்தபக்ஷ விலையும் விதிக்கப்பட்டது.

1884-ல் அப்காரி கமிட்டி செய்த சிபாரிசுகளைப் பின் பற்றி அப்காரி இலாகா நிர்வாக முறை மேலும் திருத்தி யமைக்கப்பட்டது. மதுபானங்களை உற்பத்தி செய்து அதை விற்பனை செய்யும் பொறுப்பு சில குத்தகைதாரர் களிடம் இதுவரை இருந்தது. இதற்குப் பிரதியாக அவர் கள் சர்க்காருக்கு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும். இந்த முறையில் சில தோஷங்கள் இருந்தன. ஒவ்வொரு குத்தகைக்காரரிடமும் அதிக விஸ்தீரணமுள்ள பிரதேசம் விடப்பட்டதால் இதற்காக நடைபெற்ற ஏலத்

தில் செல்வந்தர்களைத் தவிர இதரர்கள் போட்டிபோட இயலவில்லை. சில ஐரோப்பியக் கம்பெனிகள் சேர்ந்து கொண்டு குறிப்பிட்ட தொகைக்குத் தாங்களே உத்தரவாதம் இருப்பதாகக் கூறி போட்டியைத் தடுத்து வந்தனர். தொலைவில் இருக்கும் இடங்களை அலக்ஷியம் செய்துவிட்டு தங்கள் மேற்பார்வை ஸ்தலத்திலிருந்தே அமிதமான லாபத்தைச் சம்பாதிக்க முற்பட்டனர். ஒரு பிரதேசத்திற்கும் மற்றொரு பிரதேசத்திற்கும் இருக்கும் வித்தியாசங்களைக் கவனியாமல் ஒரே ரீதியில் சர்க்காருக்கு இந்த முறை காரணமாக வருமானம் கிடைத்து வந்தது. சட்டவிரோதமாகச் செய்யப்படும் காரியங்களைத் தடுக்கும் பொறுப்பு குத்தகைதாரர்கள் மீதே விழுந்த போதிலும் அவசியமானபோது நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இந்த காரணங்கள் பற்றி குத்தகைதாரர்களுக்குத் தங்கள் வருமானத்தில் மட்டுமே சிரத்தை இருந்ததே தவிர பொறுப்புகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் இருக்கவில்லை. காலப் போக்கில் வருமானம் குறைந்தது. ஆனால் குடிப்பழக்கம் மட்டும் குறையவில்லை. 1884-ம் வருஷத்திற்கப்புறம் குத்தகைக்காரரிடம் விடப்படும் பிரதேசத்தின் அளவு சிறிதாக்கப்பட்டது.

இதற்கப்புறம் பல ஜில்லாக்களிலும் இருந்த ஸ்திதியை விவரித்துவிட்டு ஸ்ரீநிவாஸராகவையங்கார் புள்ளி விவரங்கள் மூலம் வெளியான உண்மைகளை எடுத்துக் காட்டினார்.

“(1) 1875—76-ம் வருஷத்திலிருந்து மாகாணத்தின் பெரும் பகுதியில் ‘கலால்’ முறை அமுலாக்கப்பட்டு வந்திருப்பதும் (2) இதனால் வரி விகிதம் அதிகரித்து நாட்டுச் சாராயத்தின் விலையும் அதிகமாகி முன்பு காலத்தில் குத்தகைமுறை நாட்களில் இருந்து வந்த குடிப்பழக்கம் குறைந்திருப்பதும் (3) ‘கலால் முறை’ அமுலான பல ஜில்லாக்களில் (தென் ஆற்காடு, நீலகிரி ஆகியவை தவிர) 1888—89-ம் வருஷத்தில் 1875—76-ம் வருஷத்தில் இருந்திருப்பதைவிடக் குறைவாகிவிட்டதும் (4) தென் ஆற்காட்டில் பிரிட்டிஷ் கடைகளில் சாராய விற்பனைக்கு ஏற்பாடு

செய்ததுடன் 'பிரெஞ்சு' காடிகளில் மலிவாகக் கிடைக்கும் சாராயத்துடன் போட்டிக்குவழிகாட்டப் பட்டதே இங்குள்ள மதுபானப் பழக்கத்திற்குக் காரணமாக இருப்பதும் (5) நீலகிரி ஜில்லாவில் ஜனத் தொகைப் பெருக்கமே பழக்கம் விஸ்தரிப்பதற்கு ஹேதுவாகியிருப்பதும் (6) சென்னையில் ஜனத் தொகை அதிகமாயும் 1888—89-ல் 1875—76-ல் இருந்ததைவிட அதிகமாக குடிப்பழக்கம் தலைகாட்ட வில்லை என்பதும் தெளிவாகும். சில ஜில்லாக்களில் 1883—84-க்குப் பிறகு 1888—89-ல் குடி அதிகமாகி யிருப்பதற்குப் பின்கண்ட காரணங்களைக் குறிப்பிட வேண்டும்: (அ) அந்த வருஷத்திற்கப்புறம் மாகாணத்தின் பல ஜில்லாக்களிலும் சுபிட்சம் உதயமாகி 1876—78-ம் வருஷத்திய பஞ்சத்தை சமாளிக்கும் நிலையை மக்கள் எட்டினர் (ஆ) 1886-ம் வருஷத்திற் கப்புறம் சுதேச சமஸ்தானங்களிலிருந்து மது வகைகள் கொண்டுவரப்படுவதைத் தடுக்க அப்காரி சட்டத்தில் சில விதிகள் இயற்றப்பட்டன. இது தவிர சர்க்காரின் தீவிர ஏற்பாடுகள் மூலம் கள்ளத்தனமாக சாராய வஸ்துக்கள் உற்பத்தி செய்வது தடுக்கப் பட்டது.'

கள்ளுக்கடைகளின் தொகையைக் குறைப்பது சர்க்காரின் உத்தேசம் என்றும் இவர் தெரிவித்தார். இதே குறிப்பில் இவர் பிரதி வருஷமும் வருமானத்தின் அதிகரிப்பைக் காட்டும் புள்ளி விவரங்களையும் வெளியிட்டார்.

"இங்கு குறிப்பிடப்பட்ட சில தகவல்களின் வாயிலாக இந்த மாகாணத்தில் சென்ற சில வருஷங்களாக அப்காரி இலாகா நன்கு நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்பது சந்தேகத்திற்கிடமில்லாதபடி புலப்படும். வருமானம் மிகவும் அதிகமாகியிருப்பது உண்மை. வரியை ஜாஸ்தியாக்கி உபயோகத்தைக் குறைப்பதன் மூலமே இந்த வருவாய் கிடைத்திருக்கிறது. உபயோகம் அதிகமாக்கப்பட வில்லை. பல மாகாணங்களிலும் எந்த அளவுக்கு வரியை உயர்த்தலாம் என்ற விஷயத்தில் சிரத்தைக் காட்டப்பட்டு வருகிறது. ஆனால் இங்கு பிழைகளே புரியவில்லை

என்று கூறுவது அவசரப்பட்டுப் பேசுவதாகும். 15 வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட இப்போது குடிப்பழக்கம் அதிகரித்திருப்பதாகக் கருத இடமே இல்லை. மாகாணத்தில் அநேக ஜில்லாக்களில் இந்த வழக்கம் மிகக் குறைந்திருக்கிறது என்று நாம் கூறுவதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறது. இதை ஆக்ஷேபித்து அவ்வப்போது பறைசாற்றி வரும் ஒரு சிலர் பண்டைய நிலைமையைப் பூரணமாக ஆராயாமலும் புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்க்காமலும் அவ்விதம் பேசி வருகின்றனர். குடிப்பழக்கம் மிகவும் கெட்டது என்ற புத்துணர்ச்சி நிரம்பியவர்களே அவர்கள். பழைய உண்மைகளைச்சமீபத்தில் உணர்ந்துகொண்ட சிலர் அவை அப்போதுதான் உதயமாகியிருப்பதாகக் கருதுகின்றனர். இதுவரை சில சம்பவங்களைக் கவனியாமல் இருக்கும் நாம் மனோநிலை மாறுபாடு காரணமாக அந்த சம்பவங்கள் இப்போது சகஜமாய் நடப்பதாகக் கருதுகிறோம்,'' என்று ஒரு ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது உண்மையே. அப்காரி இலாகா நிர்வாகத்தில் இருந்த பல இடையூறுகள் இப்போது காக்கப்பட்டு விட்டதாகவும் இதுவரை அனுஷ்டித்து வந்த கொள்கையையே விடாமுயற்சியுடன் தொடர்ந்து பின்பற்ற வேண்டியதுதான் தக்கது என்பதும் என் அபிப்பிராயம். கலால் முறையும் மரத்தின் மீது வரி விதிப்புக் கொள்கையும் மாகாணத்தின் இதர பாகங்களிலும் காலதாமதமின்றி சந்தர்ப்பத்துக்கேற்றபடி அமுலாக்கப்பட வேண்டும். இதுவும் கள்ளுக்கடைகளின் தொகையைக் குறைக்கும் காரியமும் பூர்த்தியாக்கப்பட்டு குடிப்பழக்கம் அதிகமாகத் தென்படும் பிரதேசத்தில் சர்க்கார் வரியை அதிகமாக்கும் பட்சத்தில் குடிப்பழக்கத்தைக் குறைப்பதற்கான வழிகளை சர்க்கார் பின்பற்றி விட்டதாகவே நாம் கருதவேண்டும். தொழிலாளர்களின் குடிப்பழக்கம் பிரதி வருஷமும் விவசாய நிலைமையைத் தழுவியிருக்கிறது. செழிப்பான காலத்தில் அது ஜாஸ்தியாகிறது. ஆரம்பக் கல்வியைக் கீழ்த்தர வகுப்பாரிடையே பரப்பினால்தான் இந்தப் போக்கை மாற்றமுடியும். ஆதலால் சென்ற 5 வருஷ காலத்தில் வருமானத்தில்

ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியில் ஒரு பகுதியை, அதாவது 58 லக்ஷம் ரூபாய்களை, அதை அளித்திருக்கும் தொழிலாளர்களிடையே ஆரம்பக் கல்வி அதிகமாகப் பரவுவதற்காக விநியோகிக்க வேண்டும். கலால் இனத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் 75 சத விகிதம் இந்திய சர்க்காருக்குப் போய்ச் சேருகிறது.''

இந்தக் குறிப்பில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வெளியிட்டுள்ள யோசனை கவனத்துக்குரியது. எந்த இனத்தாரின் அறியாமை காரணமாக கலால் வருமானம் அதிகரித்து வருகிறதோ அவர்களுடைய க்ஷேம லாபங்களில் அக்கறை காட்ட வேண்டும் என்பதை இவர் சர்க்காருக்குச் சுட்டிக் காட்டினார். ஆரம்பக் கல்வி நாட்டில் அபிவிருத்தியடையுமாகில் மக்களுக்கு விஷய ஞானம் ஏற்பட்டு பல தீய பழக்கங்கள் மறையவும் நெறி முறைகளில் பகுத்தறிவின் மூலம் பற்றுதல் பிறக்கவும் வசதி உண்டு.

தாம் தயாரித்த குறிப்பின் முடிவில் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சில புகார்களுக்குப் பதில் அளித்தார். நாட்டிலும் வெளியேயும் நடந்துவரும் பிரசாரத்தின் போக்கையும் அலசிக்காட்டினார்.

''இந்த மாகாணத்தில் அப்காரி நிர்வாகத்தைக் கண்டிப்பவர்கள் மூவகைப்படுவர். இங்கிலாந்திலும் இதர இடங்களிலும் மதுபானத்தினால் விளையும் அனர்த்தங்களை அறிந்து அதே மாதிரியானவை இந்தியாவிலும் சம்பவிக்கக்கூடாது என்றும் முன்பு மத பக்தி மேலிட்டு மதுபானம் செய்யாமல் இருந்தவர்கள் இப்போது மனம் மாறிவருகின்றனராதலால் இதற்கு சர்க்காரின் காரியங்கள் உடந்தையாக இருக்கக்கூடாது என்றும் உதாரபுத்தியுடன் உபகாரிகளாக விளங்குவோர் முதல் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். இந்த மாகாணத்தைக் குறித்த மட்டில் இந்த மாதிரி பயப்பட அவசியமே இல்லை. அவர்கள் உண்மையை அறிவார்களானால் தங்களைப்போலவே சர்க்காரும் நடந்துகொள்கின்றனர் என்பதைக்காண்பர். சாராயத்தைத் தயாரிப்பவர்களும் தங்களுக்கு இதுவரை கிடைத்து வந்த அபரிமிதமான லாபம்

இனி புதுத்திட்டத்திற்கப்புறம் கிடைக்காது என்று அஞ்சும் ஏகபோக உரிமையாளர்களும் இரண்டாம் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். புதிய நடவடிக்கைகளை அவர்கள் விரும்பாமை மிகவும் சகஜமானதே. மரத்தில் ஏறுபவர்களும் சாராயத்தைக் காய்ச்சுவதையே தொழிலாகக் கொண்டிருப்பவர்களும் இப்போது தலை முறைகளாகத் தாங்கள் நடத்திவந்த தொழிலை இழக்க நேரிடும் என்று கலங்குவதால் அவர்கள் மூன்ருவது கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். புதிய வாழ்க்கைத் துறைகளைக் கண்டு பிடிப்பதே அவர்களுக்குக்கவலை. இவர்கள் கஷ்டப்படுவது வாஸ்தவம்; ஆனுல் இது தற்காலிகமானது. அவர்களுடைய நலனைக் காட்டிலும் பொது நலனே பிரதானமானது".

சர்க்கார் காரியாலயத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கிருந்த பிரசித்தி அந்த நாளில் வேறு எந்த இந்தியருக்கும் கிடைக்கவில்லை. முக்கியமான சந்தர்ப்பங்களில் எல்லாம் இவருடைய உதவியையே மேலதிகாரிகள் நாடுவது சகஜமாயிருந்தது. இதனுல் இவருடைய பெருமை பலப்பட்டது ஒருபுறமிருக்க, மற்றுமொருபுறம் இவருடைய மனே சாந்தியைக் கெடுப்பதற்கும் இதுவே ஹேதுவாகியது. இவரைப்பார்த்து ஒரு சிலருக்குப் பொருமையும் பிறந்தது. அப்போது சர்க்காரில் பிரதம காரியதரிசியாக இருந்த மிஸ்டர் ப்ரைஸ் இவர் எழுதியனுப்பும் குறிப்புகளை யெல்லாம் சிகப்பு மசியால் நுனி முதல் அடிவரை அடித்துவிட்டு திருப்பியனுப்பிக் கொண்டிருந்தார். தாம் அவ்விதம் செய்ததற்கு அவர் காரணத்தைக் காட்டுவதும் கிடையாது. மேலதிகாரி என்பதால் மனமுடையும்படிச் செய்யலாமா? அசூயையின் மிகுதியால் மான முள்ள வரை அவமானப் படுத்தலாமா? திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்த நடத்தையை சகிக்க வில்லை. இவர் மனம் புண்பட்டது. பதவியை விட்டுப்பிரிந்து பென்ஷன் பெறலாமா என்றும் இவர் யோசித்ததுண்டு. மிகுந்த நாட்களை மன நிம்மதியாகக் கழிக்கலாம் என்றும் இவர் விரும்பியதுண்டு. இவ்விதம் இவர் உள்ளம் அலைபாய்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. திசை தெரியாமல் தத்தளிப்பவருக்கு ஒரு ஜோதி தெரிந்தது! கலக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது கரைகாணும் வழி தென்பட்டது. சங்கடத்தை விடுத்து சந்தோஷப்படும் சந்தர்ப்பத்தை எட்டினர்.

1889-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முதல் தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை, திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் மிஸ்டர் ஸ்டோக்ஸைப்பார்க்கச் சென்ருர். அப்போது ஸ்டோக்ஸ் சென்னை கவர்னரின் நிர்வாகசபையில் முதல் அங்கத்தினராக வேலை பார்த்துக் கொண்டிருந்

தார். ஸ்ரீநிவாஸராகவையங்கார் வந்ததும் ஸ்டோக்ஸ் தமது மேஜை மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய இரும்புப் பெட்டியைச் சுட்டிக்காட்டி அதில் என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறமுடியுமா என்று கேட்டார். வந்தவர், தமக்கு தெரியாது என்றார்.

"எவ்வளவு அவகாசம் வேண்டுமானாலும் கொடுக்கிறேன், சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்றார் ஸ்டோக்ஸ்.

"நான் செய்யும் முயற்சி வீணாகுமேதவிர, வேறு பலன் இல்லை" என்றார் ஸ்ரீநிவாஸராகவையங்கார்.

"விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். ரிஜிஸ்திரேஷன் இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருக்கும் ஹாம் நெட் பதவியிலிருந்து உடனே விலக விரும்புகிறார். இதற்குத்தம்மை அனுமதிக்கும்படி சர்க்காருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம் தான் பெட்டியில் ரகசியமாக இருக்கிறது" என்றார் ஸ்டோக்ஸ்.

இதைத் தெரிவித்துவிட்டு காலியாகும் அந்த ஸ்தானத்திற்கு யாரை நியமிக்கலாம் என்று இவரை யோசனை கேட்டார். உடனே இவர் புரொபஸர் ரங்கநாத முதலியாரை அதற்குப் பொறுக்கலாம் என்று கூறினார். அவருக்குப் போதனா விஷயங்களில் மட்டுமே நல்ல பயிற்சி இருப்பதால் நிர்வாக சம்பந்தமான பதவிகளுக்கு அவர் அருகதை வாய்ந்தவர் அல்ல என்று ஸ்டோக்ஸ் அபிப்பிராயப்பட்டு வேறு ஒருவர் பெயரைக் குறிப்பிடும்படி கேட்டார். பிறகு ஸ்ரீநிவாஸராகவையங்கார் போர்டாபீஸ் சிரஸ்தேதாரான ராய் பஹதூர் பாக்கம் ராஜரத்தின முதலியார் அந்த ஸ்தானத்திற் கேற்றவர் என்றார். ஸ்டோக்ஸ் இதற்கும் சம்மதிக்கவில்லை. நிலவரிவசூல் விவகாரங்களில் மட்டுமே அவருக்குப் பரிச்சயம் இருப்பதாகவும் இதர பொதுவான பிரச்னைகளைப்பற்றி அவருக்குப் போதிய ஞானம் கிடையாதென்றும் குறிப்பிட்டார். சம்பாஷணை இவ்விதம் நடந்துகொண்டிருக்கையில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் அங்கிருந்து கிளம்பினார். இவர் புறப்படும் சமயத்தில் ஸ்டோக்ஸ் இவரிடம் வந்து பரம ரகசியமாக, தாம் இவரையே அந்தப் பதவிக்கு நியமிக்கும்படி கவர்னருக்கு சிபாரிசு செய்யப் போவதாகச் சொன்னார்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் இதை எதிர்பார்க்கவே இல்லை. டிசம்பர் மாதத்தில் அந்தப் பதவி காலியாகப் போவதும் அதற்காகப்பலத்த போட்டி நடந்துவருவதும் இவர் அறிந்ததே. தாம் இதைப்பற்றி சிந்திப்பதும் வியர்த்தமானது என்று இவர் கருதியிருந்தார். ஐரோப்பிய டிபுடி கலக்டர்கள் கூட நாட்டம் காட்டினர். ஊரிலும் ராய் பஹதூர் ரங்கநாத முதலியார் இதற்கு நியமிக்கப்படுவார் என்ற வதந்தி நிலவியிருந்தது. ஜூலை மாதத்திலேயே பதவியைத் துறந்துவிட ஹாம்நெட் விரும்புவார் என்பது யாருக்கும் தெரியாது.

ஸ்டோக்ஸ் மேற் குறிப்பிட்டபடி அறிவித்ததும் இவர் அவரிடம் அந்தப் பதவிக்குரிய யோக்கியதைகள் தமக்கில்லை என்றும் தாம் அதை ஒப்புக்கொண்டால் கஷ்டப்படநேரிடும் என்றும் அடிக்கடி பிரயாணம் செய்வதைத் தம்முடைய தேக நிலை அனுமதிக்காது என்றும் விவரித்தார். அது விநயத்தின் அறிகுறியாக இருக்கலாம்! பெருந்தன்மையின் சோபையாகவும் விளங்கக்கூடும்!! ஸ்டோக்ஸ் தமது முடிவை மாற்ற மறுத்துவிட்டார். தாம் அன்று மாலையே கவர்ன்மெண்டு ஹவுஸுக்குப்போய் ஸ்ரீநிவாஸராகவையங்காரை நியமித்து உத்திரவு வெளிவரும்படி செய்யப் போவதாகவும் தெரிவித்து விட்டார். இந்த ஸ்தானத்தை இவர் ஒப்புக்கொண்டு அலுவல்களைக் கவனிக்க வேண்டும் என்றும் ஏதாவது சிரமம் தலைகாட்டினால் அதை நிவர்த்திப்பது பற்றி பின்னர் யோசித்துக் கொள்ளலாம் என்றும் திட்டமாகத் தெரிவித்து விட்டார். இந்த நியமன விஷயத்தில் மற்றுமொரு சிக்கல் இருந்தது. கவர்னரின் நிர்வாக சபையில் இரண்டாவது மெம்பராக இருந்தவர் (ஜே. எச். கார்ஸ்டின். ராஜரத்தின முதலியாரிடம் அவருக்கு அதிகமானப்ரீதியும் பற்றுதலும் இருந்தன.) ஹாம்நெட் எழுதிய கடிதத்தை கார்ஸ்டின் பார்க்கும் பட்சத்தில் அவர் உடனே ராஜரத்தின முதலியாரின் நியமனத்தை வற்புறுத்துவார் என்று ஸ்டோக்ஸ் எண்ணினர். ஆதலால் அன்று மாலையே அவசரம் அவசரமாக ஸ்டோக்ஸ் கவர்னராக இருந்த கன்னிமாரா பிரபுவைப்பேட்டியிட்டு இந்த நியமனத்தைப் பற்றி முடிவு செய்து விட்டார். கன்னிமாரா பிரபுவும் திவான்

பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காரை நியமிப்பதற்கு மன மொப்பினர்.

மறுநாள் காலே ஸ்ரீநிவாஸராகவையங்கார் காரியாலயத்திற்கு வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் இவரைத் தம்மிடம் உடனே வரும்படி கவர்னர் பிரபு தெரிவித்தார். இதை அறிந்ததும் ரெவினியூ இலாகா காரியதரிசியான மிஸ்டர் கால்ட்டன் கவர்னர் பிரபு ஏதோ அவசர காரியமாக இவரை அழைத்திருப்பதாகத் தமக்குத் தோன்றுவதாகக் கூறி முக்கிய தஸ்தவேஜிகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு போகும்படி வேண்டிக்கொண்டார். ஸ்ரீநிவாஸராகவையங்கார் கவர்னரைப் பேட்டியிட்டுப் பேசினர். அப்போது மாகாண அதிபர் ரிஜிஸ்திரேஷன் இலாகா தலைமைப் பதவிக்கு இவரையே நியமிக்கத் தாம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார். இவர் கவர்னரிடமும் தமக்கு அதை வகிக்க அருகதை இல்லை என்று கூறிப்பார்த்தார். அவர் அதற்கு இடம் தரவில்லை. முதலில் ஆறுமாதகாலத்திற்குப் புதிய அலுவலை மேற்கொண்டு நிர்வகித்துப் பார்த்த பிறகும் சிரமமும் சங்கடமும் அதிகமாக நீடிக்கும் பட்சத்தில் பழைய பதவிக்குத் திரும்பிவிடலாம் என்றும் கன்னிமாரா பிரபு இவரிடம் அறிவித்தார். காரியாலயத்திற்குத் திரும்பியதும் கால்ட்டன் முதலியவர்கள் இவரிடம் வந்து நடந்த விஷயத்தைப்பற்றி அதிக ஆவலுடன் வினவினர். இந்தப் புது நியமனச் செய்தியை இவர் வெளியிட்டதும் கால்ட்டனுக்குக் கோபம் மேலிட்டது. அவசரம் அவசரமாக ஸ்டோக்ஸ் அறைக்குப்போய் இதை ஆக்ஷேபித்தார். அதிக திறமையும் அனுபவ ஞானத்தையும் கொண்ட உத்தியோகஸ்தரை இழக்கும்படிச் செய்வது பெரிய அநீதியாகும் என்று காரியதரிசி முறையிட்டார். ஒவ்வொரு உத்தியோகஸ்தருக்கும் தம்முடைய அந்தஸ்து உயரவேண்டும் என்பதில்தான் முழுக் கருத்தும் இருக்குமாதலால் இந்த நியமன விஷயத்தில் குறுக்கிடுவது சரியல்ல என்று ஸ்டோக்ஸ் பதில் அளித்து ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் தமக்கிருந்த விசுவாசத்தையும் அன்பையும் அவர் முன்பு காட்டிவிட்டார்.

மூன்ரும் தேதியன்று வெளியான "போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட்"டில் பத்திரப் பதிவு இலாகா

தலைவராக திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் நியமிக்கப்பட்ட செய்தி பகிரங்கப்படுத்தப்பட்டது. மறுநாள் "மதராஸ் மெயில்" பத்திரிகை இதைப் பற்றிப் பின் கண்டபடி எழுதியது:—

"சுமார் 43 வருஷ காலம் சர்க்கார் கீழ் வேலைப் பார்த்துவிட்டு தம்முடைய 63-ம் வயதில் பதவியை விட்டு விலகிக்கொள்ளும் மிஸ்டர் ஹாம்னெட் ஸி. ஐ. இ. ஸ்தானத்திற்கு சர்க்காரின் ரெவினியூ காரியாலயத்தில் துணைக் காரியதரிசியாக இருக்கும் திவான் பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் அவர்கள் பி. ஏ. நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது; சிவில் சர்விஸ் வர்க்கத்தைச் சேராதவர்களுள் சிறப்பு வாய்ந்தவராக அவர் கருதப்படுபவர்......... புதிதாகப் பதவியேற்பவரிடம் நாம் பொறுமைப்பட அவசியம் இல்லை. ஏனெனில் மிஸ்டர் ஹாம்னெட் பல ஊர்களைச் சுற்றிப் பார்த்துவந்தது பிரமிக்கத் தக்கது. இதனால் அந்த இலாகாவின் வருமானம் வெகுவிரைவில் விருத்தியடைந்தது...வெளியே சஞ்சரிப்பதில் விருப்பமில்லாமல் தமது அறையிலேயே இருந்து காலத்தைக் கழிக்கும் பிராம்மண உத்தியோகஸ்தர் மிஸ்டர் ஹாம்னெட்டைப்போல் அடிக்கடி அதிக தூரத்திற்குப் பிரயாணம் செய்ய ஆசைப் படுவாரா இல்லையா என்பது இனிமேல் தெரியும். ஆனால் எதற்கும் சிறந்த உதாரணம் இருப்பது மிக்க அனுகூலமானதாகும். புதியதாகப் பதவிக்குவரும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு இந்த ஆசார விசேஷத்துடன் பொதுவான திறமை, பழுதற்ற பெருமை ஆகியவை காரணமாகக் கிடைத்திருக்கும் கீர்த்தியும் துணை நிற்கின்றன!

'ஹிந்து' பத்திரிகை இவ்விதம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தது:—

"மிக்க உயர்ந்ததும் பொறுப்பு வாய்ந்ததுமான பத்திரப் பதிவு இலாகா தலைமை ஸ்தானத்திற்கு திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் பி.ஏ. நியமிக்கப்பட்டிருப்பதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இந்தப் பதவிக்கு வேறு சிலருடைய

பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டமையாலும் சிவில் சர்விஸ் பதவிக்கு ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் நியமிக்கப்படப் போவதாக அவருக்கு உறுதி கூறப்பட்டதாகப் பொதுமக்கள் நம்பியிருந்தமையாலும் இந்த நியமனத்தை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை: எதிர்பார்ப்பதும் சாத்தியம் அல்ல. ஒரு சமயம் ராஜரத்தின முதலியாரோ அல்லது ரங்கநாத முதலியாரோ இதற்கு நியமிக்கப்படலாம் என்று கூறப்பட்டது. இவ்விருவரில் யார் பொறுக்கப்பட்டிருந்தாலும் அது பொது மக்களுக்கு அதிக திருப்தியைக் கொடுத்திருக்கும். ரெவினியூ இலாகாவில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் மிகத் திறமைவாய்ந்த உத்தியோகஸ்தர்களில் ஒருவர் என்பது பிரசித்தம். அவரைக் காட்டிலும் சிறந்தவர் இருக்கமுடியாது என்பதுகூட சிலரின் அபிப்பிராயம். பொதுவாக அவருக்கிருக்கும் புத்தி தீக்ஷண்யமும் வரவு செலவு முதலிய இலாகாக்களில் அவருக்கு இருக்கும் அபார ஞானமும் மாகாணத்தில் இருக்கும் அதிகாரிகளை மட்டுமின்றி, இங்கு அடிக்கடி தேச நிர்வாகத்தைக் குறித்த பல பிரச்னைகளைப்பற்றி ஆலோசிப்பதற்காக வந்துவிட்டுப் போகும் இந்திய சர்க்காரின் உத்தியோகஸ்தர்களையும் வசப்படுத்தி வந்திருக்கின்றன. இப்போது வழங்கப்பட்ட பதவிக்கு அவருக்குள்ள மஹத்தான யோக்கியதைகளைப்பற்றி இரண்டுவிதமான அபிப்பிராயம் இருப்பதற்கிடமில்லை. இந்தப் பதவியையேற்ற பின் அவருக்கு உத்தியோகத்தின் சிரமம் அதிகமாக இருக்குமாதலாலும் அவர் அடிக்கடி மாகாணத்தைச் சுற்றிப்பார்த்து வரவேண்டியிருக்குமாதலாலும் அவர் இன்னும் அதிகமான தேக திடத்துடன் இருக்கக் கூடாதா என்பதே மக்களின் கோரிக்கையாகும். இந்தப் புதிய துறையில் தமது புத்தி சாதுர்யத்தையும் ஒழுக்க முறைகளில் உள்ள சிரத்தையையும் காட்டுவதற்கு நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. சர்க்கார் காரியாலயத்தில் அவர் எத்தகைய புகழைச் சம்பாதித்து வந்திருக்கிறாரோ அதைப் போலவே இனி வருங்காலத்திலும் பெருமையுடன் அவர் சோபிப்பார் என்பதே எம் நம்பிக்கை.''

இம்மாதம் 16-ம் தேதியன்று திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் புதிய பதவியை யேற்றுக் கொண்டார். இந்த இலாகா ஆரம்பித்து 25 வருஷங்கள் நிறைவெய்திவிட்டன. 1864-ம் வருஷம் ஆகஸ்டில் ரிஜிஸ்திரேஷன் சட்டம் பிறந்தது. உடனே மாகாணங்கள் எல்லாவற்றிலும் பத்திரப்பதிவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த மாகாணத்தில் முதன்முதல் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்து இதை நிர்வகித்தவர் கர்னல் ராபர்ட் மக்டானல்ட் என்பவர். 1875-ல் அவருக்கடுத்த படியாக கனம் வி. ராமையங்கார் இந்த இலாகாவின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் அவர் பதவியிலிருந்து விலகி திருவாங்கூர் திவானுக உத்தியோகத்தை ஒப்புக்கொண்டார். ஆகவே அந்த ஸ்தானத்திற்கு வந்தவர் மிஸ்டர் ஜார்ஜ் ஹாம்நெட்.

சட்டத்தில் பத்திரப்பதிவு வேலை எப்படி நடக்க வேண்டும் என்பது விதிக்கப்பட்டது. இதற்கான உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களும் அதில் திட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த தஸ்தவேஜிகள் பதிவாகவேண்டும் என்பதும் அப்படிப் பதிவு செய்வதால் விளையும் பலன்களும் அதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. எங்கு, எப்போது, எவ்விதம் தஸ்தவேஜிகளைப் பதிவு பண்ணவேண்டும் என்பதும் அதில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. சில தஸ்தவேஜிகள் கட்டாயம் பதிவாக வேண்டும். மற்றும் சிலவற்றைப் பதிவாக்குவது அவரவர் இஷ்டத்தைத் தழுவியது. ஆனுல் பதிவு செய்யப் பட்டவைகளுக்கே என்றும் அதிக மதிப்பு உண்டு. இந்த மாகாணம் 22 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு அவை மேலும் 232 டிவிஷன்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 22 ஜில்லா ரிஜிஸ்தரார்கள் இருக்கின்றனர். 232 விசேஷ சப் ரிஜிஸ்திரார்கள் அவர்கள் கீழ் வேலை செய்கின்றனர். இவர்கள் தவிர மற்றும் 20 சப் ரிஜிஸ்திரார்கள் பயிற்சிபெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரும் ரிஜிஸ்திரேஷன் இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலின் அதிகாரத்திற்குட்பட்டவர்கள். ஜில்லா தலை நகர்களில் ரிஜிஸ்திரார்களின் காரியாலயங்கள் உள்ளன. அவர்கள் சம்பளம் ரூபா 100 முதல் ரூ. 500 வரை உண்டு.

பதிவான தஸ்தவேஜிகளிலிருந்து வசூலாகும் கட்டணத் தொகையில் 100-க்கு 20 வீதம் அவர்களுக்குக் கமிஷன் அளிக்கப்படுகிறது. ஆனால் 50 ரூபாய்களுக்கு மேற்பட்டு கமிஷன் வாங்க எந்த ஜில்லா ரிஜிஸ்திராருக்கும் உரிமை இல்லை. சென்னையில் இருப்பவர் மட்டும் ரூ. 100 சம் பாதிக்கலாம். ஸப் ரிஜிஸ்திரார்களின் ஆபீஸ்கள் தாலூகாக்களிலும் ஸப் டிவிஷன்களிலும் உள்ள முக்கிய ஸ்டேஷன்களிலேயே இருக்கின்றன. இந்த விசேஷ ஸப் ரிஜிஸ்திரார்கள் ஏழு ரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ரூபா 30 முதல் ரூபா 75 வரை சம்பளமும் 50 ரூபாய் வரை கமிஷனும் இவர்களுக்குக் கிடைக்கின்றன. தொழிலில் பயிற்சிபெறும் சப் ரிஜிஸ்திரார்களில் பட்டதாரிகளாக இருப்பவர்களுக்கு மாதம் 20 ரூபாச் சம்பளமும் மெட்றிகுலேஷன்களுக்கும் பி. ஏ. பரீட்சையில் தேறுதவர்களுக்கும் 15 ரூபாய்ச் சம்பளமும் கொடுக்கப்படுகின்றன. இவர்களது காரியாலயங்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்குக் கொஞ்சம் ஊதியமும் பதிவு செய்யப்படும் தஸ்தவேஜிகளின் மொத்த மதிப்பில் 19 சத விகிதம் கமிஷனும் அளிக்கப்படுகின்றன. "இந்தப் பத்திரப் பதிவு முறையினுல் மக்களின் சௌகரியம் அதிகமாகிறது. பல நாகரிக நாட்டினரும் பொறுமைப் படக் கூடிய அளவுக்குத் தங்கள் சொத்துரிமை பந்தோபஸ்து செய்யப்பட்ட திருப்தி அவர்களுக்கு உண்டாகிறது. சமுதாயத்தின் வருமானமும் பெருகிக்கொண்டே இருக்கிறது" என்றுர் இம்மாகாண கவர்னர் ஒருவர் ஒரு சமயத்தில்.*

பத்திரப் பதிவுச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட சமயத்தில் நிலவி வந்த இரண்டு பெரிய தோஷங்கள் நாளடைவில் மறைந்துபோயின. முதலில் இந்தச் சட்டத்தில் பொது ஜனங்களுக்கு அவ்வளவாக நம்பிக்கை இருக்கவில்லை. இதில் விதிக்கப்பட்ட சில கடுமையான ஷரத்துகளே அதற்குக் காரணமாம். பத்திரத்தில் காணப்படும் ஸ்தாவரச் சொத்துக்களைப் பற்றி பூரணமான விவரம் அளிக்கப்படவேண்டுமென்று சட்டத்தில் திட்டமாகக்

*சென்னையில் விக்டோரியா மஹாராணியாரின் ஜூபிளிக் கொண்டாட்ட விவரம். (ஸர் சார்லஸ் லாஸன் தொகுத்தது) 1887 பக்கம் 255

குறிப்பிடப்பட்டது. கள்ளக் கையெழுத்துக்களைப் போடும் வழக்கமும் பொய் சாக்ஷியங்களைச் சொல்லும் முறையும் இதனால் காலக் கிரமத்தில் குறைந்துவரலாயின. ஸ்தாவரச் சொத்துக்களைத் தழுவியவரை அவற்றின்மீது ஒவ்வொருவருக்குமிருக்கும் உரிமை சந்தேகத்திற்கிடமில்லாதபடிச் செய்யப்பட்டது.

இந்தப் பதிவு முறை நாட்டில் அமுலாக அமுலாக ரிஜிஸ்தர் செய்யும் ஆபீஸர்களின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. மக்களுக்குச் சௌகரியமான இடங்களில் இதற்கு வசதி செய்யப்பட்டது. இதே காலத்தில் பதிவாகாத பத்திரங்களைக் காட்டிலும் பதிவான பத்திரங்களே கோர்ட்டுகள் முதலிய நீதிஸ்தலங்களில் செல்லுபடியாகி ஒப்புக்கொள்ளப்படும் என்ற சுற்றறிக்கைகளும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகமாயின. இந்த இலாகாவில் நியமிக்கப்பட்ட விசேஷ உத்தியோகஸ்தர்களும் இந்தப் பழக்கத்தைப் பரப்புவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். பதிவு செய்வதில் அநாவசிய தாமதத்திற்கு இடம் அளிக்காமல் அவ்வப்போது ஜரூராக அவர்கள் தங்கள் அலுவல்களைக் கவனித்து வந்தனர். இந்தப் பதிவுமுறை எவ்வளவு சுலபமாக இருக்கவேண்டுமோ அவ்வளவுக்கும் அவர்கள் உதவினர். உயில்கள், தானதர்ம ஏற்பாடுகள், ஸ்வீகாரப் பத்திரங்கள், அதற்கான அனுமதி அளிப்பவை, பாகப் பிரிவினை தஸ்தவேஜிகள், அடமானங்கள், குத்தகை ஒப்பந்தங்கள், மத்தியஸ்தர் தீர்ப்புகள் முதலியவை பதிவாக்கப்பட்டு வந்தன.

ஜார்ஜ் ஹாம்நெட் ரிஜிஸ்திரேஷன் இலாகா தலைவர் என்ற முறையில் சர்க்காருக்கு அனுப்பிய தமது கடைசி நிர்வாக யாதாஸ்தில் எழுதிய சில வார்த்தைகள் கவனத்திற் குரியவை:—

> 1889-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியன்று நான் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகப் போவதாலும் இதுவே நான் சர்க்காருக்கு சமர்ப்பிக்கும் கடைசி நிர்வாக யாதாஸ்தாகையாலும் 1880-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 5-ம்தேதி யன்று நான் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட போது சென்னை பத்திரிகைகள் சில ரிஜிஸ்திரேஷன் இலாகா

இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி சிரமமும் கஷ்டமுமில்லாத ஸ்தானம் என்று குறிப்பிட்டதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்...

பட்டதாரிகளும் எப். எ.-க்களும் தங்களது படிப்பு காரணமாக மெட்ரிகுலேஷனிலும் இன்னும் உத்தியோகங்களுக்கான பிரத்தியேக பரீட்சைகளிலும் தேறியவர்களைக் காட்டிலும் ரிஜிஸ்திரேஷன் வேலைக்கு அதிக அருகதையுள்ளவர்களாக இருக்கின்றனர். ரிஜிஸ்திரேஷன் ஆபீஸ்களில் வேலை பார்ப்பவர்களை விடவும் அவர்கள் உயர்தரமானவர்கள். பிந்தியவர்களுக்கு ரிஜிஸ்திரேஷன் அலுவலைக்கவனிக்கும் போது தலை காட்டும் நுட்பமான பிரச்னைகளைத் தீர்க்கப் போதிய திறமை இருப்பதில்லை.*

ஹாம்னெட் பதவி யேற்ற சமயத்திலும் சில பத்திரிகைகள் அவருக்குப் புதிய பதவியைப்பற்றிப் புத்தி புகட்டத் தயங்கவில்லை. மிகவும் சௌகரியமான உத்தியோகம் இது என்பதே பொதுவான கருத்து. இஷ்டமிருந்தால் சர்க்கார் செலவில் இரண்டு, மூன்று ஜில்லாக்களுக்குப் போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி விட்டால் போதும் என்றெல்லாம் மனோபாவம் இருந்தது. மக்கள் தவறுதலான எண்ணத்தைக் கொண்டிருப்பதைக்கண்டு அதைப் போக்கடிக்க ஹாம்னெட் பிரயாசைப்பட்டார். ஆகவே மாகாணம் பூராவும் அடிக்கடி அலைந்துதிரிந்தார். எல்லா இடங்களுக்கும் போய் சிப்பந்திகளின் வேலைகளைக் கவனித்தார். அவர் பதவியை விடுக்கும் சமயத்தில் இத்தகைய பிசகான நோக்கத்திற்கிடமில்லை என்பதை நிரூபித்து விட்டார். ஆகவே திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் அந்த ஸ்தானத்திற்கு வந்த போது பத்திரிகைகள் அந்த உத்தியோகத்தின் மதிப்பைக் குறைக்க முற்படவில்லை. ஆனால் புதிய இன்ஸ்பெக்டர் ஜெனரலும் முந்தியவர் போல் அடிக்கடி பலவூர்களுக்குப் போய் விட்டு வர முடியுமா என்ற கவலையையே அவை இச்சமயம் ஒரு முகமாகக்காட்டின. ஸ்ரீநிவாஸராகவையங்கார் தேக திடமற்றவர் என்பதும் இடத்தில் உட்கார்ந்து

* 1888-89-ம் ஆண்டு ரிஜிஸ்திரேஷன் இலாகா நிர்வாக யாதாஸ்து, பக்கம் 24.

காரியத்தை கவனிப்பதில் நிபுணர் என்பதும் அந்நாளில் பிரசித்தம். ஸ்ரீநிவாஸராகவையங்காருக்குமட்டும் தாம்இலாகா அதிபராக இருக்கையில் எந்த விதமான கண்டனத்திற்கும் இடம் தரலாகாதென்ற மனேநிடம் ஏற்பட்டுவிட்டது. இலாகாவின் அபிவிருத்தியிலும் புதிய துறைகளில் பிரவேசித்து இலாகாவினுல் பலன் ஏற்படும்படிச் செய்வதிலும் இவருடைய முழு நாட்டம் விழுந்தது.

புதிய இன்ஸ்பெக்டர் ஜெனரல் அதிகாரத்திற்கு வந்த போது இருந்த நிலே இத்தகையது. பத்திரப்பதிவு இலாகா பொது மக்களுக்கு உபயோககரமாக இருக்க வேண்டும் என்பதிலேயே இவர் முனேந்தார். ஊழியர்களின் தரத்தை உயர்த்துவதில் இவர் உத்சாகம் காட்டினுர். அந்தச் சமயத்தில் சப் ரிஜிஸ்திரார்களேப் பற்றிப் பல விடங்களிலிருந்தும் புகார்கள் வந்து கொண்டே இருந்தன. பெரியகுளம் சப்ரிஜிஸ்திரார் செய்த தவறு விஷயமாக ஹாம்நெட் சரிவர விசாரணே நடத்த வில்லே என்று சற்றுக்கடுமையான ரீதியில் அறிவித்ததே அவர் திடீரெனத் தமது பதவியை விடுக்கத் துணிந்ததற்கும் காரணம் என்று அப்போது பஹிரங்கமாகக் கூறப்பட்டதுண்டு. ஒருவர் மற்றெருவரின் அதிகாரத்தை எதிர்த்து நிற்பதிலேயே கருத்தூன்றியிருந்தனர். சில ரிஜிஸ்திரார்கள் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு விரோதமாகக் "கோள்" கூறவும் முன் வந்து விட்டனர். எல்லாம் ஒரே கலவரமாக இருந்தது. முதலில் ஒவ்வொரு அதிகாரிக்குரிய அந்தஸ்தையும் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஹாம்நெட் தமக்குக் கீழிருந்த உத்தியோகஸ்தர்களிடம் உள்ளன்பு கொண்டிருந்தது பற்றியும் பொதுவாகப் பலவான்களே பல ஹீனர்களே அடக்கி உபத்திரவிக்கின்றனர் என்ற மனேபாவம் பூண்டிருந்தாராதலாலும்.அவர் எப்போதும் மேலதிகாரிகளே விட கீழ்த்தரச் சிப்பந்திகளின் கட்சியையே ஆதரித்து வந்தார். கண் மூடித்தனமான இந்தக் கவலேயே குழப்பத்தைப் பெரிதாக்கி விட்டதாயும் பத்திரங்களேப்பதிவு செய்வதுடன் தமது மேஜையைத் துடைத்துச் சுத்தம் செய்யும் வேலேயையும் சப்ரிஜிஸ்திரார்கள் கவனிக்க வேண்டி இருந்தது. ஆள்கள் தங்களுக்கிடப்பட்ட வேலேயைச் செய்யத்தவறி விட்டாலும் அவர்களேக் கண்டிக்க முடியாது.

பொறுப்பை ஸ்வீகரித்தவுடன் இந்த அவலமான நிலையை அகற்ற ஸ்ரீநிவாஸராகவையங்கார் முற்பட்டார். ஒவ்வொருவருக்கும் உரிய அலுவல்களைத் திட்டமாக வகுத்துக்காட்டி கடமையை மீறுபவர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார் என்பதை எல்லோரும் உணரும்படி இவர் செய்யலானார். ஆரம்ப நாட்களில் இது விஷயமாக இவர் தீவிரமாக இறங்கி விட்டாராயினும் சந்தர்ப்பத்திற் கேற்றபடி தயவு தாட்சிண்யம் காட்டியும் வந்தார். தெரியாதவர்களுக்குச் சொல்லிக்கொடுத்துப்பார்ப்பார். சிறிது காலம் நடவடிக்கை எடுக்காமல் பொருத்திருப்பார். இதற்கப்புறமும் அவர் திருந்தாவிட்டால் அவரைத் தண்டிப்பதில் தவறு என்ன? பல ஜில்லாக்களில் யதேச்சாதிகாரம் தலை விரித்தாடுவது நின்றது. தொழிலைச் சரிவரச் செய்தால் மேலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம் என்பதை ரிஜிஸ்திரேஷன் உத்தியோகஸ்தர்கள் அறிந்தனர். இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு மூலை முடுக்குகளிலிருந்தும் ஒவ்வொருவர் செய்யும் காரியங்களைப்பற்றிய தகவல்கள் கிடைத்து வரும். இவர் பிறர் பேச்சைக் கேட்டு ஆத்திரப்படும் ஸ்வபாவமற்ற வராதலால் இவரது மனசை அறியாமல் அவர்கள் அச்சத்துடன் அடக்கமாகக் காலத்தைக் கடத்தினர். ரிஜிஸ்திரார்களுக்கு கீழ்த்தரசிப்பந்திகளை நியமிக்கவும் பொருத்தமான தண்டனையை வழங்குவதற்கும் இவர் போதிய அதிகாரத்தை அளித்தார். தாமும் அவ்வப்போது தம்மிடம் வரும் மனுக்களைப்பரிசீலித்து முடிவு பண்ணுவார்.

புதிய துறையில் பிரவேசிக்க இன்ஸ்பெக்டர் ஜெனரலின் மனம் ஆவல் கொண்டது. பத்திரப்பதிவுக்கும் நாட்டின் செல்வ நிலைமைக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? ரிஜிஸ்தர் செய்யப்படும் பத்திரங்களின் தன்மையையும் மதிப்பையும் ஆதாரமாகக் கொண்டு மாகாணத்தின் சுபிட்சம் உயர்ந்தும் தாழ்ந்தும் வருவதேன் என்பதை நிர்ணயிக்க முடியுமா? பருவக்கோளாறுகள் பத்திரங்கள் பதிவாவதைப் பாதிக்கின்றனவா? இந்தக் கேள்விகளை இவர் தம் மனசில் இருத்திக்கொண்டு தம்முடைய முதல் வருஷத்தில் நிர்வாக யாதாஸ்தில் எழுதிவைத் திருக்கும் சில வாக்கியங்கள் இங்கு குறிப்புக் குரியவை.

"ரிஜிஸ்தர்கள் ஆகுவதையும் அவை ஆகாமையையும் அடிப்படையாகக் கொண்டு விவசாயிகளுக்கு நல்ல காலமா அல்லவா என்பதைச் சுட்டிக் காட்டும் விஷயத்தில் ஜில்லா ரிஜிஸ்திரார்களிடமிருந்து கிடைத்த ரிபோர்ட்டுகள் எனக்கு உதவவில்லை. அவற்றின் மூலம் நம்பத்தக்க முடிவுகளைப் பண்ண இயலாது. தஸ்த வேஜிகள் பதிவாகும் விகிதம் எப்போதும் ஒரே நிலைமையில் இராமையையும் சென்ற பத்துவருஷ காலமாய் இருந்துவரும் உணவுப் பொருள்களின் சராசரி விலையையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் பயிர் சாவி ஏற்படும்போது விலைவாசிகள் பெருக்கம் காரணமாகத் தஸ்தவேஜிகள் வழக்கத்திற்கும் அதிகமாக ரிஜிஸ்தர் ஆகின்றன. விலைவாசி குறையும் போது ரிஜிஸ்திரேஷனும் குறைந்து போகிறது. உதாரணமாக 1882—83 ஆகிய வருஷத்துடன் முடிவான இரண்டு வருஷங்களில் அதற்கு முன்பு அநேக வருஷ காலம் இராத அளவுக்கு விலைவாசிகள் இறங்கி விட்டன. ஆகவே அந்த வருஷங்களில் ரிஜிஸ்திரேஷன் ஒரே நிலையில் இருந்தது. 1886—87, 1887—88 ஆகிய ஆண்டுகளிலும் விலை மிகவும் மட்டமாக இருந்தது. இதற்கு முந்திய இரண்டு வருஷ காலத்தில் இருந்ததுபோல் இந்தக் காலத்தில் பத்திரப்பதிவு வேலை அதிகமாக இருக்கவில்லை. 1888—89-ல் விலைகள் உயர்ந்தன. தென் ஜில்லாக்களில் மட்டும் விவசாயிகள் சௌகரியமாக இருந்தனர். 1889—90-ல் இம்மாகாணத்தின் வடக்கு, மத்திய பிரதேசங்களில் பருவநிலை திருப்திகரமாக இருந்தது. ஆனால் தென் ஜில்லாக்களில் பருவக் கோளாறு காரணமாய் உணவுக் கஷ்டம் சம்பவிக்குமோ என்று பயப்படும்படியும் இருந்தது. ஆகவே 1888—89-ல் இருந்ததைவிட விலைகள் அதிகமாக உயர்ந்து விட்டன. 1889—90-ல் தென் ஜில்லாக்களில்தான் பத்திரங்கள் மிகவும் அதிகம் பதிவாகியிருக்கின்றன. 1888—89-ல் கோதாவரி ஜில்லாவில் பத்திரப் பதிவு மட்டுப்பட்டதற்கு நல்ல சாகுபடியும் கஞ்சத்தில் ஏற்பட்ட பயிர் நஷ்டத்தினால் விலைகள் உயர்ந்துவிட்டமையும் இதனால் ரயத்துகளுக்கு தேவைக்கு அதிகமாக பணம் கிடைத்து

அவர்கள் கடன் வாங்காமல் சௌகரியமாக இருக்க நேர்ந்தமையும் காரணங்கள் என்று ஜில்லா ரிஜிஸ்திரார் எழுதுகிறார். 1889—90-ல் 1888—89-ல் இருந்த விலையைவிட அதிகமாய் கோதாவரி ஜில்லாவில் இருந்தது. முந்திய வருஷத்தில் அதிகமாகப் பத்திரங்கள் பதிவாக்கப்பட்டதற்கு கஞ்சம், விசாகப்பட்டினம் ஜில்லாக்களிலும் சாகுபடி நன்ருக இருந்ததால் முந்திய வருஷத்தில்போல் ரயத்துகள் அதிகப் பணம் சம்பாதிக்க முடியாமற் போய்விட்டதும் பிறகு பணத்தை வேண்டியவர்கள் லேவாதேவிக்காரர்களிடம் போகவேண்டி வந்ததும் காரணங்கள் என்று அந்த ரிஜிஸ்திரார் மேலும் விளக்குகிருர். இது ஏதோ ஊகம்; இது உண்மையாயின் மேலே காட்டப்பட்ட கருத்தை ஊர்ஜிதப்படுத்த இது உதவும். இந்த மாகாணத்தில் பதிவாகும் பத்திரங்களில் 100-க்கு 93 நிலத்தைக் குறித்தவை. மக்களில் பெரும்பாலர் விவசாயிகள். நிலச்சுவான்களில் அதிக பேர்கள் ஏழ்மை நிலைமையில் ஏங்குகின்றனர். (ரயத்துவாரி நிலத்தில் இருக்கும் ரயத்துகளில் மூன்றில் இரண்டு பாகத்திற்கு அதிகம், அதாவது 30 லக்ஷம் பேர்களில் 20 லக்ஷம் பேர்கள் சர்க்காருக்கு வருஷா வருஷம் சராசரியாக ரூபா நான்கு தீர்வை செலுத்துகின்றனர்.) அறுவடைக்கப்புறம், திரும்பவும் சாகுபடியை ஆரம்பிக்குமுன் தங்கள் நிலத்தின் மூலம் கிடைத்த பயிரை உபயோகித்துக் கொண்டுவரும் மிக்க சாமான்யமான ரயத்துகள் பயிரிடுவதற்காகவும் சொந்த உபயோகத்திற்காகவும் அதிகமாய் தான்யங்களைக் குவித்து வைத்திருக்கும் பெரிய ரயத்துகளிடம்போய் அடுத்த சாகுபடிக்கப்புறம் வட்டியுடன் திருப்பிக் கொடுத்து விடுவதாக வாக்களித்து தங்களுக்கு வேண்டிய அளவுக்கு தான்யத்தைக் கடன் வாங்கிக் கொள்கின்றனர். முதலில் இதற்காக எந்தவிதமான பத்திரமும் ஏற்படுகிறதில்லை. கடன் கொடுத்தவர் மட்டும் இதைத் தமது கணக்குப் புத்தகத்தில் ஞாபமாகக் குறித்துக் கொள்வது வழக்கம். அடுத்த வருஷமும் சாகுபடி சரியாக இராதுபோய் கடன் வாங்கியவர் வாங்கியதைத் திருப்பித்தர இயலாமல் இருப்பதுடன் மேலும் தான்யமா

கவோ பணமாகவோ கடன் கேட்கும்படி நிர்ப்பந்தம் பிறந்தால் சாதாரணமான பத்திரங்களை முதலில் அவர் எழுதித்தர வேண்டியிருக்கும். இதற்கப்புறம் கடன் அளவுக்குத் தக்கபடி அடமானம் செய்தும் அனுபவ பாத்தியதை அளித்தும் அவர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டி நேரிடுகிறது. அது விஷயத்தில் பணத்தை வசூலிப்பதில் ஏற்படக்கூடிய சிரமம் முக்கியமாகக் கவனிக்கப் படுகிறது.

"நான் நடத்திய விசாரணையிலிருந்து இந்த முறையில் நல்ல காலமும் கெட்ட காலமும் ரிஜிஸ்திரேஷன் போக்கைப் பாதிக்கின்றன. சில குறிப்பிட்ட ஜில்லாக்களில் வேறு சில காரணங்கள் வேறு விதத்தில் வேலை செய்வதால் பருவ மாறுபாடுகளைப்பற்றி அங்கு அவ்வளவு பிரதானமாகக் கருதக்கூடாது. உதாரணமாக கள்ளிக்கோட்டை ஜில்லாவில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் குத்தகை சீட்டுகளைத் திரும்பவும் பதிவு செய்யவேண்டும் என்ற வழக்கம் அங்கு அதிகமாக இருக்கும் ஜென்மிகளுக்கு இருந்து வருவதால் அங்கு பத்திரப் பதிவு ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிகமாகவும் பிறகு குறைவாகவும் இருக்கிறது. ஒரு வருஷ இறுதியில் கொள்ளை நோய் ஏற்பட்டால் சாதாரணமாக அந்த வருஷத்திற்குள்ளேயே பதிவாக வேண்டிய பத்திரங்கள் அடுத்த வருஷத்தில் பதிவு செய்வதற்காக ஒதுக்கிவைக்கப் படுகின்றன. கெட்ட காலத்தில் பத்திரப் பதிவு வேலை உடனே ஜாஸ்தியாகி வருகிறதாயினும் அடுத்தடுத்து துர்ப்பிக்ஷ வருஷங்கள் தலைகாட்டுமானல் நிலச் சொத்துக்கு மதிப்பு மங்கிப்போய் நிலம் விஷயமாய் எந்தவித உடன்பாடும் ஏற்படாமல் நின்றுபோகிறது. ஆனல் அநேக வருஷங்களாகப் பத்திரப் பதிவு வேலை அதிகமாக நடந்திருக்கிறது என்பதைக் கொண்டு, நிலச் சொத்தின் அளவு குறைந்துவிட்டது என்ருே அல்லது விவசாயிகளின் நிலைமை மோசமாகி விட்டது என்ருே ஊகிப்பது பிசகு. நிலம் விஷயமான ஒப்பந்தங்கள் நிலத்திற்கு அதிகமான மதிப்பும் சுபிக்ஷமான ரயத்துகளும் உள்ள ஜில்லாக்களில்தான் அதிகம் பிறக்கின்றன. இந்த மாகாணத்தில் பத்திரங்கள் அதிகமா

கப் பதிவாவதற்கு (1) கடந்த பஞ்சத்திற்கப்புறம் நாடு வெகுவாக முற்போக்கை அடைந்து விட்டதும் (2) 1877, 1882-ம் வருஷங்களில் ரூ. 100க்குக் குறைந்த மதிப்புள்ள பத்திரங்கள் பதிவானுல் அதற்குப் பதிவாகாத பத்திரத்தைக் காட்டிலும் மேலான மதிப்பு உண்டு என்றும் 100 ரூபாய்க்குக் குறைந்திருந்தாலும் விற்பனை முதலிய சம்பந்தமான பத்திரம் பதிவாக வேண்டும் என்றும் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டமையும் (3) பத்திரப் பதிவினுல் விளையும் செளகரியங்களை மக்கள் அதிகமாக உணர்ந்து வருவதுடன் ஏராளமாகப் புதிய ரிஜிஸ்திரேஷன் காரியாலயங்கள் திறக்கப்பட்டு வசதிகள் அதிகம் செய்யப்பட்டதும் சென்ற பல வருஷங்களாக இலாகா மிக்க திறமையுடன் நிர்வகிக்கப்பட்டு வந்திருப்பதும் தான் மூலகாரணங்கள் ஆவன. நான் விசாரித்துப் பார்த்த மட்டில் நிலம் விவசாயிகளிடமிருந்து விவசாயிகளல்லாதார் கைக்கு மாறி வருகிறது என்பது ருசுவாகவில்லை. இந்த மாகாணத்தில் ரயத்துகள்தான் பெரும்பாலும் பணத்தையும் தான்யத்தையும் லேவாதேவி செய்பவர்கள். இதையே தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் மிகவும் சொற்பம். அல்லது அநிாவசியமாக ஒரு சிலர் கையில் சொத்து சிக்கி விடுகிறது என்ற சந்தேகத்திற்கும் இடம் இல்லை. அப்படி இது உண்மையாயிருந்தாலும் இதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஹிந்து வார்சுரிமை சட்டப்படியும் வாழ்க்கைத் தரத்தின் குறைவு காரணமாகவும் கைப்பற்று நிலங்கள் சிறிது சிறிதாகத் துண்டாகி விடுவதைத் தடுக்க இது உதவும். பொதுவான நிலைமையை அடிப்படையாகக் கொண்டு இந்த அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டுள்ளன். ரிஜிஸ்திரேஷன் இலாகா தஸ்தவேஜிகள் மூலம் வெளிப்படும் தகவல்களைக் கொண்டு பல ஜில்லாக்களுக்கும் இந்தக் கருத்துகள் எவ்வளவுதூரம் பொருந்தும் என்பதைக் கண்டுபிடிக்க நான் முயலுவேன். நிலத்தின் விலை மாறுபாடுகளைக் குறித்தோ கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதத்தைக் குறித்தோ அல்லது விவசாயிகளின் பொருளாதார ஸ்தி

தியைக் காட்டும் விசேஷ சந்தர்ப்பங்களைக் குறித்தோ முக்கியமான தகவல்கள் கிடைக்குமாயின் அடுத்து வரும் ரிபோர்ட்டுகளில் அவை குறிப்பிடப்படும்.''*

இந்த யாதாஸ்தை விமர்சித்து சர்க்கார் 1890-ம் வருஷம் அக்டோபர் மாதம் 20-ம் தேதியன்று பிறப்பித்த உத்திரவில், "தம்முடைய ரிபோர்ட்டில் இம் மாகாணத்தில் பத்திரப்பதிவு அதிகரித்திருப்பதற்கான காரணங்களைக் கண்டுபிடித்தறிவிக்க இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிகச் சிரமப் பட்டிருக்கிறார். இரண்டு முரண்பட்ட சக்திகள் காரணமாக சிறிது காலத்திற்கு எது எப்படியாயினும் பத்திரப் பதிவு வேலை அதிகரிக்கும் என்று அவர் கூறுகிறார். ஒன்று தேசத்தின் க்ஷேமம் வளர்ந்து நிலத்தின் மதிப்பு பெருகுதல், இரண்டாவது, ஏழை விவசாயிகளின் கஷ்டம் பொதுவாக அதிகரித்திருப்பது.

"முடிவில் சபையுடன் கூடிய மே. த. கவர்னர் இந்த காலத்தில் ரிஜிஸ்திரேஷன் இலாகா மிகச் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்திருப்பதுபற்றி தமது திருப்தியை வெளியிட ஆவலாக இருக்கிறார்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிக்கை இந்திய சர்க்காராலும் வெகுவாகக் கொண்டாடப்பட்டது. இனிமேல் இவ்விதம் நாட்டின் செல்வ நிலைமையை எடுத்துக் காட்டவேண்டும் எனவும் அவர்கள் அறிவித்தனர். பிரதி வருஷமும் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சர்க்காருக்கு சமர்ப்பித்த நிர்வாக அறிக்கையில் இலாகாவைப் பற்றிய எல்லா விவரங்களையும் ஒன்றுகூட பாக்கிவிடாமல் சுருக்கமாகவும் படிப்பவர்களுக்கு ரஸிக்கும் விதத்திலும் வெளியிட்டு வந்தார். இதற்கு முன்பெல்லாம் வெளிவந்த ரிபோர்ட்டுகளைப் படிக்கையில் அவை எவ்வளவு சாரமற்றவை என்பது தெரியும். மூன்று வருஷங்களுக்கொருமுறை தயாரித்த யாதாஸ்தில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பல புதிய தகவல்களையும் சேகரித்து வெளியிட்டார். புள்ளி விவரங்களை

*1889—90-ம் ஆண்டுடன் முடிவாகிய மூன்று வருஷங்களில் ரிஜிஸ்திரேஷன் இலாகா நிர்வாக யாதாஸ்து: பக்கங்கள் 3, 4

எடுத்துக் கொண்டு பல முக்கிய முடிவுகளைப் பண்ண முடியும் என்பதை இவர் அவற்றில் நிரூபித்தார்.

அடுத்த வருஷத்து நிர்வாக யாதாஸ்தை விமர்சித்து சர்க்கார் பிறப்பித்த உத்திரவில், “இப்போது 1890—91-ம் ஆண்டில் ரிஜிஸ்திரேஷன் இலாகா நிர்வகிக்கப்பட்டதைப் பற்றி இன்ஸ்பெக்டர் ஜெனரல் தயாரித்திருக்கும் குறிப்புகளில் இந்த வருஷத்தில் மிகவும் முக்கியமாக இருந்த அம்சங்கள் யாவும் போதிய சுருக்கத்துடன் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதால் சர்க்காரும் தங்கள் அபிப்பிராயத்தை அதிகமாக வெளியிட அவசியமே இல்லை.........முடிவில் சபையுடன் கூடிய மே. த. கவர்னர் ரிஜிஸ்திரேஷன் இலாகா நிர்வாகம் மிக்க திருப்திகரமாக நடப்பதைக் குறித்தும் இலாகாவின் வேலையும் அளவு மீருமல் மிகவும் அதிகமாகிக் கொண்டிருப்பதைக் குறித்தும் தம்முடைய சந்தோஷத்தை வெளியிட விரும்புகிருர்” என்றும் தெரிவிக்கப்பட்டது.*

சர்க்காரின் உத்திரவைக் குறித்து “ஹிந்து” பத்திரிகை தெரிவித்த கருத்து வருமாறு:—

> “இந்த உத்தியோகஸ்தர் தமது வேலையில் காட்டும், அசாதாரண திறமையையும் ரிஜிஸ்தர் செய்யும் ஆபீஸர்களின் ஊக்கத்தையும் அறிந்தவர்கள் யாவரும் இந்த பஹுமானத்தை ஒப்புக் கொள்வர். சர்க்கார் விமர்சனத்தின் மூலம் அநேகம் திருப்திகரமான அம்சங்கள் புலப்படுகின்றன.”**

மறு வருஷத்திய (1891—92) நிர்வாக யாதாஸ்திலும் நாட்டின் சுபிக்ஷ நிலைமையைப்பற்றி திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஒரு சிறிது எழுதிவைத்தார்:—

> “சென்ற வருஷத்தில் வடகிழக்கு பருவ மழை தவறிவிட்டது. ஆகவே மாகாணத்தின் பெரும் பகுதியில் க்ஷாமம் ஏற்பட்டது. இது காரணமாக சில ஜில்லாக்களில் அதிகமான பத்திரங்கள் பதிவாயின; மற்றும் சில ஜில்லாக்களில் பதிவானவை சொற்பம்.”

---

*சர்க்கார் உத்திரவு (நீதி இலாகா) நெ. 1607: 13. 8. 1891
**11. 10. 1891

இந்தப் பத்திரப்பதிவு அங்கேற்பட்ட கஷ்டத்தின் அளவையும் இதற்கு முன்பு பல வருஷங்களில் அந்தப் பிரதேசம் எவ்வளவு சிரமத்துக் குட்பட்டிருந்தது என்பதையும் மழை தவறிய போதிலும் விவசாயிகளுக்கு சமாளித்து நிற்பதற்கு இருக்கும் சக்தியையும் கடன் பளுவைப் பற்றிய வரையில் அங்கு சாதாரணமாக நிலவிய ஸ்திதியையும் தழுவியிருந்தது. இந்த வருஷம் பாதகமாக இருந்த வியாஜங்களில் பின் வருபவை சில: (1) கடப்பை, பெல்லாரி, அனந்தபூர், கர்நூல், கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களில் காலராவும் பெரியம்மையும் அதிகம் பரவியிருந்தன (2) நில அபிவிருத்திக் கடன் சட்டத்தின்படி சர்க்கார் அதிகமாகக் கடன் வழங்கினர். கஷ்டம் ஏற்பட்ட பிரதேசங்களில் இருப்பவர்களின் சௌகரியத்திற்காக கஷ்ட நிவாரண விடுதிகள் அமைக்கப்பட்டன வாதலாலும் வழக்கம் போல் ரயத்துகள் லேவாதேவிக்காரர்களிடம் போய் கடன் வாங்கவில்லை (3) மலையாளத்தின் வடபாகத்தில் மிளகு தேங்காய் ஆகியவற்றின் விலை மிகவும் குறைந்து அந்தப் பிரதேசத்தில் பணம் கிடைக்காமல் வருத்தம் ஏற்பட்டது.''*

பண நடமாட்டம் குறைந்து விட்டபோது தஸ்தவேஜிகளைப் புதுப்பித்தல் அல்லது சொத்து மாற்றுதல் முதலிய காரியங்கள் யாவும் ஒத்திவைக்கப்படுகின்றன. குத்தகைச் சீட்டுகளைப் புதுப்பிக்கும் காரியம் தாமதிப்பதற்கு புதுப்பிப்பதற்கான அதிகபக்ஷ கட்டணத்தை நிலச்சுவான்தார்களுக்கு ரயத்துகள் செலுத்த முடியாதபடி இருப்பதே காரணம். நிலத்தை விட்டுவிட்டுப் போகும் ரயத்துகள் அந்த நிலத்தில் செய்த அபிவிருத்திகளை ஈடுசெய்யாமல் நிலச்சுவான்கள் இருப்பதால் மாற்றுதல் முதலிய காரியம் நடப்பதில்லை.**

இந்த யாதாஸ்தை "ஹிந்து" மிகவும் புகழ்ந்தது. ஒரு சர்க்கார் இலாகாவின் வருஷாந்தர நிர்வாகரிபோர்ட் எப்படி

*1891—92-ம் வருஷ நிர்வாக ரிபோர்ட். பக்கம் 2

**1891—92-ம் ஆண்டு நிர்வாக ரிபோர்ட். பக்கம் 4

எழுதப்பட வேண்டும் என்பதற்கு இதுதான் உதாரணம் என்றது அந்தப் பிரபல தேசியப் பத்திரிகை. "சந்தேகத்திற்கிடமில்லாதபடி சங்கிரஹமாகவும் பிழை எதுவுமின்றியும் அது இருக்கிறது" என்று அப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

இந்த வருஷம் இவருடைய நிர்வாகத்தை சர்க்கார் பெரிதும் சிலாகித்தனர். "முடிவில் இலாகா நிர்வாகம் வழக்கம் போல் மிக்க உயர்தரமாக இருந்திருக்கிறது என்பதும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் அவருடைய சிப்பந்திகளுக்கும் இது மிக்க பெருமைதரக் கூடியது என்பதும் குறிப்பிடப்பட வேண்டியவை," என்று எழுதினர் சர்க்காரின் பிரதம காரியதரிசியான மிஸ்டர் ப்ரெட்ரிக் ப்ரைஸ்.

"இந்த ஆண்டில் பல இனங்களிலும் அபிவிருத்தி இருந்தது. அநேக விஷயங்களில் அபிவிருத்தி அதி அவசரமான விதத்திலேயே இருந்தது" என்றும் அதே உத்திரவில் சுட்டிக் காட்டப்பட்டது.

1892—93-ம் ஆண்டுடன் பூர்த்தியான மூன்று வருஷ காலத்தில் நிர்வாகத்தைப்பற்றி சர்க்காருக்கு அனுப்பிய யாதாஸ்திலும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேசத்தின் செல்வ நிலைமைக்கும் பத்திரப் பதிவு வேலைக்கும் இருக்கும் தொடர்பை மிகவும் தெளிவு படுத்தினர். ஒவ்வொரு ஜில்லாவையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு இந்த மூன்று ஆண்டுகளில் அங்கு இருந்த ஸ்திதியைப்பற்றி இவர் வெளியிட்ட கருத்துகள் சிலாகிக்கத் தக்கவை. ஆங்காங்கு தென்பட்ட விசேஷமான அம்சங்களையும் பொதுமக்கள் தாமாகவே தங்கள் நலனை யுத்தேசித்து மேற்கொண்டு வரும் முயற்சிகளையும் இவர் அதில் எடுத்துக்காட்டி மாகாணத்தின் போக்கு எத்தகையபடி இருக்கிறது என்பதை அறிய வழிகாட்டினர்.

"இந்த மேற் குறிப்பிட்ட விவரங்களிலிருந்து சென்ற நான்காண்டுகளில் மாகாணத்தின் அதிக பாகம் துர்ப்பிக்ஷத்தினுல் தொடர்ந்தாற்போல் வாடியதும் பயிர் நஷ்டம் காரணமாகவும் உணவு தான்யங்களின் விலை அதிகமாகிவிட்டதாலும் மக்கள் அதிகக் கஷ்டப்பட்டமையும் பருவக் கோளாறினுல் பத்திரப் பதிவு வேலை பல ஜில்லாக்களிலும் ஆங்காங்

குள்ள சில விசேஷ நிலைமைகள் காரணமாக ஒரே சீராகப் பாதிக்கப்படாமல் இருந்திருப்பதும் தெளிவு படும். இந்த விசேஷ நிலைமைகளுள் குடிவார பாத்தியதைகளையும் ஜனத்தொகையையும் லேவாதேவிக் காரர்களையும் ஒன்று அல்லது இரண்டு வருஷங்களில் பயிர் சாவியானாலும் சமாளித்து நிற்க விவசாயிகளுக்கிருக்கும் சக்தியையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்...கர்னூல், அனந்தபூர் ஆகிய ஜில்லாக்களில் நிலத்திற்கு அதிக மதிப்பு இல்லை. அங்கு ரயத்துகள் பூமியைச் சாகுபடி பண்ணுவது பருவ ஸ்திதியைத் தழுவியிருக்கிறது. ஒரு வருஷம் கெட்டுவிட்டாலும் அங்கு பதிவாகும் தஸ்தவேஜிகளின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது. வட ஆற்காடு ஜில்லாவில் சமீபத்தில் ஏற்பட்ட துர்பிக்ஷத்தினால் ரிஜிஸ்திரேஷன் வேலை எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டது என்பதைப்பற்றி நான் சர்க்காருக்காகத் தயாரித்த விசேஷ யாதாஸ்தில் விவசாயிகளின் நல்ல காலமும் கெட்ட காலமும் பத்திரப் பதிவு வேலையை எவ்வளவு அளவுக்குப் பாதிக்கின்றன என்பதை நிர்ணயிக்குமுன் கவனிக்க வேண்டிய சில அம்சங்களை விவரித்திருந்தேன். நல்ல காலமும் கெட்ட காலமும் அடங்கிய பல வருஷங்களின் தொகுதியை எடுத்துக்கொண்டு பார்க்கையில் நிலத்தின் மதிப்பு உயர்ந்து வர்த்தகம் அபிவிருத்தியாகி, நாணய வசதிகள் அதிகரித்து கல்வியும் பெருகி கடன் கொடுப்பதும் வாங்குவதும் எழுத்து மூலம் இருக்கவேண்டும் என்ற உணர்ச்சி உதயமாகி சௌகரியமான இடங்களில் புதிய ரிஜிஸ்திரேஷன் ஆபீஸ்கள் திறக்கப்பட்டு வந்திருப்பதால் ரிஜிஸ்திரேஷன் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இவ்வளவு நீண்டகாலத்தில் ரிஜிஸ்திரேஷன் வேலை அதிகரித்திருப்பது முன்னேற்றத்தைக் காட்டும். அப்படியில்லாவிடின் அது பிற்போக்கையே நிரூபிக்கும்...திருநெல்வேலி ஜில்லாவில் அநேகர் சொற்ப கைப்பற்று நிலங்களைக்கொண்டுள்ளனர். இங்கு வியாபாரப் பயிர் சாகுபடி காரணமாக நிலத்தின் மதிப்பு அதிகமாக இருக்கிறது. இந்த ஜில்லாவில் அதிக பத்திரங்கள் பதிவாகியிருக்கின்றன.

சமீப வருஷங்களில் வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களிலும் பத்திரங்கள் அதிகம் பதிவாகி யிருப்பதற்கு இதுவே காரணம். இங்கு நிலக்கடலை சாகுபடி அதிகமாகி வருகிறது. குறுகிய காலத்திய புள்ளி விவரங்களைப் பரிசீலித்தால் விவசாயிகளின் நிலைமையையே பத்திரப் பதிவு வேலை தழுவியிருக்கிறது. இவர்கள் நிலை அடிக்கடி மாறிவருகிறது. இந்த மாகாணத்தில் பதிவாகும் பத்திரங்களில் பெரும்பான்மையானவை விற்பனை, அடமானம், குத்தகை ஆகியவற்றைக் குறித்தவையாக இருக்கின்றன. அடிக்கடி துர்பிக்ஷம் ஏற்படும் ஜில்லாக்களில் ஏழை ரயத்துகள் நல்ல சௌகரிய நிலையிலிருக்கும் ரயத்துகளிடம் கணக்கு வைத்துக்கொள்வது வழக்கம். சில சமயம் வியாபாரிகளிடமும் இம்மாதிரி உறவுகொள்வதுண்டு. அவர்களிடமிருந்து சாகுபடி காலத்தில் சொற்ப பணத்தையோ உணவு தான்யத்தையோ அல்லது உழவு தான்யத்தையோ அடுத்த சாகுபடி சமயத்தில் தான்யவகையாகவோ பணமாகவோ வட்டியுடன் திருப்பிக் கொடுப்பதாக உறுதிகூறி வாங்கிக் கொள்கின்றனர். சாகுபடி சமயத்தில் இதைத் திருப்பிக் கொடுப்பதானுல் எந்தவிதமான உடன்பாடும் பதிவு செய்யப்படுவதில்லை. திரும்பவும் பயிர் சாவியாகப்போய் வாங்கியகடனைத் திருப்பிக்கொடுக்க முடியாதிருப்பதுடன் தங்கள் ஜீவனத்திற்காக மேலும் அதிகமாய் கடன்வாங்க நேரிட்டால் தங்கள் ஸ்தாவரச் சொத்துக்களை அடமானம் வைக்கவேண்டும் என்று அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கடன் தொகையும் நிலத்தின் மதிப்பும் இது விஷயத்தில் பிரதானமாகக் கவனிக்கப்படும். நிலத்திற்கு அதிக மதிப்புள்ள ஜில்லாக்களில் இரண்டு மூன்று துர்ப்பிக்ஷ வருஷங்களில் அடமான பத்திரங்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஆனுல் இதே மாதிரி துர்ப்பிக்ஷம் நீடித்திருந்தால் ஏழை ரயத்துகளின் நாணய வசதி கெட்டுவிட்டு அவர்களைக் காட்டிலும் பணக்காரர்களாக இருப்பவர்களுக்குக்கூட அவர்களுக்குக் கடன்கொடுத்து உதவ முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுமாதலால் பத்திரப்பதிவு பிறகு குறைந்து

போகும். நிலத்திற்கு அதிக மதிப்பு இராத ஜில்லாக்களில் இந்த நிலைமை வெகு சீக்கிரத்திலேயே சம்பவிக்கும். ஒரு வருஷம் பயிர் சாவியாகிவிட்டால் கூட போதும்! விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டால் ஆரம்பத்தில் அது ரிஜிஸ்திரேஷன் வேலையை அதிகமாக்குகிறதாயினும் இந்தக் கஷ்டம் அதிக வருஷங்களுக்கு நீடித்துவிட்டால் பதிவாகும் பத்திரங்களின் எண்ணிக்கை குறைந்துவிடுகிறது. இந்தக்காலத்தில் விற்பனையும் அடமானமும் குத்தகையும் நின்றுவிடுகின்றன. சுபிக்ஷ காலத்தில் நிலத்தை வைத்திருப்பதனால் பலனுண்டாகையால் நிலத்தின் மதிப்பு விருத்தியாகிறது. இதே சமயத்தில் நிலம் அதிக விலைக்கு விற்பனையாவதுடன் குத்தகைக்கும் விடப்படுகின்றன. பழைய அடமானங்கள் ரத்தாகின்றன. சில சொந்த காரணங்களுக்காகக் கடன்வாங்க வேண்டி வருகிறது. இதற்காகப் புதிதாக அடமானப் பத்திரங்கள் சிருஷ்டியாகின்றன. இன்னும் எவ்வளவோ சாதாரண விஷயங்களை நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு வருஷத்தில் பயிர் நஷ்டமாகிவிட்டால் அந்த வருஷத்திலேயே அது பத்திரப்பதிவை பாதிக்கிறதா அல்லது அதைத் தொடர்ந்த வருஷங்களிலா என்பது அந்தப் பிரதேசத்திற்கு வடகிழக்குப் பருவத்தின் மூலம் மழை கிடைக்கிறதா அல்லது தென்மேற்கு பருவத்தின் மூலமா என்பதையே தழுவியிருக்கிறது. சாதாரணமாக ஜூன், ஜூலை மாதங்களில் சாகுபடி காரியம் ஆரம்பமாகி விடுவதால் அப்போது ரயத்துகளும் கடன்கொடுத்தவர்களும் தங்கள் கணக்குகளைத் தீர்த்துக்கொள்வது வழக்கம். சர்க்காருக்கு கிஸ்தி கட்டவும் இதர காரியங்களுக்காகவும் இதே காலத்தில்தான் கடன் வாங்கப்படுவதும் வழக்கம். எக்ஸிக்யூட் ஆகும்பத்திரங்கள் அதற்கு நான்குமாத காலத்திற்குள் பதிவுசெய்யப்படலாம். ஆகவே நவம்பர் மாதம் வரை ரிஜிஸ்திரேஷன் வேலை அதிகமாகவே இருக்கும். வடகிழக்கு பருவ மழையையே பிரதானமாக எதிர்பார்க்கும் ஜில்லாக்களில் பருவமழை தவறிவிட்டால் அவ்வருஷத்தின் பிந்திய பாகத்திலும் அடுத்த வருஷத்தின்

ஆரம்பத்திலும் பத்திரப் பதிவு அதிகமாக இருக்கும். வட கிழக்கு பருவ மழையை பிரதிக்ஷிக்கும் ஜில்லாக்களில் மழை தவறிவிட்டால் அடுத்த வருஷத்தில் தான் அதன் விளைவு பூரணமாகத் தெரியும். ஜில்லாக்களைப்பற்றிக் குறிப்பிடப் பட்டவை ஜில்லாக்களின் பிரிவுகளுக்கும் பொருந்தும். இவற்றில் சில பிரதேசங்கள் இரண்டு பருவங்களினுலும் வெவ்வேருகப் பாதிக்கப்படுகின்றன. இங்குள்ள இடங்களில் ஒரே மாதிரியாகக் கஷ்டம் இராதபோது ஒரு இடத்தில் அவ்வளவு சிரமம் இராமையால் அதிகரிக்கும் பத்திரப் பதிவு மற்ருெரு இடத்தில் சிரமம் ஜாஸ்தியாக இருப்பதால் குறைந்துவிடும் பத்திரப் பதிவினுல் சரிப்படுத்தப்பட்டுவிடும். ஆகவே ஜில்லாக்களின் பாகங்களை எடுத்துக்கொண்டால் பருவ நிலைக்கும் பத்திரப் பதிவுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று சந்தேகிக்கும்படி இருக்கும்.

இவற்றைத் தவிர மற்றும் சில தற்காலிகமானவையும் எதிர்பாராமல் ஏற்படுபவையுமான சில காரணங்களினுல் பத்திரப் பதிவு வேலை பாதகமடைகிறது. அவை ஒரு வருஷத்தில் கிடைக்கும் விடுமுறை நாட்கள், கொள்ளை நோய்கள் பரவுதல், சர்க்கார் கிஸ்தி வசூலை நிறுத்திவைத்தல், நில அபிவிருத்தி விவசாயிகள் கடன் சட்டப்பிரகாரம் கடன் கொடுத்தல் முதலியன. சென்ற இரண்டு வருஷ காலத்தில் நில அபிவிருத்தி விவசாயிகள் கடன் சட்டத்தின்படி பஞ்சத்தினுல் வாடிய ஜில்லாக்களில் சுமார் 40 லக்ஷம் ரூபாய்களை சர்க்கார் விநியோகம் செய்திருக்கின்றனர். இதற்கு முன்பு பிரதி வருஷம் இரண்டரை லக்ஷ ரூபாய்களுக்கு அதிகமாகக் கடன் கொடுக்கப் பட்டதில்லை.*

திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தம்முடைய இலாகாவில் அபிவிருத்தியைப் பற்றியும் ரிபோர்ட்டில் ஒரு சிறிது குறிப்பிட்டார். அந்தப் பகுதியும் இங்கே எடுத்துக் காட்ட வேண்டியதாகும்.

*1892-93ம் ஆண்டுடன் பூர்த்திபெற்ற மூன்று வருஷங்களின் நிர்வாக யாதாஸ்து: பக்கம் 9-11

"இந்த மாகாணம் முழுதையும் பொதுவாக எடுத்துக் கொண்டால் சென்ற 12 வருஷங்கள் அடங்கிய தொகுதியை சாதாரணமானதாகக் கருதவேண்டும். ஏனெனில் அந்தத் தொகுதியில் நல்லகாலமும் கெட்ட காலமும் அடங்கியிருக்கின்றன. 1881-82, 1882-83, 1883-84 ஆகிய முதல் மூன்று ஆண்டுகளில் பூமியில் நல்ல செழிப்பு இருந்தது. உணவு தான்யங்களின் விலை மிகவும் மட்டமாக இருந்தது. 1884-85, 1885-86 ஆகிய ஆண்டுகளில் ஸீடட் ஜில்லாக்களில் தென்மேற்கு பருவமழை தவறிவிட்டது. மாகாணம் பூராவிலும் திருப்திகரமாக இல்லை. 1886-87, 1887-88 ஆகிய ஆண்டுகள் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருந்தன. 1888-89ல் முதலில் கொஞ்சம் பருவக்கோளாறு ஏற்பட்டு 1889-90ம் ஆண்டில் கஞ்சம், விசாகப்பட்டினம் ஜில்லாக்களில் துர்ப்பிக்ஷம் ஏற்பட்டது. பிந்திய வருஷத்தில் பல தென் ஜில்லாக்களிலும் வடகிழக்குப் பருவமழை போதிய அளவுக்குப் பெய்யவில்லை. 1890-91 முதல் 1892-93 வரையுள்ள கடைசி மூன்று ஆண்டுகளில் வடகிழக்குப் பருவ மழைப் பிரதிவருஷம் தவறிக்கொண்டே இருந்தது. 1891-92ம் ஆண்டில் இரண்டு பருவ மழைகளும் ஏமாற்றிவிட்டன. சமீபத்தில் சம்பவித்த துர்ப்பிக்ஷத்தினால் தென் ஜில்லாக்களே இரண்டு வட ஜில்லாக்களையும் தக்கண ஜில்லாக்களையும் 'விட அதிக கஷ்டத்திற்குட் படுத்தப்பட்டன. பிந்திய ஜில்லாக்களில் ரயில்வே பாதை அமைப்பு வேலையால் அதிகமாகக் கஷ்டம் தெரியவில்லை. சென்ற 12 வருஷ காலத்தில் பத்திரப்பதிவு 110 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. அதாவது பிரதி வருஷமும் 6.4 சத விகிதம் அபிவிருத்தி இருந்துவந்திருக்கிறது. 1889-90ம் ஆண்டுடன் முடிவடையும் மூன்று வருஷ காலத்தில் நிர்வாகத்தைப் பற்றிய யாதாஸ்தில் நான் குறிப்பிட்டபடி 1876-77ம் வருஷத்திய பஞ்சத்திற்கப்புறம் மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்திருப்பதும் நிலத்தின் மதிப்பு அதிகமாகி, அதிகமாக அறிவிக்கப்பட்ட, ரிஜிஸ்திரேஷன் வசதிகளைப் பொதுமக்கள் பயன்படுத்திக்கொண்டதும் தான்

இந்த அபிவிருத்திக்குக் காரணங்கள் என்று விவரித்திருந்தேன். 1882-ல் சொத்து மாற்றுச் சட்டம். 100 ரூபாய்க்கு குறைந்த விற்பனைகளும் கட்டாயமாகப் பதிவாகவேண்டும் என்று விதித்தது. 1882-83 முதல் ரிஜிஸ்திரேஷன் இலாகா ஆபீஸ்களின் எண்ணிக்கை 292 லிருந்து 393 ஆக அதிகரித்திருக்கின்றன. விசேஷ ரிஜிஸ்திரார் உத்தியோகஸ்தர்களின் தொகையும் 202 லிருந்து 383 ஆகியிருக்கிறது. கிடைத்திருக்கும் தகவல்கள் மூலம் அநேக இடங்களில் நிலத்தின் மதிப்பு அதிகமாகியிருப்பதாகத் தெரிகிறது. முன்போல் இப்போது பண லேவாதேவிக்காரர்களிடம் ரயத்துகள் சிக்குவதில்லை. முன்னைக் காட்டிலும் இப்போது வட்டி விகிதம் லகுவாக இருக்கிறது. விவசாயிகளிடமிருந்து விவசாயிகளல்லாதார்களிடம் விபரீதம் ஏற்படக்கூடும் விதத்திற்கு நிலம் கைமாறி வரவுமில்லை...பஞ்சத்தினுல் பீடிக்கப்பட்ட ஜில்லாக்களில் இதர ஜில்லாக்களில் இருப்பதைவிட அதிக அளவுக்கு ரயத்துகள் ஸாஹுகார்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனுல் இப்போது சமீப காலமாக இங்கும் ரயத்துகள் அவர்களிடம் சிக்காமல் தப்பி வருகின்றனர்.''*

"நாட்டின் செல்வ நிலைமையை ஆராய்ந்தறிவதற்கு ரிஜிஸ்திரேஷன் இலாகா உத்தியோகஸ்தர்களுக்கிருக்கும் அலுவல்கள் நல்ல வசதிகளை அளிக்கின்றன. இப்போது பத்திரப்பதிவின் அபிவிருத்தியைப் பாதிக்கும் காரணங்களைக் கண்டு பிடிப்பதற்கு வழிகாட்டப்பட்டிருப்பதால் இனிவரும் மூன்று ஆண்டு நிர்வாக யாதாஸ்துகளிலும் இந்த விஷயம் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும்." என்று சர்க்கார் இவரது யாதாஸ்தைப் படித்துவிட்டு குறிப்பிட்டனர். மேலும் சர்க்கார் உத்திரவில் கூறப்பட்டவை வருமாறு:—

"பத்திரப்பதிவு அதிகரிப்பு அல்லது குறைவு இவற்றை நிர்ணயிப்பதற்கான அம்சங்கள் எவ்வளவு சிக்கலானவை என்பது இந்த யாதாஸ்திலும் மார்ச் மாதம் 17-ம் தேதி

*1892-93 யாதாஸ்து: பக்கம் 11

யன்று வட ஆற்காடு நிலைமையைப்பற்றி இன்ஸ்பெக்டர் ஜெனரல் சர்க்காருக்கு எழுதிய கடிதத்திலும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இன்னமும் இந்த அம்சங்கள்தான் பாதிக்கின்றன என்பது நிச்சயிக்கப்படவில்லை. ஆனால் தாம் கண்ட உண்மைகளிலிருந்து திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் அடியிற்கண்ட சில பொதுவான முடிவுகளை ஊகிக்கிறார்:—

(1) பொதுக்ஷேமம் காரணமாக நிலத்திற்கு அதிக மதிப்பேற்பட்டு வர்த்தகமும் அபிவிருத்தியடைந்து நாணயவுசதிகள் அதிகரித்தால் பத்திரப்பதிவும் ஜாஸ்தியாகிறது.

(2) போக்குவரத்து வசதிகளில் அபிவிருத்தியும் அதிகப்படி ரிஜிஸ்திரேஷன் ஆபீஸ்கள் அமைப்பும் படிக்கவும் எழுதவும் மக்களுக்கேற்படும் திறமையும் இந்த அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானவையும் நிரந்தரமானவையுமான காரணங்கள்.

(3) விவசாயிகளின் கஷ்டத்தினால் சிறிது காலத்திற்குப் பத்திரங்கள் அதிகம் பதிவாகும். ஆனால் இது மிகவும் தற்காலிகமானது. கஷ்டம் மிகக் கொடுமையாகி அதிக காலத்திற்கு நீடித்தால் நிலத்தின் மதிப்பு தளர்ந்து அதன் மீது பணம்போடுவதும் குறையும். பிறகு ரிஜிஸ்திரேஷன் வேலையும் அதிகமாக இராது."*

இதே உத்திரவில் பிறகு இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவித்திருக்கும் அபிப்பிராயத்தை சர்க்கார் சிறிதுகூட சந்தேகிக்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டது.

* சர்க்கார் உத்திரவு (நீதி) நெ. 1878: 15-9-1893

பால்ய விவாகத்தைத் தடுக்கவும் விதவா விவாகத்திற்கு அங்கீகாரம் பெறவும் மலபாரி செய்த முயற்சி வீணாகப் போய்விட்டது முந்திய அத்தியாயமொன்றில் விவரிக்கப்பட்டுள்ளது. மலபாரி அந்த முயற்சியுடன் மனம் சோர்ந்து விடவில்லை. மும்முறை அவர் இங்கிலாந்துக்கு இந்தப் பெரிய பணியைத் தாங்கிச் சென்றார். அங்கு போய் இந்த நாட்டில் நிலவிவரும் துர்ப்பழக்கங்களையும் கொடிய சம்பிரதாயங்களையும் தடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று அவர் முறையிட்டார். இறுதியில் லண்டனில் இது விஷயமாக நீதிமான்களும் ராஜதந்திரிகளும் அறிஞர்களும்கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு இந்தக் கமிட்டியார் பல சீர்திருத்த சிபார்சுகளைத் தயாரித்தனர். கணவன்மாருடன் பெண்கள் 10 வயசில் சேராமல் 12 வயசில்தான் சேரவேண்டும் என்பது கமிட்டியார் தீர்மான ரூபத்தில் செய்த சில சிபாரிசுகளில் மிகவும் முக்கியமானது. சிறு பெண்கள் சீக்கிரத்தில் கணவன்களுடன் கூடி வாழ்வதைத் தடுக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம். இளமையிலேயே தம்பதிகள் நெருங்கிப் பழகுவதால் தேக சுகம்கெட்டு தீராத நோய்கள் சம்பவிக்கின்றன என்றும் கமிட்டியார் கருதினர். ஆகவே இந்தக் கமிட்டி இதைப்பற்றி இந்திய சர்க்காருக்குக் கடிதம் அனுப்பியது. உடனே இந்தத் தீமையைப் போக்க சட்டம் பிறப்பிக்கப்படவேண்டும் என்று அவர்கள் நிர்ப்பந்தித்தனர்.

பிரிட்டிஷ் கமிட்டியார் நான்கு தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றின் பிரதிகளை இங்கு அனுப்பிவைத்தனர். முதலாவது தீர்மானத்தில் சம்போக வயது 10 ஆக இராமல் 12 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. இரண்டாம் தீர்மானத்தில் சிறு பிராயத்தில் விவாகமானவர்கள் யுக்த வயசை யெட்டியவுடன் காலதாமதமின்றி அந்தக் கல்யாணத்தை ஒப்புக்கொள்வதாகவோ அல்லது அதை நிராகரித்து விடடதாகவோ தெரிவித்து

விட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்படாத விவாகங்கள் ரத்தாக வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. மூன்ரும் தீர்மானத்தில் தங்களை விட்டுப் பிரிந்து மனைவிகளுடன் திரும்பவும் சேர்ந்திருப்பதை நிர்ப்பந்தித்து கோர்ட்டில் வழக்காடும் புருஷர்களைத் தழுவியது. இம்மாதிரி வழக்குகளை நடத்துவதே மிகக் கெடுதலானது எனவும் இது விஷயமாக ஹிந்து விவாகச் சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் கவனித்து புதிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் வற்புறுத்தப்பட்டது. நான்காவது தீர்மானத்தில் விதவைகளின் புனர் விவாகத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. இன்னமும் அவர்களுக்கு சட்டபூர்வமாக இருந்துவரும் தடைகள் நீக்கப்பட வேண்டும் எனவும் புனர் விவாகத்திற்கப்புறம் முதல் கணவனுடைய சொத்தில் தனக்கிருக்கும் உரிமையை அந்த ஸ்திரீ இழக்கும்படி விடக் கூடாதெனவும் புனர் விவாகம் செய்துகொள்ள விரும்பும் விதவைகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு பண்ணவேண்டும் எனவும் இந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டன.

தாயகத்திலிருந்து 1890-ம் ஆண்டின் மத்தியில் இந்தத் தாக்கீது இங்கிருக்கும் ராஜப்பிரதிநிதிக்கு வந்து சேர்ந்தது. முதலில் இது அதிகாரிகளை யெல்லாம் திகைக்க வைத்தது. புதிய சட்டத்தைப் பிறப்பிப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதை அவர்கள் உணர்ந்தனர். ஆனால் இந்த நான்கு தீர்மானங்களையும் அமுலாக்க இந்திய சர்க்கார் சம்மதிக்கவில்லை. முதல் தீர்மானத்தை மட்டுமே தற்போது அமுலாக்க அவர்கள் மனமொப்பினர். ஆகவே இதற்காக இந்திய பீனல்கோட் சட்டத்திலும் இந்திய க்ரிமினல் புரொஸீஜர் கோட் சட்டத்திலும் இந்திய சர்க்கார் சில திருத்தங்களை இயற்ற முன்வந்தனர்.

> "வெகு சீக்கிரத்தில் விபசாரத்தில் ஈடுபடுவதால் விளையும் அனர்த்தத்திலிருந்து மீட்டும், யுக்தமான காலத்திற்குமுன்பேயே பெண்களுடன்கூடி வாழ்வதை தடுத்தும் பத்து வயதுக்கு மேற்பட்டு 12 வயதுக்குட்பட்டிருக்கும் சிறுமிகளைப் பாதுகாக்கவே நாம் உத்தேசித்திருக்கிறோம்...என்னுடைய கனம்

பொருந்திய நண்பர் குறிப்பிட்டபடி நாம் தற்போது புதிய குற்றத்தை சிருஷ்டிக்கும் சட்டத்தைப் பிறப்பிக்கப் போவதில்லை. இருந்துவரும் விவாகச் சட்டத்தையும் மாற்றப் போவதில்லை. தங்களைத் தாங்களாகவே பாதுகாக்க சக்தியற்றவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான் எங்கள் நோக்கம். அறிவாளிகளால் வெறுக்கப் படுவதும் மதத்தின் அனுமதியைப் பெருததுமானதும் ஆனால் இங்கிலீஷ் சட்டபடி ஆயுட்கால தண்டனையைப் பெறக்கூடியதுமான சில காரியங்கள் செய்யப்படுவதைத் தடுப்பதே எங்கள் கருத்து''—இவ்விதம் இந்திய ராஜப்பிரதிநிதி தமது சபைக் கூட்டத்தில் 1891-ம் வருஷம் ஜனவரி மாதம் 9-ம் தேதியன்று இந்த சீர்திருத்தம் விஷயமாகப் பேசினார்.

இந்த மசோதா பிரேரேபிக்கப்பட்டதும் நாட்டில் ஒரே கொந்தளிப்பு ஏற்பட்டது. எங்கு பார்த்தாலும் எதிர்ப்பு! புதிய சீர்திருத்தத்தை ஒருவரும் வரவேற்கவில்லை. ஒரு சிலர் மட்டும் ஆதரித்து நின்றனரே தவிர ராஜப்பிரதிநிதி சட்டசபையில் ஸ்தானம் வகித்த மாஜி கல்கத்தா நீதிபதி ஸர் ரொமேச சந்திரமித்திரர் முதலியோர் இதைப் பலமாகக் கண்டிக்கத் தயங்கவில்லை, பம்பாயில் பாலகங்காதர திலகர் இதை மூர்க்கமாகத் தாக்கினார். உணர்ச்சிப் பெருக்கு மிதத்தை மீறிவிட்டபடியால் மாகாணங்களில் உள்ள முக்கியஸ்தர்களின் அபிப்பிராயத்தை அறிந்து அதற்கப்புறம் மேற்கொண்டு அவசியமான நடவடிக்கை எடுக்கலாம் என்று இந்திய சர்க்கார் துணிந்தனர்.

சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரின் விருப்பத்தின் பிரகாரம் இந்த மாகாணத்தின் முன்னணியில் இருந்த சில பிரமுகர்களின் கருத்தை அபேக்ஷித்தனர். இம்மாதம் 20-ம் தேதியன்று அவர்களுக்குச் சுற்றறிக்கை பிறந்தது. இந்தப் புதிய சீர்திருத்தம் வரவேற்க வேண்டியது என்றார் பி. செஞ்சல்ராவ். ஆனால் சில திருத்தங்களையும் புதிய சட்டத்தில் புகுத்த வேண்டும் என்றும் அவர் அறிவித்தார்.

“இந்த மாகாணத்தில் உத்தேசிக்கப்பட்ட சட்டத்திற்கு அவசியம் அதிகமாக இல்லாவிட்டாலும் பெண்களுக்கு 12 வயசு ஆகுமுன்னர் அவர்களை தம்

புருஷர் வீட்டிற்கு அனுப்பப்படுவதில்லை யாயினும் சீக்கிரத்தில் சிலர் அனுப்பப்படுவதில்லை என்று திட்டமாகக் கூறமுடியாது. இதனால் சம்பவிக்கும் தீமைகள் மிகவும் ஜாஸ்தியாக இருப்பதால் சட்டமியற்றப் பட்டு அவை தடுக்கப்பட வேண்டும்.

இந்த உத்தேசிக்கப்பட்ட சட்டம் நமது மதத்தில் தலையிடுவதாக நான் கருதவில்லை. ஏனெனில் பழைய ஹிந்து தர்ம சாஸ்திர வாக்கியங்களுக்கு எத்தகைய விதத்தில் வியாக்கியானம் செய்யப்பட்ட போதிலும் ஒரு குறிப்பிட்ட வயசுக்குமுன் பெண்ணும் புருஷனும் கட்டாயம் சேர்ந்திருக்க வேண்டும் என்று அவை விரும்புவதாகக் கூறமுடியாது. மிகவும் ஆசார சீலர்களான குடும்பங்களில் கூட பெண் இளமைப் பருவத்திலேயே ருது மதியாகிவிட்டாலோ அல்லது வேறு காரணங்களை உத்தேசித்தோ அவள் அவ்விதம் ருது மதியான பிறகும் 2 அல்லது 3 அல்லது 4 வருஷங்களுக்கு அவள் கணவனிடம் அனுப்பப் படுவதில்லை. சமூகத்தில் இதை மதத்தையோ அல்லது சம்பிரதாயத்தையோ அடிப்படையாகக் கொண்டு எவரும் கண்டிப்பதில்லை.

ஆனால் பொதுஜன அபிப்பிராயம் இந்த மசோதாவுக்கு விரோதமாக இருக்கிறது என்புதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். நான் ஆலோசித்தவர்களில் அநேகர் இந்த மசோதாவை அங்கீகரிக்கவில்லை. இதற்குக் காரணம் இது மதவிஷயங்களில் குறுக்கிடுகிறதென்பதல்ல. ஆனால் மிதம்மீறிய சீர்திருத்தவாதிகளும் விஷம புத்தியுள்ள அண்டை வீட்டாரும் கண்ணியம் வாய்ந்த குடும்பத்தாரைக் கோர்ட்டுக்கிழுத்து அவர்களுக்கு அருவெறுப்பை உண்டுபண்ணக் கூடும் என்றே அவர்கள் அஞ்சுகின்றனர். இந்த பீதிக்கு ஆதாரமிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நம் சிறுமிகள் ருது மதிகளாவதற்கு முன்பேயே தங்கள் கணவர் வீட்டுக்கு அடிக்கடி போவதுண்டு. இதனால் சட்டப்படி பிராது தொடுக்க இடம் ஏற்படும். இந்த உத்தேசிக்கப்பட்ட மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள வயசு பொதுவாகச் சிறுமிகள் ருது மதியாகக்

கூடிய வயசுக்குத் துல்லியமாக இருப்பதால் இந்த வயசை எவர் வேண்டுமானாலும் ஆக்ஷேபிக்க இயலும். பொதுவாக நமது சிறுமிகள் ஒரு குறிப்பிட்ட வயசுவரை தங்கள் தேக அமைப்பு காரணமாகவே தாங்கள் உண்மையாகவே இருப்பதைக் காட்டிலும் அதிக வயசு வாய்ந்தவர்களாகத் தென்படுகின்றனர்.

இந்த நிலைமையில் புதிய சட்டத்தில் அநாவசியமான வழக்குகளுக்கு இடமிராமல் பாதுகாப்பு அளிப்பது உசிதமாகும். வழக்கைத் தொடருமுன் ஜில்லா மாஜிஸ்திரேட்டிடமிருந்தோ அல்லது சர்க்காரால் இது விஷயமாக நியமிக்கப்படும் ஒரு அதிகாரியிடமிருந்தோ முன் அனுமதிபெற வேண்டும் என்று விதித்தால் அது மிக்கவும் அனுகூலமாக இருக்கும். இந்தக் காப்புவிதி மசோதாவின் நோக்கத்திற்குப் பிரதிகூலமாக இராமல் இருப்பதுடன் பொதுமக்களுக்கிருக்கும் பயத்தையும் போக்கடிக்கும். சட்டத்தையும் ஜனங்கள் ஒப்புக்கொள்ள அது தூண்டும்."

திவான்பஹதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார் இந்த சீர்திருத்தத்தை விரும்பாதவர்களுள் ஒருவர். சம்போக வயது இவ்வளவு குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் அநாவசியமாகச் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கவும் குடும்பங்களில் அமைதியைக் கெடுக்கவும் அது தூண்டிவிடுவதாக அவர் தெரிவித்தார். இந்த வயசை 14 ஆக உயர்த்தவேண்டுமெனவும் அவர் யோசனை கூறினர்.

உத்தேசிக்கப்பட்ட சட்டத்தில் இருக்கும் சில தோஷங்களை கனம் எஸ். சுப்ரமணிய ஐயர் எடுத்துக்காட்டினர். குறிப்பிடப்பட்ட வயசுக்குமுன் சொந்த மனைவியுடன் சேரும் புருஷனைத் தண்டிக்க சட்டத்தில் விதி இயற்றுவதற்கு அவர் ஆக்ஷேபத்தைத் தெரிவித்தார்.

"இந்தச் சட்டத்தில் கணவனைக் குறித்தவிதிகள் பொது மக்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பது ஆச்சரியகரமாகாது. புதிய திருத்தம் காரணமாக கணவனும் வேண்டும் என்றே ஒரு சிறுமியைக் கெடுக்க முற்படும் ஒரு அந்நியரும் சமநிலையில் இருக்கின்றனர் என்பதைக் கவனித்தால் இந்த மசோதா

வுக்கு எதிர்ப்பு ஏன் இருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். இந்த மசோதாவின் உத்தேசத்தைப்பற்றியும் நோக்கத்தைப்பற்றியும் சந்தேகம் இருந்துவருகிறது. சில இடங்களில் எதிர்ப்பு தலைகாட்டுவதற்கு இதுவே காரணமாக இருக்கக்கூடும். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் இந்நாட்டின் விநோதமான சமூக ஸ்திதியையும் சுதேசிகள் வீடுகளில் இதுவரை தகாதது என்று கருதப்படக் கூடாததும் ஆனால் ஒரு விதமான குற்றம் என்று கருதப்படக்கூடியதுமான காரியத்தைச் செய்வதற்கு இருக்கும் வசதிகளையும் பற்றி சட்டசபையில் பூரணமாகச் சிந்திக்கவில்லை என்பதே ஆக்ஷேபத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறது. கணவன் சட்டத்தை மீறிச் செய்யும் செய்கையை பலவந்த புணர்ச்சி என்று கருதாமல் குறைந்த தண்டனைக்கு அருகதை வாய்ந்த சாமான்ய குற்றமாகக் கருதும்பக்ஷத்தில் மசோதாவுக்கிருக்கும் ஆக்ஷேபத்தில் பெரும்பகுதி மறைந்துபோகும்."

பிறரை உபத்திரவிக்கவேண்டும் என்றகெட்ட எண்ணத்துடன் சிலர் வழக்குதொடர ஏற்பாடு செய்வதைத் தடுக்கவேண்டும் எனவும் அவர் விரும்பினர். தாம் இந்தச் சட்டத்தை மனமாற ஆமோதிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பெல்லாரியிலிருந்து ராய்பஹதூர் ஏ. சபாபதி முதலியார் 12 வயசிலிருந்து 14 வயசாக உயர்த்தப்படவேண்டும் என்றும் குற்றம்புரியும் கணவனுக்கு விதிக்கப்படும் தண்டனை கடுமையாக இருக்கக்கூடாது எனவும் ஒருவருஷ சிறைவாசம் அல்லது அபராதம் விதித்தால்போதும் எனவும் தற்போது சட்டத்தில் விதிக்கப்பட்ட தண்டனை அபரிமிதமானது எனவும் குறிப்பிட்டார்.

வி. பாஷ்யமய்யங்கார் சட்டம் மிகக்கடுமையாக இருப்பதற்கு சம்மதிக்கவில்லை. கணவன் பலவந்தப் புணர்ச்சியில் ஈடுபட்டதாகக் கருத இடம்தருவது பெரும் பிசகு என்றார் அவர். ஹிந்துக்களிடையே விவாகம் ஒப்பந்தம் அல்ல எனவும் ஆனால் அது புனிதமானதொரு உறவு என்றும் அவர் குறிப்பிட்டுவிட்டு .இத்தகைய தாம்பத்தியத்தைக் கெடுப்பதற்காகத் தீயபுத்தி கொண்டவர்கள்

இதுபோன்ற சட்டத்தின் உதவியை நாடவும் இடம் தரலாகாது என்று அவர் அறிவித்தார்.

ஏ. சேஷையா சாஸ்திரியாரும் இந்தப் புதிய மசோதாவின் நோக்கத்தைப் பூரணமாக ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் எழுதிய சில வாக்கியங்களை இங்கு குறிப்பிடவேண்டும்.

"ஹிந்து தர்ம சாஸ்திரிகளில் பெரும்பாலர் ஒரு சிறுமி ருதுமதியான பின்பு தன் கணவனிடம் போகாமல் தடுத்துவைக்கக்கூடாது என்று கருதுகின்றனர். உஷ்ணப் பிரதேசத்தில் பெண்கள் 10 வயசிலும் இல்லாவிட்டால் 12 வயசுக்குள்ளாகவும் ருதுமதிகளாகிவிடுகின்றனர். அவள் ஸ்திரீ பருவத்தை எட்டியவுடன் அவளை ஒப்புவிக்கும் முதல் பொறுப்பு தகப்பனுருக்கு ஏற்படுகிறது. இதற்கப்புறம் அந்தப் பெண் பரிசுத்தமாக இருக்கிருளா என்பதைக் கவனிக்கும் கடமை பெற்றோர்களுக்கு இல்லை. பிறகு அவர்களும் கணவன் வீட்டாரும் தங்களுக்குப் பேரன் பிறந்து அதைக்கண்டு பரமானந்தத்தை அடையவும் ஆசைப்படுகின்றனர். இது தவிர சீக்கிரத்தில் பிள்ளை பிறப்பதால் அதன் தகப்பனுக்கும் ஆத்மார்த்த ப்ரீதி ஏற்படுகிறது. பெண் ருதுமதியான பின்பு 12 வயசு நிரம்புவதற்குள் அவன் காலமாகிவிட்டால் அவனுக்கு இந்த பாக்கியம் கிடைக்காது போய்விடும். மஹாராணியார் தமது பிரகடனத்தில் மத விஷயங்களிலும் சம்பிரதாயங்களிலும் தலையிடுவதில்லை என்று உறுதி அளித்தது மீறப்பட்டுவிட்டது என்ற உணர்ச்சி நாட்டில் உதயமாகியிருப்பதற்கு இத்தகைய மனோபாவமும் ஒரு காரணம் என்றே நான் நம்புகிறேன்."

திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் அபிப்பிராயத்தையும் சர்க்கார் கேட்டிருந்தனர். ஆனால் இவர் ரிஜிஸ்திரேஷன் ஆபீஸ்களைப் பார்வையிடுவதற்காக வெளி ஜில்லாக்களுக்குப் போய்விட்டபடியால் சர்க்காருக்கு உடனே தமது அபிப்பிராயத்தை அறிவிக்க இயலவில்லை. இவர் தாம் தயாரித்த ஒரு குறிப்பில் இந்தப்

புதிய மசோதாவின் விதிகளை ஒப்புக்கொள்ள அசக்தராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

"உத்தேசிக்கப்பட்ட இந்த மசோதா இது விஷயமாக வுள்ள இங்கிலீஷ் சட்டத்தைக் காட்டிலும் அதிக தூரம் போகிறது என்பது என் கருத்து. 12 வயசுக்குமுன் ருது மதியாகிவிட்ட தனது மனைவியுடன் சேர்ந்துவாழும் கண வனின் செய்கையைப் பலவந்த புணர்ச்சி என்று பாவிப் பதும் அந்த மிகக் கொடிய குற்றத்திற்கான தண்டனையை கணவனும் அனுபவிக்கும்படி விதிப்பதும் மிகவும் விபரீத மான சிக்கல்களைக் கிளப்பிவிடுவதுடன் பால்ய விவாகத் தைக் கட்டாயமாக நிர்ப்பந்திக்கும் சில நிரபராதிகளான ஹிந்து குடும்பங்களில் இதனுல் கடுமையானதும் தகாதது மான கஷ்டங்கள் சம்பவிக்கும்.

1891-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-ம் தேதியிட்ட இந்தியா கெஜட் அனுபந்தத்தில் 40 முதல் 48-ம் பக்கங் களில் வெளியிடப்பட்டுள்ள வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயத்தின் மூலம் 14 வயசுக்கப்புறமும் 16 வயசுக் குள்ளேயும் சிறுமிகள் பருவகாலத்தை எட்டுவதாகத் தெரியவருகிறது. அவர்கள் ருதுமதிகளாகப் போகின்ற னர் என்பதும் தெரியவருகிறதாம். இதற்கப்புறம் சில வரு ஷங்களுக்குப் பின்புதான் கணவனுடன் சேர்ந்து தாய்ப் பருவத்தை எட்டுவதற்கான யோக்கியதையும் நல்ல தேக அமைப்பும் அவர்களுக்கு உண்டாகின்றனவாம். ஆண் களுக்கும் பெண்களுக்குமிடையே இருக்கவேண்டிய உறவை நிர்ணயிப்பது மிகவும் சிரமமாயிருப்பதுபற்றியே ஒரு பெண் சம்மதித்தாலும் 12 வயசுக்கு முன்பு அவ ளுடன் சட்டவிரோதமாகக் கூடியிருப்பது பெரிய குற்ற மாகக் கருதப்பட்டபோதிலும் 1885-ல் இந்த வயசின் எல்லை 13 ஆக உயர்த்தப்பட்டது. அதாவது பெண் ஸ்திரீ தசையை எட்டுவதற்கு ஒருவருஷத்திற்கு முன்பு வரை சேர்க்கை கூடாது என்று விதிக்கப்பட்டது. இதே சமயத்தில் 13 வயசுக்கு மேற்பட்டும் 16 வயசுக்குட்பட்டு முள்ள சிறுமியுடன் சட்டவிரோதமாகச் சேர்ந்திருப்பது பிசகான நடத்தை என்றே மதிக்கப்பட்டு அதற்கேற்ப தண்டனை அளிக்கப்படவேண்டும் என்றும் விதிக்கப்பட் டது. இங்கிலாந்தில் ஸ்திரீகள் சராசரி 25, 26-ம் வயசு

களில்தான் மணக்கின்றனர். இன்னும் சீக்கிரத்தில் மணந்துகொள்ளும் உயர்ந்த வகுப்பார் கூட இங்குபோல் பால்ய தசையில் கல்யாணம் செய்துகொள்வதில்லை. ஆகவே 1885-ல் அங்கு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் சீக்கிரத்தில் சிலர் சமூகம் வெறுக்கத்தக்கவிதத்தில் விபசாரத்தில் ஈடுபடுவது தடுக்கப்பட்டது. கல்கத்தா பொது சுகாதார சங்கத்தின் காரியதரிசி எழுதியிருப்பதும் 1891-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதி வெளியான இந்தியா கெஜட்டின் அனுபந்தத்தில் பிரசுரமாயிருப்பதுமான கடிதத்தில் ஒரு கணவன் சட்டம் விதித்திருக்கும் வயசுக்கு முன்பு தம் மனைவியுடன் கூடியிருப்பது சட்ட விரோதமானதா என்பதுபற்றி எந்த நீதிபதியின் தீர்ப்பும் இதுவரை வெளியாகவில்லை என்று சுட்டிக்காட்டியிருப்பது குறிப்புக்குரியது.

ஆனால் இந்த நாட்டில் 11 முதல் 14 வயசுக்குள் பெண்கள் ஸ்திரீ பருவத்தை எட்டுவதாக வைத்திய நிபுணர்கள் அறிவிக்கின்றனர். இதை தினசரி அனுபவத்திலிருந்து நாம் பிரத்தியக்ஷமாகக் காணலாம். 13-ம் வயசில் தான் பெண்கள் அதிகமாகப் புஷ்பவதியாகின்றனர். ஆனால் மொத்தத்தில் 100-க்கு 25 பெண்கள் 12 வயசு அல்லது அதற்கு முன்போ பருவத்தை எட்டிவிடுகின்றனர். கிராமங்களில் இருப்பவர்களைவிட நகர்களில் நல்ல போஷணையில் இருப்பவர்களே சீக்கிரம் பருவகாலத்தை கிட்டுவதாகவும் ஒரு சாராரிடை அபிப்பிராயம் நிலவிவருகிறது. சென்னை நகரில் 12 வயசுக்கு முன்பே சிறுமிகள் பருவத்தை அடைவது மிகவும் சகஜம் என்று எனக்கு அறிவிக்கப்படுகிறது. இந்தியா கெஜட்டில் இந்திய மெடிகல் கெஜட்டிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டதும் கனம் ஸர் ஏ. ஸ்கோபிளின் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டதுமான வியாஸத்தில் டாக்டர் ஒருவர் விவாகமானவர்களில் 100-க்கு 20 சிறுமிகள் 12 அல்லது 13 வயசிலேயே குழந்தைகளைப் பெற்றெடுப்பதாகக் கூறியிருப்பது எடுத்துக் காட்டப்பட்டது. இதே டாக்டர் தமது கட்டுரையில் வேறு ஒரு இடத்தில் தாம் முன்பு எழுதியதற்கு முரண்பட்ட விதத்தில் 12 வயசு பூர்த்தியாகுமுன் பெண்கள் பருவ காலத்தை அடைவதில்லை என்று குறிப்பிட்டிருப்பது பொருத்தமற்றிருப்பதாக எனக்குத் தோன்று

கிறது. சென்னை மாகாணத்தில் 100-க்கு 20 பெண்கள் 12வயசிலேயே குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஆனால் 100-க்கு 20 பெண்கள் மட்டும் கூடி வாழ ஆரம்பித்துவிடுகின்றனர். 12 வயசிலேயே பெண்கள் பருவத்தை அடைந்துவிடுகின்றனர். இங்கு பெண்கள் பருவத்தை எட்டும் குறைந்த பக்ஷ வயசு 11. ஆகவே இந்த நிலைமையில் இங்கிலாந்தில் 13 லிருந்து 16 வரையுள்ள வயசின் எல்லை இங்கு 10 முதல் 13 வரை இருப்பதாகக் கருதவேண்டும்.

இங்கிலீஷ் . சட்டத்தின் அடிப்படை அம்சங்கள் அடியிற் கண்டவை என்று நான் கருதுகிறேன். மிக்க பால்யதசையிலுள்ள சிறுமியுடன் அவள் சம்மதத்துடனோ அல்லது சம்மத மில்லாமலோ கூடியிருக்க முன் வருவது அற நெறியைஉத்தேசித்து மிக்க கொடிய குற்றமாக அங்கு கருதப்படுகிறது. ஏனெனில் இதனால் பெண்களுக்குப் பெரிய அபாயம் ஏற்படலாம். இந்த அபாயம் நேரிடாமல் பாதுகாப்பு செய்யப்பட்ட போதிலும் சமூகம் இந்தக் குற்றத்தை இயற்கைக்கு விரோதமான தாகவும் மானிட உணர்ச்சிக்கு முரண்பட்டதாகவும் கருதுகிறது. ஒரு சிறுமி சீக்கிரத்திலேயே பருவத்தை எட்டிவிடும் சமயங்களில் சட்டம் மிக்க கடுமையாக தண்டிப்பதைத் தடுப்பதற்காக சாதாரணமாகச் சிறுமிகள் எந்த வயசில் பருவகாலத்தை எட்டி விடுகின்றனரோ அதற்கும் குறைந்த பக்ஷ வயசையே சட்டத்தில் எல்லையாகக் குறிப்பிட வேண்டும். இரண்டாவதாக உலகத்தை அறியாமலிருக்கையிலேயே பருவ காலத்தை எட்டியவுடன் விபசாரத்தில் இளம் பெண்கள் ஈடுபடுவதைத் தடுக்கஅந்தப்பெண்களுடன் கூடிப் பழகுபவர்கள்பிசகான நடத்தைக்காகத் தண்டிக்கப்படவேண்டும். மூன்ருவது, அதிக வயசுக்கப்புறம் பருவத்தை அடைந்தவர்களும் ஆனால் பூரண விஷய ஞானத்தை அறியாதவர்களுமான பெண்கள் விஷயத்தில் சட்டம்எதையும் செய்யமுடியாது. இந்தக் கொள்கைகள் நான் கருதுவதுபோல் மிக்க சரியானவையாக இருக்குமாயின் இப்போதுஉத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம் இங்கிலீஷ் சட்டத்தைக் காட்டிலும் அதிகக் கடுமையானதாக இருக்கும். இந்த நாட்டில் வெகு சீக்கிரத்திலேயே பெண்கள் பருவத்தை எட்டு

வதும் இங்கிலாந்தில் விட இங்கு உயர் வகுப்புகளிலும் பால்ய விவாக முறை பரவியிருப்பதால் சட்டத்தை அமுலாக்குவது மிகவும் சிரமமானது என்பதும் கவனத்தில் இருக்கவேண்டிய விஷயங்கள்.

1881-ம் வருஷத்தில் எடுக்கப்பட்ட ஜன கணிதியிலிருந்து கணக்கு எடுக்கப்பட்டபோது பிராம்மணர்களில் 100க்கு 20 பேர்தான் விவாக மாகாமல் இருந்திருப்பதாகத் தெரிகிறது. ஏழு வயசுக்குட் பட்டபெண்களின் தொகையும் 100க்கு 20 வீதம் இருந்தது.

இனி நான் இந்த உத்தேசிக்கப்பட்ட சட்டத்தினுல் ஹிந்து குடும்பங்களில் ஏற்படக் கூடிய சிரமங்களை எடுத்துக்காட்டுவேன். இளம் பிராயத்திலேயே பெண்களும் பிள்ளைகளும் மணக்கின்றனர். சிறு பிராயம் முதற் கொண்டே அவர்கள் ஒரே குடும்பத்தில் இணை பிரியாமல் வளர்ந்து வருகின்றனர். பிராம்மணர்களில் சகோதரன் குமாரன் சகோதரியின் பெண்ணை மணப்பது சகஜமாக இருக்கிறது. இந்த சகோதரி விதவையாகிவிட்டால் தன்னுடைய சகோதரன் வீட்டிலேயே அவனுடைய பாதுகாப்பில் காலம் கழிக்கிருள். வைசியர்களிடை நெருங்கிய பந்துக்கள் மணக்க வேண்டும் என்பது கட்டாயமான விதி. ஆகவே இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் புருஷனும் மனைவியும் பால்ய தசையிலிருந்து ஒன்ருக விளையாடி வருவதுடன் மிக அந்நியோன்னியமாயும் பழகுகின்றனர்."*

இத்துடன் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதிவைத்த குறிப்பு நின்று விட்டது. அது பூர்த்தி பெறவில்லையாயினும் 12 வயசுக்குமேல் பெண் பருவத்தை எட்டி விட்டால் அதே வீட்டில் கணவனும் இருந்தால் சட்டப்படி மிக்க விப்ரீதம் விளையும் எனவும் விஷமக்காரர்கள் வீண் புகார்களையும் பிராதுகளையும் தொடுக்கலாம் எனவும் ஆகவே சட்டத்தில் கடுமையான விதிகளுக்கு இடம் சிறிதும் தரக்கூடாது என்றும் இவர் கருதினுர் என்பதை நாம் ஊகிக்க இடமிருக்கிறது. மசோதாவை ஆமோதிக்க

* சென்னை சர்க்காரின் சீப் ஸெகரடரிக்கு கோயில் பட்டியிலிருந்து எழுதிய கடிதம், 28—3—1891.

இவர் அசக்தராக இருந்து விட்டதிலிருந்தும் இவர் எழுதி வைத்த குறிப்பிலிருந்தும் இவர் ஹிந்துக்களின் பழக்க வழக்கங்களைக்கடுமையாகப் பாதிப்பதைப்பார்த்துநிற்க சகிக்க வில்லை என்பதும் ஆனால் மதத்தை அடிப்படை யாகக் கொண்டு முன்னேற்றத்தைத் தடை செய்ய இவர் ஆசைப்பட வில்லை என்பதும் நன்ருக புலப்படும். மாகா ணத்திலுள்ள இதர பிரமுகர்கள் வெளியிட்ட அபிப்பிரா யத்தைப் பரிசீலிக்கையில் இவரும் காலத்தின் போக்கைக் கவனித்தே தம்முடைய முடிவுகளை வெளியிட்டார் என்பது தெளிவாகும்.

ஆனால் இவர் தாம் பூண்ட கருத்துகளுக்கு ஆதாரங் களைக் காட்டுவதில் கொண்டகவலை அதிகமானது. சாதக பாதகங்களை அலசிப்பார்ப்பதிலேயே இவரது மனம் மூழ்ந் தது. சில ஆங்கிலேய பிரமுகர்களின் நிர்ப்பந்தம் காரண மாக இந்தப் புதிய மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதை மனசில் இருத்திக் கொண்டே இவர் தாம் எழுதிய குறிப் பில் இங்கிலாந்தில் உள்ள நிலைமைக்கும் இந்தியாவிலுள்ள நிலைமைக்கும் எவ்வளவோ வித்தியாசமும் வேறுபாடு களும் இருக்கின்றன என்பதையும் ஒரு தேசத்திற்குப் பொருந்தும் விதிகளை மற்ெருரு தேசத்திற்கு அப்படியே பொருத்தக்கூடாது என்பதையும் கால தேசவர்த்தமானத் தை யறிந்தே நடவடிக்கையில் இறங்க வேண்டும் என் பதையும் சந்தேகத்திற்கிடமில்லாதபடி விவரித்தார்.

2

ஹிந்து சமூகத்தைத் தழுவிய மற்ெருரு மசோதா வைக்குறித்தும் இவர் மறு வருஷம் தமது அபிப்பிரா யத்தை அறிவிக்க வேண்டிவந்தது. இதே வருஷம் பிப்ரவரிமாதம் 21-ம் தேதி யன்று கனம் வி. பாஷ்ய மையங்கார் சென்னை சட்ட சபையில் ஹிந்து வித்தியாதன மசோதாவைச் சமர்ப்பித்தார். ஹிந்துக்களுடைய சட்ட திட்டங்களில் இருக்கும் சில சந்தேகங்களை அந்தச்சட்ட நிபுணர் நிவர்த்திக்க விரும்பினுர். அவிபக்த ஹிந்துகுடும் பத்தைச் சேர்ந்தவர் ஒருவர் தாம் கற்ற கல்வியின் பயனுக வும் விசேஷ சாஸ்திர ஞானத்தின் காரணமாகவும் கிடைக்கும் திரவிய லாபத்தைத்தம் சொந்த சொத்தாகவே

பாவிப்பதை அனுமதிக்க வேண்டும் என்று ஒரு மசோதாவை பிரேரேபித்தார். சட்டத்தை மேலும் தெளிவுபடுத்தவே அவர் ஆசைப்பட்டார். தம்முடைய பிரசங்கத்தில் அவர் நிலைமையை நன்கு விஸ்தரித்துவிட்டு பழைய காலத்தில் தர்ம சாஸ்திரிகள் விதித்தவற்றை யெல்லாம் விளக்கினர். அநாவசியமான சங்கடங்கள் சம்பவிப்பதைத்தடுப்பது தமது நோக்கம் எனவும் தெரிவித்தார். தகராறுகளைத்தடுக்க இது உதவும் என்றும் சொன்னர்.

இதற்கப்புறம் இந்த மசோதா இந்தியா மந்திரியின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது. இவ்வருஷம் ஆகஸ்டு மாதமே அவரிடமிருந்து பதிலும் வந்து சேர்ந்தது. இந்த மசோதா ஹிந்துக்களுடைய மத சம்பிரதாயங்களையும் பழக்க வழக்கங்களையும் தழுவிய தென்றும் கவர்னர் ஜெனரலின் அனுமதியுடன்தான் இதைச் சபையில் கொண்டுவர வேண்டும் என்றும் அதில் அறிவிக்கப்பட்டன. அப்போது அவர் இது விஷயமாக சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதினர். இம் மசோதா இந்தியா மந்திரி கூறுவது போல் மத சம்பந்தமானது அல்ல என்றும் இந்தக் கூற்று ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டால் பிறகு ஹிந்துக்களைத் தழுவிய ஒவ்வொரு மசோதாவுக்கும் முன் அனுமதி கோருவது அதிஅவசியமாகிவிடும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டார். ஹிந்து சட்டம் இழுத்த இழுப்புக்கு வரும் என்றும் அதில் அபிவிருத்திக்குரிய அம்சங்கள் அதிகம் இருப்பதாகவும் அவர் அச்சமயம் எழுதினர்.

> "சுதேசிகளுடைய உணர்ச்சிகளையும் தேவைகளையும் கொள்கைகளையும் அறிந்து அவற்றிற்கேற்ப சட்டசபையில் நடவடிக்கைகளை எடுப்பதைக் காட்டிலும் மேற்பட்ட சேவையைத் தமது நாட்டினருக்கும் சர்க்காருக்கும் சட்டசபையில் ஸ்தானம் வகிக்கும் இந்தியர் செய்ய முடியாது. இது தவிர, பல மாகாணங்களிலும் ஹிந்துக்களுடைய பழக்க வழக்கங்களில் வித்தியாசம் காணப்படுவதால் இது விஷயமாக ஒவ்வொரு மாகாணத்திலும் தனித் தனியாகச் சட்டமியற்றப்படுவது உசிதமாகும்."

பாஷ்யமையங்காரின் கடிதத்திற்கப்புறம் சென்னை சர்க்கார் இந்த மசோதாவின் பிரதியை மாகாணத்தில்

உள்ள முக்கியஸ்தர்களுக்கு அனுப்பி அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிய முடிவு செய்தனர். ஜஸ்டிஸ் ஸர் முத்துஸ்வாமி ஐயர், கனம் எஸ். சுப்ரமணிய ஐயர், ஸர் கே. சேஷாத்திரி ஐயர், ராவ் பஹதூர் டி. பட்டாபிராம பிள்ளை, திவான் பஹதூர் வி. ராஜகோபாலாச்சாரியார், பாளையம் சோமசுந்திரம் செட்டியார், திவான் பஹதூர் வெங்காசாமி ராவ், ராய் பஹதூர் பி. ரங்கநாத முதலியார், திவான் பஹதூர் ஆர். ரகுநாத ராவ், சாது சேஷையா ஆகிய பலர் இதை ஒருமுகமாக ஆதரித்தனர்.

திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் இந்த மசோதாவைப் பூரணமாக ஆமோதித்தார். முதலில் தற்சமயம் எத்தகைய சட்டம் நிலவுகிறது என்பதை விவரித்து விட்டு இவர் தாம் கண்ட குழப்பத்தை எடுத்துக் காட்டினார்.

"இந்த ஸ்திதியில் இந்த மாகாணத்தில் இது விஷயமாகச் சட்டம் எது என்று குறிப்பிட முடியாதபடி இருக்கிறது. கல்வி அதிவேகமாக அபிவிருத்தியாகியிருப்பதும் இது போன்ற முக்கிய.பிரச்னைகளைப் பற்றி சட்டம் சந்தேகத்திற் கிடமளிப்பதாக இருப்பதும் குடும்பங்களில் தகராறுகள் முளைப்பதற்கு ஹேதுவாக இருக்கின்றன. வங்காளத்தில் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர் சம்பாதிக்கும் சொத்து அந்த சொத்தைச் சேகரிப்பதற்காகக் குடும்ப தனம் நேர்முகமாக உபயோகிக்கப்பட்டிருந்தால்தான் பாகம் செய்யப்படலாம் என்ற விதி இருக்கிறது. பம்பாயில் ஹைகோர்ட் நடு நிலைமையைப் பின்பற்றி இந்தச் சொத்து பாகமாக வேண்டுமாயின் குடும்ப தனத்திலிருந்து அளிக்கப்பட்ட கல்வி விசேஷமானதாக இருக்கவேண்டும் பொதுவானதாக இருக்கக் கூடாது என்றது.

இந்த மசோதாவின் லக்ஷியம் இது விஷயமாகச் சட்டம் எத்தகையது என்பதைத் திட்டமாகத் தெளிவுபடுத்தி தகராறுகளும் வழக்குகளும் தலைகாட்டுவதைத் தடுப்பது தான் என்று நான் எண்ணுகிறேன். சென்னை ஹைக்கோர்ட் முந்திய தீர்ப்பொன்றில் வெளியிட்ட கருத்து ப்ரிவி கவுன்சில் குறிப்பிட்டபடி ஒப்புக்கொள்ளத் தகாததாகவும் நவீன இயக்கங்களுக்கு விரோதமானதாகவும் இருக்கிறது. வங்காளத்தில் அமுலாகும் விதியையோ

அல்லது பம்பாய் ஹைக்கோர்ட் அளித்த தீர்ப்பையோ பின்பற்றுவது உசிதம். பம்பாய் தீர்ப்பில் நியாயம் தென் பட்டபோதிலும் அதை அமுலாக்க ஆரம்பித்து விட்டால் ஓயாத சிரமங்களும் தீராத வியாஜ்ஜியமும் அடியிற்கண்ட காரணங்கள் பற்றி உதயமாகக் கூடுமாதலால் இந்த மசோதா வங்காள விதியையே தழுவியிருப்பது மிகவும் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. முதலாவதாக கல்வியின் தரம் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பதுடன் சமீப வருஷங்களில் அது உயர்ந்துகொண்டும் வருகிறது. சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு, கல்வி பெறுவதற்குப் போதிய சௌகரியங்கள் இராத நாட்களில், ஒரு சிறுவனை மெட்ரிகுலேஷன் பரீட்சை வரையில் படிக்க வைப்ப தற்கு எத்தகைய தியாகங்களைச் செய்யவேண்டும் என் பதை நான் அறிவேன். இப்போது உயர்ந்த வகுப்பார் பி. ஏ. வரை படிக்க வைப்பதை மிக்க சாமான்யமாகக் கருது கின்றனர். குடும்பத்தின் நன்மையை யொட்டி விசேஷ ஏற்பாடு செய்வதாகக் கருதுவதில்லை. இன்னும் சில வருஷ காலத்தில் இங்கிலாந்துபோல் இங்கும் சட்டப் படிப்பு பெறுவது மிகவும் சகஜமாய்ப் போய்விடும். இரண்டாவ தாக, பல வகுப்புகளிடையேயும் படிப்பின் தரம் மாறுபடு கிறது. ஏழைகள் எதை விசேஷப் படிப்பாகக் கருது வரோ அது உயர் வகுப்பாருக்கு சாமான்யமானதாக இருக்கிறது. மூன்ருவதாக விசேஷப் படிப்பைப் பெற்ற வரை சம்பாதித்து சேமிக்கும்படி நிர்ப்பந்திக்க வழி இல் லாதவரையில் பம்பாய் விதிகாலத்தை வீணுகக் கடத்து பவர்களையும் அபரிமிதமாகச் செலவு செய்பவர்களையும் ஒன்றும் செய்ய முடியாது. உதாரணமாக 'ஏ'., 'பி,' ஆகிய இருவர் சட்டப்படிப்பு அப்யஸித்தனர். 'ஏ' பரீட்சையில் தேருமல் வியாபாரியாகி விடுகிருன். 'பி' அதில் தேறி வக் கீல் தொழிலை மேற்கொள்கிருன். இப்போது 'ஏ' சம்பா திக்கும் சொத்தைப் பாகம்போட முடியாது. ஆனல் இரு வருக்காகவும் குடும்ப தனமே விசேஷக் கல்வி அளிக்க உபயோகிக்கப்பட்ட போதிலும் 'பி' சம்பாதிப்பதை மட் டும் பாகம் பண்ணலாம். இதே சமயத்தில் 'பி' ஒரு சர்க்கார் காரியாலயத்தில் குமாஸ்தா பதவியை யேற்று சம்பாதிக்க வாரம்பித்தால் பம்பாய் விதிப் பிரகாரம் அவருடைய சொத் தையும் பிரித்து எடுத்துக்கொள்ள முடியாது. ஆனல்

அவர் நீதிபதி பதவிக்கு வரும் பக்ஷத்தில் அவர் சொத்து ஒருவேளை பாகம் செய்யப்படவேண்டி வரலாம். ஆனால் 'ஏ'., 'பி' ஆகிய இருவரையும் குடும்பத்தைச் சேர்ந்த இதரர்கள் தங்கள் சம்பாத்தியத்தின் கணக்கை ஒப்புவிக்கும்படிக் கேட்கக் கூடாது. அப்படி குடும்பத்திற்கு அதிகாரம் ஏதாவது இருந்தாலும் அதனால் பலன் எதுவும் பிறக்காது. ஏனெனில் இப்போது போக்குவரத்து வசதிகள் அதிகரித்து விட்டபடியால் குடும்பத்தில் பணம் சம்பாதிப்பவர்கள் மாகாணம் முழுதிலும் பரந்திருக்கின்றனர். முன்புபோல அக்கம் பக்கத்துக் கிராமங்களில் அவர்கள் தங்கியிருப்பதில்லை. சேமித்து வைக்கும் சொத்து பிரிவினை செய்யப்படலாம் என்று விதித்தால் ஒருவர் அபரிமிதமாகச் செலவு செய்வதற்கும் தமக்கிருக்கும் சொத்தை மறைத்து விட்டு அறநெறி தளர்வதற்குத்தான் ஹேது ஏற்படும். நான்காவதாக ஒருவருடைய சொத்து குடும்பச் சொத்தைக் கொண்டு சம்பாதிக்கப்பட்டதாயின் அது குடும்பச் சொத்தையே சேரும் என்பதையும் எது குடும்பச்சொத்து எது சொந்தமாகச் சம்பாதித்த சொத்து என்பதையும் வங்காள விதி நிர்ணயித்து இது விஷயத்தில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய முறைகளை லகுவாக்கியிருக்கிறது.

இதற்கப்புறம் தற்போதிருந்து வரும் கோளாறுகளையும் இந்தச் சட்டத்தை உடனே பிறப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் இவர் எடுத்துக் காட்டினார்.

> "ஆகவே இந்த மசோதாவின் ஷரத்துகளை நான் பூரணமாக ஆமோதிக்கிறேன். இதைச் சீக்கிரத்தில் காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டியது மிகவும் அவசியமானது என்பதையும் நான் சர்க்காருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டத்தின் மூலம் நிர்ணயம் செய்வது தற்போதய சட்டம் காரணமாகக் குடும்பங்களில் பொருமைகளும் தகராறுகளும் தலைகாட்டுவதைத் தடுக்கும். ஹிந்து குடும்பங்களில் சம்பவிக்கும் ஸ்திதி இதுவே: சம்பாதிப்பவர் இருக்கும் வரையில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை. குடும்பத்தில் உள்ள இதரர்கள் அவருடைய பாதுகாப்பை வேண்டுகின்றனர். அவரை ஏதாவது கட்டாயப்படுத்தினால் அவர் தனிப்பட்டுபோய் தங்களைப்

போஷிப்பதை நிறுத்தி விடலாம் என்ற பயம் அவர்களுக்கு உண்டு. அவர் தாமாகவே பிரிந்து போகும் போது தாம் சம்பாதித்த சொத்தில் தமது சக்தியையனுசரித்து அவர் இதர குடும்பத்தினருக்கு வசதிகளை செய்து தருகிருர். ஆனல் அவர் தமது பந்துக்களையும் மருமகன்களையும் தமது புத்திரர்களுக்கு சமமாகக் கருதுவது கடினம். பிந்தியவர்களது க்ஷேமத்தில்தான் அவருக்கு அதிக சிரத்தை இருக்கும். ஆனல் அவர் திக்கற்ற ஒரு விதவையையும் சிறிய குழந்தைகளையும் முக்கியமாகப் பெண்களையும் விட்டுவிட்டு மரித்தால் உடனே ஆரம்பிக்கிறது கஷ்டம். பலர் ஏமாற்றி இருக்கும் பணத்தைக் கரைத்து விடுகின்றனர். உத்தேசிக்கப்பட்ட மசோதா இந்தத் தீமை சம்பவிப்பதைத் தடுத்து தேசத்திற்கு பேருபகாரமாக இருக்கும்.

இதற்கப்புறம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஒரு சம்சயத்தையும் கிளப்பினர். இந்தப் புதிய சட்டத்தினல் குடும்ப தனத்தை முன் போல் ஒரு சிலருடைய விசேஷக்கல்விக்காக விநியோகிக்க முடியாது போய்விடுமா? பிறகு இதற்குத்தாமே சமாதானத்தையும் பகர்ந்தார்.

"குடும்பச்சொத்து விநியோகம் பாதிக்கப்படும் என்று நான் கருதவில்லை. ஏனெனில் விசேஷக் கல்வியைப் பெற்றபின் ஒருவர் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து போய் விடலாம். குடும்பத்திலேயே ஒன்ருக இருந்து தாம் பெற்ற கல்விக்குப் பிரதிப் பிரயோசனமாக மற்றவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அவர் அலக்ஷியம் செய்வதைச் சட்டம் தடுக்கவில்லை. ஆனல் இதற்கு மாருக இந்தப்புதிய மசோதா குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடை ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுணர்ச்சியையும் அதிகமாக்கி குடும்பங்களைக் கூடியவரையில் பிணைத்துவைக்க உதவும் என்று நான் கருதுகிறேன். அதிகமாக சம்பாதிக்கும் ஒருவர் தம் பெற்ருேர்களிடம் உள்ள மதிப்பு காரணமாகவும் மற்றும் சகோதர சகோதரிகளிடம் அன்பு காரணமாகவும் குடும்பத்திலேயே இருந்து தமது சம்பாத்தியத்திலிருந்தும் அவர்கள் சுகமாக வாழ்வதற்கு உதவலாம். ஆனல்

இவர் தம் சம்பாத்தியம் முழுமையையும் பிறருக்காகக் கொடுத்து விட்டு தம்முடைய குழந்தைகள் தவிப்பதைப் பார்க்க விரும்ப மாட்டார். குடும்பத்தை விட்டுப் பிரிந்து போக வேண்டும் அல்லது தாம் சொந்தமாக சம்பாதித்தவற்றைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும் என்று ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்டால் அவர் என்ன செய்வார் என்பதைக்கண்டு பிடிப்பது கஷ்டமல்ல. காலப் போக்கில் குடும்பத்தில் சம்பாதிக்காமல் இருப்பவர்களுக்கு இத்தகைய சட்டத்தினுல் எவ்வளவு பாதகம் ஏற்படும் என்பதைக் கண்டு பிடிப்பதும் கடினமாகாது.

கடைசியாக உத்தேசிக்கப்பட்ட இந்த மசோதாவிற்கும் மதத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. ஆகவே அது விஷயமாக சந்தேகம் கொள்ள அவசியம் இல்லை.''*

இந்தக்காலத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பெரிய பதவியை வகித்த படியால் அவருடைய மாளிகை பெரிய சத்திரம் போல் அந்த நாட்களில் விளங்கியது. கிட்டிய உறவினரும் தூர பந்துக்களும் எப்பொழுதும் வீட்டில் தங்கியிருந்தனர். இவர்களைப் போஷிப்பதில் ஸ்ரீநிவாஸ ராகவையங்காருக்கோ அல்லது அவர் பத்தினியாருக்கோ எந்த விதமான அலுப்பு சலிப்பும் ஏற்பட்டதில்லை. இந்தப்பணியை இருவரும் மிக்க புனிதமானதாகக் கருதினர். வருவோர் சங்கோசமின்றி சாப்பிட்டு விட்டுப்போகலாம். வீட்டில் யாருக்கும் எந்தவிதமான வித்தியாசமும் காட்டப்பட்டதில்லை. எல்லோரும் சமம்; எல்லோருக்கும் ஒரேதர்மம். இலைகளைப் போட்டுவிட்டு போஜனத்தைப் பரிமாறும் காட்சியைப் பார்ப்பதில் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கிருந்த மகிழ்ச்சி மட்டிலாதது.

* 1—10—1892 அன்று சர்க்காருக்கு எழுதிய கடிதம்.

ரிஜிஸ்திரேஷன் இலாகா தலைவர் பதவியை ஸ்வீகரித்த காலம் முதற் கொண்டே திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராக வையங்கார் நாட்டின் செல்வ நிலை அபிவிருத்தி அடைந்து வருகிறதா என்பதிலும் பொதுவாக மக்களின் முன்னேற்றம் எத்தகைய விதத்தில் இருந்து வருகிறது என்பதைக் தூண்டு பிடிப்பதிலும் விசேஷகவனத்தைக் காட்டிவர ஆரம்பித்தார் என்பது முன்பே விவரிக்கப்பட்டுள்ளது. இவருக்கிருந்த இந்த அசாதாரண சிரத்தையைப் பயன் படுத்திக் கொள்ள மாகாண சர்க்கார் விரும்பினர். 1890-ம் வருஷம் ஜூலை மாதத்தில் ஒரு நாள், கவர்னராக விருந்த கன்னிமாரா பிரபு இவரை அழைத்து இவரிடம் ஒரு முக்கிய பொறுப்பை ஒப்படைத்தார்.

"1890-ம் வருஷம் ஜூலை மாதத்தில், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் சென்ற 40 அல்லது 50 வருஷகாலத்தில் சென்னை மாகாணத்தின் செல்வ பொருளாதார நிலை அபி விருத்தியடைந்திருக்கிறதா அல்லது கேவலமாகி யிருக்கிறதா என்பதைப்பற்றி விசாரித்து அதைப்பற்றி எழுதும்படி கன்னிமாரா பிரபு எனக்குக் கடமை விதித் தார். சர்க்கார் தஸ்தவேஜிகளில் காணப்படும் தகவல்களை யும் மற்றும் நேரில் ஆங்காங்கு விசாரித்தறியும் உண் மைகளையும் உபயோகித்து என்னுடைய முடிவுகளை வெளியிடவேண்டும் எனவும் அவர் எனக்கு அறிவித்தார். பொது மக்களின் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக் கிறதா அல்லவா என்பதை நிர்ணயிப்பதற்கு முன் முந்திய நாட்களில் அவர்கள் ஸ்திதி எத்தகைய தானதாக இருந் தது என்பதை அறிவது மிக்க அவசியமானதாகியது. ஆகவே இதற்காக நான் அநேகம் பழைய ரிபோர்ட்டுகளைச் சேகரித்துப் படிக்க வேண்டியதாயிற்று. இதனால் அதிக கால விரயம் ஏற்பட்டது. 1890-ம் வருஷம் முடிவதற்கு முன் இந்தப் புத்தகத்தின் முதல் சில பகுதிகளை மட்டும் நான் எழுதி முடிக்க இயன்றது. கன்னிமாரா பிரபு இங்கிலாந்துக்குச் சென்றதாலும் உத்தியோக அலுவல்கள்

அதிகமாக இருந்ததாலும் இந்தப் புத்தகத்தை எழுதும் காரியம் சிறிது காலத்திற்கு நிறுத்திவைக்கப்பட்டது. 1891-ம் ஆண்டின் பிந்திய பாகத்தில் நான் மீண்டும் இந்த வேலையில் முனைய முடிந்தது. இதற்கப்புறம் இந்தக்காரியத்திலேயே நான் சிரத்தையுடன் இருந்துவந்திருக்கிறேன். ஆனால் இதே காலத்தில் நான் என் உத்தியோக காரியங்களையும் கவனித்துவர வேண்டியிருந்தமையால் இதைச் சீக்கிரம் பூர்த்தி செய்ய இயலவில்லை. ஆனால் இடைக் காலத்தில் பொருள்களின் விலைகள், தொழிலாளர் கூலி விகிதம் முதலியவை சம்பந்தமான தகவல்களைச் சேகரித்தேன். உத்தியோகஸ்தர்கள் மூலம் கிடைக்கும் தகவல்களுடன் இவற்றை ஒப்பிட்டுப்பார்க்கவே நான் அவற்றைச் சேகரித்தேன்.......

இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட புள்ளிவிவரங்கள் யாவும் பிழை இன்றி இருக்கவேண்டும் என்பதற்காக மிக்க சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் என் முயற்சி வெற்றி பெற்றுள்ளதா என்பது பற்றி எனக்கே சம்சயம் இருக்கிறது. முந்திய நூற்றாண்டுகளில் இருந்த நிலைமையைக்குறித்து கிடைத்த தகவல்களில் சிலாக்கியமானவையே ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டபோதிலும் அவற்றிலும் குறைகள் இருக்கின்றன. ஆனால் இதனால் நான் செய்திருக்கும் முடிவுகள் பாதிக்கப் படமாட்டா.

இந்த விஷயம் பல அம்சங்களைக் கொண்டதாதலால், முதலில் முயற்சி செய்பவர் ஒருவர் பல பிரச்னைகளைப்பற்றி எப்படி விசாரித்து அபிப்பிராயத்தைத்தெரிவிக்க வேண்டும் என்பதைக் குறித்து இனி மேற்கொள்ளவேண்டிய பாதையை வகுத்துக்காட்டுவதைத் தவிர அதிகமாக எதையும் சாதிக்க முடியாது. ஆகவே நான் இந்த புத்தகத்தின் அனுபந்தங்களாக இதில் விவாதிக்கப் பட்டுள்ள பல பிரச்னைகளைப்பற்றி தெளிவான ஞானத்தைத்தரும் சர்க்கார் தஸ்தவேஜிகளையும் இதரர்கள் எழுதியவற்றையும் சேர்த்திருக்கிறேன். பின்பு இதே துறையில் பிரவேசிப்பவர்களுக்கு அவை உதவ வேண்டும் என்பதே என் நோக்கம். புள்ளி விவரங்கள் ஏராளமாகத் தொகுக்கப் பட்டிருப்பதற்கும் புத்தகத்தின் முந்திய பாகத்தில் அநேகரு

டையகருத்துகள் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதற்கும் இதுவே தான் காரணம். இப்போதிருக்கும் தலைமுறைக்கு இதில் காணப்படும் தகவல்களில் பல புதுமையானதாகத் தென்படலாம். ஆனால் மறைந்து வரும் தலைமுறைக்கு இவை அப்படி நூதனமானவையாக இரா.

இந்த மாகாணத்தின் பொருளாதாரச் செல்வ நிலைமையில் ஏற்பட்ட அபிவிருத்தியைப் பற்றியே இந்தப் புத்தகம் குறிப்பிடுகிறது என்பதை நான் முடிவில் அறிவிக்க வேண்டும். தேசத்தின் நல்வாழ்வைத் தழுவிய பிரச்னையை இன்னும் இதர அம்சங்களைக் கொண்டு பரிசீலிக்க வேண்டுமாயினும் பொருளாதாரச் செல்வ நிலையில் ஏற்படும் அபிவிருத்திதான் இதர துறைகளிலும் ஏற்படும் அபிவிருத்திக்கு அஸ்திவாரம் போன்றதாகும். பாரபட்சமின்றி இந்தப் பிரச்னையைப்பற்றி சிந்தித்துப் பார்த்தால் சென்ற நாற்பது வருஷ காலத்தில் இந்த மாகாணம் மிக்கவும் முன்னேற்றமடைந்திருக்கிறது என்பதில் இரண்டுவித அபிப்பிராயம் இருப்பதற்கில்லை.''

"பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் சென்ற 40 வருஷ காலத்தில் சென்னை மாகாணத்தின் முற்போக்கு'' என்ற மகுடத்துடன் இவர் பின்பு எழுதிய பெரிய புத்தகத்தின் முதற்பதிப்பு 1892-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் தயாராகி மே மாதத்தில் பிரசுரமாகியது. அப்போது அந்தப் பதிப்புக்கு எழுதிய முகவுரையில் ஆசிரியர் மேற்கண்டபடி எழுதினார். தாம் இந்தப் பொறுப்பை மேற்கொள்ளும்படி நேர்ந்த காரணத்தையும் தாம் இதை நிர்வகிக்கையில் அனுஷ்டித்த முறைகளையும் ஒருவாறு விவரித்துவிட்டுத் தாம் இனி அனுசரிக்கவேண்டிய மார்க்கத்தை வகுத்துக் காட்டியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் சர்க்கார் இவரை மிக்கவும் அவசரப் படுத்தி விட்டனர். புத்தகம் சீக்கிரம் வெளிவர வேண்டும் என்று இவருக்கு எழுதினர்:

"நான் இதுவரை என்னுடைய புத்தகத்தை எழுதி முடிக்கவில்லை. சர்க்கார் காரியாலயத்தைவிட்டு சென்ற செப்டம்பர் மாதம் விலகியது முதற்கொண்டு இந்த வருஷத்தில் ஏப்ரல் மாதாரம்பம் வரையில் நான் அடிக்கடி பிரயாணம் செய்தேன். இந்தக் காலத்தில் சில தினங்கள்

சேர்ந்தாற்போல் புத்தகத்தை எழுத உட்காருவது மிகக் கஷ்டமாக இருந்தது" என்று இவர் சென்னை ரெவினியூ இலாகா காரியதரிசிக்கு ஒரு சமயம் எழுதினர்.* இதற்கப் புறம் கவர்னரான கன்னிமாரா பிரபுவின் காரியதரிசி மிஸ்டர் (பின்புஸர்) ஜே. டி. ரீஸ் இவருக்கு அடிக்கடி கடிதங்களை எழுதி புத்தக வேலை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று வினவத் தொடங்கிவிட்டார். "மக்களின் நிலைமையைக் குறித்து தாங்கள் ஆகஸ்டு மாதம் 18-ம் தேதியன்று எழுதிய கடிதத்தை மே. த. கவர்னரின் பார்வைக்கு அனுப்பிவிட்டேன். அந்தக் கடிதத்திற்கு நான் வந்தனம் செலுத்த வேண்டும். அதே முடிவுகளை மே. த. கவர்னரும் செய்திருப்பது தங்களுக்கும் தெரிந்திருக்கலாம். இதுவரை நிலைமை வேண்டும் என்றே மிகைப் படுத்தப்பட்டு வந்திருப்பதாகவும் மிக்க அழகாகவும் ஆனல் அதிக கடுமையாகவும் எழுதப்பட்டுவந்திருப்பதாகவும் நான் எண்ணியதுண்டு. இந்தியாவின் ஏழ்மையைக் குறித்துத் தாங்கள் தயாரிக்கும் புத்தகம் எப்போது வெளிவரும் என்று கன்னிமாரா பிரபு கேட்கிருர். தாங்கள் விஷயத்தை மறந்துவிட வில்லை என்றும் சீக்கிரத்தில் அவரிடம் புத்தகத்தின் பிரதி வந்துசேரும் எனவும் நான் அவரிடம் அறிவித்தேன். தாம் தாயகம் திரும்புமுன் அதை எடுத்துக்கொண்டுபோக அவர் ஆவலாக இருக்கிருர். இன்னும் இரண்டு அல்லது மூன்றுவார காலத்தில் அவர் இங்கிருந்து கிளம்புவார். தாங்கள் இந்த தடவை உதக மண்டலத்திற்கு வரப்போவதில்லை என்று கேள்விப்பட்டேன். ஆயினும் சீக்கிரத்தில் நான் தங்களைச் சென்னையில் சந்திப்பேன்."**

"தங்களுடைய மிக்க உயர்தரமான புத்தகம் கூடிய சீக்கிரத்திலேயே பொதுமக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று சர்க்கார் அதி ஆவலாக இருக்கின்றனர்; மிஸ்டர் ஏ. ஓ. ஹியூம் போன்றவர்கள். உண்மையைத் திரித்து நடத்திவரும் பிரசாரத்திற்கு இந்தப் புத்தகத்தில் தக்க பதில் கிடைப்பது நிச்சயம். ஆகவே இதன் பிரதிகளை இந்தியா மந்திரிக்கும் இந்திய சர்க்காருக்கும்

*1890-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி உதக மண்டலத்திலிருந்து எழுதியது.
**கடிதம்: 25. 9. 1891

உடனே அனுப்ப உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. லண்டனிலும் இங்கும் உள்ள பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் பிரதிகளை அனுப்பலாம் என்ற யோசனை இருக்கிறது.. ....காலதாமதமின்றி உடனே இதன் பிரதியை இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டும் என்பது கவர்னரின் ஆவல்'' என்று ரெவினியூ இலாகா காரியதரிசி மிஸ்டர் ஸீ. கால்ட்டன் இவருக்கு எழுதினர்.*

புத்தகம் வெளியானதும் அதன் பிரதி எல்லா பத்திரிகை ஆசிரியர்களுக்கும் அனுப்பப்பட்டது. "மதராஸ் மெயில்'' பத்திராதிபராக இருந்த மிஸ்டர் எஸ். கே. பீசம்ப் "தங்கள் புத்தகம் மிக்க மதிப்பு வாய்ந்தது என்பதற்காகவும் படிப்பதற்கு ருசிகரமானது என்பதற்காகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தங்களை மனமாறப் பாராட்டுகிறேன். நாளை ஞாயிற்றுக்கிழமை அதைச் சிலமணி நேரம் மிக்க ஜாக்கிரதையாகப் படித்து இன்பகரமாகப் பொழுதைப் போக்க நான் உறுதிகொண்டிருக்கிறேன்'' என்று எழுதினர்.** இது தவிர புத்தகம் தம் பார்வைக்கு வந்து சேர்ந்த தினமே அவர் தம்முடைய பத்திரிகையில் புத்தகத்தின் மேன்மையை எடுத்துக் காட்டி ஒரு தலையங்கத்தை எழுதியிருந்தார். பிறகு புத்தகத்தை நன்கு விமர்சித்து மற்றும் சில தலையங்கங்களையும் வெளியிடப் போவதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

இனி புத்தகத்தின் ஸாரத்தை எடுத்துக் காட்டுவது வாசகர்களுக்கு உபயோககரமாக இருக்கும். முதற் பதிப்பு ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் இரண்டு பாகங்களில் முந்திய நூற்றுண்டுகளில் நாடு இருந்த நிலைமை விவரிக்கப்பட்டது. அந்த நாட்களில் இருந்த ஸ்திதியைப்பற்றி சரியான தகவல்கள் கிடைக்காவிட்டாலும் பாண்டியர் ஆட்சியிலும் சோழர் ஆதிக்கத்தின் கீழும் நிலவரிப் பளு அதிகமாகவே இருந்தது. அப்போதும் பஞ்சங்கள் அடிக்கடி ஏற்பட்டு வந்ததாகவும் அக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பெரிய கட்டடங்களையும் கோபுரங்களையும் அரண்மனைகளையும் பார்த்து மக்களின் நிலைமை மிக்க திருப்திகரமாக இருந்தது என்று ஏமாந்து விடலா

*கடிதம்: சென்னை, 9. 4. 1892
**கடிதம்: 13. 5. 1892

காது எனவும் ஆசிரியர் தமக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு எடுத்துக்காட்டினர். மூன்ரும் பாகத்தில் பதினெட்டாம் நூற்ருண்டில் கட்டுப்பாடு தளர்ந்துவிட்டதாலும் அடிக்கடி பல சண்டைகள் தலைகாட்டியதாலும் தென் இந்தியாவில் பெரும்பகுதி வெளியேயிருந்து வந்து படையெடுப்போருக்கு மிக்க சுலபத்தில் இரையாகிவிட்டதாகவும் இதற்கடுத்த நூற்ருண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஆட்சி நாட்டில் நிலைபெற்றபோது விவசாயிகள் கஷ்ட தசையில் தவித்ததாகவும் இவர் குறிப்பிட்டார். பிறகு பிரிட்டிஷார் மெள்ள மெள்ள நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஊன்றிவிடும்படிச் செய்ய முன்வந்ததாகவும் அப்புறம் நிலத்தீர்வை விகிதத்தையும் நிர்ணயித்துக் கொண்டதாகவும், இது விஷயமாக எவ்வளவோ பரீட்சைகள் செய்யப்பட்டு பிழைகளும் புரியப்பட்டதாகவும் எழுத இவர் பின்வாங்கவில்லை. நாட்டிலும் க்ஷாமம் அடிக்கடி தலைகாட்டியதுடன் 1822-23ல் குண்டூரில் மிகவும் உக்கிரமான பஞ்சம் சம்பவித்ததையும் இதன் காரணமாக விவசாயிகளுக்கேற்பட்ட சிரமம் அளவிட முடியாதபடி இருந்ததாகவும் சர்க்காருக்குத் தான்யவகையில் கிஸ்தியைச் செலுத்தும் வழக்கத்திற்குப் பதிலாகப் பணமாக அதைத் தரவேண்டும் என்று விதிக்கப்பட்டதால் நாட்டில் போதிய அளவுக்கு நாணயம் நடமாட்டத்தில் இருக்கவில்லை என்பதையும் ஆசிரியர் தெளிவுபடுத்தினர். விவசாயப் பொருள்களின் விலை 100-க்கு 20 வீதம் இறங்கியதால் ஏற்கெனவே அதிகமாயிருந்த வரிப்பளு இதனுல் தாங்க முடியாமல் போய்விட்டதாகவும் அநேகம் இடங்களில் நில சாகுபடி நிறுத்திவிடப்பட்டதாகவும் ஆகவே பல ஜில்லாக்களிலிருந்து வருமானம் வெகுவாக குறைந்துவிட்டதாகவும் இறுதியில் நாட்டு வளத்தை அபிவிருத்தி பண்ணி விவசாயிகளின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் காட்டப்பட்ட கவனம் வியர்த்தமாகிவிட்டதாகவும் இவர் போதிய ருசுக்களுடன் விவரித்தார். ஆனுல் இதே காலத்தில் சாதிக்கப்பட்ட சில முக்கிய சீர்திருத்தங்களையும் இவர் குறிப்பிட்டிருந்தார். அவை வருமாறு.—(1) அடிமைகளுக்கு விடுதலை (2) உள் நாட்டில் சாமான் போக்குவரத்துமீது விதிக்கப்பட்ட கட்டணம் மிகக் கடுமையாக வசூலிக்கப்பட்டதுபற்றி அது ஒழிக்கப்பட்டது (3) ஒரு

துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்திற்கு வியாபாரத்திற்காகக் கொண்டுபோகப்படும் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரி ரத்து செய்யப்பட்டது (4) காவேரி அணைக்கட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டு கோதாவரி, கிருஷ்ணு அணைக்கட்டுகள் கட்டப்பட்டன (5) ரயத்துகள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலங்களில் தாங்கள் சொந்தச் செலவில் செய்யும் அபிவிருத்திகளை வரி விதிப்பு விஷயமாக கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை என்று சர்க்கார் முடிவு செய்தனர். மொத்தத்தில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதல் பகுதியில் விவசாயிகள் நிலைமை அபிவிருத்தியடையாவிட்டாலும் பிற்போக்கானதாக இல்லை என்ற அபிப்பிராயத்தையும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வெளியிட்டார்.

நான்காம் பகுதியில் ஆசிரியர் 1850 முதல் 1890 வரையுள்ள 40 வருஷ காலத்தில் இருந்த ஸ்திதியைச் சுருக்கமாக விவரித்துள்ளார். இந்த வருஷங்களில் மக்கள் எவ்வளவோ முன்னேற்றத்தை எட்டினர் என்பதே நூலாசிரியரின் அபிப்பிராயம். 1854-ம் வருஷத்திற்கப்புறம் விவசாயிகளுக்கிருந்த சுணக்கம் மறைந்து அவர்களது ஸ்திதி வெகுவாக அபிவிருத்தியடைய வாரம்பித்தது. ஸ்ரீநிவாஸராகவையங்கார் இதற்குக் காரணங்கள் எவை என்பதையும் வெளியிட்டார். நிலத்தீர்வை விகிதம் குறைக்கப்பட்டமை, சாகுபடி செய்ய விருப்பமில்லாதவர்கள் மீது நிலத்தை சுமத்தும் முறையை நிறுத்திவிட்டு, ரயத்துகள் தங்கள் இஷ்டப்பிரகாரம் நிலத்தை சாகுபடிக் கெடுத்துக் கொள்ளவும் அவ்விதம் செய்யாதிருக்கவும் அளிக்கப்பட்ட அதிகாரம், பொது மராமத்து வேலைகளுக்காகக் கட்டாயத் தொழிலுக்குப் பலரைச் சேர்க்கும் பழக்கம் ஒழிக்கப்பட்டது, வரிவசூல் விஷயமாகவும் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கும் சித்திரவதை செய்தல் அல்லது சட்டவிரோதமாக நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணுவது தடுக்கப்பட்டது, ரஸ்தாக்களையும் ரயில் பாதையும் நீர்ப்பாசன வசதிகளையும் அமைப்பதற்காக ஏராளமாகப் பணம் செலவழிக்கப்பட்டமை, இந்தக் காரணங்கள் பற்றி நாட்டில் விவசாயிகளின் ஸ்திதி மேம்பட்டது. ஆஸ்திரேலியாவிலும் கலிபோர்னியாவிலும் தங்கச் சுரங்கங்கள் கண்டெடுக்கப்பட்டு ஐரோப்பாவில் வெள்ளி

நாணயங்களுக்குப் பதிலாகத் தங்க நாணயங்களை உபயோகிக்க ஆரம்பித்தனர். இதனுல் வெள்ளி மதிப்பு குறைந்து அது இந்தியாவுக்கு அதிகமாக ஏற்றுமதியாகியது. க்ரைமியா யுத்தம் சணல், எண்ணெய் வித்துக்கள் ஆகியவைகளைக் குறித்த வர்த்தகம் பெருக ஹேதுவாகியது. இதே காலத்தில் அமெரிக்காவில் நடந்துவந்த சண்டைபற்றி இந்திய பருத்தி அங்கு அதிகம் தேவையாகிவிட்டது. இந்தியாவில் நடந்த சிப்பாய்க் கலகத்தை அடக்குவதற்காகவும் ரயில் பாதைகளையும் நீர்ப்பாசன திட்டங்களையும் அமைப்பதற்காகவும் கடன் அதிகம் வாங்க நேரிட்டதால் இந்த நாட்டில் வெள்ளி அதிகமாக வந்து குவிந்துவிட்டது. உடனே 1850-ல் இருந்ததைவிட இரண்டரை அல்லது மும்மடங்கு அதிகமாக விலைவாசிகள் உயர்ந்தன. அந்த நூற்ருண்டில் ஆரம்ப நாட்களில் இருந்ததற்கு இரட்டிப்பு அதிகமாக அவை இருந்தன. நில சாகுபடியும் வர்த்தகமும் இந்தக் காலத்தில் செழிப்பாக இருந்தன. ஆகவே விவசாயிகள் இப்போது மிக்க சௌகரியமான தசையில் இருந்தனர். ஆனுல் 1870ம் ஆண்டுக்கப்புறம் பிற்போக்கின் அம்சம் தென்பட்டது. இந்தியாவில் பொது மராமத்து வேலைகளைச் செய்வதற்காக பிரிட்டனிடமிருந்து கடன்வாங்குவது நின்றது. இதுவரை வாங்கிய கடனுக்காக இங்கிலாந்துக்கு வட்டியை அனுப்பவேண்டியதாயிற்று. ஆதலால் 1860-ம் வருஷம் முதற்கொண்டு எந்த நிலையில் விலைவாசிகள் இருந்தனவோ அதிலிருந்து அவை இறங்க ஆரம்பித்தன. பிறகு விவசாயிகளின் வருமானத்தில் வாட்டம் பிறந்தது. இதே சந்தர்ப்பத்தில் ஸ்தல ஸ்தாபனங்களின் வருமானத்தைப் பெருக்கவும் இதர காரியங்களுக்காகவும் வரிகளை விதிக்க சர்க்கார் முற்பட்டது நாட்டில் கலக்கத்தையும் கஷ்டத்தையும் தான் அதிகமாகக் கிளப்பிவிட்டது. மக்கள் இந்தப் புதிய ஸ்திதிக்கேற்றபடி நடந்துகொள்ள ஆயத்தமாகையில் 1876-78-ம் வருஷத்திய பஞ்சம் நாட்டைப் பீடித்தது. இதற்கப்புறமும் மக்கள் சமாளித்துக்கொண்டு திரும்பவும் பழைய ஸ்திதியை எட்டினர். 1890-ம் ஆண்டுக்கு முந்திய இரு வருஷங்களில் ஏற்பட்ட க்ஷாமம்கூட மக்களுக்கேற்பட்ட சக்தி காரணமாக அவர்களைப் பாதிக்கவில்லை. ஐந்தாம் பகுதியில் இந்த நாற்பது வருஷ காலத்

தில் பொதுமக்களின் நிலை பொதுவாக அபிவிருத்தியடைந்திருக்கிறதா அல்லவா என்பது பலதரப்பட்ட புள்ளிவிவரங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவு சிரமப்பட்டு ஆதாரங்களையும் புள்ளிவிவரங்களையும் எடுத்துக் காட்டியபோதிலும் கண்டனத்திற்குக் குறைவில்லை. சர்க்கார் சார்பில் இந்தப் புத்தகம் வெளிவந்ததே முதல் குற்றம்! அடுத்தபடியாக ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் தம் மனசுக்கு நியாயமாகத் தோன்றிய அபிப்பிராயத்தை நிர்ப்பயமாக வெளியிட்டதும் இரண்டாவது குற்றமாகியது!! "மதராஸ் ரெவியூ" என்ற பத்திரிகையில் ஆரம்பம் முதல் கடைசிவரை இவர் எழுதிய வாக்கியங்களுக்குக் கண்மூடித்தனமான கண்டனம் காணப்பட்டது. அந்தப் பத்திரிகையில் எழுதப்பட்டதாவது:—

> "சுதேசி ஆட்சியில் சென்னை மாகாணம் மிக்க மோசமாக இருந்ததாக இந்த சர்க்கார் தஸ்தவேஜியில் விவரிக்கப்பட்டுள்ளது. முகம்மதியர் நாட்களில் மேலும் கேவலமாக நாட்டு நிலைமை இருந்ததாம். ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பின்பு அந்த நூற்றாண்டின் முதற்பகுதியில் இருந்த ஸ்திதியைக் குறித்து தெளிவாக விவரம் தெரிவிக்கப்படவில்லை. அடுத்த நாற்பது வருஷ காலத்தில் நாட்டில் முற்போக்கும் சீர்திருத்தங்களும் சாதிக்கப்பட்டதாக மிக்க விவரமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது"*

இது தவிர தேசத்தின் முன்னேற்றத்தைக் குறித்து பிரிட்டிஷ் அதிகாரிகளும் சுதேசியும் எழுதியிருப்பதில் குறை கூறுவது விரும்பத்தகாதாயினும் இதனால் ஏதோ நிவர்த்திக்க முடியாத விரோதம் ஏற்பட்டுவிட்டது எனக் கருதலாகாதெனவும் ஆனால் ஆசிரியர் செய்திருக்கும் முடிவுகளை மிக்க ஜாக்கிரதையாகப் பரிசீலிக்கவேண்டும் என்பதே அதன் நோக்கம் எனவும் அந்த விமர்சகர் எழுதியிருந்தார்.

இந்தப் பத்திரிகை எழுதியதை ஆதாரமாகக்கொண்டு லண்டனில் இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் நடத்தப்பட்டு வந்த "இந்தியா" என்ற மாதப் பத்திரிகையும் இந்

*மதராஸ் ரெவியூ: பிப்ரவரி 1896 இதழ்

தப் புத்தகத்தைத் தாக்கப் பின்வாங்கவில்லை. அநாவசிய ஆத்திரம் காரணமாக அர்த்தமற்ற வாக்கியங்களே இந்தக் கட்டுரையிலும் குவிந்திருந்தன. சரித்திர வாயிலாக நாட்டில் எப்படி அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் எதிர்காலத்தைப்பற்றியும் சரிவர விஷயத்தை அறிந்து கொள்ள விரும்புவோருக்குத் திரிக்காமல் அப்படியே உண்மைகளை எடுத்துக்காட்டி மிக்க ஜாக்கிரதையாக முடிவுகளைப் பண்ணவேண்டும். உண்மைகளைப் போதிய அளவுக்கு குறிப்பிடாமல் சில மாத்ஸர்யங்களை அடிப்படையாகக்கொண்டு முடிவுகளைச் செய்வதால் பெருமை சம்பவித்தாலும் சரி அவமானம் நேரிட்டாலும் சரி தற்காலிகமாக அவை இங்குள்ளவர்களின் மனதைத் தவறான வழியில் திருப்பிவிடும். இது மிகவும் விஷமத்தனமானது. இத்தகைய தவறுகளை எடுத்துக்காட்டுவது மாகாணத்தின் நல்ல நிர்வாகத்திலும் பொதுவாக தேசத்தின் க்ஷேமத்திலும் சிரத்தைக் கொண்டவர்களுக்கு மகத்தான சேவை புரிவதற்கொப்பாகும்''* மிகவும் காரமான வார்த்தைகள்! அளவு மீறி எழுதப்பட்டவை. ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்த நூலில் விஸ்தரித்த ஆதாரங்கள் மிக்க மதிப்புக்குரியவை: எவ்வளவோ கஷ்டப்பட்டு சர்க்கார் காரியாலயத்திலிருந்து மீட்கப்பட்டு முதன் முதலாகப் பொது மக்களுக்கு உண்மை தெரியவேண்டும் என்பதற்காக எழுதினர்.

''மதராஸ் ரெவியூ''வில் விஷயதானத்தைச் செய்தவர் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பின்பும் நிலைமை திருந்தவில்லை என்று பறைசாற்றும் கோஷ்டியைச் சேர்ந்தவர்.

''சாகுபடியில் பாதி சர்க்காரைச் சேர்ந்தது என்பது ஐந்தாம் ரிபோர்ட்டிலும்ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மிகுந்த பாதி நிலத்தைச் சாகுபடி செய்பவருக்குச் சொந்தமாகும். பயிரிடுவதற்கான செலவு முதலியவற்றை சமாளித்துவிட்டு அவரும் அவர் குடும்பமும் காலத்தைக் கடத்துவதற்கு அது போதியதாகாது. ஆகவே அவருக்கு அதிக பாகம் சேரவேண்டும். சர்க்கார் தங்களுக்கு சேரவேண்டிய பாகத்தைப் பணரூபமாக வசூலித்தனர் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இவ்விதம்

---

*இந்தியா: ஏப்ரல் 1896 இதழ்

பணமாக வசூலிப்பதால் சில ஜில்லாக்களில் மொத்தத்தில் 60 அல்லது 70 சத விகிதத்திற்கு வசூலிக்கப்பட்டதாக 1817-ல் ரெவினியூ போர்ட் நடத்திய விசாரணை மூலம் தெரிகிறது. அதே நூற்றாண்டின் முதல் பகுதியின் அந்திய வருஷங்களில் விலைகள் குறைந்துவிட்டதால் சர்க்காரின் வசூல் மிகவும் ஜாஸ்தியாகிவிட்டது. மிக்க திறமையுடனும் நேர்மையாகவும் நடக்கும் நிர்வாகத்திலும் மொத்த பயிரில் பாதி எடுத்துக்கொள்ளப்பட்டு வந்தது ரயத்துக்குக் கேட்டையே விளைவித்தது.

ஆனால் நிலத்தை சாகுபடி செய்பவரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை குறிப்பிடப்பட்ட நிலவரி விகிதத்தையோ அல்லது குத்தகை விதிகளையோ பின்பற்றவில்லை. உண்மையில் ஒவ்வொரு ரயத்தும் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது ஐரோப்பிய அல்லது சுதேசி வரிவசூல் உத்தியோகஸ்தர்களின் மனோபாவத்தையே தழுவியிருந்தது. அந்நாளில் ரயத்துகள் அதிகமாக நிலத்தை சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டதுடன் அவருடைய ஸ்திதிக்கேற்றபடி அவரிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலத்திற்காகவும் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டதை அவர் செலுத்தியபோதிலும் தாம் எதைப் பிரதானமாகக் கருதுகிறாரோ அந்த நிலத்தை முதலில் சாகுபடி செய்ய அவர் அனுமதிக்கப்படவில்லை. அவர் என்ன செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டது. வரி வசூல் இலாகா உத்தியோகஸ்தர்கள் அவரிடம் ஒப்படைக்கும் நிலத்தை அவர் கட்டாயம் சாகுபடி செய்ய வேண்டும். அவர் அப்படிச் செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி மிஸ்டர் தாக்கரே குறிப்பிட்டபடி அவர் எல்லா நிலத்திற்கான குத்தகைகளையும் செலுத்தவேண்டும். இந்த ஹிம்சைகள் காரணமாக அவர் வேறு எங்காவது போய் ஜீவனோபாயத்தைத் தேடினாலும் அவரை விட்டபாடில்லை. அவர் எங்குபோனாலும் அங்கும் இஷ்டப்படி தீர்வை போடப்பட்டு இடத்தை மாற்றுவதால் ஏற்படக் கூடிய அனுகூலங்களை அனுபவிக்கவிடாமல் அவர் தடுக்கப்பட்டார்.''

ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது புத்தகத்தில் எழுதிய

வைதான் இந்த வார்த்தைகள். இவற்றையெல்லாம் தம் முடைய நூலில் ஆசிரியர் வெளியிட்டிருப்பதே இவர் தகவல்களைச் சேகரித்துத் தருவதில் எவ்வளவு கவலையும் கருத்தும் காட்டினர் என்பது தெளிவாகத் தெரியும்.

இதே விமர்சகர் பின்பொரு இடத்தில் எழுதியிருப் பதையும் இங்கு குறிப்பிடுவோம்:

> "அந்த நூற்றுண்டின் மத்திய காலத்திற்கப்புறம் நாட்டின் முற் போக்கு மகத்தானது என்பதைப் பற்றிச் சந்தேகமில்லை. இந்த சர்க்கார் தஸ்தவேஜியில் நாட்டில் செய்யப்பட்ட சில சீர்திருத்தங்கள் விவரிக் கப்பட்டுள்ளன. நிலத்தீர்வை விதிதக் குறைவு, ரஸ்தாக்கள், ரயில்பாதை, கால்வாய்கள் முதலியன அமைக்கப்பட்டன. போலீஸ் படை நிறுவப் பட்டது. வரிவசூல் விஷயத்தில் ஹிம்சை செய்யும் முறை தடுக்கப்பட்டது. சர்க்காரின் நிர்வாகத்திட் டத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியும் இதில் குறிப்பிடப் பட்டது. இது இப்படியிருக்கையில் நூற்றுண்டின் முதற் பாகத்தில் மட்டும் முற்போக்கு இராமல் பிந்திய நாற்பது வருஷங்களில் இத்தகைய குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதெப்படி? இது விஷய மாக இந்தப் புத்தக்தில் காரணம் காட்டடப்படவில்லை. அப்படிகாரணம் காட்டுவதும் உத்தேசம் அல்ல எனத் தோன்கிறது."

புத்தகத்தை முழுதும் தொடர்ச்சியாகப்படித்தால் தான் ஆசிரியர் அனுஷ்டித்திருக்கும் நேர்மையான போக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் இவர் தாம் மேற் கொண்ட முடிவுகளுக்கான காரணங்களைக் குறிப்பிட் டிருப்பதும் சந்தேகத்திற்கிட மின்றி தெரிய வரும், முக வுரையைப்படித்தாலேயே வீண் வாதத்தில் இறங்குவது வியர்த்தம் என்பது சுலபத்தில் ஊகிக்கப்படும்.

ஐந்தாம் பாகத்தில் 1850-ம் வருஷத்திற்கப்புறம் பொதுமக்களின் நிலை உயர்ந் திருக்கிறதா அல்லவா என் பது விஸ்தாரமாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் செய்துள்ள முடிவுகள் பின் வருபவை: 1852-ம் வருஷத் திற்கப்புறம் ஜனத்தொகை 100க்கு 80 வீதம் அதிகரித்

திருக்கிறது. ரயத்துவாரி நிலத்தின் சாகுபடியும் ஜாஸ்தியா யிருக்கிறது. ஜமீன்தாரிகளைப்பற்றிப் புள்ளி விவரங்கள் கிடைக்க வில்லை. ஜனத்தொகைப் பெருக்கத்தைவிட சாகுபடி மிகவும் அதிகமாகயிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கும் காரணம் நீர்ப்பாசன வசதிகள் அதிகம் செய்யப்பட்டமையே. ரயத்துகளும் கிணறு களைத் தாங்கள் வெட்டி சாகுபடியை அதிகமாக்கினர். பருத்தி, நீலம், மணிலாக் கொட்டை முதலிய வியாபாரப் பயிர்கள் அதிகமாக உற்பத்தியாவதால் மொத்த உற்பத்தி யின் மதிப்பு மிக்கவும் மேலிட்டிருக்கிறது.*

பிரிட்டிஷ் ஆட்சியில் மாகாணமக்கள் முற்போக்கு அடைந்திருப்பது தெளிவு என்பதே அவரது துணிவு. இந்த முடிவு செய்ததற்கு அசைக்க முடியாத ஆதாரங்களை யும் தமது அரிய புத்தகத்தில் திவான் பகதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் எடுத்துக் காட்டி யிருக்கிறார். படகு போக்குவரத்துக்கு கால் வாய்கள், வண்டிகள் போக்கு வரத்துக்கு ரஸ்தாக்கள், ரயில்வே அபிவிருத்தி ஆகிய சீர் திருத்தங்கள் மூலம் பிரிட்டிஷார் மக்களுக்கும் நாட்டுக்கும் எவ்வளவு நன்மைகள் புரிந்திருக்கின்றனர் என்பதையும் இந்நூலில் ருசுவுடன் காணலாம். பிரிட்டிஷ் தொடர் பினால் மேலும் நன்மைகள் உண்டாகியிருப்பதையும் ஆசிரி யர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இந்தியா ஏழ்மையில் உழலும் நாடு, இந்நாட்டு மக்கள் பரம ஏழைகள் என் பதைக் கருத்தில் கொண்டும் ரயத்துகள் விஷயத்தில் விசேஷ அக்கறை பூண்டும் பழங்கால அக்கிரமங்களுக்கு முற்றுப் புள்ளியிட்டும் தாராளப் போக்குடன் பிரிட்டிஷார் நடந்து கொண்டிருப்பதை ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்.

அந்நியர் ஆட்சியில் குறைகளை கண்டு அவற்றை எடுத்துரைத்து கண்டிக்கவும் அஞ்சவில்லை ஸ்ரீநிவாஸராக வையங்கார். பிரிட்டனின் அதிகாரம் வலுத்திருந்த அந்த காலத்தில் அதிகார வர்க்கத்தவரை இவர் கண்டித் திருக்கிறார் என்றால் அதற்கு எவ்வளவு துணிச்சல், —துணிச்சல் மட்டுமல்ல எவ்வளவு தேசாபிமானம்— இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொள்ள

* இதுவரை ஸ்ரீ சுந்தர ராகவன் எழுதியது.

லாம். புத்தகத்தின் ஐந்தாவது, ஆருவது பாகங்களில் பிரிட்டனுக்கு பாராட்டுக்கு உரிய விடத்தில் பாராட்டும் மற்றும் கண்டனங்களும் தேவையான கட்டங்களில் உருவான யோசனைகளும் பின்னிக் கலந்திருக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சியினால் தீமைதான் அதிகமே ஒழிய நன்மை கிடையாது என்ற கூச்சல்கள் எவ்வளவு வாஸ்தவமானவை, எவ்வளவு ஏற்கத்தகாதவை என்பதையும் இவர் எடை போட்டு உண்மையை எடுத்துரைத்திருக்கிருர். மற்றும் சில ருசிகரமான விஷயங்களும் புத்தகத்தில் பொதிந்து நிறைந்திருக்கின்றன. சமூக சீர்திருத்தங்கள்பற்றி இவர் கூறியிருக்கும் கருத்துகளேயாகும் அவை.

சரக்கு, தானியங்கள் போக்குவரத்துக்கு பண்டை காலத்தில் சௌகரியங்கள் இராததால் வர்த்தகம் செழிக்கவில்லை. மக்களும் உணவுக்குக் கஷ்டப்பட்டதுண்டு. ஓரிடத்தில் சுபிட்சமும் அண்மை பிரதேசத்திலேயே துர்ப்பிட்சமும் நிலவிய காலமுண்டு. ஓரிடத்திலிருந்து இன்னெரு இடத்துக்கு சரக்குகளோ தானியமோ ஏற்றிச் சென்ருல், 24 மைல் தூரம் செல்லுமுன் அமித போக்கு வரத்து கட்டணம் காரணமாக, பொருளின் விலை இரட்டிப்பாகிவிடும். அக்கம் பக்கத்து ஊர்களில் விலை வாசிகளின் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் போன்றதாயிருந்திருக்கிறது! ரயில்வே, ரஸ்தா அமைப்பு காரணமாக இந்த தாரதம்மியங்கள் பெரிதும் குறைந்து விலை வாசி ஒரு சீராகியது. மேலும் கட்டணக் குறைவால் சந்தைகளும் வெளி வர்த்தகமும் கொழித்தன. நீர்ப்பாசன திட்டங்களால் சாகுபடி நில விஸ்தீர்ணம் விஸ்தரித்து, ஒரு போக நிலங்கள் நிலையான பாசனத் தண்ணீர் சப்ளை காரணமாக இரு போக நிலங்களாக மாறி உற்பத்தி அதிகரித்தது. போக்கு வரத்து சௌகரியங்களால் ரயத்துக்கும் முன்னை விட அதிகலாபம் கிடைத்தது. இந்த அம்சங்களும் வரி பளு குறைக்கப்பட்டதும் நிலச் சொத்துக்கு கிராக்கி உண்டாக்கியது. 1844-ல் விவசாயத் தொழிலில் அடிமை வேலை முறை ஒழிக்கப்பட்டதும், வரி வசூலிப்பதில் சித்திரவதை செய்யவும் முன்பு அதிகாரிகள் துணிந்தது ஒழிக்கப்பட்டதும், ஏழைகளின் நலனுக்கு விரோதமாக லேவாதேவிக்காரர்கள் நாணய மதிப்பை அவ்வப்போது மாற்றி திருத்தி

கொள்ளை லாபமடித்து வந்தது ஒழிக்கப்பட்டதும் பிரிட்டிஷ் ஆட்சியினுலுண்டான நன்மைகளில் ஒரு சில.

மக்களின் முற்போக்குபற்றி பொதுவாகப் பின் வரும் விதத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதியிருக்கிருர்:— ஜனப்பெருக்க விருத்திக்கின்னும் அதிக வேகத்தில் புதுவீடுகள் முளைத்திருக்கின்றன. கீற்று வீடுகள் மறைந்து ஓட்டுவில்லை வீடுகள் காட்சி தருகின்றன. மக்களின் ஆடை-குறிப்பாக மாதரின் உடைகள்—இப்போது தரம் உயர்ந்திருக்கின்றன. பாட்டிகாலத்து துணி மணிகளைத் தற்காலப் பெண்டிர் ஏறெடுத்துக் கூடப்பார்க்க மறுப்ப தாக கும்பகோணம் கலாசாலை பேராசிரியர் ஸ்ரீசேஷையர் குறிப்பிட்டிருக்கிருர். பணக்காரக்குடும்பங்களில் இப் போது வேலை ஆட்களை அதிகமாகக் காணலாம். வெள்ளி, தங்க ஆபரணங்களும் அதிகரித்திருக்கின்றன. மண் பாண் டங்கள் உபயோகமானது போய் உலோகத்தாலான பாண்டங்கள் உபயோகமாகின்றன. முன்னர் கோலாகல சமயங்களில் மட்டுமே அரிசி சமைக்கப்படும். ஆனல் இப்போது அரிசி தினசரி உணவுப்பதார்த்தமாகியிருக்கிறது. சிறுவர்கள் கல்விக்காக இப்போது செலவாகும் பணம் முன்னர் இரண்டு ஆடவர்களை சம்ரக்ஷிக்கப் போதுமான தாகும். பணக்காரர்கள் மட்டு மின்றி சாமான்னியப் பட்டவர்களும் இப்போது கலாசாலைக் கல்வி பயிலுகின் றனர். முற்காலத்தில் தன் தேவைகளைத்தியாகம் செய்து கொண்டு சந்ததியினருக்காக சொத்து சேர்த்து வைக்கப் பட்டதுண்டு. ஆனல் இப்போது இந்த சேமிப்பு பணம் சிறுவர் கல்விக்காகப் பயன் படுத்தப்படுகிறது. குழந்தை களுக்கு வித்தியாப்யாசம் செய்விக்க தந்தை யோசித்தாலும் தாய் நிர்ப்பந்திக்கிருள். சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக் குப்பெண் கொடுக்க ஓடோடி வருகிற காலம் இது.

முன்பு ஏழ்மை காரணமாக கீழ்த்தர வகுப்பினர் இள மையில் விவாகம் செய்து கொள்ளாதிருந்ததைக் குறிப் பிட்டு இப்போது இவர்கள் பால்யத்திலேயே மணம் புரிந்துகொள்ள முற்பட்டிருப்பது மக்களின் முற்போக் குக்கு அறிகுறியாகும் என்றும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் கூறியிருக்கிருர். விவசாயத் தொழிலாளரின் ஊதியம்

உயர்ந்திருப்பதையும் புள்ளி விவரங்களோடு ஆசிரியர் சுட்டிக் காட்டியிருக்கிறார். முன்பு மிராசுதார்களை அண்டிப் பிழைத்து வந்த புறக் குடிகள் இப்போது சுவாதீனமாக நிலம் வைத்துக்கொள்ளுமளவு முன்னேறியிருக்கின்றனர். ரயில்வே, முதலிய அபிவிருத்தி வேலைகள் காரணமாக பழைய ஊதியத்துக்கே ஊழியர்கள் அகப்படாத நிலைமை உண்டாகியிருக்கிறது. மக்களின் முன்னேற்றம்பற்றி இவர் கூறியுள்ளதாவது:—தொழிலாளரின் முன்னேற்றம் தெளிவாகத் தெரிகிறது. வாழ்க்கைத் தரத்தை இதற்கு ஆதாரமாகச் சொல்ல முடியாதாயினும் பழைய நிலைமையே நீடித்திருக்குமானால் மட்டமாகவே இருந்திருக்கக் கூடியவர்கள் இப்போது ஒருபடி மேல் உயர்ந்திருக்கின்றனர். பண்ணையாட்கள் புறக் குடிகளாகவும் புறக் குடிகளில் சிலர் குத்தகைதாரர்களாகவும் குத்தகைதார்களில் சிலர் பட்டாதார்களாகவும் முன்னேறியிருக்கின்றனர். பறையர்களையும் பள்ளர்களையும் பார்த்தால், இவர்கள் நிலைமை இதற்கும் மோசமாக இருந்திருக்கக் கூடுமா என்றே தோன்றும். ஆனால் அதுஎன்னவோ வாஸ்தவமே. தஞ்சையில் பள்ளர்களிலும் பறையர்களிலும் 6 சத விகிதம் பேரும் செங்கற்பட்டில் 12 சத விகிதம் பேரும் நிலம் வைத்திருக்கின்றனர்.

கடந்த இரண்டு பிரதிகூல வருஷங்களில் ரயத்துகள் தன்னம்பிக்கை காட்டியதும் அவர்களுடைய ஸ்திதி அபிவிருத்தியடைந்திருப்பதற்கு ருசுவாகும் எனவும் குறிப்பிட்டிருக்கும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வர்த்தகப் பயிர்கள், வாணிபத்தைப்பற்றி பிரஸ்தாபித்து பருத்தி, காபி, நீலம், வித்துக்கள், சர்க்கரை, ஜவுளி, வாசனைப் பொருள்கள் முதலியவற்றின் ஏற்றுமதி அதிகரித்திருப்பதை புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டி மேற்சொன்ன துறைகளில் ஆலைகள் ஸ்தாபிதமாகி பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருப்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். பருத்தி ஆலைகளின் ஜவுளி உற்பத்தி இங்கிலாந்தின் வாணிபத்தையே பின்தங்கச் செய்து சீனா, ஜப்பான், கிழக்கு ஆப்ரிக்கா மார்க்கெட்களைப் பிடிக்கக்கூடியது என்றும் இவர் எழுதியிருக்கிறார்.

வெளி வர்த்தக அபிவிருத்தியால் நலன் கிடையாது, நாட்டின் வளம் நம் க்ஷேமத்துக்காகப் பயன்படாமல்

ஆங்கிலேயர் சுரண்டுவதற்கே பயன்படுகிறது, வர்த்தகம் அந்நியர் வசமே இருக்கிறது, சுதேசிகள், தங்களது தொழில் துறைகளிலிருந்து வெருட்டப்படுகின்றனர், நம் நாட்டுக் கைத்தொழில்கள் நாசமடைந்து அதில் ஈடுபட்டவர்கள் வாடுகின்றனர், இதன் விளைவாக விவசாயத்தில் ஏராள மானவர் இறங்கி விட்டனர்—மொத்தத்தில் மக்களின் ஏழ்மையே அதிகரித்து அவர்கள் தேக திடத்தையும் இழந்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து அவை எவ்வளவுக்குப் பொருந்தும் என்பதை ஸ்ரீநிவாஸராக வையங்கார் வெளியிட்டிருக்கிறார். அவர் எழுதியிருப்பதன் சாரம் வருமாறு:—

ரயில்வேயில் பணம் முதல் போட்டதற்கு வட்டியாக இங்கிலாந்துக்கு 55 லக்ஷம் அனுப்பப்படுகிறது. ரயில்வேக் களினால் ஏற்பட்டிருக்கும் நன்மையைக் கவனித்தால் இந்தப் புகார் நிலைக்காது. பழைய போக்குவரத்து கட்டணத்தையும் ரயில்வேயின் சரச கட்டணத்தையும் கவனித்தால் ரயில் வசதியினால் போக்குவரத்து கட்டணத்தில் 4 கோடி ரூபாய் மீதமாகும் என்று கணக்கிடலாம். உற்பத்தியாள ருக்கு முன்னைவிட அதிக லாபம் கிடைக்கிறது. இறக்குமதியாளருக்கும் பண்டங்கள் மலிவாக கிடைக்கின்றன. ரயில்வேயில் அந்நியர் முதலீடு செய்திருப்பதால் நாட்டுக்கு லாபமே.

ஆங்கிலேயரிடம் நாம் கடன்பட்டிருப்பது நிஜமே. ஆனால் இதனாலும் நமக்கு நல்லதே. இந்தியாவில் மூலதனம் கிடைப்பது அரிது; கிடைக்கும் பணமும் சர்க்கார் செக்யூரிடிகளில் சிக்காமல் இருப்பது நல்லது. இதைத் தொழிலபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம்.

ராணுவச் செலவு, பென்ஷன், ரஜா காலபடி முதலியவைக்காக இங்கிலாந்துக்குப் பணம் நிறைய அனுப்பப் படுவது வாஸ்தவமே. பிரிட்டிஷ் ஆட்சியினால் அமைதி, ஒழுங்கு, மேலும் பல நன்மைகள் ஏற்பட்டிருப்பினும் இந்தத் தொகைக் குறைக்கப்பட வேண்டியதாகும். இத் துறையில் சிக்கனம் அனுஷ்டிக்கலாம். சர்க்காரின் திறம் பட்ட சேவைக்குக் குந்தகமின்றி செலவு குறைந்தபட்சமாக ஆகவேண்டியதோடு சுதேசிகளுக்கும் அவர்களுக் குரிய உயர் பதவிகளை—ராணுவ, சிவில் பதவிகளை—தாராள

மாக, மனத்தாங்கலின்றி கொடுக்க வேண்டும். இது நியாய மான கோரிக்கை; நாட்டின் முன்னேற்றத்துக்கும் அத்யா வசியமானது.

முதல் போட்டதற்காக அந்நியருக்கு நாம் வட்டித் தொகை கணிசமாக அனுப்பவேண்டியிருப்பினும் இதை பிரதிகூலமாகக் கருதவேண்டியதில்லை. முதலீடு வெற்றிகர மானால் நாட்டவருக்கு வேலை வாய்ப்பு உண்டாகிறது. முயற்சி பிசுபிசுத்தாலும் கவலையில்லை. வட்டி செலுத்தத் தேவையிராது என்பதோடு இடைக்காலத்தில் தொழிலாள ருக்கு கிஞ்சித்தேனும் சம்பாத்தியம் கிடைத்ததாகும்.

வெளிவர்த்தகம் இந்தியாவின் ஏழ்மையை அதிகரித்து விட்டது என்ற வாதத்தை மறுத்து, இந்தியா லாபமடைந் திருப்பதற்கு ருசுவாக, 1850-லிருந்து வெள்ளி, தங்க இறக் குமதி வெகுவாக உயர்ந்திருப்பதை ஸ்ரீநிவாஸராகவை யங்கார் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தங்களுக்குரிய தொழில்களிலிருந்து சுதேசிகள் வெருட்டப்பட்டிருப்பதாக, சென்னை மாகாணம் பொறுத்த மட்டில், ஒப்புக்கொள்ள முடியாது. ஐரோப்பி யர் ஈடுபட்டிருப்பது காபி, தேயிலை, கொயினா உற்பத்தியி லும் தங்கச் சுரங்கங்களிலும் தான். இந்தத் துறைகளில் இதற்கு முன்னர் யாரும் பிரவேசித்ததில்லை. நீலம் தொழில் கூட சுதேசிகள் கைக்கு மாறிவிட்டிருக்கிறது. காபி தொழில் அவ்விதம் மாறிவருகிறது.

நெசவு, நூற்புத் தொழில்கள் பாதிக்கப்பட்டிருப்பது வாஸ்தவமாகும். மாஞ்செஸ்டர் ஜவுளி போட்டியால் நெசவாளர் லாபம் குறைந்துவிட்டது. நூற்புத் தொழில் அநேகமாக மறைந்து விட்டது. ஆனால் இந்திய பருத்தி ஆலைகள் பாடத்தைத் திருப்பிப் படிக்கின்றன. இந்தியாவி லிருந்து மாஞ்செஸ்டர் ஜவுளியை விரட்டக் கூடுமென்ப தோடு சீனா, ஜப்பான், கிழக்கு ஆப்ரிக்க மார்க்கட்களையும் நம் ஜவுளித் தொழில் கைப்பற்றக்கூடும்.......மாஞ்செஸ் டர் முதலாளிகள் ஓலமிடுகின்றனர்.......இந்தியாவின் சில நைஸ் ரக உற்பத்தியைக்கண்டு அவர்கள் திகைத்துப் பிர மித்துப் போயிருக்கின்றனர்.......தங்கள் தொழிலைக் காப் பாற்றிக் கொள்ள தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டு மென அவர்கள் கூப்பாடு கிளப்பியுள்ளனர்.

நாட்டில் குடிப்பழக்கம் அதிகரித்திருப்பதாயும் சர்க்கார் இதற்கு அனுசரணையாயிருப்பதாயும் வெளியான புகார்களை ஆதாரங்களுடன் ஸ்ரீநிவாஸராகவையங்கார் மறுத்திருக்கிறார். இந்த வழக்கத்தை ஒடுக்க சர்க்கார் பல நடவடிக்கைகள் எடுத்திருப்பதைக் குறிப்பிட்டு கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளில் மதுவகை இறக்குமதி கணிசமாகக் குறைந்திருப்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தமது புத்தகத்தின் ஐந்தாவது, ஆறாவது பாகங்களில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் நாட்டவர் முன்னேற்றத்துக்காகப் பல யோசனைகளை வெளியிட்டிருக்கிறார். அவற்றை சுருக்கமாகக் கூறுவோம்.

எண்ணெய் வித்துகள் ஏராளமாக ஏற்றுமதியாவதிலிருந்து மேலும் பல எண்ணெய் மில்கள் நிறுவ இடமிருப்பது தெரியவரும். வித்துகளுக்குப் பதிலாக எண்ணெய் ஏற்றுமதி செய்யலாம். இதனால் போக்குவரத்துக் கட்டணச் செலவு மீதமாகக் கூடுமென்பதோடு நிறையபேருக்கு வேலை வாய்ப்பு உண்டாகும். மில்களின் கழிவு பொருள்களை ரயத்துகள் உரமாக உபயோகிக்கவோ அல்லது கால் நடைகளுக்கு உணவாகக் கொடுக்கவோ இயலும்.

சென்னை மாகாணத்தில் கரும்பு சாகுபடிக்கும் சர்க்கரை உற்பத்தி தொழிலுக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இந்தியாவில் ஜவுளித் தொழில் நன்கு வளர்ந்து விட்டது. நெசவாளருக்கு இதனால் பாதகமே. ஆனால் விவசாயிகள் நூற்புத் தொழிலை உபதொழிலாகக் கொள்ளலாம். தங்களுக்குத் தேவையான மோட்டா ரகத்துணியை தயாரித்துக் கொள்ளலாம். ஸ்திரீகளுக்குத் தேவையான உயர்ரக துணிமணிகள் உற்பத்திக்கு நெச்வுத் தொழில் நீடிக்கச் செய்யும். பயிரிடாத காலத்தில் சம்பாத்தியத்துக்காக விவசாயிகளின் குடும்பங்கள் குடிசைத் தொழில்களில் ஈடுபடுவதற்கு ஆக்கமளிக்க வேண்டும்.

இரும்பு உற்பத்தி தொழிலுக்கு நல்ல எதிர்காலம் தென்படுகிறது. பல இடங்களில் நிலக்கரி கண்டெடுக்கப்பட்டிருப்பதும் அதன் சிக்கன உபயோக முறைகள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதும் நல்ல எதிர்காலம் நிச்சயமென்க் காட்டுகின்றன. ஐம்பது வருஷங்களுக்கு முன் சென்னை சர்க்கார் இத்துறையில் பிரவேசித்தது. ஆனால்

கட்டைக்கரி அகப்படுவதில் சிரமம் இருந்தமையால் இந்த முயற்சி தோற்றது. ஆயினும், இப்போது புதுச்சேரிக்கு அருகாமையில் பரந்த நிலக்கரி பரப்பு கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், விஞ்ஞான வளர்ச்சியையும் நோக்குமிடத்து, தென் இந்தியாவின் இரும்புக்கனி பொருள் வளம் விரைவிலேயே பயன்படுத்தப் படும் என்று தோன்றுகிறது. இரும்பு, நிலக்கரி வளத்தைக் கவனிக்கையில் இவற்றைப் பயன் படுத்தும் நிமித்தம் தனி இலாகாக்கள் அமைப்பது நலம்.

உப்பு வரி படிப்படியாகக் குறைக்கப்பட்டு முடிவில் அடியோடு ரத்து செய்யப்பட வேண்டும். இது விஷயமாக இந்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். இதற்குப் பதிலாக புகையிலைமீது வரி விதிக்கலாம். புகையிலை செடி சில இடங்களில் மட்டுமே வளரக் கூடியதாதலால் வரி டிமிக்கி கொடுப்பது எளிதல்ல. சட்டம் மீறப்படாமல் பாதுகாக்கும் ஏற்பாடுக்கும் அதிகம் செலவழிக்கத் தேவையிராது. கோர்ட் கட்டணங்கள் ஏழைகளின் சக்திக்குட்பட்டதல்ல. சில்லரை விதாயங்களைத் தீர்க்க, அதிகப் பணச் செலவு வைக்காத நியாய ஸ்தலங்கள் நிறுவவேண்டும்.

நிலத்தின் உற்பத்தியைவிட ஜனப்பெருக்க விகிதம் அதிகமாயிருந்து, ரயத்தும் சிக்கன, செட்டான வாழ்க்கையை நடத்தாமல் போனால், அவர்களுடைய மேம்பாட்டுக்காக என்னதான் செய்தாலும் பலனிராது.........நிக்கல்ஸன் கூறியிருப்பதுபோல விவசாய, கிராமப் பொருளாதாரத்தில் ரயத்துகளுக்கு நன்கு உறைக்கும்படி கல்வி புகட்டவேண்டும்.........நிலத்தின் உற்பத்தி சக்தியை அதிகரித்துக்கொண்டே போனாலும் அதற்கும் எல்லை உண்டு. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமானால் பால்ய விவாக வழக்கத்தில் மாறுதல் அவசியம்.

பிரிட்டிஷ் ஆட்சியில் அநேகம் ரயத்துகள் நன்மையடைந்திருக்கின்றனர். ஆனால் துரதிர்ஷ்டம் பிடித்தவர்களும் ரயத்துகளில் நிறையபேர் இருக்கின்றனர். கஷ்டகாலத்தில் இவர்களுக்கு சர்க்கார் கடன் கொடுத்து உதவ வேண்டும்.

செல்வத்தைப் பதுக்கி வைப்பதால் ஏராளமான பணம் நாட்டின் தொழில் அபிவிருத்திக்குப் பயன்படா

மல் போகிறது. இந்தச் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்கு தொழிலில் புகுத்தப்படுமானால் புரட்சிகர மாறுதல் ஏற்படக் கூடியது. கடன் பளுவைப் பெருமளவு தீர்க்கலாம், இங்கிலாந்துக்கு பெரும் தொகை வட்டியாக அனுப்பப்படுவது தவிர்க்கப்படும்.

1871-லிருந்து கல்வித் துறையில் முன்னேற்றம் மகத்தானதாயிருக்கிறது. இன்னமும்கூட அபிவிருத்தி காணலாம். நாட்டவரில் சொற்பமானவர்களே கல்வி பயிலுகின்றனர். ஆண்கள், பெண்கள் கல்வி அபிவிருத்தியில் காணப்படும் தாரதம்மியம் சமூக முன்னேற்றத்துக்குத் தடையாயிருக்கிறது. ஆரம்பக் கல்வியைப் பரப்புவது துரிதமாக்கப்பட வேண்டும். நம் நாட்டுக்கு விவசாயக் கல்வியே முக்கியமானது. விவசாயத் துறையிலிருந்துதான் இந்திய பொக்கிஷத்துக்குப் பெரும் பகுதி கிடைக்கிறது. சர்க்காரின் உதவி, ஆதரவின்றி விவசாயிகள் பெரும்பாலர் சீர்திருத்த முறைகளைக் கடைபிடிப்பது அசாத்தியம். விவசாயக் கல்வி போதிப்பதில் சர்க்காருக்குள்ள கடமையும் பொறுப்பும் மகத்தானது.

ஹிந்துக்கள் தர்மத்துக்கு விட்டுப்போகும் சொத்துக்களை மத கல்வி, கலாபிவிருத்தி போன்ற துறைகளில் செலவழிக்கலாம். ஏராளமாகக் கிடக்கும் இந்த ஆஸ்திகள் தற்போது பெருமளவில் கையாடப்படுகின்றன. இது பற்றிய சட்டம் திருப்திகரமாயில்லை. இதில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது அரும் புத்தகத்தின் ஆறுவது பாகத்தில், நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாயிருப்பதாகச் சொல்லப்படும் குறைகளை ஆராய்ந்து, பட்டதைப் பட்டபடியும் அபிவிருத்திக்கான யோசனைகளையும் வெளியிட்டிருக்கிறார். நிலத் தீர்வை அவ்வப்போது திருத்தப்படுவதும், ஜமீன்தாரிகளில் ரயத்துகளின் கேவல நிலைமையும் விவசாயிகள் கடன் பளு பிரச்னையும் இவற்றில் முக்கியமானவை.

1856-ல் ஸெட்டில்மெண்ட் இலாகா ஏற்படுத்தப்பட்டது. விவசாய மக்கள் பழைய நாட்களில் அல்லலுற்ற நிலைமை இனியும் நீடிக்கக் கூடாது; அவர்கள் க்ஷேமத்தை

அபேக்ஷித்தும் விவசாயத் தொழிலுக்கு ஆக்கமளிக்கவும் நிலச் சொத்துக்கு மதிப்பு உண்டாக்கவும் நிலவரி தீர்வை விதிப்பது மிக தாராளமாயிருக்க வேண்டும்—இந்த மனோ பாவத்துடன் நிர்வாகத்தினர் நடந்து கொண்டனர். இதைத் தெரிவித்துவிட்டு நிலத்தின் தரம், உற்பத்தி சக்தி, சாகுபடி செலவு, போக்குவரவு செலவு முதலியவற்றை நிர்ணயித்து செலவுகள் போகவும் ரயத்துக்கும் குடும்பத்துக்கும் போதுமானதை விட்டும் எஞ்சியதன்மீது பாதியை தீர்வையாக விதிக்க வேண்டுமென வகுக்கப்பட்ட சிக்கல் மிகுந்த முறையின் குளறுபடிக் குறைகளையும் அபத்தத் தன்மையையும் மேலும் தீர்வை நிர்ணயிப்பதில் அதிகாரிகள் யதேச்சாதிகாரப் போக்கை கடைபிடித்ததையும் எடுத்துரைத்திருக்கிறார். ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது நூலில் ஸெட்டில்மெண்ட் இலாகா விதித்திருக்கும் தீர்வை மிக சொற்பம், ரயத்துகளுக்கு ரொம்பவும் விட்டுக் கொடுப்பதாயுள்ளது, ஆகவே வரியை அதிகரிக்க வேண்டும் என்று கூச்சல் கிளப்பியவர்களைப்பற்றி பிரஸ்தாபிக்கையில் ரயத்துகள் விஷயத்தில் தாராள போக்கு காட்டவேண்டுமென்று விதிக்கப்பட்டதாகவும் ரயத்துகள் அல்லல்பட்டு வந்ததையும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எடுத்துக் காட்டியிருக்கிறார். பின்னர் தீர்வையை உயர்த்தும்விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஸெட்டில்மெண்ட் வேலை பூர்த்தியாகிய ஜில்லாக்களில் தீர்வை உயர்வு, சில ஜில்லாக்கள் தவிர, மொத்தத்தில் சாமானியமாகவே இருந்தது என்று குறிப்பிட்டுவிட்டு ஸெட்டில்மெண்ட் வேலை பூர்த்தியாகாத ஜில்லாக்களின் மேலான நிலைமையை உத்தேசித்து, வரம்புமீறி, அமிதமாக தீர்வையை உயர்த்துவது கூடாது எனவும் அப்படி செய்தால் நாட்டின் க்ஷேம அபிவிருத்தி தடைபடும் எனவும் ஆசிரியர் கூறியிருக்கிறார்.

அவ்வப்போது தீர்வையை பரிசீலித்து திருத்துவதை விட்டொழித்து நிரந்தரமாக ஏற்பாடு செய்யலாமென தீர்மானிக்கப் பட்டது. ஆனால் இடையே விளைபொருள்கள் விலையேறியதாலும் அதே சமயத்தில் இங்கிலாந்திலும், குத்தகை உயர்வில் ஒரு பகுதி சர்க்காருக்கு சேரவேண்டும் என்று—இந்தியா பற்றியவரை இந்தக் கூற்றை ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் மறுத்திருக்கிறார்—கூச்சல் கிளம்பியதாலும் இந்தியா மந்திரி நிரந்தர ஏற்பாட்டை எதிர்த்து எழுதி

விட்டார். ஆனுல் பின்னர் 1876—78-ம் வருஷ பஞ்சத்தில் மக்கள் பட்ட அவதி சர்க்கார் கண்களைத் திறந்தது. சர்க்கார் ஒருமிதமானப் பாதையைக் கடைபிடித்தனர்.

நிரந்தர தீர்வை விதிப்பு யோசனையை இந்தியா சர்க்கார் கைவிட்டது. அவ்வப்போது தீர்வையைத் திருத்துவதன் தீமைகளும் ஒப்புக்கொள்ளப் பட்டன. நிலச்சுவான் செய்த அபிவிருத்திகளை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை என்றும் தீர்வையை உயர்த்துவதென்ருல் விலைவாசிகள் கணிசமாக ஏறியிருக்க வேண்டும், தீர்வையை திருத்தும்போது, விலைவாசி தூக்கலால் கிடைக்கும் லாபத்தில் விவசாயிகளின் மேம்பாடு, சாகுபடி செலவுக்காக, 15 சதவிகிதமாவது குறைக்கப்பட வேண்டும், விலைவாசி இறங்கி புதிய தீர்வை ரொம்ப ஜாஸ்தியாயிருந்தால் வரி வசூலை வஜா செய்யவோ சஸ்பெண்டு செய்யவோ வேண்டும், ஒரு தடவை தீர்வையை திருத்திஞல் 20 வருடங்களுக்கு பின்னரே மறுபடி திருத்தலாமென்றும் மத்திய சர்க்கார் திட்டம் கூறியது. இந்த ஏற்பாடு தாராளமானது என்றும் இதை பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் கூடுமானுல் சட்டமும் இயற்றலாமெனவும் தீர்வையை திருத்துமுன் தற்போதைய தீர்வை விதிக்கப்பட்டதற்கு முன் 20 ஆண்டுகளின் சராசரி விலையையும் தீர்வை திருத்தப்படும் வருஷத்துக்கு முந்திய 20 ஆண்டுகள் சராசரி விலையையும் ஒப்பிட்டு புது தீர்வையை நிர்ணயிக்க வேண்டும் என்றும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் யோசனை கூறியிருக்கிருர். மேலும் விவசாயியின் லாபத்திலிருந்து இந்திய சர்க்கார் கூறியதுபோல 15 சத விகிதத்தைத் தள்ளிவிட வேண்டும் என்றும் மத்திய திட்டத்தை குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கையில் சென்னை சர்க்கார் சொன்னதுபோல தீர்வை திருத்தப்படுவதற்கு உயர் வரம்பிட வேண்டுமென்றும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தெரிவித்திருக்கிருர்.

ஜமீன்தாரி பிரதேசங்களில் ரயத்துகளின் கேவல நிலைமைபற்றி பிரஸ்தாபிக்கையில் ரயத்துகளை பாதுகாக்க 1802-ம் வருஷம் 1822-ம் வருஷத்தில் ஜமீன்தார்களைத் தண்டிக்குமளவுக்கு சட்டமியற்றியும் ஏழை ரயத்துகள்

பணக்கார ஜமீன்தார்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாதிருந்ததையும் ரயத்துகளைக் காக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்த கர்ணம்கள் ஜமீன்தார்களின் கையாட்களாயிருந்ததையும் எடுத்துரைத்திருக்கிறார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். நிலத்துக்கு ஜமீன்தார்களே சொந்தப்பட்டவர்கள் என்ற தவறான கருத்தையும் இவர் நிராகரித்திருக்கிறார். முன் இரு சட்டப் பாதுகாப்பு பலன் பயக்காததால் 1865-ல் புது சட்டம் விதிக்கப்பட்டது. இந்த சட்டம் நிலைமையை இன்னும் குழப்பியதையும் கோர்ட்டாரின் மாறுபட்ட தீர்ப்புகள் விளைத்த உபத்திரவத்தையும் இவர் தமது புத்தகத்தில் விளக்கியிருக்கிறார். இறுதியில் ரயத்துகளின் நிலைமை படுமோசமடைந்து விட்டது. இதை விவரித்துவிட்டு ரயத்துகள் நிலைமை மேலும் க்ஷீணிக்காதிருக்க கூறிய யோசனைகளில் சட்டத்துக்கு திருத்தம் அவசியமென்றும் பண மூட்டைகளான ஜமீன்தார்களுக் கெதிராக கோர்ட்டுகளில் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள ரயத்துகள் அசக்தர்களாயிருப்பது நிரூபணமாகியிருக்கிற தென்றும் ரயத்துகளின் உரிமைகளை சட்ட மூலம் நிர்ணயிப்பதே வழி என்றும் தெரிவித்திருக்கிறார்.

சட்டத்திற்கு பின்வருமாறு கோடிட்டும் இவர் காண்பித்திருக்கிறார்:—மேல்வாரம் சர்க்கார் அல்லது அதன் ஏஜண்டு ஜமீன்தாருடையது. குடிவாரம் ரயத்துக்குடையது. சொந்தப் பண்ணையில் ஜமீன்தார் உரிமை ஏகபோகமானது. அயன் நிலத்தில் ஜமீன்தாருக்கு மேல்வாரம் மட்டுமே உரியது. தரிசு நிலத்தை எடுத்துக்கொள்ள விரும்பும் ஜமீன்தார் கோர்ட்டை அணுகவேண்டும். கோர்ட்டாரும் ரயத்துகளின் ஆக்ஷேபத்தை தெரிந்து கொள்ளவேண்டும். ரயத்துகள் உபயோகத்துக்கு தரிசு நிலங்களில் தேவையான விஸ்தீர்ணத்தை கோர்ட்டார் வரையறுக்கவேண்டும். மாமூல் பயிருக்குரிய குத்தகையை ரயத்து சரிவர செலுத்தும்வரை அவர் எப்படிப்பட்ட விவசாய முறையை அனுஷ்டிக்கவும் எந்தப் பயிரை எழுப்பவும் உரிமை அளிக்கப்படவேண்டும். ரயத்துக்கு பயிர் மூலம் கிடைத்துவந்த கூடுதலில் அநேகமாக பூராவையும் ஜமீன்தார்கள் கபளீகரம் செய்துவிட்டிருப்பினும் இப்போது ஜமீன்தார்களின் பங்கை திடுமெனக் குறைத்தால்

கஷ்டமுண்டாகும். ஆகவே தற்போதைய குத்தகையை நீடிக்கலாம். ஆனால் வருங்காலத்தில் ரயத்துக்கு கிடைக்கக் கூடிய லாபம் அவருக்கே சேரும்படிச் செய்யவேண்டும். ரயத்து சம்மதமளித்தாலும் குத்தகை ஒரு தடவையில் பன்னிரண்டரை சத விகிதத்துக்கு அதிகமாக்கப்படக் கூடாது. ஒரு தடவை குத்தகை அதிகரிக்கப்பட்டால் 15 வருஷங்களுக்கு மேலும் குத்தகையை உயர்த்தக் கூடாது. ரயத்து ஜமீன்தாருக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு நிலத்தை வேறொருவருக்குமாற்ற உரிமை அளிக்க வேண்டும். இவ்வாறு ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஜமீன்தாரி ரயத்துகள் நலன்குறித்து யோசனை தெரிவித்திருக்கிறார்.

விவசாயிகள் கடன் பளு பிரச்னையை ஆராய்கையில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் கூறியதாவது:—இந்தக் கடன் சுமை அதிகரித்திருப்பதற்கு சொத்து மதிப்பு உயர்ந்திருப்பதும் கடன் எழுப்ப வசதிகள் இருப்பதும் நாணய புழக்கமும் முக்கிய காரணங்கள். விவசாயிகளின் கடன் பாரத்தை குறைக்க கிஸ்தி வசூல் தவணைகளை ரயத்துக்குச் சௌகரியமாக நிர்ணயிக்கலாம். கிஸ்தியைக் கட்ட ரயத்துகள் மாசூலை அவசரப்பட்டு விற்பதைத் தவிர்க்க வாகும் இது. ரயத்து கடன்வாங்குவதைத் தவிர்க்க பழைய வழக்கத்தை ஒழித்து கிஸ்தி வசூலை சென்னை சர்க்கார் தள்ளிப்போட்டது மிக சௌகரியமாயிருந்தது. இந்திய சர்க்கார் சில காரணங்களுக்காக இது குறித்து ஆட்சேபம் தெரிவித்திருப்பினும் அதை வளைக்க இந்த திட்டத்தைப் படிப்படியாக அமுலுக்கு கொணரமுடியும். ரயத்துகளின் நலனை உத்தேசித்து முழுநிலப் பரப்புமீதும் வரிவிதிக்காமல் சாகுபடியாகும் விஸ்தீர்ணத்துக்குமட்டும் தீர்வை விதிக்கலாம். ஆனால் எல்லாவற்றையும்விட சிறந்தது விவசாயிகள் கடன்வசதி பாங்கிகள் திட்டமே.

இந்த பாங்க் திட்டத்தை விஸ்தரித்து ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதியிருப்பதாவது:—ஸ்விஸ் பாங்கிகள் மாதிரியில் இவை இருக்கலாம். பாங்கிகள் நிர்வாகத்தை பரிசீலிக்கும் டைரக்டர்கள் குழுவில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகபற்றில்லாதவரும் இருக்கவேண்டும். தேவையான மூலதனத்தில் பாதிக்கு சர்க்கார் உத்

திரவாதமளிக்கவேண்டும். ரூ. 50 பெறுமான பங்குகளாக விற்கலாம். தனி நபர் முதலீட்டுக்கு சர்க்கார் உத்திரவாதம் கூறவேண்டும். ஆரம்பத்திலேயே லகு வட்டி பேரில் கடன்கொடுக்கக்கூடாது முதலில் முக்கால் வட்டியில் ஆரம்பித்து போகப்போக அரைவட்டிக்கு குறைக்கலாம். தொடக்கத்திலிருந்தே லகு வட்டி பேரில் கடன் கொடுத்தால் அநாவசியமாக கடன்வாங்க எண்ணம்தோன்றும். பங்குதாரர்களுக்கு அரைவட்டி கொடுக்கலாம். எஞ்சிய பணத்தை "காரண்டி" நிதியாக்கலாம். சர்க்கார் முதலீட்டுக்குரிய 4 சத விகித வட்டிக்குமேல் கிடைப்பதும் "காரண்டி" நிதியாக்கப்படலாம். தாசில்தாரைத் தலைவராகவும் 20 அல்லது 30 பேரை (சர்க்கார் தரப்பு நபர்கள் மூன்றில் ஒரு பங்கு)க் கொண்டதுமான நிர்வாகசபையை நிறுவலாம். இந்த சபை அரை வருஷத்துக்கொருமுறை கூடி அடுத்த அரைவருட அலுவலை நிர்ணயிக்கும். அன்றாட அலுவலை கவனிக்கும் கமிட்டிக்கு (ஒரு பாதி சர்க்கார் நபர்கள்) சப் ரிஜிஸ்தரார் காரியதரிசியாக்கப்படலாம். 10 அல்லது 15 அல்லது 20 வருடங்களில் அடைக்கப்பட வேண்டியதாகக் கடன் அளிக்கப்படலாம். அடமான சொத்து மதிப்பில் மூன்றில் இரண்டு பங்கு அல்லது முக்கால் பங்கு தொகையைக் கடனுகத்தரலாம். வருடா வருடம் ஜில்லா ரிஜிஸ்தரார் கணக்குப் பரிசீலனையை கவனிக்கவேண்டும். கடன்கள் உடனுக்குடன் பைசலாவதையே பாங்கின் வெற்றி பொறுத்தது. தக்க சந்தர்ப்பங்களில் தவணை வசூலை பாங்க் ஒத்திவைக்கலாம்.

இந்த பாங்கிகள் குறித்து சர்க்கார் உத்திரவாதம் கூறுமானல் போதிய முதலீட்டுப் பணம் கிடைக்கும். சர்க்கார் விதிகள்படி சொத்தில் பணம்போட முடியாத நிலையிலுள்ள அதிகாரிகளும் மற்றும் ஏனையோரும் நிச்சயம் முதலீடு செய்வர். போகப்போக இருந்த சந்தேகம் மறைந்துவிட்டால், கிராமப்புற ஜனங்களும் முதல் போடுவர்.

மேலும் பாங்கிகளின் நன்மையை விவரிக்கையில் நாட்டு மக்களின் செல்வம் அங்கு திரளக்கூடியதையும் இந்த பணம் தொழில் அபிவிருத்தியில் சிரத்தையுள்ளோர்க்கு கொடுக்கப்படலாமென்பதையும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சுட்டிக் காட்டியிருக்கிருர். ஜமீன்தார்கள்,

ராஜாக்கள் போன்றவர்களிடையே பணம் நிறைய இருப்பதாயும் அந்தஸ்து அல்லது சோம்பேறித்தனம் காரணமாக இவர்கள் முதலீடு செய்யாதிருப்பதாயும் சர்க்கார் ஊழியரும் தனிப்பட்ட தொழில் நடத்துவோரும் முதலீட்டுக்கு வழி தெரியாமல் திணறுவதாயும் நிலத்திலிருந்து சமீபகாலமாக வருமானம் இல்லாததால் அதில் மவுசு மங்குவதாயும் ஆகவே இந்த செல்வம் பாங்கிகளில் போடப்பட்டால் தொழில் அபிவிருத்தியில் நாட்டமுள்ளோருக்கு பயன்படும் என்றும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் கூறியிருக்கிறார்.

சர்க்கார் உத்தியோகத்திலிருந்தும் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தவரை ஸ்ரீநிவாஸராகவையங்கார் கண்டித்திருப்பதை இப்போது காணலாம். ராணுவ செலவு, பென்ஷன், ரஜா காலபடி முதலியவற்றிற்காக இங்கிலாந்துக்குப் பணம் நிறைய அனுப்பப்படுவதை சுட்டிக் காட்டி இதைக் குறைப்பது அவசியமென்றிருக்கிறார் இவர். பிரிட்டிஷ் தொடர்பில் வெளி வர்த்தகத்தால் நாட்டில் நூற்பு, நெசவு முதலிய பழங்கால தொழில்கள் நாசமுற்றுவிட்டதையும் காடுகளை அழித்ததால் கட்டை கரி கிடைக்காமல் இரும்பு தொழில் க்ஷீணித்துவிட்டதையும் இவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்திய ஜவுளி ஆலைகளின் திறமையையும் பலத்த போட்டியையும் கண்டு மாஞ்செஸ்டர் முதலாளிகள் தங்கள் நல உரிமைகள் பாதுகாப்புக்காக இந்திய சர்க்காரிடம் ஓலமிட தொடங்கியதை குறிப்பிட்டு இந்திய சர்க்கார் அவர்களுக் கிணங்க சுதேசி தொழில் வளர்ச்சிக்கு யாதொரு குந்தகமும் விளைவிக்கக் கூடாது என்று திவான்பகதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதியிருக்கிறார். மேநாட்டவரின் முன்னேற்றத்தால் கப்பல் வாணிபம் பாதிக்கப்பட்டிருப்பதை பிரஸ்தாபித்து நம் நாட்ட்வர் அபிவிருத்தி காணவேண்டியதை கோடிட்டு காண்பித்திருக்கிறார்.

உப்பு வரி ஏழைகளுக்கு மிகவும் கொடுமை விளைவிக்கிறது என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. உப்பு வரியை ஆதரித்துப் பேசுகையில் ஏழைகளும் சர்க்காருக்கு உரிய காணிக்கை செலுத்தவேண்டும் என்று 1869-ல் இந்தியா மந்திரி பேசியிருக்கிறார். ஏழைகளும் சர்க்கார் வரு

மானத்தில் ஒரு பங்கு கொடுக்கவேண்டுமென்பதை ஒப்புக் கொண்டாலும் உப்பு வரி மகாகொடுமையானவற்றில் ஒன்று. ஏழைகள் தங்கள் உணவில் பணக்காரரைவிட பன்மடங்கு அதிகமாக உபயோகிக்கும் பொருள் உப்பு. வட இந்தியாவை காட்டிலும் இங்கு தொழிலாளி சுமார் இரு மடங்கு உப்பு உட்கொள்கிறார். வட இந்தியர் பெருமளவு கோதுமையையே உபயோகிக்கின்றனர். இந்தியா பூராவுக்கும் ஒரே சீரான வரி விதிப்பு எவ்வளவு அநியாயமானது என்பது இதிலிருந்து தெளிவாகும். சிலா கிக்கத்-தக்க நிரபராத செயலாக ஏழைகள் உப்பு காய்ச்சுவதை தடுக்க ஏராள பண செலவுடன் பாதுகாப்பு ஸ்தாபனம் நிறுவியிருப்பது உப்புவரிக் கின்னும் அநியாயமானதாகும். உப்பு வரி காரணமாக கண்ணுடித் தொழிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஏழைகளின் அறியாமையாலேயே குடிப்பழக்கம் அவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. இந்த இனத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை இந்த அறியாமையை அகற்றுவதற்காக செலவிடவேண்டும். முக்கால் பங்கு வருவாயை மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்வது முறையல்ல.

ஐரோப்பியருடன் ஒப்பிட்டால் இந்தியரில் பெரும்பாலோர் பரம ஏழைகள் என்றே சொல்லவேண்டும். கடந்த 40 ஆண்டுகளில் மக்கள் முன்னேற்றமடைந்திருப்பினும் மிக தாழ்ந்த வகுப்பார் இன்னமும் கைக்கும் வாய்க்கும் போதாத நிலைமையிலேயே இருக்கின்றனர். மொத்தத்தில் நாட்டவரின் முன்னேற்றம் அல்பசொற்பமானது. அதிபிரயாசையுடன் சர்க்கார் முற்படுவது அவர்கள் கடமையாகும்.

நில தீர்வையை செலுத்துவதற்கு கையில் பணமின்றி ஏழை ரயத்து கடன்வாங்குவதை தவிர்க்க சென்னை சர்க்கார் கிஸ்தி வசூலை தள்ளிப்போட்டதற்கு இந்திய சர்க்கார் சில காரணங்கள் கூறி ஆக்ஷேபித்ததை குறிப்பிட்டு இந்த நல்ல திட்ட அமுலை எந்த ஆக்ஷேப நடவடிக்கையும் தடுக்கலாகாதென்றும் இந்தியா சர்க்காரின் ஆக்ஷேபத்தை சமாளிக்க திட்டத்தை சென்னை சர்க்கார் படிப்படியாக அமுல் நடத்த வேண்டுமென்றும்

ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதி யிருக்கிறார். கடன் பட்டு அவதியுறும் விவசாயிகளுக்கு சௌகரியம் பண்ண வேண்டியதை அறிவுறுத்தி எழுதுகையில் இன்னொரு இடத்திலும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சர்க்காரைக் கண்டித்திருக்கிறார். "குறைந்த வட்டியில் சர்க்கார் கடனளித்து உதவியிருப்பது வாஸ்தவமே. கடந்த ஈராண்டுகளில் பயிர்கள் வாடியபோது ரயத்துகள் சர்க்காரின் உதவியைப் பயன் படுத்திக் கொண்டனர். ஆனால் சாதாரண காலங்களில் ரயத்து ஸாஹுக்கார்களை நம்பவேண்டி யிருக்கிறது. ஆனால் சர்க்காரிட மிருந்து பெற்ற கடனை நிலத்தை விற்று ரயத்து தீர்க்கும் போது முன்னதாக வாங்கப்பட்ட கடன்களை எல்லாம் மீறி சர்க்கார் தன் கடனுக்கே முன் ப்ராத்தியதைக் கோருவது ஸாஹுகாரரிட மிருந்து ரயத்துக்கு கடன் கிடைக்கக் கூடியதைப் பாதிக்கும். சர்க்காரிடமிருந்து கடன் வாங்க ரயத்து தயங்குவதற்கு சர்க்கார் போதிய ஜாமீன் கோருவதும் தவணைகள் தவறாமல் கடன் அடைக்கப்படவேண்டு மென விதிப்பதும் மற்றொரு காரணமாகும்.

இவை தவிர ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது புத்தகத்தில் பல ருசிகரமான விஷயங்களையும் ரசிக்கும் விதத்தில் நமக்கு எழுதி வைத்திருக்கிறார். இவற்றில் பல சமூக சீர் திருத்தம் சம்பந்தப்பட்டவை யாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"பஞ்சம் போன்ற இயற்கை உத்பாதங்களுக்கு பின் நாட்டின் ஜனத்தொகை அதிவேமாக அதிகரிக்கிறது". "தற்போதைய விகிதப்படி இன்னும் 70 ஆண்டுகளில் ஜனத் தொகை இரட்டிப்பாகிவிடும். இளமைப் பருவ விவாகம் பரவி யிருக்கும் நம் நாட்டில் அந்த வழக்கத்தை லகுவில் மாற்ற முடியாதிருக்கையில் ஜனத்தொகை அமித விருத்தியால் எவ்வளவு சங்கடம் உண்டாகலாம் என்பதை உணரலாம்". "புருஷன், மனைவி இடையேயான வயது வித்தியாசத்துக்கும் பிறக்கும் குழந்தையின் பாலுக்கும் சம்பந்த மிருப்பதாக சொல்லப்படுகிறது". "வாழ்க்கைத் தரம் குறையக்கூடாது என்பதற்காக இங்கிலாந்தில் நடுத்தர வகுப்பினர் இளமையில் விவாகம் செய்து கொள்ளாமல் தள்ளிப்போடுகின்றனர். இந்தியாவிலோ

பால்யபருவ விவாகம் நிர்ப்பந்திக்கப்படுகிறது''. "கட்டாய இளம் பிராய விவாகத்தின் தீமைகள் கண்டிப்பான விதவா முறை அனுஷ்டானத்தினல் ஓரளவுக்கு சமனப் படுத்தப்படுகின்றன. ஆனல் இந்தப் பிரச்னையை இந்த ரீதியில் நோக்கி விதவா புனர் விவாக சீர்திருத்தத்துக்கு தடை போடலாகாது.''

இந்தியாவில் படித்தவரிடையே குடிப் பழக்கம் கூடா தென்ற கட்டுப்பாடு தளர்கிறது. குடி இப்போது வெறுக் கத்தக்கதாக கருதப்படவில்லை. குடிப்பவர் சொற்பமே. அதிகரிப்பதாகவே தென்படவில்லை.''

"வகுப்பு ஏற்றத்தாழ்வுகளை ஒப்புக்கொள்ளாமல் சகலமானவருக்கும் சமத்துவம் காட்டப்பட்டிருப்பது கீழ்ப்பட்டிருந்தவர்களை உயர்த்தியிருக்கிறது. பறையர்களில் பலர் ஐரோப்பியர் ஜாகைகளில் சமையல்காரர்களாகவும் நர்ஸ்கள், குதிரைக்காப்பாளர்கள், தோட்டக்காரர்களாகவும் புகுந்திருக்கின்றனர். இன்னும் பலர் ரயில்வே, எஸ்டேட் தோட்டங்கள், தொழிற்சாலைகளில் ஊழிய மேற்றிருக் கின்றனர். இவர்களுக்கு கல்வியளித்தும் தேவையான சமயங்களில் உதவிபுரிந்தும் மிஷனரிகள் சேவை புரிந்து வருகின்றனர்......ஹிந்து மதத்தில் இவர்கள் சேருவது துர்லபமாகத் தோன்றுவதால் கிறிஸ்தவர் அல்லது மகம் மதியர்களாக ஆவதே அவர்கள் மேம்படவழி......கீழ்த் தரப்பட்டவர்களாகக் கருதப்படும் இவர்கள் கிறிஸ்த வர்களாகவோ மகம்மதியர்களாகவோ மதம் மாறிவிட் டதும் உயர் ஜாதியினராலேயே உபசரிக்கப்படுகின்றனர். இவர்களும் முன்புதங்களைத் தூஷித்தவர்களை ஏளனம் செய் கின்றனர்...இவர்களுக்கு சர்க்கார் கல்வி வசதிகளை அளிக்க வேண்டும்...... பறையர்கள் புத்திசாலிகள் தான். அவர் களை மேம்படுத்துவது சாத்தியமே; முடியாத காரியம் என்று நினைக்கவேண்டியதில்லை......இந்திய ராணுவத்தில் சிப்பாய்களாக இருக்கும் பறையர்கள் தென்னிந்தியர் களுக்குள் மிகச்சிறந்த ஆட்களாக மெச்சப்படுகின்றனர்.''

"தற்போதய ஆட்சியினல் பாதிக்கப்பட்டவர்களில் சமஸ்தான அதிபர்களால் போஷிக்கப்பட்டு வந்தவர்கள் ஒரு பகுதியினர். உதாரணமாக......தஞ்சை ராஜா

பிரிட்டிஷார் வசம் ஆட்சியையிழந்த போதிலும் அவருக்கு வருஷா வருஷம் ரூ. மூன்றரை லக்ஷம் வீதம் சுமார் ஐம்ப தாண்டுகளுக்கு அலவன்ஸ் கொடுக்கப்பட்டுவந்தது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதனுல் பிழைத்து வந்தன. ஆனுல் இப்போது அரசு ரத்தானதும் பிரயோ சனகரமான வேலை ஏதும் செய்யாமல் இத்தனை நாள் சுகமாகச் சாப்பிட்டு வந்தவர்கள் நிராதரவாயினர்."

"தற்போதய ஜமீன்தார்களின் பூர்வோத்திரம் பலவித மானது. பலருக்கு முன் நாட்களில் ராணுவசேவைக்காக ஜமீன் கொடுக்கப்பட்டது. வேறு பலர் ஹிந்து, மகம்மதிய அரசர் காலங்களில் வரிவசூல் அதிகாரிகளாயிருந்து நாளடைவில் செல்வாக்கும் அதிகாரமும் வளர்த்துக்கொண்டு ஜமீன் தாரர்களாக ஆனவர்கள். கிராம காவல்காரர்கள், தலையாரிகள் போன்றவர்கள் சுற்றுப்பட்டவர்களைப் படையாகத்திரட்டிக்கொண்டு கொள்ளையடித்தும் அர சாங்கத்துக்கு சில சமயங்களில் உதவிபுரிந்தும் ஜமீன் தார்களானவர்கள். நியாயமாக இவர்களுக்கு மேல் வார உரிமை மட்டுமே உண்டு. ஆனுல் ஸ்திரப்பட்ட ஆட்சி இராததால், இவர்கள் தாங்கமுடியாத கூடுதல் வரிகளை விதித்த துண்டு."

"சமூக, தொழில் துறைகளில் ஜமீன்தார்கள் உரிய பங்கெடுக்கவில்லை. பழைய சூழ்நிலையில், மற்றவர்களுக்கும் சரி தங்களுக்காயினும் சரி, உபயோககரமான வழிகள் பற்றி சிந்தனையைச் செலுத்தாமல் வளர்ந்து விட்டவர்கள் இவர்கள்...ஆனுல் சமீபகாலமாக மாறுதல் தென்படுகிறது. இவர்களில் பலர் வித்தியாப்யாசம் பயிலுகின்றனர்...... தங்களுடைய கடமையையும் பொறுப்பையும் நிறை வேற்று விட்டால் அந்தஸ்து போய், மறைய வேண்டித் தான் வரும் என்று இவர்கள் உணர்ந்து வருகின்றனர்."

"இந்த மாகாணத்தில் மார்வாடிகளுடன் ஒப்பிடத் தக்கவர்கள் நாட்டுக்கோட்டை செட்டியார்களாவர்... ஏழைகளுக்கு மிகக் கடினமான நிபந்தனைகள் பேரில் கடன் கொடுத்து வருபவர்கள் இவர்கள்."

"பணம் கையில் சும்மா இருந்தால், அதை நகையாக மாற்ற வீட்டுப் பெண்டிர்கள்நிர்ப்பந்திக்கின்றனர். இந்தப் பணம் பாங்கில் கட்டப்பட்டு வட்டி பெறுமானுல் நகை,

ஆபரண ஆசை அவ்வளவாக ஏற்படாது......ஹிந்து சட்டப்படி பெண்களுக்குத் தந்தை சொத்தில் பங்கு கிடையாதாதலால் அவர்களுக்கு சொத்தாக இந்த ஆபரணங்கள் செய்யப்படுகின்றன."

"கல்வியின் பலனுக நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையா யிருக்கக் கூடிய உணர்ச்சிகள் மறைந்து வருகின்றன. சமூகத்தில் மாறுதல்களுக்கு அடிகோலப்படுகிறது. பிரேதத்தை வெட்டிப்பரிசோதித்து உடற்கூறுகளை ஆராய பிராம்மணர்களும் முன் வருகின்றனர் வைத்தியக் கல்லூரிகளில். கடல்கடந்து பர்மாவுக்கும் செல்கின்றனர் பிராம்மணர்கள் இப்போது. ......ஜாதி வித்தியாசங்கள் மறைய வேண்டும். எல்லோருக்கும் ஒரே சீரான சட்டம் வகுக்கப்படவேண்டும்."

திவான் பஹதுர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது புத்தகத்தில் பிரிட்டிஷ் ஆட்சியில் நன்மையும் முற்போக்கும் கண்டிருக்கிருேம் என்று கூறியது பெரிய தவருகிவிட்டது; பெரும் குற்றமாகி விட்டது எனவும் சொல்லலாம். புத்தகத்தைக் கையால் தொடாதவர்களும் கடிய வாரம்பித்தனர். பூரா படிக்காதவர்கள் ஆங்காங்கு சில பகுதிகளை, ஆசிரியரின் விளக்கத்தைக் கவனியாமல், சம்பந்தா சம்பந்தமின்றி தனித்துப் பிரித்தெடுத்து கடுஞ்சொற்களை அள்ளி வீசினர் வாய்கூசாமல். நிஷ்பக்ஷபாதமான முடிவு தெரிவிக்க வேண்டுமென்று பொறுப்பு உணர்ச்சியுடன் சர்க்கார் தஸ்தவேஜிகளை மட்டுமே நம்பாமல் சுயமாக விசாரித்தும் சகலத்தையும் தீர ஆராய்ந்தும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தம் முடிவைத் தெரிவித்திருந்தார். தம் கருத்துக்குத் தக்க ஆதாரங்களும் காட்டியிருந்தார். உத்தியோக அலுவல்களையும் விடமுடியாமல் இந்த மாபெரும் ஆராய்ச்சியில் முனைந்திருந்தார் இவர், தம் தேகதிடக் குறைவையும் பொருட்படுத்தாமல். ஆனுல் நாற்பக்கமும் கண்டனமே சூழ்ந்து விடவில்லை இவரை. பிற்கால சீர்திருத்தங்களுக்கு, பல அரும் யோசனைகளை தெரிவித்து, அடிகோலிய இவரது நூலை ஸர் எஸ். சுப்ரமணிய ஐயர், ஸர் வி. பாஷ்யமையங்கார், பேராசிரியர் பி. ரங்கநாத முதலியார் முதலிய அறிவாளிகளும் விஷய ஞானிகளும் சிலாகித்தனர். பல சீர்திருத்தங்களுக்கு இந்தப் புத்தகம் வழி துலக்கியிருப்பதாக

மிஸ்டர் (பின்பு ஸர்) ப்ரெட்ரிக் நிக்கல்ஸன் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

பேராசிரியர் ரங்கநாத முதலியார், தமது கடிதத்தில், கண்டனங்களுக்குத் தயாராக விருக்கவேண்டும் என்று இவருக்கு எழுதியிருந்தார். அதேபோல் கூச்சல்கள் கிளம்பின. அர்த்தமற்ற, ஆதாரமற்ற, வீண் கண்டனங்கள்; பிரத்தியட்ச நிலைமையைக் காண மறுத்து கண்களை மூடிக்கொண்ட பிரகிருதிகளின் கோஷங்கள்: ஒரு சமயத்தில், கதம்பமாக, மூன்று, நான்கு பாஷைகளைக் கலந்தடித்து வசைமாரி பொழிந்த மேதாவிகளுமுண்டு!

காலஞ்சென்ற ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் பாராட்டுரைகள் இந்த கண்டனங்களின் அபத்தத் தன்மையை அம்பலமாக்கக் கூடியவை. சுமார் 18 வருஷங்களுக்குமுன் மயிலாப்பூர் ரானடே ஹாலில் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் இந்தப் புத்தகத்தின் மேன்மையை எடுத்துரைத்தார்.

"பொறுமை மிக்க ஆராய்ச்சியுடனும் நியாய மனப் பாங்குடனும் இவர் எழுதிய புத்தகமாகும் இது. இந்த குணவிசேஷம் இப்போது பெரிதாகப் பாராட்டப்படுவதில்லை......சர்க்காரின் செயல்களைக் கண்டிக்க இவர் தயங்கவில்லை; பாராட்டுக்கு உரிய காலத்தில் சர்க்காரைப் பாராட்டியுமிருக்கிறார். பிரிட்டிஷ் ஆட்சியை அவர் பாராட்டியது குற்றமாகியது. இவரது புத்தகத்தைக் கண்டிக்குமுன், அதைப் படித்துவிட்டு அந்த அளவுக்கு நியாயம் புரிந்தவர்கள் அதன் ஒவ்வோர் பக்கத்திலும் நியாயமும் நேர்மையும் தென்படக் காணலாம்......பிரிட்டிஷ் ஆட்சியினால் நமக்கு நன்மையே என்று இவர் கூறியிருக்கிறார்; இந்த முடிவைக் கண்டு புத்தகம்மீது தடைவிதிக்கப் படவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் கோஷமிடலாம்; ஆனால், என் கருத்தில், இந்த முடிவு சரியானதே......மக்களின் பொருளாதார நிலை மிகவும் மட்டம் என்று இவர் இடித்துக் காட்டியிருக்கிறார். புத்தகத்தில் ஓரிடத்தில், மாதம் நான்கு ரூபாய்களைக்

கொண்டு, கைக்கும் வாய்க்கும் போதாமல், கீழ்த்தர மானவர்கள் ஜீவனம் நடத்துவதாக இவர் கூறியிருக்கிறார்......இதைப் பிடித்துக் கொண்டனர் காங்கிரஸ் வாதிகள். அவர்களில் ஒருவரான ஸ்ரீ ஏ. ஸி. பார்த்த சாரதி நாயுடு இவரைத் தாக்கிப் பேசினார். ஸ்ரீ பார்த்த சாரதி நாயுடு புத்தகத்தைப் படிக்கவில்லை என்றே எனக்குத் திடமாகத் தோன்றுகிறது......காங்கிரஸ் பிரசங்கிகள் ஸ்ரீநிவாஸராகவையங்காரைப் பற்றி தாறு மாறாகப் பேசியிருக்கின்றனர்.........இவரது புத்தகம் பொறுமை மிக்க ஆராய்ச்சிக்கு சிலை போன்றது; பொருளாதாரப் பிரச்னைகளை ஆராயும் முறைக்கு வழி காட்டக் கூடியது."*

1951-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 4-ம் தேதி கும்பகோணம் கலாசாலையில் திவான் பஹதூரின் உருவ படத்தைத் திறந்து வைத்தபோது டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் பின்வருமாறு சொன்னார்:—

"இந்தப் புத்தகம் வெளியானதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. பொருளாதார விஷயங்களை அபாரமாக இவர் ஆராய்ந்திருப்பதைக் கவனியாமல் பிரிட்டிஷ் ஆட்சியில் நன்மை உண்டாகியிருக்கிறது என்று இவர் கூறியிருப்பதையே கண்டனக்காரர்கள் பிடித்துக் கொண்டனர்.......இந்தப் புத்தகத்தில் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் நுட்ப விஷயங்களை நன்கு ஆராய்ந்தும் சர்க்காருக்கு இடித்துரைத்தும் நாட்டின் இந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அடிகோலியிருக்கிறார். கூட்டுறவு இயக்கத்துக்கு வித்திட்டவர் இவரே. விவசாயிகள் கடன் பளுவைச் சமாளிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். கிராமப் புறங்களில் பாங்கிகள் நிறுவவேண்டுமென்று அறிவுறுத்தியவர் இவரே; பின்னர் நிக்கல்ஸன் இதைச் சாதித்தார்......எல்லாவற்றையும்விட முக்கியமானதாக, இங்கிலாந்துக்கு நம் பணம் எடுத்துச் செல்லப் படுவதை சுட்டிக் காட்டினார். தொழில் துறையில் சர்க்கார் பிரவேசிப்பது முறை பிசகு என்று கருதப்

*ஹிந்து 12. 12. 1938

பட்ட காலத்தில், தொழிலபிவிருத்திக் கொள்கையை வற்புறுத்தியிருக்கிறார்.......நிலத்தீர்வையை நிர்ணயிப்பதில் கடைபிடிக்கப்பட்ட முறையின் தவறுகளை இவர் எடுத்துக் காட்டினார்.......மக்களின் பொருளாதார முன்னேற்றத்தில் முனைய வேண்டுமென்று முன் நின்று அறிவுறுத்தி சர்க்கார் மனதை மாற்றினார்...... அவருடைய தைரியம் நம் சிந்தனைக்கு எட்டாதது. சர்க்கார் உத்தியோகத்திலிருந்தும் அதிகார வர்க்கத்தவரை இவர் எதிர்த்தது துணிச்சலையே குறிக்கும். சமூக சீர்திருத்தங்களையும் வற்புறுத்தி இதிலும் வழி வகுத்தவரானார்.''*

1949-ம் வருஷம் ஜூலை மாதம் 19-ம் தேதி ஸ்ரீநிவாஸ ராகவையங்காரின் நூறுவது பிறந்த நாள் கொண்டாடப் பட்டது. மறுநாள் "ஹிந்து" பத்திரிகை இவரைப்பற்றி ஒரு தலையங்கம் எழுதியிருந்தது. அதில் இவரது புத்தகத்தைப்பற்றி குறிப்பிடப் பட்டதாவது:—

"இந்த புத்தகத்தில், தெளிவாக விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட்டிருப்பதையும், இப்போது பொருளாதார நிபுணர்களின் சிந்தனையைக் கிளறும் பிரச்னைகள் தீர்க்க திருஷ்டியுடன் ஆராயப்பட்டிருப்பதையும், அதைப் படித்தவர்கள் காணத் தவறியிருக்க முடியாது"

ஸ்ரீநிவாஸராகவையங்காருடன் அந்நியோன்யமாகப் பழகியவரும் பரோடாவில் இவர் திவான் பதவி வகிக்கையில் அந்தரங்க காரியதரிசியாயிருந்தவருமான ஸ்ரீ கே. சுப்பராவ் இந்தப் புத்தகம் கண்டிக்கப்பட்டது திவான் பஹதூர் அவர்களை எவ்வளவு புண்படுத்தியது என்று தமது "ரிவைவ்ட் மெமரீஸ்" புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

"சென்னையில் காங்கிரஸ் கூடியபோது ஒருவர் இந்தப் புத்தகத்தைக் கையில் தூக்கிக் காட்டி எவ்வளவு இழிவாகப் பேசமுடியுமோ அவ்வளவு இழிவாகப் பேசினார். ஸ்ரீநிவாஸராகவையங்காரும் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்ததாக எனக்கு ஞாபகம்......... பின்னொருநாள் நான் அவரைக் காணச் சென்றிருந்

*ஹிந்து: 7. 4. 1951

தேன். அப்போது அவர் என்னை சுமார் நான்கு மணி நேரத்துக்கு உட்காரவைத்து தன்னைப்பற்றி எவ்வளவு தாறுமாருகப் பேசப்படுகிறது என்பதை ஆதாரங்களுடன் எடுத்துச் சொன்னர். தாம் சர்க்காரின் செயல்களைக் கண்டித்திருப்பதைச் சுட்டிக் காட்டி, புத்தகத்தின் நல்ல அம்சங்களைப் புறக்கணித்து கண்டனக்காரர்கள் பேசுவது குறித்து அவர் வருந்தினர்."

பத்திரப்பதிவு இலாகா அதிபர் ஸ்தானம் வகித்து வருகையில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் உத்தியோக அலுவல்களுடன் தமது அரும் புத்தகத்தை வெளியிடும் வேலையிலும் முனையவேண்டியதாயிற்று. 1893-ல் இந்தப் புத்தகம் பூரண வடிவில் பிரசுரமாகியது. இதற்குப்பின் இவர் சுமார் மூவாண்டுகளுக்கே இந்தப் பதவியை வகித்தார். 1896-ல் பரோடா சமஸ்தான திவான் பதவி இவரை நாடி வந்தது. 1901-ம் வருஷக் கடைசியில் பரோடாவிலிருந்து இறுதியாக்த் திரும்பிய இவர், மீண்டும் பழைய பதவியையேற்று ஒருவருட காலம்கூட ஆகியிருக்காது: அதற்குள் இந்திய போலீஸ் கமிஷன் அங்கத்தினராக நியமிக்கப்பட்டு அந்தக் காரியத்தில் ஈடுபடலானார்.

1888-ல் திவான்பஹதூர் பட்டம் பெற்ற இவருக்கு 1893-ல், இவர் அற்புத புத்தகத்தை எழுதியதற்குப் பாராட்டும் வகையில், ஸி. ஐ. இ. பட்டம் வழங்கப்பட்டது. இவ்வருஷம் இந்தப் பட்டத்தைப் பெற்ற சென்னை பிரமுகர் இவர் ஒருவர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னைப் பத்திரிகையொன்று இதைக் குறித்துப் பின் வருமாறு எழுதியது:—

"சென்னை மாகாணத்தின் நாற்பது வருஷத்திய முற்போக்கு" என்ற புத்தகத்தின் ஆசிரியரான திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஒருவருக்கே சென்னையில் இந்த ஸி. ஐ. இ. பட்டம் கிடைத்திருக்கிறது. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பள்ளிக்கூட ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தார். பிற்பாடு ரெவினியூ போர்டில் புகுந்து அங்கு துரிதமாக உயர்பதவிகளுக்கு அருகரானார். இறுதியில் கனம் மிஸ்டர் ஹாம்னெட்டுக்கு அடுத்தவராக ரிஜிஸ்திரார் ஜெனரலானார். சர்க்கார் உத்தியோகத்தில் திறமை மிக்க சுதேசிகளில் இவர் ஒருவர். மாகாண கலெக்டர்களில் ஒருவராக இவர் நியமிக்கப்படலாமெனவும் தெரிகிறது.

இவருக்கு வந்து குவிந்த பாராட்டுக் கடிதங்களில்

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவராயிருந்திருக்கும் சேலம் விஜயராகவாச்சாரியாரின் கடிதம் குறிப்பிடத்தக்கது. அவர் எழுதியதாவது:—

"அடிக்கடி அடுத்தடுத்து தங்களுக்கு வாய்க்கும் கௌரவத்தைக் கண்டு பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். உமது திறமையினாலும் மதி நுட்பத்தினாலும் உங்கள் குடும்பம் பெருமையும் புகழும் அடைந்து வருவது கண்டு எனக்குண்டாகும் சந்தோஷத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்."

இதே வருஷம் நவம்பரில் இவர் சட்டசபையில் நியமன அங்கத்தினரானார். ரெவினியூ விவகாரங்களிலும் நிர்வாக விஷயங்களிலும் இவருக்கிருந்த ஆழ்ந்த அறிவும் ஞானமும் அனுபவமும் சட்டசபை சர்ச்சைகளில் பேருபகாரமாயிருந்திருக்கின்றன.

1893-ம் ஆண்டிலேயே சென்னை சர்வகலாசாலை செனட்டிலும் இவர் மெம்பரானார். அடுத்த வருஷம் மே. த. கவர்னர் இவருக்கு கலெக்டர் பதவிதர முன்வந்தார். ஆனால் குதிரை சவாரி செய்வது இவருக்குத் தெரியாததால் அந்த யோசனை கைவிடப்பட்டது. இந்தப் பதவி சம்பந்தமான கடிதப்போக்குவரத்து வருமாறு:—

1—5—1894
சென்னை.

அன்பர் மெக்கார்த்திக்கு,

எனக்கு கலெக்டர் பதவியளிக்க மனமுவந்து அது குறித்து என் எண்ணத்தைக் கேட்க மே. த. கவர்னர் முன் வந்திருந்ததுபற்றி என் நன்றி. மே. த. கவர்னரின் விருப்பத்துக் கிணங்கி எந்தத் துறையிலும் சேவை புரியத் தயாராயிருக்கிறேன். கலெக்டர் பதவியளிக்கப்பட்டால் அதை நன்றியுடன் ஏற்று, திருப்தியளிக்கும் முறையில் கடமையை நிறைவேற்ற முயலுவேன்.

ஆனால், குதிரை சவாரி பண்ண பழக்கமில்லாததால், குதிரைமீது நெடுந்தூரமோ அதிவேகமாகவோ என்னால் போகமுடியாது என்பதைத் தெரிவிக்கவேண்டும். குதிரை சவாரி தெரியாதது இந்தப் பதவிக்கு ஒரு குறைபாடாகக் கருதப்படலாமோ என்ற காரணத்தைக் கொண்டே இதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் இப்போது வகிக்கும் பதவி இரண்டாம் கிரேட் கலெக்டருக்குத் தாழ்ந்ததல்லவாதலால், எனக்குப் புது பதவி அளிக்கப்படும்போது இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிக்கு,
(ஒ-ம்) எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார்.

இந்தக் கடிதத்துக்கு கவர்னரின் காரியதரிசி மெக்கார்த்தி பதிலளித்ததாவது:—

சர்க்கார் மாளிகை.
உதகமண்டலம்,
5—5 -1894.

அன்பர் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு,

உமது கடிதம் சபையுடன் கூடிய கவர்னரால் பரிசீலிக்கப்பட்டது; ஜில்லா அதிகாரிகளுக்கு குதிரை சவாரி தெரிவது மிக அவசியமென சர்க்கார் கருதுகிறது; உமக்கு இந்த அனுபவமிராதது குறையாகக் கருதப்படுகிறது என்பதைத் தெரிவிக்க கவர்னர் விரும்புகிருர். இந்நிலைமையில், ரெவினியூ இலாகாவில் சேவைபுரிய நீர் முன்வந்ததை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதற்கு மே. த. கவர்னர் வருந்துகிருர். நீர் உதகமண்டலத்துக்கு வரும்போது உமக்குப் பேட்டியளிக்க மே. த. கவர்னர் தயாராயிருக்கிருர்.

இப்படிக்கு,
(ஒ-ம்) எச். மெக்கார்த்தி.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் பதவி காலத்தில் பத்திரப்பதிவு இலாகா மகோன்னத முன்னேற்றம் கண்டது. அதிகாரிகள், ஆபீஸ்களின் எண்ணிக்கை கணிசமாக விருத்தியடைந்தது. இந்த இலாகா மூலம் சர்க்காருக்கு உபரி வருவாயும் கிடைத்துவந்தது. கண்டிப்பாக இருக்க வேண்டிய காலத்தில் கண்டிப்பாக இருந்து தண்டனைக்குரியவர்களைத் தயங்காமல் தண்டித்தபோதிலும் இவர் தம் இலாகா சிப்பந்திகளின் நிலைமையையும் அந்தஸ்தையும் உயர்த்திஞர். இவர் காலத்தில் மோசடிகளைத் தவிர்க்கவும் மற்றும் பலவிதங்களிலும் சீர்திருத்தங்கள் சாதிக்கப்பட்டன. சில சப் ரிஜிஸ்திரார்கள் விவகாரங்களில் இவர் மட்

டும் ஆதியோடந்தமாக தீர விசாரணை நடத்தியிராதிருந்தால் அவர்கள் கடும் தண்டனைக்குள்ளாகி யிருப்பார்கள்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் இலாகா அதிபர் பதவியேற்றதும் அங்கு காணப்பட்ட ஒழுங்கீனங்கள், ஊழல்களைக் களைவதில் தீவிரமாக இறங்கி வெற்றிகண்டார். குமாஸ்தா மீது பியூன் புகார்; சப் ரிஜிஸ்திரார்மீது குமாஸ்தா புகார்; ஜில்லா ரிஜிஸ்திரார்மீது சப் ரிஜிஸ்திரார் புகார்! இப்படியாக அலங்கோலமாயிருந்தது இலாகாவின் நிலைமை. ஒழுங்கு, மரியாதை காணக்கிடைக்காதிருந்த இடத்தில் அவற்றுக்கு உரிய ஸ்தானம் கிடைக்கச் செய்தார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். இன்னார் பொறுப்பு இன்னதென்று வரையறுக்கப்படாமல் எதற்கும் சப் ரிஜிஸ்திராரே ஜவாப்தாரி என்றிருந்த நிலைமை நீங்கியது. ஒவ்வொருவருக்கும் என்ன வேலை என்று விதிக்கப் பட்டது. கடமையில் தவறியவர்கள் தண்டனைக்குள்ளாக நேரும் என்ற எச்சரிக்கையும் பிறந்தது. இலாகாவுக்குப் புது அதிபர் மெருகு ஏற்றினார்; குழப்பமும் ஒழுங்கீனமும் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்தன.

ஊழலுக்குப் பெயர் போனவர்கள் விஷயத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் நடந்துகொண்டவிதம் அலாதியானது; வேண்டிய பலனையும் அளித்தது. அப்பேர்ப்பட்டவர்கள் தம்மைக் காணவந்தால் அவர்களை இவர் தம் எதிரே ஆசனத்தில் உட்காரச்சொல்லமாட்டாராம். அவருடன் அதிகமாகப் பேசவும் மாட்டாராம். சப் ரிஜிஸ்திரார்கள் பலருக்கு இவர் அபராதம் விதித்ததுண்டு; மற்றும் பலவிதங்களில் அவர்களை இவர் தண்டித்ததுமுண்டு. "ஏது! கெடுபிடி தர்பாராக இருக்கும் போலிருக்கே!" என்று சிலர் சொன்னதுமுண்டாம்.

திருச்சி ஜில்லாவில் பெரம்பலூர் சப் ரிஜிஸ்திரார் ஒருவர் பெரிய மோசடி காரியத்தை யத்தனித்து அதை மறைக்கப் பார்த்து தண்டனைக்குள்ளானது குறிப்பிடத் தக்கது. வெற்றுக் காகிதமொன்றில் விடுதலைப்பத்திரம் போல் ஒன்று எழுதிவிட்டு அதைப்பதிவு செய்துவிட்டாராம் அந்த சப் ரிஜிஸ்திரார். இதன்மீது ஜில்லா ரிஜிஸ்திரார் விசாரணை நடத்தியபோது பிரஸ்தாப சப் ரிஜிஸ்திரார் அந்தப் பத்திரம் போலவே இன்னொன்றை ஸ்டாம்பு காகிதத்

தில் தயாரித்து, சகஜமான மேற்குறிப்புடன், ஏதும் மோசடி செய்யாததுபோல, இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அதை அனுப்பிவிட்டார். முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைப்பதுபோல ஸ்ரீநிவாஸராகவையங்காருக்குத் தென்பட்டது இந்த விவகாரம். சொந்த முறையில் விசாரித்து பிரஸ்தாப சப் ரிஜிஸ்திரார்மீது வழக்குத்தொடருவதற்கு சிபாரிசு செய்துவிட்டார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். இந்த மோசடியில் சம்பந்தப்பட்ட சப் ரிஜிஸ்திராரும் குமாஸ்தாவும் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர்.

இவர் தம் இலாகாவுக்கும் தம் கீழ் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் முன்பு காணுத, கிடைக்காத அந்தஸ்து கிடைக்கும்படி செய்திருக்கிருர். இந்த இலாகாவும் மற்ற இலாகாக்களைப் போல முக்கியமானது என்பதை இவர் சர்க்காருக்கும் பொது மக்களுக்கும் எடுத்துக்காட்டியிருக்கிருர். நாணயம் மிக்கவர்களை, அவர்கள் எவ்வளவு கீழ்ப்பட்டவராயினும், தம் அறையில் தமக்கு எதிரில் நாற்காலியில் உட்காரச் செய்து மிகப்பரிவுடனும் அன்புடனும் பேசிப்பழகுவார். எவராவது தவறுபுரிந்துவிட்டால், கூடவே இருந்து அவருக்கு சரியான மார்க்கத்தைப் புரியும்படிச் சொல்லிக் கொடுத்துவிட்டுத்தான் நகருவார். சப் ரிஜிஸ்திரார்கள், மாஜிஸ்திரேட்கள் போன்ற இதர வேலைகளுக்கு மாறுவதற்குத் தடங்கலாயிருந்த விதிகளைப் புறக்கணித்து அவர்களுக்கு அந்தப் பதவிகள் கிடைக்கும்படி செய்திருக்கிருர் இவர். ஒரு ரிஜிஸ்திராருக்கு டிபுடி கலெக்டர் பதவியும் வாங்கிக்கொடுத்திருக்கிருர். தம் கீழ் வேலைபார்ப்பவர்களின் நிலையும் அந்தஸ்தும் உயர அவர் காட்டிய அக்கறை அளவிடற்பாலது. சப் ரிஜிஸ்திரார்களுக்கு முன்பு சாமானிய குமாஸ்தா வேலைகளையே கொடுக்க முன் வந்திருக்கும் கலெக்டர்கள் அப்புறம் சப் மாஜிஸ்திரேட்டுக்கின்னும் தாழ்வான பதவிகளைத் தந்ததில்லை என்ருல் அதற்கு இவரே காரணம். பட்டதாரிகளின் திறமையையும் அவர்களிடம் ஒழுக்கம் ஊன்றியிருக்க வேண்டியதையும் உணர்ந்தே சப் ரிஜிஸ்திரார்கள் வேலைக்கு அப்படிப்பட்டவர்களே நியமிக்கப்படவேண்டுமென்று ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஏற்பாடு செய்திருக்கிருர்.

தாம் பதவியேற்றதும் முதன் முதலாக குமாஸ்தாக்களை நியாயமான சம்பளத்தில் அமர்த்தி அவர்கள் என்றென்றும் தம்மிடம் நன்றியறிதல் கொள்ளவேண்டியவர்களாக ஆக்கிக் கொண்டார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். இந்த இலாகா சிப்பந்திகள் பாரமும் பொறுப்பும் மிகுந்த வேலை வகிப்பதற்குக்கொடுக்கப்படும் சம்பளம் போதாதென்று புது சம்பள விகிதத்திட்டமொன்றைத் தயாரித்து அதை சர்க்கார் ஏற்கச்செய்ததோடு குமாஸ்தாக்களும் இன்னும் நிறைய பேர் வேண்டும் என்று வற்புறுத்தியும் இவர் காரியத்தைச் சாதித்துக்கொண்டார். இடையே இந்தத்திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடும்யத்தனமும் நடந்தது. சென்னை சர்க்கார் இந்த திட்டத்துக்கு ஒப்புக்கொண்டனர். ஆனால் இந்தியா மந்திரியோ வெனில் சம்மதமளிக்க மறுத்து, இதர மாகாணங்களுக்கின்னும் சென்னையில் ஏற்கெனவே இந்த இலாகாவுக்காக அதிகம் செலவாவதாயும் இப்போது செலவை ஜாஸ்தியாக்கிக் கோருவதற்குக்காரணம் கேட்டும் அதைத்திருப்பியனுப்பி விட்டார். இதற்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் பதிலளித்ததை ஆங்கிலத்தில் அற்புத வியாஸ மெனலாம், தமது கோரிக்கையின் நியாயத்தை அசைக்க முடியாத புள்ளி விவரங்களோடு இவர் எடுத்துரைத்தார். சிப்பந்திகளுக்குச் சம்பளம் அதிகம் கொடுக்கப்படவேண்டியதை உணர்ச்சி மிக்க [redacted] இடித்துக்காட்டினார் இவர். மற்ற மாகாணங்களில் இதே இலாகா எவ்வளவு பின் தங்கியது என்பதையும் இவர் உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெளிவாக்கிவிட்டார்! இந்தியா மந்திரி இனியும் இதை எதிர்க்க முடியாது போயிற்று. உருவான பலன் கிடைத்தது/ குமாஸ்தாக்கள் சம்பள உயர்வுக்கும் அவர்கள் தொகையை அதிகரிப்பதற்கும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

சப் ரிஜிஸ்திரார்களுக்கு முன்பு கமிஷன் மட்டுமே கொடுக்கப்பட்டு வந்ததை ஒழித்து சம்பளமும் கமிஷனும் கொடுக்க ஏற்பாடு செய்த இவர் 1895-ல் கமிஷன் வழக்கத்தை நிறுத்தி சம்பளத்தை உயர்த்தி ஆட்களையும் அதிகரித்து ஒரு திட்டம் சமர்ப்பித்திருந்தார். அதில், இலாகா அதிகாரிகள் திறம்பட ஊழியம் புரிந்துவருவதை எடுத்துரைத்து, இந்தத் திறமை மங்காமல் சாஸ்வதமாகச் சோபிக்கவேண்டுமானால் ஊழியர்கள் மேம்பாடுக்கான

தோது அதிகரிக்கப்படவேண்டுமென்றும், தாம் சிபாரிசு செய்திருக்கும் சம்பள விகிதத் திட்டம் இத்த கையதெனவும் இவர் கூறியிருந்தார். இந்தத் திட்டம் சர்க் காருக்கு அதிக செலவு வைக்காது என்றும் ஆகவே சர்க் கார் பயப்படத் தேவையில்லை என்றும் "ஹிந்து" பாராட்டி எழுதியிருந்தது.

தமது திட்டத்தில், வெறும் சர்விஸ் காலத்தை மட் டுமே பார்த்து பதவி உயர்வு அளிப்பது கூடாதென்றும் தகுதி, திறமையைக் காட்டுவோர் உயர்பதவிகளுக்கு அருகர்களாகவேண்டுமென்றும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வற்புறுத்தியிருந்தார். குமாஸ்தாக்கள் திறமை காட்டி ஞல் அவர்கள் மேம்பதவிக்கு உரியவர்களாகவேண்டும் என்றும் இவர் உத்திரவுமிட்டுவிட்டார். இதைத் தொடர்ந்து குமாஸ்தாக்களின் வேலைத் திறனைப்பற்றி சப் ரிஜிஸ்திரார்களும் ரிஜிஸ்திரார்களும் ரகசிய குறிப்பு எடுத்து வைத்துக்கொள்ள ஏற்பாடாகியது.

ஊழியர்களின் நடத்தைப்பற்றி புகார் கிளம்பினுல் அது குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதும் இவரது ஏற்பாடு. மோசடியைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை இவர் அமுலாக்கினுர். பத்திரங்களைப் பார்த்தாலே பிராந்திய பொருளாதார ஸ்திதி யைத் தெளிவாகக் கண்டறியும் வழிகளையும் இவர் அமு லுக்குக் கொணர்ந்தார். பத்திரங்களின் பிரதி தயாரிக்கப் படும்போது அசல் பத்திரமும் பிரதியும் அக்ஷரங்கள், வார்த்தைகள் பிறழாமல் இருக்கவேண்டுமென்பதை அறி வுறுத்தினுர். இவர் காலத்தில்தான் பத்திரங்களில் விரல் ரேகை எடுப்பது அமுலுக்கு வந்தது.

ஓரிரு ருசிகர சம்பவங்களையும் இங்குகுறிப்பிடவேண் டும். தம் இலாகா சிப்பந்திகள் மீது குறை கூறியவர் களுக்கு இவர் பதிலடி போட்ட சந்தர்ப்பங்களாகும் அவை. கௌன்சில் மெம்பர் ஒருவர் ஒருநாள் மவுண்ட் ரோட் சப் ரிஜிஸ்திரார் ஆபீஸிற்கு காலை 11-மணிக்கு விஜ யம்செய்து பார்த்தபோது, அச்சமயம்(அந்த தினத்துக்கே) சப்ரிஜிஸ்திரார் இருக்கவில்லை. சிரார்த்த சடங்கையொட்டி அன்று அவர் ரஜாவிலிருந்தார். சப் ரிஜிஸ்திரார் இல்லாத தைப்பற்றி கௌன்சில் மெம்பர் இவரிடம் புகார் செய்

தார். அதற்கு இவர் பதிலளித்தவிதம் கவனத்துக்குரியது. சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்குமுன் தகவல் கொடுத்து விட்டுத் தாங்கள் விஜயம் செய்திருக்கவேண்டும் என்று சூடுகொடுத்துவிட்டார் இவர்.

இன்னெரு சம்பவத்தில் ஒரு சப்ரிஜிஸ்திராரின் கையெழுத்து நன்ருக இல்லை என்று புகார் செய்யப்பட்டது. கையெழுத்து எப்படி இருந்தால் என்ன, திறமை தான் முக்கியம் என்று புகார் செய்தவருக்கு இவர் பதிலடி போட்டார். தம் கீழ்வேலை பார்த்தவர்களின் மதிப்பையும் கௌரவத்தையும் பாதுகாக்க எவ்வளவு பிரயாசைப்பட்டிருக்கிருர் இவர் என்பது இதிலிருந்து விளங்கும்.

மாகாணம் பூராவுமுள்ள ரிஜிஸ்திரேஷன் காரியாலயங்களை இவர் அடிக்கடி சுற்றிப் பார்த்துவருவதுண்டு. அந்தச் சமயங்களில் இவர் தமது அபார புத்தி தீக்ஷண்யத்தால் வேலைகளை லகுவில் முடித்துக்கொண்டு கையோடு கையாக ரிபோர்ட்டையும் எழுதி முடித்து விடுவார். தஸ்தவேஜிகளை ஆரம்பம் முதல் கடைசிவரை படித்து குறிப்புக்கள் எழுதுவார். எதையும் விடமாட்டார். அவர் பார்வைக்கு வராத தஸ்தவேஜிகளே இருக்க முடியாது. தமது சுற்றுப் பிரயாணங்கள்போது, அதிகாரிகளுக்கு எதிலாவது சந்தேகம் தட்டிஞல் அதைத் தீர்த்துவைப்பார். சிப்பந்திகள் மிகச் சிரமப்பட்டபின் கண்டுபிடித்து தம் கவனத்துக்குக் கொண்டுவரும் பிழைகளை ஏற்கெனவே கவனித்துக் குறித்துக்கொண்டு மிருப்பார் இவர். இப்போதெல்லாம் காரியாலய மானேஜர்கள் முதலானேர் முதலில் தபாலைப் பிரித்துப் பார்ப்பதுபோல் அப்போது கிடையாது. அந்த வழக்கத்துக்கு இவர் இடங்கொடுக்கவில்லை. பூரா தபால்களையும் தாமே பரிசீலித்து வேண்டிய குறிப்புக்களையும் எழுதி அனுப்பிவிடுவார் இவர்.

இடையே 1895-ல் பத்திரப்பதிவு இலாகாவை ஸெட்டில்மெண்ட் இலாகாமீது பொறுப்பு கொண்ட ரெவினியூ போர்டு மெம்பரிடம் ஒப்படைக்க இந்திய சர்க்கார் திட்டம் கொண்டிருந்தனர். விவசாய சீர்திருத்த ஏற்பாடுகளைச் செய்வதற்காக என்று வெளிக்குச் சொல்லிக்கொண்டு இந்த எண்ணத்துடன் ஸர் இ. பக் என்பவர் சென்னை வந்தார். ஸர் பக் நடத்திய மகாநாட்டில் ஸ்ரீநிவாஸராகவை

யங்காரும் பிரசன்னமாயிருந்து கலந்து கொண்டார். விவசாய திட்டங்கள் குறித்தே பிரதானமாக விவாதிக்கப்பட்டதாக விவரிக்கப்பட்ட போதிலும் அந்த மகாநாட்டில் பத்திரப்பதிவு இலாகா பற்றியும் பேச்சு திரும்பியது. கையுடன் கூடவே முக்கிய தஸ்தவேஜிகளையும் எடுத்துச் சென்றிருந்த ஸ்ரீநிவாஸராகவையங்கார் அவற்றை எடுத்துக் காட்டி விளக்கியதும் இந்த இலாகாவை இவர் திறம்பட நிர்வகிப்பதாக தீர்மானமாகியது. ஸர் இ. பக் எந்த எண்ணத்துடன் அனுப்பப்பட்டாரோ அந்த எண்ணம் இறுதியில் கைவிடப்பட்டது.

ஸர் இ. பக் எத்தகைய எண்ணத்துடன் சென்னை வருகிறார் என்று தெரிந்ததுதான் தாமதம்! "ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீ ஜி. சுப்ரமணிய ஐயர் சீறி எழுந்தார். அவருடைய ரோஷமும் கண்டனமும் அந்தப் பத்திரிகையில் பகிரங்கமாகியது. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பத்திரப் பதிவு இலாகாவை எவ்வளவு திறம்பட நடத்திவருகிறார் என்பதை இடித்துக்காட்டி இந்த இலாகாவுடன் மற்ற இலாகாக்களை ஒப்பிட்டால் அவை எவ்வளவு சாமானியமானவையாக விளங்கும் என்பதையும் சுட்டிக்காட்டி ஸ்ரீ ஜி. சுப்ரமணிய ஐயர் எழுதியிருந்தார். சிவில் சர்விஸ் பதவிகள் கிடைக்கமாட்டாத இந்தியருக்கு இந்தப் பதவியாவது கிடைக்கிறது, அதையுமா மறுக்கவேண்டும் என்று ஹிந்து ஆசிரியர் கேள்வி விடுத்தார். ரெவினியூ போர்டைக் காட்டிலும் பத்திரப் பதிவு இலாகா திறம்பட இயங்குகிறது, ஸெட்டில் மெண்ட் இலாகா பொறுப்பு வகிக்கும் போர்டு மெம்பர் ஸ்தானத்தை ரத்து செய்துவிடலாம், இந்த இலாகாவினால் பொதுமக்களுக்கும் யாதொரு பிரயோசனமுமில்லை என்று மேலும் எழுதியிருந்தார் ஸ்ரீ சுப்ரமணிய ஐயர்.

1902—03-ல் மூவாண்டு அறிக்கையைத் தயாரிக்கும் வேலையை புது நபர் ஒருவரிடம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஒப்புவித்திருந்தார். குறிப்பிட்ட பக்கங்களுக்குள் ரிபோர்ட் அடங்க வேண்டுமென்பது தெரியாத அந்தப் புது நபர் நீள் வியாஸமொன்றை எழுதிவிட்டார். ரிபோர்ட்டை அச்சுக்கு அனுப்பும் காலம் நெருங்கிவிட்டது, இரண்டு அல்லது மூன்றுநாட்களே இருக்கையில் ஸ்ரீநிவாஸராகவை

யங்கார் மறுநாளே எடுத்துக்கொண்டு நொடிப்பொழுதில் என்று சொல்லும்படி அதை வேண்டிய அளவுக்குக் குறைத்துவிட்டார்! சாதாரணமாக, ஜில்லா ரிஜிஸ்திரா ராயிருந்து ரிடயரான ஸ்ரீ டி. எஸ். ராமச்சந்திர ஐயர் தான் ரிபோர்ட்களை தயாரிப்பது வழக்கம். ஆனால் இந்தத் தடவை புது நபரிடம் ஒப்படைத்ததன் விளைவாக அந்த வேலை தமக்கே திரும்பியபோதிலும் அதை அனுயாசமாக இவர் முடித்தது இவருடைய அபார திறனுக்குச் சான்று என்று சொல்லத் தேவையில்லை.

சமூக சீர்திருத்தம் குறித்து இவர் கொண்டிருந்த சிரத்தையைப்பற்றி முன் அத்தியாயமொன்றில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது அற்புதப் புத்தகத்திலும் சமூக சீர்திருத்தங்களை வற்புறுத்தியிருக்கிறார். பெண்களுக்கு கல்வி, சமூக முற்போக்குக்கு உதவாத பழக்க வழக்கங்களை ஒழித்தல், ஜாதிபேத ஒழிப்பு முதலிய சீர்திருத்தங்கள் குறித்து இவரும் இன்னும் பலரும் விசேஷ அக்கறைக்கொண்டிருந்தனர். 1892-ல் தோற்றுவிக்கப்பட்ட ஹிந்து சமூக சீர்திருத்த சங்கத்தின் நோக்கமும் இதுவே. பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம், நல்வாழ்வு குறித்து இவர் கொண்டிருந்த கருத்து குறிப்பிடத்தக்கது. ஜாதி, மத பேதம் பாராட்டாமல், சகலரும் சமமென பாவித்து, அனைவரும் முன்னேற பிரிட்டிஷ் ஆட்சியில் சந்தர்ப்பமளிக்கப்பட்டுவந்ததை இவர் தமது புத்தகத்தில் பாராட்டியிருக்கிறார். சர்க்கார் உத்தியோகத்துறையில் பிற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவேண்டியதை வற்புறுத்தி ஒருவழியும் வகுத்துக்காட்டினார் இவர். சிவில் சர்விஸ் வர்க்கத்தைச் சேராத சர்க்கார் உத்தியோகங்களுக்குப் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படவேண்டுமெனவும் அதில் பட்டதாரிகளே அனுமதிக்கப்படவேண்டுமெனவும் வற்புறுத்திய இவர் போட்டிப் பரீட்சைகளில் சோபிக்க முடியாத பின்தங்கியவர்களுக்காக மொத்த பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கப்படவேண்டுமென்றும் கூறியிருக்கிறார்." பிராம்மணரல்லாதார் இயக்கம் ஆரம்பிக்கு முன்பே, பல்லாண்டுகளுக்கு முன்பேயே, ஸ்ரீநிவர்ஸ்ராகவையங்கார் சர்க்கார் உத்தியோகங்களுக்குத் தகுதிவாய்ந்த பல பிராம்மணரல்லாதாரை நியமித்திருக்கிறார்" என்று 1939-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25-ம் தேதி சென்னை கோகலே ஹாலில் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் உருவப்படம் திறந்துவைக்கப்பட்டபோது காலஞ்சென்ற பிரபல சட்டமேதை ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸையங்கார் கூறியது குறிப்பிடத் தக்கது.

1902-ல் இந்திய போலீஸ் கமிஷனில் மெம்பராக நியமிக்கப்பட்டு இவர் கமிஷனின் அலுவல் சம்பந்தமாக மறு வருஷம் கடல் மார்க்கமாக ரங்கூன் போகவேண்டியிருந்தது. அச்சமயம் தமது புத்திரருக்கு எழுதிய கடிதத்தில் "நான் ரங்கூன்போக விருப்பதுபற்றி விஷமிகள் வேறு வேலையில்லாமல் ஏதாவது சொன்னால் கவலைப்படவேண்டாம் என்று உன் அம்மாவிடம் சொல்...எத்தனையோ பேர் மத்ராஸிலிருந்து கல்கத்தாவுக்குக் கப்பலில் போயிருக்கிறார்கள். பார்க்கப்போனால் என்னுடைய பிரயாணத்துக்கின்னும் இந்த மதராஸ்-கல்கத்தா பயணம் அதிக நாள் பிடிக்கக் கூடியது...நான் பிரயாணம் செய்யும் கப்பலில் மதக்கோட்பாடுகளுக்கு விரோதமாக நடந்துகொள்வதைத் தவிர்க்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன." என்று இவர் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதத்தில் மன உறுதியையும் பழமை ஆசார வழக்கங்களில் ஊறிய பத்தினிக்கு ஆறுதல் சமாதானம் கூறும் தொனியையும் காணலாம்.

1892-ம் வருஷம் ஸ்தாபிதமான ஹிந்து சமூக சீர்திருத்தச் சங்கத்தில் இவரும் தீவிர பங்கெடுத்தவர் என்று சொல்லத் தேவையில்லை. இந்தச் சங்கத்தில் சேருவோர் சமூக சீர்திருத்தப்பணியில் வாயளவோடு நில்லாமல் செய்லிலும் காரியம் சாதிக்கவேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. சங்க மெம்பர்கள் ஏற்ற புனித பொறுப்பும் கடமையும் வருமாறு:—தங்கள் பொறுப்பிலுள்ள பெண்களுக்கும் ஸ்திரீகளுக்கும் கல்விகற்பித்தல்; ருதுமதியாவதற்கு முன்பேயே விவாகம் செய்விக்கும் ஆசார விதிக்குக் கட்டுப்பட்டவர்கள் 10 வயதுக்கு முன்பு தம் ரக்ஷணையிலிருக்கும் பெண்களுக்கோ புத்திரிகளுக்கோ விவாகம் செய்விக்கக்கூடாது; மற்றவர்கள் ருதுமதியாகு முன் பெண்களுக்குக் கல்யாணம் செய்யக் கூடாது; 18 வயதடையு முன்போ மனைவியை சம்ரக்ஷிக்கக் கூடிய ஸ்திதியை எட்டு முன்போ புத்திரர்களுக்கு விவாகம் செய்விக்கக்கூடாது; பல ஜாதியினரும் கலந்துகொள்ளும் வைபவங்களில் எல்லோருடனும் சரிசமமாக உட்கார்ந்து பிஸ்கோத்து. காபி, தேநீர் முதலியவற்றை அருந்தத் தயாராயிருக்க வேண்டும்; புனர் விவாகம் செய்து கொண்டவர்களுடனும் அயல்

நாடுகளுக்குப் போய் வந்தவர்களுடனும் போஜனம் செய்ய சித்தமாயிருக்கவேண்டும். இவற்றுடன் பின் கண்ட நிபந்தனைகளும் சேர்ந்திருந்தன. கள்ள மனைவி வைத்துக் கொள்ளக் கூடாது; சங்கீத, நடனக் கச்சேரிகளுக்கு விலை மாதரை ஏற்பாடு செய்யக்கூடாது; விலை மாதர் கச்சேரிகள் நடக்கும் வைபவங்களில் கலந்து கொள்ளக்கூடாது.

பல ஜாதி பெண்டிரும் உல்லாச யாத்திரை செல்வதற்கும் இந்தச் சங்கம் ஏற்பாடு செய்தது. மிஸஸ் அருண்டேல், மிஸஸ் பிராண்டர், மிஸஸ் எம். ஸ்மித் ஆகியோரின் பெரு முயற்சி காரணமாக 1895-ம் வருஷம் பிப்ரவரி மார்தம் 15-ம் தேதி இந்தப் பெண்டிர் கோஷ்டி வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்றிருந்தது. ஸ்ரீநிவாஸராகவையங்கார், பாஷ்யமையங்கார், 'ஹிந்து' ஜி. சுப்ரமணிய ஐயரின் புத்திரிகளும் மற்றும் பலஹிந்து பெண்மணிகளும் இந்த நிலையத்துக்குச் சென்றிருந்து நக்ஷத்திரங்கள், சந்திரன், மற்றும் கிரஹங்களைத் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்தனர். பல ஜாதியினரையும் ஒன்று சேர்ப்பதற்கான இந்த முயற்சி வெற்றிகரமாக நடந்தேறியது.

இடையே 1894-ல் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் புத்திரர் ஒருவருக்கு கல்யாணம் நடந்தது. அப்போது இவர் விலை மாதர் ஒருவரையும் கச்சேரி நடத்த ஏற்பாடு செய்யவோ கல்யாணத்துக்கு அழைக்கவோ இல்லை. இந்தியன் சோஷல் ரிபார்மர் சஞ்சிகை இந்த அம்சத்தை எடுத்துக் காட்டிப் பாராட்டியதோடு உயர் கல்வி பயின்ற மற்ற பிராம்மணர்களும் இதுபோல் நடந்து கொண்டிருந்தால் நன்றாயிருக்கும் என்றும் எழுதியது.

சமூக சீர்திருத்தத் துறையில் இவரது சேவை குறித்து வைக்கப்பட்டிருந்த மதிப்பு பின்வரும் பத்திரிகைத் தலையங்கத்திலிருந்து வெளியாகும். "கடல் பிரயாணம் குறித்து சில யோசனைகள்" என்று 1895-ம் வருஷம் ஜுன் 15-ந் தேதி "இந்தியன் சோஷல் ரிபார்மர்" பின் கண்டபடி எழுதியது:—

"வெளிநாட்டுப் பிரயாணம் மீது ஹிந்து சமூகம் விதித்திருக்கும் தடையை நீக்கும் இயக்கம் வெற்றியடைய பல யோசனைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

காலஞ் சென்ற திவான் ரங்காச்சார்லு ஒரு திட்டத்தைத் தயாரித்து அநேகமாகப் பூர்த்தி செய்திருந்தார். இந்த திட்டம் நிறைவேறு முன் அவர் காலமாகிவிட்டார். மைசூரில் அவர் இருக்கையில் அந்த சமஸ்தான சார்பில் ஒரு நீராவிக்கப்பல் வாங்கி, ஜாதி ஹிந்துக்களே அதை இயங்கச் செய்யவும் பிராம்மண பரிசாரகர்களையும் சேவு கர்களையும் அதில் நியமிக்கவும் உத்தேசித்திருந்தார். மஹாராஜாவும் திவானும் இதர சமஸ்தான ஹிந்து அதிகாரிகளும் இங்கிலாந்துக்குப் பயணமாக இந்தக் கப்பல் பயன்பட வேண்டுமென்பது அவர் உத்தேசமாயிருந்தது. ஆனால் அவர் காலகதியடைந்துவிட்டார்; தற்கால இந்தியாவில் சகஜமாகக் காணப்படும் வருந்தத் தக்க குறை பொய்ப்பிக்கப்படாமல், அவர் பூர்த்தி செய்ய முடியாமல் போனதை நிறைவேற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்க வேறு யாரும் முன் வரவில்லை. ஆனால் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்க இப்பவும் தான் ஏதாவது செய்ய முடியாதா? முதலில் ஒன்று அல்லது இரண்டு நீராவிக்கப்பல்களுடன் ஒரு ஹிந்து கப்பல் போக்குவரத்து கம்பெனியை நிறுவலாம். இதில் முழுதுமே தானே பெரும்பான்மையாகத் தானே ஹிந்துக்கள் பங்கு தார்களாகலாம்...இந்தத் திட்டம் வெற்றிகரமாகுமானால் மதிப்பிட முடியாத நல்வினை பிறக்கும். கனம் பாபு சுரேந்திரநாத் பானர்ஜி இத்துறையில் தமது அபூர்வ சக்தியைத் திருப்பலாம். பம்பாயில் கனம் ஜஸ்டிஸ் ரானடே, டாக்டர் பந்தர்க்கர், கனம் ஜாவெரிலால் யஜ்னிக் ஆகியோரும் இதரர்களும் அனுதாபமுடன் இந்தத் திட்டத்தில் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறோம். சென்னையிலும் செல்வாக்கு மிக்க ஆதரவாளர்களைக் கண்டுபிடிப்பது சிரமமல்ல. ஜஸ்டிஸ் சுப்ரமணிய ஐயரின் ஆதரவை நம்பலாம், திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார், திவான் பஹதூர் பாஷ்யமையங்கார், கனம் செஞ்சல் ராவ், திவான் பஹதூர் ரகுநாத ராவ், திவான் பஹதூர் ராஜரத்ன முதலியார் இன்னும் பல பிரமுகர்களின் அனுதாபம் மிக்க ஆதரவையும் எதிர்பார்க்கலாம்.''

1895-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி இதே பத்திரிகை "சட்டசபையும் சமூக சீர்திருத்தமும்" என்பது பற்றி குறிப்பிட்டிருந்ததாவது:—

கனம் ஸி. சங்கரன் நாயர் சீர்திருத்தத் துறையில் காரியக்காரர். அயல் நாடுகளுக்குப் போயிருக்கிருர். தம் சகோதரரையும் இங்கிலாந்துக்கு அனுப்பியிருக்கிருர். மலபார் விவாக மசோதா குறித்து அரும்பாடு பட்டிருக்கிருர்......

கனம் சி. விஜயராகவாச்சாரியார் பொதுவாகப் பிற்போக்காளராகக் கருதப்படுகிருர். ஆனல் இந்த கருத்து தவருனது என நிரூபணமாகுமென நம்புகிறேம். அவருடைய கருத்தை யறிய சமீபத்தில் சந்தர்ப்ப முண்டாகியது. அவர் சொன்னது இதுவே என எங்களுக்குப்படுகிறது. "இத்தகைய விஷயங்களில் கிரிமினல் சட்டங்கள் தீயது" என்ற காரணத்தால் தான் சம்மத வயது சட்டத்தை எதிர்த்தார் அவர். இந்தச் சட்டத்தின் நோக்கத்தை அவர் ஆதரிக்கிருர். ஆனல் வழி முறைகள் தான் வேறு விதமாயிருக்கவேண்டுமென விரும்புகிருர். கடல் பிரயாணம், இளம் விதவா விவாகம், பிராம்மணர்கள் ஐக்கிய பத்தியம், பறையர்கள் மேம்பாடுமுதலிய சீர்திருத்தங்களை அவர் ஆதரிக்கிருர். இந்த வாக்குறுதியைக் கேட்டு ஆனந்தப்படுகிறேம். ஐயங்கார்களுக்கும் இதர பிராம்மண பிரிவினருக்குமிடையே நீடித்து நிலவும் வேற்றுமையை ஒழிக்க அவர் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேம். ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் தைரியசாலி. அவர் இதைக் கருத்தில் கொண்டு தீவிரமாக முனைந்தாரானல் உருவான பலன் கிடைக்கும். கனம் ஸ்ரீநிவாஸராகவையங்காரையும் கனம் பாஷ்யமையங்காரையும் இதே கடமை சார்ந்திருக்கிறது. கௌன்சில் மெம்பர்கள் அனைவரும் சமூக சீர்திருத்தவாதிகளை ஆதரிக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேம். சர்க்காரை ஆதரிப்பதிலோ எதிர்ப்பதிலோ காட்டும் தைரியமுடன் அவர்கள் சமூகத் தீமைகளையும் விலக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேம். அரசியல் உரிமைகள் பெற நம் நாடு தகுதியடைய சமூக சீர்திருத்தம் வெற்றிகரமாக வேண்டும்."

சமூக சீர்திருத்தத்தில் தமக்கிருந்த நாட்டத்தை நிதர்சனமாக்க ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு பரோடாவில் வாய்ப்பு உண்டாகியது. அங்கு திவான்பதவி வகிக்கையில் இவர் விதவா புனர் விவாகச் சட்டமும் இளமை விவாகத் தடுப்புச் சட்டமும் இயற்றினர். மேலும் பிற்பட்ட

வர்களுக்கு கல்விச் சலுகை யளிப்பதில். மகாராஜாவுக்கு சமமான சிரத்தை காட்டியிருக்கிறார்.

2

தலை சிறந்த நீதிபதி என்ற அழியாப்புகழைச் சம்பாதித்துக் கொண்டவரான காலஞ்சென்ற ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் ஞாபகார்த்தமாக சிலை எழுப்பப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆனால் இந்த சிலையை எழுப்புவதில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வகித்த பங்கைப்பலர் அறியார். வெள்ளைக்காரர்கள் மட்டுமின்றி நம்மவர் கூட இந்த யோசனையை எதிர்த்தனர். ஆனால் தமது நண்பர்களான அவர்களின் மனதை இவர் தமது வாதத்தால் மாற்றினார். ஸர் டி. முத்துஸ்வாமி ஐயரிடம் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் கொண்டிருந்த மரியாதையும், மதிப்பும் மதிப்பிட முடியாதது. பெரியாரின் பெருந்தன்மையும் பரந்த மனோபாவமும் குண சிரேஷ்டமும் ஸ்ரீநிவாஸ ராகவையங்காரைப் பரவசப்படுத்தியது. தாம் பாலனாக இருக்கையிலேயே ஸர் டி. முத்துஸ்வாமி ஐயரை இவர் அறிவார். பின்னர் இருபதாண்டு கால நெருங்கிய பரிசயம் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்தது.

1895-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 13-ம் தேதி காஸ்மபாலிடன் கிளப் வாசக அறையில் காலஞ்சென்ற ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் ஞாபகார்த்தமாக என்ன ஏற்பாடு செய்வது என்பது குறித்து நடந்ததொரு கூட்டத்தில் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் கலந்துகொண்டார். சென்னை மகாஜனங்களின் பொதுக்கூட்டமொன்று நடத்துவதென இதில் தீர்மானிக்கப்பட்டது. பிரதம நீதிபதி கனம் ஸர் ஆர்தர் காலின்ஸ் தலைமையில் நடந்த இந்த பூர்வாங்கக் கூட்டத்தில் ஜஸ்டிஸ் பார்க்கர், ஜஸ்டிஸ் பெஸ்ட், ஜஸ்டிஸ் சுப்ரமணியஐயர், அட்வகேட் ஜெனரல் இ. பி.பவல், "மதராஸ்மெயில்" ஆசிரியர் பீசாம்ப், ஆர். ஜி. ஆர்,. ஜி. சுப்ரமணிய ஐயர், ஷெரீப் ஜே. பி. நிக்கலஸ், திவான்பஹதூர் டி. வெங்காசாமி ராவ். கனம் ஸி. சங்கரன் நாயர், ராய் பஹதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார், என். சுப்ரமணியம், எம். ஓ. பார்த்தசாரதி ஐயங்கார், ஸி. ஆர். பட்டாபிராம ஐயர், டி. வி. சேஷகிரி ஐயர், எம். வீரராகவாச்சாரியார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து மார்ச் மாதம் 4-ம் தேதி சென்னை

சர்க்கார மாளிகை விருந்து மண்டபத்தில் ஒரு கூட்டம் நடந்தது. ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் ஞாபகார்த்தமாக சிலை எழுப்புவதை எதிர்த்து சுப்ரமணிய ஐயரும் பாஷ்யமையங்காரும் இந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடந்துவிட்டனர். ஸர் ஹென்ரி ப்ளிஸ்ஸூம் இவர்களுடன் சேர்ந்து வெளியேறிவிட்டார். ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரும் இந்த யோசனையை எதிர்த்தார். ஆனால் இந்த யோசனைக்குப் பேராதரவாளராயிருந்த ஸ்ரீநிவாஸராகவையங்கார் பின்னர் தம் நண்பர்களைக்கண்டுபேசி அவர்கள் மனதைமாற்றினார்.

அன்று தினம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது பிரசங்கத்தில் பேசியதாவது:—மேன்மை தங்கிய கவர்னர் அவர்களே, சீமான்களே, கனம் மிஸ்டர் ப்ளிஸ் பிரேரேபித்த தீர்மானத்தை ஆமோதிக்கும் பாக்கியம் எனக்கு வாய்த்திருக்கிறது. ஸர் டி. முத்துஸ்வாமி ஐயரின் உயர்குணம், வாழ்க்கை, பொது சேவையைப்பற்றி பல பிரமுகர்கள் இந்த மண்டபத்திலும் இதற்கு முன்பும் பாராட்டியும் சிலாகித்தும் அவர் மரணத்தையொட்டி துக்கம் வெளியிட்டும் பேசியிருப்பதற்கின்னும் அதிகமாக நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. இதை நான் அறிவேன், நானும் கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமென தற்க்காலிக கமிட்டி கோரியதற் கிணங்கவும், சிறு பிராயத்திலிருந்தும் பின்னர் சுமார் 20 ஆண்டுகளாக அன்னாருடன் நெருங்கிப் பழகியிருக்கும் முறையிலும் நான் இந்தக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் புனிதக் கடமைக் குட்பட்டவனாயிருக்கிறேன். நான் அவருடன் பழகிய காலத்தில் அவரிடம் மதிப்பும் மரியாதையும் வளர்ந்தன. அவருடைய வாழ்க்கைக் கதை கடந்த சில வாரங்களாகவே அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. நான் இப்போது அதை விரிவாகக் கூறவேண்டிய அவசியமில்லை. பால்யத்தில் இவர் அனாதையாகிவிட்டதையும் கிராமக் கணக்குக் காரரிடம் இவர் ஊழியம் புரிந்தபோது இவரது கூர்மையாலும் மேதா விலாஸத்தாலும் கவரப்பட்ட தயாளுவான தாசில்தார் ஒருவர் இவரைக் கல்விக்காக சென்னைக்கு அனுப்பியதையும் சென்னையில் இவர் மனோ திடத்தாலும் விடா முயற்சியாலும் பல இன்னல்களைச் சமாளித்து உயர் பெருமையுடன் கல்லூரியிலிருந்து தேறியதையும் சர்க்கார் உத்தியோகத்தில் சேர்ந்து துரிதமாக முன்னுக்கு வந்து

தன் திறமையினாலும் பிறழாத நேர்மையினாலும் கடமை உணர்ச்சியினாலும் உயர் அதிகாரிகளின் மதிப்புக்கு இவர் பாத்திரராகியதையும் அனைவரும் அறிவர். இவர் சர்க்கார் உத்தியோகத்திலிருக்கையில், வழக்கறிஞராகவும் நீதிபதியாகவும் இவர் நிச்சயம் சோபிப்பார் என்று சட்ட நிபுணரும் கல்விமானும் மக்களின் நன்றிக்குரியவருமான ஒருவர் சொல்லியிருந்தார். அந்த மகான் அன்று சொன்ன வார்த்தைகள் படி, நீதிபதி பதவி கிடைக்கப்பெற்ற இவர் பெருமைப்படத் தக்கவிதத்தில் செயலாற்றியிருப்பதை நாம் அறிவோம். நீதிபதி ஸ்தானத்தில் இவர் சாதித்ததைச் சிலாகித்துப் பேச நான் அருகன் அல்ல. பல ஆங்கிலேய நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் ஏற்கெனவே இவரைப் புகழ்ந்து பேசியிருப்பதால் நான் பாராட்டிப் பேச அவசியமுமில்லை. ஆனால் இவர் எத்தகைய மனப்பாங்குடன் தமது அலுவல்களைக் கவனித்தார் என்று மட்டும் சொல்ல அனுமதி கேட்கிறேன். 1882-ம் வருஷம் பட்டதாரிகள் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில், நீதிபதிகளாவோர் தங்கள் புனிதக் கடமையை எத்தகைய மனப்பாங்குடன் நிறைவேற்ற வேண்டுமென்பதை ஹிந்து தர்ம சாஸ்திர சிருஷ்டிகர்த்தா மனுவின் வாக்கியங்கள் மூலம் சட்டத் தொழில் பட்டதாரிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த வார்த்தைகள் முன்னமேயே பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த வார்த்தைகள் மகத்துவமுடையவையாதலால் அதைத் திருப்பிச்சொல்ல நான் முற்படுவதற்காக பிரமுகர்கள் மன்னிக்கவேண்டுகிறேன். மனு கூறுகிறார்: "நீதி ஸ்தலம் புனித கோயில் போன்றது. நீதிபதிகள் மனுஷ்யர்களேயாயினும் நமக்குப் புலப்படாத தெய்வத்தின் கருவிகளாவர். சத்தியத்தைக் காக்க தெய்வீக சக்தியே அவர்களது தீர்ப்பை உருப்படுத்துகிறது. இந்தப் புனித ஆலயத்துக்குள் கீழ்த்தர எண்ணங்களுடன் பிரவேசிப்பவர்களும் கேவலமான செயல்களால் அதை அசுத்தப்படுத்துகிறவர்களும் தெய்வத்துக்கும் நாட்டுக்கும் துரோகிகளாவர்," கடந்த 17-ஆண்டுகளாக இறக்கும்வரை நீதிபதி ஸ்தானத்தை வகித்து வந்த இவர் ஒரு க்ஷணமாவது இந்த உயர் தத்வத்தை மறந்ததில்லை. பிரத்யொரு வழக்கிலும் உண்மையை ஆராய்ந்து அறியும் விசாரமே கொண்டிருந்தது இவரது

பொறுப்பு மிக்க கடமை உணர்ச்சி. புதிதாக நியமிக்கப் பட்டபோது சாட்சியங்களை எவ்வளவு அக்கறை. சிரத் தையுடன் ஆராய்ந்து தீர்ப்பளித்தாரோ அந்த ஊக்கமும் உத்சாகமும் கடைசி நாள் வரையிலும் குன்றவில்லை. சட்ட நுட்பங்களைத் தெளிவாக விளக்குவதற்குப் பெயர் போன இவரது தீர்ப்புகள் இறுதிவடிவம் பெற்ற முறை யை இயற்கையில் வைரம் உற்பத்தியாகும் முறையுடன் ஒப்பிடலாம். இந்த உன்னத லட்சியம் பூண்டு இடை யருமல் உழைத்த காரணத்தால் போது, சமூகத்துறை களில் அதிக கவனம் செலுத்த முடியாமல் போயிற்று இவருக்கு. ஆயினும் சென்னை சர்வகலாசாலை மெம்பராக வும் சட்டப்பட்டதாரிகள் படிப்புத்துறை தலைவராகவும் சிண்டிகேட் அங்கத்தினராகவும் இவர் புரிந்த சேவை சாமான்யமானதல்ல. பல பொதுக்கூட்டங்களில் இவர் தலைமை தாங்கியிருக்கிருர். ஆனால் நீதிபதி என்ற முறை யில் இவரது சேவை இவை எல்லாவற்றையும் காட்டி லும் மிக உயர்தரமானது. தமது முழு நேரத்தையும் சக் தியையும் இவர் நீதிமன்றத் துறையிலேயே கழித்துவிட்ட தாகவும் அனுபவமும் புத்தி தீக்ஷண்யமும் சமூகத்தில் மதிப்பும் படைத்தவரான இவர் இதர பொது சேவைத் துறைகளில் அதிக கவனம் செலுத்தத் தவறிவிட்டதாக வும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நீதிபதி ஒருவர் பொது வாழ்வில் சேவை புரிவது தகுமா, தகாதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் சம்பந்தப்பட்டமட்டில், தம் தொழில் குறித்து இவர் கொண்டிருந்த உயரிய லட்சியம் காரணமாக பொது சேவைத் துறையில் ஈடுபட முடியவில்லை. இதனால் நாம் குறைபடவும் காரணமில்லை எனக் கருதுகிறேன். சுமார் 17-ஆண்டுகளுக்குமுன், நீதிபதியாக இவர் நியமிக்கப் பட்டபோது, முதன் முதலில் இந்தியருக்கு நீதிபதி ஸ்தா னம் கொடுக்கப்படுவது குறித்து சம்சயமும் அவநம்பிக் கையும் வெளியிட்ட சமூகத்தினர் இப்போது இவரைப் புகழ்ந்துபாட முன்வந்திருப்பது, இவர் இந்தத் துறையில் சிகரத்தை எட்ட உறுதிகொண்டிருந்ததற்கும் அல்ப விஷ யங்கள் குறுக்கிட இடமளிக்காததற்கும் சான்று ஆகும். ஸர் டி. முத்துஸ்வாமி ஐயரின் பெயர், புகழை நாம் அரிய பொக்கிஷமாகக் கருதவேண்டியவர்களாவோம்."

திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதிய "சென்னை மாகாணத்தின் நாற்பது வருஷத்திய முற்போக்கு" என்ற புத்தகம் அவரது பெருமையையும் புகழையும் பரப்பிவிட்டது. சுதேச மன்னர்களில் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவரான பரோடா மஹாராஜாவை இந்தப் புத்தகம் கவர்ந்துவிட்டது. புத்தகத்தைப் படித்த மகாராஜா ஆசிரியரின் அபார ஞானத்தைக் கண்டறிந்து கொண்டார். பரோடாவுக்கு ஒரு நல்ல திவான் கிடைப்பாரா என்று ஏங்கிக்கொண்டிருந்தவருக்கு புத்தகாசிரியரின் சேவையைச் சம்பாதித்துக் கொள்வதில் சிரத்தையுண்டாகியது உள்ளூர் பிரமுகர்களிடையே பூசல் வலுத்திருந்ததால் வெளியேயிருந்து திவான் பதவிக்கு அருகரானவரைத் தேடவேண்டியதாயிற்று கெய்க்வார் மகாராஜாவுக்கு. அடிக்கடி சமஸ்தானத்தைவிட்டு மகாராஜா வெளிநாடு போவதுண்டு; அந்தக்காலத்தில் தெற்கத்தியருக்கும் கூர்ஜரப் பிரிவினருக்குமிடையே சள்ளை முற்றியது.

1896-ம் வருஷம் ஜூலை மாதம் 15-ம் தேதியன்று தான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பரோடா திவான் பதவியை பெற்றார் என்ற போதிலும் அதற்கு பூர்வபீடிகையாக ஓராண்டுக்கு முன்னதாகவே ஒரு சம்பவம் நடந்தது. இதிலிருந்து அப்பொழுதே இவர் சேவையைப் பெறுவதில் கெய்க்வார் ஆவல்கொண்டிருந்ததை ஊகித்துக் கொள்ளலாம். சென்னை சர்க்கார் உயர் உத்தியோக்ஸ்தர் ப்ரெட்ரிக் ப்ரைஸ் என்பவர் அவ்வருஷம் ஜூன் 4-ந் தேதி யன்று தாம் பரோடா மகாராஜாவைச் சந்தித்த செய்தியையும் சென்னை மாகாண முற்போக்கு என்ற புத்தகத்தின் ஆசிரியரைத் தெரியுமா என்று மகாராஜா தம்மை வினவியதையும் தாம் நன்ருகத் தெரியும் என்று சொல்லக்கேட்டு புத்தகாசிரியரைச் சந்திக்க மகாராஜா ஆர்வம் காட்டியதையும் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு ஒரு கடிதம் மூலம் தெரியப்படுத்தியதோடு காலவிரயம் செய்யாமல் மகாராஜாவை உடனே சந்திக்கும்படியும் இவரை வற்புறுத்தி யிருந்தார்,

இதைத் தொடர்ந்து அப்புறம் என்ன நடந்ததென்று தெரியாது. ஆனால் மறுவருஷம் பிப்ரவரி மாதம் 28-ம் தேதி பரோடா கெய்க்வாரின் தூதர் ஒருவர் ஸ்ரீநிவாஸராகவையங்காரைச் சந்தித்து திவான் பதவியை இவர் ஏற்பது குறித்துப் பேச சென்னை வந்திருந்தார். இதையடுத்து நடந்த தந்திப் பரிவர்த்தனையில் இவர் தம் சகோதரர் ஸ்ரீ கஸ்தூரிரங்கையங்காரை பரோடாவுக்கு, பேச்சு நடத்த அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார். ஸ்ரீமான் கஸ்தூரி ரங்கையங்கார் பரோடா சென்று கெய்க்வாரைச் சந்தித்துச் சம்பளம், பதவிகாலம் முதலியவற்றைத் தீர்மானித்துக் கொண்டார். ஆனால் இதில் ஒரு சிக்கல் தோன்றியது. (இவரது சர்விஸை சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரிடம் மாற்றி ஒப்புவித்தது குறிப்பிடத்தக்கது). முதலில் மூன்று வருஷ காலத்துக்கு இவரை நியமிப்பதாகவும் பிரிட்டிஷ் சர்விஸுக்கு இவர் திரும்ப நேரிடுமானால் அதற்குக் காரணம் கோரப்படக் கூடாதென்றும் கெய்க்வார் விதித்ததற்கு இந்திய சர்க்கார் ஒப்புக்கொள்ளமறுத்துவிட்டனர். ஸ்ரீநிவாஸராகவையங்காரின் சேவை எவ்வளவு காலத்துக்குத் தேவையோ அதற்குப் பின்னரும் அவரே திவானாக நீடிக்கவேண்டுமென்று கூற விரும்பவில்லை; ஆனால் கெய்க்வாரின் இரண்டாவது நிபந்தனைக்கு மட்டும் ஒப்புக்கொள்வதற்கில்லை, என்று இந்திய சர்க்கார் தெரிவித்தது.

பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியானதும் மாதம் 4000 ரூபா சம்பளத்தில் மூன்று வருஷ காலம் திவான் பதவி வகிக்க ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஒப்புக்கொண்டார். இதைத்தெரிவித்து மகாராஜாவுக்கு எழுதிய கடிதத்தில் நன்றி தெரிவித்துக்கொண்டும் மகாராஜாவின் திருப்தியைப் பெறும் வகையில் சேவை புரிவதே தம் நோக்கமாயிருக்குமென்று உறுதி கூறியும் இவர் குறிப்பிட்டிருந்தார்.

ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு பரோடா திவான்பதவி அளிக்கப்பட்ட செய்தி சென்னையில் ஏககாலத்தில் ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கியது. ஏதோ எதிர்பாராதது நடந்துவிட்டதாகக் கருதியவர்களுண்டு. நாஸ்திகர்கள்கூட மனுஷ்யரின் வாழ்க்கையை உருப்படுத்துவது ஒரு தெய்விக சக்திதான்போலும் என்று அப்

பொழுதாவது எண்ணியிருக்கக்கூடும்! உள்ளூர் திறமையை மதித்து அவர்களிலிருந்தே நிர்வாகிகளைப் பொறுக்க வேண்டுமென்ற கொள்கையைப் பூண்டு, பிற சமஸ்தானங்களின் போக்கைக் கண்டித்து இவ்விதம் உபதேசித்த வரான கெய்க்வார் சென்னை வாசியின் சேவையை நாடியது பெரும் புதிராயிருந்தது! ராஜா ஸர் டி. மாதவராவுக்கப்புறம் இத்தகைய சமஸ்தானத்தில் திவான் பதவி வகிக்கத் தக்கவர்கள் யார் இருக்கிறார்கள் என்ற எண்ணம் மக்களிடையே ஊன்றியிருந்தது அப்போது.

சென்னை வாசிகளில் ஒருவருக்குத்தான் இந்த நியமனம் உவகையூட்டவில்லை. ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு திவான் பதவி கிடைத்துவிட்டதைக் கண்டு அவர் சகிக்கவில்லை என்று கருதலாகாது. "வாழ்நாள் பூராவும் பிரிட்டிஷ் சர்க்கார் ஊழியத்தில் கழித்துவிட்டு உயர் அந்தஸ்துக்கும் பதவிக்கும் சுதேச மன்னர்களின் தயவுக்காகவா நாம் காத்திருக்கவேண்டும்? பரோடா சமஸ்தான திவான் பதவி வகிக்கத் தகுதியுள்ளவருக்கு ரெவினியூ போர்டிலோ கவர்னரின் நிர்வாக சபையிலோ அங்கத்தினராக நியமனம்பெற அருகதை இல்லாமலா போய்விட்டது?" என்ற வார்த்தைகளை ஸ்ரீ ஜி. சுப்ரமணிய ஐயரின் தேசாபிமான உள்ளம் வெளியிட்டது.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் திவானாக நியமிக்கப்பட்டதுபற்றி சென்னைப் பத்திரிகையொன்று பின்வருமாறு எழுதியது:—

சென்னை ரிஜிஸ்திரேஷன் இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரல் திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு பரோடா மஹாராஜா தமது சமஸ்தான திவான் பதவியை அளித்திருக்கிறார். மாதம் 4000 ரூபா சம்பளமுள்ள இந்தப் பதவியை இவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இவரது சர்விஸை பிரிட்டிஷ் சர்க்கார் பரோடாவுக்கு இரவல் கொடுத்திருக்கிறது......ராஜா ஸர் டி. மாதவராவுக்கு அப்புறம் இந்த முன்னேற்றமடைந்த சமஸ்தானத்தின் திவான் பதவியை யேற்கும் சென்னை வாசி இவரே. சென்னை சர்க்காரில் திறமைமிக்க அதிகாரிகளில் இவர் ஒருவர்......கனம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் கடும் உழைப்பாளி. புத்தகம் படிப்பதில் ஆர்வம் மிகுந்தவர். உத்தி

யோக அலுவல் கடுமையாயிருந்தபோதிலும் புத்தகப் படிப்பை இவர் விட்டதில்லை. இந்த நாட்டின் பொருளாதார, அரசியல் பிரச்னைகளில் சமர்த்தர்......இவரது சர்விஸை இழப்பதால் சென்னை சர்க்கார் நாணயம் மிக்க, மதிப்பிட முடியாதவரை இழக்கிறது; சென்னையின் நஷ்டம் பரோடாவுக்கு லாபம்."

பரோடா திவான் பதவியை யேற்க திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் 1896-ம் வருஷம் ஜூலை மாதம் 11-ம் தேதி சனிக்கிழமை யன்று குடும்பத்தாருடனும் அந்தரங்க காரியதரிசி ஸ்ரீ கே. சுப்பராவ் சகிதமாயும் சென்னையிலிருந்து ரயில்மூலம் பிரயாணமானூர். கனம் ஜஸ்டிஸ் சுப்ரமணிய ஐயர், ஸி. ஐ. இ., கனம் வி. பாஷ்யமையங்கார் ஸி. ஐ. இ., ஸ்ரீ பி. செஞ்சல்ராவ், ஸி. ஐ. இ., திவான் பஹதூர் டி. வெங்காசாமி ராவ், ராஜா ஸர் சவலை ராமஸ்வாமி முதலியார் ஸி. ஐ. இ., கனம் பி. ரங்கைய நாயுடு, கனம் ராய்பஹதூர் பி. அநந்தாச்சார்லு, திவான்பஹதூர் பி. ராஜரத்ன முதலியார், ராய்பஹதூர் ஆர். வி. ஸ்ரீநிவாஸ ஐயர், டாக்டா கீஸ், டபிள்யூ. இ. ஹோர் தம்பதிகள், ஸ்ரீமான்கள் என். சுப்ரமணியம், ஸி. ஆர். பட்டாபிராம ஐயர், எம். ஓ. பார்த்தசாரதி ஐயங்கார், பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், பி. ஹனுமந்த ராவ், கே. பி. சங்கர மேனன், எஸ். அண்ணுஸ்வாமி ஐயர், எல். டி. சாமிகண்ணு, வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸி. ராமச்சந்திர ராவ் சாகேப், ராய்பஹதூர் ஸி. கல்யாணசுந்தரம் செட்டி, ஸி. மஹாதேவ ஐயர், வி. ஸி. சேஷாச்சாரி, பி. ரங்காச்சாரி, எஸ். ரங்கஸ்வாமி ஐயங்கார், ஆர். ரங்கராவ், டி. ரங்கராவ், எம். சேஷகிரி சாஸ்திரி, ஏ. சங்கரய்யா முதலானோர் ரயில் நிலையத்துக்கு வந்திருந்து இவரை வழியனுப்பினர்.

பம்பாயில் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் சுற்றத்தாரும் நகர பிரமுகர் காலஞ்சென்ற கனம் ஜகன்னுத்ஜி சங்கர்சேத் ஜாகையில் உபசரிக்கப்பட்டனர். ஸ்ரீ ராவ்ஜி ஜகன்னுத்ஜி சங்கர்சேத் அதிதிகளின் சகல சௌகரியங்களுக்கும் குறைவின்றி ஏற்பாடு செய்திருந்தார். ஜஸ்டிஸ் ரானடே, ஜஸ்டிஸ் பத்ருதீன், நீதிபதி ஹார்மஸ்ஜி தாதாபாய், கனம் ஜாவேரிலால், கனம் சயானி, கனம் மேதா முதலானோர் ஸ்ரீநிவாஸ்ராகவையங்கார் ஜாகைக்கு, மரியாதை செலுத்

தும் வகையில், வந்து பேட்டி கண்டு போனார்கள். பதில் மரியாதையாக ஸ்ரீநிவாஸராகவையங்காரும் மேற்சொன்னவர்களின் ஜாகைக்குச் சென்று பேசிவிட்டுத் திரும்பினார். ஸ்ரீ ராவ்ஜி சங்கர்சேத் மாலையில் ஒரு உபசார வைபவம் நடத்தி நகரபிரமுகர்களனைவரையும் அழைத்திருந்தார். பரஸ்பரம் அறிமுகம் செய்வித்தலும் வரவேற்புரையும் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் பதிலுரையும் அளவளாவல்களும் முடிய ஏறத்தாழ நள்ளிரவு நேரம் ஆகிவிட்டது.

மறுநாள் பிற்பகல் பிரபல மில் முதலாளி ஸ்ரீ. வி. தாமோதர் டி. மூல்ஜி ஒரு உபசாரம் நடத்தினார். பிரசங்கங்கள், பலகாரம் ஏனைய உபசாரமெல்லாம் நடைபெற்றன. டாக்டர் பாலசந்திரா கே. படோர்தேகரும் ஸ்ரீநிவாஸராகவையங்காரைத் தமது வீட்டிற்கு அழைத்திருந்து உபசரித்தார்.

பம்பாயிலிருந்து ஸ்ரீநிவாஸராகவையங்கார் பரோடாவுக்குக் கிளம்பியபோது அவரை வழியனுப்ப ஸ்மால்காஸ் கோர்ட் டிபுடி ரிஜிஸ்திரார் பாபுஜி தினநாத், ஸ்ரீமான்கள் ராவ்ஜி விநாயக் ஜே. சங்கர் சேத், ஜாம்ஷெட்ஜி கர்ஸட்ஜி காமா, பாஸ்கர் ராவ் பி. பிடாலே, சிங்ஜி நாதூ, வித்தல் தாஸ் தாமோதர், தாக்கர்ஸே மூல்ஜி, தாமோதர் தாஸ்ஜி வைத்யா, லீலாதர் வாலுப்ஜி. கோவிந்த்ஜி மாதவ்ஜி, ஆர். ஸ்ரீநிவாஸையர் முதலானோர் ரயிலடிக்கு வந்திருந்தனர்.

பம்பாயில் சுவாரஸ்யமான சம்பவமொன்று நடந்ததைக் குறிப்பிடவேண்டும். ஸ்ரீநிவாஸராகவையங்கார் பம்பாயில் இருக்கையில் ஜஸ்டிஸ் ரானடேயை முதலில் சந்திக்கவேண்டுமென்றிருந்தார். ஆனால் ரானடே முந்திக்கொண்டுவிட்டார்! திவான்பஹதூரின் அந்தரங்க காரியதரிசிக்கு சங்கடமுண்டாக்கிவிட்டது ரானடேயின் இந்தச் செயல். ரானடேயைத் தாம் முதலில் பார்க்க ஏற்பாடு செய்யும்படி காரியதரிசியிடம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சொல்லியிருந்தார். கடமையில் தவறிவிட்டதாக வருந்திய காரியதரிசிக்கு ரானடே அபயம் அளித்தார். "பயப்படாதீர்கள். திவான்பஹதூருக்கு எல்லாவற்றையும் விளக்கிவிட்டேன். இருவரும் ஹாஸ்யத்தை நன்கு அனுபவித்தோம்" என்றார் ரானடே! வயதில் பெரியவராயினும் ரானடே ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் பெரும்

மதிப்பு கொண்டிருந்தார். ஸ்ரீநிவாஸராகவையங்காரின் திறமையை மெச்சி ரானடே இவரைத் தட்டிக்கொடுத்த சம்பவம் முன்னொரு அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று ஏற்பட்ட நட்பு ஆயுள் பரியந்தம் நீடித்தது. பிரிட்டிஷ் இந்திய சீர்திருத்தங்கள், இங்கிலாந்தில் கிளர்ச்சி முதலியவைபற்றி ரானடே ஸ்ரீநிவாஸராகவையங்காரிடம் அடிக்கடி ஆலோசனை கலந்திருக்கிறார்.

திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஜுலை 15-ம் தேதி பரோடா போய்ச் சேர்ந்தார். ரயில் நிலையத்துக்கு சமஸ்தான உயர் அதிகாரிகள் வந்திருந்து இவரை வரவேற்றனர், அறிமுகம் செய்விக்கும் சடங்கு முடிந்ததும் புது திவான் பிரதம நீதிபதியுடனும் ராவ்பஹதூர் தம்ளுஸ்கருடனும் தமக்கென ஒதுக்கப்பட்ட மாளிகைக்குச் சென்றார். பின்னர் காலை 9-மணிக்கு அரண்மனைக்குச் சென்று மகாராஜாவைச் சந்தித்தார். புது திவான் பதவியேற்பதை யொட்டி காலை 11-மணிக்கு தர்பார் நடத்தப்பட்டது. அத்தர், வெற்றிலை, பாக்கு விநியோகம் முடிந்ததும் தர்பார் கலைக்கப்பட்டது. பின்னர் திவானுக்கு யானை சவாரி காத்திருந்தது. சமஸ்தான ராணுவமும் வாத்திய கோஷ்டியும் புடைசூழ புது திவான் தமது மருமகனுடன் பவனி கிளம்பினர். வழி நெடுக பரோடா மக்களின் பேராரவாரம் ஒலிக்க பிற்பகல் 12-30 மணிக்கு திவான் தமது மாளிகையை அடைந்தார்.

சுதேச சமஸ்தானங்களில் பரோடா முதன்மையானது என்ற பிரசித்தி அந்நாளில் பரவியிருந்தது. இதற்கு அத்தாட்சியாக அநேகம் கல்வி நிலையங்களும் ஆஸ்பத்திரிகளும் தொழில் நுணுக்கக் கல்லூரிகளும் ரயில்வேயும் காட்சியளித்தன அந்நாளிலேயே. இவை யாவும் இந்த சமஸ்தானத்தின் முன்னேற்றத்துக்கு முரசு கொட்டுபவையாயிருந்தன என்றும் சொல்லலாம். ஆனால் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பதவியேற்ற காலத்தில் சகலமும் நல்ல அம்சங்களாகவே இருக்கவில்லை. தெற்கத்தியருக்கும் கூர்ஜரருக்குமிடையே லடாய் உக்ரமாயிருந்தது. தங்களில் ஒருவரைத் திவானாக நியமிக்காமல் சென்னைவாசியை கெய்க்வார் தெரிந்தெடுத்த காரணத்தால் இரு தரப்பினருக்கும் இவரிடம் விரோதம் பூரணமாய் முற்றி

யிருந்தது. மேலும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டுடன் (சமஸ்தானத்தில் கவர்னர் ஜெனரலின் பிரதிநிதி) சதா சர்வகாலமும் ஏதாவதொரு சச்சரவு! சமஸ்தான எல்லைக்குள்ளேயே பிரிட்டிஷார் பாதுகாப்பு பெற்ற திட்டு திட்டான எஸ்டேட்கள்! பிரிட்டிஷ் ரக்ஷணையிலிருந்த கிராமங்கள் பரோடா சமஸ்தான கிராமங்களுடன் எல்லைக்குள்ளேயே பின்னியிருந்தன. அடுத்திருந்த பவ நகர், ஜுனுகத் சமஸ்தானங்களினுலும் அவ்வப்போது சில்லரைத் தொந்தரவுகள்!—இந்த அலங்கோல நிலைமையே ஸ்ரீநிவாஸராகவையங்காரை எதிர்ப்பட்டிருந்தது.

உட்பூசலை லகுவில் தீர்த்துவிட்டார் ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது சாதுர்யத்தினுலும் பொறுமையினுலும் ஊக்கமும் உறுதியும் தளராத விடா முயற்சியினுலும். சகலருக்கும் அவரிடத்தில் நம்பிக்கை பிறந்தது. எல்லோரும் அவருடன் ஒத்துழைக்கத் தொடங்கினர். புது திவான் பரோடா சேருமுன் சில உயர் அதிகாரிகள் மகாராஜாவைச் சந்தித்து சென்னையிலிருந்து ஒருவரைத் திவானுக நியமித்தது குறித்து ஆட்சேபித்துக் கொண்டனர். கெய்க்வாரோவெனில் முறையீட்டைப் பொறுமையுடன் பூராவும் கேட்டுவிட்டு ஏளனச் சிரிப்புச் சிரித்து விட்டு, சமஸ்தானத்தின் நலன் குறித்து தன்னைக் காட்டிலும் வேறு யாருக்கும் அதிக அக்கறை இருக்க முடியாதென்றும் திவானை நியமிக்கும் உரிமை, அதிகாரம் தன்னுடையதே யாகும் என்றும் சொல்லி அவர்களை அனுப்பி விட்டார்.

புது திவானுக்கு இந்த சமாச்சாரம் தெரிந்து விட்டால்? அவரை எப்படி தலை நிமிர்ந்து பார்ப்பது?—இந்த எண்ணம் இவர்களை உறுத்தியது. இவர்களில் சிலர் உயர் அதிகாரிகளாயிருந்ததால் திவானைச் சந்திப்பதை அதிக நாள் தள்ளிப்போடமுடியாமல் போயிற்று. திவானுக்கும் ஆட்சேப தூது பற்றிய தகவல் எட்டிவிட்டது. இந்த விஷயமே தெரியாதது போல நடந்துகொள்ளும்படி தம் காரியதரிசிக்கும் திவான் சொல்லியிருந்தார். திவானைச் சந்திப்பதை மேலும் தட்டிக்கழிக்க முடியாத நிலைமையில் ஆட்சேபக்காரர்கள் இவரைக் காண தைரியமுடன் முன் வந்தனர். இவர்களில் தைரியசாலியானவர் திவானிடம்

நடந்ததை நடந்தபடி வெளியிட்டு மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் அளித்த பதில் இவர்களை வியக்கவைத்தது! "உங்கள் ஸ்திதியில் நான் இருந்திருந்தால் நானும் அவ்விதமே ஆட்சேபித்திருப்பேன். உங்கள் நிலைமை குறித்து என் பரிபூரண அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என் அபிப்பிராயத்தில் நீங்கள் மதிப்புயர்ந்தவர்களாகிவிட்டீர்கள்" என்றார் ஸ்ரீநிவாஸராகவையங்கார்!

இன்னொரு சமயம் இவரது பெருந்தன்மையை எடுத்துக் காட்டவல்ல இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது. திவானின் நம்பிக்கைக்குப் பாத்திரரும் அவர் கீழ் வேலை செய்தவரும் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவருமான ஒருவருடைய 'கேஸ்' இது. இந்த நபர் உள்ளூர் பத்திரிகையொன்றில் புனைபெயரில் திவானைப் பற்றி தாறுமாருக எழுதிவிட்டார். பத்திரிகாதர்மத்துக்கு விரோதமான கட்டுரை அது. நியாயம், நேர்மைக்குப் புறம்பானது. திவானின் தோற்றம், நெற்றியில் நாமம் முதலியவற்றைக் கொண்டு கேவலமாகத் தூஷித்து எழுதியிருந்தார் பிரஸ்தாப நபர். இதை யார் எழுதியிருக்கக்கூடும் என்று திவானின் காரியதரிசியும் திவானும் சந்தேகிக்க விரும்பவில்லை. பழி ஓரிடம், பாவம் ஓரிடமாகிவிடலாம் என்று அவர்கள் கருதினர். ஆனல் திவான் காரியாலய மானேஜர் சேதுராவ் பீஷ்வா என்பவர் மட்டும் விஷயத்தை அப்படியே விட்டுவிட விரும்பவில்லை. துப்புதுலக்கும் பணியில் இறங்கிவிட்டார் அவர். பத்திரிகாசிரியர் பரம நண்பராதலால் நேராக அவர் அறைக்குள் நுழைந்தார்; டிராயரைத் திறந்து கையெழுத்துப் பிரதியைத் தேடி எடுத்தார்; அதை மடித்து வைத்துக்கொண்டு நேராக திவான் காரியாலயத்துக்கு ஓடோடி வந்து திவானிடம் அதைச் சேர்ப்பித்து விட்டார்! திவான் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் காரியதரிசியும் ஸ்தம்பித்துவிட்டனர். ஆனல் கட்டுரையை யார் எழுதியது என்ற உண்மை தெரியவந்தபோது இவ்விருவருக்கும் ஏற்பட்ட திகைப்பு சொலலத்தரமன்று. உண்மையைக் கண்டதாலுண்டான வேதனை திவானின் உள்ளத்தைத் தைத்தது. இந்த நபரும் இப்படி எழுதியிருக்கக் கூடுமா என்று அவர் மனம் அங்கலாய்த்தது. மறுதினமே குற்றமிழைத்த நபரை திவான் தம் காரியாலயத்துக்கு

வரவழைத்து பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதுண்டா என்றும் தம்மை தூஷித்து எழுதப்பட்ட கட்டுரையில் சம்பந்தமுண்டா என்றும் கேள்விகள் விடுத்தார். இந்த ஆசாமியோ அப்பொழுதும் நிரபராதியாக நடித்தார். தாம் ஏதும் அறியாதவர் என்று பிரமாணம் செய்யவும் அவர் தயங்கவில்லை. அடுத்த க்ஷணமே ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஏட்டுப் பிரதியை எடுத்து அந்த அதிகாரிக்குக் காண்பித்தது தான் தாமதம். குட்டு வெளிப்பட்டதும் ஆசாமியின் முகம் சுண்டியது; நாகுளற, மன்னிக்கும்படி மன்றாடினார். சாதாரணமாக இத்தகைய பெருந்தவறுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரி வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆயினும், ஸ்ரீநிவாஸராகவையங்கார் அவதார புருஷர் தானே என்று விஷயமறிந்தவர்கள் வியக்கும்படி குற்றம் புரிந்தவர் மன்னிக்கப்பட்டார்! இனியாவது சரியாக நடந்து கொள்ளும்படி புத்தியும் புகட்டினார் ஸ்ரீநிவாஸராகவையங்கார்! இந்த சம்பவத்தை ஸ்ரீநிவாஸராகவையங்காரின் காரியதரிசியாயிருந்த ஸ்ரீ கே. சுப்பராவ் "ரிவைவ்ட் மெமரீஸ்" என்ற தமது புத்தகத்தில் அருமையாக விவரித்து எழுதியிருக்கிறார்.

பிளேக் கொள்ளை நோயும் பஞ்சப்பீடையும் பரோடாவில் ஸ்ரீநிவாஸராகவையங்காரை ரொம்பவும் சோதித்து விட்டன. சோதனையிலிருந்து இவரும் வெற்றிகரமாக மீண்டார் என்று சொல்லத் தேவையில்லை. இவர் பதவி யேற்ற முதலாண்டிலேயே, மூன்று வருஷங்கள் கழித்து நிகழ்ந்த கோரப்பஞ்சத்துக்கு முன் எச்சரிக்கை போல, உணவு தானியங்கள் ,பற்றுக்குறை நிலைமை பயமுறுத்தியது! மாசூல் குறைந்து மக்கள் பரிதவித்தனர். இந்த நிலைமையை முற்றவிடாமல் ஜரூராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மக்கள் அல்லலைத் தணிக்க வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. காலஹரணமின்றி பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் கொடுமை அதிகரிக்கவில்லை.

ஆனால் பிளேக் தான் ஸ்ரீநிவாஸராகவையங்காரையும் அதிகாரிகளையும் வாட்டி எடுத்துவிட்டது. பம்பாயிலிருந்தும் சூரத்திலிருந்தும் பிளேக் பீடித்த அண்டைப் பிர

தேசங்களிலிருந்தும் மக்கள் ஓடிவந்துவிட்டதால் பரோடாவில் இந்த நோயின் கோரத்தாண்டவம் பயங்கர ரூபமெடுத்தது. நிலமார்க்கமாகவும் ஜலமார்க்கமாகவும் நோய் பீடித்த வெளியார் பரோடாவுக்குள் புகுவதைத் தடுக்க காவல், ரோந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நோயுற்றவர்களுக்கு சிகிச்சைக்காகவும் நோய் பரவாமல் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, வீடுகளில் கந்தகப் புகை போடுவது, கிருமி நாசினிகள் பீய்ச்சுவது, மருந்து விநியோகம் முதலிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒரு சமயம் பரோடா நகரிலிருந்து சுமார் 15,000 பேரை ஊருக்கு வெளியே முகாம்களுக்கு அப்புறப்படுத்தவேண்டியதாயிற்று. இந்த நடவடிக்கையை எதிர்த்து இவர்கள் ரகளை பண்ணுவதைத் தவிர்க்க மக்கள் தலைவர்களை ஸ்ரீநிவாஸராகவையங்கார் நேரில் சந்தித்து இந்த நடவடிக்கையின் நன்மையை பொறுமையாக எடுத்துச்சொல்லி சாந்தப்படுத்தவும் வேண்டியதாயிற்று. பிளேக் ஒழிப்பு அலுவல் திவான் ஸ்ரீநிவாஸராகவையங்காரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மாண்டவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் குறிக்க விசேஷ ஏஜன்ஸி நிறுவப்பட்டது. பிரதம வைத்திய அதிகாரிக்குப் போலீஸாரே இந்தத் தகவல்களைத் தெரிவிப்பதும் இந்த அதிகாரியின் காரியாலயத்தில் விவரங்கள் குறிக்கப்படும் முறையும் திருப்திகரமாயிராததே இந்த விசேஷ ஏற்பாட்டுக்குக் காரணம். சுகாதார அதிகாரியின் கீழ் பல குமாஸ்தாக்கள் கொண்ட காரியாலயம் அமைக்கப்பட்டது. சுகாதார ஏற்பாடுகளைப் பார்வையிட வேண்டியதோடு பிளேக் கேஸ்களையும் அவ்வதிகாரி கண்டுபிடிக்கவேண்டும் என்றும் ஏற்பாடாகியது. மரணங்கள், வியாதி சம்பவம்பற்றிய தகவல்கள் தவருமல் தெரிவிக்கப்படவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. இதில் தவறினுல் தண்டனைக் குள்ளாக நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வருவோரைத் தடுத்து நிறுத்தி, வைத்தியப் பரிசோதனை செய்து, பிளேக் கேஸ்களைப் பத்துநாட்களுக்கு முகாமில் தங்கவைத்து, நோய் பரவுவதைத் தடுக்க ஏற்பாடாகியது. இந்த முகாம்களில் நாதியற்றவர்களுக்கு இலவச உணவு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் பிளேக் எங்காவது தோன்றியிருந்தால் ஒதுக்கப்பட்ட இடங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கவும் வியாதியேற்பட்ட வீட்டிலிருப்பவர்களை அப்புறப்படுத்தவும், துணிமணிகள், சொந்த வஸ்துக்களுக்குக் கிருமி நாசினி மருந்துகள் தூவவும் வீடுகளிலும் வீட்டுச் சாமான்கள் மீதும் கிருமி நாசினி தூவவும் ஜன நெரிசலைக்குறைக்கவும் வீடுகளில் போதிய வெளிச்சம், காற்றேட்ட வசதிகள் செய்யவும் ஏற்பாடாகியது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஜனங்களின் ஆசாரம், பழக்க வழக்கங்களுக்கு விரோதமுண்டாகாத வண்ணம் வீடு, வீடாகச் சென்று நோய் கேஸ்கள் உண்டா என்று விசாரிக்க இந்த வேலைக்குத் தக்கவர்கள் நியமிக்கப்பட்டனர். பரோடா நகரில் சர்க்கிள் கமிட்டிகள் பல நிறுவப்பட்டன. பல இனத்தவரும் தங்களுக்கென பிரத்யேகமாக ஆஸ்பத்திரிகள் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். பிளேக் கேஸ்களை சாதாரண ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கலாகாதென்ற காரணமுடன் பிளேக் வியாதியஸ்தர்கள் சிகிச்சைக்காக சகல வசதிகளும் கொண்ட பக்கா கொட்டகைகள் எழுப்பப்பட்டன. நோயாளிகளுக்கும் சந்தேகாஸ்பத நபர்களுக்கும் தனித்தனியாக வைத்திய சிகிச்சை வசதி செய்யப்பட்டது.

கிராமப் புறங்களில், கிராமவாசிகளின் வீடுகள் சுத்தமாக்கப்படும் வரை அவர்கள் திறந்த வெளி முகாம்களில் இருத்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து எவரேனும் பாதிக்கப்படாத பகுதிக்குப்போக விரும்பினல் விசேஷ பாஸ் பெற்றிருக்க வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. நோய் ஊன்றிக்கொண்டு பரவிவிட்ட பிராந்தியங்களில் தெரு ஜனங்கள் அத்தனை பேரும் அப்புறப்படுத்தப்பட்டு வீடுகள் சுத்தப்படுத்தப்படுவதற்கும் வெளிச்சம், காற்றேட்ட வசதிகள் பொருத்தப்படுவதற்கும் ஏற்பாடாகியது. முகாம்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டவர்களின் வீடு, சொத்து, உடைமையைக்காக்க போலீஸ், ராணுவ ரோந்துக்கும் காவலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

சுகாதார சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. தெருக்

கள் அகலமாக்கப்பட்டன. மார்க்கெட்களும் ஆடு, மாடு வதைக்கொட்டகைகளும் சுகாதார விதிகளை யனுசரித்து புதுப்பிக்கப்பட்டன. நெடுநாளாகக் குவிந்திருந்த தூசி, தும்பு, கூளங்களை அகற்றவும் ஏற்பாடாகியது.

இத்தனையும் திவானின் நம்பிக்கைக்குப் பாத்திரர்களான சமஸ்தான அதிகாரிகளாலேயே பாராட்டுக்குரிய வகையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. மேலே நிபுணர்கள் சகாயம் தேவையில்லை என்றும் பரோடா சொல்லி விட்டது. பரோடா சமஸ்தான ஏற்பாடுகளை இந்திய சர்க்காரும் பாராட்டியது. இந்திய வைத்திய சர்விஸ் டைரக்டர் ஸர்ஜன் காப்டன் மில்ன், டாக்டர் ஜேம்ஸ் க்ளெக்ஹார்ன், பம்பாய் பிளேக் கமிஷனர் கனம் ஏ. வின் கேட், டாக்டர் டி. இ. டைஸன் முதலிய வைத்திய நிபுணர்கள் பரோடாவில் நடவடிக்கைகளைப் பார்வையிட்டுப் பெரிதும் பாராட்டினார்கள். அடுத்துள்ள பம்பாய் மாகாணத்துக்கின்னும் குறைந்த செலவிலும் அதற்கின்னும் சீரிய முறையிலும் இங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

இவ்வளவு ஜரூரான நடவடிக்கைகள் எடுத்தும் ஏற்பாடுகள் செய்தும் பிளேக் பூரணமாக ஒழியவில்லை. திவான் அளவு மீறி பணம் செலவிடுவதாக கெய்க்வார் குறைபட்டார். ஆகவே ரொம்பவும் சிக்கனமாக செலவு செய்யும்படி சமஸ்தானம் நெடுக அதிகாரிகளுக்கு திவான் உத்திரவிடவேண்டியதாயிற்று. தாமே பொறுப்பேற்க மகாராஜா தீர்மானித்தார். அவ்விதமே அவர் செய்தார். பிளேக் வியாதி திரும்பவும் தலைகாட்டத் தொடங்கியது. ரெஸிடெண்ட் சாவுத்தொகை அதிகரித்து வருவதாகக் கூறி பழைய நடவடிக்கைகளே மீண்டும் எடுக்கப்பட வேண்டுமென்று மகாராஜாவை வற்புறுத்தினர். பழைய ஏற்பாடுகளே சில மாறுதல்களுடன் அமுலிலிருப்பதாகவும் பரோடாவைச் சுட்டிக்காட்டுவானேன், பம்பாயிலும் தான் சாவுத்தொகை குறையவில்லை என்று கெய்க்வார் ரெஸிடெண்டுக்கு நாசூக்காக பதிலடி கொடுத்தார்.

தமது மூன்று வருஷ பதவிகால முடிவு நெருங்க, பரோடாவைவிட்டு எப்பொழுது சென்னை திரும்பப் போகிறோம் என்ற எண்ணம் ஸ்ரீநிவாஸராகவையங்

காரரை ஆட்கொண்டது. வேலைப் பளுவால் இவர் சளைத்து விடவில்லை; பரோடா மக்களின் நலனுக்காகப் பணியாற்ற சங்கல்பம் கொண்டிருந்தவர் இவர்;கெய்க்வாரின் போக்கே பதவியில் பிடிப்பு இழக்கச் செய்தது. பல தடவை இடித்துச் சொல்லியும் இவருக்குப் போதிய அதிகாரம் கொடுக்க மகாராஜாவின் மனம் இசையவில்லை. ஆகவே சென்னைக்கு திரும்பிவிடுவதே மேல், இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவும் கூடாது என்ற அளவுக்கு புண்பட்ட இவர் மனம் கல்லாகியது.

ஊர் புதிது: ஊராரும் புதியவர்கள்: உற்ருர், உறவினர் என்று சொல்லிக்கொள்ளத் தக்கவர்களும் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமையில் பல கஷ்டங்களுக்கிடையே இவர் எவ்வளவோ சாதித்தார். கஷ்டங்களை எதிர்த்து வெல்லும் சாமர்த்தியமும் உறுதியும் வேண்டிய அளவு இருந்தன. ஆனால் இந்த அதிகாரப்பிரச்னையில் மகாராஜா அதிருப்திகரமாக நடந்துகொண்டதுதான் இவரை வதைத்தது.

திவானின் அதிகாரம் சம்பந்தமாக இவருக்கும் மகாராஜாவுக்குமிடையே நடந்த கடிதப்போக்குவரத்து இந்தக் கட்டத்தில் குறிப்பிடத்தக்கது. 1898-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி கெய்க்வார் பின்வருமாறு எழுதினர்:—

தாங்கள் இங்கு தொடர்ந்து பதவி வகிப்பதா அல்லது பிரிட்டிஷ் சர்க்கார் உத்தியோகத்துக்குத் திரும்பிவிடுவதா என்பதுபற்றி இரண்டு, மூன்று தடவை நெடுநேரம் சம்பாஷித்திருக்கிருேம்.

இங்கிருந்து விலகும் பிரச்னையைக் கிளப்பியவர் தாங்களே. நமது பேட்டியில் விஷயங்கள் பொதுப்படையாக பிரஸ்தாபிக்கப்பட்டன; உமது எண்ணம் எனக்கு சரியாக விளங்கவில்லை......திட்டவட்டமாகச் சொல்லும்படி நான் தங்களை வற்புறுத்தினேன். உமது முடிவு எனக்கு தெரியவேண்டியது அவசியமாகிறது. நீங்கள் விலகத் தீர்மானித்து விட்டிருந்தால் வேருருவரைத் தேடிப் பிடிக்க எனக்கு அவகாசம் வேண்டியிருக்கும்... கோடை நெருங்குகிறது. அதையொட்டி நான் இங்கிருந்து கிளம்புமுன் விவகாரங்களைத் தீர்த்துவிட விரும்பு

கிறேன்......தங்கள் விருப்பத்துக்கு மாறாக எந்த முடிவு செய்யும்படியும் நான் வற்புறுத்தத் தயாராயில்லை. உமது கருத்தையறிய உம்முடன் பேசும்படி ஸ்ரீ பண்டிட்டுக்குச் சொல்லியிருக்கிறேன்......

தமது நிலையை எடுத்துரைத்தும் மகாராஜா என்ற முறையில் கெய்க்வாரிடம் மரியாதையும் பவ்யமும் குறையாமலும் இந்தக் கடிதத்துக்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் 1899-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ம் தேதி பின்வருமாறு பதிலளித்தார்:—

......தாங்கள் குறிப்பிட்டிருக்கும் நம் சம்பாஷணைகள்போது என்னுடைய சந்தேகம், சிரமம் எல்லாவற்றையும் தெளிவாக எடுத்துரைத்திருந்ததாகவே நான் நினைத்திருந்தேன். சகலத்தையும் நான் தெரிவித்துவிட்டதால் மந்திரியின் வேலை என்ன, பொறுப்பு என்ன, பொறுப்பை நிறைவேற்ற அவருக்கு என்ன வசதிகள் என்பதை மகாராஜாவாகிய தாங்களே நிச்சயித்துவிடுவீர்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் மகாராஜாவாகிய தாங்கள் என்னுடைய கருத்து, விருப்பத்தைத் திட்டவட்டமாக அறியவிரும்புவதால், தங்களுடைய ஆக்ஞைப்படி அவற்றைத் தெரிவிக்க முயல்வேன்.

மகாராஜாவின் நம்பிக்கையை இழந்துவிட்டதாகவோ அல்லது இழந்துவருவதாகவோ என் உள்ளத்தில் தோன்றிய அச்சத்தை இந்த சம்பாஷணைகள் போது வெளியிட்டிருந்தேன். பிளேக் சம்பந்தமான சகல செலவும் தமது அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று தாங்கள் சமீபத்தில் விடுத்த உத்தரவு இந்த அச்சத்தை ஊர்ஜிதப்படுத்துவது போலிருந்தது. ஆனால் என் எண்ணங்கள் தவறானவை, புகார் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் அதைத் தயங்காமல் வெளிப்படையாகச் சொல்லிவிடக் கூடியவர் என்று தாங்கள் சொன்னது எனக்குக் கொஞ்சம் ஆறுதல் அளிப்பதா யிருந்தது.

நான் கிளப்பிய இரண்டாவது பிரச்னை மந்திரியின் கடமை, பொறுப்பைப் பற்றியதும் இந்த கடமை, பொறுப்பை மகாராஜாவின் திருப்திக்குரிய வகையில் நிறைவேற்ற வசதிகள் யாவை என்பதைப் பற்றியதுமாகும். இந்த விஷயத்தைத் தங்கள் முன் சமர்ப்பிக்கையில் அதி

காரப்பித்து பிடித்தவன் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ராஜாவுக்குத் திருப்தியுண்டாகும் விதத்தில் கடமையை செலுத்தவேண்டிய ஆவலுடன் தான் இதை வெளியிட்டேன். ஆகையினால் தான் மந்திரியின் வேலை, பொறுப்பு யாது என்று தங்களிடமிருந்து அறிய விரும்பினேன். இது தெளிவாகத்தெரிந்து விட்டால் மந்திரிக்கு என்ன வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்பதில் சிரமமிராது.

நிர்வாகத்தில் அனுபவமும் நல்ல பயிற்சியும் மிகுந்து அதன் பலதரப்பட்ட நுணுக்கங்களையும் சுயமாகவே கவனித்து அரசு செலுத்த விரும்பும் ராஜா, பொறுப்பு பூராவையும் தானே ஏற்று யோக்கியதை மிக்கக் காரியதரிசிகளுக்கு நல்ல சம்பளம் கொடுத்து நியமித்துக் கொள்ளலாம்; அல்லது தவிர்த்திருக்கக் கூடிய தவறுகளுக்கு பூரா பொறுப்பை யேற்று, ராஜாவுடன் அடிக்கடி தொடர்பு கொள்ளும் மந்திரி மூலம் நிர்வாகத்தை நடத்தலாம். தனக்கு அதிகாரமுள்ள விஷயங்களில் மந்திரி சுயமாகவே நடந்துகொள்ளத் தக்கவராயிருக்க வேண்டும். அலுவல்களைக் கவனிக்க ராஜாவுக்கு அவகாசமிருப்பதையும் நிர்வாகம் நடத்துவதை யொட்டிய வேதனைகள், கவலைகளை அவர் தாங்கக் கூடியதையும் பொறுத்ததாக இந்த விஷயங்கள் அவ்வப்போது அதிகமாகலாம், அல்லது குறையலாம். மற்ற எல்லா விஷயங்களும் மந்திரி மூலமாகவே ராஜாவுக்கு அனுப்பப்பட வேண்டும். மந்திரியின் சிபாரிசு சரிபடாவிட்டால் அவருடன் ஆலோசனை கலந்த பின்பே ராஜா அவரது சிபாரிசை நிராகரிக்கலாம். மந்திரிக்கும் ராஜாவுக்குமிடையே கருத்து வேற்றுமை தோன்றும் சம்பவங்கள் நிறைய ஏற்படுமானால் மந்திரியின் தகுதி, சக்தி, திறமையில் ராஜா நம்பிக்கை இழப்பதாகவே அர்த்தமாகும். திவான் தன்மான முள்ளவரானால் இந்தச் சந்தர்ப்பத்தில் ராஜிநாமா செய்வதைத் தவிர வேறு வழி இருக்க முடியாது. மக்கள் நலன் சம்பந்தப்பட்ட முக்கிய கொள்கைகள் விஷயமாக கருத்து வேற்றுமை ஏற்பட்ட போதிலும் திவான் கடைபிடிக்க வேண்டிய முறை இதுவே.

மேற் சொன்னது எல்லாம் சரியாயின், காரியதரிசி

வேலையையே செய்ய வேண்டிய திவானுக்குக் கொடுக்கப் படும் சம்பளம் ரொம்ப ஜாஸ்தியானது. பெயரளவில் திவாஞயிருந்து காரிய மேதும் சாதிக்க முடியாதவருக்கு இத்தகைய நிலைமையினல் என்ன கௌரதை? நிர்வாகம் திறம்பட நடக்கவும் இந்நிலைமை உதவாது. நான் தங் களிடம் பதவியேற்ற போது மந்திரி பதவியே கிடைப்ப தாக எண்ணினேன். இப்போதும் அதே நிலைமை நீடிப்ப தாகவே கொள்ளுவோம்.

......நடைமுறை குறித்து நான் கூறும் பின்வரும் யோசனை மகாராஜாவின் அந்தஸ்துக்கோ அல்லது மந்திரி மீது அவருக்குள்ள கண்டிரோலுக்கோ குந்தகம் விளை விக்காது.

(1) நிர்வாகத்தில் ராஜா கவனம் செலுத்தக் கூடி யதையும் அவரது சௌகரியத்தையும் பொறுத்து மந்தி ரியே இறுதியாகப் பைசல் செய்யக்கூடிய விஷயங்களையும் ராஜாவின் உத்திரவுக்கு அனுப்பவேண்டிய விஷயங்களை யும் அவ்வப்போது நிர்ணயிக்க வேண்டும். ராஜாவின் உடனடி உத்திரவைப் பெற முடியாத.அவசர நிலைமையில் தேவையான உத்திரவு பிறப்பிக்க மந்திரிக்கு அதிகார மிருக்க வேண்டும். ராஜாவை மறுதடவை சந்திக்கும் போது மந்திரிதாம் பிறப்பித்த உத்திரவுகளை, அவர் அங்கீ காரத்துக்காக, சமர்ப்பிப்பார். ரெஸிடென்ஸி கடிதப் போக்குவரத்து விவகாரங்கள் இவ்விதம் பைசல் செய்யப் படவேண்டும். சமஸ்தான உரிமை, நலனைப்பொறுத்தும் ராஜாவின் நிதான ஆலோசனைக்கு காத்திருக்கக் கூடியது மான சமயங்களில் தவிர பாக்கி விஷயங்களைத் தீர்க்க மந்தி ரிக்குப் பெருமளவு அதிகாரமிருக்க வேண்டும். இப்படி தீர்மானிக்கப்படும் விவகாரங்கள் குறித்து கருத்து பேதம் இருக்கலாமாயினும் அதைப் பொருட்படுத்தக் கூடாது.

(2) ராஜாவின் உத்திரவுக்காக அனுப்பப்படும் தஸ்த வேஜிகள் மந்திரி மூலமாகச் செல்லவேண்டும். மந்திரியின் சிபாரிசு அங்கீகரிக்கப்படாவிட்டால், உத்திரவு பிறப்பிக்கு முன், தம் சிபாரிசுகளை ராஜாவுக்கு மந்திரி விளக்குவதற் கேதுவாக, தஸ்தவேஜிகள் மந்திரிக்குத் திரும்ப அனுப்பப் படவேண்டும். ராஜாவை மந்திரி காணும் சமயத்தில்

இலாகா தலைவரும் தேவையானால் பிரசன்னமாயிருக்கலாம்.

(3) ஹுஜூர் கம்தார் உத்தியோகம் வகிப்பவர் காரியதரிசியின் வேலையையே செய்பவராக இருக்க வேண்டும். ராஜாவின் ஆக்ஞை பேரில் இலாகா தலைவர்களுக்கு குறிப்புகள் அனுப்புகையில் அவர் "உத்திரவுப்படி" என்று குறித்து அனுப்பவேண்டும்.

(4) முக்கிய விஷயங்களில் மந்திரி ராஜாவுக்கு தம் சிபாரிசை அனுப்புமுன் விசேஷ அதிகாரிகளையோ இலாகா தலைவர்களையோ ஆலோசனை கலக்கலாம். சம்பந்தப்பட்ட எவருடனாவது பேசிய பின்னரே ராஜா முடிவு செய்வதாயிருந்தால் கருத்தை விளக்க மந்திரி அப்போது பிரசன்னமாயிருக்க வேண்டும்.

(5) ராஜா எந்தெந்த புதிய நியமனங்களுக்கு அங்கீகாரமளிக்க வேண்டுமென்பதும் அதிகாரிகள் எந்தெந்த பதவிகளுக்குத் தாங்களாகவே ஆட்களை நியமிக்கலாமென்பதும் ராஜாவின் விருப்பப்படி அவ்வப்போது தீர்மானிக்கப்படலாம். ஆனால் புதிய நியமனங்களை அதிகாரிகள் செய்வதாக இருக்கவேண்டும். மந்திரியின் கருத்தைக் கேட்டுக் கொண்டபின்பே புது நியமனங்கள் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(6) நிர்வாகம் செவ்வனே நடக்க மந்திரி பல ஜில்லாக்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு வசதி செய்து தரப்பட வேணடும்.

(7) நாயிப் திவானுக்கு, திவான் சில அதிகாரங்களைக் கொடுக்கக் கூடியதாயிருக்க வேண்டும். திவான் சர்க்யூட்டில் போயிருக்கையில் அவர் அலுவல்களைக் கவனித்து தஸ்தவேஜிகளில் கையெழுத்திட நாயிப் திவானுக்கு அதிகாரமளிக்க வேண்டும். ஆனால் முக்கியமான தஸ்தவேஜிகளை திவானுக்கே நாயிப் திவான் அனுப்பிவிட வேண்டும்.

(8) மந்திரி கண்டிக்கப்படுவாரானால் அவை ரகசியமாகத் தெரிவிக்கப்பட வேண்டும்......என்னுடைய நிலைக்கு இழுக்கேற்படாமல் பாதுகாக்க ராஜா உறுதி கூறுவாராயின் இந்த சமஸ்தான நலனுக்கு என்னுடைய

முழுத்திறனையும் பிரயோகிப்பேன். பொது ஜனங்கள் மனதில் ராஜாவின் ஆதரவு குறித்து சந்தேகம் தோன்று மானால் நான் தோல்வியுற்றவனாவேன். இந்தக் கதியை அடைவதைவிட பழைய பதவிக்கு நான் திரும்புவதே உசிதமாகப்படுகிறது.

......ஒரு விஷயத்தில் நான் இந்தப் பிரச்னையைக் கிளப்பியதற்காக வருந்துகிறேன். கடந்த ஈராண்டுகளில் தேக நலனையொட்டி வெளியூர்போக விரும்புவதாகத் தாங்கள் பல தடவை என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். நான் இங்கு இன்னும் கொஞ்ச காலம் இருப்பதால் தங்கள் எண்ணம் நிறைவேறக்கூடுமாயின், இந்தக் கடிதம் வரையப்பட்டதாகவே கருதவேண்டாம். பூரண தேகதிடத்துடன் தாங்கள் திரும்பிய பின்னர் இந்தப் பிரச்னையை ஆராய்வோம்..."

இதற்குப்பின் இரண்டு மாதம் காத்திருந்த ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் நிலைமையில் அபிவிருத்தி காணாத காரணத்தினால் தான் போலும் சென்னை உத்தியோகத்துக்குத் திரும்புவதாக ரெஸிடெண்டுக்கு கடிதம் எழுதவிருப்பதை மகாராஜாவுக்குத் தெரியப்படுத்தினார். பரோடா சர்விஸில் நீடிக்க மனமில்லாதவராகத் தாங்கள் சென்னைக்கே திரும்பிவிட ஆவலாயிருப்பதால் குறுக்கே நிற்க மகாராஜா விரும்பவில்லை என்றும் உத்தேச கடிதத்தைத் தாங்கள். ரெஸிடெண்டுக்கு அனுப்பிவிடலாமென்றும் கெய்க்வாரின் காரியதரிசி பதில் எழுதியிருந்தார்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் திவான்பதவியை விட்டுவிடப்போவதாக ஊரில் பேச்சு கிளம்பிவிட்டது. "ஒருவர் உடையை மாற்றிக்கொள்வதுபோல கெய்க்வார் திவான்களை மாற்றிக்கொண்டேயிருக்கிறார். சென்னையிலிருந்து வந்தவரான தற்போதைய திவான் பரோடாவுக்குத் திரும்புவதில்லை என்று சொந்த ஊர் திரும்புவதாகத் தெரிகிறது. திவானும் மகாராஜாவும் ஒத்துப்போக முடியவில்லை என்பது பகிரங்க ரகசியம்......கெய்க்வார் தமது கடந்த 19 ஆண்டு அரசாட்சியில் ஐந்து திவான்களை நியமித்திருக்கிறார். ராஜாவுடன் ஒத்துப்போக இயலாத காரணத்தினாலேயே ஐந்து திவான்களும் பதவியைத் திரஸ்கரித்தனர். ஐவரும் நாணயத்துக்கும் மதியூகத்துக்கும் திற

மைக்கும் பிரசித்தமானவர்கள். இவர்கள் வேலையை விடுகின்றனரென்றால் ராஜாவிடம் பதவிவகிக்க முடியாத நிலைமையே காரணமாயிருக்கவேண்டும்" என்று பரோடா பத்திரிகையொன்று எழுதியது.

தாம் விலகுவதுபற்றி சென்னை சர்க்கார் உயர் அதிகாரி ஒருவருக்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் பின்வருமாறு எழுதினார்:—"......இங்கு உருப்படியாக ஏதும் செய்ய முடியாதென்று தோன்றிவிட்டது......மகாராஜாவின் உத்திரவையே மந்திரி நிறைவேற்றவேண்டியதாயிருக்கிறது. ஆனால் விளைவுகளுக்கெல்லாம் மந்திரியே ஜவாப்தாரியாக வேண்டியிருக்கிறது. இதுபற்றி மகாராஜாவிடம் பலதடவை பேசிப் பார்த்தேன். நிலைமை சீரடையாது போலிருக்கிறது. தற்போதைய நிலைமையில் நீடிக்காமல் விட்டுவிடுவது ஒன்றே வழி......என்னிடத்தில் தாங்கள் அன்பு காட்டி வந்திருப்பதால் இவற்றைச் சொந்த முறையில் உங்களுக்கு எழுதுகிறேன். நிலைமை இவ்வளவுக்கு முற்றியிருப்பது கண்டு நீங்கள் நிச்சயம் ஆச்சரியப்படுவீர்கள்."

திவான்பதவியை விட்டுவிடத் தீர்மானித்ததற்கு ஒரு வருடம் முன்னமேயே தம் பழைய காரியதரிசிக்கு எழுதியதொரு லிகிதத்தில் மகாராஜாவுக்கும் திவானுக்குமிடையே நிலவும் உறவை ஒரு வாக்கியத்தில் இவர் சுருங்கக் கூறியிருந்தார். "மந்திரி தனக்குப் பெருமையோ பொதுஜன கவனத்தையோ தேடிக்கொள்வது நல்லதல்ல" என்று இவர் ஸ்ரீ கே. சுப்பராவுக்கு 1898-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 27-ம் தேதி எழுதியிருந்தார்.

பரோடாவில் இவர் புரிந்த சாதனைகள்பற்றி 1899-ம் வருஷம் மே மாதம் 22-ம் தேதி பம்பாய் கெஜட்டில் பிரசுரமாயிருந்த விமர்சனத்தை அப்படியே மொழி பெயர்த்துக் கூறினால் பல கஷ்டங்கள், சிரமங்கள், கவலைகள், வேதனைகள், தொந்திரவுகளிடையே இவர் எவ்வளவு மகத்தான செயலாற்றியிருக்கிறார் என்று விளங்கும்.

"பரோடா திவான் திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் இன்று முதல் ஜுலை 15-ந் தேதிவரை ரஜாவில் போகிறார். ரஜாவுக்குப்பின் அவர் மீண்டும் பரோடாவுக்குத் திரும்புவதாக இல்லை. திவான்பதவியில்

மோகம் விழுவது இயற்கையாயினும், தாம் பரோடாவில் நீடித்து சேவை புரிவதால் உருவான பலனிராது என்று மனதுக்கு உறுதியாகப்பட்டிருக்கும் காரணத்தினுலேயே அவர் விலகுகிருர். இந்தக் குறுகிய காலத்தில் அவரது சேவையை நோக்குமிடத்து அவர் விட்டுப்போவது வருந்தத்தக்கது. ராஜா ஸர் டி. மாதவராவின் சாதனைக்கொப்பாகக் கடந்த மூவாண்டில் இவர் ஆட்சியில் பரோடா தர்பார் பல நன்மைகளை யடைந்திருக்கிறது. அபின் சம்பந்தமாக பம்பாய்க்கும் பரோடாவுக்குமிடையே நிலவிய சள்ளை புது திவான் பதவியேற்றதும் இன்னும் தீவிரமாகியது. பரோடா கள்ளக்கடத்தல் வழக்கு விவகாரம் முற்றியது. பரோடாவில் அபின் சம்பந்தமான நிர்வாகம் முழு மோசம் என்ற குற்றச்சாட்டும் கிளம்பியது. ஒரு பிரமாதமான அறிக்கையில் பரோடா திவான் இந்தக் குற்றச் சாட்டைத் தகர்த்தார். இந்த ரிப்போர்ட்டைக் கண்டதுமே எதிரி சாமானியப்பட்டவரல்லர் என்பது பம்பாய்க்கு விளங்கியிருக்கவேண்டும். உண்மையில் இந்தச் சள்ளையில் பம்பாய் சர்க்கார் நிலை நிர்மூலமாகியது. பரோடா திவானின் வாதத்தை இந்திய சர்க்கார் ஏற்றனர். அபின் நிர்வாகம் திருப்திகரமாகவே நடப்பதாக நிலை நாட்டப்பட்டது. பம்பாய் சர்க்காருக்கும் சம்பந்தமிருந்த ஒரே ஒரு கள்ளக்கடத்தல் வழக்கைக்கொண்டு பரோடா நிர்வாகத்திற் கெதிராக யாதொரு முடிவும் செய்ய முடியாதென்று விளக்கமாகியது. இன்ஞெரு விவகாரத்திலும் ச்மஸ்தானத்துக்கு சாதகமாக இந்திய சர்க்கார் முடிவு செய்ய பரோடா திவான் தமது சாமர்த்தியத்தைப் பிரயோகித்திருக்கிருர். தாரி ராணுவப் பட்டாளத்தின் மீது யார் கண்டிரோல் செலுத்துவது என்ற விவகாரம் அது. கத்தியவாரில் பயங்கரவாதிகளை ஒடுக்க கெய்க்வார் செலவில், கவர்னர் ஜெனரலின் ஏஜண்டின் அஸிஸ்டண்டின் கண்டிரோலில், தாரியில் இந்த ராணுவம் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்திருக்கிறது. இந்த ஏற்பாட்டின் விளைவாக லடாய் தோன்றியது. இந்த ராணுவத்தின் மீது பிரிட்டிஷ் அதிகாரி கண்டிரோல் கொண்டிருப்பதை ரத்து செய்ய பரோடா திவான் நியாயத்தை எடுத்துரைத்து இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருந்தார். இந்திய சர்க்கார் இதற்கு சம்மதித்தது. ரிடையராகும் திவானுக்கு

இது பெருமையளிக்கக் கூடியது. இன்னும் பல விவகாரங்களிலும் பரோடாவுக்குச் சாதகமாக இந்திய சர்க்கார் விட்டுக்கொடுக்கச் செய்திருக்கிருர் இந்த மந்திரி தமது சாதுர்யத்திஞலும் நியாயம், நேர்மை மிக்கப்போக்கிஞலும்.

இவர் செய்திருக்கும் மற்ற சில சீர்திருத்தங்களைப் பிரமாதமான சாதனைகளில் சேர்க்காவிட்டாலும் அனுபவமும் ஆற்றலும் மிகுந்தவரின் திறன் அவற்றில் பிரதிபலிப்பது நிச்சயம். சமஸ்தானத்தில் விவசாயத்தொழிலின் நிலைமை இவர் கவனத்தைக் கவர்ந்தது. கிணறுகள் வெட்டிக் கொள்வதற்காக விவசாயிகளுக்கு கடன் அளிக்கும் விதிகள் திருத்தப்பட்டன. கடனைத் திரும்ப வசூல் செய்யும் முறையும் விவசாயிகளுக்குக் கஷ்டமுண்டாகாத வண்ணம் மாற்றப்பட்டது. நிலத்தீர்வையை சற்றே உயர்த்தி அதன்மூலம் கடனை வசூலித்துக்கொள்ள ஏற்பாடாகியது. தங்கள் சக்திக்கப்பாற்பட்ட காரணங்களால் கடன் உதவியால் பயனடையாத ரயத்துகளிடமிருந்து கடன் வசூல் செய்யக்கூடாதென்று உத்திரவிடப்பட்டது. லேவாதேவிக்காரர்களின் கொடுமைக்கு முற்றுப்புள்ளியிட, பரோடாவின் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் ரயத்துகளுக்கு லகு நிபந்தனைகள் பேரில் கடன்கொடுக்க விவசாய பாங்க் நிறுவப்பட்டது. விவசாயப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும் விவசாய முறைகள் குறித்து சர்வே நடத்தவும் ஏற்பாடாகியது. வெறுக்கத்தக்க பல வரிகள் ரத்து செய்யப்பட்டு நியாயமானதெனச் சொல்லத்தக்க ஒரு வரி விதிப்புக்குள் அவை யாவும் அடக்கப்பட்டன. பரோடா நகரில் வர்த்தக விருத்திக்கு இடையூருயிருந்த கஸ்டம்ஸ் தீர்வை புனர் பரிசீலிக்கப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டது. சர்வே, ஸெட்டில்மெண்டு இலாகாவில் பல முக்கிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. பிறத்தியாருக்கு உடமையாக்கப்பட்டிருந்த கிராமங்கள் பிரச்னை தீர்க்கப்பட்டது. தப்தி பள்ளத்தாக்கு ரயில்வே திட்டத்தால் வியாரா, ஸொங்காத் காட்டுப் பிரதேசத்துக்கு மதிப்பு அதிகரித்திருக்கிறது. செப்பு நாணயத்தின் மதிப்பு அபாயகரமாக சரிந்துவிட்டதால் ஏழைகள் பரிதவித்தபோது, தேவைக்கு அதிகமாக நாணயம் வெளியிடப்பட்டதாலுண்டான இந்த கேட்டை நிவர்த்திக்க, சமஸ்தானத்துக்குத்

தேவையான அளவுக்கே நாணயங்கள் புழங்கச்செய்தார் இவர். இந்நடவடிக்கையில் நிறைய அரையணு காசுகள் வாபஸ் பெறப்பட்டன. ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க தாராளமாக மான்யம் தரப்பட்டது. பள்ளிக் கூட ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டது. ஆரம் பப் பள்ளிக்கூடங்களுக்கு தக்கவர்கள் ஆசிரியர்களாக கிடைக்க வேண்டுமென்றே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. தாய்மொழிப் பள்ளிக்கூடங்களில் விவசாய போதனையை இவர் கட்டாயமாக்கினர். கலாபவன் நிலை யத்தில் கைவேலைப்பாடு பயிற்சி அளிக்கப்பட்டு வந்த தற்கு ஊக்கமளிக்க சர்க்கார் காரியாலயங்களுக்குத் தேவை யான சாமான்கள் அங்கிருந்தே வாங்கப்படவேண்டு மென்று உத்திரவிடப்பட்டது. பரோடா நகரத்தில் ஜன நெரிசலைத் தணிக்கும் திட்டமொன்று அங்கிகரிக்கப் பட்டது.

கிராமங்களில் சர்வே அலுவல்களைக் கவனிக்கும் அதி காரிகளை உபத்திரவப்படுத்தி வந்த சண்டைக்கார ரஜபுத் திரர்களை இவர் அடக்கியது பெருஞ்சாதனையாகும்."

இந்த ரஜபுத்திரர்களின் அட்டகாஸம் (பில்வாய் விவ காரம்) அடக்கப்பட்டதுபற்றி கெய்க்வாரின் வாழ்க்கைச் சரிதையை எழுதிய ஸ்டான்லி ரைஸ் பின்வருமாறு எழுது கிருர்.—

"சர்வே இலாகாவினர் நிலங்களை அளக்க முன்வந்த போது, ரஜபுத்திரர்கள், ஆயுதமும் பணமும் திரட்டிவைத் திருந்து, அதிகாரிகளையும், கூட துணை சென்ற போலீ ஸாரையும் தாக்கி வெருட்டிவிட்டனர். கிராமத்தை ரஜ புத்திரர்கள் ஒரு கோட்டையாக்கிவிட்டனர். முற்றுகை நிலைமைக்கும் தயாராகி சர்க்காரின் அதிகாரத்தை எதிர்க்க முற்பட்டனர். போலீஸாரால் ஏதும் செய்ய முடியாமல் போகவே ராணுவம் தருவிக்கப்பட்டது. ரெஸிடெண்ட் சமரஸப் பாதையை உபதேசித்தார்; கூடுமானவரை இந்த ஆலோசனை பின்பற்றப்பட்டது......

இறுதியில் 2000 துருப்புக்கள் வரவழைக்கப்பட்டன. ரஜபுத்திரர்களில் 13-பேர் மாண்டனர். தற்செயலாக கிராமம் தீக்கிரையாகிவிட்டது. ராணுவத்தினர் தரப்பில் ஐவருக்குக் காயம்."

திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் திவான் பதவியேற்ற சில மாதங்களுக்குள்ளாக ராஜப்பிரதிநிதி எல்ஜின் பிரபு 1896-ம் வருஷம் நவம்பரில் பரோடா விஜயம் செய்ததும் பின்னர் அடுத்த வருடத்தொடக்கத்தில் குவாலியர் மகாராஜா வந்திருந்ததும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். எல்ஜின் பிரபு விஜயத்தின்போதுதான் மிகவும் பரிதாபகரமான சம்பவம் நிகழ்ந்தது.

ராஜப் பிரதிநிதிக்காக அரண்மனையில் விருந்துபசாரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்ஜின் பிரபுவின் பவனிமார்க்கம் ஜன சமுத்திரமாயிருந்தது: இடையே விளக்கொளி இல்லாத பகுதியில் பெரிய கம்பமொன்று ஜன நெரிசலைத் தாளாமல் விழுந்துவிட்டது. கீழே கம்பம் விழுந்துகிடப்பது தெரியாமல் அதுகாலில்பட்டு இடறி விழுந்தனர் முதல் கோஷ்டியினர். பின்னால் வந்துகொண்டிருந்த சாரி சாரியான கும்பல் ஒருவர்மீதொருவர் விழ கூச்சல்களும் கதறல்களும் காதைத் துளைத்தன. அல்லோல கல்லோலமாகிய அந்தப் பகுதியில் அந்த க்ஷணத்துக்குள் பலர் மாண்டனர். அச்சமயம் அங்கிருந்த திவானின் காரியதரிசி திவானிடம் சமாச்சாரத்தைச் சொல்ல அரண்மனைக்கு விரைந்தார். ஆனால் அதற்குள் தகவல் எட்டிவிட நிவாரண நடவடிக்கைகள், பண உதவி முதலியவற்றுக்கு திவான் உத்திரவிட்டிருந்தார்! விருந்து முடிந்ததும் திவானும் காரியதரிசியும் விபத்து ஸ்தலத்தைப் பார்வையிட்டுவிட்டு ஆருத்துயருடன் சுமார் நள்ளிரவு சமயம் வீடு திரும்பினர்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் சென்னை சர்விஸுக்குத் திரும்ப தீர்மானித்துவிட்டதை யடுத்து சென்னை சர்க்கார் அவருக்கு கலெக்டர் பதவியளிக்க முன்வந்தனர். ஆனால் உடனே அந்தப் பதவியை யேற்கவேண்டுமென்ற அசாத்திய நிபந்தனை விதிக்கப்பட்டது. மே 20-ம் தேதிக்குமுன் பரோடாவை விட்டுக் கிளம்புவதற்கில்லை என்றும் ஓய்வு அவசியம் தேவையாயிருப்பதால் ராஜா அனுமதியுடன் இரண்டுமாத கால ரஜா எடுத்துக்கொள்ளப் போவதாகவும் இவர் இதற்குப் பதில் அளித்துவிட்டார்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் பரோடாவை விட்டுக் கிளம்பத் தீர்மானித்துவிட்டது நிலைமையை அறிந்தவர்

களையும் சமஸ்தான அதிகாரிகள் பலரையும் வருத்தியது. பரோடா சமஸ்தானத்தின் துரதிர்ஷ்டமே இதற்குக் காரணம் என்று தங்கள் உள்ளத்தைத் திறந்து அவர்கள் கடிதம் எழுதினர். பரோடா மகாராஜாகூட மந்திரிக்கு சாத்தியமான வசதி செய்து கொடுக்கத் தயாராயிருப்பதாயும் ஆனால் தன்னுடைய அதிகாரத்தைக் குறைத்துக் கொள்ள ஒப்புக்கொள்ள முடியாதென்றும் எழுதியிருந்தார். ஆனால் இவர் சென்னை உத்தியோகத்துக்கே திரும்பிவிட திடசங்கல்பராயிருந்தார்.

ஆகவே மகாராஜா வெளியூரிலிருக்கையில் இவர் தமது முடிவு பிரகாரம் கெய்க்வாரிடம் சொல்லிவிட்டு சென்னை திரும்ப ஆயத்தமானார். இவரது சேவையையும் ஆலோசனைகளையும் பாராட்டி எழுதிய கடிதத்தில் தம்மைக் கண்டுவிட்டு விடைபெற்றுக் கொள்ளும்படி கெய்க்வார் இவருக்குத் தெரிவித்திருந்தார்.

பரோடா ஜனங்களும் அதிகாரிகளும் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்குப் பிரமாதமானதொரு பிரிவுபசாரம் நடத்தினர். இத்தகைய உபசாரம் இவருக்குமுன் வேறெந்த திவானுக்கும் கிடைத்ததில்லை என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. பீபிள்ஸ் பார்க்கில் முதல்நாள் இந்த உபசாரம் நடத்தப்பட்டது. மறுநாள் பரோடா அதிகாரிகளும் பிரமுகர்களும் ரயிலடிக்கு வந்திருந்தனர். ராணுவத்தின் மரியாதையை யேற்றபின் ஸ்ரீநிவாஸராகவையங்கார் மீது மலர்மாலைகள் மலைபோல் குவிந்தன. ரயில் புறப்பட்டபோது நீதிபதி ஜஸ்டிஸ் தயாப்ஜி வாழ்த்துக் கோஷமிட கூடியிருந்தவர்கள் அதில் சேர்ந்து விண்ணைப் பிளக்கும்படி சப்தமெழுப்பினர்.

மூவாண்டுகளுக்குள் இவர் திவான் பதவியிலிருந்து விலகுவது குறித்து பம்பாய் நபர் ஒருவர் ஒரு பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதினார்.—“......மக்கள் அனைவரின் அபிமானத்துக்கும் ப்ரீதிக்கும் பாத்திரராயிருந்தார் இவர். எவர் வேண்டுமானாலும் இவரை அணுக முடிந்தது. மக்களின் குறைகளுக்கு அனுதாபமுடன் செவிசாய்த்தவர். இதனால் இவர் பிரிவு எல்லோர் உள்ளத்தையும் தொட்டுவிட்டது......

இவர் நிர்வாகத்தில் ஒரு அம்சம் குறிப்பிடத் தக்கதாக

முன் நிற்கிறது. யஜமானிடத்தில் விசுவாசமும் கீழ் அதிகாரிகளிடத்தில் அனுதாபமும் இவர் காட்டியதாகும் அது. இந்தக் குண விசேஷம் தான் பரோடாவில் உட்பூசலைக் களைந்தது......சுயமாகவே இவர் நாணயஸ்தர்; பிளவு சக்திகளை நிர்மூலமாக்க இந்தப் பெருந்தன்மை குணம் காரணமாகியது. சுபாவமாகவே போட்டி, பூசலைவிரும்பாதவர். தாம் பதவியேற்பதற்குமுன் நிலவிய நிலைமை நீங்கி இப்போது பரோடா திடகாத்திரமுற்றிருப்பது குறித்து பெருமைப்படவேண்டியவர் இவர். ரெஸிடென்ஸி பற்றியவரை, கர்னல் மார்டெல்லி பதவியேற்றதைத் தொடர்ந்து உறவு நிலைமை சீரடையத் தொடங்கியது. நிலைமை பெரிதும் அபிவிருத்தி யுற்றிருப்பதற்கு சந்தடி செய்யாமலும் திடமாகவும் கண்டிப்பாகவும் திவான் நடந்துகொண்டது காரணமாகும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. மொத்தத்தில், ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமையை நினைவுபடுத்திக் கொண்டால் இப்போது பரோடாவின் நிலைமை மிகவும் மேலானதாக ஆகியிருக்கிறது என்றே சொல்லவேண்டும்......

திவானின் பிரிவினால் ஆழ்ந்த அறிவாளியையும் தாராள மனோபாவமுள்ளவரையும் இழக்கிறோம்; அனுதாபம் மிக்கவர்; உறுதி பூண்ட ராஜதந்திரி; விசுவாசம் குன்றாத சேவகர்; எல்லாவற்றிற்கும் மேலாக ஏழை, எளியவர், தனவந்தர் என்ற வித்தியாசம் பாராட்டாதவர்; எல்லோருக்கும் உண்மை நண்பராயிருந்தவரை இழக்கிறோம்."

இன்னொரு பத்திரிகை பின்கண்டபடி குறிப்பிட்டிருந்தது;—"......மூவாண்டுகளுக்கு முன்பிருந்ததைக் காட்டிலும் பரோடா நிர்வாகத்தின்தரம் வெகுவாக உயர்ந்திருப்பதற்கும் உள்ளூர் பிரமுகர்களையே மகாராஜா திவானாக நியமிக்கக்கூடிய நிலைமை இப்போது தோன்றியிருப்பதற்கும் கடந்த மூவாண்டில் படாடோபமின்றி, பாரபட்சமின்றி நல்ல திறம்பட்ட முறையில் இவர் நிர்வாகம் நடத்தியிருப்பதே மூலகாரணமாகும்......இவர் பொறுப்பேற்ற சமயத்தில் பகை முற்றியிருந்த தெற்கத்தியரும் கூர்ஜரத்தரப்பினரும் இப்போது பரஸ்பரம் சுமுகமாகியிருக்கின்றனர்; தங்களுக்கிடையே நிலவிய பழைய விரோதத்தை விட்டொழித்து, இரு தரப்பினரும் தங்களைப் பார

பட்சமின்றி நடத்திய திவானுடன் ஒத்துழைத்திருக்கின்றனர். சுயநல மனோபாவம் அறவே படைத்திராத திவான் சமஸ்தான நலனிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து உழைத்தார். இவருக்கிருந்த சூழ் நிலையில் இவருடைய சாதனைக்கின்னும் எவரும் அதிகமாக சாதித்திருக்க முடியாது. சுபாவமாகவே சாத்வீக குணம் படைத்தவர்; முறையீடுகளுக்குப் பொறுமையுடன் செவி சாய்த்தவர்; சம அந்தஸ்துக்குரியவர்களுடனும் கீழ்ப்பட்டவர்களுடனும் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டவர்; நாளுக்கு 16 மணி நேரத்துக்குக் குறையாமல் உழைத்தவர்: நெருங்கியவர்களின் திறமை, குற்றங் குறைக்கேற்றபடி அவர்களிடம் விருப்பு அல்லது பிடிப்பின்மையைக்காட்டியவர். திவான்பதவி வகிக்கக்கூடியவர்களுக்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் உதாரண புருஷராக விளங்கினர் என்றே சொல்ல வேண்டும்......கெய்க்வாரைப் போன்ற தேசாபிமானம் படைத்த, மேதாவியான யஜமானிடம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பணியாற்றியது தனி முக்கியத்வத்துக்குரியதாகும் ......பம்பாய் கெஜட் கூறியதுபோல கெய்க்வாரின் அபிமானத்துக்கு இவர் பாத்திரராகியது இவரது உயர்தர திறனுக்கு அத்தாட்சியாகும்......"

ஸ்ரீநிவாஸராகவையங்கார் பரோடாவை விட்டுக் கிளம்பியதும் நெடுநாளாக மறைந்திருந்த உட்பூசலும் பிணக்கும் மீண்டும் தலையெடுத்தது. முக்கிய பதவிகளுள் பட பல பதவிகளுக்குப் புதியவர்கள் நியமனமும் உத்தியோக மாற்றங்களும் நடைபெற்றன. மேலும், மிக்க கொடூரமான, மோசமான பஞ்சம் ஏற்படக்கூடியதற்கான அறிகுறிகளும் தலைகாட்டின. ஸ்ரீநிவாஸராகவையங்காரின் திறமை குறித்து மதிப்புக்கொண்டிருந்து ஏற்கெனவே பலதடவை அதைப் பகிரங்கமாகவும் வெளியிட்டிருந்த மகாராஜா மீண்டும் இவரையே திவான் பதவியேற்கும்படி அழைக்கத் தீர்மானித்தார். இது விஷயமாக ஜூலை 4-ந் தேதியே ஒரு தந்தி அடித்தார் மகாராஜா. கூடவே ஒரு கடிதமும் எழுதினர். பரோடா சமஸ்தான மக்களின் க்ஷேமத்தில் விசேஷ அக்கறைக்கொண்டிருந்த இவர் ராஜாவின் அழைப்பை யேற்ருர்.

பரோடா சமஸ்தான உயர் அதிகாரி ஒருவருக்கு இவர்

பின்கண்டவாறு தந்தி அடித்தார்:—“என் கடமையை நிறைவேற்றுவதில் மகாராஜாவின் பூரண ஆதரவும் நம்பிக்கையும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் மீண்டும் திவான் பதவி யேற்க ஒப்புக்கொள்கிறேன். கால விரயம் கூடாதென்ற காரணத்தால் சென்னை சர்க்காரின் கருத்தைக் கேட்டதில் அவர்கள் தடைசொல்லமாட்டார்கள் என்று அறிந்துகொண்டேன். பதவி காலத்தை யறிய சென்னை சர்க்கார் ஆவலாயிருக்கின்றனர். பரோடா திரும்பியதும் முறைப்படி தக்க துறை மூலம் விவரம் தெரிவிக்க உறுதிமொழி கூறியிருக்கிறேன். ரஜா காலம் முடிந்ததும் ஒருவாரமாவது அவகாசம் வேண்டியிருக்கும். மகாராஜாவுக்கு இதைத் தெரியப்படுத்தி தந்திமூலம் பதில் தெரிவிக்கவும்.”

இந்தத் தந்தி மகாராஜாவுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளித்ததாவது:—“தம்முஸ்கர் மூலம் தந்தி கிடைத்தது. என் நம்பிக்கைக்கு ஏற்கெனவே அருகராயிருந்திருக்கிறீர்கள்; இனியும் நீடித்துகிடைக்கும்...... ரஜா முடிந்ததும் மீண்டும் பதவியேற்க ஒருவார காலம் எடுத்துக் கொள்ளலாம்......”

ஆனால் அதிகார பிரச்னை தெளிவாகத் தீர்க்கப்படவில்லை. கெய்க்வார் இது விஷயமாக வாக்குறுதி அளிக்கத் தயாராயில்லை. இவர் பரோடாவுக்குத் திரும்பவேண்டுமென்று ஆவல் மிகுந்திருந்தார் மகாராஜா; ஆனால் அதிகாரப் பிரச்னையில் உறுதிமொழிகூறுவது தம் அந்தஸ்துக்கு இழுக்கென நினைத்துவிட்டார் போலும்! இத்துடன் புது சிக்கலும் தோன்றியது. ரெஸிடெண்ட் மூலம் விஷயமறிந்த ராஜப் பிரதிநிதி இவருக்குப் போதிய அதிகாரம் அளிக்கப்பட்டால்தான் திரும்பவும் இவரது சேவையை இரவல் அளிக்க முடியுமென ஒரு பேட்டியின்போது சிம்லாவில் மகாராஜாவிடம் தெரிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து ஸ்ரீநிவாஸராகவையங்கார் மீண்டும் சென்னை சர்விஸுக்குத் திரும்புவதாகவும் கெஜட்டில் பிரசுரமாகியது. ஆனால் இந்தப் பிரச்னை தீர்க்கமுடியாத இடைஞ்சலாகிவிடவில்லை.

இடையே கெய்க்வாருக்கு எழுதிய கடிதமொன்றில், மகாராஜாவின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படக்கூடிய

விதத்தில் அதிகாரம் கோரவில்லை என்றும் நிர்வாக அலுவல் விஷயத்தில் தாம் முன்னர்கோரிய வசதிகள் கிடைக்குமென்பதற்கு உறுதிமொழி கூறப்பட்டாலன்றி பதவியேற்பதால் பிரயோசனமிராது, சென்னை உத்தியோகத்தை ஏற்பதே மேல் என்றும் இவர் தெரிவித்திருந்தார்.

இதற்கு திட்டவட்டமான பதில் அளிக்காமல் மழுப்பிய கெய்க்வார், நிர்வாகம் சீரியமுறையில் நடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, எடுக்கப்பட்டும் வருகிறது, இனியும் எடுக்கப்படும் என்றும் இதற்குமேல் ஏதும் கூறத் தேவையில்லை என்றும் பதவிகாலம், மற்ற விஷயங்கள் பற்றிப் பேச நேரில் வரலாம் அல்லது எவரையாவது அனுப்பலாம் என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் மீண்டும் இந்தத் தடவையும் தமது பிரிய சகோதரர் ஸ்ரீ கஸ்தூரி ரங்கையங்காரை பரோடாவுக்கு அனுப்பத் தீர்மானித்து மகாராஜாவுக்கும் அவ்விதமே தகவல் தெரியப்படுத்தினர். மகாராஜாவுடன் பேச்சு நடத்திவிட்டு அனுப்பிய தந்திச்செய்தியில், சம்பளம் மாதம் ரூபா 5000 என்றும் பதவிகாலம் இரு வருஷங்கள் என்றும் தன் விருப்பப்படி ராஜா பதவிகாலத்தை நீடிக்கலாமென்றும் ஸ்ரீ கஸ்தூரி ரங்கையங்கார் அறிவித்தார்.

இந்த விபரமெல்லாம் வெளியானதையடுத்து இவர் அதிக சம்பளம் கிடைப்பதால் அதற்கு ஆசைப்பட்டு அதிகாரி பிரச்னையில் தம் நிலையைக் கைவிட்டு விட்டதாகப் பேச்சுக் கிளம்பியது. இவரையே மீண்டும் திவான் பதவியேற்க அழைப்பதே சமஸ்தான நலனுக்குகந்தது எனவும் அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமெனவும் மகாராஜாவை வற்புறுத்திய ரெஸிடெண்ட் கூட இவர்பேரில் இந்தத் தவருன எண்ணம் கொண்டுவிட்டார். இந்த சமாச்சாரத்தைக் கேள்விப்பட்ட ஸ்ரீநிவாஸராகவையங்கார் இந்தத் தப்பு எண்ணத்தை விலக்கவும் தான் திரும்பவும் பதவியேற்க ஒப்புக்கொண்டதன் காரணங்களை விளக்கியும் ரெஸிடெண்ட் கர்னல் மார்டெல்லிக்கு உடனே கடிதம் வரைந்தார். கடிதத்தின் ஒரு பகுதி குறிப்பிடத் தக்கது:—

"என்னை பரோடாவுக்குத் திரும்பும்படி கெய்க்வார்

மகாராஜா கேட்டுக்கொண்டிருக்கிருர். அலுவல் நடத் தப்படுவது சம்பந்தமாக வாக்குறுதி அளிக்க அவர் மறுக் கிருர்; பூரண அரசுரிமை கொண்ட ராஜா வாக்குறுதி அளிப்பது மதிப்புக் குறைச்சல் என்று அவர் எண்ணு கிருர். நிர்வாகம் திறம்பட நடப்பது குறித்து யோசனை கள் தெரிவிக்கப்பட்டால், அவை தக்கபடி ஆலோசிக்கப் படும் என்று அவர் கூறியிருக்கிருர். மேலும் ஈராண்டு பதவி காலத்துக்கு உத்திரவாதம் கூறியிருக்கிருர். சம் பளத்தை ரூபா 5000-க்கு உயர்த்தியிருக்கிருர். நிர்வாகம் சம்பந்தமாக அவர் உறுதிமொழி கூருதது அதிருப்திகர அம்சமே; ஆனுல் நான் திரும்பவேண்டுமென்று மகாராஜா ஆவலாயிருப்பதால் திறம்பட்ட நிர்வாகத்துக்கு சகல வசதி களும் அவர் செய்து தருவார் என்று எதிர்பார்க்கலாமென வும் ஆகவே சில சொந்தக் காரணத்தின்பேரில் அவர் அளிக்கத் தயங்கும் உறுதிமொழி விஷயமாக விடாப் பிடி யாய் இருப்பது அழகல்ல என்றும் கனம் ஏ. டி. அருண் டேலும் பிற நண்பர்களும் எனக்கு ஆலோசனை கூறினர். ஆகவே அவர்கள் ஆலோசனையை யேற்று மீண்டுமொரு தடவை சோதனைக் காளாகத் தீர்மானித்தேன்.''

மற்ருெரு காரணத்தாலும் இவர் சென்னையைவிட்டு எங்காவது போனுல் தேவலை என்றிருந்தார். தமது இரண் டாவது மகன் சாரங்கபாணி அகால மரணமடைந்தது இவர் பரோடாவுக்குத் திரும்ப தீர்மானித்ததற்கு ஒரு காரணமாகும். புத்திரன் சாரங்கபாணிக்கு முந்திய வரு ஷத்தில் தான் விவாகமாகியது. கல்யாணமான மறு வரு ஷமே அவர் காலமாகிவிட்டது சோகத்தை இன்னும் அதி கரிக்கச் செய்தது. சாரங்கபாணியின் திருமண தினத் தன்றே அந்த வைபவத்தை யொட்டி போடப்பட்டிருந்த பிரும்மாண்ட பந்தல் தீப்பிடித்து பஸ்மமாகிவிட்டது, மறு வருஷ அசம்பாவிதத்துக்கு அபசகுனம்போல். பெண் வீட்டார் ராத்திரியோடு ராத்திரியாகவே பந்தலை மீண்டும் பழையபடி போட்டுவிட்டனர்! ஆனுல் ஒரு வருஷத்துக்குமுன் எச்சரிக்கை விடுத்திருந்த காலன் இவரது அருமை மகனின் உயிரைக் காவுகொண்டுவிட் டான்.

இவர் பரோடாவில் திரும்ப திவான் பதவியேற்கவிருந்

ததுபற்றி "மதராஸ் டைம்ஸ்" பத்திரிகை எழுதியிருந்தது குறிப்பிடத் தக்கது. அந்தப் பத்திரிகை எழுதியதாவது:—

"கனம் திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் திரும்ப பரோடா திவான்பதவியேற்க விருப்பதாக அறிகிறோம். கெய்க்வார் மகாராஜா இங்கிலாந்துக்குப்போக ஆவலாயிருக்கிறார். திருப்திகர ஏற்பாடுகளைச் செய்துவிட்டே வெளிநாட்டுக்குக் கிளம்ப வேண்டுமென இந்திய சர்க்கார் கெய்க்வாரிடம் வற்புறுத்தியிருப்பதாக அறிகிறோம். மேலும் இரண்டு வருஷ காலத்துக்கு ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவையங்கார் திரும்பப் பதவியேற்க கேட்டுக்கொள்வதே சிறந்தது எனக் கூறப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. ஸ்ரீமான் ஐயங்கார் திரும்பிப்போக ஆவலாயில்லை என்று நம்பகமாக அறிகிறோம். போதிய அதிகாரம் கொடுக்கப்பட்டால்தான் இவர் திரும்பப் பதவியேற்கக் கூடுமென்று தெரிகிறது. இவர் மீண்டும் திவான் பதவியேற்பது பரோடா மக்களை நிச்சயம் மனம் குதூகலிக்கச் செய்யும். பரோடா உள்ளூர் பத்திரிகையான "ஸ்ரீ சாயாஜி விஜய" கடந்த மூவாண்டில் இவர் பணியாற்றிய முறையை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறது. பரோடா மக்களின் பாஷை, பழக்க வழக்கங்களை அறியாத நிலையிலும் இவர் சிலாகிக்கத்தக்க சேவைபுரிந்து ஜனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரராயிருக்கிறார்."

ஜூன் மாதம் இவ்விதம் எழுதிய இதே பத்திரிகை ஆகஸ்டில் பின்வருமாறு எழுதியது:—

"திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் திரும்பவும் பரோடாவுக்குப் போக இன்னும் சில வாரங்கள் ஆகுமென அறிகிறோம். இரண்டு வருஷ காலத்துக்குப் பதவியேற்க மகாராஜாவுடன் இவர் ஏற்பாடுசெய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. திவானின் சம்பளம் உயர்த்தப்படுகிறது; ஆனால் முக்கிய அம்சம் என்னவெனில் முன்பிருந்ததைக் காட்டிலும் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது."

ஸ்ரீநிவாஸராகவையங்கார் 1899-ம் வருஷம் அக்டோபர் மாதம் மேலும் ஈராண்டுகளுக்கு பரோடா திவான் பதவியை யேற்றார். இவரது வருகையால் உள்ளப் பூரிப்பு அடைவதாகப் பல அதிகாரிகள் இவருக்குக் கடி

தம் எழுதி மட்டிலா மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டனர். ஆனால் கடுஞ்சோதனைக் காலத்திலா திரும்பவும் இவர் பதவியேற்க வேண்டுமென்று அவர்கள் மனம் வருந்தினர். பொறுப்பு தான் ஏற்கவேண்டியிருக்கும், போதிய அதிகாரம் எங்கே கிடைக்கப்போகிறது என்று இவர்கள் தங்கள் சம்சயத்தை வெளியிட்டனர். தாங்கள் திரும்பி வருவதால் சமஸ்தானத்துக்கு நல்ல காலமே; எனினும் பிறரின் பிழைகளுக்கும் தவறுகளுக்கும் தாங்கள் தானே ஜவாப்தாரியாக வேண்டியிருக்கும் என்று விஷயமறிந்த அவர்கள் அங்கலாய்த்தனர்.

முன்பே குறிப்பிட்டதுபோல கொடிய பஞ்சமே இவரை வரவேற்றது. பல நூற்றாண்டுகளாக கூர்ஜரம் அறியாத உக்ரபஞ்சம். இவர் பரோடா போய்ச் சேருவதற்கும் பஞ்சத்தின் கோரம் உச்ச நிலையை எட்டுவதற்கும் சரியாயிருந்தது. விலைவாசிகள் ரொம்பவும் தூக்கலாகி விட்டன. ஆடுமாடுகள் எங்கு பார்த்தாலும் பிணமாகக் கிடந்தன. சாதாரணமாக மழை பெய்யும் மாதமான ஜுலையில் மழை ஒருசுழிகூட பொழியாமல் சுழித்துவிட்டது. ஜுனில் விதைத்திருந்த விவசாயிகள் ஏமாற்றம் கண்டனர்; ஆனால் அவர்கள் மனமுடையாதது பாராட்டத்தக்கது. ஜுலை மட்டுமின்றி ஆகஸ்டு மாதத்திலும் மழை ஏமாற்றியது. செப்டம்பரிலும் துளிமழை கூட பெய்யாததால் பஞ்சம் நிச்சயமென தீர்மானிக்க வேண்டியதாயிற்று. அக்டோபரில் பஞ்சம் பூரண பலத்துடன் உயிர் காவுகொள்ளத் தொடங்கியது.

நிர்வாக விஷயத்தில் திவானுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதாகக் கூறியிருந்த போதிலும் மகாராஜா தாமே பஞ்சப் பிரச்னையைச் சமாளிக்க விரதம் பூண்டார். ஆனால் திவானிடம் ஒப்படைக்கப்பட்ட பகுதியோ காதி ஜில்லா; பஞ்சத்தின் கோரத்தாண்டவம் இங்கு தான் மிகக் கடுமையாயிருந்தது; பயங்கர நிலைமை நிலவிய இந்தப் பிரதேசத்தை திவானிடம் ஒப்படைத்ததன் மூலம் மகாராஜா நல்ல காரியமே செய்தார்! கஷ்டத்தைக் கண்டு கதிகலங்காமல், நிவாரண ஏற்பாடுகள் செய்வதை புனிதக் கடமையாகப் பாவித்து, திவானும் ரெவினியூ கமிஷனரும் உற்சாகமுடன் சலியாமல் பாடுபட்டு கொடுமையைத் தணித்தனர்.

ஏழை விடுதிகள் திறக்கப்பட்டன. சர்க்கார் கடன் வசதி நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன. கடன் தாராளமாக வழங்கப்பட்டது. சிறுவர்களுக்கென தனி சமையல் க்கூடுகள் ஏற்படுத்தப்பட்டன. நியாய விலை தானியக் கடைகள் திறக்கப்பட்டன. கர்ப்பவதிகளும் கைக் குழந்தை வைத்திருந்த மாதரும் விசேஷமாகக் கவனிக்கப் பட்டனர். மக்களை ரக்ஷிக்கும் பொறுப்பு மகத்தானதா யிருந்தது. கஜானு கரைவது கண்டு கெய்க்வார் கலங் கினர்! கிணறு வெட்டும் திட்டங்கள், ரயில் பாதை, ரஸ்தா அமைப்பு முதலிய பற்பல வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பஞ்சத்துடன் காலரா நோயும் நர்த்தனமாடியது. இந்தப் பீடைகளைச் சமாளிக்கும் பணி யில் தனி நபர்களும் ஒத்தாசை புரிந்தனர். பலர் தங்களது வீடுகளில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்தனர். திவான் பங்களாவிலும் திவானின் சொந்தச் செலவில் ஏழை, எளியோருக்கு உணவு அளிக்கப்பட்டது.

"பஞ்சப் பீடைக்கு அந்திம காலம் நெருங்கியது...... திவான் முதற்கொண்டு சமஸ்தான அதிகாரிகள் அனை வரும், மக்களின் நன்றிக்குரியவர்களாக, சலியாமல், கடமை உணர்ச்சியுடன், மகாபொறுமையுடனும் மலர்ந்த முகத்துடனும் பாடுபட்டனர். இவர்கள் சேவையைப் பாராட்டத் தக்க வார்த்தையே கிடையாது......நெருக் கடி காலத்தில் சுதேச சமஸ்தானங்களும் திறம்படச் செயலாற்ற முடியு மென்பதை இவர்கள் நிரூபித்து விட்டனர்.

மகாராணியின் தேக நிலைமையை யொட்டி ஐரோப்பா வுக்குக் கிளம்பியாக வேண்டியிருந்தது மகாராஜாவுக்கு. மற்ெருரு புறம் இத்தகைய நிலையில் சமஸ்தானத்தை விட்டு எப்படிப் போவது என்றுமிருந்தது அவருக்கு. திறமை மிக்கவரான தன் திவானிடமும் அவரது சகாக் களிடமும் தைரியமாகப் பயமின்றி சமஸ்தான விவகாரங் களை ஒப்படைக்க முடியுமென்ற நம்பிக்கை அவரிடம் உதயமாகியது"—என்று கெய்க்வார் வாழ்க்கைச் சரிதையை எழுதியிருக்கும் ஸ்டான்லி ரைஸ் தமது புத்த கத்தில் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்தப் பஞ்சம் காரணமாக பரோடா சமஸ்தானம்

ஒரு கோடி ரூபா கடன் வாங்க நேரிட்டது. இந்தியாவில் கடன் நிபந்தனைகள் சகாயமாயிராததால் லண்டனில் கடன் வாங்கப்பட்டது. பரோடா அதிகாரிகள் கஷ்டத்தைத் தணிக்க பட்டபாடு சொல்லத்தரமன்று. ரயத்துகளின் நிலத்தீர்வை வசூல் வஜாசெய்யப்பட்டது. ஆடு, மாடுகளுக்காக உயர்ரக புல் விநியோகிக்கப்பட்டது. எவ்வளவோ பிரும்ம பிரயத்தனமெடுக்கப்பட்டபோதிலும் சுமார் இரண்டு லக்ஷம் பேர் உயிரைக் காலன் காவு கொண்டான். எட்டரை லக்ஷத்துக்கு மேல் ஆடு, மாடுகள் செத்தன.

அடுத்த மாரி காலத்தில் மழை மீண்டும் மோசம் பண்ணுமல் கணிசமாகப் பெய்தது. சகல ஜீவனோபாய வசதிகளையுமிழந்துவிட்ட ஏழை ரயத்துகளுக்கு சாகுபடி செய்வதற்காகத் தக்காவி கடன் கொடுக்கப்பட்டது. மேலும், சர்க்கார் உதவியுடன் பழைய ஸ்திதிக்குத் திரும்ப முயற்சிக்கும் ரயத்துகளிடமிருந்து கோர்ட் நடவடிக்கை மூலம் லேவாதேவிக்காரர்கள் கடன் வசூல் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. மொத்தத்தில் திவான் எடுத்த கஷ்ட நிவாரண நடவடிக்கைகளைப் புது ரெஸிடெண்ட் கர்னல் ராவன்ஷா பாராட்டினுர். ரெஸிடென்ஸிக்கும் பத்திரிகைக் கண்டனங்களுக்கும் பயந்து திவான் சில நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக மறைமுகமாக மகாராஜா குற்றங்கண்டார்! நாசூக்காகவும் நயமாகவும் ஆணித்தரமாகவும் திவான் இதற்கு பதிலளித்ததும் மகாராஜாவின் தொனி இறங்கியது.

1900-ல் மகாராஜா தன் தேக நிலைமை காரணமாகவும் மகாராணிக்கு ஆபரேஷன் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் காரணமாகவும் ஐரோப்பாவுக்குப் பயணமானுர். ஐரோப்பா போகுமுன் நிர்வாகத்தில் ரெஸிடென்ஸி தலையீடுக்கு ஓரளவு ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று மகாராஜாவுக்கு. நிர்வாக விஷயமாக திவானும் கௌன்சிலும் ரெஸிடெண்டும் ஆலோசனை கலக்க வேண்டுமென்று ஏற்பாடாகியது. இந்தப் புது நிலைமையில் ரெஸிடெண்ட் தன் அதிகாரத்தை வலுப்படுத்திக்கொண்டால்? இதை அனுமதியாத வகையில் திவான் உறுதியுடனும் அழுத்தத்துடனும் நடந்துகொள்ள வேண்டியதாயிற்று.

சீரிய முறையில் திறம்பட நிர்வாகம் நடப்பதை யறிந்த கெய்க்வார், நிர்வாகம் இப்படி செவ்வனே நடக்கும் என முன்னமேயே மட்டும் தமக்கு நம்பிக்கை உண்டாகி யிருந்திருக்குமாஞல், மகாராணியின் தேக நிலை இவ்வளவு க்ஷீணிக்க இடங்கொடாமல் எப்பொழுதோ ஐரோப்பா வுக்குப் பயணமாகியிருப்பேன், என்று வெளிநாட்டி லிருந்து திவானுக்கு ஒரு கடிதம் எழுதிஞர். திவானின் ஆலோசனைகளையும் திறனையும் கெய்க்வார் மெச்சாத வரல்ல; பல தடவைப் பாராட்டு தெரிவித்திருக்கிருர்; ஆனுல் அதிக அதிகாரம் கொடுக்க மட்டும் மனம் வர வில்லை; அந்தஸ்து குறைந்து போய் விடுமோ என்று தான்!

பரோடா கெய்க்வார் மகாராஜா ஐரோப்பாவுக்குச் சென்றிருக்கையில் ராஜப் பிரதிநிதி கர்ஸன் பிரபு, சுதேச அதிபர்களுக்கும் சமஸ்தான அரசர்களுக்கும் திடுக்கிடும் சுற்றறிக்கையொன்றை அனுப்பியிருந்தார். தங்கள் மக்கள் நலனிலேயே ராஜாக்கள் பிரதானமாக அக்கறைக்காட்ட வேண்டுமென்றும் வெளிநாடுகளுக்குப் போவதென்ருல் இந்திய சர்க்காரின் முன் அனுமதி பெற வேண்டுமெனவும் கர்ஸன் பிரபு தெரிவித்திருந்தார். அடிக்கடி வெளிநாடு களுக்குப் பயணமாவது கடமையைப் புறக்கணிப்பதாகக் கொள்ளப்படுமென்றும் வெளிநாடுகளுக்கு ஒரு தடவை போய்விட்டு மறு தடவை போவதென்ருல் உடனேயே போவது கூடாது, இடைக்காலம் கணிசமாக இருக்க வேண்டுமெனவும் வெளிநாட்டுப் பிரயாணத்தால் சுதேச மன்னர்களின் நடத்தை, பழக்க வழக்கங்களில் மாறுதல் கள் உண்டாவது கவனிக்கப்படவேண்டுமெனவும் அவ் வறிக்கை கூறியது.

இந்த சுற்றறிக்கை கெய்க்வாரின் ரோஷத்தைக் கிளப் பியது. இதை எதிர்த்து ஆட்சேபிக்க வேண்டுமென்று அவர் திவானுக்கு எழுதிஞர். (இந்த சுற்றறிக்கைக்கு அவசியமே இல்லை, சாதாரணமாகச் சொல்லிக்காட்டியிருந் தாலே போதுமானது என்று இங்கிலாந்தில் ராஜ குடும்பத் தார் கருதினர். இந்தியா ஆபீஸும் அதை வரவேற்க வில்லை. உயர் வட்டாரங்களும் அதை விரும்பவில்லை.) தங்களைப் பற்றியதே இல்லை இது, சென்னை சிற்றரசர்

ஒருவரின் பயணத்தைக் குறித்ததே யாகும் இது, ஆகவே ஆக்ஷேபிக்க வேண்டியதில்லை, ஆக்ஷேபித்தாலும் பலன் கிடைக்காது என்று திவான் மகாராஜாவுக்கு எழுதினர்.. "இந்த சுற்றறிக்கை ராஜப் பிரதிநிதியின் இளமை வேகத்தையும், ஜம்பம், ஜபர்தஸ்தையுமே காட்டுகிறது. அரசியல் விவேகமோ விஷயங்களைத் தீர ஆராயும் குணமோ காணவில்லை. என்னதான் புத்திகூர்மைப் படைத்தவராயினும் ராஜப் பிரதிநிதி வயதில் சிறியவரே......இதில் கையாளப்பட்டிருக்கும் பாஷை அனுமதேய பத்திரிகைக் கட்டுரைக்கொப்பானதாக இருக்கிறதே யொழிய, சர்க்கார் தஸ்த வேஜிக்குரிய பாணியில் இல்லை. மேநாட்டுப் பயிற்சி, மேநாட்டுக் கல்வியின் விளைவுகள் பற்றி வெளியிடப்பட்டிருக்கும் கருத்து பிற்போக்கானது. இந்த சுற்றறிக்கை சுதேச மன்னர்களைத் தாக்குவதாகும். அனுசிதமானதுமாகும்" என்றும் மகாராஜாவுக்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் எழுதினர்.

மகாராஜா கெய்க்வாரோ வெனில் ஆட்சேபித்தேயாக வேண்டும் என்று விடாப்பிடியாய் இருந்தார். ஆட்சேபிக்க வேண்டாமென்று பிரத்தியட்ச நிலைமையையறிந்த திவான் சொன்னது ராஜாவுக்கு எடுபடவில்லை. திவானின் ஆலோசனையையும் மீறி ஆட்சேபித்துக் கொள்ளப்பட்டது. ஆனல் இவர் முன்னமேயே கூறியிருந்தது போல இதனல் யாதொரு பலனும்கிடைக்கவில்லை. இந்தியா சர்க்கார் ஆட்சேபத்தை அலட்சியம் செய்து விட்டது.

பரோடாவில் இவர் காலத்தில் தாய்ப்பாஷைப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டதும் விதவா புனர் விவாகச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை. ரெஸிடென்ஸியுடன் பல சில்லறைத் தகராறுகள் முளைத்ததுண்டு. அவற்றை இவர் சுமுகமாகத் தீர்த்து வைத்தது ஒரு புறமிருக்க, வருஷக் கணக்கில் சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்காத அதிகாரிகளின் முறையீடுகள் குறித்தும் இவர் திருப்திகர ஏற்பாடு செய்யவேண்டியதாயிருந்தது. இவருடைய் முயற்சியினல் பதவி உயர்வும் சம்பள உயர்வும் பெற்றவர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். இளமை விவாகத் தடுப்பு சட்ட

மியற்றப்பட்டதற்கும் இவர் காரணமாயிருந்தவர். பரோடாவின் வர்த்தகம், கைத்தொழில் அபிவிருத்திக்கும் பல யோசனைகளைத் தெரிவித்திருந்தார் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார்.

"புதுச்சேரி ரிஷி" அரவிந்தர் இவர் காலத்தில் பரோடாவில் போதகாசிரியராயிருந்தார். ஜஸ்டிஸ் மஹாதேவ கோவிந்த ரானடே சிபாரிசுசெய்ததன் பேரில், ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலேயின் இங்கிலாந்து பயணத்துக்காகவும் அங்கு அவர் செலவுக்காகவும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் கெய்க் வாரிடமிருந்து பண உதவி பெற்றுக் கொடுத்தார். அரவிந்தர் திருமணத்தை யொட்டியும் கடனாகப் பணம் கொடுக்கப்பட்டது. பரோடாவில் பரீட்சார்த்தமாக சர்க்கார் ஆதரவில் பஸ் போக்குவரத்து சர்வீஸும் இவர் காலத்தில் நடத்தப்பட்டது. 1900-ம் வருஷ வாக்கில், பம்பாயுடன் பரோடா இணைக்கப்படக் கூடுமென்ற வதந்தி பலமாக அடிபட்டது! பஞ்சக் கஷ்ட நிவாரண நடவடிக்கைகளைப் பார்வையிட பம்பாய், ஆமதாபாத் வந்திருந்தபோது ராஜப் பிரதிநிதி கர்ஸன் பிரபு அச்சமயம் பரோடாவுக்கும் விஜயம் செய்திருந்தார். அப்போது மகாராஜா ஐரோப்பாவில் இருந்தமையால் ராஜப் பிரதிநிதியை வரவேற்று, உபசரித்து திருப்தி யுண்டாக்கும் பொறுப்பு ஸ்ரீநிவாஸராகவையங்கார் மீது விழுந்தது. பரோடா - மைசூர் ராஜ குடும்பங்களிடையே விவாக சம்பந்தம் செய்விப்பதில் ஆப்தர்களான மைசூர் திவான் ஸர் கே. சேஷாத்ரி ஐயரும் பரோடாதிவான் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் ஆவலாயிருந்தனர். ஆனால் இந்த எண்ணம் கைகூடவில்லை.

பரோடா நாணயப் பிரச்னையைத் தீர்த்து வைத்ததையே இவர் தம் பதவி காலத்தில் மிக முக்கிய சீர்திருத்தமென்க் கருதினார். பரோடா சமஸ்தான சேவையை 1901-ல் இறுதியாக விட்டுவிடத் தீர்மானித்த இவர் தம் நண்பரும் ராஜப் பிரதிநிதி சபை மெம்பருமான கனம் அருண்டேலுக்கு இந்த சீர்திருத்தம் பற்றி பின் கண்டபடி எழுதியிருக்கிறார்:—"பல கஷ்டங்களிலும் நான் ஒரு முக்கிய சீர்திருத்தம் செய்திருப்பது பரோடா நாணயம் சம்பந்தப்பட்டதாகும். ஸ்திரமற்றதாயிருந்த

பரோடா நாணயத்துக்குப் பதில் பிரிட்டிஷ் செலாவணி புழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பரோடா நாணயத்தின் மதிப்பை உள்ளூர் ஸாவுக்காரர்கள் அடிக்கடி மாற்றி ஏழைகளை ஏமாற்றி கொள்ளை லாபமடித்திருக்கின்றனர். இவர்களின் செயல்களால் வர்த்தகமும் பாதிக்கப்பட்டது. பஞ்சத்தின் போது உள்ளூர் நாணயத்தின் மதிப்பு வெகுவாக இறங்கிவிட்டது. இந்த நாணயத்திலேயே சம்பளம் பெற்றுவந்த கீழ்த்தரச் சிப்பந்திகளின் கஷ்டம் மிகவும் அதிகரித்தது......இந்த சீர்திருத்தத்தை ஸாவுக்காரர்கள் தீவிரமாக எதிர்த்தனர்......இந்த சீர்திருத்தம் பலரையும் பலவிதங்களில் பாதிக்கக் கூடியதாயிருந்ததால், போலீஸ், ராணுவம் முதலான கீழ்த்தரச் சிப்பந்திகளிடையே அதிருப்தி உண்டாகாதபடி மிக உஷாராகவும் ஜாக்கிரதையுடனும் நடவடிக்கை எடுக்கவேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் நாணயம் புழங்க யாதொரு தகராறுமின்று ஏற்பாடுகள் ஆகியிருக்கின்றன."

கெய்க்வார் வாழ்க்கை சரிதத்தை எழுதியிருக்கும் ஸ்டான்லி ரைஸ் இந்த சீர்திருத்தத்தைப் பற்றி தமது புத்தகத்தில் எழுதியிருப்பதாவது:—"1892-ல் மீண்டும் இந்தப் பிரச்னை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் 1897-ல் பரோடா ரூபாயின் மதிப்பு வெகுவாகக் குறைந்து அதிகாரிகளை அலறடித்த போது தான், பிரச்னையை தீர்க்க வேண்டியது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. திறமை மிக்க திவான்களிலொருவரான ஸ்ரீநிவாஸராகவையங்கார் அப்போது இந்தப் பிரச்னையைப் பரிசீலிக்கத் தொடங்கினர். 1900-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில், பரோடா நாணயத்துக்குப் பதிலாக பிரிட்டிஷ் இந்திய செலாவணி ஐம்பதாண்டுகாலத்துக்குப் புழங்குமென அறிவிக்கப்பட்டது. இந்தக் கடினமான பிரச்னை திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டதால் தான் மேநாட்டு முறையைத் தழுவிய பாங்க்* நிறுவும் திட்டம் வகுக்கப்பட்டது."

ஐரோப்பா சென்றிருந்த கெய்க்வார் பரோடா திரும்புவதற்குக் காத்திருந்த ஸ்ரீநிவாஸராகவையங்கார் மகாராஜா திரும்பியதும் ரஜா எடுத்துக்கொண்டு திரும்பவும் சென்னை உத்தியோகத்துக்கே போக விரும்புவதாகத் தெரி

*பாங்க் ஆப் பரோடா—1908-ல் ஸ்தாபிதமாகியது

வித்தார். பென்ஷனுக்கு அருகராக மேலும் நான்கு அல்லது ஐந்து மாதம் வேலை பார்க்கலாமென்றும் அதற்காகப் பதவி காலத்தை நீடிக்கத் தயாராயிருப்பதாயும் கெய்க்வார் தெரிவித்தார். மகாராஜா, மகாராணியின் தேக நலத்தைக் கருதியே அவர்கள் சொஸ்தமடையும் காலத்துக்கு திவான் பதவி வகிக்கச் சம்மதித்த இவருக்கு பரோடாவில் சேவை போதுமென்றாகிவிட்டது. தம் நண்பர்களுக்கு இவர் எழுதிய கடிதங்களிலிருந்து இது விளங்கும்.

மைசூர் திவான் ஸர் கே. சேஷாத்ரி ஐயருக்கு எழுதிய கடிதத்தில் இவர் குறிப்பிட்டிருந்ததாவது:—“ஐரோப்பாவுக்குப் போக கெய்க்வார் ஆவலாயிருந்ததால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேலும் இரு வருஷ கால சர்விஸுக்குச் சம்மதித்து ஒப்புக் கொண்டேன். நான் மீண்டும் பதவி யேற்ற நோக்கம் பூர்த்தியாகிவிட்டது. ஆகவே அக்டோபரில் இரண்டு வருஷ காலம் பூர்த்தியாவதுடன் சென்னைக்குத் திரும்பத் தீர்மானித்திருக்கிறேன்.”

ஸர் வி. பாஷ்யமையங்காருக்கு இவர் எழுதியதாவது:—“அக்டோபரில் சென்னை திரும்ப தீர்மானித்துவிட்டேன்......நான் இங்கு மேலும் தங்கியிருக்கலாமென்றாலும் விஷய, விவகாரங்களின் போக்கு எனக்குத்தானோ, பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தானோ திருப்தியளிப்பதாயில்லை. நான் நன்றாக நடத்தப்படுவதற்கு உத்திரவாதம் உண்டானால் நீடிக்கலாம்; ஆனால் அந்த உத்திரவாதம் தான் கிடைக்காது. பஞ்ச காலத்தில் என் ஆலோசனைகளை ராஜா கேட்கவேயில்லை. தானே எல்லாவற்றையும் கவனித்துக் குளறுபடிச் செய்துவிட்டார். கண்டனங்களிலிருந்து மகாராஜாவைப் பாதுகாக்க எல்லாவற்றையும் நானே ஏற்கவேண்டியதாயிருந்தது. பிறத்தியார் என் சங்கடத்தை உணர முடியாது. ஆனால் இங்கு மக்களில் பெரும்பாலர் இதை அறிவர்.”

ராஜப் பிரதிநிதி நிர்வாக சபை மெம்பர் கனம். ஏ. டி. அருண்டேலுக்கும் அநேகமாக இதேமாதிரியே இவர் எழுதியிருந்தார்:—“அடுத்த தடவை தாங்கள் இந்தப் பக்கம் வரும் போது நான் இங்கிருக்கமாட்டேன். அக்

டோபருடன் இரண்டு வருஷ காலம் பூர்த்தியடைகிறது. சென்னை உத்தியோகத்துக்குத் திரும்ப விரும்புவதை சென்னை சர்க்காருக்குத் தெரிவிக்கும்படி ரெஸிடெண்டிடம் சொல்லியிருக்கிறேன். பதவி காலத்தை நீடிக்க மகாராஜா விருப்பமாயிருக்கிறார். ஆனால் தன்மானத்துக்குப் பங்கமின்றி இங்கு நீடிப்பது அசாத்தியம். பரோடா சர்வீஸுக்குத் திரும்ப நான் ஒப்புக் கொண்ட சந்தர்ப்பம் உங்களுக்குத் தெரியும்......முதல் தடவையைக் காட்டிலும் இந்தத் தடவையாவது, அவராகவே என்னை அழைத்ததால், மகாராஜா என்னை நன்கு நடத்துவார் என்று எண்ணியது வீணாகியது......மந்திரி தன் வேலையைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு அனுசரணையாக அவர் தன் போக்கை மாற்றிக்கொள்வார் என்று தோன்றவில்லை. எல்லோரிடமும், குறிப்பாக திவானிடம், சந்தேகமும் பொறுமையும் கொண்டிருக்கிறார். கீழ் உத்தியோகஸ்தர்களுடன் தாமே நேரிடையாகத் தொடர்பு கொள்கிறார். தான் சொன்னதை அவர்கள் செய்யவேண்டும்; ஏதாவது தவறு நேர்ந்தால் மந்திரியை ஜவாப்தாரியாக்குகிறார். என்னை வருந்திக் கூப்பிட்டதால், நான் தெரிவித்த யோசனைகள்படி அவர் நடந்துகொள்வார் என்று நாம் நினைத்தது நடக்காது போலிருக்கிறது. ஆகவே நான் தீர்மானித்திருக்கிறபடி செய்வதைவிட வேறு வழியில்லை...ஏதோ புகார் செய்யும் ரீதியில் நான் இவ்விதம் எழுதவில்லை."

பிற்காலத்தில் பரோடா திவான் பதவி வகித்து தமக்கேற்பட்ட அனுபவத்தால் அந்த ஸ்தானத்தைவிட தீர்மானித்து ஸ்ரீரமேஷ் சந்திரதத் தமது நண்பர் ஸ்ரீ பி. எல். குப்தா ஸி. எஸ். ஐ. என்பவருக்கு 1906-ம் வருஷம் ஜூன் மாதம் 18-ம் தேதி கடிதம் எழுதியது குறிப்பிடத்தக்கது*:—"...ஆகையினால் அடுத்த வருஷம் பரோடா பதவியிலிருந்து ரிடயராக அநேகமாக முடிவு செய்துவிட்டேன்...மற்ற சமஸ்தானங்களைப்போல் அல்ல பரோடா; அங்கெல்லாம் போல இங்கு சுக போக்கு நடவாதது. உழைப்பு என்றாலும் கடுமையான உழைப்பு

* ஸ்ரீ ஆர். ஸி. தத் ஸி. ஐ. இ. — வாழ்க்கையும் சேவையும்: எழுதியவர் ஸ்ரீ குப்தா எம். ஏ., ஐ. ஸி. எஸ்.

இங்கு; கடினமாக உழைக்கும் நிர்வாகஸ்தருக்கும் சுதந்திரம் கிடையாது.''

பரோடா திவானுயிருந்த இன்னெருவரது கடிதமும் குறிப்பிடத் தக்கது. ஸ்ரீநிவாஸராகவையங்காரின் பேரப்புத்திரர் ஸ்ரீ சுந்தர ராகவனுக்கு மனுபாய் என். மேதா பின் வருமாறு எழுதியிருக்கிருர்: "கீர்த்தி மிக்க உமது பாட்டனரின் வாழ்க்கை சரிதையை எழுதத் தாங்கள் உத்தேசித்திருப்பது பற்றி மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். அவரிடம் வேலை கற்றுக் கொள்ளும் பாக்கியம் பெற்றவன் நான்...திவான் பஹதூரின் அருஞ்சேவையையும் அரசாட்சி அதிகாரம் குறித்து மகாராஜாவுடன் நிலவிய கருத்து வேற்றுமையையும் நான் அறிவேன். இருவரில் எவருடைய போக்கு சரி என்று நான் சொல்வது சங்கடமானது. நான் 11 வருஷங்களுக்கு திவான் பதவி வகிக்கையிலும் இத்தகைய கருத்து வேற்றுமை நீடித்திருந்தது...சுதேச மன்னர்களின் வெளிநாட்டுப் பிரயாணங்களைக் குறித்து கர்ஸன் பிரபு அவர்களைப் பள்ளிச் சிறுவர்கள் போல பாவித்துக் கண்டித்த போது காலஞ் சென்ற திவான் பஹதூர் சுதேச மன்னர்களின் அந்தஸ்து, நல உரிமைகளுக்காக தீரத்துடன் முன்னின்றுபோராடியவர்.''

பரோடாவில் இவர் இருக்கையில் மைசூர் திவான் பதவி இவருக்கு கிடைக்கும் போலிருந்தது. ஸர் கே. சேஷாத்ரி ஐயர் கடும் ஜுரத்தால் தேக சுகவீனப்பட்டிருந்த சமயத்தில் இந்த வதந்தி உலவியது. ரெஸிடென்ஸியும் ஸர் கே. சேஷாத்ரி ஐயரும் இவர் பெயரைச் சிபாரிசு செய்தனர். ஸ்ரீ பி. என். கிருஷ்ணமூர்த்தி திவான் பதவியேற்க வேண்டுமென்று ராஜ குடும்பம் விடாப்பிடியாயிருந்தது. ஸ்ரீ வி. பி. மாதவராவ் பெயரும் இந்தப் பதவி சம்பந்தமாக அடிபட்டது. ரீஜண்ட் மகாராணியின் பலமான ஆதரவு பெற்ற ஸ்ரீ பி. என். கிருஷ்ணமூர்த்தி திவான் ஆனுர். ஸ்ரீநிவாஸராகவையங்கார் பெயரைச் சிபாரிசு செய்து இந்திய சர்க்காருக்கு கடிதம் எழுதியிருப்பதாக ஸர் வி. பாஷ்யமையங்காருக்கு ஸர் கே. சேஷாத்ரி ஐயர் ரகசிய கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

கடுஞ்சோதனைகளைத் தாங்கி பரோடாவில் ஐந்து

வருஷ காலம் பதவி வகித்த ஸ்ரீநிவாஸராகவையங்கார் அந்த சமஸ்தான சரித்திரத்தில் தமக்கு நிலையான நற்பெயரும் கீர்த்தியும் சம்பாதித்துக்கொண்டார் என்றால் மிகையாகாது. பரோடா பத்திரிகை "ஸ்ரீ சாயாஜி விஜய்", பம்பாய் "டைம்ஸ் ஆப் இந்தியா" முதலான பத்திரிகைகள் இவரது நிர்வாகத்திறனை மெச்சி எழுதியிருந்தன. ராஜா ஸர் டி. மாதவராவைவிட உயர்தர சேவை புரிந்திருக்கிறார் இவர் என்று "ஸ்ரீ சாயாஜி விஜய்" எழுதியது. பரோடா மக்களும் அவருக்கு பிரிவுபசாரங்கள் நடத்தி வாழ்த்துப் பத்திரங்களை வாசித்து சமர்ப்பித்தனர். இவர் கீழ் வேலை பார்த்தவர்கள் இவர் தங்களைவிட்டுப் போவது குறித்து தங்கள் வருத்தத்தை வெளியிட்டனர். இவரது அன்புக்கும் அனுதாபத்துக்கும் ஆதரவுக்கும் ஆறுதலுக்கும் பாத்திரமானவர்களின் மனம் வேறு எப்படி இருக்க முடியும்?

இந்த அத்தியாயத்தை முடிக்குமுன் இவரைப்பற்றி வெளியிடப்பட்டிருக்கும் பாராட்டுரைகளையும் அபிப்பிராயங்களையும் குறிப்பிட்டாகவேண்டும். நாயிப் திவான் பதவியை எட்டி, 40 வருட சேவைக்குப்பின் ரிடையரான ஸ்ரீ ஜி. எச். தேசாய் என்பவர் "பரோடாவில் 40 வருஷ சேவை" என்ற தமது புத்தகத்தில் எழுதியிருப்பதாவது:—

"நான் போலீஸ் இலாகாவில் வேலை பார்க்கையில் ஐந்து பேர் திவான் பதவி வகித்தனர்: திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், திவான்பஹதூர் தம்ஹுஸ்கர், ஸ்ரீ கேர்ஸஸ்ப்ஜி ரஸ்தம்ஜி. ஸ்ரீ மனுபாய், ஸ்ரீ ஆர். ஸி. தத். திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பரோடாவுக்கு வருமுன் சென்னையில் ரிஜிஸ்திரேஷன் இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலாயிருந்தவர். நான் முதலில் அவரைச் சந்தித்தபோது தாம் எழுதிய "சென்னை மாகாணத்தின் 40 வருஷத்திய முற்போக்கு" என்ற புத்தகத்தை அவர் எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஆழ்ந்த அறிவாளி; அனுபவம் மிக்க அதிகாரி; அவரது புத்தகம் அரிய விஷயங்களடங்கிய களஞ்சியம் போன்றதாகும். அவரிடமிருந்த புத்தகாலயம் அற்புதமானது. தம் கீழ் வேலை செய்த அதிகாரிகளுக்கு அதிலிருந்து அவர்கள் வேலை சம்பந்தப்பட்ட புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் சொல்வார். பார்ப்பதற்கு இளகியவராயிருந்

தாலும் ஒழுங்கு விஷயத்தில் கண்டிப்பானவர்; தம் கருத்தும் எண்ணமும் நிறைவேற்றப்படுவதில் விடாப்பிடியாயிருந்தவர்.''

பிற்காலத்தில் பரோடா திவானுயிருந்திருக்கும் ஸ்ரீகேர்ஸஸ்ப்ஜி ரஸ்தம்ஜி இவர் விலகியபோது பின்வருமாறு எழுதினர்:—"என்னை அன்புடனும் மரியாதையுடனும் நீங்கள் நடத்தியதற்கு நன்றி. உண்மையான, அபிமான நண்பர்கள் ஏராளமானவரை நீங்கள் சம்பாதித்துக் கொண்டிருப்பதற்கு உமது மாசற்ற, உயர்குண விசேஷங்களே காரணமாகும். உமக்கு தெய்வம் இந்த குணங்களை நிறைய கொடுத்து வைத்திருக்கிறது. நீர் பெருந்தன்மையும் உதார குணமும் மிக்கவர்......இங்கு உங்கள் பணியில் நீங்கள் வெற்றி கண்டிருந்தாலும் கண்டிராவிட்டாலும் (யாரும் நீங்கள் தோல்வியுற்றதாகச் சொல்ல முடியாது) இந்த ஐந்தாண்டு காலத்தில் உமது நற்பெயரும் கீர்த்தியும் மங்காததே உமக்குத் திருப்தியளிக்கக்கூடியது......தயாளுவாகவும் நேர்மையுடனும் நாணயத்துடனும் நீங்கள் நடந்துகொண்டதை அனைவரும் அறிவர். கடமையிலேயே கண்ணும் கருத்துமாயிருந்திருக்கிறீர்கள். சுயேச்சையுடன் நடந்துகொண்டீர்கள். அதிகார தோரணையில் யாரையும் தாக்கும்வகையில் நீங்கள் நடந்துகொள்ளவில்லை. இது என்னுடையது மட்டுமல்ல, அனைவருடைய உள்ளக் கருத்துமாகும்.''

ஸ்ரீநிவாஸராகவையங்கார் பரோடாவை விட்டபோது "டைம்ஸ் ஆப் இந்தியா'' எழுதியதாவது:—''சுமார் ஐந்தாண்டுகளுக்குமுன் திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் பரோடா பிரதம மந்திரி பதவியை யேற்றபோது இவரைவிட அருகதை மிக்கவர் எவரையும் கெய்க்வார் மகாராஜா தெரிந்தெடுத்திருக்க முடியாது என்று பொதுவாகக் கருதப்பட்டது. நிர்வாக ஆற்றல் மிகுந்தவர் என்று பெரும் கியாதி பெற்றிருந்தார். தென்திசை மாகாணத்தில் நாற்பது ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஆட்சியின் பலாபலன்களைப்பற்றி அவர் எழுதிய புத்தகம், பொருளாதாரக் கொள்கைகள், புள்ளிவிவரத்தைக் கையாள்வதில் அவருக்கிருந்த அரிய, அபூர்வ சக்தியை ருசுப்படுத்தியது. அவர் பரோடாவில் பதவி வகித்துவந்த ஐந்து வருஷ காலமும் மேற்கு இந்தியா பெரும் அவதிக்

கும் வேதனைக்கும் உள்ளான காலமாகும். ஆட்சி செலுத்துவோருக்கும் மக்களுக்கும் சோதனை காலமாயிருந்தது. இந்தப் பிரதேசத்தையும் மக்களையும் முன்பின் அறியாமல் முற்றிலும் புதியவராக வந்த ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு இந்த சோதனை இன்னும் அதிகமாயிருந்திருக்க வேண்டும். தற்போதைய மகாராஜாவிடம் திவான் பதவி வகிப்பவருக்கு பொறுப்புதான் ஜாஸ்தி, அதிகாரம் கிடையாதென்பது அனைவரும் அறிந்ததே. பரோடாவின் பூகோள அமைப்பும் பிரிட்டிஷ் ரக்ஷணையுடன் திட்டுப் பகுதிகள் பரோடாவுடன் பின்னியிருந்ததும் மற்ற சுதேச சமஸ்தானங்களில் காணமுடியாத விசேஷ, முக்கிய அம்சங்களாகும். இத்தனையிலும் தம் கீர்த்திக்கும் நாணயத்துக்கும் பங்கமேற்படாமல் இவர் சேவை செய்திருப்பது சாமானியமான பெருமையல்ல. பிளேக் வியாதியை இவர் வெற்றிகரமாக ஒழித்துக் கட்டியதை பிரிட்டிஷ் சர்க்கார் பாராட்டியிருக்கிறது. பக்ஷபாதமின்றி இவர் நிர்வாகம் நடத்தியதில் பிரிவினை, பூசல் சக்திகள் ஒடுங்கின."

கெய்க்வார் சரிதையை எழுதிய ஸ்டான்லி ரைஸ் தமது புத்தகத்தில் கூறியிருப்பதை இந்த அத்தியாயத்துக்கு முடிவுரையாக எடுத்துச் சொல்லுவது பொருத்தமானதாகும். ஸ்டான்லி ரைஸ் எழுதியதாவது:—"ஸ்ரீ வி. பி. மாதவராவ், ஸ்ரீநிவாஸராகவையங்கார், ருமேஷ் சந்திர தத், ஸர் மனுபாய் மேதா முதலிய சில திவான்களை பரோடா என்றென்றும் மறவாமல் நன்றியுடன் ஞாபகம் வைத்துக் கொள்ளும்."

22

பரோடா திவான் பதவியை விட்டுவிட்டு சென்னை வேலைக்குத் திரும்புமுன் திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஆறுவார காலத்துக்கு ரஜாபெற்றுக்கொண்டு வட இந்தியாவை சுற்றிப்பார்த்து வந்தார். ரஜபுத்திர ராஜாங்கங்களில் பரோடா திவானுக்கு மகத்தான வரவேற்பும் உபசாரமும் கிடைத்தது. பரோடா தொல்லைகளையும் வேதனைகளையும் மறந்து மெய்மறக்கச் செய்யும் பல அற்புத இயற்கைக் காட்சிகளையும் மாடமாளிகைகளையும் இங்கெல்லாம் கண்டனுபவித்தார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். எகிப்து, இத்தாலி முதலிய நாடுகளில் தாம் கண்ட அதிசயங்களை கெய்க்வார் இவருக்கு விவரித்து எழுதியிருந்ததுபோல இவரும் தாம் கண்ட காட்சிகளை வார்த்தைகள் வடிவில் வார்த்தெடுத்துக் கொடுத்தார் மகாராஜாவுக்கு. இந்த சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு பரோடாவில் ஓரிரு மாதம் தங்கிவிட்டு 1901-ம் வருஷம் அக்டோபர் மாத மத்தியில் சென்னை திரும்புமுன் வழியில் பம்பாயில் இவர் உபசரிக்கப்பட்டார்.

சென்னை திரும்பியதும் இவர் நீர்ப்பாசன கமிஷன் முன் சாட்சியம் கூற அழைக்கப்பட்டார். இடையே இவர் தஞ்சை சென்றிருக்கையில் ஏதோ அவசர விஷயத்தைப் பற்றிப் பேச மே. த. கவர்னர் விரும்புவதாகவும் ஆகவே உடனே சென்னை திரும்பும்படியும் இவருக்குத் தந்தி கிடைத்தது. தந்தி கிடைத்ததன் பேரில் சென்னை திரும்பிய இவருக்கு கவர்னரின் காரியதரிசி பின்வருமாறு எழுதியிருந்தார்:—

சர்க்கார் மாளிகை,
கிண்டி, 18-11-'01

ஐயா,

மே. த. கவர்னரைச் சந்திக்க புதன் கிழமை காலை 10-30 மணிக்கு கிண்டிக்கு வர முடியுமா? அல்லது, நீங்கள் விரும்பினால், செவ்வாய்க்கிழமை யன்று பிற்பகல் கௌன்சில் கூட்டம் முடிந்ததும் மாலை 3-30 மணிக்கு கோட்டையில் சர்க்கார் காரியாலயத்தில் கவர்னரைச் சந்திக்கலாம்.

எந்த தேதி உங்களுக்குச் சௌகரியமானது என்பதைத் தயவு செய்து தெரிவிக்கவும். தாம் கோரியதற்கிணங்க நீங்கள் உடனே சென்னை திரும்பியதற்கு கவர்னர் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறார்.

இப்படிக்கு
(ஒ - ம்) ஆர். என். காம்பெல்
அந்தரங்க காரியதரிசி

* * *

1901-ம் வருஷம் டிசம்பரில் திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலின் வருடாந்த தினத்தன்று தலைமை வகித்துப் பேசுகையில், தேசியக் கல்வி திட்டத்தின் லட்சணங்களை எடுத்துரைத்தார். சிறுவர்களுக்குத் தாய் பாஷையில் பாடங்களைப் போதிக்கலாமென்றும் பள்ளிக்கூடங்களில் அவரவர் மதம் பற்றி கல்வி போதிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார் இவர் அப்போது. மேலும் ஒழுக்க வளர்ச்சி நூல்கள் பாடமாக்கப்படுவதையும் படங்கள் வரைதல், சங்கீத போதனை, கைவேலைப்பாடுகளில் பயிற்சி முதலியவை பள்ளிக்கூட பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டுமென்பதையும் இவர் வலியுறுத்தினார்.

இவர் பேசியதாவது.—“இந்தக் கூட்டத்தில் தலைமை வகிப்பது குறித்து நான் மகிழ்ச்சியுறுவதைத் தெரிவிக்க விரும்புகிறேன்...இந்த ராஜதானியின் முதன்மையான இரண்டு, மூன்று ஹைஸ்கூல்களில் ஹிந்து ஹைஸ்கூல் ஒன்று என்பது பல நாட்களாகப் பிரசித்தமானது...சமீபத்தில் இந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்ட பள்ளிக்கூடங்கள் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் மார்ஸ்டன் இதை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்...இது தலைமையாசிரியர் ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்* மற்றும் இதர ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு ஆக்கமும் ஆதரவுமளித்து வந்திருக்கும் நிர்வாகக் கமிட்டிக்கும் மிகுந்த சந்தோஷமளிக்கக் கூடியது...

பள்ளிக்கூடத்தின் தரத்தை உயர்த்த தலைமையாசிரியர் உறுதி பூண்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்...விஞ்ஞான போதனைக்குத் தக்க ஏற்பாடாகி

---

* பின்னர் மஹாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்.

யிருக்கிறது...பரிசோதனை நடத்துவதற்கான வசதிகள் இல்லாமல் விஞ்ஞான சாஸ்திரத்தைப் போதிப்பதால் பிரயோசனமிராது. கணிதம், சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களை ஆரம்ப வகுப்புக்களில் தாய் பாஷையிலேயே சொல்லித்தர ஏற்பாடாகி இது வெற்றிகரமாக நடந்து வருகிறது. இந்த ஏற்பாட்டை விஸ்தரிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவ்வேற்பாடு வரவேற்கத் தக்கது; பிள்ளைகளுக்குப் பாடம் லகுவில் புரியக்கூடுமென்பதோடு தாய் பாஷை ஞானமும் விருத்தியடையும்...பரோடா, பம்பாயில் சிறுபிள்ளைகள் 11-வது வயதை எட்டும் வரை ஆங்கில போதனை ஆரம்பிக்கப்படுவதில்லை; சர்வகலாசாலைப் படிப்பு பெற விரும்புகிறவர்களும் இந்த ஏற்பாட்டினால் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை... இந்த ராஜதானியில் சிறு குழந்தைகளுக்கு ஓரிரு வார்த்தைகள் பேசத்தெரிந்ததுமே ஆங்கிலத்தைக் கற்பிப்பது கௌரவமாகி விட்டபடியால், குறிப்பிட்ட வயதை எட்டும் வரை சிறுவர்களுக்கு ஆங்கிலம் கூடாது என்பது அசாத்தியமாகலாம். ஆரம்ப வகுப்புக்களில் தாய் பாஷையில் போதிப்பதற்கும் ஆங்கிலமும் கற்றுக்கொடுப்பதற்கும் ஆட்சேபமிருக்க முடியாது. ஆகவே இதுவரை வெற்றிகரமாக நடந்துவந்திருக்கும் இந்த ஏற்பாட்டைக் கமிட்டியார் தொடர்ந்து அமுல் நடத்தவேண்டுமென சிபாரிசு செய்கிறேன்...பள்ளிக்கூடங்களில் மதக் கல்வி போதிக்கப்படுவதும் விரும்பத் தக்கது...இந்தத் துறையில் எதை போதிப்பது என்று ஹிந்து மதப் பிரிவினரிடையே கருத்து வேற்றுமை இருக்குமெனச் சொல்லப்படுகிறது. பம்பாயில் மெட்றிகுலேஷன் வரைக்கும் சுமார் 700 மாணவர்களுக்குப் பாடம் போதிக்கும் கிர்காம் ஆரியன் ஸ்கூலில் இந்த சள்ளை கிடையாது. பகவத் கீதையும் புராணப் பகுதிகளும் இங்கு போதிக்கப்படுகிறது...சமீபகாலமாக ஒழுக்க நெறியைப் புகட்டும் நூல்கள் வெளியாகி வருகின்றன. உதாரணமாக ஸ்ரீமதி அன்னி பெஸண்ட் ராமாயண, மகாபாரத சாரத்தை இரு சிறு புத்தகங்களில் எடுத்துக் கூறியிருக்கிறார். இவை ஏன் நம் பள்ளிக்கூடங்களில், குறிப்பாகத் தாய் பாஷைப் பள்ளிகளில், போதிக்கப்படக் கூடாது? நமக்கு ஒவ்வாத அந்நிய ஒழுக்க நியதிகளைக் கொண்ட புத்தகங்களைப் போதிப்பானேன்?...பள்ளிக்

கூடங்களில் படங்கள் வரைதலும் சங்கீதமும் கற்பிக்கப் படவேண்டுமெனவும் குறிப்பிட விரும்புகிறேன்... கடைசியாகக் கைவேலைப்பாடுகள் குறித்தும் பயிற்சி யளிக்கப்படவேண்டுமென்று தெரிவிக்கவும் விரும்பு கிறேன்...பெரிய இடத்துப் பையன்கள் இதை வெறுப் பதாகச் சொல்லப்படுகிறது. இதுவரை இந்த வேலைகளைச் செய்து வழக்கமில்லாததாலேயே அவர்கள் இதை விரும் புவதில்லை...நான் சொல்லியிருக்கும் யோசனைகளை கல்வித் திட்டத்தில் சேர்க்கலாம். இவற்றைப் புறக்கணிக்கும் கல்வி திட்டம் தேசியக் கல்வி திட்டமாகாது.

......இந்த வித்தியா நிலையத்தைத் திறம்பட நடத்தி வரும் கமிட்டிக்கு சமுதாயத்தின் நன்றி உரித்தாகும். இந்தக் கல்வி நிலையம் விருத்தியுற வேண்டுமென பிரார்த்திக் கிறேன்."

இவர் வாழ்க்கையில் 1902-ம் வருஷம் சம்பவங்களும் நிகழ்ச்சிகளும் நிரம்பியதாயிருந்தது. கவர்னர் உட்பட பல ஐரோப்பிய உயர் அதிகாரிகளின் மரியாதைக்கும் மதிப் புக்கும் பாத்திரராயிருந்த இவர் இவ்வருஷம் நீர்ப்பாசன கமிஷன், இந்திய சர்வகலாசாலைகள் கமிஷன்முன் சாட்சி யம் கூறினர். சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் இவர் சொற்பொழிவாற்றியதும் இவ்வருடத்தில் தான். இவ்வாண்டு ஜூலையில் இவர் இந்திய போலீஸ் கமிஷன் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். புத்திரி ஒருவளுக்கும் மூன்ருவது புத்திரனுக்கும் இவ்வருஷம் இவர் விவாகம் செய்வித்தார் பரோடா மகாராஜா கெய்க்வாரும் இவர் ஜாகைக்கு வந்து தங்கினர் இவ்வாண்டில்.

நீர்ப்பாசனக் கமிஷனின் கேள்வித்தாளுக்கு பதிலளிக் கையில், புதிய பாசனத்திட்டங்கள் அவசியமெனினும் அதைவிட முக்கியமானது இருக்கும் வசதிகளைச் சரியாக பராமரிப்பதாகும் என்று இவர் குறிப்பிட்டார். சிறிய திட்டங்கள் பஞ்சத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கக் கூடி யதை எடுத்துக் காட்டி "குளங்கள் மீட்பு திட்டம்" துவக் கப்பட்டதைக் குறிப்பிட்டு 18 வருஷங்களாகியும் உத் தேசித்திருந்த வேலை திட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு வேலைதான் பூர்த்தியாகியிருப்பதைச் சுட்டிக் குறிப்பிட்டு இந்த வேலை திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற தேவை

யான நிதியும் அதிகாரிகளும் ஒதுக்கப்படவேண்டுமென இவர் வற்புறுத்தியிருக்கிறார். பாசனத்திட்டங்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை அவற்றின் பராமரிப்புக்காக ஒதுக்கவேண்டும். இந்தப் பணத்தில் ஏதாவது மீதமானல் அதை இதே காரியத்துக்கான அடுத்த ஆண்டு தொகையுடன் சேர்க்கவேண்டும்.

குடி மராமத்து வேலைகள் ரெவினியூ அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்படவேண்டும். நிபுணர்களின் சேவைத் தேவையிராத சாதாரண பழுதுபார்த்தல் வேலைகளைச் செய்வதில் கஷ்டமிருக்க முடியாது. பாசனவசதிகள் பராமரிப்பில் அக்கறையிருக்கவேண்டிய ரயத்துகளைக் கொண்டு இதைச் செய்துவிடலாம். தாசில்தார்களுக்குப் பொறி இயல் துறையில் கொஞ்சமேனும் ஞானம் இருக்க வேண்டியது அவசியம் என எனக்குத் தோன்றுகிறது. சில புத்தகங்களை அவர்கள் படிக்கச் சொல்லி ரெவினியூ ஹையர் கிரேட் பரீட்சையின்போது இவர்களுக்கு பொறி இயல் சாஸ்திரத்திலுள்ள ஞானத்தைப் பரீட்சிக்கலாமெனத் தோன்றுகிறது. காவிரி டெல்டா திட்டம் இன்னமும் பூர்வாங்கக் கட்டத்திலேயே இருப்பதாகத் தெரிகிறது. பாசனஜல விநியோக வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கும் கிருஷ்ணு, கோதாவரி சூபரிண்டுகளின் சிப்பந்திகள் நிலை உயர்த்தப்படவேண்டும். இதற்குப் பணத்துக்கு எங்கே போவது என்று சொல்லமுடியாது; சமீபத்தில் தான் நிலத்தீர்வை இங்கு திருத்தி விதிக்கப்பட்டது; பாசனஜலம் பெறும் நிலங்களிலிருந்து இதனுல் வருமானம் அதிகரித்திருக்கிறது.

குளங்கள் வெட்டுவதற்கு நல்லதோது இருக்கிறது. ரெவினியூ அதிகாரிகளின் உதவியுடன் பாசன திட்டங்களுக்கேற்ற ஸ்தலங்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். உத்தேச திட்டங்களால் பலனுண்டு என்ருல் அவற்றை உடனே நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பலனிராதென்ருல் பஞ்சக்கால சமாளிப்பு திட்டத்தில் அவற்றை சேர்த்துக்கொள்ளலாம்.

கால்வாய் பாசன திட்ட விஸ்தரிப்பைத் தொடர்ந்து குளங்கள் முதலியவை அலட்சியம் செய்யப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. இவை விளைச்சல் நிலமாக விற்

பனே செய்யப்படுவது கூடாது. ஆடு, மாடுகள் மேய்ச் சலுக்காகவோ மரம் வளர்க்கவோ இவற்றைப் பயன்படுத் தினுலும் சமுதாயத்துக்கு உபகாரமுண்டு. தஞ்சையில் அநேகமாக நிலப்பரப்பு அத்தனையும் பயிரிடப்பட்டுள்ள தன் விளைவாக உரம் கிடைப்பதில் கஷ்டம் தோன்றிய தோடு, சாகுபடி காலம் தவிர மற்ற சமயங்களில் பால், நெய் முதலியற்றை விற்று ரயத்துகள் பணம் சம்பாதிப் பதற்கும் வழி இல்லாமற் போய்விட்டது.

நீர்ப்பாசன வசதிகள் சாத்தியமான அளவுக்கு வியாபக மாயிருக்கவேண்டும். ஜலசப்ளை போதாமல் போகும் சம யங்களில் குளங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டியதாகும். குளங்களிலும் ஜலம் வற்றிவிட்டால் கிணறுகளின் உதவியைக்கொண்டு சமாளிக்கவேண்டும். புது திட்டங்கள் அமுல் நடத்தப்படும்போது இரு போகத் துக்கு ஜலம் சப்ளை செய்யமுடியும் என்ற காரணத்தால் இருபோகம் பயிரிட ரயத்துகளை நிர்ப்பந்திக்கக்கூடாது. முதல் பயிர் எழுப்பவே உரம் தேவையாயிருக்கும். இரண் டாவது பயிருக்கு உரம் ஏராளமாகத் தேவைப்படும். எருவும் நிறைய கிடைப்பதில்லை. இருபோக விளைச்சல் ரயத்துகளுக்குப் புதிதல்ல. அதனுல் லாபமுண்டு என் ருல் அவர்கள் தாங்களாகவே, பிறர் சொல்லவோ நிர்ப்பந் திக்கவோ அவசியமில்லாமல், பயிரிடுவார்கள்.

நீர்ப்பாசன திட்டங்கள் காரணமாக சாகுபடி முறை யில் மாறுதல் செய்யவேண்டியிருக்குமானுல், படிப்படி யாகவே ஏற்பாடுகள் அமுலுக்கு கொணரப்படவேண்டும்.

ரயத்துகள் தங்கள் சொந்த செலவிலேயே செய்யும் சீர்திருத்தங்கள் விஷயமாகச் சலுகை காட்டவேண்டிய தையும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் வற்புறுத்தியிருக்கிருர்.

கிணறுகளின் உபயோகத்தை விளக்கி, விவசாயிகள் அவற்றைத் தோண்டுவதற்கு ஆக்கமளிக்கவேண்டிய முறைகளையும் தமது குறிப்பில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் எடுத்துச் சொல்லியிருக்கிருர்.

பூமிக்கடியில் நீர்வளம் குறித்து சர்வே நடத்தப்பட வேண்டும். இந்த விஷயத்தில் கிராமவாசிகளின் அறிவை யும் அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கைவிடப்பட்ட பழங்கிணறுகள், வறுமையால் அந்த ஸ்திதியை அடைய விடப்பட்டனவா அல்லது ஊற்று வற்றிவிட்டதுதான் காரணமா என்பதை ஆராயவேண்டும்.

பாசனத்துக்குத் தேவையான அளவு நீர்வளம் இருந்தும் அதை விவசாயிகள் பயன்படுத்தாததன் காரணத்தை ஆராயவேண்டும். சர்க்காரே கிணறுகள் தோண்டி புது சாகுபடி முறையை அமுலுக்குக் கொணருவதா என்பது பற்றியும் யோசிக்கவேண்டும். கஞ்சத்தில் கிணற்றுப் பாசனம் சாத்தியமெனப்பட்டால் சர்க்கார் தங்கள் செலவிலேயே சில இடங்களில் கிணறுகள் தோண்டி அவற்றை ரயத்துகளுக்குக் கொடுக்கலாம். கிணறு வெட்டி உபயோகிக்க சித்தமாயிருக்கும் ரயத்துகளுக்கு சர்க்கார் மான்யமும் வழங்கலாம். ஆரம்பத்தில்தான் இந்த சலுகைகள் தேவையாயிருக்கும். பின்னர் இந்தச் சலுகைகளை படிப்படியாக வாபஸ்பெறலாம்.

பூமி மட்டத்துக்கடியிலிருக்கும் ஜலத்தின் ஆழம், தரம் என்ன என்பதையறிய துளைபோடும் யந்திரங்கள் தருவிக்கப்பட்டு தாலூகா தலைமை ஸ்தலங்களில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். ரயத்துகளுக்கு இந்தக் கருவிகள் சிறு கட்டணம்பேரில் இரவல் தரப்படவேண்டும். தண்ணீர் கிடைக்காமல் போனல் இந்தக் கட்டணம் ரயத்துகளுக்கு வாபஸ் செய்யப்படவேண்டும்.

கிணறு வெட்டுவதற்கான கடன்பேரில் 5 சத விகித வட்டி வாங்குவது ஜாஸ்தியானது. முன்னர் நிர்ணயிக்கப்பட்ட 3 சதவிகித வட்டியே விதிக்கவேண்டும்.

கிணறுகள் நாள்பட்டு நிலைக்கக்கூடியதைப் பொறுத்து கடன் வசூல் தவணைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். கிணறுகளின் ஆயுட் காலத்துக்கின்னும் அதிகமாக கடன் வசூல் தவணைகளை நிர்ணயிக்கக்கூடாது.

எதற்காகக் கடன்தொகை கொடுக்கப்படுகிறதோ அந்த நோக்கத்துக்காகவே பணம் செலவாவதைப் பார்த்துக் கொள்ளும் நிமித்தம் சம்பந்தப்பட்ட அதிகாரி அவ்வப்போது வேலை முன்னேற்றத்தைக் கவனித்து தவணைகளில் தொகையை கொடுக்கவேண்டும். அடுத்த தவணைத் தொகையைக் கொடுக்குமுன் முன்னர் கொடுக்கப்பட்ட

பணம் சீராகச் செலவாகியிருக்கிறதா என்று திருப்தி யடைய வேண்டும்.

சர்க்கார் பரிசோதனை, விசாரணைபோன்ற தொல்லை களைத் தவிர்க்க எந்த ஒரு ரயத்தாவது தனிநபர் ஒருவரிட மிருந்து கடன்பெற்று கிணறு எடுத்திருப்பாரானால் கடனை அடைப்பதற்காக அவர் சர்க்காரிடம் கடனுதவிக்காக அண்டினால் அவர் கோரிக்கை ஏற்கப்படவேண்டும். சாமானிய உத்தியோகஸ்தர்கள் இடையே கொஞ்சம் பணம் சுருட்டிக் கொள்வதைத் தவிர்க்க ரயத்துகளுக்கு இந்தக்கடனை உயர் அதிகாரிகளே வழங்கவேண்டும்.

கிணற்றுப் பாசனத்தில் தண்ணீரை வெளி இழுத்து இறைப்பது சிரமம் மிக்கது. மலிவான, நல்ல, திறம்பட்ட முறையொன்றைக்கண்டு பிடிப்பதற்கு சர்க்கார் ஆக்க மளிக்கவேண்டும். இப்போது ஆயில் என்ஜின்கள் உப யோகத்துக்கு வந்திருக்கின்றன. இந்த என்ஜின்களை ரயத்துகள் வாங்க கடன் அளிக்கவேண்டும்.

* * *

இதே வருஷம் மார்ச் மாதம் 21-ம் தேதி சென்னை கவர்னர் விருப்பத்துக் கிணங்க திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம் புரிந்தார். 1902-ம் வருஷம் ஜனவரி 20-ம் தேதி கவர்னர் ஆம்ப்தில் பிரபு இவருக்குப் பின்வரு மாறு கடிதம் எழுதினர்:—

சர்க்கார் மாளிகை
20-1-1902

ஐயா,

இவ்வாண்டு சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம் நிகழ்த்த தங்களுக்குச் சம்மதமுண்டா என்று வினவவே இதை எழுதுகிறேன்.

சம்மதமுண்டானல், சர்வகலாசாலை அத்யக்ஷகர் என்ற முறையில் அந்தப் பொறுப்பைத் தங்களிடம்விட நான் விருப்பமாயிருக்கிறேன். உங்களை நான் தெரிந்தெடுத் ததைப் பொது மக்களும் வரவேற்பார்கள் என்று திடமாக நம்புகிறேன்.

"நாற்பது வருஷ முற்போக்கு" என்ற புத்தகத்தை

எழுதிய முறையிலும், உயர்பதவிகளைத் தாங்கள் வகித்திருப்பதும், பரோடாவில் பதவி வகித்திருப்பதும், பட்டமளிப்பு விழா பிரசங்கம் புரிய தாங்களே தகுதியானவர் என்றுக்குகின்றன.

என் வேண்டுகோளுக்கு இணங்குவீர்கள் என்று நம்புகிறேன். பட்டமளிப்பு விழா அநேகமாக மார்ச் 21-ம் தேதி வெள்ளிக்கிழமை யன்று நடத்தப்படும்.

இப்படிக்கு,
(ஓ - ம்) ஆம்ப்தில்

"சர்வகலாசாலைக் கல்வியின் நோக்கம் நான்குவகைப்பட்டது; (1) மாணவர்கள் ஜீவனோபாய தொழிலையேற்று அதில் பெருமைப்படத்தக்கவிதத்தில் சோபித்து சம்பாதிப்பது (2) மாணவர்கள் தங்கள் படிப்புத்துறையில் பட்டம் பெறுவதோடு நில்லாமல் மேல் படிப்பில் ஈடுபட்டு விஷய ஞான வளர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு ஆராய்ச்சி நடத்தி அறிவைப் பெருக்க எல்லா வசதிகளும் செய்து தருவது (3) பாமரருக்கு தேசிய இலக்கியத்தை சிருஷ்டிப்பது (4) மதம், சமூகம், தொழிலியல், அரசியல் போன்ற சகல துறைகளிலும் நாடு முன்னேறவேண்டும் என்ற உன்னத, உயரிய எண்ணம் படைத்த மாணவர்களை சமூக சேவைக்கு அளிப்பது" என்று குறிப்பிட்டு இந்த நோக்கங்கள் எவ்வளவு தூரம் ஈடேறியிருக்கின்றன என்பதை ஸ்ரீநிவாஸராகவையங்கார் தமது சொற்பொழிவில் ஆராய்ந்திருக்கிறார்.

"முதல் நோக்கம் பெருமளவு நிறைவேறிவிட்டதாகவே பொதுவாக அனைவரும் கருதுகின்றனர்......சர்க்கார் வேலை, சட்ட, வைத்திய, பொறி இயல் துறைகள் ஏற்கெனவே பட்டதாரிகளால் நிரம்பியிருப்பதாகவும் சர்க்கார் உத்தியோகம் கிடைக்க முடியாத நிலைமையில் பட்டதாரிகள் எண்ணிக்கையை விருத்தி செய்வது கேடாகுமென்றும் புகார் கூறப்படுகிறது......அரசியல் வாழ்வு என்ற ஒன்று இருப்பதாகவே சொல்லத்தகாத நம்நாட்டில், ராணுவம் போன்ற வேலை வாய்ப்புக்களும் தொழில் துறைகளும் இல்லாததால் இந்தியர் சர்க்கார் ஊழியத்தையே நாடுவது இயற்கையாகும்......வேலை வாய்ப்பு

தேடுவதில் போட்டி நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாகப் பட்டப் படிப்பில் மவுசு குறைந்து வருகிறது...... பட்டதாரிகள் இப்போது வியாபாரம், மற்றும் இதர பல துறைகளில் நாட்டம் காட்டத் தொடங்கியிருக்கின்றனர் ......ஆனால் சமூகத்தில் தீமைகளையும் விரும்பத்தகாத பழக்கவழக்கங்களையும் ஒழிக்கும் பணிக்கும் தொழிலியல் விருத்திக்கும் நல்ல, உயர்கல்வி பயின்றவர்கள் வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இரண்டாவது நோக்கம் திருப்திகரமாக நிறைவேறவில்லை; உண்மையில் இது குறித்து தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டதாகக் காணேம்.

மூன்ரும் நோக்கம் தேசிய இலக்கிய சிருஷ்டிப்பணியாகும். மக்களிடையே அறிவைப் பரப்புதல் குறித்து விரும்பத்தக்க முன்னேற்றம் காணவில்லை யெனினும், சம்ஸ்கிருதம், ஆங்கில நூல்களை மொழி பெயர்ப்பதன் மூலம் தாய்பாஷை இலக்கியம் கடந்த பத்தாண்டுகளில் சிருஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது

நான்காவது நோக்கம் குறித்தும் முன்னேற்றம் மெதுவாக இருப்பதற்குக் காரணம் காணுவது கஷ்டமல்ல. நம் கல்வி அயல்நாட்டவர் வழக்கத்தைத் தழுவியது. நமது தேசிய வாழ்வுக்கும் அதற்கும் அதிக சம்பந்தம் கிடையாது......புதுக்கல்வி ஆரம்பக் காலத்தில், இந்தக் கல்வியைப் பயின்றவர்களுக்கும் பழமையில் ஊறிய பெரியோர்களுக்குமிடையே கருத்து வேற்றுமை பெரிதாயிருந்தது. பழைய தலைமுறை மறைந்து புது சந்ததிகள் தலையெடுக்க இந்தக் கருத்துவேற்றுமை நாளாவட்டத்தில் மறைந்துவிடுமெனலாம். பட்டதாரிகளின் சொல்லும் செயலும் முரண்பட்டிருப்பதாக போனவருட விழாவில் ஜஸ்டிஸ் ஷெப்பர்ட் பிரஸ்தாபித்திருந்ததற்குக் காரணம் இந்த நிலவரமே யாகும்......புதுக்கல்வித் திட்டத்திலிருந்து மதக்கல்வி விலக்கப்பட்டிருப்பது பெரிய குறைபாடாகும்......ஹிந்து பண்டிதர்களையும் மகம்மதிய மௌல்விகளையும் அங்கீகரித்து முறையே அவர்களுக்கு 'மஹாமஹோபாத்தியாயர்', 'ஷம்ஸ்-உல்-உலேமா' என்ற பட்டங்களை வழங்கலாம். சர்க்காரோ, சர்வகலாசாலைகளோ அவர்களை இவ்விதம் கௌரவிப்பது அவர்களை

ஊக்கமளிப்பதாகும்......கோயில்கள், மடங்களில் ஆரா தனைக்காக தனி நபர்களும் சர்க்காரும் தர்மம் செய்திருக் கின்றனர். கோயில்களின் உபரி நிதிகளை நுண்கலை வளர்ச் சிக்காகப் பயன்படுத்தலாம். மடங்களின் உபரி பணம் சம்ஸ்கிருதத்திலோ அரபு பாஷையிலோ மதக் கல்வியைப் பரப்பும் கலாசாலைகள் பராமரிப்புக்காக செலவிடப் படலாம்.

சர்வகலாசாலைப் படிப்பின் நோக்கங்களைப்பற்றி இவ் விதம் பேசிய ஸ்ரீநிவாஸராகவையங்கார் அப்புறம் பட்ட தாரிகள் அன்று எடுத்துக்கொண்ட சில பிரமாணங்களின் தாத்பர்யத்தை எடுத்துரைத்து அவர்களைச்சார்ந்த பொறுப் பையும் விளக்கினர்.

"முதல் பிரமாணத்தின் பிரகாரம் உமது அறிவைத் தீய வழிகளில் செலுத்தாமல் பெருந்தன்மை மிக்கவர்களாக நடந்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறீர்கள்; நேரிய பாதையிலிருந்து பிறழக்கூடாது; அடிமைத்தனம் காட் டாமல் உயர்ந்தவர்களிடம் அடக்கமாயிருக்கவேண்டும்; கீழ்ப்பட்டவர்களிடம் அளவு மீறி விட்டுக்கொடுக்கா மலோ அவர்களை ரொம்பவும் கொடுமைப்படுத்தாமலோ நடந்துகொள்ளவேண்டும்......வாழ்க்கையில் சில சமயங் களில் உயர்கல்வி பயின்றவர்களுடனே நம்மைவிட மேலான அறிவாளிகளுடனே பழகும் சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் போகலாம்......அப்பொழுது நல்ல புத்த கங்களே உமக்கேற்ற சகாக்கள்......ஒழுக்க மேம்பாட் டை நாடியோ அல்லது புத்தகத்திலுள்ள விஷயங்களை கிரஹிக்கவோ அரும்புத்தகங்களை வாசியுங்கள். வாழ்க் கையில் பல கவலைகள், வேதனைகளால் தார்மிக நோக்கங் களும் அனுதாபமும் வற்றிப்போகலாம். இழந்த குணங் கள் மீள அச்சமயங்களில் இந்த உயரிய புத்தகங்களைப் படிக்கவேண்டும். சம்ஸ்கிருத இலக்கிய அமுதத்தில் ஒழுக்கமும் விவேகமும் போதிக்கத்தக்க விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஆங்கில இலக்கியத்திலும் உயர் சிந்தனைகளைக் கிண்டிவிடும் பொக்கிஷங்களைக் காணலாம்.

இரண்டாவது பிரமாணத்தின்படி ஒழுக்க, அறிவு வளர்ச்சிக்குப் பாடுபட கடமைப்பட்டிருக்கிறீர்கள்...... உயர்தரக் கல்வி பயிலும் பாக்கிய தசையிலிராத பாமரரின்

மேம்பாட்டுக்காக தாய்மொழி இலக்கியம் மூலம் அறிவைப் பரப்புவது உங்கள் முதல்கடமை......பெண்கள் கல்வி குறித்து நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். இதன் முக்கியத்வத்தை அறிவுறுத்தத் தேவையில்லை. ஆசார குடும்பங்களில் கூட பெண்கல்விக்கு இப்போது எதிர்ப்பு குறைந்துவருகிறது. தங்கள் பெண்கள் போதிய கல்வி பயிலவேண்டுமென்று அக்ஷரமறியாத தாய்மார்கள் ஆவலாயுள்ளனர். இளம் பிராய விவாகம் காரணமாகவும் இதர சமூகக் கட்டுப்பாடுகளாலும் பள்ளிக்கூடங்களில் பெண்கள் அதிகநாள் வாசிக்க முடிவதில்லை. ஏழ்மையால் பெண்கள் வீட்டுக் காரியங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. அவிபக்த குடும்ப முறையும் பெண் கல்வியைப் பாதிக்கிறது. ஆயினும் பட்டதாரிகள் தங்கள் மனைவியர், சகோதரிகள், புத்திரிகள் வித்தியாப்யாசம் பெறத்தக்க ஏற்பாடுகள் செய்யமுடியும். ஐரோப்பிய மாதிரி கல்வி திட்டம் நமக்கு ஒவ்வாது. நம் பெண்டிர் சம்பாதிக்கவேண்டுமென்று கல்வி அளிக்கத் தேவையில்லை. 'மனைவியர், தாய்மார்'களாக தங்கள் பொறுப்பை அவர்கள் உணரத்தக்கதாயிருக்கவேண்டும் கல்விதிட்டம்.

சமுதாய முன்னேற்றம் குறித்து உங்களைச் சார்ந்த பொறுப்பை மூன்றுவது பிரமாணம் சுட்டிக்காட்டுகிறது ......உங்கள் முதல் கடமை சர்க்காரின் நல்ல உத்தேசங்களைச் சரியாகப் பாமரருக்கு விளக்குவதும் மக்களிடையே நிலவக்கூடிய ஆதாரமற்ற பீதிகளைப்போக்குவதும் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டுவதுமாகும்......

விவசாய சீர்திருத்தம், தொழிலியல் துறையில் மக்களுக்கு சகலத்தையும் விளக்கி வழிகாட்டுவது பட்டதாரிகளின் கடமையாகும் என்றார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். ஏழைகளிடையே சேமிப்பு மனப்பான்மை, பழக்கத்தை உண்டாக்கவும் லேவாதேவிக்காரர்களின் கொடுமையிலிருந்து அவர்களைக் காக்கவும் கூட்டுறவு கடன் சகாய சங்கங்கள் அமைப்பதில் கல்வி கற்றவர்களின் பங்கை இவர் எடுத்துரைத்தார்.

சமூக சீர்திருத்தம்பற்றி இவர் கூறியதாவது:— "குறித்த நடவடிக்கையிலிறங்குமுன் சாதக பாதக அம்சங்களைத் தீர ஆராயவேண்டும். பின்னர் சீர்திருத்த நட

வடிக்கையிலீடுபட தீர்மானிப்பீர்களானுல் அவ்விதமே செய்யுங்கள். பிறர் உம்மை ஆதரிக்காவிட்டால் அவர்களை குறைசொல்லக்கூடாது. நமது சமூகம் சிக்கல் மிகுந்தது......சீர்திருத்த நடவடிக்கைக்கு உற்ற தருணத்தை விவேகமுடன் நிச்சயிக்கவேண்டும்......அதீத அக்கறையுடன் சிலர் வேகமுடன் நடவடிக்கையில் இறங்குவார்கள். நிதானிக்கும் சுபாவமுடையோர் பின்தங்கிவிடுவார்கள். இவ்விரு வகுப்பாரில், தியாகங்கள் செய்தும், பல கஷ்டங்களுக்குள்ளாகியும் அந்தரங்க சுத்தியுடனும் சேவா உணர்ச்சியுடனும் சீர்திருத்த முயற்சியில் இறங்கும் முதல் பிரிவினரையே நான் ஆதரிப்பேன்.

உயர் ஸ்திதியிலிருப்பவர்கள் கீழ்ப்பட்டவர்களை அலட்சியம் செய்வதாயும் பிற்பட்டவர்களின் க்ஷேமத்தைப் பேணுவதில்லை என்றும் புகார் சுமத்தப்படுகிறது. இந்தப் புகாரை நீக்குவது பட்டதாரிகளின் பொறுப்பும் கடமையுமாகும் என்றும் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பேசினுர்.

தமது பிரசங்க தொடக்கத்தில், ஐரோப்பியர்கள் இந்திய பட்டதாரிகளைக் கையாலாகாதவர்களாகக் கருதிவந்ததைக் குறிப்பிட்டு, இந்திய பட்டதாரிகள் பல துறைகளிலும் சோபித்து இந்த இழுக்கைப் பொய்ப்பித்துவிட்டனர் என்று ஸ்ரீநிவாஸராகவையங்கார் சொன்னது குறிப்பிடத் தக்கது. ஸ்திரீகளில் பலர் வரவர சர்வகலாசாலைப் பட்டதாரிகளாகி வருவதைப் பாராட்டி அவர்களில் சிலர் பெண்கள் கல்விக்காகப் பாடுபட சங்கல்பம் கொண்டிருப்பது மெச்சத்தக்கது எனவும் இவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

ஸ்ரீநிவாஸராகவையங்காரின் பட்டமளிப்பு விழா பிரசங்கத்தைப் பல பத்திரிகைகள் பாராட்டின. அதைக் கண்டித்து எழுதிய பத்திரிகைகளுமுண்டு. சமூக சீர்திருத்தம்பற்றி இவர் பேசிய விதத்தை 'இந்தியன் சோஷல் ரிபார்மர்' கண்டித்து எழுதியது. இவருக்கு கிடைத்த பாராட்டுக் கடிதங்களில் சென்னை கவர்னர் எழுதியதும் ஒன்று. ஆம்ப்தில் பிரபு பின்வருமாறு எழுதினுர்:—

சர்க்கார் மாளிகை
சென்னை, 23—3—1902

அன்பர் ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு,

பட்டமளிப்பு விழாவில் நீங்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் முழுவாசகத்தையும் படித்தேன். அதை வெகு உயர்வானதாகக் கருதுகிறேன். சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமில்லாத பதமே அதில் கிடையாது. இது ஒரு பெரிய விசேஷம். அதை நான் பாராட்டுகிறேன்.

உமது பிரசங்கம் வரவேற்கப்பட்டு சிலாகிக்கப்படும் என்று நான் நம்பியது வாஸ்தவமாகிவிட்டது.

இந்த சிரமம் மிக்கதான, முக்கிய பொறுப்பான, பிரசித்தமான உமது திறமைக்கேற்ப, தாங்கள் நிறைவேற்றியது குறித்து என் நன்றி.

இப்படிக்கு
(ஒ - ம்) ஆம்ப்தில்

இந்திய சர்வகலாசாலைக் கமிஷன் முன் இதே வருடம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சாட்சியம் கூறினார். பண்டைக் கல்வி நிலையங்கள், செனட் சபை, செனட் தேர்தல், போதனாமுறை பற்றி இவர் தம் அபிப்பிராயங்களை அப்போது வெளியிட்டார்.

(இந்தக் கமிஷன்முன் இவர் சாட்சியம் கூறத் தயாராயில்லை. ஆனால் ராஜப் பிரதிநிதி சபை சட்டமெம்பரும் கமிஷன் அக்கிராசனருமான ஸர் தாமஸ் ராலே இவர் சாட்சியமளித்தாகவேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தார். சர்வகலாசாலைக் கல்வி சீர்திருத்தம் குறித்து மதிப்பு மிக்க தம் கருத்துக்களை இவர் வெளியிடவேண்டுமென்று ஸர் சங்கரன் நாயர் மூலமாகவும் நேரிடையாகவும் ஸர் தாமஸ் ராலே இவரை நிர்ப்பந்தித்தார். கல்கத்தாவிலிருந்து 1902-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10-ம் தேதி ஸர் தாமஸ் ராலே இவருக்குப் பின்கண்டபடி எழுதினார்: "போதிய அவகாசமில்லாத காரணத்தால் சர்வகலாசாலைக் கமிஷன் முன் சாட்சியம் கூற தாங்கள் விரும்பவில்லை என்பதாக ஸ்ரீ சங்கரன் நாயர் மூலம் அறிகிறேன்......(1) சர்வகலாசாலைக் கல்விமுறை எந்தெந்த அம்சங்களில் சீரமைப்புக் குரியது, (2) சீர்திருத்தத்தை முன்னிட்டு, சர்வகலா

சாலைக்கு சட்டபூர்வ அதிகாரங்கள் வழங்கியோ இதர வகையிலோ, சர்க்கார் என்ன உதவி புரிவது என்பது பற்றி அருகதையுள்ளவர்களின் கருத்தையறிய ராஜப் பிரதிநிதி விரும்புகிறார்......சர்வகலாசாலைகள், கல்லூரிகள் சம்பந்தப்பட்டதில் உமது ஆலோசனைகளை அறிய ஆவலா யிருக்கிறோம்......உமது ஆலோசனைகள் கமிஷனுக்கு அனுகூலம் பயக்கும் என்று நம்புகிறேன்")

பண்டைக் கல்வி நிலையங்கள்

"சமீபகாலமாக பழங்காலக் கல்விமுறைகளில் பிடிப்பு மீண்டிருக்கிறது. தற்சமயம் மடங்கள் போன்றவற்றில் இத்தகைய கல்வி போதனை நடைபெறுகிறது. சுதேச சமஸ்தானங்களிலும் பெரிய ஜமீன்தாரிகளிலும் இவை நிறைய இருக்கின்றன. இங்கு சாஸ்திரஞானமுள்ள பண்டிதர்கள் வருஷா வருஷம் கூடி தர்க்கம் நடத்துகின்றனர். மத விஷயங்களைப்பற்றி சமீப காலமாக சாதாரண மக்களும் விசாரம் நடத்திவருகின்றனர். சர்வகலாசாலை போதனாமுறையில் இந்த பண்டிதர்களுக்கும் சம்பந்த முண்டுபண்ணக்கூடுமானால் அதனால் அனுகூலமேற்படும். ஏனெனில் சர்வகலாசாலைக்கல்வி எவ்வளவுக் கெவ்வளவு மக்களின் வாழ்க்கை முறையைத் தழுவியதாயிருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு நாகரிக வளர்ச்சிக்கு உதவக் கூடியது. இந்தப் பண்டைய கல்வி நிலையங்கள் கீழ்த்திசைப் பாஷை சர்வகலாசாலைகளாக அதிகாரமளிக்கப்படுமானால் இந்தக் கல்விமுறையில் பிடிப்பும் சிரத்தையும் நீடிக்கக் கூடும். ஆனால் பண்டிதர்கள் குறிப்பிட்டதொரு பாதையைக் கடைப்பிடிக்க ஒப்புக்கொள்ளாமல் மறுக்கலாம். இவற்றுக்கென விதிமுறைகள் வகுக்காமல், இவற்றைத் தனிப்பட்ட 'பேகல்டி'யாக்குவது குறித்து முயற்சி எடுக்கலாம். இவற்றின் சிபாரிசு பேரில் "மஹாமஹோபாத்யாயர்" போன்ற பட்டங்களை வழங்கலாம். இந்த நிலையங்கள் மீது கண்காணிப்பு செலுத்துவது கஷ்டமானது; இவற்றின் சிபாரிசுகளை எவ்வளவுக்கு ஒப்புக்கொள்ளக் கூடும் என்று நிச்சயிப்பதும் கஷ்டம்; இது குறித்த மேற்பார்வை முயற்சியும் விரும்பப்படமாட்டாது.

போதனா சர்வகலாசாலை

சென்னை சர்வகலாசாலையைப் போதனா சர்வகலாசாலை

யாக்குவது நலமாகும். ஆனால் இதில் பல சிரமங்கள் குறுக்கிடக்கூடும். ஆயினும் இத்துறையில் கிஞ்சித் தேனும் நடவடிக்கை எடுக்கலாம். மாணவர்களுக்கு நல்ல பயிற்சியளித்து, பட்டம் பெற்ற பின்னரும் உயர் பட்டங்களுக்காகவோ ஆராய்ச்சி நடத்துவதற்காகவோ அவர்கள் தொடர்ந்து வாசிப்பதற்கு வகை செய்வதே போதனா சர்வ கலாசாலையின் நோக்கம். 'பி.ஏ.' பட்டப் படிப்புவரை தற் போதைய ஏற்பாடு நீடிக்கலாம்; ஏனெனில் வெளியூர் கல் லூரிகளில் பி. ஏ. படிப்பு பாடங்கள் சொல்லித் தரப்படு கின்றன; இவை மூடப்படுவதென்றால் கல்வி பரப்பும் திட்டத்துக்கு குந்தகமே விளையும்; இந்தக் கல்லூரிகள் சென்னையிலிருந்து வெகு தூரத்தில் இருப்பவையர்தலால் இவற்றை மூடினால் சுற்றுவட்டாரத்திலுள்ள வித்தியார்த் திகளுக்குப் பாதகமுண்டாகும். பிற்காலத்தில், ஒரே ஸ்தலத்தில் கல்லூரிகளனைத்தும் கொண்ட மத்திய போதனா சர்வகலாசாலை நிறுவும் திட்டத்துக்கு ஆதரவு பெருகும் காலத்தில், இந்தக் கல்லூரிகளை மூட நேரிடும். எம். ஏ. போதனைக்குப் பல கல்லூரிகளில் வசதிகள் போதா. எம். ஏ. பட்டப் பரீட்சைக்கு ஆஜராக விரும்பு வோருக்கு போதனையளிக்க பேராசிரியர்களையும் உதவிப் பேராசிரியர்களையும் சர்வகலாசாலை நியமிக்கலாம். விஞ் ஞான விஷயங்கள் குறித்த சொற்பொழிவுகளுக்கு ஏற் பாடு செய்யலாம். இதற்காக அறிவாளிகளை நியமிக்கும் போது ஐரோப்பிய நிபுணர்களையும் தற்காலிகமாக நியமிக் கலாம். சர்க்கார் கல்லூரிகளிலோ வெளியூர் கல்லூரி களிலோ இருக்கும் நிபுணர்களையும், அவர்களுக்கு அவகாச முள்ளதைப் பொறுத்து, நியமிக்கலாம். பரிசோதனை நிலை யங்களும் புத்தகாலயமும் அவசியம் தேவை. இந்த வசதிகள் எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கவேண்டும். உயர் படிப்புகளுக்குப் போதிக்கப் போதிய ஆசிரியர்கள் கிடையாது. ஒரு பேராசிரியர் ரஜா எடுத்துக்கொண்டு விட்டால் அவருக்குப் பதிலாகப் பாடம் நடத்த இன் னொருவரைப் பொறுக்கி நியமிப்பது சிரமமாயிருக்கிறது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பேராசிரியர் இருக்கிறார். மேலும் ஓரிருவரை நியமிக்கலாம். உயர்படிப்பில் நாட் டம் கொண்ட, புத்தி கூர்மைபடைத்த, மாணவர்களுக்கு 'பெலோஷிப்' வழங்கி அவர்களை இந்தப் பதவிகளில் நிய

மிக்கலாம். இரண்டு வருட எம். ஏ. படிப்புக் காலத்துக் காக மட்டுமின்றி ஐந்து வருஷங்களுக்கு ஸ்காலர்ஷிப்கள் கொடுக்கவேண்டும். மாணவர்களுக்குப் பாடம் போதிக்கத் தகுதியுள்ளவர்களுக்கு அந்த யோக்கியதையை யளிக்கலாம். நாளாவட்டத்தில் இவர்கள் அனுபவம் பெற்றவர்களானதும் ரஜாவில் போகும் பேராசிரியர்கள் ஸ்தானத்தில் இவர்களை நியமிக்கலாம். காலக்கிரமத்தில் இவர்களை பேராசிரியர்களாகவே நியமித்துவிடலாம். 25 வயதுக்குள் சர்க்கார் உத்தியோகத்தில் சேரவேண்டுமென்றிருக்கும் விதியை ஸ்காலர்ஷிப்தார்கள் விஷயத்தில் அமுல் நடத்தக் கூடாது. ஸ்காலர்ஷிப்களுக்கான நிதியை சர்க்கார் ஒதுக்க வேண்டும். கல்லூரிகளில் சேருவோரில் பெரும்பாலர் ஏழைகள். அவர்கள் மேல் படிப்புக்கு ஸ்காலர்ஷிப் போன்ற வசதிகள் செய்து ஆக்கமளிப்பது சர்க்காருடைய பொறுப்பு ஆகும். ஆரம்பக்கல்விக்கும் நிதி போதாததாயிருக்கிறது.

செனட்

செனட் சபை மெம்பர்கள் எண்ணிக்கை மிக அதிகமாயிருப்பதைக் குறைக்கலாம். பலர் கௌரவிக்கப்படும் முறையில் மெம்பர்களாக்கப்படுகின்றனர். சர்வ கலாசாலையிடம் மக்கள் சிரத்தைக் கொள்ளச் செய்யும் இவ்வேற்பாட்டினுல் நன்மையுண்டு......மெம்பர்கள் நியமனத்தைக் கொஞ்ச காலத்துக்கு நிறுத்திவைத்து அங்கத்தினர் எண்ணிக்கையைக் குறைக்கலாம். மெம்பர்கள் எண்ணிக்கை 110-லிருந்து 120-க்குள் அடக்கப்படலாம். பல கல்லூரிகளும் செயலாற்றும் விதத்தைப் பார்வையிடுவதென்றுல் செனட்டில் அந்தக் கல்லூரிகளின் அதிபர்களுக்கும் இடமளிக்கவேண்டும். மிஷனரி கல்லூரிகள் நல்ல சேவைபுரிகின்றன; அவற்றுக்கும் பிரதிநிதித்வமளிக்கவேண்டும். மக்களில் பலவகைப்பட்டவர்களுக்கும் பிரதிநிதித்வமளிக்கலாம். சர்வகலாசாலையிடம் மக்கள் அக்கறை கொள்ளச் செய்யவேண்டும்.

மெம்பர்கள் தேர்தல்

செனட் மெம்பர்கள் தேர்தல் சம்பந்தமான தற்போதைய முறை திருப்திகரமாயில்லை. லண்டன் சர்வ கலாசாலைப் பட்டதாரிகள் குழாம்போன்றதொரு ஸ்தா

பனம் மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதே உசிதமானது. சர்வகலாசாலையுடன் தொடர்புகொள்ளும் அக்கறை கொண்டு அதற்கு ருசுவாக சிறுதொகையைச் சந்தாவாக செலுத்துபவர்களையே இந்த ஸ்தாபனத்தில் சேர்க்கலாம். பட்டதாரிகள் ரிஜிஸ்தர் செய்துகொள்ளும் முறைக்கொப்பானது இது. பட்டதாரிகள் ரிஜிஸ்தர் செய்துகொள்ளும் முறை விரும்பத்தக்கதாகும். சர்வகலாசாலையிடம் நீடித்த சிரத்தைக்கும் விசுவாசத்துக்கும் உதவக்கூடிய. இத்தகைய முறை எதுவுமே நல்லது.

ஸிண்டிகேட்

ஸிண்டிகேட் உறுப்பு மிகவும் சிறியதாயிருக்கிறது. தலைவர் உட்பட 12-பேர் இருக்கவேண்டும் வைத்தியக் கல்லூரி தலைவர், என்ஜினியரிங் கல்லூரி தலைவர், சட்டக் கல்லூரி பேராசிரியர் ஒருவர், கல்வி இலாகா டைரக்டர், கிறிஸ்துவ், பிரஸிடென்ஸி கல்லூரிகளின் அதிபர்கள் முதலியவர்களை ஸிண்டிகேட் அமைப்பு விதிகள்படி நியமிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த ஏற்பாட்டினுல் ஸிண்டிகேட்டில் யார், யார் அங்கம் வகிக்கக்கூடியவர்கள் என்பதை முன்கூட்டியே சொல்லிவிடலாம். மேலும் ஓரிரு புதியவர்கள் இடம் பெறச்செய்வது நலம்.

'பேகல்டி' (படிப்புத்துறை)

சர்வகலாசாலை மெம்பர்களல்லாதாரை 'பேகல்டி'களில் சேர்க்கக்கூடாது. செனட் சபையைச் சேர்ந்தவர்களே 'பேகல்டி'களில் இடம்பெறவேண்டும். செனட்டுக்கு அதிக அதிகாரம் கிடையாது என்று கருதப்படுகிறது. செனட் தன் முக்கிய கடமைகளை புரியவேண்டும். செனட் நிறைவேற்றிய ஒருவிதி திருத்தப்படுவதானுலும் செனட் அல்லது அத்தகைய முக்கிய உறுப்புக்கள் அமைப்புபற்றிய விதி கொணரப்படுமானுலும் செனட்டின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். ஒரு சிலரிடம் செனட் தன் அதிகாரங்களை ஒப்புவிக்குமானுல் இந்த கோஷ்டியின் சிபார்சு ஏற்கப்படவேண்டும். 'பேகல்டி'கள் தாங்கள் சம்பந்தப்பட்டதில் உப விதிகளைத் தாங்களாகவே வகுத்துக்கொள்ளக் கூடாது.

போதனு தரம்

பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களின் தரம் குறைந்

திருக்கிறது. சர்க்கார் பள்ளிக்கூடங்கள் பல மூடப்பட்டது இதற்குக் காரணமாயிருக்கலாம். ஆசிரியர்களின் வேலை ஸ்திரமற்றதாயிருப்பதும் அவர்கள் மேம்பாடுக்கு போதுகள் இராததும் இந்தத் தொழிலுக்குத் தக்கவர்கள் முன் வராதிருப்பதற்குக் காரணங்களாகும்."

சென்னை ராஜதானியில் வாழும் 5 கோடி மக்களுக்கு இந்த ஒரே ஒரு சென்னை சர்வகலாசாலை போதாதென்பது இவர் கருத்தாயிருந்தது. கோதாவரி நதிதீரத்தில் ராஜமஹேந்திரபுரியில் ஒரு சர்வகலாசாலை அவசியம் அமைக்கப்படவேண்டுமென்று இவர் எண்ணம் கொண்டிருந்தார். "ஆக்ஸ்போர்ட், கேம்ப்ரிட்ஜ் மாதிரியில் கும்பகோணத்தில் காவிரிகரையிலும் ராஜமஹேந்திரத்தில் கோதாவரிக் கரையிலும் சர்வகலாசாலைகள் நிறுவ நாங்கள் இருவரும் திட்டமிட்டிருந்தோம். ஆக்ஸ்போர்ட். கேம்ப்ரிட்ஜ் மாதிரியிலேயே மேலும் கூவம் ஆற்றில் பிரதிவருடமும் தோணிப்பந்தயம் நடத்துவதும் எங்கள் திட்டத்தின் அம்சமாயிருந்தது. எல்லா கல்லூரிகளும் கும்பகோணத்திலும் ராஜமஹேந்திரத்திலுமே இருக்கவேண்டு மென்பதும் எங்கள் நோக்கமாயிருந்தது. எங்கள் திட்டப்படி சென்னையில் கல்லூரிகளே இருந்திருக்கமுடியாது. ஆனால் இப்பொழுது என்னவோ சென்னை அஞ்சத்தேவையில்லை; இன்னும் சில வருடங்களில் சென்னைக்கு வடக்கேயும் தெற்கேயும், மேற்கேயும் கூட, சர்வகலாசாலைகள் ஏற்பட்டு விடுமென்பதே என் நம்பிக்கை" என்று 1915-ம் வருஷத்தில் சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில், தன் அத்யந்த நண்பர் ஸ்ரீநிவாஸராகவையங்காருடன் மேற்கண்டபடி திட்டமிட்டிருந்ததை ஸர் ஹெரால்ட் ஸ்டுவர்ட் வெளியிட்டார்.

இதைப்பற்றி "ஹிந்து" பின்வருமாறு எழுதியது: "5 கோடி ஜனங்களுக்குமேல் வசிக்கும் சென்னைக்கு ஒரே ஒரு சர்வகலாசாலை போதாது என்று ஸர் ஹெரால்ட் ஸ்டுவர்ட் இடித்துப் பேசியது குறித்தும் அவரும் காலஞ்சென்ற திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்காரும் தெலுங்கு ஜில்லாக்களுக்கு ஒரு சர்வகலாசாலை விரும்பத்தக்கதெனக் கருதியது குறித்தும் மகிழ்ச்சியடைகிறோம்."

1895-ல் கடன் தொல்லையால் உபத்திரவத்துக்காளான ராமநாதபுரம் ராஜா, ஸர் வி. பாஷ்யமையங்கார்,

ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஆகிய இருவரது உதவியையும் நாடியிருந்தார். சிக்கல் மிகுந்திருந்த இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைக்க இவ்வருஷம் (1902-ல்) இவர் ஸ்ரீ. ஏ. சேஷய சாஸ்திரியார் அவர்களுடன் பாடுபடவேண்டிய தாயிற்று. (இடையே இவர் பரோடாவில் ஐந்து வருஷ காலம் பதவி வகிக்க நேர்ந்தமையால் இந்தப் பிரச்னையில் முழு கவனம் செலுத்த முடியாமலிருந்தது.) இவர்கள் எல்லோரும் ராமநாதபுரம் ராஜாவின் நன்றிக்குரிய வகையில் அவருக்கு அனுகூலம் புரிந்தனர்.

இதே வருஷம் பங்குனி மாதத்தில் தம் புத்திரி ஒருவளுக்கும் வைகாசியில் மூன்றுவது புத்திரர் கிருஷ்ணஸ்வாமிக்கும் இவர் விவாகம் செய்வித்தார். ஜுலை மாதத்தில் பரோடா மகாராஜா கெய்க்வார் தம் தென்னுட்டு சுற்றுப் பிரயாணத்தை யொட்டி சென்னை வந்திருந்தபோது ஸ்ரீநிவாஸராகவையங்கார் மாளிகையில் தங்கியிருந்தார். பரோடா மகாராஜாவுக்கும் அவரது பரிவாரத்தினருக்கும் ராஜோபசாரம் செய்தார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். கெய்க்வாரின் தென்னுட்டு விஜயத்தை யொட்டி சுற்றுப் பிரயாண திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்ததும் சகல ஏற்பாடுகளைச் செய்ததும் இவரேதான்.

புத்திரன் கிருஷ்ணஸ்வாமிக்கு நல்ல, உயர்ந்த குடும்பத்தில் மணமகள் வாய்த்தது குறித்து ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கும் சகோதரர் ஸ்ரீ கஸ்தூரிரங்கையங்காருக்கும் உண்டான சந்தோஷம் எல்லையற்றதாம். இந்த விவாகத்தை முடித்துவைத்ததில் ஸ்ரீ கஸ்தூரிரங்கையங்காருக்கு பெரும் பங்கு உண்டு. பெண்ணின் முன்னோர்கள், பிதா வழியிலும் மாதாவழியிலும், நல்ல அந்தஸ்திலிருந்தவர்கள். பிதா வழியில் ஆண்டாபுரம் ரங்காச்சார் என்பவர் மைசூரில் பிரசித்தி பெற்றவர். மைசூர் மகாராஜா இவரிடம் அத்யந்த ப்ரீதி கொண்டிருந்தார். யாதொரு விஷயம் குறித்தும் இவரிடம் ஆலோசனை கேட்க இவர் வீட்டிற்கே வந்து விடுவாராம். இன்றும் இவர் பெயரில், மைசூரிலிருந்து சுமார் 9 மைல் தொலைவிலுள்ள பஸ்சிமவாஹினி என்ற ஊரில் காவிரி நதிக்கரையைத் தொட்டாற்போல ஒரு சத்திரம் இருக்கிறது. ஸ்ரீ ரங்காச்சார் நாளில், துலா மாத விசேஷ அன்னதான காலத்தில், மகாராஜா சத்திரத்துக்கு வந்து இவருடன் போஜனம் உட்கொண்டதுண்

டாம். இந்தப் பெரியாரின் வம்சவழியில் வந்தவர்கள் இன்றும் இந்த சத்திரத்தை சிலாக்கியமாக நடத்திவருகின்றனர்.

ஸ்ரீமான் ரங்காச்சார் தஞ்சை ஜில்லாவில் திட்டையைச் சேர்ந்தவர். சிறுவயதிலேயே தாய், தந்தையரை இழந்துவிட்டவர். சகோதரர்களுடன் மனஸ்தாபம் நேர்ந்தமையால், 9-ம் வயதிலேயே, ஒருநாள் திடுமென யாருக்கும் சொல்லாமல், கையில் அரையணு காசுடன் வீட்டை விட்டு மைசூருக்கு நடைகட்டி விட்டார்! மைசூரில் அத்தை ஒருவள் வீட்டில் இருந்துவந்த இவரை வேறொரு உறவினர் ஸ்வீகாரமாக்கிக்கொண்டார். அங்கு வித்தியாப்பியாசம் பயின்று, பின்னர் அரண்மனை சேவையில் புகுந்தார். ஆசார சீலராயிருந்த இவரது பெருந்தன்மையும் மேன்மையான குணங்களும் ராஜாவைக் கவர்ந்தன.

புக்ககம் பிரவேசித்த பெண்ணின் மாதா வழி முன்னோர்களும் உத்க்ருஷ்டமானவர்கள். பெண்ணின் பாட்டனர் பிரபல வழக்கறிஞர் நுங்கம்பாக்கம் ஸ்ரீநிவாஸாச்சார் என்ற ஞானவாபி. வேதாத்யயனம் செய்தவர்; சாஸ்திரங்களைக் கரைத்துக்குடித்தவர்; பரமவைதிகர். பிராம்மணச் சிறுவர்களைக் கண்டாரானல், அவனையோ அவர்களையோ வீட்டுக்கு அழைத்துச் சென்று, ஸ்நான, பான, போஜன வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து, வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுத்து, உபதேசித்துவிட்டுத் தான் உலக வீதியில் அவன் நடமாட விடுவாராம்! ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் மற்றும் பல ஐரோப்பிய சட்ட நிபுணர்களுக்கு சளைக்காமல் ஈடுகொடுத்து வியாஜ்ஜியத்தில் வெல்லும் வல்லமை படைத்திருந்தவராம். வழக்கறிஞர் தொழிலில் பொய் பேசாதவர்! பொய் சொல்லி வழக்கில் ஜெயிக்கும் ஆசை அறவே இல்லாதவர்; அப்பேர்ப்பட்ட வழக்குகளில் ஆஜராக ஒப்பாதவர். மாதம் 3000 ரூபா வருமானம் கிடைத்து வந்திருந்தது. இவ்வுத்தமர் அதிக நாள் ஜீவிக்க காலன் தான் விட்டுக்கொடுக்கவில்லை. அல்பாயுசாக உயிர் நீத்தார்.

காலன் காத்திருந்ததை இவர் முன்னமேயே அறிந்திருந்தாராம்! ஒரு வழக்கு சம்பந்தமாக அயலூர் போக வேண்டியிருந்தது. இவர் புறப்படும் சமயத்தில் அடை

மழை பொழிந்துகொண்டிருந்தது. தொலைவில் எங்கோ பாலம் பிளந்திருந்ததை கண்முன் கண்டவர் போல, இந்த ரயில் கவிழ்த்துவிடுமோ என்றாராம் இவர் ஸ்டேஷன் மாஸ்டரிடம். இவர் ஜாடையாகச் சொன்ன வார்த்தைகள் அசம்பாவிதத்தைக் குறிப்பதை ஊகித்துக்கொண்ட ஸ்டேஷன் மாஸ்டர் "பிரயாணத்தை ஒத்திப் போடலாமே" என்றும் கூறிப்பார்த்தாராம். ஆனால் கக்ஷிக்காரனிடம் வருவதாக வாக்குகொடுத்துவிட்டிருந்ததால் ஸ்ரீநிவாஸாச்சார் வாக்குறுதி அளித்துவிட்டதிலிருந்து பிறழ மறுத்துவிட்டார். பிரயாண மார்க்கத்தில் பாலம் உடைந்திருந்த ஸ்தலத்தில் பரகதி அடைந்தார் இவர்.

இவ்வாண்டில் நடந்த இவ்விரு திருமணங்களைத் தான் தன் கண்மூடுமுன் கடைசியாகப் பார்க்கக் கொடுத்து வைத்திருந்தது ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு. கனிஷ்ட புத்திரர் ரங்கஸ்வாமியின் விவாகத்தையும் கடைசி புத்திரி கோதையின் விவாகத்தையும் நடத்தி வைத்து கண்ணாரக் குதூகலிக்கும் பாக்கியம் இவருக்கு கிடைக்கவில்லை. புத்திரன் ரங்கஸ்வாமிக்கு 1904 லிலும் புத்திரி கோதைக்கு 1905 லும் விவாகமாகியது. இடையே 1903 ல் இவர் தேகவியோகமாகிவிட்டார்.

ஸ்ரீநிவாஸராகவையங்காரின் புத்திரர்களில் பெயரும் புகழும் பூத்தவர் ஸ்ரீரங்கஸ்வாமி. ரங்கஸ்வாமி என்றால் "ஹிந்து" பத்திரிகையின் ஞாபகமே எழும். அதன் சொந்தக்காரரும் ஆசிரியருமாயிருந்த ஸ்ரீகஸ்தூரிரங்கையங்கார் காலத்திலும் அவருக்குப் பின் ஆசிரியராகப் பதவி வகித்த போதும் ஸ்ரீரங்கஸ்வாமி பத்திரிகைக்குப் பாரெங்கும் பெயரும் கீர்த்தியும் கிடைக்கச் செய்தார். இவரது எழுத்து வன்மையை ரசித்துப் பரவசமடைந்தவர்கள் கணக்கிலடங்கமாட்டார்கள். ரங்கஸ்வாமி எழுதியிருக்கிறாரா என்றுபார்க்கவே அந்நாளில் அன்றாடம் அநேகர் "ஹிந்து" பத்திரிகையை ஆவலுடன் வாங்கியிருக்கின்றனர்! தளபதிகள் திகைத்தனர், வியந்தனர் முதல் மகாயுத்தத்தின் போது; "ஹிந்து" ஆபீஸ் அறையிலிருந்துகொண்டு ஐரோப்பிய யுத்தரங்கத்தில் எதிரியின் அடுத்த நடவடிக்கை என்ன, எப்படிப்பட்டதாயிருக்குமென்று பத்திரிகையில் ஜோஸ்யம் சொன்னார்! ஆங்கிலேய அதிகாரிகள் அலறினர், அங்கலாய்த்தனர்; ரங்கஸ்வாமியின் தாக்குதலைக்

கண்டு தான்! ஜலியன்வாலாபாக் படுகொலை அக்கிரமத்தைப் பற்றியும் கவர்னர் வில்லிங்டன் பிரபுவின் ஐந்து வருட ஆட்சி பற்றியும் இவர் தலையங்கங்கள் எழுதியிருந்தது குறிப்பிடத் தக்கவை. தம்மைப் பற்றிய கட்டுரைகளைப் படித்த வில்லிங்டன் பிரபு அவற்றை எழுதிய ஆசிரியரைக்காண விரும்பினாராம்! நம் நாட்டவர் சிலரும் ரங்கஸ்வாமியின் தாக்குதலுக்காளாகி யிருக்கின்றனர். வாளுக்கின்னும் கூரியதாயிருந்தது இவரது பேனா; பயமறியாத பேனா; பெருந்தன்மை படைத்திருந்தது. ரங்கஸ்வாமியிடம் தாக்குண்டவர்களே இவரது எழுத்து வன்மையை மெச்சினரென்றால் அதனைவிட உயரிய பாராட்டு வேறு என்ன கிடைக்க முடியும்! இவரது இன்னொரு உதார குணத்தையும் எடுத்துச் சொல்லவேண்டும். பத்திரிகாசிரியர் எத்தகைய பத்திரிகா தர்மத்தைக் கடைபிடித்தார் என்பது அதிலிருந்து தெளிவாகும். தம்மைத் தாக்கி எவராவது பேசியிருந்தால் அது அப்படியே பத்திரிகையில் பிரசுரமாக வேண்டுமென்று இவர் நிர்ப்பந்தித்திருக்கிறார்! ஆனால் அத்தகையவர்கள் மறு பேச்செடுக்க முடியாத விதத்தில் செம்மையான, சூடான பதிலடியை வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கின்றனர்!

இவரை மணக்கோலத்தில் கண்டு களித்துப் பூரித்துப் பேரானந்த மடையும் பாக்கியம் பிதாவுக்கு கிடைக்கவில்லை; பாரதமும் பத்திரிகாசிரியர் திலகங்களில் ஒன்றைப் பறிகொடுத்தது இளம் வயதிலேயே—ஸ்ரீரங்கஸ்வாமி தமது 39-ம் பிராயத்தில் அகால மரணமடைந்தார்.

'ஹிந்து', 'சுதேசமித்திரன்' பத்திரிகைகள் தற்போதய நிர்வாகிகளிடம் கை மாறியபோது ஸ்ரீநிவாஸ ராகவையங்காரின் புத்திரர்கள் சகாயம் செய்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1902-ம் வருஷம் ஜூலை மாதம் 9-ம் தேதி யன்று அமைக்கப்பட்ட இந்திய போலீஸ் கமிஷனில் இவர் மெம்பராக நியமிக்கப்பட்டார். இந்த வேலையே இவரது வாழ்க்கையில் கடைசி பொது அலுவலாகியது. இவ்வாண்டு அக்டோபரிலிருந்து அடுத்த வருஷ மே மாதம் முடிய கமிஷன் அலுவல் சுமார் எட்டு மாதங்களுக்கு நீடித்தது. சிம்லாவிலிருந்து சென்னை திரும்பி மீண்டும் பழையபடி ரிஜிஸ்திரேஷன் இலாகா தலைமைப் பதவியை யேற்ற இவர் ஆகஸ்டு மாதத்தில் சுற்றுப் பிரயாணத்தின் போது நோய்வாய்ப்பட்டு அதிலிருந்து மீளாமல் டிசம்பரில் காலகதியடைந்தார்.

மத்திய மாகாண பிரதம கமிஷனர் கனம் மிஸ்டர் ஆண்ட்ரு பிரேஸர் ஐ. ஸி. எஸ்., ஸி. எஸ். ஐ. கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டார். மற்ற மெம்பர்கள் வருமாறு:—பம்பாய் ஹைக்கோர்ட் ப்யூனி ஜட்ஜ் கனம் ஜஸ்டிஸ் காண்டி. ஐ. ஸி. எஸ்.; கனம் தர்பங்கா மகாராஜா; பரோடா மாஜி திவானும் சென்னை பத்திரப்பதிவு இலாகா தலைவருமான கனம் ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஸி. ஐ. இ; பஞ்சாப் கமிஷனர், சூபரிண்டு கனம் லெப்டினண்ட் கர்னல் மண்ட்காமரி; அலகாபாத் பாரிஸ்டர் மிஸ்டர் டபிள்யூ. எம். கோல்வின்; ஹைதராபாத் சமஸ்தான போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் ஹாங்கின், ஸி. ஐ. இ. சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் எச். ஏ. ஸ்டுவேர்ட் கமிஷன் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்.

அக்காலத்தில் இந்திய போலீஸ் பற்றி குறைகள் பல வெளியிடப்பட்டன. லஞ்சப் பழக்கம், ஊழல் குற்றச் சாட்டுகள் அஷ்ட திக்கிலிருந்தும் கோஷமாகக் கிளம்பி யிருந்தன. குற்ற விசாரணை முறையும் மேற்பார்வை, பயிற்சி, படை அமைப்பு விதமும் குறைபடத் தக்கதா யிருந்தது. இவற்றை உத்தேசித்தும் ரயில்வே போலீஸ், நதிபோலீஸ், கிராம போலீஸ், ஆகிய பல தரப்பட்டதான

போலீஸ் படையின் அமைப்பு, பயிற்சி, பலம், சம்பளம் பற்றி விசாரணை நடத்தி சிபாரிசு செய்யவும் இந்த போலீஸ் கமிஷன் நிறுவப்பட்டது. ராஜப் பிரதிநிதி கர்ஸன் பிரபு. சர்க்கார் நியமித்ததான இந்தக் கமிஷன் குற்ற விசாரணை, புலன் தெரிவித்தல், போலீஸ் மீது மாஜிஸ்திரேட்களின் கண்டிரோல், ஏனைய பிரச்னைகளையெல்லாம் ஆராய்ந்தது.

ஜுலை மாதம் அமைக்கப்பட்ட இந்தக் கமிஷன், பூர்வாங்கமாக மாகாண சர்க்கார்களின் ரிபோர்ட்கள் கிடைத்ததும், அவற்றை ஆராய, அக்டோபரில் சிம்லாவில் கூடியது. கமிஷன் கல்கத்தா சென்றிருக்கையில் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் அதில் சேர்ந்தார். 1902-ம் வருஷம் முடியு முன் அஸ்ஸாம், வங்கம், ஐக்கிய மாகாணத்தில் கமிஷன் தன் வேலையை முடித்துக்கொண்டது. 1903-ல் மத்திய மாகாணம், பர்மா, சென்னை, ஹைதராபாத், பம்பாய், பஞ்சாப், எல்லை மாகாணத்துக்கு விஜயம் செய்தது. பலூசிஸ்தானுக்குக் கமிஷன் போகவில்லை. இந்தக் கமிஷன் 50 பகிரங்கக் கூட்டங்கள் நடத்தியது. கேள்வித்தாள்களுக்கு 683 பேரிடமிருந்து பதில் கிடைத்தது. இவர்களில் 244 பேர் நேரில் விசாரிக்கப்பட்டனர். கேள்விகளுக்குப் பதிலளிக்காத 35 பேர் நேரில் சாட்சியம் கூறினர்.

இந்திய போலீஸ் கமிஷன் ரங்கூன் சென்றிருக்கையில் அங்கு ஒரு ஹிந்து ஆலயத்துக்கு திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் அஸ்திவாரக்கல் நாட்டினர்.

கமிஷன் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஸ்ரீநிவாஸராகவையங்கார் சென்னையில் கிராம நிர்வாக அமைப்பு முறை பற்றி ஒரு குறிப்பு தயாரித்துக் கொடுத்தார்.

கமிஷனின் விசாரணை போது பல புகார்கள் ஊர்ஜிதமாயின: தகுதியற்ற கான்ஸ்டபிள்களும் ஹெட் கான்ஸ்டபிள்களும் குற்ற விசாரணைகள் நடத்துவதாயிருந்தது நிலைமை. யோக்கியதையற்ற ஹெட் கான்ஸ்டபிள்களிடம் போலீஸ் ஸ்டேஷன் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அருகர்களல்லாத ஹெட் கான்ஸ்டபிள்கள் சப். இன்ஸ்பெக்டர்களாக உயர்த்தப்பட்டுமிருந்தனர். லஞ்சப் பழக்கமும் ஊழலும் மலிந்திருந்தன.

இந்தக் குறைகளை நிவர்த்திக்க கமிஷன் பல யோசனைகள் வெளியிட்டு சிபாரிசு செய்தது. 12 அத்தியாயங்கள் கொண்ட கமிஷனின் ரிபோர்ட்டில் இந்த சிபாரிசுகளடங்கிய அத்தியாயத்தின் சாரமே பின்வரும் வார்த்தைகளில் கொடுக்கப்படுகிறது. போலீஸ் மீது மாஜிஸ்திரேட் கண்டிரோல், உயர் பதவிகளுக்கு சுதேசிகள் நியமனம் ஆகிய முக்கிய பிரச்னைகளடங்கியது இந்த அத்தியாயம். இவ்விரு விஷயங்கள் குறித்தே தர்பங்கா மகாராஜா மற்ற மெம்பர்களுடன் ஒப்பாமல் தனிக்குறிப்பு எழுதியிருந்தார்.

போலீஸ் படையின் திறமை குறையக்கூடாத வகையில், சுதேசிகள் உயர்பதவிகளுக்கு கூடுமான, சாத்தியமான சந்தர்ப்பங்களில் நியமிக்கப்படவேண்டுமென்று கமிஷன் வற்புறுத்தியது. ஐரோப்பிய அதிகாரிகள் இந்தியர் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்களில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்றும் கமிஷன் அறிவுறுத்தியது. போலீஸ் ஸ்டேஷன் நிர்வாகமும் குற்ற விசாரணை பொறுப்பும் சப் இன்ஸ்பெக்டர்களிடமே விடப்படவேண்டுமென்றும் யோக்கியதை மிக்கவர்களென்று பள்ளிக்கூட, கல்லூரி தலைவர்கள், ஜில்லா மாஜிஸ்திரேட்களிடம் சர்டிபிகேட் பெற்று குறைந்தது மெட்றிகுலேஷன் பரீட்சையில் தேறியவர்களே சப் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்றும், சப் இன்ஸ்பெக்டர்கள் நேரடியாக நியமிக்கப்பட வேண்டுமென்றும் விசேஷ, அசாதாரண திறமை காட்டும் ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு மட்டுமே சப் இன்ஸ்பெக்டர் பதவியைக் கொடுக்கலாமென்றும் கமிஷன் வலியுறுத்தியது.

கமிஷன் மேலும் சிபாரிசுகள் செய்ததன் சாரம் வருமாறு:— சப் இன்ஸ்பெக்டர்களே இன்ஸ்பெக்டர்களாக உயர்த்தப்படவேண்டும். இன்ஸ்பெக்டர்கள் எண்ணிக்கையில் 20 சத விகிதப்பகுதியை நேரடி நியமனத்துக்காக ஒதுக்கலாம். மேற்பார்வை, கண்டிரோலுக்காக சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களை நியமிக்கலாம். இந்தியர் வாழ்க்கையில் அனுபவமும் நல்ல பயிற்சியும் பெற்றவர்களுமான ஐரோப்பியர்களை உயர்பதவிகளுக்கு நியமிப்பது நலம். சுதேசிகளை உதவி, டிபுடி சூபரிண்டுகளாக நியமிக்கலாம். இந்தப் பதவிகளில் பாதி ஸ்தானங்களை தகுதியுள்ள இன்ஸ்பெக்

டர்களுக்கென ஒதுக்கலாம். சுதேசிகளை சூபரிண்டுகளாக நியமிப்பது படிப் படியானதாயிருத்தல் நலம். மொத்தப் பதவிகளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை சுதேசிக ளுக்கென ஒதுக்கலாம். டிபுடி சூபரிண்டுகளின் அந்தஸ்து மாகாண சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்கு சமமான தாயிருக்க வேண்டும். பல ஜில்லாக்களடங்கிய மாவட் டத்துக்கு அதிபர்களாக பல டிபுடி இன்ஸ்பெக்டர்ஜென ரல்களை நியமிக்கலாம். இன்ஸ்பெக்டர் ஜெனரல பத விக்கு திறம்பட்டவர்களும் நிர்வாகத்தில் அனுபவம் மிக்க வர்களும் உயர்குண விசேஷங்கள் படைத்தவர்களுமான ஐ. ஸி. எஸ்., நபர்களை நியமிக்கலாம். டி. ஐ. ஜி. பதவி கள் போன்று ஐ. ஜி. பதவியும் போலீஸ் அதிகாரிகள் எட்டுவதற்குரியதாயிருக்க வேண்டும்.

போலீஸ் சர்விஸில் பல தரப்பட்ட அதிகாரிகளின் சம்பளத்தையும் உயர்த்த கமிஷன் சிபாரிசு செய்தது. யோக்கியதைமிக்கவர்கள் போலீஸ் சர்விஸில் சேரவேண்டு மென்பதை யுத்தேசித்தே இந்த ஏற்பாடு. போலீஸ் அதி காரிகள் சிலரது மனைவியர் விதவைகளாகிவிட்டால் அவர் களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் பென்ஷன் வழங்குவதற்கான யோசனை ஒன்றையும் கமிஷன் சிபாரிசு செய்தது. ஒவ்வொரு மாகாணத்திலும் போலீஸ் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்படவேண்டுமென்றும் கமிஷன் வற் புறுத்தியது.

கமிஷன் தன் ரிபோர்ட்டை 1903-ம் வருஷம் மே மாதம் 30-ம் தேதி இந்திய சர்க்காரிடம் சமர்ப்பித்தது. கமிஷன் மெம்பர்களில் தர்பங்கா மகாராஜா மட்டும் இரு விஷயங்கள் பற்றி கருத்து மாறுபட்ட தனிக்குறிப்பு எழுதினர். போலீஸ் மீது மாஜிஸ்திரேட்களின் கண்டி ரோல் நீடிக்கக்கூடாதென்றும் போலீஸ் உயர்பதவிக ளுக்கு ஐரோப்பியரும் இந்தியரும் போட்டிப் பரீட்சை மூலம் பாரபட்சமின்றி பொறுக்கப்படவேண்டுமென்றும் தம் குறிப்பில் அவர் தெரிவித்திருந்தார். ஆனல் மற்ற மெம் பர்கள் இந்த ஆட்சேபத்தை ஒருமித்து எதிர்த்தனர். போலீஸ் படைக்கு இப்போது கொஞ்சமேனும் மதிப்பு கிடைத்திருக்கிறதென்றல் மாஜிஸ்திரேட்கள் அதன் மீது திறமை மிக்கக் கண்டிரோல் செலுத்தி வந்திருப்பதே

காரணமென கமிஷனின் மற்ற மெம்பர்கள் கருதினர். போலீஸ் படை காலக் கிரமத்தில் திறமை மிக்க தானதும் மாஜிஸ்திரேட்களின் குறுக்கீடு மறைய வேண்டும் என்றது கமிஷன். உயர் பதவிகளுக்குப் போட்டிப் பரீட்சை நடத்துவதென்ருல் எல்லா மாகாணத்திலும் தரம் ஒரே சீராக இராததைக் கமிஷன் சுட்டிக்காட்டியது. போட்டிப் பரீட்சை நடத்த எந்த ஒரு மாகாணத்திலும் நிலைமை நம்பிக்கை யூட்டுவதாயில்லை என்று கருதிய கமிஷன் ஐரோப்பியர், சுதேசிகள் நியமன முறை மாறு பட்டதாயிருக்கவேண்டுமென்றது. ஐரோப்பியருக்கும் சுதேசிகளுக்குமிடையே சம்பள விஷயத்திலும் மற்ற மெம்பர்கள் தர்பங்கா மகாராஜாவுக்கின்னும் தாராள மனோபாவம் காட்டினர்.

தர்பங்கா மகாராஜாவைப்போல தனிக்குறிப்பு எழுதி யிருக்கவேண்டும், கமிஷன் ரிபோர்ட்டை ஆமோதித் திருக்கக் கூடாது என்று ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் கண் டனத்துக்காளானுர். இந்தியர்களும் நேரடியாக சூபரிண்டு களாக நியமிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தாமல் விட்டால், டிபுடி சூபரிண்டுகளாக சுதேசிகள் நியமிக்கப் படுவதற்கு ஐரோப்பிய சகாக்களே வற்புறுத்துவதாகக் கமி ஷன் தலைவர் இவரிடம் உறுதிமொழி கூறியிருந்ததாலேயே இவர் தனிக்குறிப்பு எழுதவில்லை. போலீஸ் இலாகாவில் அப்போது நிலவிய நிலைமையை உத்தேசித்து, கிடைக்கக் கூடிய லாபத்தையும் கெடுத்துக் கொள்வானேன் என்று இவர் கருதினுர்.

போலீஸ் கமிஷனில் இவரது சேவைப்பற்றி கமிஷன் தலைவர் பிரேஸர், சென்னை கவர்னர் ஆம்ப்தில் பிரபுவுக்கு பின்வருமாறு கடிதம் எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜூன் 12, 1903.
சிம்லா

அன்பர் ஆம்ப்தில் பிரபுவுக்கு,

எங்கள் வேலை பூர்த்தியடைந்து விட்டது. திவான் பகதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்கார் சிம்லாவிலிருந்து இன்று திரும்புகிருர். அவர் எங்களுக்கு பேருபகாரமாயிருந்தார். நடத்தையிலும் உள்ள உணர்ச்சியிலும் பெருந்தன்மை படைத்தவர். ராஜதந்திரி என்றும் சொல்லும்படி அவரது

வேலைத்திறன் சோபித்தது. மக்களை அறிந்தவர்; சர்க்காரையும் அறிவார். கடமையிலிருந்தும் வேலையிலிருந்தும் வழுவாதவர் அவர். அவரது ஆற்றல், ஒத்துழைப்பு குறித்து நாங்கள் கொண்டுள்ள மதிப்பை அவருக்குத் தெரியப் படுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
(ஒ-ம்) ஏ. எச். எல். பிரேஸர்.

1903-ம் வருஷம் மே மாதம் 30-ம் தேதி சமர்ப்பிக்கப் பட்ட இந்த ரிபோர்ட் மீது சுமார் இரண்டு வருட காலங் கழித்து இந்திய சர்க்கார் உத்திரவு பிறப்பித்தனர். இந்த உத்திரவு 1905-ம் வருஷம் மார்ச் மாதம் 21-ம் தேதி வெளியாகியது. சம்பள உயர்வு, போலீஸ் படை பல அதிகரிப்பு பற்றிய யோசனைகளால் செலவு கணிசமாக அதிகரிக்கக் கூடியதைப் பொருட்படுத்தாமல் இந்த சிபாரிசுகளை ஏற்க இந்திய சர்க்கார் இசைந்தனர். போலீஸ் மீது ஜில்லா மாஜிஸ்திரேட்டின் கண்டிரோல் நீடிப்பதையும் இன வித்தியாசத்தால் உயர்பதவிகள் சம்பந்தப்பட்டதில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கு மிடையே பாரபட்சம் காட்டப்பட்டதையும் பத்திரிகைகள் எதிர்த்து கண்டித்து எழுதின. சூபரிண்ட் வேலைகளில் ஒரு பகுதி இந்தியருக்காக ஒதுக்கவேண்டும் என்று கமிஷன் யோசனை வெளியிட்டிருந்ததை நிராகரித்து தகுதியுண்டானால் தான் இந்தியர்கள் அந்தப் பதவிகளில் நியமிக்கப்படலாம் என்று கர்ஸன் பிரபு கூறியதும் கடுமையாகத் தாக்கப்பட்டது.

2

ஏழாம் எட்வர்ட் மன்னரின் முடிசூட்டு விழாவைக் கொண்டாட இந்திய ராஜப் பிரதிநிதி கர்ஸன் பிரபு டில்லியில் 1903-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி யன்று நடத்திய தர்பாருக்கு ஸ்ரீநிவாஸராகவையங்கார் அழைக்கப் பட்டிருந்தார்.

அதிகாரத்திலும் ஆதிக்கத்திலும் ஆடம்பரத்திலும் ஆர்வம் கொண்டிருந்தவரான ராஜப்பிரதிநிதி கர்ஸன் பிரபு ஏற்பாடு செய்திருந்த இந்த வைபவத்துக்கு சென்னையிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட பதின் மூவரே அழைக்கப்பட்டிருந்தனர். இந்த 13 பேரில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் நீங்கலாக பாக்கி 12 பேர் பெயர்கள் வரு

மாறு :--(1) ஸ்ரீ ஜி. ஸ்ரீநிவாஸராவ் காரு, (2) ஸ்ரீ கே. பெரிராஜு பந்துலுகாரு (3) ஸ்ரீ பி. ரத்னசபாபதி பிள்ளை (4) ராய் பஹதூர் பி. அநந்தாச்சார்லு ஸி. ஐ. இ. (5) திவான் பஹதூர் பி. ராஜரத்ன முதலியார் ஸி. ஐ. இ. (6) ராவ் பஹதூர் ஸி. ஜம்புலிங்க முதலியார் ஸி. ஐ. இ. (7) திவான் பஹதூர் ஸி. ராமசந்திர ராவ் சாஹேப் (8) கனம் நவர்சையித் முகம்மது சாகிப் பஹதூர், (9) ஸ்ரீ ஸி. சங்கரன் நாயர் (10) ஸ்ரீ ஏ. அண்ணுசாமி தேவர் (11) ஸ்ரீ ஸி. ஆர். பட்டாபி ராம ஐயர்* (12) ஸ்ரீ என். சுப்ரமணியம் பார்-அட்-லா.

இந்த மெம்பர்களுக்கான எல்லா சௌகரியங்களையும் இந்திய சர்க்கார் செய்வித்திருந்தனர். ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கும் மற்ற மெம்பர்களுக்கும் இந்த வைபவத்தை யொட்டி பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பரோடாவிலிருந்து சென்னை திரும்பியதும் விவசாயிகள் கடன் பளு பிரச்னையைப் பற்றிய ஆராய்ச்சியில் தீவிரமாக இறங்கியிருந்த இவர் போலீஸ் கமிஷன் வேலை காரணமாக அதை ஒத்திவைக்க நேர்ந்தது. விவசாயிகள் கடன் வசதி பாங்குகள் கமிட்டியின் யோசனைகள் குறித்து அப்புறம் சமர்ப்பித்த குறிப்பின் இறுதியில் இவர் குறிப்பிட்டிருந்தது கவனத்துக்குரியதாகும்.

"விவசாயிகள் கடன் பளு பிரச்னையைத் தீர்க்க கூட்டுறவு கடன் சொஸைடிகள் ஸ்தாபிப்பது மட்டும் போதாது. இது குறித்து வேறு சில நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும். பருவ நிலை அடிக்கடி பாதகமாகி விடுவதால் ரயத்து லேவாதேவிக்காரர்களை நம்பவேண்டியதாகிறது......சாஹுக்கார்களிடம் ஏற்கனவே கடன் பட்ட ரயத்துகள் கூட்டுறவு சொஸைடியில் சேருவது கஷ்டம். ரயத்துகள் தங்கள் பழைய கடன்களைக் கஷ்டமின்றி பைசல் செய்து கொள்ளும் நிமித்தம், வருடா வருடத் தவணைகளாக குறைக்கப்பட்ட வட்டி பேரில் பல்லாண்டுகளில் அவர்கள் தங்கள் கடனை அடைக்க பரீட்சார்த்தமாக ஏற்பாடு பண்ணிபார்க்கலாம். நில அபிவிருத்திக்காக நிலச்சுவான்களுக்கு லகுவட்டி பேரில்

* டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் தந்தையார்.

கடன் கொடுக்க நில கடன் வசதி பாங்குகள் ஸ்தாபிக்கலாம். விவசாயிகள் தங்களைப் பல்வேறு பிரதி கூலங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள கிராமச் சங்கங்கள் அமைப்பதற்கு ஆக்கமளிக்கலாம். இருப்பினும் இந்தக் கமிட்டியின் யோசனைகள் ஆதரவுக்குரியவை என்று எனக்குத் தோன்றுகிறது.''

கூட்டுறவு சொஸைடிகள் சட்டம் 1904-ல் பிறப்பிக்கப்பட்டது. அதில் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் பங்கு எத்தகையதாயிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. "40 வருஷ முற்போக்கு" என்று அவர் எழுதிய புத்தகத்தைப் படித்தவர்களும் ஏழை ரயத்துகளின் மேம்பாட்டில் அவர் விசேஷ அக்கறை காட்டியதை அறிந்தவர்களும் இதை அறிவர்.

நிர்வாகத்தை நடத்தும் சாமர்த்தியம் இந்தியர்களுக்கும் உண்டு என்ற திட எண்ணத்துடன் தகுதியான சுதேசிகள் பலரைக் கைதூக்கிவிட்டிருப்பவரான ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸ் ஞாபகார்த்த ஏற்பாடு இறுதி உருப்பெறுவதைக் காணக்கொடுத்து வைக்கவில்லை ஸ்ரீநிவாஸராகவையங்காருக்கு. தாம் முன்னுக்கு வந்தது ஸ்டோக்ஸின் பேருதவியினாலேயே என்ற நன்றியுடன் அவரது ஞாபகார்த்த ஏற்பாட்டுக்காகப் பாடுபட்டார் ஸ்ரீநிவாஸராகவையங்கார். ஸ்டோக்ஸ் ஞாபகார்த்த கமிட்டியில் அங்கத்தினராயிருந்து நினைவு நிதிக்காக இவர் ரூ. 500-ம் கொடுத்தார். போதிய பணம் வசூலாகாவிட்டால் இந்தத் தொகையை இரு மடங்காக்கவும் இவர் வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் பின்னர் ஓரிரு வருஷங்களில் இவர் பரோடாவுக்குச் சென்ற பின் இந்தப் பணியை அக்கறையுடன் எவரும் சரியாகத் தொடர்ந்து நடத்தவில்லை. இவர் பரோடாவில் இருக்கையில், ஞாபகார்த்த திட்டம் பற்றி போதிய சிரத்தை செலுத்தப்படாதது குறித்து சேலம் விஜயராகவாச்சாரியார் இவருக்குக் கடிதங்கள் எழுதியதும் இந்தக் கட்டத்தில் குறிப்பிடத்தக்கது. பரோடாவிலிருந்து ஸ்ரீநிவாஸராகவையங்கார் திரும்பியதும் சேலம் விஜயராகவாச்சாரியாருடன் இந்தப் பணியில் முனைந்தார். பின்னர் போலீஸ் கமிஷன் அலுவல் குறுக்கிட்டுவிட்டது. சென்னைக்கு மீண்டும் திரும்பிய இரண்டு, மூன்று மாதங்க

ளுக்குள்ளாக நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகி விட்டபோதிலும் இந்தப் பணியில் ஸ்ரீநிவாஸராகவையங்காரின் உற்சாகம் குன்றவில்லை. சேலம் வீரரும் அவ்வப்போது நிலைமையை இவருக்குத் தெரியப்படுத்திவந்தார். நிதிக்குப் பணம் கொடுக்க வாக்குறுதியளித்தவர்களில் தொகையைக் கொடுக்காத பெரிய மனுஷ்யர்களும் இருந்தனர்! எவ்வளவு தான் கேட்டுப்பார்த்தாலும் இவர்களிடமிருந்து பணம் பெயரக்காணேமென்று சேலம் வீரர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் மரணப் படுக்கையிலிருக்கையில் எழுதியிருந்தார். நிதி சேகரிக்கும் காரியத்தில் இத்தகைய சிறு சங்கடங்கள் இருந்த போதிலும், ஞாபகார்த்த ஏற்பாடுகள் செவ்வனே நடந்து வருவதாகக் கேள்விப்படுவதோடு ஸ்ரீநிவாஸராகவையங்காரின் ஆத்மா திருப்தியடைய வேண்டியதாயிற்று.

திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் 1903-ம் வருஷம் டிசம்பர் மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று காலை சுமார் 10 மணிக்குத் தமது 54 வது வயதில் பூத உடலை நீத்தார். இவரது அத்யந்த நண்பரான சேலம் விஜயராகவாச்சாரியார் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னர்தான் இவர் தேக நிலைமையைப் பற்றி விசாரித்து எழுதியிருந்தார். “மருந்து உட்கொண்டால் மட்டும் போதாது; உற்சாகமுடனும் மனோ திடத்துடனும் உயிரைப்பிடித்து வைத்துக்கொள்ளுங்கள்” என்று உருக்கமாக அவர் எழுதியிருந்தார்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் காலமாகிவிட்ட செய்தி கேட்டு ராஜப்பிரதிநிதி கர்ஸன் பிரபு, சென்னை கவர்னர் மே. த. ஆம்ப்தில் பிரபு, இந்திய போலீஸ் கமிஷன் மாஜி தலைவர் ஆண்ட்ரூ பிரேஸர், ஆகியோர் புத்திரர் ஸ்ரீ சேஷாத்ரி ஐயங்காருக்கு அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தனர். இங்கிலாந்திலிருந்து ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸும் தமது துக்கத்தை வெளியிட்டுச் செய்தி அனுப்பியிருந்தார்.

“உமது தந்தையின் மரணத்தைக் கேட்டு ராஜப்பிரதிநிதி வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறார். கண்ணியமும் திறமையும் மிக்கச் சிறந்த உத்தியோகஸ்தர் அவர். கடந்த கோடையில் அவருடன் நீண்ட நேரம்

சம்பாஷணை நடத்தியதை ராஜப்பிரதிநிதி மகிழ்ச்சியுடன் நினைவுறுத்திக்கொள்கிறார்" என்று ராஜப் பிரதிநிதி கர்ஸன் பிரபு சார்பில் அவரது அந்தரங்க காரியதரிசியிடமிருந்து தந்தி மூலம் செய்தி கிடைத்தது.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் காலமாவதற்கு சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் திருவாங்கூர் சமஸ்தான திவான் பதவி அவரை நாடிவந்தது. காலியாக விருந்த திவான் ஸ்தானத்தைப் பூர்த்திசெய்வது குறித்து திருவாங்கூர் மகாராஜா சென்னை கவர்னரின் சகாயத்தை நாடியிருப்பதாயும் அந்தப் பதவிக்கு அருகர் தாங்களே யாதலால் தாங்கள் அதை ஏற்கவேண்டுமென்று கவர்னர் விரும்புவதாயும் கவர்னரின் அந்தரங்க காரியதரிசி இவருக்கு கடிதம் எழுதியிருந்தார். இந்தக் கடிதத்திற்குப் பதிலளிக்கையில், டிசம்பர் இறுதிவரை அவகாசம் கொடுக்கப்படுமானால் பதவியையேற்பது குறித்து முடிவான பதிலைத் தெரிவிப்பதாக இவர் எழுதியிருந்தார். கவர்னரும் அதுவரை பொறுத்திருக்க இசைந்தார். (திருவாங்கூர் திவானை நியமிக்கும் அதிகாரம் அந்நாளில் சென்னை கவர்னரிடம் இருந்தது.) ஆனால் இவர் டிசம்பர் மாதம் 11-ம் தேதி யன்று தேகவியோகமாகிவிட்டார். அப்புறம் தான் ஸ்ரீ வி. பி. மாதவ ராவ் ஸி. ஐ. இ., திருவாங்கூர் திவானாக நியமிக்கப்பட்டார்.

ஸ்ரீநிவாஸராகவையங்காரின் மரணம் சென்னைக்குப் பெரும் நஷ்டமாகுமென்றும் இந்தத் துக்கத்தில் தங்களுக்கும் குடும்பத்தாருக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்வதாகவும் சென்னை சர்வீஸுக்கு ஆபரணமாயிருந்து, சீரிய உதாரணமாக, நிகரற்ற சேவை புரிந்த அவரையும் அவரது சேவையையும் சென்னை சர்க்கார் என்றும் மறக்காதென்றும் இவரது மூத்த புதல்வர் ஸ்ரீசேஷாத்ரி ஐயங்காருக்கு சென்னை கவர்னர் ஆம்ப்தில் பிரபு செய்தி அனுப்பியிருந்தார்.

ஸ்ரீநிவாஸராகவையங்கார் காலகதி யடைந்த செய்தியை வெளியிட்டு அன்று தினமே "ஹிந்து" பத்திரிகை இவரைப்பற்றி ஒரு தலையங்கம் எழுதியிருந்தது: "ஆழ்ந்த துக்கத்தை உண்டாக்கக் கூடிய செய்தியை வருத்தத்துடன் வெளியிடுகிறோம். நமது மதிப்புக்கும் அன்புக்கும்

உரியவரான கனம் திவான்பஹதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவையங்கார் ஸி. ஐ. இ., இன்று காலை 10-மணிக்கு மயிலாப்பூரிலுள்ள தமது ஜாகையில் காலமாகிவிட்டார். கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து திரும்பியதிலிருந்து அவர் நோய்வாய்ப்பட்டார்: முதலில் குணமடைந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் சென்னையில் கிடைக்கக்கூடிய சிறந்த வைத்திய சிகிச்சையின் சக்திக்கும் அப்பாற்பட்டதாகிவிட்டது நோய். ஒரு வாரத்துக்கு முன் நோய் தணிவதாகத் தென்பட்டது. இதனால் நண்பர்கள் ஏராளமானவர்களுக்கு நம்பிக்கை பிறந்தது. ஆனால் நிலைமை நேற்று மோசமடைந்தது; இன்று காலை அமைதியாக ஆவி பிரிந்தது......இந்த மாகாணத்தில் தன் 'தலைமுறையைச் சேர்ந்த நாட்டவர்களுள் சிரேஷ்டராகச் சோபித்தவர். பள்ளிக்கூடம், கல்லூரி, உத்தியோகத்திலும் சகாக்களைக் காட்டிலும் சிறந்தவராக விளங்கியவர்: அசாதாரண மதிநுட்பம் படைத்தவர். இடையருமல் உழைக்கும் இயல்புடையவர். அறிவு விருத்தியிலும் விஷயஞானப் பெருக்கிலும் ஆர்வம்கொண்டவர். படிப்பிலும், விஷய ஞானத்திலும் கடின பிரச்னைகளின் சூக்ஷ்மத்தைச் சடுதியில் கிரஹிப்பதிலும் தலைசிறந்தவர். அப்பழுக்கற்ற, உயர்வான நடத்தையுடையவர். உத்தியோகத்தில் கீழ் அதிகாரிகளாகவோ நண்பர்களாகவோ இவருடன் நெருங்கிப் பழகியவர்கள் இவரது புத்தி தீக்ஷண்யம், தார்மிக, ஒழுக்க குண விசேஷத்தால் பயனடைந்திருக்கிறார்கள். உயர்வான குண விசேஷங்களும் நடத்தையும் பரந்த அனுதாபமும் மிக்கவராயிருந்து அனைவரது அன்பையும் மதிப்பையும் மரியாதையையும் ஆகர்ஷித்துக் கொண்டிருக்கிறார்......இவரது மறைவினால் உண்டாகியிருக்கும் நஷ்டத்தை லகுவில் ஈடுகட்ட முடியாது.

......அறிவுக்கும் ஆற்றலுக்கும் உரிய மதிப்பு கொடுக்கப்பட்டிருக்குமானால் இவர் ரெவினியூ போர்டு மெம்பராகவோ கவர்னர் நிர்வாக சபை மெம்பராகவோ ஆகியிருப்பார். இந்தத் துறைகளில் இவர் நிச்சயம் நிலையான கீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டிருப்பார். இந்த உயர் பதவிகளை இவருக்கு நம் சர்க்கார் அளிக்கவில்லை; ஆனால் பரோடா இவருக்கு நான்குமடங்கு சம்பளத்தைக் கொடுத்து இவர் சேவையைப் பெற்றது. பரோடாவில்

பிரதம மந்திரியாக இருக்கையில் ஸ்ரீநிவாஸராகவையங்கார் கெய்க்வாரின் பிரஜைகளின் பரிபூரண நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் பாத்திரரானுர். இவருக்கு அதிக சம்பளம் கொடுத்து மேலும் ஈராண்டுகளுக்குப் பதவிவகிக்க கெய்த் வார் இவரை வற்புறுத்தியதிலிருந்து இவரது சேவையை அவர் எப்படி மதித்திருக்கிருர் என்று ஊகித்துக்கொள்ள லாம்......இந்திய போலீஸ் கமிஷன் மெம்பராக இவர் பணியாற்றியதே இவரது கடைசி முக்கிய சேவை. இவரது அனுபவம், அறிவு, தீர்க்கதிருஷ்டி கமிஷனுக்குப் பயன்பட்டிருக்கிறது. இவர் உயிர்தரித்திருந்திருப்பாராளுல் திருவாங்கூர் சமஸ்தான திவானுக பல நன்மைகள் புரிந் திருப்பார். இவரது அகால மரணத்தால் பிரிட்டிஷ் சர்விஸ் தலைசிறந்த இந்திய அதிகாரியை இழக்கிறது; திருவாங் கூருக்கு சிறந்த திவான் கிடைக்கும் பாக்கியம் பறிபோய் விட்டது. இந்தியர் சமூகம் தனக்கு ஆபரணம் போலிருந்த வரை பறிகொடுக்கிறது.''

''மதராஸ் டைம்ஸ்'' பத்திரிகை எழுதியதாவது:- இவரது மரணத்தால் சுதேசிகள் சமுதாயம் ஆபரணமா யிருந்தவரை இழக்கிறது: சர்க்கார் நம்பிக்கையும் திறமை யும் மிக்க அதிகாரியை இழக்கிறது......ரிஜிஸ்திரேஷன் இலாகா தலைமைப் பதவியுடன் இவரது உத்தியோக வாழ்வு முடிந்துவிட்டதென்ருல் அதற்குக் காரணம் தற் போதைய நிலைமையில் இந்தியருக்கு அதற்கின்னும் மேலான ஸ்திதிகள் கிடைக்கமாட்டாமலிருப்பதாகும்... ''சென்னை ராஜதானியின் 40 வருஷத்திய முற்போக்கு'' என்ற மகுடத்துடன் இவர் எழுதிய புத்தகம் சென்னை யின் சரித்திரம், பொருளாதாரம் முன்னேற்றம்பற்றிய அரிய விஷயங்களடங்கியது; நிர்வாகப் பிரச்னைகள் பல வற்றுக்கு யோசனைகளைக் கொண்டதாக கவர்னர்களா லும் ராஜப்பிரதிநிதிகளாலும் பாராட்டப்பட்டிருக்கிறது. படிப்பிலும் நாட்டு நிர்வாகப் பிரச்னைகள் ஞானத்திலும் கல்வி அபிவிருத்தி குறித்தும் இவரைவிட விசால அறிவுள் ள்வர் கிடையாது. இவரது ஆலோசனையினுலும் உதா ரணத்தினுலும் பயனடைந்தவர்களுக்கு இவர் பிரிவு பெரு நஷ்டமாகும்......இந்திய நிதிநிலபிரச்னைகளில் இவருக் கிருந்த ஞானத்தை ரெவினியூ போர்டு மெம்பர்கள் அறி வர். ஏதாவது கடினமான பிரச்னை எதிர்ப்பட்டால் இவ

ரிடமே ஆலோசனை கேட்க எவரும் வருவர். தயக்கமின்றி இவரும் ஆலோசனை கூறுவார். இவரது ஆலோசனைகளும் பாராட்டப்படும்.''

இவ்வருஷம் 19-வது இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபை வரவேற்புக் கமிட்டித் தலைவர் நவாப் சையத் மகமத் தமது உரையில் இவரது மரணத்தைப் பிரஸ்தாபித்து பின் வருமாறு பேசினர்:—

“......திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் மரணத்தால் நாம் பெரும் துயரத்தில் ஆழ்ந்து இரண்டுவாரங்களாகின்றன. மகத்தான சேவையும் சாதனையும் புரிந்தவரான அவர் 54-வது வயதிலேயே நம்மைவிட்டு பிரிந்துவிட்டார். விசால அறிவுக்கும் பரந்த பண்புக்கும் பெயர் பெற்றவர். பொது சேவை குறித்து உன்னத லக்ஷியங்கள் படைத்திருந்தவர். அவரது சேவையை அவரது ஆயுட்காலத்திலும் மரணத்துக்குப்பின்னரும் சர்க்கார் வெகுவாகப் பாராட்டியிருக்கின்றனர். போலீஸ் கமிஷன் மெம்பராக அவர் பணியாற்றுகையில் அந்த எட்டுமாத காலத்தில் தினமும் அவருடன் பழகியவரான வங்க லெப்டினன்ட் கவர்னர் ஸர் ஆண்ட்ரூ பிரேஸர் அவரைப்பற்றி கூறுகிறார்: ‘அவர் பேருபகாரமாயிருந்திருக்கிறார். தமது உயர் பண்புக்கும் பெருந்தன்மைக்கும் ராஜதந்திரி என்ற கியாதிக்கும் ஒவ்வாத காரியம் எதையாவது அவர் செய்ததோ அல்லது வார்த்தை சொன்னதோ கிடையாது. தம் தேச மக்கள் நலனில் அக்கறை கொண்டிருந்தார். மக்கள் நலனை யொட்டியதில் விடாப்பிடியாக இருந்தார்.’

தகுதிவாய்ந்த இந்தியர்களை, இன, ஜாதி, மதபேதமின்றி உயர் பதவிகளில் நியமிப்பதே தங்கள் நோக்கம் என்று பறை சாற்றும் ஆட்சியில், அபூர்வ திறமையும் குணங்களும் படைத்த இவர் பத்திரப் பதிவு இலாகா தலைவர் என்ற அந்தஸ்துக்கின்னும் உயர முடியாமல் தம் ஆற்றலைக் கிரியாம்சையில் நிரூபிக்க பரோடாவுக்கு திவானாகப் போக வேண்டியிருந்ததும் அப்புறம் இன்னொரு சமஸ்தானத்துக்குப் போக விருந்ததும் தற்போதைய நிலைமையை நமக்கு உணர்த்தக் கூடியதல்லவா?''

இதே மாதம் கனம் ஜஸ்டிஸ் சந்தவர்க்கர் சமூக சீர்

திருத்தம்பற்றி பிரசங்கம் நிகழ்த்தியபோது ஸ்ரீநிவாஸராகவையங்காரின் மரணத்தைக் குறிப்பிட்டு இவர் சமூக சிர்திருத்தத்தில் கொண்டிருந்த சிரத்தையை எடுத்துரைத்தார்.

"......இவ்வருடத்திய துக்ககர நிகழ்ச்சிகளிலொன்றாக இன்னொரு மரணத்தை நான் குறிப்பிடவேண்டும். காலஞ்சென்ற திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சமூக சீர்திருத்தக் கட்சியைச் சேர்ந்தவரல்லர்; எந்த ஒரு சமூக சீர்திருத்த ஸ்தாபனத்திலும் அவர் சேராதவர் என்றே சொல்லலாம். ஆயினும் அவரது பிரிவு நமக்கொரு நஷ்டமென்றே கருதுகிறேன். அவருடைய பரிச்சயமும் நட்பும் பெற்ற பாக்கியம் எனக்கு உண்டு. அவருடன் சம்பாஷணை நடத்தியதிலிருந்து புத்தி கூர்மை படைத்தவர் என்ற பெருமைக்குமேல் மகத்துவம் பரவாத துரதிர்ஷ்டசாலிகள் கோஷ்டியைச் சேர்ந்தவர் அவர் என்பதே என் கருத்தாகியது. தீர்க்க சிந்தனையாளர்; புள்ளிவிவர சாஸ்திரத்தில் மேதாவி. தீர அலசி ஆராயும் ஆற்றல் மிகுந்திருந்த அவர் தீர்க்க திருஷ்டிமிக்கவராயிருந்தார். இன்னும் கொஞ்சம் துணிச்சல் காட்டியிருப்பாரானல் சமூக சீர்திருத்தத்தில் காரியக்காரராகச் சோபித்திருப்பார். சமூக சூழ்நிலை மாறுபட்டிருக்குமானல் 54-ம் வயதிலேயே காலகதியடையாமல் இன்னும் அதிக நாள் ஜீவித்திருப்பார். தமது புத்தி தீக்ஷண்யத்தால் ஹிந்து சமூகத்தை அரித்துவரும் அபாயங்களை அவர் முன்னறிவித்தார். நாட்டின் முதுகெலும்பு போன்றவர்களான தாழ்த்தப்பட்டவர்களைப்பற்றி அவர் எழுதியிருப்பதாவது: "கிறிஸ்தவர்களாகவோ மகம்மதியர்களாகவோ மதம் மாறினல்தான் பறையருக்கு விமோசன முண்டு. சிறு கோஷ்டியாகக் குடியேறிய ஹிந்து சமூகத்தவர்கள், தங்கள் நாகரிகம் சீர்கெடுவதைத் தவிர்க்க, சகல இனத்தவரும் உறவாடவொட்டாமல் ஒழுக்கத்தடைகளை விதித்திருப்பதால், பறையர்களுக்கு அவர்கள் சமூகத்தில் இடம்கிடைக்காது."

பின்பொருதடவை அவர் கூறியதாவது: "சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளை திரளான அமெரிக்கர் கேட்பது கண்டு உச்சி குளிருகிறோம். ஆனல் நம் நாட்டிலோ கீழ்த்தர மக்கள் மேம்பாட்டுக்கு விதேச மதத்தவரை நம்பவேண்டியதாயிருக்கிறது."

சமூக சீர்திருத்தக்காரர்கள் ரொம்ப அவசரப்படுவதாகவும் தலைதெறிக்க நடந்து கொள்வதாகவும் குற்றம் சாட்டப்படுவதைப் பிரஸ்தாபித்துப் பேசுகையில், இந்த கையாலாகாத கண்டனக்காரர்களை விட்டு சீர்திருத்த வாதிகளையே ஆதரிப்பேன் என்று இவர் கூறியிருக்கிறார்.

ஹிந்துக்கள் தங்கள் எண்ணிக்கை குறைந்து வருவதைக் கவனிக்கவேண்டும்...மகம்மதியர் 7.6 சதவிகிதம் அதிகரித்திருக்கின்றனர். கிறிஸ்தவர் இருபத்திரேழே முக்கால் சத விகிதம் அதிகரித்திருக்கின்றனர். காலக்கிரமத்தில் ஹிந்து மதம் பரிதாப கதிக்குள்ளாகக்கூடியதை காலஞ்சென்ற திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் பின் வரும் வார்த்தைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்: 'தாழ்த்தப்பட்டவர் ஒருவர் கிறிஸ்தவராகவோ மகம்மதியராகவோ மதம் மாறியதும் கீழ்ப்பட்டிருந்த ஸ்திதியிலிருந்து விடுதலை பெறுகிறார். மேல் ஜாதியினரும் அவரை அப்படி அங்கீகரிக்கின்றனர். இப்படி மதம் மாறியவர் பழைய ஆத்திரத்தை மனதில் கொண்டு உயர் வகுப்பார் மீது பாடத்தைத் திருப்பிப்படித்து அவர்களை இழிவாகவும் ஏளனமாகவும் பேசுகிறார். சமுதாயத்தில் கீழ்ப்பட்டவர்கள் என்ற நிலையிலிருந்து இவர்கள் விடுபடுவதற்கும் தொழிலியல் ஆக்கமடைவதற்கும் எவ்வளவு தூரம் சம்பந்தமுள்ளது என்பது விசாரிக்கத்தக்கது. மலபாரைச் சேர்ந்த மாப்பிள்ளையர்கள் ஹிந்து சமூகத்திலிருந்து விடுபட்டதும் அவர்களிடம் அலாதியான ஊக்கம் தென்பட்டிருக்கிறது. அவர்கள் நிலைமை முன்னைவிட இப்போது உயர்ந்திருக்கிறது.'

ஸ்ரீநிவாஸராகவையங்கார் சுபாவமாக சாந்த குணம் படைத்தவர். எப்போதும் முகத்தில் ஒரு மலர்ச்சியைக் காணலாம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அதே போல், மாசற்ற மனதை முகத்திலே காந்தி ஒளி பரப்பியது. சிறு குழந்தைகள் விளையாடப் பார்ப்பதில் இவரது ஆனந்தம் அளவற்றது. சிறு குழந்தைகளிடம் எவரும் முகம் சிணுங்குவதைச் சகியாதவர். ஆனால் அவர்களுக்குப் புத்தி சொல்லும் போது தாம் மட்டும் கோபித்துக்கொள்ளலாமா? இந்த கோபமற்ற குணமே இவரது குண விசேஷங்களில் பிரதானமானது. அந்த நாளில் இவர்

ஜாகையில் தங்கி இவர் போஷணையிலிருந்த உற்றார், உற வினர் அநேகம் பேர். ஆனால் வீட்டில் தனக்கொரு நீதி, பிறத்தியாருக்கு ஒரு நியாயம் என்பதே கிடையாது. எல் லோரையும் சமமாகவே பாவித்தார் ஸ்ரீநிவாஸராகவையங் கார். வயதில் சிறியவர்களுடனும் அளவளாவுவார்; சம் பாஷிக்கவும் செய்வார்; தான் மேதாவி என்ற அகந்தை ஒரு போதும் குறுக்கிட இடமளிக்காதவர். இப்படி இவர் போஷணையிலிருந்து கொண்டும் இவருடன் நெருங்கிப் பேசிப் பழகியும் பயனடைந்தவர்களில் அர்த்த, நிதி சாஸ் திர மேதை காலஞ்சென்ற ஸ்ரீ ஏ. ரங்கஸ்வாமி ஐயங்காரை யும் சுதந்திர இந்திய சர்க்காரில் மதிப்புயர் மந்திரியாயிருந்த காலஞ் சென்ற ஸ்ரீ என். கோபாலஸ்வாமி ஐயங்காரையும் குறிப்பாகச் சொல்லலாம். "ஹிந்து" பத்திராதிபரும் ஆசிரியரும் இவரது கடைசி சகோதரருமான காலஞ் சென்ற ஸ்ரீ எஸ். கஸ்தூரிரங்கையங்காரும் இவரால் அனு கூலமடைந்தவர்.

நாலு பேருடன் தர்க்கம் செய்வதில் பிரியராயிருந் தார்; புத்தகப் படிப்பிலிருந்த ஆர்வம் அளவிட்டுச் சொல்ல முடியாதது. தர்க்க வாதங்களில் எவர் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். வயதில் சிறியவர், கீழ் அதிகாரி என்ற வித்தியாசத்தைப் பாராட்டமாட்டார். அந்த சம யத்தில் இந்த வித்தியாசங்கள் பறந்தோடிவிடும். ரோஷ மான வாக்குவாதத்திலோ சர்ச்சையிலோ யார் தம்மை தாக்கிப் பேசினாலும் பொருட்படுத்தமாட்டார். மறு ஷணமே அதை மறந்துவிடுவார். 'புஸ்தகம் ஹஸ்த பூஷணம்' என்ற சொல்லுக்கு லக்ஷணமாகச் சொல்லலாம் இவரை. ஓய்வு நேரங்களில் புத்தகமும் கையுமாகத்தான் இவரைப் பார்க்கலாம். ஆனால் பொழுது போக்குக்காக இவர் உயர் கணித புத்தகங்களில் ஆழ்ந்து அமிழ்ந்துவிடும் வழக்கம்தான் சகாக்களையும் நெருங்கியவர்களையும் வியக்க வைத்திருக்கிறது!

நாட்டின் அரசியல் முன்னேற்றத்தில் தீவிர சிரத்தைக் கொண்டிருந்தார். பொது வாழ்வில் பங்கெடுக்க கொடுத்து வைக்கவில்லை. ஆனால் மன்றமுகமாகப் பலருக்கு ஆலோ சனை கூறியிருக்கிறார். ரானடேயைப்போல அரசியலில்

மிதவாதியாயிருந்தவர். மிதவாதிகள் தலைவர் காலஞ்சென்ற ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் இவரைக் குருவாகக் கருதிப்போற்றியவர். பொருளாதார, விவசாயப் பிரச்னைகளில் விசேஷப் பற்றுதல் கொண்டிருந்தார். நாட்டின் பொருளாதார நிலையும் விவசாயிகள் நிலையும் மேம்பாடு அடைவதில் ஊக்கம் காட்டினார். சர்க்காரின் போக்கில் பிழைகளை எடுத்துக்காட்டி, கண்டிக்க வேண்டியதைக் கண்டித்து, அபிவிருத்திக்கான மார்க்கங்களையும் வகுத்துக் காட்டினார். சென்னையில் பல பொருளாதார, நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு இவரே அடிகோலியவர் எனலாம். மக்களின், குறிப்பாக விவசாயிகளின், மேம்பாட்டுக்கு ஆவன செய்வது சர்க்காரின் பொறுப்பு, கடமையாகும் என்று அறிவுறுத்தியவர் இவர். ஐரோப்பிய அதிகாரிகளிடமும் உயர் அதிகாரிகளிடமும் இவருக்குச் செல்வாக்கு மிகுந்திருந்தது. முக்கிய பிரச்னைகளிலோ விஷயங்களிலோ இவரது யோசனைகளையும் கருத்துக்களையும் உயர் அதிகாரிகள் தட்டமாட்டார்கள். மொத்தத்தில் இவர் சொன்னது சட்டமென்றிருந்ததெனவும் சொல்லலாம்.

முக்கியமாக, நிர்வாகத்தை நடத்துவது இந்தியரின் சக்திக்கு அப்பாற்பட்டதல்ல என்பதை நிரூபித்து சுதந்திர கோஷத்துக்கு அடிகோலியவர்களில் இவர் ஒருவர். ஆனால் இத்தகையவரையே நம்மவரில் சிலர் "பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆள்" என்றும் கூசாமல் விவரித்தனர். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சென்னை சர்க்காரில் உயர் பதவி வகித்திருக்கும் ஸர் ப்ரெட்ரிக் நிக்கல்ஸன், இவரது பேரப் புதல்வர் ஸ்ரீ சுந்தரராகவனுக்கு எழுதிய கடிதமொன்றில் பின் வருமாறு கூறியிருப்பது இந்த விஷமப் பேச்சுக்குத் தக்க பதிலடி கொடுக்கத் தக்கது: 'நாங்கள் இருவரும் விவசாயிகள் கடன் உபத்திரவப் பிரச்னையில் கூட்டாகக் கவனம் செலுத்தியவர்கள்...அவரது உள்ளம் தேசாபிமானம் ஊறியது. தாம் இந்தியர் என்ற எண்ணமே அவரிடம் வேரூன்றியிருந்தது; அவரது அனுதாபம், எதிர்கால நம்பிக்கை, லட்சியம் எல்லாவற்றிலும் இது பிரதிபலித்தது...நாட்டு முன்னேற்றத்திலும் சீர்திருத்தத்திலும் ஊக்கம் மிகுந்திருந்தவர். இப்போது சர்வசாதாரண கோஷங்

களர்கிவிட்டிருக்கும் பல முற்போக்கு அம்சங்களை தீர்க்க திருஷ்டியுடன் எடுத்துச் சொல்லி வழியும் வகுத்தவர்."

'விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்காவிட்டா லும் இந்திய சுதந்திரத்துக்கு அடி கோலியவர் இவர்', என்று 1949-ல் இவரது நூறுவது ஜன்ம தினம் கொண் டாடப்பட்டபோது, ஒரே வார்த்தையில் அழகாகவும் ரத்ன சுருக்கமாகவும் இவரது வாழ்க்கையை சுருங்கக் கூறி வருணித்தார் திவான் பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார். தேசீய பத்திரிகை "ஹிந்து"வின் ஆசிரியர் கள் ஸ்ரீ எஸ். கஸ்தூரிரங்கையங்கார், ஸ்ரீ எஸ். ரங்கஸ் வாமி, அர்த்த, நிதி சாஸ்திர வல்லுநர் ஸ்ரீ ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார், தலைசிறந்த ராஜதந்திரி ஸ்ரீ என். கோபாலஸ்வாமி ஐயங்கார், ஆகியோரைத் தம் வழியில் தயாராக்கி, நாட்டுச் சேவைக்கு இவர் விட்டுச் சென்றதே பாரதத்துக்குப் பெரும் பணியன்றோ!

கலாமோஹினி பிரஸ், மவுண்ட் ரோடு, சென்னை—2.